April & May 1982

# தமிழரசு

SL
11mN82
N82.4
5337

என்றும் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அறிவித்தார்.

**19—4—82**

ஒய்வு பெறும் பத்திரிகை நிருபர்களுக்கு ஊழியர்களுக்கு பென்ஷன் வழங்கப்படும் வகையில் சட்டம் இயற்றப்படவிருக்கிறது என மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

புத்தகங்களை வெளியிட மலிவு விலையில் காகிதங்களை வழங்குவது குறித்து தமிழக அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

A5337

**20—4—82**

கிராமப்புற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தையல் தொழிலாளர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க அரசு மான்யமும் கடனுதவியும் அளிக்கிறது என்று மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்.

சிறு தொழில்கள் ஆரம்பிக்க இருந்த நடைமுறைச் சிக்கல்களை எளிமைப்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மக்களுக்குள் வாழும் பகுதிகளில் கிணறுகள் தோண்ட மத்திய அரசு 10 கோடி ரூபாய் நிதி அளித்து இருக்கிறது என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கே. ராசாமுகமது அவர்கள் அறிவித்தார்.

**22—4—82**

பரம்பரைச் சொத்தில் பெண்களுக்குச் 'சமபங்கு' அளிக்க வகை செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவது குறித்து தமிழக அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

**24—4—82**

தேயிலைத் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க இருப்பதாக மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

**25—4—82**

சிறிய ஏழை-எளிய விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளதாக மாண்புமிகு சட்டம் -கூட்டுறவுத்துறை அமைச்சர் சி.பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

## பொள்ளாச்சிக் கோட்டத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள்

பொள்ளாச்சி கோட்டத்தில் 80–81-வது ஆண்டில் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திலும், 81-82 வது ஆண்டில் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்திலும் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 82-83-வது ஆண்டில் பொள்ளாச்சி வடக்கு, குடிமங்கலம், வால்பாறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படவுள்ளது.

பொள்ளாச்சிக் கோட்டத்தில் உள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களில் 16 இணைப்புச் சாலைகள் ரூ 64,000 செலவிலும், 18 பள்ளிக் கட்டடங்கள் ரூ 1,96.000 செலவிலும், 28 ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டபபணிகள் ரூ 1,83,000 செலவிலும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 846 வேலைகள் ரூ 45,65,000 செலவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. சிறு சேமிப்பு வசூல் திட்டத்தின் கீழ் ரூ 90,00,000 வசூல் செய்யப்பட்டுள்ளது.

---

கோவை மாவட்டத்தில் 1982-83ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 500 சிறியதொழில் கூடங்களைத் துவக்குவதற்காக ரூ. 10 கோடி செலவிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

**27—4—82**

தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு அரசு மானியம் தரும் விதிமுறைகளை மாற்றி அமைப்பது குறித்து தமிழக அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

**29—4—82**

தமிழகத்தில் அமையவிருக்கும் மகளிர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் முதற்கொண்டு அனைத்துப் பொறுப்புக்களிலும் பெண்களே இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம் என்று மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்.

**30—4—82**

உணவு இல்லாமல் யாரும் துன்பப்படும் நிலை கூடாது என்று பாரதியாரின் கருத்துப்படி, ஏழை எளிய குழந்தைகளுக்கான இலவச மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்.

இந்த ஆட்சியில் தொழிலாளர்களின் நலனைக் காக்க பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் ... அச்சகத்தில் அச்சிடப்பட்டது.






85337

428



# ஒருமைப்பாட்டுக்கு ஊறு செய்வதாக மதப்பிரச்சாரங்கள் அமையலாகாது!

## மாண்புமிகு முதல்வர் அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ராஜாக்க மங்கலம், ஈத்தாமொழி, மண்டைக் காடு, மேல்மணல்குடி ஆகிய ஊர்களில் அண்மையில் மூண்ட மதக் கலவரங்களைத் தணிக்கவும், மென்மேலும் மோதல் ஏற்படாமல் தவிர்க்கவும் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அப்பகுதிகளில் (14.3.82-15.3.82) இரு நாட்கள் பயணம் மேற்கொண்டார்.

கலவரம் நடந்த பகுதிகளில், நேரில் சென்று பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆங்காங்கிருந்த மதத் தலைவர்களோடும் அதிகாரிகளோடும் ஆலோசனை நடத்தினார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்து-கிறிஸ்துவ-முஸ்லிம் மதத்தலைவர்கள், அரசின் கட்சித் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியவர்களோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனித்தனியே ஆலோசனை நடத்தினார். அதனைத் தொடர்ந்து மூன்று சமயப் பிரதிநிதிகளையும் ஒருங்கிணைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துக்களை அமைதியோடு கேட்டறிந்தனர். அமைதி காப்பதென உறுதி தெரிவித்தனர்.

சென்னை திரும்பிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது பயணம் குறித்துச் சட்ட மன்றத்தில் 17.3.82 அன்று வைத்த அறிக்கையின் விவரம் வருமாறு:


திருவள்ளுவர் ஆண்டு 2013

தமிழரசு

துன்மதி—பங்குனி 19

மலர் : 12

இதழ் : 19

1-4-1982


Verified



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மண்டைக்காடு பகுதியில் இந்துக்கள்கிறிஸ்தவர்கள் ஆகியவர்களுக்கிடையே வாழ்க்கை பாதிக்கக்கூடிய அளவிற்கு அங்கே நிகழ்ந்த கலவரங்கள், அதன் பின்னர் நடந்த துப்பாக்கிச் சூடு, அதையடுத்து ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலை குறித்து நேரிலே கண்டறிவதற்காக 14.3.82 அன்று நாகர்கோவில் சென்றேன். அன்று காலை மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகளுடன் நிலை பற்றி விவாதித்தேன். பின்னர் துப்பாக்கிச்சூடு நடந்த மண்டைக்காடு பகுதிக்கு நேரில் சென்று கிறித்தவர் வசிக்கும் பகுதியான புதூரிலே உள்ள சர்ச் ஆலயத்திற்கருகில் துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தைப் பார்வையிட்டேன். சம்பவம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி அங்கேயிருந்த கிறிஸ்துவ பாதிரிமார்களிடம் விசாரித்து அறிந்தேன். அதன் பின்னர் பகவதி அம்மன் திருவிழாவின்போது இந்துக்கள் கடலிலே குளிக்கும் இடத்திற்கு நான் சென்று பார்வையிட்டேன். நிகழ்ந்த சம்பவங்கள் பற்றி அங்கே குடியிருந்த கிறிஸ்தவ மக்களிடம் விவரங்களைக் கேட்டேன். துப்பாக்கிச் சூட்டிலே இறந்த மருதையா என்பவர் வீட்டுக்குச் சென்று அவருடைய மனைவிக்கு ஆறுதல் கூறினேன். அரசின் சார்பாகப் பணம் கொடுக்க முயன்றேன். அவர் அந்த நேரத்திலே வாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லையென்பதை அறிய முடிந்தது. பகவதி அம்மன் கோவில் இருக்கும் இடத்திற்கு வந்து அங்கே குழுமியிருந்த மக்களிடம் உரையாடி அவர்களுடைய கருத்தை அறிந்து கொண்டேன்.

பிறகு நாகர்கோவில் சென்றேன். அன்று மாலை 5 மணி அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அலுவலகத்தில் கிறிஸ்துவ, இந்து, இஸ்லாமிய சமயங்களைச் சார்ந்த தலைவர்களைத் தனித்தனியே சந்தித்து ஒவ்வொரு பிரிவினருடைய கருத்துக்களையும் கேட்டு அறிந்தேன். அதன் பிறகு அனைத்துத் தலைவர்களையும், குமரி மாவட்ட சட்டமன்றப் பேரவை-மேலவை உறுப்பினர்களையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்தி அவர்கள் கருத்தை நான் கேட்டு அறிந்தேன்.

கிறிஸ்துவ சமயத்தினர் கடந்த ஆறு மாத காலமாகக் குமரி மாவட்டத்திலே நடந்த நிகழ்ச்சிகள், இதுவரை இந்துக்கள், கிறிஸ்துவர்களிடத்திலே நிலவி வந்த அமைதியான உறவு பாதித்து இரு பிரிவினரிடமும் விரோத மனப்பான்மை வளர்ந்து, துப்பாக்கிச் சூடு நடக்கும் அளவிற்குக் கொண்டு சென்றிருக்கிறது என்பதை அவர்களுடைய அனுபவம் என்கிற அளவிலே-நடந்ததை எல்லாம் தெரிவித்தார்கள். இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் சொன்னவைகள் எல்லாம் அப்படியே இங்கே வெளியிடுவது நாட்டின் அமைதிக்கு முறையாகாது என்ற காரணத்தால், விசாரணை நடைபெற இருக்கிற காரணத்தாலே இங்கே அவைகளைக் குறிப்பிடாமல் விட்டு விடுகிறேன்.

கடந்த பிப்ரவரி மாதம் 13, 14 தேதிகளில் நாகர்கோவிலில் நடந்த ஒரு மாநாட்டிலே கிறிஸ்தவ மக்களைப் பலவாறாகத் தாக்கிப் பேசினார்கள் என்பது காரணம் என்று கூட அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல ஒவ்வொருவரும் அவர்களுடைய சூழ்நிலைக்கேற்ப, நம்பிக்கைக்கு ஏற்ப, அவர்களுடைய அனுபவத்தை உதாரணமாகச் சொல்லி பல கோணங்களிலே தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டார்கள். இதிலே குறிப்பிட வேண்டிய ஒன்று, முஸ்லீம் கடைகள் தாக்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவர்களுடைய இடங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. இந்துக்களுக்குச் சொந்தமான இடங்கள் பல தாக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் சுடப்பட்டு மாண்டு இருக்கிறார்கள். மேலும் நேற்று இரண்டு பேர் சுடப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஈத்தாமொழி கிராமத்திற்கு நான் சென்றபோது இந்துக்களுக்குச் சொந்தமான வீடுகளும் முஸ்லீம்களைச் சேர்ந்த கடைகளும் தீயினால் அழிக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன். ஆகவே இதிலே அடிப்படையான பிரச்சினை மிகப்பலமானதாக வேரூன்றி இருக்கிறது என்பதை இந்த நாடு அறிந்து கொள்ள விசாரணை தேவை என்பதை நான் உணர முடிந்தது. இந்த மாமன்றம் நடந்து கொண்டிருக்கும்போது, இந்த மாமன்றத்திற்கு வெளியே சொன்னது இங்கே இருக்கிற உறுப்பினர்களை அலட்சியப்படுத்த வேண்டும் என்கிறதால் அல்ல; அந்த நேரத்திலே அவர்களுடைய கோரிக்கையை நான் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் அமைதி ஏற்படாது என்ற சூழ்நிலைக்கு அங்கே வற்புறுத்தப்பட்டதால் நான் சிலவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டேன்.

அதில் ஒன்று தான் நீதி விசாரணை. அதையொட்டி சில அதிகாரிகள் மாற்றம். அதற்கு மேலும் பத்திரிகைகள் செய்திகள் வெளியிடும்போது அளவோடு வெளியிட வேண்டும் என்பது-அந்தக் கலவரப் பகுதிகளிலே மதுக்கடைகள் மூடப்பட வேண்டும் என்பதுபோன்ற பல கோரிக்கைகளை நான் ஏற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாட்டுக்கு ஆளாக்கப்பட்டேன். எப்படியாவது அமைதி தேவை என்ற வகையில் நான் அவைகளைத் தெரிவித்தேன் என்பதை இந்த மன்றத்தில் சொல்வதின் மூலம் இந்த மன்றத்தை நான் மதிக்கவில்லை என்ற தவறான கருத்து யாருக்காவது இருந்தால் அதை மறந்துவிடுவார்கள் அல்லது நான் சொல்வதை நியாயம் என்று ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அதோடு இன்னும் சிலவற்றை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்கள், உயர்நீதிமன்ற நீதிபதி - இப்போது பணியாற்றுகிறவர்கள் அல்லது ஓய்வு எடுத்திருக்கிறவர்கள்-யாரையாவது ஒருவரை நியமிக்கவேண்டுமென்று விரும்பினார்கள். அனைத்துத் தரப்பிலிருந்தும் அந்தக் கோரிக்கை இருந்தது. இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சில சமயம் அந்த எண்ணத்தைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அதையொட்டி வேணுகோபால் அவர்களை அந்த நீதி விசாரணைக்கு அவர்களுடைய சம்மதத்தைக் கேட்டு நியமிப்பது என்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே மகிழ்ச்சி என்னவென்றால் நேற்றுக் காலையிலே துப்பாக்கிச்சூடு நடந்திருந்தாலும் நேற்று மாலையிலிருந்து எந்தவிதமான அசம்பாவிதமும் கிடையாது என்பதை-அமைதியாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதிலே தான் அந்த நிறைவைப் பெறுகிறேன்.


இனி அப்படி நடக்காத வகையில் என்ன செய்யவேண்டுமோ அவை அனைத்தையும் செய்யமுடியும் என்று நான் நம்புகிறேன். இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். எல்லா மதத்தினருக்கும் அங்கேயும் என்னுடைய உத்திரவாதமாகச் சொல்லியிருக்கிறேன், 144 இருந்தாலும் கூட அனுமதியைப் பெற்று அவரவர்கள் நம்பிக்கைப்படி வழிபாடு நடத்த அனுமதிக்கப்படும் என்று நான் சொல்லியிருக்கிறேன். நான் சொன்ன இரண்டு வார்த்தைகளை இங்கே திரும்பச் சொல்வது கடமை என்று கருதுகிறேன்.

கடலிலே குளிக்கச் செல்வதற்கு உரிமை இல்லையென்றால் அவர்கள் தமிழகத்திலே பிறந்து பயனில்லை, அந்த உரிமை அவர்களுடையது என்று நான் சொன்னேன். அதே போல மதச்சார்பற்ற நாடாக இருக்கின்ற காரணத்தினால் மதத்தைப் பற்றிப் பேசுவதற்கு, பரப்புவதற்கு உரிமை உண்டு என்றும் நான் சொன்னேன். ஆனால் யாருடைய மனதையும் புண்படுத்தாமல் தனிப்பட்டவர்கள் யாரையும் இழிவுபடுத்தாமல் ஆத்திரத்திற்குட்படுத்தாமல் நடைபெறவேண்டும். நாம் இப்போது வேண்டிக் கொள்வது எல்லாம் ஒரு 6 மாத காலத்திற்கு மதப் பிரச்சாரங்களைத் தயவுசெய்து நிறுத்திவிடுவது, விட்டு வைப்பது இந்த நாட்டிற்கு நல்லது- தமிழகத்திற்கு மட்டுமல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நேரிலே நான் கண்டதன் விளைவாகச் சொல்கிறேன். அப்படி மதப் பிரச்சாரத்தைச் செய்வதற்கு ஒரு வழிமுறைவேண்டும்-வகை தொகை வேண்டும் என்று சொல்லுவார்களே; அதைப்போல் ஒரு எல்லைக்கோடு வேண்டும். அதை மீறிப் போகிற காரணத்தினால் தான் இந்தப் பிரச்சினைகள் எழுகின்றன என்பதை நான் உணர முடிந்தது.

ஆகவே அந்த உணர்வு பவர் உள்ளங்களை வேதனைக்கு ஆளாக்கக்கூடிய சூழ்நிலை வராமல் பார்த்துக் கொள்வது தேவை என்று நான் கருதுகிறேன். உதாரணத்திற்குச் [illegible] றேன். தாணுலிங்க நாடார் [illegible]



கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகுதியில் ஏற்பட்ட கலவரத்தில் காயம் அடைந்து நாகர்கோவில் அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.



# தமிழரசு 16-4-1982 இதழுடன் இலவச இணைப்பு

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரைத் தொகுப்பு

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரைகளின் தொகுப்பு )

மாவட்டம் தமிழ்நாட்டோடு சேரவேண்டுமென்ற போராட்டத்திலே ஈடுபட்டவர், காங்கிரசுக்காரர், அப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் கூட மனம் நொந்து நாங்கள் எங்களைக் காப்பாற்றிக்கொள்கிறோம் நீங்கள் போலீசை வேண்டுமென்றால் வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிற அளவுக்கு அங்கே நிலைமை உருவாகுமானால் அது கன்னியாகுமரி மாவட்டத்தோடு நின்றுவிடாது, தமிழ்நாட்டு எல்லைகளையெல்லாம் தொடும். அதற்கு, அந்தப் பக்கத்தையும் தாண்டி வடநாடு முழுவதையும்கூட தொடக்கூடிய நிலைமையிலே மதம் என்ற காரணத்திற்காகச் சொல்கிறேன். அந்த உணர்வு பரவுமானால் நாம் எப்படிப்பட்ட அமைதியை வேண்டுகிறோமோ எந்த ஒருமைப்பாட்டைச் சொல்கிறோமோ அதற்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தினால் இந்த நேரத்திலே உங்கள் அனைவரின் சார்பாகவும் அரசின் சார்பாகவும் வேண்டுகோள் வைக்கிறேன். மதத்தைச் சேர்ந்தவர்கள் வழிபாடு நடத்தட்டும்; ஆனால் மதப் பிரச்சாரத்தை ஒரு 6 மாத காலத்திற்கு நிறுத்திவைக்கட்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். அதை ஏற்றுக் கொள்வது நல்லது. இந்த நாட்டிற்கும் நல்லது என்பதைச் சொல்கிறேன். நடவடிக்கைகள் ஒழுங்காக எடுக்கப்படுகின்றன. காவல் துறையில் அங்கே எஸ்.பி.யாக 1975ஆம் ஆண்டு பணியாற்றிய பரம்வீர்சிங் அவர்கள் இப்போதும் அங்கே பணியாற்றுகிறார்கள். அவர் மீது கல் எறியப்பட்டது. பிறகுதான் நேற்றைய தினம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, காலையிலேயும், மாலையிலேயும் சில நிகழ்ச்சிகள் அங்கே நடந்தாலும்கூட நேற்றிரவிலிருந்து எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை; அமைதியாக இருக்கிறது. அந்த அமைதியை எப்படியும் இந்த அரசு அங்கே இருக்கிற மக்களுடைய ஒத்துழைப்பால் காப்பாற்றும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இதற்கு அங்கே இருக்கின்ற-எம்.எல்.சி.யாகஇருக்கின்ற சங்கரலிங்கனார் அவர்கள் மற்றும் ஹேமச்சந்திரன் அவர்கள், முத்துக்கிருஷ்ணன் அவர்கள், வின்செண்ட் அவர்கள் ஆகியவர்களைப் போன்றவர்கள் அனைவரும் அங்கே ஒத்துழைப்புத் தந்தார்கள்.

அதைப்போல அங்கே இருக்கின்ற அத்தனை மதங்களைச் சார்ந்தவர்களும் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறார்கள்.

நஷ்டஈட்டைப் பற்றி நான் இன்னும் முடிவு செய்யவில்லை. பத்தாயிரம் ரூபாய் உயிருக்காகக் கொடுக்கிறோம் என்றாலும் முஸ்லீம்கள் அங்கே சொத்துக்களை இழந்திருக்கிறார்களே அவர்களுக்கு, குடிசைகளை இழந்தவர்களுக்கு, வீடுகளை இழந்தவர்களுக்கெல்லாம் இந்த அமைதிக்குப் பிறகு நாம் என்னென்ன செய்ய முடியுமோ, அவர்களுடைய வாழ்க்கையிலே உதவி செய்ய வேண்டுமோ அதை இந்த அரசு நியாயமான வகையில் தலைவர்களைக் கொண்டு நிர்ணயிக்கச் செய்து எந்த அளவிற்கு அரசு உதவுமோ அந்த அளவிற்கு உதவும் என்பதையும் இங்கே சொல்லி, இந்த நிலைமையில் என்னுடைய கடமையை ஆற்றியிருக்கிறேன் என்பதை எடுத்துக்கூறி அமைகிறேன்.





# உழைக்க வாரீர்! உணவு பெறுவீர்!

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

## திரு. ப. குழந்தைவேலு

உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்கும்படி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் எனக்கு ஆணையிட்டதும், தமிழகமெங்குமுள்ள ஊராட்சி ஒன்றிய மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற திறம் பற்றி ஆராய ஒரு சில மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான இணைப்புச் சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், சிறுபாலங்கள் போன்ற பல்வேறு பணிகளைச் செவ்வனே முடித்திருப்பதாக அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் எனக்குப் பல இடங்களைச் சுற்றிக் காட்டியபோது எனக்கு ஒரு, சிறு, மனக்குறை ஏற்பட்டது.

சமுதாயச் சொத்துக்களான இணைப்புச் சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், பாசன மேம்பாடுகள் ஆகியவை அரசுப் பணத்தில் அக்கறையோடு உருவாக்கப்பட்டிருந்தும் ஏன் எனக்கு இந்த மனக்குறை ஏற்பட்டது என்ற எண்ணம் உங்களுக்கு எழலாம்.

அரசுப் பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்பட்டுத்தான் இவை உருவாக்கப்பட்டுள்ளன என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால், இவ்வாறு செலவழிக்கப்பட்ட பணத்தில் ஒரு பகுதி, இப்பணிகளை நிறைவேற்றிய ஒப்பந்தக்காரர்களுக்கு நிச்சயம் சென்றிருக்கும். ஒப்பந்தக்காரர்கள் ஏற்கின்ற பணிக்கு இத்தொகை அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டியது தான் என்பது நியாயமானதாகத் தோன்றினாலும், அரசோ, அரசைச் சார்ந்த ஒன்றியங்களோ இப்பணிகளைத் தாமே மேற்கொண்டு நிறைவேற்றினால் தற்போது ஒப்பந்தக்காரர்களுக்குச் செல்லும் தொகை மக்கள் நலனுக்காகச் செலவிடப்பட வழிவகுக்குமே என்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு.

அந்த எண்ணத்தை - குறையை - நிறைவு செய்வது போல் ''தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம்'' அமைந்திருக்கக் கண்டபோது எனக்குள்ள மனக்குறை அகன்றது.

ஒப்பந்தக்காரர்களின் தலையீடு இன்றி அரசு அமைப்புகளால் இத்திட்டம் நிறைவேற்றப்படுவது இத்திட்டத்திற்காக; ஒதுக்கப்படும் உணவு தானியம் மற்றும் பணம் முழுமையாக மக்களை - உழைக்கும் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற பெருநோக்கத்துடன் தான்.

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப் புள்ளி விவரங்களைப் புரட்டிய போது தமிழ்நாட்டிலுள்ள 3,23,69,504 மக்களுள் 55,55,382 பேர் வேளாண்மைத் தொழிலை நம்பியிருக்கின்றனர் என்ற செய்தி நம் விழிகளில் படர்ந்த போது, ஊர்ப்புறங்களில் - வேளாண்மை வேலைகள் இல்லாத வேளைகளில் இவர்களுக்குத் தக்க வேலை வாய்ப்புகளை அளிக்க முடியுமா என்ற வினா தோன்றியது. இவ்வினாவிற்கு விடையளிப்பது தான் தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டமும், புரட்சித் தலைவரின் சீரிய சிந்தனையில் உதித்த தன்னிறைவுத் திட்டமுமாகும்.

இவ்விரு பெரும் திட்டங்களின் கீழ் எண்ணற்ற மக்களுக்குக் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. சில கிராமங்களில் வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை என்ற செய்தி உண்மையிலேயே நமக்கு வியப்பளிக்கும் செய்தியாகும்.

1977-ல் இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, இத் திட்டத்திற்கான முழு உதவியும் மைய அரசிடமிருந்து கிடைத்தது. ஆனால், தற்போது, இத்திட்டத்திற்கான செலவில் ஐம்பது சதவிகிதத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. இத் திட்டத்திற்காக 1981-82-ம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்கு ரூ. 22.20 கோடி வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு அரசின் பங்கு மட்டும் ரூ. 11.10 கோடி என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் ஆறு மாதங்களுக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட 14,138 டன் அரிசியும் மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

சமுதாயச் சொத்துக்களை உருவாக்குவதோடு இத்திட்டம் முடிவடைந்து விடாமலிருக்க மற்றும் சில பணிகளும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப் பட்டன. இத்தகைய நடவடிக்கைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்தத் தொகையில் பத்து சதவீதம் செலவழிக்கப்படுகின்றது. மேலும் மிகவும் பிற்பட்ட ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நல்வாழ்விற்காகப் பத்து சதவிகிதம் ஒதுக்கப்படுகிறது.

அரசு மட்டுமே இத்திட்டத்தைத் தீட்டி நிறைவேற்றவில்லை. உள்ளாட்சி அமைப்புகளின் தத்துவமான மக்கள் பங்கேற்கும் முறை இத்திட்டத்திலும் பின்பற்றப்படுகிறது. எந்தெந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்குத் தக்க யோசனைகளை நல்குவதற்காக ஒன்றிய அளவில் மக்கள் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அளவில் நிறைவேற்றப்படும் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்யப்பட்ட அறிவுரை வழங்க, மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் தக்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில், ''தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டம்'' கிராமப்புற முன்னேற்றத்தில் ஒரு புதிய திருப்பம் என்று குறிப்பிடலாம்.



# ஆறுகள் தேசத்தின் பொதுவுடைமை

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்
திரு. கே. இராஜா முகமது

வளரும் தமிழகம்

இந்தியா பரப்பளவில் உலகில் ஏழாவது இடத்தையும், மக்கட் தொகையில் சீன தேசத்திற்கு அடுத்ததாகவும் உள்ளது. இந்தியாவிற்கு அதன் மக்களும், மண்ணும் நீருமே செல்வங்களாகும். நீரின் மூலமே மற்ற இரு செல்வங்களும் பெருக முடியும். தொன்று தொட்டு நமது மக்கள் நதிகளைப் புனிதமாகக் கருதிவருகின்றனர். கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி போன்ற ஆறுகள் மறைகளில் புகழப்பட்டுள்ளன. இந்நதிகளின் அழகு கவிஞர்களின் கற்பனை வளத்திற்குத் தூண்டுகோலாக விளங்கிவருகிறது. இந்நாட்டு மக்கள் பல்வேறு மொழிகள் பேசினாலும், வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பண்பாடு, பழக்க வழக்கங்களால் பிரிந்திருந்தாலும் இம்மக்களின் ரத்தத்தோடு கலந்துவிட்ட ஓர் உணர்வு இந்நாட்டை ஒரே தேசமாக வைத்துள்ளது. தேசிய ஒருமைப்பாட்டிற்கு இந்த நதிகள் பெரும் துணையாக விளங்கி வருகின்றன.

நாட்டு விடுதலைக்கு முன்னால் ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்ட சிறிய அணைக்கட்டுகளையும், குளங்களையும், குட்டைகளையும், பாசனத் தேவைக்கு நாம் பெரிதும் நம்பி வந்தோம். கிணற்றுப் பாசனம் மூலம் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதும் பரவலாக நடந்து வந்தது. நமக்கு நாமே வழங்கிக் கொண்ட அரசியல் சட்டத்தில் ''தண்ணீர்'' மாநிலத்தின் பொறுப்பாக விளங்குகிறது. நீர்வளத்தைப் பயன்படுத்தத் திட்டமிடுதல் மாநில அரசின் கடமையாக ஆனது. இருந்தபோதும், மாபெரும் நிர்மாணப்பணிகளான பக்ரா நங்கல், தாமோதர பள்ளத்தாக்குத் திட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைத் திட்டமிடும் பொழுது, அவற்றின் மூலம் பயன்பெறும் எல்லா மாநிலங்களும் ஒத்துழைப்பைத் தந்தன.

நாட்டின் விடுதலைக்குப் பின், பெரும்பாலான மாநிலங்கள் நீர்வளத் திட்டங்களுக்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் முன்னுரிமை அளித்தன. பல்வேறு நீர்த் தேக்கத் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் மற்ற சில நாடுகளைப் போல மழை பெய்யும் காலமும், இடமும் அதிக அளவில் வேறுபடுகின்றன. நமக்குப் பருவ மழைகள் கிடைக்கின்றன. இப்பருவ மழைக்கால நீரைச் சேமித்து வைக்காவிட்டால் பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. இத்துறையில் மாநிலங்களின் பங்கு, நீர்த்தேக்கங்கள் அமைப்பதற்குப் பொருத்தமான இடங்களைத் தேர்ந்தெடுத்தலும், அமைத்தலுமேயாகும். நாட்டு விடுதலைக்குப் பின் 600 நீர்த்தேக்கங்களுக்கு மேல் கட்டப்பட்டுள்ளன. இன்னும் பல பெரிய, சிறிய நீர்த் தேக்கங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஆற்றுப் படுகையின் மேல் பகுதியில் உள்ள மாநிலத்தின் செயல்கள் கீழ்ப் பகுதியில் உள்ள மாநிலத்தின் சட்டபூர்வமான நீர் உபயோகத்தைப் பாதிக்கும் நிலை உண்டாகி மாநிலங்களுக்கிடையே நீர்ப் பிரச்சினைகள் ஏற்பட்டன. இதனை எதிர்நோக்கி, மேலும் வளர்ச்சிக்கான போட்டியில் இது இயற்கையானதால் நாடாளுமன்றம் ''1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயுள்ள தண்ணீர்ப் பிரச்சினைகள்'' சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டம் மத்திய அரசு, எந்த ஒரு மாநிலமும் அதன் கவனத்திற்குக்கொண்டு வந்த தண்ணீர்ப்பிரச்சினையை நடுவர் Tribunal தீர்ப்பைக் கோர வசதியளிக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் பல நடுவர் மன்றங்கள் நியமிக்கப்பட்டுள்ளன. தீர்ப்புகள் தாமதமானதாலும் எல்லோர்க்கும் திருப்தி அளிக்காததாலும், பல பயனுள்ள திட்டங்கள் நிறைவேற்ற முடியாமல் தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. நடுவர் மன்றங்களின் தீர்ப்பின் வரைமுறைகளுக்கிணங்கச் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பொருளாதார ரீதியிலும், பயன்பெறும் ரீதியிலும் சிறந்தவையாக இல்லை. ஆற்றுப் படுகையில் கிடைக்கும் நீர்வளத்தின் பெரும் பகுதியைப் பயன்படுத்தும் வாய்ப்பையும் இழந்தன.

சில மாநிலங்கள் ஆற்றின் நீர் அமைப்பினால் குறைந்த மழையுடன் நீர் வளப் பற்றாக்குறையுடன் விளங்கும்போது வேறு சில மாநிலங்கள் மிக அதிகமான நீர் வளங்கள் நிரம்பிய ஆறுகளைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாடு மிகக் குறைந்த நீர் வளம் உடையது. தமிழ்நாட்டின் மேற்பரப்பில் கிடைக்கும் நீரின் அளவான 810 டி.எம்.சியில் 764.3 டி.எம்.சி. ஏற்கனவே பயன்படுத்தப்படுகிறது. இம்மாநிலமே அதன் நீர்வளத்தை ஏறத்தாழ முழுவதும் முதலில் பயன்படுத்திய மாநிலம். நிலத்தடி நீரும் பெருமளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் அதிகமாக எடுக்கப்பட்டுள்ளது. பாசனம் பெறும் மொத்தப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதிக்குமேல் கிணற்றின் மூலம் தண்ணீர் பெறுகின்றது. இருந்தபோதிலும், பயிரிடப்பட்ட 7.72 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் 3.98 மில்லியன் ஹெக்டேர் மட்டுமே பாசன வசதி பெற்றுள்ளது. அதாவது பயிரிடப்பட்ட நிலங்களில் 48 விழுக்காடு பருவமழையை நம்பியிருப்பதால் நிலையில்லாத மிகக் குறைந்த விளைச்சலே கிடைக்கிறது. நம் மாநிலத்தில் ஒருவருக்குக் கிடைக்கக்கூடும் நீரின் அளவு 0.02 மில்லியன் கன அடி ஆகும். நாட்டின் சராசரி அளவு 0.14 மில்லியன் கன அடி ஆகும். குடிநீர்த்தேவைக்கும், தொழில் உற்பத்திக்கும் இப்பொழுதே பற்றாக்குறை இருந்து வருகிறது. நம் மாநிலத்தின் 24 வட்டங்கள் வறட்சியால் வாடுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் வாழும் மக்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க இப்பகுதிகளுக்கு, நீரை, உபரிநீர் உள்ள பகுதிகளிலிருந்து கொண்டுவருவதே வழியாகும்.

இம்மாதிரியான நிலை நாட்டின் பல பகுதிகளிலும் இருக்கின்றன. நாட்டு விடுதலைக்குப்பின், பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த பிறகும், நாட்டின் பாசனப் பரப்பு 22.6 மில்லியன் ஹெக்டேரிலிருந்து 52.3 மில்லியன் ஹெக்டேர் வரைதான் உயர்ந்திருக்கிறது. பயிரிடப்பட்ட பரப்பில், பாசனத்தினால் பயிரிடப்பட்டது 32 விழுக்காடாகும்.

நாட்டில் நிலத்தின் மேற்பரப்பில் கிடைக்கும் மொத்த நீர்வளம் 1440 மில்லியன் ஏக்கர் அடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில், நாட்டின் நில அமைப்பினால், நீர்த்தேக்கங்கள் அமைப்பதற்கு வேண்டிய இடங்கள் இல்லாததால், நீர் கிடைக்கும் காலங்களினால், உபயோகப்படுத்த முடியாத நீரைக் கழித்தால் பயன்படும் நீரின் அளவு 500 மில்லியன் ஏக்கர் அடி தான், இதுவரை நம்மால் 200 மில்லியன் ஏக்கர் அடி நீரைப்பயன்படுத்த முடிந்துள்ளது. மீதமுள்ள பயன்படக்கூடிய 300 மில்லியன் ஏக்கர் அடி நீர் தற்பொழுது வீணாகிக் கொண்டிருக்கிறது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நம் நாட்டிலுள்ள நதிகளின் நீரையும், நதிகளையும், தேசிய மயமாக்குவதுதான் ஒரே வழி. எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நீரின் பற்றாக்குறையை உணர்ந்து உலகமெங்கும் விழிப்புணர்வோடு செயல்படும் தற்காலத்தில், உலக அமைப்புகளான ஐக்கியநாடுகள் அமைப்பும், ஐக்கியநாட்டு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும் அமைப்புகளும், உணவு விவசாய அமைப்புகளும், நீரின் உபயோகத்தைச் சிக்கனப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கும்பொழுது, ஏழ்மையான பாரதநாடு திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றை செயல்படுத்துவதிலுமுள்ள நடைமுறை சிக்கல்களினால் தனது நீர்வளம் வீணாவதைத் தவிர்த்தல் நலம்.

எல்லா நிலைமைகளையும் ஆய்ந்து நாட்டின் மொத்த வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு ஆறுகளைத் தேசியமயமாக்குதல் சிறந்த வழியாகும் எனத்தமிழக அரசு மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்து வந்துள்ளது. ஆளுங்கட்சி கொள்கை அளவில் இதை ஏற்றுக் கொண்டு தன்னுடைய தேர்தல் அறிக்கையில்குறிப்பிட்டுள்ளதோடு அதைச் செயல்படுத்துவதில் அக்கறையும் கொண்டுள்ளது. இந்த யோசனையில் உள்ள நல்ல விளைவுகளை மத்திய அரசு கவனத்தில் கொண்டு மற்ற மாநிலங்களின் ஒப்புதலைப் பெற்று இதைச் செயல்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

உலகெங்கிலும் உள்ள சிறந்தபொறியாளர்களின் திறமையில் சற்றும் குறையாத பொறியாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், நம் நாட்டில் நம்மிடம் உள்ளனர். இந்நாட்டில் நீர்வளத்தை உச்ச அளவிற்குப் பயன்படுத்த ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை அவர்களால் கொடுக்க முடியும்.

இது போன்ற திட்டங்கள் ஏற்கனவே, சிலரால் கொடுக்கப்பட்டுள்ளன. மத்திய பாசனத்துறை அமைச்சராக இருந்த பொறியாளர்-அரசியல் வாதி-டாக்டர் கே.எல். ராவ் அவர்கள் கங்கை—காவேரி இணைப்புத் திட்டத்தை அளித்தார். இத்திட்டம் தொழில் நுட்ப ரீதியாக சாத்தியமானபோதிலும், பொருளாதார ரீதியில் விந்திய மலையைத் தாண்டுவதற்கு நீரேற்றுச் செலவுகள் மிக அதிகமானதால் செயல்படுத்தப்படவில்லை. தஸ்தூர் திட்டம் என்று அழைக்கப்படும் இமய மலையிலிருந்து குமரிமுனைவரை ஒரு மாலை போல் இந்தியாவைச் சுற்றி கால்வாய் அமைத்து இந்நாட்டின் எல்லா நதிகளையும், இணைக்கும் திட்டமும் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது. தொழில் நுட்ப ரீதியில் சாத்தியமில்லாததாலும், அதிகச் செலவாகும் என்பதாலும், இத்திட்டம் கைவிடப்பட்டது. மத்திய அரசு சமீபத்தில் நாட்டின் நீர்வளத்தைப் பயன்படுத்த ஒருங்கிணைந்த தேசிய திட்டம் ஒன்றைத்தீட்டியுள்ளது. இத்திட்டம் மற்ற திட்டங்களைக் காட்டிலும் சாத்தியமானது. ''தக்காண பீடபூமி இணைப்பு'' ( Peninsular Grid ) என்பது இத்திட்டத்தின் ஓர் அங்கமாகும். மகாநதி, கோதாவரி ஆறுகளில் உள்ள பெருமளவு உபரிநீரை நீர்த்தேக்கங்கள் அமைத்து இணைப்புக்கால்



வாய்கள் வெட்டி கிருஷ்ணா, காவேரியோடு சேர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது. பயன் படுத்துவதற்கு நிலம் இல்லாமையால் அரபிக் கடலில் வீணாகக் கலக்கும் ஆறுகளின் நீரை கிடைக்கும் இடங்களில் பொருத்தமான நீர்த் தேக்கங்கள் அமைத்து சுரங்கக் குடைவுகளின் மூலமாக மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் கடந்து கிழக்குப் பகுதிகளில் உள்ள பற்றாக் குறை நிலங்களுக்குப் பயன்படுத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது. 1895-ல் நிறைவேற்றப் பட்டபெரியார் திட்டமும், இரண்டாவது மூன் றாவதுஐந்தாண்டுத் திட்டக்காலங்களில் தமிழ் நாட்டால் நிறைவேற்றப்பட்ட பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டமும், இது போன்ற ஆற்றுப் படுகைகளுக்குத் திருப்பும் திட்டங்களுக்கு முன் னோடிகளாகும். அவை அவற்றிற்கான செல வைக் காட்டிலும் பலமடங்கு பயன்தருபவை.

தேசிய நீர் வளர்ச்சித் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு முன்னோடியாக ஆய்வுப் பகுதி களைக் கவனிக்க மத்திய அரசு ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. 1860-ஆம் ஆண்டு சங்கங் கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட "தேசிய நீர்வள அமைப்பு" ஒன்று புதுடில்லியைத் தலைமையாகக் கொண்டு இயங்கும்.

தேசிய நீர்வளத் திட்டம் சட்ட இடை யூறுகள் ஏதும் இல்லாமல் விரைவாகச் செயல் பட ஆற்று நீரை தேசிய மயமாக்குவது உட னடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும். மாநிலங்களுக்கு இடையே ஓடும் ஆறுகள் தேசத்தின் பொது உடைமை என்பதை உணர்ந்து மத்திய அரசு இதில் [illegible] வனத்தை விரைவாகச் செலுத்தும் என நம்பு கிறேன்.

(7-3-82-ல் வானொலியில் ஆற்றிய உரை)

# பொருட்காட்சி நிறைவு நாள் விழா


சென்னைத் தீவுத்திடலில், கடந்த 65 நாட்களாக நடை பெற்று வந்த அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 15-3-82 அன்று முடிவடைந்தது. இதையொட்டி நிறைவுவிழா, பொருட்காட்சி அண்ணா கலையரங்கில் நடந் தது.

மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மாமல்லபுரத்தில் இளைஞர்கள் தங்குவதற்கான சுற்றுலா வளா கம், ஏப்ரல் 10ந் தேதி திறக்கப் பட இருக்கிறது. மாண்புமிகு மத்திய சுற்றுலா அமைச்சர் திரு. ஏ. பி. சர்மா அவர்கள் திறப்பு விழாவுக்கு வருவதாகச் சொல்லி இருக்கிறார். இந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் கலந்து கொள்வார் கள். இங்கு வந்துள்ள மத்திய சுற்றுலா இயக்குநரையும் திறப்பு விழாவுக்கு அழைப்பதில் பெருமை அடைகிறேன்.

"சுற்றுலாப் பொருட்காட்சிக்கு மக்கள் பேராதரவு தந்து வரு கிறார்கள் என்பதில் சந்தேக மில்லை. இந்தப் பொருட் காட்சியில் 12.5 இலட்சம் ரூபாய் அளவுக்கு வருமானம் வந்துள்ளது. வருமானத்துக்காக இது போன்ற பொருட்காட்சியை அமைக்க வில்லை.

"பொருட்காட்சியில் சூதாட் டத்தை நாங்கள் அனுமதிக்க வில்லை. அப்படி அனுமதித்து இருந்து, அவர்களுக்குக் குத்தகை விட்டிருந்தால், சூதாட்டத்தில் கலந்து கொள்ள ஒரு இலட்சம் பேராவது வந்து இருப்பார்கள். சூதாட்டத்தை அனுமதிக்காத தால் 2 இலட்சம் ரூபாய் வரு மானத்தை இழந்து இருக்கிறோம். வருமானம் முக்கியமல்ல. இளை ஞர்களின் பண்பு கெட்டு விடக் கூடாது என்பதால்தான், சூதாட் டத்தை அனுமதிக்கவில்லை. இப்படிச் செய்ததால் இளைஞர் களைக் காப்பாற்றி இருக்கி றோம்.



விழாவில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், கலந்து கொண்டு, பொருட்காட்சியில் சிறந்த அரங்குகள் அமைத்தவர் களுக்குப் பாரதியார் உருவம் பொறித்த கேடயத்தைப் பரிசாக வழங்கினார். அப்போது அவர் பேசுகையில் கூறியதாவது:

"சட்டத்தினால் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ப தற்காக அது கொண்டு வரப் படுகிறது. அதை எதிர்த்துக் கோர்ட்டுக்குப் போவதால் தடை படுகிறது. இதனால் சமுதாயத் துக்குப் போக வேண்டிய காரி யங்கள் தள்ளி வைக்கப்படுகின்றன நிரந்தரமாகத் தள்ளி வைக்க முடியாது, தாமதமாகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் பேசு கையில் கூறியதாவது:

"சுற்றுலா வளர்ச்சியை அதிகப் படுத்துவதற்காக மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில்

ஏஜெண்டுகள் வைத்ததன் விளை வாக 1.25 இலட்சம் ரூபாய் நமக்கு அன்னியச் செலாவணி கிடைத்தது. தீவுத் திடலில் பொருட்காட்சி அடுத்த ஆண்டு நிரந்தரமாக்கப்படும். இதற்கான அடிக்கல் நாட்டு விழா, இரண்டு மூன்று மாதத்தில் நடைபெறும். மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டுவார்கள்."

இறுதியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக நிர்வாக இயக்கு நர் திரு. ஜே. ஆர். இராமநாதன் ஐ. ஏ. எஸ்., அவர்கள் நன்றி கூறினார். விழா முடிவில் கலைமாமணி சீர்காழி கோவிந்த ராசன் அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடந்தது.



# தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஒரு பார்வை

எச். பி. என். ஷெட்டி, இ.ஆ.ப.
ஆணையாளர் மற்றும் அரசுச்செயலாளர்,
ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை.

மனிதர்கள் பலவிதம். அதுபோல் மனித வாழ்வும் பலவிதம். உண்பதற்காக உழைப்ப வர்களும் உண்டு. எனினும் உழைத்து உண்ண வேண்டியவர்கள் உழைப்பிற்கான வாய்ப் பினை எதிர்நோக்குகிறார்கள். அத்தகைய வாய்ப்பை, ஆண்டு முழுவதும் அரசு அளிக்க வேண்டியது அதன் பொறுப்பு.

வேளாண்மையைப் பெரிதும் நம்பி வாழும் நம் நாட்டில், வேளாண்மை காலங்கள் தவிர, எஞ்சிய நாட்களில் நம் கிராம மக்களில் பலர் வேலை வாய்ப்புகளின்றி சோம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. கற்ற வர்கள் நடுவே மட்டுமின்றி, உடல் உழைப்புக் குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் தயாராக விருக்கும் இளைஞர்களும் வேலை வாய்ப் பின்றி அல்லல்பட வேண்டிய நிலை உரு வாயிற்று. எனவே வேலை இல்லா நிலைமை மாபெரும் உருவமெடுத்து இந்த நாட்டையே அச்சுறுத்தத் தொடங்கியது. எனவே இவ்வச் சுறுத்தலை வீறு கொண்டு எதிர்நோக்கி வெற்றி எய்த 1979 ஏப்ரல் திங்களில் இந்த மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே "உழைப்புக்கு உணவு" என்று முதலில் அழைக்கப்பட்டு, இப்போது "தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்" என்றழைக்கப் படும் திட்டமாகும்.

இந்தியா முழுவதும் மாபெரும் அளவில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. 1979-80-ஆம் ஆண்டில் மட்டும் இத்திட்ட நிறை வேற்றத்திற்கென இந்தியா முழுமைக்கும் ரூ. 332 கோடி மதிப்புள்ள 24 இலட்சம் டன் உணவு தானியம் ஒதுக்கப்பட்டது. இதில் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த பங்கின் அளவு 73,000 டன்கள்.

1980-81-இல், இத்திட்டத்திற்காக இந்தியா முழுமைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 360 கோடி. இதில் தமிழகத்திற் கான பங்கு 60,000 டன் அரிசியும், ரூபாய் 10.59 கோடியுமாகும். இத்திட்டத்தின் ஆரம்ப காலத்தில், உழைப்பிற்கான ஊதியமாக வட [illegible] கோதுமை மட்டுமே வழங்கப் பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர் [illegible] தளரா முயற்சிக்குப் பின்னர், இம் [illegible] இத்திட்டத்தின் கீழ் வழங்கு [illegible] அரிசி வழங்கப்பட்டது.

இனி தமிழ் நாட்டில் இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் நடந்து வரும்-நடந்த-பணிகள் பற்றி சிறிது காண்பது நல்லது.

சிறுபாசன வசதிகள் மேம்பாடு, புயல்-வெள்ளத் தடுப்பு அமைப்புகள், ஊர்ப்புறச் சாலைகள், வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பள்ளிக்கட்டடங்கள், தாய் சேய் நல விடுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பயனடையும் குடியிருப்புகள் கட்டு தல் ஆகிய பல பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதில் நாம் பெற்ற சாதனை பட்டியல்





உதகைப் பள்ளியொன்றில், அமைக்கப்பட்டுள்ள நடைவழிப் பாதை.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத்திட்டம் :

# நீலகிரி குறைகள் நீங்குகின்றன!

**சி.எஸ்.ராஜேந்திரன்**

முன்னர் தமிழக அரசால் உருவாக்கப்பட்டு ஆங்காங்கே சிறப்புற நிறைவேற்றப்பட்டு வரும் தன்னிறைவுத் திட்டம் இப்போது இரண்டாவது கட்டத்தில் ஏற்றம் கண்டு வருகிறது.

அதே நேரத்தில், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டமும் (National Rural Employment Programme) தமிழகத்திலுள்ள அத்தனை மாவட்டங்களிலும் மிக வேகமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1980—81-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இத் திட்டம், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதை முக்கியமாகக் கொண்டதாகும்.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று எழுச்சி பொங்கப் பாடிய பாரதிக்கு நூற்றாண்டு விழாக்காணும் இந்நாளில் - இத்திட்டத்தில் பங்கேற்று உழைப்போருக்கு உண்ண உணவும் வழங்கப்படுவதும் ஒரு கூறாகும்.

வளர்ச்சி குன்றிய கிராமப்புறங்களில் வளம் தேக்கும் எண்ணமே இந்தத் திட்டத்தின் அடிப்படை.

பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், பழைய பள்ளிக் கட்டடங்களைப் பராமரித்தல், பல வீணப்பட்ட சாலைகளை யொட்டித் தடுப்புச் சுவர் கட்டுதல், பாதைகளை அமைத்தல், புதிய சாலைகளை உருவாக்குதல், இருக்கும் சாலைகளைச் செப்பனிடல், பள்ளிகளுக்கான உணவுக் கூடம் கட்டுதல், குளங்குட்டைகளை ஆழப்படுத்துதல் - அகலப்படுத்துதல் போன்ற சமுதாயத்திற்குப் பயனளிக்கின்ற பணிகளில் பல இத்திட்டத்தின் மூலம் சீரும் சிறப்புமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## தமிழகத்திற்குப் பாராட்டு

திட்டப் பகுதிகளில் உழைப்போருக்கு முன்பெல்லாம் ஊதியம் அரிசியாக மட்டுமே தரப்பட்டு வந்தது. அரிசி மட்டும் போதுமா, அதற்கு மேலான செலவுகளுக்குப் பணம் வேண்டாமா? என்ற கேள்வி எழவே, அதன் உண்மை மதிக்கப்பட்டு, இப்போது அந்த ஊதியம் அரிசியாகவும் பணமாகவும் தரப்பட்டு வருகிறது.


அதாவது, ஒரு நாளைக்கு ஒருவர் ஏழு ரூபாய் பெறுமானமுள்ள வேலை செய்கிறாரென்றால், அந்தப் பணத்தில் ஒரு கிலோ அரிசியும், மீதம் பணமாகவும் தரப்பட்டு வருகிறது.

எல்லா மாநிலங்களிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்றாலும், தமிழகமே இதில் முதலிடம் வகிக்கிறது. கடந்த ஆண்டில், இத் திட்டம் பற்றிய வரவு செலவுக் கணக்கு மத்திய அரசால் கேட்கப்பட்டபோது தமிழகமே சரியான கணக்கைக் கொடுத்தது. இது பற்றி வட இந்தியப் பத்திரிகைகளெல்லாம் கூட தமிழகத்தைப் பாராட்டி எழுதின.

அவ்வப் பகுதிகளில் உள்ள மக்கள், தங்கள் பகுதிகளில் இருக்கும் குறைகளை அங்குள்ள ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் தெரிவித்தால் போதும். அவர்களால் அந்தக் கோரிக்கையின் உண்மை அறியப்பட்டு தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் குறைகள் நிவர்த்திக்கப்படுகின்றன.

## நீலகிரி மாவட்டம்

இத்திட்டம் எந்த அளவில் செயல் படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிந்திட ஊரக



கூனூரில் இப்படிக் கிடந்த ஒரு மலைச் சரிவுப் பாதை...

வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் உதவி மக்கள் தொடர்பு அதிகாரி திரு லத்தீப் அவர்களுடன் அண்மையில் நீலகிரி மாவட்டச் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம்.

உதகை மண்டலத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் - மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் திரு. சி. நடேசன் அவர்களும், மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு ஏ. பன்னீர் செல்வம் அவர்களும் நம்மை இன்முகத்தோடு வரவேற்றார்கள்.

நமது வருகையின் நோக்கம் அறிந்த திரு சி. நடேசன் அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டு வருகிற - நிறைவேற்றப்பட இருக்கிற பணிகள் பற்றி விளக்கிச் சொன்னார்.

28—2—1982 வரை நீலகிரி மாவட்டத்தில், இத்திட்டத்தின் கீழ் நிறைவேறியுள்ளதாகவும், நிறைவேறவிருப்பதாகவும் அவர் தெரிவித்த விவரங்கள் பின் வருமாறு:

1980—81-க்கெனத் தீர்மானிக்கப்பட்ட பணிகளில் 8 சாலைப் பராமரிப்பும், சிறுபாலங்கள் அமைத்தலும் நிறைவேறியுள்ளன. புதிய சாலை அமைப்பு-சிறு பாலம் அமைப்பு 8-ல் 4 நிறைவேறியுள்ளது.

பள்ளிப் பராமரிப்பு வேலைகள் 8 ல் 3 முடிவுற்றுள்ளது.

இதரக் கட்டடங்கள் 14-ஐப் பராமரிக்க மேற்கொண்ட பணிகள் முழுதும் முற்றுப் பெற்றுள்ளன.

7 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேயுள்ளன.

பாதைப் பராமரிப்பில் 4 முடிவுற்றிருக்கிறது.

6 ஓடைகள் விரிவாக்கப்பட்டுச் செப்பனிடப்பட்டுள்ளன.


இப்படி எடுத்துக்கொண்ட பணிகளில் முடிவுறாதிருக்கும் சாலைப் பராமரிப்பு சிறு பாலங்கள் அமைத்தல் நான்கும், பள்ளிக்கட்டடப் பராமரிப்புப் பணி ஐந்தும் விரைவில் முற்றுப்பெறும்.

''அதேபோல 1981—82 ஆம் ஆண்டில் முடிப்பதற்கென எடுக்கப்பட்ட பல்வேறு பணிகளின் எண்ணிக்கை மொத்தம் 329 ஆகும். அவற்றில் 89 பணிகள் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டுவிட்டன. மீதம் உள்ள பணிகள் 240-ம், அடுத்தடுத்த வாரத்திற்குள் செய்து முடிக்கப்பட்டுவிடும் என்று மிகவும் உறுதியோடு தெரிவித்தார் திரு சி. நடேசன்.

நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 14,42,500 ஆகும்.

1.4.81 முதல் 25.2.82 வரையிலான மனித உழைப்பு நாட்கள் 44,733.

உழைப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் அந்நாட்களில் பெற்றுக்கொண்ட அரிசியின் அளவு 42.728 மில்லியன் டன்.



இப்படிச் செப்பனிடப்பட்டுள்ளது.

| விவரம் 1 | ஆண்டு 1979—80 2 | ஆண்டு 1980—81 3 | ஆண்டு 1981—82 4 |
|---|---|---|---|
| செய்து முடிக்கப்பட்ட பணிகள் | 32914 | 28518 | 33983 |
| கூலியாக வழங்கப்பட்ட அரிசியின் அளவு | 58232 டன்கள் | 47378 டன்கள் | 28530 டன்கள் |
| பணவகை கூலியாக வழங்கப்பட்ட தொகை | ரூ. 126.73 இலட்சம் | ரூ. 195.75 இலட்சம் | ரூ. 10.92 கோடி |
| செய்யப்பட்ட வேலைகளின் மதிப்பு | ரூ. 920.90 இலட்சம் | கு. 872.30 இலட்சம் | ரூ. 23.46 கோடி |
| பயன்படுத்தப்பட்ட உழைப்பு நாட்கள் | 142.04 | 146.75 | 335.21 |

இவ்வெற்றிப் பட்டியலை விவரமாகக் கூற வேண்டுமானால் 31-12-1981 வரை மொத்தத்தில் 600 கி. மீ. நீள பல்வேறு சிறிய பாசன அமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பயன் பெறும் நிலங்களின் மொத்தப்பரப்பளவு 4237.77 ஹெக்டேர்கள். வெள்ளம் மற்றும் அதிகப்படியான நீரை வடிப்பதற்காக அமைக்கப்பட்ட மொத்த வடிகால்களின் எண்ணிக்கை 994. இதனால் பயன் பெறும் நிலங்களின் மொத்தப் பரப்பளவு 181 ஹெக்டேர்கள்.

இவை மட்டுமின்றி 1982 பிப்ரவரி திங்கள் முடிய 3786.380 கி. மீ. நீளம் ஊர்ப்புறச் சாலைகள் இடப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. இது வரை கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் 678 ஆசிரியைக் குடியிருப்புகள், மதிய உணவு மையங்கள், சமுதாய நிலையங்களும் மற்றவைகளும் 398.

இத்தகைய இமாலயப்பணிகள் செவ்வனே 'நடைபெற வேண்டுமெனில் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட வேண்டும். ஆனால் இத்திட்டத்தின் மூலம்' ஒப்பந்தகாரர்களைத் தவிர்த்து அரசுத்துறைகளே இத்திட்டத்தை நிறைவேற்றியதால் குறைந்த செலவில் நிறைந்த வசதிகள் ஏற்பட வாய்ப்பு கிடைத்தது.

1981-82-ஆம் ஆண்டில் மட்டும் பிப்ரவரித் திங்கள் முடிய மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்பட்ட புதிய பணிகளின் எண்ணிக்கை உண்மையிலேயே நமக்கு வியப்பளிக்கும் வண்ணம் அமைந்துள்ளன என்பதைக் கீழ்க்காணும் பட்டியல் காட்டும் :—

| மாவட்டம் | | எடுத்துக்கொள்ளப் பட்ட பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| செங்கல்பட்டு | ... | 3740 |
| தென் ஆர்க்காடு | ... | 3261 |
| தஞ்சாவூர் | ... | 5019 |
| புதுக்கோட்டை | ... | 1091 |
| திருச்சிராப்பள்ளி | .. | 3722 |
| இராமநாதபுரம் | ... | 5263 |
| மதுரை | ... | 4558 |
| திருநெல்வேலி | ... | 4003 |
| கன்னியாகுமரி | ... | 2153 |
| வட ஆர்க்காடு | ... | 6298 |
| பெரியார் | ... | 1540 |
| சேலம் | ... | 1666 |
| தருமபுரி | ... | 4569 |
| கோயம்புத்தூர் | ... | 1734 |
| நீலகிரி | ... | 369 |






இப்பணிகளுள் குறிப்பிட்டுக் கூறத்தக்க பணி, பள்ளிக் கட்டட்டங்கள் கட்டுதலாகும். தமிழகம் முழுவதற்கும் இரண்டாயிரம் பள்ளிக் கட்டடங்கள் இத்திட்டத்தினால் மட்டும் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. இது வரை முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்களின் எண்ணிக்கை 416. இத்திட்டத்தினோடு இணையாமல் தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் பள்ளிக் கட்டடங்கள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெறுவதால் கூரைகளிலும் வாடகைக் கட்டடங்களிலும், ஒன்றியப் பள்ளிகள் செயல்பட வேண்டிய நிலைக்கு மிக விரைவில் முற்றுப்புள்ளி இடப்படும் என்பது உறுதி.

## நான்காவது அட்டையில்

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில், ஆதிதிராவிடர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொதுவாக அமைக்கப்பட்டுள்ள இடுகாடு.

கிராம வேலை வாய்ப்புத் திட்டம், வேலை இன்மைக் கொடுமையைப் பெரும் அளவில் அகற்றி, அதே வேலையில் சமுதாயத்திற்குத் தேவையான பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன என்பதற்குச் சான்றுகள் தேவையில்லை. ஏனெனில் இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வசதியும், கட்டப்பட்டுள்ள கட்டடம், இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்குமே இத்திட்டத்தின் சிறப்பினைக் கூறும் வகையில் நம் விழிகள் எதிரே சான்றுகளாக அமைந்திருக்கின்றன.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சிறந்து விளங்குகிறது என்று பத்திரிகைகள் பாராட்டுகின்றன. அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு மட்டுமே இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட அரிசி மற்றும் நிதி உதவியைப் பயன்தரத்தக்க வகையில் செலவழித்து பல்வேறு பணிகளை முடித்தது மட்டுமின்றி உரிய கணக்குகளைக் கொடுத்து மத்திய அரசிடமிருந்து இரண்டாவது கட்ட நிதி ஒதுக்கீட்டிற்குத் தகுதி பெற்றுள்ளது என 12-12-81 நாளிட்ட "Financial Express" ஏடு பாராட்டுகிறது.

1981-82-ஆம்ஆண்டுக்காக மேலும் 12,500 மெ. டன். அரிசியும் ரூ. 7.40 கோடியும் மத்திய அரசு வழங்கியுள்ளது. ஆக மொத்தம், இத்திட்டத்திற்காக மத்திய அரசு 26638 மெட்ரிக் டன் அரிசியும் ரூ. 14.80 கோடியும் அளித்துள்ளது. இதற்கு இணையாக மாநில நிதியில் ரூ. 14.80 கோடி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்திற்காக சற்றேறக்குறைய ரூ. 30 கோடி செலவிடப்படுகிறது.

மொத்தத்தில், கிராம வாழ் மக்களின் உணவுப் பிரச்சனையான தனிப்பட்ட தேவைகளைத் தீர்க்கின்ற அதே வேளையில் அவர்களுக்குப் பயனுள்ள வேலை கொடுத்து சாலை வசதி, பாசன வசதி, கல்வி வசதி, குடிநீர் வசதி போன்ற சமுதாயத் [illegible] களையும் நிறைவேற்றி. நிலையான சமுதாய உடைமைகளை உருவாக்கி, ஊரக வளமைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது [illegible] மறுக்க இயலாதமறைக்க முடியாத [illegible]

தெரிவிக்கிறார்கள் ஆணையர் திரு எஸ். அருணாசலமும், ஒன்றியப் பொறியாளர் திரு ஜி. வெங்கடேசகிரியும்.

இதில் ரூ 87,500 பெறுமானமுள்ள 14 பணிகள் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளன. 32 பணிகள் பத்துப் பதினைந்து நாளில் முடிவுறவிருக்கிறது. மற்றவை விரைவில் நிறைவேறும்.

கோத்தகிரியில் உள்ள ஒரு இடுகாட்டுக்கு 60 மீட்டர் நீளத்தில் ஐயாயிரம் ரூபாய் திட்டத்தில் வழித்தடம் அமைத்துள்ள பணியும், பிண எரிப்புக்கூடத்திற்கென 5×5 மீட்டரில் அங்கே போடப்பட்டுள்ள ரூ 18 ஆயிரம் செலவிலான கொட்டகை அமைத்துள்ள பணியும் சிறப்பித்துச் சொல்லக் கூடியதாக உள்ளது.

கோத்தகிரி நகரில் ஆதிதிராவிடர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொதுவான இடுகாடாக இது உள்ளது!

சாதி மத பேதமின்றி இருசாராரும் இந்த விஷயத்தில் இங்கே இணைந்து நிற்பது பாராட்டத்தக்க ஒன்றுதானே!

இந்த இடுகாட்டையொட்டி, கிறிஸ்தவர்களின் மயானம் இருக்கிறது.

1977—78-ல் நீலகிரி மாவட்டத்தில் சிறந்த ஊராட்சி எனச் சிறப்புச் சான்றிதழ் பெற்றுள்ள கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் வாழும் ஆதிதிராவிட மக்கட்தொகை 3,155 ஆகும்.

''இந்த இடுகாட்டில் புதைப்பது எரிப்பது தொடர்பாக எவ்விதமான சாதிச் சண்டையும் இதுவரை இங்கே வந்ததில்லை'' என்றார் ஊர்ப்பெரியவரான திரு குமாரன் நாயர்.

இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரான அவர், அரசின் இப்படிப்பட்ட திட்டங்களால் நிறையபேருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படும் என்று பெருமிதத்தோடு கூறிப் பாராட்டினார். இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேறுவதில் அரசோடு மக்களும் இணைந்து நிற்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

''மேலே குறிப்பிட்ட இடுகாடு ஆற்றங்கரை சரிவில் அமைந்துள்ளதால், மழைக் காலத்தில் சிரமமாக உள்ளது. ஆகையால் அந்த ஆற்றங்கரையோரத்தில் ஒரு தடுப்புச் சுவர் கட்டவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஊர்மக்கள் சார்பில் நாங்கள் ஒரு மனுக் கொடுத்திருக்கிறோம்'' என்றும் நம்மிடம் தெரிவித்தார் திரு குமாரன் நாயர்.

### கூனூர்

கூனூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு என். பாலச்சந்திரன், ஒன்றியப் பொறியாளர் திரு பி. ஏகாம்பரம், மேற்பார்வையாளர் திரு கே. ரங்கராஜ் ஆகியோர் அந்த ஒன்றியத்தில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் பற்றி விளக்கமளித்தனர்.

46 திட்டங்கள் கூனூர் ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 6 பணிகள் முழுமையாக நிறைவேறியுள்ளன.

உதகையில் ஒரு தடுப்புச்சுவர்.

மொத்தத்தில் 20 மில்லியன் டன் அரிசி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை ஊதியமாக 6285 கிலோ அரிசி அவ்வப்பகுதியில் பணியாற்றுவோருக்குத் தரப்பட்டுள்ளது.

திட்டப்பணிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு ரூ 1,15,076.05.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட கரிமிரட்டி சாலையை அவர்கள் புதுப்பித்து கப்பிச் சாலையாக்கிவரும் பணியைப் பார்வையிடுகிறோம். 1.2 கி.மீ. நீளமுள்ள இந்தச் சாலை அமைப்பால் அக் கிராமத்தில் வாழும் இரண்டாயிரத்திற்கும் மேலான படுகாவகுப்பினர் பயன் பெறுவார்கள்.

கெந்தலாவில் கட்டப்பட்டுள்ள கழிவு நீர் வடிகால் வழியைப் பார்வையிடுகிறோம்.

''படுகர்கள் இடுகாட்டுக்கு இது சங்கடமாக இருப்பதால் வேறு வழிக்கு மாற்றி விடும்படி கலெக்டர் கூறியிருக்கிறார். அடுத்த மாதத்திற்குள் இதை ஒழுங்குபடுத்தி விடுவோம்'' என்கிறார் ஆணையாளர்.

அதிகாரெட்டி பேரூராட்சி மன்றத்தைச் சேர்ந்த கோடேரியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியையொட்டிய சரிவில், அப்பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான படுகர்கள் பயனடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ள, சிமென்டால் முறைப்படுத்திக் கட்டப்பட்ட 310 மீட்டர் நீளப் பாதையைப் பார்வையிடுகிறோம்.

6 அடி அகலத்தில் 21 ஆயிரம் ரூபாய் செலவில் அமைந்துள்ள இப்பாதை அப்பகுதி மக்களால் அதிசயித்துப் பேசப்பட்டது.

முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவரும், அப்பகுதியில் வாழும் இப்போதைய மக்கள் குழு உறுப்பினருமான திரு எம். ராமன் தான் இதுபற்றிய கோரிக்கையினை முன் வைத்து, நிறைவேற்றப் பெரிதும் ஒத்துழைத்தார் என்று கூறினார்கள்.

கூனூர் - குந்தா முக்கிய நெடுஞ்சாலையில் 15.2 கிலோ மீட்டரில் அமைந்துள்ள இந்த நடைவழி பற்றி அப்பகுதியில் வசிக்கும் திருமதி ஆர். ஜானகியம்மாள், ராஜேஸ்வரி ஆகியோரைப் பேட்டி கண்டோம்.

''மலைச் சரிவுல இருக்கிற பகுதிங்கறதால முன்னெல்லாம் சரியான பாதையில்லாம நாங்கள்லாம் ரொம்பரொம்பக் கஷ்டப்பட்டோப். அதுலயும் மழைக்காலத்துல, அந்தந்த வீடுகள்லேருந்து வர்ற சாக்கடையும் சேர்ந்து குழந்தைங்க நடக்கவும், தண்ணி கிண்ணி எடுத்துகிட்டு வரவும் போகவும் அவஸ்தைப் பட்டோம். இப்போ இந்த மாடிப்படிப்பாதை போட்டப்புறம் எங்கள் துன்பமெல்லாம் பறந்துட்டுது!''.-என்று இருவரும் மாறி மாறி எங்களிடம் மகிழ்வோடு தெரிவித்தார்கள்.

—இவ்வாறு நீலகிரி மாவட்டத்தில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டப்பணிகள் சிறப்புற நிறைவேறி வருகின்றன.





# புதியதோர் உலகுசெய்வோம்!

டி. எஸ். சிவப்பிரகாசம். இ. ஆ. ப.,
கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்

**தோ**ற்றம் : 1981-ம் வருடத்திய மக்கள் சணக்குப்படி தமிழ் நாட்டின் கிராம புற மக்கள் தொகை மட்டும் 3,23,69,504 என இருக்கின்றது. இதில் 55,55,382, பேர்கள் விவசாய கூலிகளாகவும், 5354067 பேர் விவசாயிகளாகவும் இருக்கிறார்கள். கிராமபுறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பெரிய அளவிலே நிலவுகிறது, வேலை செய்யும் திறன் உள்ளவர்களுக்கு வேலையில்லை. வேலை செய்பவர்களுக்கு ஆண்டு முழுவதும் போதிய வேலையில்லை: ஏனெனில் விவசாய நிலங்கள் நாளடைவில் சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு அவைகள் போதுமான வேலையை அளிக்கக் கூடிய நிலையில் இல்லை. சிறு விவசாயிகள் விவசாய கூலிகள் நம் கிராமங்களிலே நிலவி வரும் ஒரே சாதனமான வேளாண்மையையே நம்பி யிருக்கின்றனர். இவர்களுக்கு குறிப்பிட்ட பருவ காலங்களில் தான் வேலை கிடைக்கின்றன.

திட்ட வழியமைப்பு : எனவே கிராமங்களிலே நிலவி வரும் வேலையில்லா திண்டாட்டத்தை முறியடிக்க வேலைக்கு உணவுத் திட்டம் மத்திய அரசினரால் 1977ல் தொடங்கப் பெற்றது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் உபரியாக இருக்கும் உணவுப் பொருள்களை பயனுள்ள வகையிலே கிராம வேலைத் திட்டங்களிலே செலவு செய்து சமுதாயத்திற்கு நலம் பயக்கும் சொத்துக்களை உண்டாக்கி அவைகள் மூலம் கிராமங்கள் வலுவடைந்து சமுதாய பொருளாதார அபிவிருத்திக்கு உகந்த ஒரு சூழ்நிலையை உண்டாக்கலாம் . என்பதாகும், இது ஒரு மத்திய அரசாங்கத்தின் திட்டமாக இருந்தாலும் தமிழ்நாடு அரசு ஏப்ரல் 79-லிருந்து அதாவது மத்திய அரசு உணவுக்கு வேலைத் திட்டத்தின் கீழ் அரிசி கொடுக்க முன் வந்ததிலிருந்து இத் திட்டத்தை தீவிரமாக செயலாக்கி வருகின்றது. நடைமுறையில் வேலைக்கு உணவுத் திட்டத்தில் சில குறைகள் காணப்பட்டன' எனவே சில மாற்றங்கள் செய்து இத்திட்டம் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என அக்டோபர் 1980 முதல் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது.

திட்ட கருப்பொருள்—நோக்கங்கள் : இத் திட்டம் 50:50 என்ற விகித அளவிலே மத்திய அரசும் மாநில அரசும் தங்கள் நிதிகளை பகிர்ந்துகொண்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று முக்கிய குறிக்கோள்களை கொண்டது.

(1) பயனுள்ள வகையிலே கூடுதலாக வேலை வாய்ப்பை தோற்றுவித்து வேலை இல்லாத மற்றும் வேலை இருந்தும் போதுமான வேலை இல்லாத கிராம புற மககளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலை அளித்தல்.

(2) சமுதாயத்திற்கு பயன் அளிக்கும், பயனுள்ள சொத்துக்களை உண்டாக்கி கிராமப் பகுதிகள் பொருளாதார வளம் பெற்று எளியமக்கள் ஸ்திரமாக அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் வகையின் சூழ்நிலைகள் உண்டாக்குதல்.

(3) எளிய கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலும், அவர்களுடைய உணவின் தரம் ஊட்ட சத்துக்கள் அடங்கி உள்ளதாக இருக்குமாறும்மேன்மை அடையச் செய்தல்,

திட்டநுழைவாயில் : மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்ற சமுதாயத்தை நிர்மாணிக்கும் பணிகளை மட்டுமே மேற்கொண்டு, கிராமப்புறங்களில் சமுதாயச் சொத்துக்களை உருவாக்கி, அதன் மூலம் பொருளாதார மேம்பாட்டை அடைந்து கிராமங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வழிவகை செய்யும் பணிகள் மட்டுமே இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் பணிகளின் விவரம் வருமாறு :—

(1) சமுதாயக் காடுகளை அரசினர் நிலங்களிலும் ஊராட்சிகளின் பராமரிப்பில் உள்ள நிலங்களிலும் அமைத்தல், சாலைகளின் ஓரங்கள் பாசன வாய்க்கால்களின் கரைகள் தரிசு நிலங்கள், இருப்புப் பாதைகளின் இரு பக்கங்கள் ஆகியவைகளில் பழ வகைகள்,



உதகையில் ஒரு சிறுபாலமும் தடுப்புச் சுவரும்.

அப்பணிகளை நிறைவேற்றிட செலவிடப்பட்ட தொகை மதிப்பீடு ரூ. 10,36,509.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்தப் புள்ளி விவரங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் - அம்மாவட்டத்திலுள்ள ஊட்டி, கூனூர், கோத்தகிரி, கூடலூர் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களும் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்துகின்றனர் என்பதை நேரில் கண்டறியும் நோக்கோடு எங்கள் பயணம் தொடர்கிறது.



கூடலூர் சிறுபாலம்

**உதகை**

'மலைகளின் ராணி' எனப் பண்டித நேரு அவர்களால் புகழப்பெற்ற நீலகிரி மலைத் தொடரில் உள்ள உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம்தான் சென்னை மாநிலத்திலுள்ள ஒன்றியங்களனைத்திலும் மிகப் பெரியதென கருதப்படுகிறது. இதன் பரப்பளவு 400 சதுர கிலோ மீட்டர்கள்.

உதகை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஆணையர் திரு கே.எச். மதன், ஒன்றியப் பொறியாளர் திரு பி.வி. கொச்சுன்னி ஆகியவர்கள் நம்மிடம் தமது ஒன்றியப் பணிகள் பற்றி விளக்கினார்கள்.



கோத்தகிரியில், உழைத்தவர்களுக்கு ஊதியமாக அரிசி வழங்குதல்.

1981—82-ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றுவது என. தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஒன்றியத்தில் 150 பணிகள் ஏற்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 64 பணிகள் முடிவுற்றுவிட்டன. மீதமுள்ள 86 பணிகள் விரைவிலேயே முடிக்கப்பட்டுவிடும் என்று நமக்குத் தெரிவித்தார்கள் அவர்கள்.

மொத்தப் பணிகளுக்கும் இந்த ஒன்றியத்திற்கென ரூ 4,05,625 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விவரங்களைத் தெரிந்து கொண்ட பிறகு, உதகை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தொட்டபெட்டா ஊராட்சிக்குச் செல்கிறோம். ஏற்றமும் இறக்கமுமான மலைப் பாதையில் ஜீப் வண்டியைச் செலுத்த டிரைவர் தேவன் அரும்பாடு படவேண்டியுள்ளது.

அடஷோலா என்ற பகுதியில், சாலையை ஒட்டி கட்டப்பட்டுள்ள தடுப்புச் சுவரைப் பார்வையிடுகிறோம். ரூ 5000 திட்டத்தில் 9.50 மீட்டர் நீளத்தில் இந்தப் பாறைச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதற்காகச் சாலையும் ஒன்றரை மீட்டர் அளவிற்கு அகலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்புச் சுவர் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ரூ 693 பெறுமானமுள்ள 396 கிலோ அரிசியும், ரூ 3128 ஊதியமும் வழங்கப்பட்டுள்ளது. தடுப்புச்சுவருக்காகவும் சாலைப்பராமரிப்புக்காகவுமான பொருட்கள் ரூ 1116 க்கு வாங்கப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதியில் வாழும் சுமார் 2,500 பேர் பெரும் பயன் பெறுவர்.

அதைப்பார்த்துவிட்டு - நீர்மட்டத்திற்கு சுமார் 6,500 அடிக்கு மேலே மலைவெளியில் உள்ள கோயில்மேடு பகுதிக்குச் செல்கின்றோம். அங்கே, அரிசனக்குடியிருப்பிலிருந்து அருகே உள்ள இடுகாட்டுக்குப் புதுச்சாலை அமைக்கும் பணி நடந்துகொண்டிருந்தது. மூவாயிரம் ரூபாய் திட்டத்தில் உருவாகும் இச்சாலையின் நீளம் 0.2 கிலோ மீட்டர்.

அந்தப் பகுதி மக்கள் இந்தத் திட்டம் பற்றி மிகவும் புகழ்ந்து சொன்னார்கள்.

அதன்பின் - நஞ்சநாடு ஊராட்சியிலுள்ள ஒன்றியப் பள்ளியையொட்டி, மாணவ மாணவிகளின் நலம் கருதிப் போடப்பட்டுள்ள 30 மீட்டர் நீளமும் 1.25 மீட்டர் அகலமும் உள்ள செப்பனிடப்பட்ட பாறைப்பாதை உள்ளிட்ட பல்வேறு பணிகளையும் நாம் சென்று பார்க்கிறோம்.

திட்டங்களை நிறைவேற்றுவதில் அவ்வப்பகுதி அதிகாரிகளும் மக்களும்பெருமுயற்சி மேற்கொண்டிருப்பது தெரிகிறது.

**கூடலூர்**

கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்று அப்பகுதியில் நிறைவேறி வரும் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புப் பணிகள் பற்றி ஆணையர் திரு என். பெல்லி, ஒன்றியப்பொறியாளர் திரு எம். லத்தீப் ஆகியோருடன் விவாதிக்கிறோம்.

1981—82-ல் நிறைவேறவிருக்கும் பல்வேறு திட்டப் பணிகளுக்கென இப்பகுதிக்கு ரூ 3,45,625 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒன்றியத்தில் - பள்ளிக் கட்டடப் பராமரிப்புப் பணிகள் 20, பள்ளிக்கட்டடங்கள் திருத்தியமைக்கும் பணி 2, சாலைகள் சிறுபாலங்கள் பராமரிப்பு 2, சிறுபாலங்கள் மீதான நடைவழிப்பாலம் 7, மதிய உணவுக் கூடக் கட்டடங்கள் 8, வேறு பல கட்டடப் பராமரிப்புகள் 2, சாலைகள் சீரமைப்பு 3, தடுப்புச் சுவர்கள் 8, கழிவு நீர்க்கால்வாய்கள் 7, ஆசிரியர் குடியிருப்புப் பராமரிப்பு உள்ளிட்ட இதர பணிகள் 5 எனப் புதிதாக மொத்தம் 64 பணிகளும், கடந்த ஆண்டில் முடிவுறாதிருந்த 19 பணிகளும் மேற்கொள்ளப்பட்டதில் இதுவரை 70 பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மற்ற பணிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவுறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

9 ஊராட்சிகளும், 6 பேரூராட்சிகளும் உள்ள இந்த ஒன்றியத்தில், வண்டிப்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கான விளையாட்டுத்திடல் சீரமைப்பு, 3×2 மீட்டர் அளவுள்ள சமையல் கூடக் கட்டடம், தலைமையாசிரியருக்கான தனிக் கட்டடம் கட்டும் பணி ஆகியவற்றைப் பார்வையிடுகிறோம்.

விளையாடத் தவித்த 370 பள்ளிச் சிறார்களுக்கு விளையாட்டுத்திடல் அமைப்பதையும் வகுப்போடு வகுப்பாயிருந்த தனக்கொரு தனியறை அமைவதையும் மகிழ்வோடு சிறப்பித்துச்சொன்னார் அப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு, ஆர். பீமன்.

நந்தட்டிப் பள்ளி, தேவாலா - தேவாலாஹட்டி சாலையில் உள்ள ஒரு இரட்டைக் குழாய் போடப்பட்டது உள்ளிட்ட மூன்று சிறு பாலங்கள் - காம்பாடி புதுச்சாலை. அதில் அமைக்கப்பட்ட ரூ 7000 திட்ட நடைவழி உயர்பாலம் ஆகியவைகளை நாம் பார்வையிடுகிறோம்.

இந்தியாவிலேயே அதிக மழை பெய்யும் தேவாலா இந்த ஒன்றியத்திலேதான் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் எந்தப் பணியும் தேக்கமின்றி நடைபெற்றுவருகிறது இந்த ஒன்றியத்தில் என்பதை நாம் கண்கூடாகக் காணமுடிந்தது.

**கோத்தகிரி**

67,739 மக்கள் தொகை உள்ளதான கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் நம் பயணம் தொடர்கிறது.

இந்த ஒன்றியத்தில் 112 பணிகள் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது என நமக்குத்



உதகையில் ஒரு இடுகாட்டுப் பாதை உரு-
கிறது.

இத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு உரிய முறையில் வழிப்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசினர் உத்தேசித்தவாறு மக்கள்குழு வட்டார அளவிலும் முறைப்படுத்தும்குழு மாவட்ட, மாநில அளவிலே அமைக்கப்பட்டு சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் குறைந்த இடைவெளி காலங்களிலே கூடி திட்ட நடைமுறையை ஆய்வு செய்கின்றன. இக்குழுக்களின் முக்கியப்பணி வட்டாரங்களிலே எந்த வேலைகளை எடுக்க வேண்டுமென்று திட்டமிடுவதும் அதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் ஆதாரங்களையும் தீர்மானிப்பதாகும். மற்றும் எல்லாப் பகுதிகளுக்கும் சரிசமமான அளவில் ஆதாரங்களை வினியோகித்து எங்கும் வீண் விரயங்கள் நடைபெறுது பாதுகாப்பதுமாகும். மாவட்டக் குழுவின் எல்லாவகையான வேலைகளும் அந்தந்த பகுதிகளுக்கேற்றவாறு தீர்மானிக்கப்பட்டு ஒரு திட்ட அடுக்காக அமைக்கப் படுகிறது. இந்த திட்ட அடுக்கிலிருந்து அதன் முழுமையான நோக்கம் சிதறிவிடாமல் வேலைகள் செய்யப்பட வேண்டும். இவ்வேலைகளின் செயலாக்கம் மிக முனைப்பாக கண்காணிக்கப் பட்டு பலநிலைகளில் ஆய்வுக்கு உட்படுகின்றன மாநில அளவில் 11 தொழில் நுட்ப ஆய்வு குழுக்கள் இவ்வேலைகளின் பரிமாணத்தையும் காக்தையும் வலிமையையும் மேலாய்வு செய்கின்றன



## இத்திட்டத்தின் முனனேற்றம்

தமிழ்நாட்டில் 31—3—81 முடிய 80613 வேலைகள் எடுக்கப்பட்டு அவைகளில் 73407 வேலைகள் செய்து முடிக்கப்பட்டு 7206 வேலைகள் அடுத்த ஆண்டு செயலாக்க எடுத்துக் கொள்ளப்பட்டன. இக்காலத்தில் 133000 மெட்ரிக்டன்கள் அரிசி ஒதுக்கப்பட்டதில் 105610 மெட்ரிக் டன்கள் அளவுள்ள அரிசி பயன் படுத்தப்பட்டது. இத்துடன் ரு 504 லட்சம் பெறுமானமுள்ள கட்டுமானப் பொருள்கள் பயன்படுத்தப் பட்டன' வேலை செய்தோருக்கு கூலியாக மட்டும் ரு 186·50 லட்சம் செலவாயிற்று.

நடப்பு நிதி யாண்டில் 31—1—82 வரை 44372 வேலைகள் எடுக்கப்பட்டு 33983 வேலைகள் முடிக்கப் பட்டன. மீதமுள்ள வேலைகள் நடை பெற்று வருகின்றன. 14138 மெட்ரிக் டன்கள் அளவுள்ள அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டு இருப்பிலிருந்த அரிசியைச் சேர்த்து 28530 மெட்ரிக் டன்கள் வினியோகமாகியுள்ளது. ரூ. 1945—62 வட்சம் கூலியாகவும் கட்டுமான பொருள்களுக்காகவும் வேலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1980-81ம் ஆண்டு இவ்வேலைகளைச் செய்ய 2,48.842 நபர்களுக்குப் பயனுள்ள வகையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு 146.75 லட்சம் மனித நாட்களுள்ள வேலை திரட்டப் பட்டுள்ளது. நடைமுறை ஆண்டில் (81-82) 31—1—82 வரை 3, 31,011 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது- இவர்கள் மூலம் 335·21 லட்சம் மனித நாட்கள் வேலை திரட்டப்பட்டுள்ளது. 1980—81ல்



பயனுள்ள சமுதாய சொத்துக்கள் உருவாக்கப்பட்டதின் அளவு ரூ. 872.30 லட்சமும் நடை முறை ஆண்டு 31—1—82 வரை ரூ. 2346·52 லட்சமும் ஆகும்.

## வேலையின் தனித்தன்மை

கிராமங்கள் வளர்ச்சிக்கான எல்லாவிதமான சீரிய வாய்ப்புகளும் இத்திட்டத்தின் மூலம் அமைகின்றன. விவசாய கூலிகளுக்கு வேலையில்லாத பருவங்களில் தொடர்ந்து வேலை கொடுப்பதுமல்லாமல் நலிந்தவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுகின்றன. வரும் ஆண்டுகளில் ஆதி திராவிடர்களுக்கான வீட்டு வசதிகளும் பெரும் அளவிலான சமுதாய காடுவளர்க்கும் திட்டமும் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ஐந்து ஆண்டு முடிவில் இத்திட்டத்தினால் தமிழ் நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளில் ஒரு மறு மலர்ச்சியைக் காண இயலுமென எதிர்பார்க்கலாம்.





புதுக்கோட்டை மாவட்டத்தில்

# தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்

எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை.

கிராமப்புறங்களில் வாழும் வேலையில்லாத மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் கூடுதல் வேலை வாய்ப்பு அளித்தல் மற்றும் கிராமப் புறங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி நீண்ட காலச் சமுதாய சொத்துக்களை உருவாக்குதல் ஆகிய அடிப்படை நோக்கங்களைச் செயல்படுத்தும்திட்டம்தான் ''தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமாகும்''

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் 1980-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இம்மாவட்டத்தில் வேகமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

1980-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் மத்திய அரசால் தொடங்கப்பட்ட இத் திட்டம் 31-3-81 முடிய மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

1—4—81 முதல் இத்திட்டத்திற்கு மாநில அரசு 50 சதவீதமும் மத்திய அரசு 50 சதவீதமும் நிதி உதவி செய்து வருகிறது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் வேலைகள் அனைத்தும் துறை மூலமாகவே செயல்படுத்தப்படுவதால் இத்திட்டத்தின் முழுப் பயனையும் கிராம மக்கள் பெற வழி செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், அடியில் கூறப்பட்டுள்ள வேலைகளை எடுத்துச் செய்ய அரசு அனுமதித்துள்ளது.

1. சிறு பாசன குளங்கள் மேம்படுத்துதல்
2. வெள்ளப் பாதுகாப்பு மற்றும் கழிவுநீர் வசதிகள் செய்தல்
3. மண்வளப் பாதுகாப்பு
4. காடுகள் வளர்த்தல்
5. உள்ளூர் சாலைகள் அமைத்தல்
6. அட்டவணை வகுப்பினருக்கும், மலை ஜாதியினருக்கும் பயன்படத்தக்க வகையில் திட்டங்கள் செயல்படுத்துதல்.
7. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்.
8. ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்.
9. சமுதாயக் கூடங்கள் கட்டுதல்
10. மகப்பேறு நிலையங்கள் கட்டுதல்
11. ஆசிரியைகளுக்குக் குடியிருப்புக்கள் கட்டுதல்.
12. விவசாயக் காரியங்களுக்கான களங்கள் அமைத்தல்.

மேற்கண்ட வேலைகளில் காடு வளர்த்தல் மற்றும் அட்டவணை வகுப்பினருக்கும் மலை ஜாதியினருக்கும் பயன்படும் வேலைகள் குறைந்தது 10 சதவிகித வேலைகளாவது செய்யப்படவேண்டும் எனவும் விதியுள்ளது. மேற்கண்ட வேலைகளில் அரசு தீவிர கவனம் செலுத்துவது தெளிவாகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 72 பள்ளிக்கட்டடங்கள் கீழ்க்கண்டவாறு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

விறகுக்காக பயன்படும் மரங்கள் ஆகியவைகள் நடுதலும், அழிந்துபோன காடுகளைப் புதுப்பித்தலு ஆகும்.

(2) குடிநீர், கிணறுகள், சமுதாய கிணறுகள் வீடுகள் கட்டுவதற்கான குடியிருப்பு இடங்களை மேம்படுத்துதல்

(3) கிராமப்புற குளங்கள் கட்டுதல், பழுது பார்த்தல், ஆழப்படுத்துதல், மற்றும் தற்போதுள்ள குளங்களைப் புதுப்பித்து மக்கள் மட்டுமின்றி கால் நடைகளும் பயன்படுத்தும் வகையில் நிர்ப்பாசன அமைப்புகளை மேம்படுத்துதல் — மீன் வளத்தை பெருக்குதல்,

(4) வெள்ளத் தடுப்பு, உள்விட்ட பாசன சிறு திட்டப் பணிகள் வடிகால் மற்றும் நீர் தடுப்பு நடவடிக்கைகள் இடைப்பட்ட மற்றும் முக்கிய வடி கால்களை கட்டுதல், நிலத்தை சீர்படுத்துதல் முதலி யவை.

(5) மண் மற்றும் நீர்நில வளப் பாதுகாப்பு.

(6) ஊர்ப்புற சாலைகளை மெம்படுத்துதல், போதுமான நிதிவசதி இருக்கும் இடங்களில் கப்பி யிட்டு சாலைகளை வலுவாக்கச் செய்து வடிகால்கள் அமைத்தல்.

(7) பள்ளி மற்றும் பாலர் விடுதி கட்டடங்கள் ஊராட்சி அலுவலகம் மற்றும் சமுதாய நிலையங்கள் கட்டுதல், குடிநீர் கிணறு தோண்டுதல் வனங்களில் வாழும் விலங்குகளுக்கு குடி தண்ணீர் நிலைகள் கால்நடைகளுக்கான நீர் நிலைகள், சமுதாய கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு நிலையங்கள், குளியல் மேடைகள், சலவைத் துறைகள் சமுதாய கழிப்பிடங் கள் சாண எரிவாயு அமைப்பு அமைத்தல் முதலி யவை.

திட்ட உள் நுழைவு: கிராம பொருளாதார நிலையை உயர்த்தும் திட்டங்களுக்கும் சமுதாய சொத்துக்களை உண்டாக்கும் திட்டங்களுக்கும் இத் திட்டத்தின் கீழ் முதலிடம் கொடுக்க வேண்டுமென்று யோசனை கூறப்பட்டுள்ளது. இருந்தாலும் ஆதி திராவிடர் பழங்குடி மக்கள் ஆகியவர்களைப் பொறுத்தவரையில் தனி பட்ட நபர்கள் பயனடையும் வேலைகளையும் எடுத்துக் கொள்ளலாமென ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி கூட்டமாகக்குடி யிருப்புப் பகுதிகளையும் அவைகளுக்கான நிலங்களை வளப்படுத்தும் திட்டங்களும் நிறைவேற்றப்படும். இப்படி தேர்ந்தெடுக்கும் வேலைகளில் முதலிடம் ஆதி திராவிடர்களுக்கும் ;பழங்குடி மக்களுக்கும் அளிக்கப்படும். பொதுவாக சமுதாயத்தில் மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கும் சமுதாய மக்களுக்கு இத் திட்டங்கள் பயன்படும். இத்திட்டங்களிலே பெண்கள் பயனுள்ள வகையில் லாபகரமான வேலைகளில் ஈடுபட ஏற்பாடு செய்யப்படும்.

பின்னிப் பிணைந்த முதலீடு 31—3—81 வரை வேலைக்கு உணவுத் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலைத்திட்டம் ஆகியவைக்கு முழுமையாக மத்திய நிதிகிடைத்துவந்தது. 1—4—81லிருந்து இத் திட்டம் 6வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தை மத்திய அரசும் மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பங்கு கொண்டு செயலாக்கப்படுகிறது. 1981—82 நிதியாண்டில் 3 காலண்டுகளுக்கு ரூ. 22.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ. 11.10 கோடியாகும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உள்ள நிதி ஒதுக்கீட்டில் கூலியும் வேலைகளுக்கான கட்டுமானப் பொருள் களும் அடங்கும், கட்டுமான பொருட்களுக்கும் கூலிக்கும் உள்ள விகிதாச்சாரத்தை நிர்ணயித்துள்ள இதன்படி 40:60 என்ற விகிதாச்சாரம் தனிப்பட்ட ஒரு வேலைக்குப் பொருந்தும்; இத்தகைய விகிதாச் சாரத்தை ஏன் நிர்ணயித்தார்கள் என்பது எண்ணிப்



பார்க்க வேண்டும்: அதாவது ஒரு பக்கம் இத்திட்டத் தின் மூலம் வேலை வாய்ப்பை கூடுதலாக உண்டாக்க வேண்டும். அதே பொழுது இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் தரம், மிக அதிகமான கட்டு திட்டங்களுக்கு அடங்காமல் அவை வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதாகவும், அதே சமயம் சமுதாயத்திற்குப்பயன்படும் விதங்களிலே இருக்க வேண்டுமென்ற கருத்தின்படி புதிய காடுகளை உண்டாக்குதல் பாசன குளங்களை அமைத்தல், நில நீர் வளங்களை பாதுகாத்தல் ஆகிய வேலைகள் அதிக அளவிலே செய்ய ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

அத்தியாவசிய வேலை செயல்முறைக்குத் திட்ட மிடல்: வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் கணக்கி லடங்கா சமுதாயச் சொத்துக்கள் உண்டாக்கப் பட்டிருந்தாலும் அவ்வேலைகள் ஒரு திட்டமிட்ட சீரான முறைப்படி தேர்ந்தெடுத்து செயலாக்கப் படவில்லை, இத் திட்டத்தின் அளவு விரிவான பொழுது என்னென்ன வேலைகள் எந்தெந்த பகுதி களுக்கு ஏற்றவை என்பதை முன்னதாகவே திட் டமிட்டு வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளவில் எந்த வேலைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் எந்தவேலைகள் கிராம புறங் களின் சமுதாய பொருளாதார வளர்ச்சிக்கு தேவைப் படுகின்றன என்பதை கருத்தில் கொண்டு திட்டம் இட்டு பின் செயலாக்கப்பட வேண்டும். இத் திட்டங் களை ஒரு சோப்புபோல் அமைத்து வைக்க வேண்டும் இதை திட்ட அடுக்கு எனலாம்.

## திட்ட நிதியளவை குறிப்பிட்ட காரியங்களுக்கு அறுதியிட்டு நிர்ணயித்தல்

வரையறுக்கப்பட்ட செயற்பாடுகள்:— நம் நாட்டில் நீண்ட நாட்களாக ஒரு கட்டு திட்டமில்லாமல், மரங் கள் அடுப்பு எரிப்பதற்கும் ஆடுமாடுகளுக்கு உணவளிப் பதற்கும், வெட்டப் பட்டு வந்துள்ளன, இதனால் கிராம மக்களின் எரிபொருள் தேவையைப்பூர்த்தி செய்யும் அளவிலே மரங்கள் இல்லாதுபோனது மட்டு மல்லாமல் இவற்றுடன் இயற்கையின் சமநிலையும் பாதிப்படைந்துள்ளது. எனவே ஒரு திருப்திகர மான நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதிக மான அளவிலே மரங்களை நட்டு தோப்புகளை உண்டாக்க வேண்டும். எனவே அரசுக்குச்சொந்த மான மற்றும் ஊராட்சிகளில் ஒப்படைக்கப்பட்ட நிலங்கள், சாலை ஓரங்கள், கால்வாய் ஓரங்களில் மரங்களை நடுவதற்காக இத்திட்டத்தில் 10 சதவிகித நிதி ஒதுக்கீடு அறுதியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இதேபோல், சமுதாயத்தில் எளிய நிலையிலிருக்கும் ஆதி திராவிட மற்றும் பழங்குடி மக்களின் நலனுக் காக இத்திட்டத்தில் 10 சதவிகித நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென நிர்ணயிக்கப் பட்டுள்ளது

## கூலியின் கூறுபாடுகள்

அரசினர் விவசாயக் கூலிகளுக்கு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச கூலிக்கு இணையாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கூலியும் இருக்க வேண்டும். ஏனெனில் விவசாய வேலைகள் மும்முரமாக நடை பெறும் காலங்களில் இத்திட்டத்தினால் விவசாய வேலைகள் பாதிக்கக்கூடாது, தற்போது ஒருநபருக்கு ஒருநாளில் ஒருகிலோ அரிசியும் மீதியுள்ள கூலி பண மாகவும் கொடுக்கப்படுகிறது. இதற்கு முன் 2 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது நிறுத்தப்பட்டுள்ளது.

## தவிர்க்கவேண்டிய செயற்பாடு

இத்திட்டத்தின் பயன்கள் ஒவ்வொரு வேலை யாளுக்கும் தடையின்றி சென்று அடைய வேண்டும் என்பதற்காக ஒப்பந்தக்காரர் இன்றி இவ்வேலைகள் செய்யப்படுகின்றன. அரிசியும் கூலியும் நேரடியாக வேலை செய்பவர்களுக்கு விநியோகிக்கப் படுகின்றன

## ஊராட்சி நிறுவனங்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்துதல்

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதும், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்துவதும், சமுதாய



சொத்துக்களை உண்டாக்கி, வளர்ச்சிக்கான கிராம சூழ்நிலையைப் பலப்படுத்துவதுமாகும். இந்த குறிக் கோள்களை அடைய ஊராட்சி ஒன்றியங்கள் நேரடி யாக இத்திட்டங்கள் கிராமங்களில் நிறைவேற்ற ஏற்ற நிறுவனங்களாக அமைகின்றன.

## இத்திட்டத்தின் செயலாக்கம் செயல்பாட்டு திறனாய்வு குழு

மிகப் பெரிய அளவில் இத்திட்டத்தின் கீழ் வேலைகள் எடுக்கப்படுவதால் சரியான முறையிலே




| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | பள்ளிக் கட்டடங்களின் எண்ணிக்கை | மானிய ஒதுக்கீடு (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. |
| 1. | அன்னவாசல் | 10 | 4,20,000 |
| 2. | அரிமளம் | 10 | 4,20,000 |
| 3. | திருமயம் | 10 | 4,20,000 |
| 4. | விராலிமலை | 10 | 4,20,000 |
| 5. | குன்னாண்டார் கோவில் | 8 | 3,36,000 |
| 6. | கறம்பக்குடி | 6 | 2,52,000 |
| 7. | பொன்னமராவதி | 6 | 2,52,000 |
| 8. | புதுக்கோட்டை | 6 | 2,52,000 |
| 9. | திருவரங்குளம் | 6 | 2,52,000 |
| | கூடுதல் | 72 | 30.24,000 |



மேற்கண்ட 72 பள்ளிக் கட்டட வேலைகளில் 7 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பள்ளிக் கட்டட வேலைகள் முன்னேற்றத்தில் பெரும்பாலும் முடிவுறும் நிலையில் உள்ளன. இதுவரை மேற்கண்ட வேலைகளுக்கு ரூ 17,85,505 செலவு செய்யப்பட்டுள்ளது..


இத்திட்டத்தின் கீழ் 1981—82-ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட பள்ளிக்கட்டட வேலைகள் தவிர சாலைகள் அமைத்தல், குளங்களை மராமத்து செய்தல், குடிநீர் ஊரணிகளை ஆழப்படுத்துதல், வானொலி மன்றம் கட்டுதல்.

குளங்களுக்கு ரீவெட்மென்ட் கட்டுதல் போன்ற 1.747 வேலைகள் ரூ. 259.03 லட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அவைகளில் 812 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 935 வேலைகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை முடிவு பெற்ற வேலைகளின் மதிப்பு ரூ. 40,39,803.

இத்திட்டத்தின் கீழ் ரொக்கமாக கொடுப்பதற்காக ரூ 50 லட்சமும் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காக ரூ 30,24,000 ஆக மொத்தம் ரூ 80,24,000 ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர 1—4—81-ம் தேதி செலவழிக்கப்படாத தொகை ரூ. 5,65,000-யும் சேர்த்து இத்திட்டத்தின் கீழ் 85,89,000 ரூபாயில் இதுவரை ரூ 29,69,836 செலவழிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1420 மெட்ரிக் டன் அரிசி வரப்பெற்று இதுவரை 1072.511 மெட்ரிக் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் வாழும் மக்கள் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும், ஏழை, எளிய மக்கள் வாழ்வு வளம் பெற மாநில அரசும் மத்திய அரசும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் போன்ற நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தருணத்தில் ''தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்'' கிராமப்புற மக்களுக்கு மேலும் ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. தமிழக அரசு செய்து வரும் தன்னிகரில்லாத தன்னிறைவுத் திட்டம் எல்லாவற்றிற்கும் மகுடமாக அமைந்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு அழகும், நிறைவும், ஆக்கமும் அளிக்கிறது என்று கூறினால் மிகையாகாது.





# செங்கை மாவட்டத்தில் மீன் வளம்

மீனவர் கூட்டுறவு இயக்கப் பணியைச் செவ்வனே செய்யும் வண்ணம் 1959-ம் ஆண்டு நவம்பர் திங்கள் பன்னிரண்டாம் நாள் பதிவு செய்யப்பட்ட செங்கை மாவட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சம்மேளனம் 12.12.'59 முதல் செயலாற்றி வருகின்றது. செங்கை மாவட்டத்திலுள்ள 21 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பிராகக் கொண்ட இவ்விணையம் அச்சகங்களின் முன்னேற்றம் கருதி பல்வேறு அரசுத் திட்டங்களின் மூலம் நலன்களை நல்கி வருகின்றது. மாவட்ட அளவில் விளங்கிவரும் இந்நிறுவனம் கூட்டுறவுத் தத்துவங்களில் ஒன்றான ''கூட்டுறவு நிறுவனங்கட்கிடையில் கூட்டுறவு'' என்பதையினை விதையிட்டு பயிராக்கி வருகின்றது. இவ்விணையத்தின் தலையாய நோக்கங்களுள் கீழ்க்கண்டவை குறிப்பிடத்தக்கவையாகும்.

1. உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வலைகள், படகுகள், கட்டுமரங்கள் மற்றும் மீன்பிடி சாதனங்களைக் குறைந்த விலையில் வாங்கி விநியோகம் செய்தல்.

2. ஏரிகள் குளங்களின் குத்தகையினை எடுத்து அதனை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்குத்தகை விடுதல்.

3. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்த்து ஒவ்வொரு சங்கமும் பொருளாதார வகையில் மேம்பாட்டு நிற்க உதவுதல்.

4. பெருமளவில் மீன்பிடி பொருள்களை வாங்கி சங்கங்களுக்கு விநியோகித்தலும் சங்கங்களின் தேவையை அறிந்து மொத்தமாக மீன் மற்றும் உலர்ந்த மீன்களைக் கொள்முதல் செய்து விநியோகித்தலும், மீன் அங்காடி நிறுவி சம்மேளனத்தின் வியாபாரத்தைப் பெருக்குதலும்.

### இணையத்தின் சாதனைகள்:

1976-77ம் ஆண்டு தொடங்கி இதுகாறும் ரூ. 8,32,093.48க்கு நைலான் நூல் கொள்முதல் செய்து ரூ. 9,20,023.58க்கு விற்பனை செய்துள்ளது. ரூ 18,450க்கு கட்டுமரம் தயாரிப்பதற்கான மரத்துண்டுகள் கொள்முதல் செய்து எண்ணூர் முகத்துவாரக்குப்பம், எண்ணூர் குப்பம் முதலிய மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஹிட்கா திட்டத்தின்கீழ் விற்பனை செய்துள்ளது. இணையத்தின் வியாபார லாபம் கீழ்க்கண்ட ஆண்டுகளில் குறிப்பிடும்படி முன்வேறியுள்ளது.

| | |
|---|---|
| 1976-77 | 1252.99 |
| 1977-78 | 1834.91 |
| 1978-79 | 14141.78 |
| 1980-81 | 83893.57 |

சம்மேளனத்தின் காப்புத் தொகை நிதியாக ரூ. 15,647- உள்ளது. கடந்த கூட்டுறவு ஆண்டில் இவ்விணையம் ரூ. 24917.66 நிகர லாபம் அடைந்துள்ளது.

## செங்கை மாவட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சம்மேளனத்தின் சீரிய பணிகள்



லாபப்பிரிவினை செய்து இணையத்தின் உறுப்பினர்களான கூட்டுறவுச் சங்கங்களுக்கு 'டிவிடெண்ட்' வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்மேளனத்திலிருந்து பொது மக்களுக்குக் குறைந்த விலையில் தரமான மீன், மற்றும் இறால் உலர்ந்த மீன்கள் விற்பனை செய்ய மீன் அங்காடி ஒன்றினைச் செங்கை அகழிப்பண்ணையில் இவ்விணையம் நிறுவியுள்ளது.

### இணையம் எதிர்நோக்கியிருக்கும் நடவடிக்கைகள்:

ஒருங்கிணைந்த கிராமிய முன்னேற்றத் திட்டங்களின் கீழ் வங்கி மூலம் மான்ய சலுகையோடு வழங்கவிருக்கும் நூல் மற்றும் நைலான் வலைகளை மொத்தமாக இணைக்கப்பட்ட சங்கங்களுக்காகக் கொள்முதல் செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் சம்மேளனமே மொத்தத்தில் ஊர்தி ஒன்றினை வாங்கி மீனவர் சங்கங்களுக்கு வாடகைக்குத் தந்துதவியும் நிறுவவிருக்கும் மீன் அங்காடிகளுக்குத் தேவையான மீன்களைக் கொணர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. மீனவர் கூட்டுறவு இயக்கம் புதியதொரு வரலாறு படைக்கும்.



### திருச்சினாங்குப்பம் பெரிய பாளையத்தம்மன் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம்

பொருளாதார முன்னேற்றத்திலும், வாழ்க்கையிலும் பின்தங்கியிருக்கும் மீனவ மகளிரைப் பல விதத்திலும் மேன்மைக்கு கொண்டு வரவும், கூட்டுறவின் மேம்பாட்டை உணர்த்த அரசு ஏற்பாடு செய்து வருகின்றது. செங்கை மாவட்டத்தில் உள்ள திருச்சினாங்குப்பம் பெரிய பாளையத்தம்மன் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் தற்போது 260 உறுப்பினர்களோடு அரசினிடமிருந்து ரூ. 5,000 பங்குத் தொகை உதவி ரூ. 20,000-மூலதனக் கடன் உதவி பெற்று செயல்பட்டு வருகிறது. உடனடியாக மீனவ மகளிருக்கு மீன் வியாபாரம் செய்ய குறைந்த வட்டியில் கடன் உதவி அளித்து, அதிக வட்டியை எடுத்துக் கொண்டு மக்களை உறிஞ்சி எடுக்கும் பணத் தரகர்கள் இடமிருந்து காப்பாற்றியது. மீன் தொழில் இல்லாத சமயங்களில் வீட்டில் இருந்தபடியே சிறு தொழில்களைச் செய்து வருவாய் ஈட்ட தற்போது தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. மீனவ மகளிர் உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு இக்கூட்டுறவுச் சங்கம் மீனவ மகளிர் சமுதாயத்தை மேன்மைக்குக் கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை.

### மீன் வளம்-செங்கை மாவட்டம்

கடல் மற்றும் உள்நாட்டு மீன் வளர்ப்பில் மிகச் சிறந்து விளங்கும் மாவட்டங்களுள் செங்கை மாவட்டம் குறிப்பிடத்தக்க

தாகும். 137 கிலோ மீட்டர் நீளமுள்ள கடலோரப் பகுதியினைக் கொண்ட இம்மாவட்டம் 63 கடல் மீனவக் கிராமங்களைக் கொண்டுள்ளது. இதன் கண் 32,000 மீனவர்கள் வாழ்கின்றனர்.

செங்கை மாவட்டத்தில் சத்தியமூர்த்தி சாகர் (பூண்டி) நீர்த்தேக்கம் உள்நாட்டு மீன் அபிவிருத்திக்கு மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளது. மேலும், செம்பரம்பாக்கம், மதுராந்தகம், உத்திரமேரூர் மற்றும் இதுபோன்ற அரசுடமையாக்கப்பட்ட நீர் நிலைகள் மீன் வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இம்மாவட்டத்திலுள்ள 36 . அரசுடமையாக்கப்பட்ட நீர் நிலைகளின் மச்ச மகசூல் குத்தகை மூலம் ஆண்டுதோறும் ரூ. 65,000- வருவாயை அரசுக்கு ஈட்டித் தருகிறதென்பது மிகவும் பெருமைப்பட வேண்டியதாகும். ஆண்டுதோறும் 20,000 டன்கள் கடல் மீன் வகைகள் இம்மாவட்டத்தில் பிடிக்கப்படுகின்றன.

இந்தியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய உவர் நீர் ஏரியாக விளங்கும் பழவேற்காடு ஏரி இம்மாவட்டத்தில் உள்ளது. இறால், நண்டு மற்றும் உவர் மீன் வகைகளை ஆண்டு முழுவதும் இந்த ஏரியிலிருந்து பிடித்து எண்ணற்ற மீனவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**கிராமிய மாதிரி மீன் வளர்ப்புக் குளங்கள்**

செங்கை மாவட்டத்திலுள்ள 20 மாதிரி மீன் வளர்ப்புக் குளங்களில் மீன்பிடித்து பொது மக்களுக்குக் குறைந்த விலையில் மீன் விற்பனை செய்யப்படுவதுடன் மீன் வளர்ப்பினை லாபமகரமான முறையில் தனியார் மேற்கொள்ளவும் வழிகோலப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 17 டன் மீன் குளங்களிலிருந்து பிடிக்கப்பட்டு அவை ரூ. 35,800-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதைத் தவிர மீன் வளர்ப்பைத் தனியார் மேற்கொண்டு அதன் மூலம் மீன் உற்பத்தியைப் பன்மடங்காகப் பெருக்கும் நோக்குடன் மீன் வேளர்ப்போர் மேம்பாட்டு முகவை ஒன்று இம்மாவட்டத்தில் துவக்கப்பட்டு செம்மையுடன் செயல்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் மீனவர்கள் மீன்பிடி பொருள்களாகிய வலைகள், நூல்கள் மற்றும் இதர மீன்பிடி சாதனங்களைப் பெறவும், கட்டுமரம் நாட்டுப்படகுகளைச் சொந்தமாகப் பெறவும் உதவி செய்யப்படுகின்றது. இது தவிர மீன்பிடி தொழிலின் முன்னேற்றத்திற்காகவும் மீன்பிடிப்பை அதிகரிக்கவும் இயந்திரப் படகுகளைப் பெற இத்திட்டம் உதவி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தனியார்களுக்கு 33 1/3 சதவீதம் மானியமும் கூட்டுறவு அமைப்புகளுக்கு 50 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது.

**மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்**

சமுதாயத்தில் பலவீனப் பிரிவினராயுள்ள மீனவர்களுக்கு வழிகாட்டும் ஒரு கலங்கரை விளக்கமாக மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் விளங்கி வருகின்றன, என்றால் அது மிகையாகாது. கூட்டுறவின் மகத்தான தத்துவங்களைக் கொண்டு இயற்கையின் இடர்களுக்கிடையே வாழும் மீனவச் சமுதாயத்தை முன்னேற்ற வழி செய்யும் வகையில் 92 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் 4 மீனவர் கூட்டுறவு ஒன்றியங்களும் ஒரு மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனமும் செங்கை மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. 13.89 லட்சம் ரூபாய் மூலதனமாகக் கொண்டுள்ள இச்சங்கங்களில் சுமார் 12,000 உறுப்பினர்கள் உள்ளனர்.

உடுக்கையிழந்தவன் கைபோல் ஆங்கு மீனவர் தம் இடர்களைய அரசு தரும் சலுகைகளை யெல்லாம் வாங்கி வழங்கும் இம்மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் சமூக வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றில் விழுமிய பயன்களை மீனவர்கள் அடைய ஒப்பற்ற சேவை புரிந்து வருகின்றன.

**தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவி:**

பாரதத்தின் அனைத்துக்கூட்டுறவு நிறுவனங்களும் வளமுடன் நலமாக வாழ வழிசெய்யும் வகையில் அமைக்கப்பட்ட இத்தேசிய அமைப்பு உற்பத்தியைப்பெருக்கத் திட்டமிட்டு செயல்படுத்தப்படும் அனைத்துக் கூட்டுறவு முயற்சிகும் நிதியுதவி நல்கி வருகின்றது. சிறப்பாக மீனவர் கூட்டுறவின் மூலம், வறுமைக் கோட்டிற்குக் கீழே உழலும் மீனவரின் வாழ்வை மேம்படுத்த இடைத்தரகர்களின் சுரண்டல்களிலிருந்து விடுவிக்க பல்வேறு வகையில் உதவி வருகின்றது.



1. மீன்பிடிக்க உதவும் வகையில் நாட்டுப் படகுகள், இயந்திரப் படகுகள் வலைகள் ஆகியவைகள்வாங்க கடனாகவும் மானியமாகவும் உதவி செய்யப்படுகின்றது.

2. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குத் தொகைகளை அதிகரிக்க உதவு வகையில் மீன்பிடி பொரு மற்றும் மீன் வகைகளை வாங்கி விற்பனை செய்ய முதலீட்டினை அளித்து வருகின்றது.

3. மீன் பொருள்களை ஏற்றி செல்ல அதனை நுகர்வோர் தக்கதொரு இடத்தில் எடுத்து சென்று விற்பனை செய்ய ஊர்தி ஒன்றினை வாங்கிடவும் இக்கழகம் உதவுகின்றது.

4. மீன் பொருள்களைச் சேகரித்து வைக்கும் கிடங்குகளும், சில்லறை அங்காடிகளும் கட்டி வழங்கிட இந்நிறுவனம் உதவிசெய்கின்றது.

தமிழ்நாடு முழுவதும் இக்கழகத்தினின்று இதுவரை சுமார் 78 இலட்சம் ரூபாய் நிதியுதவி மீனவர் கூட்டுறவு மூலமாக வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பாக்கம் கிராமத்திலுள்ள ஆரம்பாக்கம் மீனவர் கூட்டுறவுச் சங்கம் பாட்டைக்குப்பம் மீனவர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக மீனவ அங்கத்தினர்கள் மீன்பிடி தொழிலை வசதியுடன் செய்ய நாட்டுப் படகுகள் மற்றும் வலைகள் வாங்க சுமார் 12.82 இலட்சம் ரூபாய் கடனாகவும் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் பிடித்து வரும் மீனைச் சேகரித்து 'வைக்கக் கிடங்குகள் கட்டிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பாக்கம், பாட்டைக்குப்பம் போன்று பல மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்தகைய நிதியுதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மீனவர்களுக்கு வீட்டு வசதி**

உண்ண உணவு, உடுக்கஉடை இருக்க வீடும் பெற்றால் வாழ்வின் இன்றியமையாத் தேவைகள் பூர்த்தியாகின்றதன்றோ! அரசின் மீனவர்களுக்கு இலவச வீடுகட்டும் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ஒரு கோடிரூபாய் ஒதுக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும்மீனவர்களுக்கு வீடுகட்டி வழங்கப்படுகிறது. இதனால் குடிசைகளில் வாழும் மீனவர் இயற்கைச் சீற்றங்களின் அச்சம் தவிர்த்து வாழ வழி வகுக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு செங்கை மாவட்டத்தில் இதுகாறும் 1738 வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டது. 1235 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வீடுகளைத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் கட்டி தருகின்றது.

**மீனவ மகளிர் முன்னேற்றத்தில் கூட்டுறவு**

மீனவர் வாழ்வு மேம்படத் துவக்கப்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களோடு தற்பொழுது மீனவ மகளிரையும் மீன் வியாபாரம் முதலியவற்றில் ஈடுபடுத்தி அவர்தம் வருவாயைப் பெருக்கும் நோக்கத்தில் தமிழக அரசு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கஅரசு துணை வழங்கியது. இத்திட்டத்தில் முதல்படியாக செங்கை மாவட்டத்தில் திருச்சினாங்குப்பத்திலும், தஞ்சை மாவட்டத்தில் அதிராம பட்டினத்திலும், நெல்லை மாவட்டத்தில் தருவைக் குளத்திலும் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் முறையே 18.9.81,16.10.81 மற்றும் 6.1.82லும் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

செங்கை மாவட்டத்தில் திருச்சினாங்குப்பத்தில் அமைக்கப்பட்ட திருச்சினாங்குப்பம் பெரிய பாளையத்தம்மன் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் 22.9.81ந் தேதி முதல் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கம் ச்ங்க உறுப்பினர்களுக்காக நியாயவிலைக் கடை நடத்தவும்,குறைந்த வட்டிக்கு முதல் பெற்று மீனவ மகளிர் வியாபாரம் செய்யவும் மீன் துறை சங்கத்திற்கு ரூ. 20,000-நடைமுறை மூலதனமாக வழங்கியுள்ளது. இத்துடன் அரசு சங்கத்தில் பங்குத் தொகை அதிகரிக்கும் வண்ணம் ரூ. 5,000-ஐ மூலதனமாக வழங்கியுள்ளது. அண்மையில் அச்சங்கத்தில்உறுப்பினர்களுக்கு மீன் வியாபாரம் செய்வதற்கான முன்பணமாக நபர் ஒன்றுக்கு ரூ. 100- விதம் வழங்கும் விழாவொன்றுநடந்தேறியது.

**செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்**

இத்திட்டம் செங்கை காஞ்சிபுரம், சோழவரம், பரங்கிமலை



தொகுப்பு: மருது

மற்றும் குன்னத்தூர் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சத்துள்ள மீன் உணவு சிறார்களுக்கும்மகப்பேறு அடைந்தவர்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.



**உவர்நீர் இறால் வளர்ப்பு**

நன்னீரில் வளர்வது போல் உவர்நீரில் வளரும் இறால் வகைகளில் மிக முக்கியமான வகைகள் செங்கை மாவட்டத்தின் பழவேற்காடு ஏரியில் ஏராளமான அளவில் கிடைக்கின்றன. இவை வியாபார ரீதியிலும் லாபகரமானதாகக்கருதப்படுகின்றன. செங்கை மாவட்டத்தில் சுமார் 5,513 ஹெக்டேர்கள் உவர்நீர்ப் பரப்பு உள்ளதென்று புள்ளியியல் வல்லுநர் தெரிவித்துள்ளனர். அரசு மட்டுமின்றி தனியாரும் இறால் பண்ணைகள் நிறுவி வளம் பெற ஊக்குவிக்கும் வண்ணம் மாதிரி இறால் பண்ணைகளைப் பழவேற்காட்டிலும் வாணியஞ்சாவடியிலும் அரசுநிறுவியுள்ளது.

**நன்னீர் இறால் வளர்ப்பு**

உவர் நீரில் இறால் வளர்ப்பு மிகவும் லாபகரமாக இருப்பதால் பலர் இறால் வளர்ப்பை மேற்கொள்ள ஆர்வத்துடன் இருக்கிறார்கள். அதேபோல் நன்னீரில் கூட மிகவும் லாபகரமாக இறால் வளர்த்துப் பயன் அடைய முடியும்.

காவிரி ஆற்றுப் படுகையில் நன்னீர் இறால் குஞ்சுகள் குறிப்பாக ஜேடார்பாளையம் மற்றும் இதர அணைக்கட்டுப் பகுதிகளிலும் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவைகளை இரவு நேரங்களில் பிடித்து, ஹப்பாக்களில் வைத்திருந்து நாம் விருப்பப்பட்ட இடங்களுக்கு, உயிர்காற்று நிரப்பிய பாலிதீன் பைகளில் எடுத்துச் செல்லலாம்.

குளங்களிலும், ஏரிகளிலும், ஹெக்டேருக்குச் சுமார் 15,000 எண்ணிக்கை என்ற கணக்கில் இருப்புச் செய்து, பின் தேவையற்ற மீன் வகைகளை வேக வைத்து தினமும் 2 முறை உணவாகக் கொடுக்கலாம். 2 கிராம் எடையுள்ள குஞ்சு 5 மாத காலத்தில் 35 கிராம் முதல் 50 கிராம் வரை எடையை அடையும். ஒரு வருடத்தில் இரண்டு அறுவடை செய்தால் சுமார் 400 முதல் 500 கிலோ இறால் உற்பத்தி செய்யலாம். செலவு போக ஒரு ஹெக்டேரில் ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட ரூ. 10,000-லாபம் பெறலாம்.

மேற்சொன்ன இறால்வளர்ப்பு எல்லா நன்னீர்குளங்களிலும் ஏரிகளிலும் செய்து, மக்கள் பலனடையலாம். நன்னீர் இறால் உற்பத்தியை மேற்கொள்வதற்காகச்செங்கல்பட்டில் ஒரு இறால் பண்ணை 2.64 லட்ச ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

# பெரியார் மாவட்டத்தில் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்



**அ. ந. தியானேசுவரன்**
**இ.ஆ.ப.**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**பெரியார் மாவட்டம்.**

"வயிற்றுக்கு சோறிட வேண்டும் இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்"
பாரதி

வறுமை பிணியகற்றி வளம் சேர்த்து "இதந்தரும் தொழில் செய்து" நிலையான சமுதாயச் செல்வங்களை உருவாக்கிடும் பெருமையுடையது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்.

நாட்டு பக்களில் நலிவுற்றோர், வறுமை வயப்பட்டோர், உழைப்பதற்குப் போதிய வாய்ப்பற்றோர், இவர் தமை ஒருங்கிணைத்து ஊருக்கு உகந்த திட்டங்களை உருவாக்கி, உழைப்புக்கேற்ற ஊதியத்தினை அரிசியாகவும், பணமாகவும்வழங்கி ஏனைய பிற திட்டங்களில் எடுத்துக்கொள்ள இயலாதவற்றையுங்கூட செயல்படுத்த வாய்ப்பளிக்கின்றது இத்திட்டம்.

"சக்தி தொழிலே அனைத்து மெனிற்
சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?"

நாடு சுதந்திரம் பெற்று பல்லாண்டுகள் கடந்தும் பல சிறப்பு வளர்ச்சித் திட்டங்கள் மாநில அளவில் நிறைவேற்றப்படினும் உழைக்கும் திறனும் உள்ளத்துறுதியும் கொண்ட ஏழை எளியோர் வேலை வாய்ப்புகள் இன்றி ஏங்கித் தவிக்கும் இழிநிலை போக்கிட, பாசனத்திட்டங்களை மேம்படுத்துதல், நீர் சேமித்தல், வன வளர்ச்சி, சமுதாயத் தோட்டங்கள் அமைத்தல், கால்வாய்கள் வெட்டுதல், சாலைகள் அமைத்தல், மேம்பாடு செய்தல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், ஊராட்சி மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களிலும் சாலையோரங்களிலும் மரங்கள் நடுதல் போன்ற பணிகளையும் மேலும் எடுத்துச் செய்யப்படும் பணிகள் ஏராளமான வேலையற்ற விவசாய மக்களுக்கு வேலைதரத் தக்க பணிகளாகவும் எடுத்துக்கொள்ளலாமென அரசு நெறிமுறைகள் வகுத்துத்தந்துள்ளது. உழைக்கும் திறனுக்குகேற்ற ஊதியத்தினை நேரடியாக வழங்குதல் மூலம் ஒப்பந்தக்காரர்களைத் தவிர்த்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நிதிநிலை நிறைவாக இல்லாத ஊராட்சிகளிலும், ஒன்றியங்களிலும் இத்திட்டத்தின் கீழ்பல்வேறு பணிகளை எடுத்து செயற்படுத்த இயலுகிறது என்றால், அதற்கு முக்கிய காரணம் இத்திட்டத்தின் கீழ் மூன்றில் ஒரு பங்கு பொருட் செலவிற்காகத் தொகை ஒதுக்கப்படுகிறது. ஆகவே, இந்நிலையில் இதுவரை முன் கண்டிராத அளவுக்கு மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதாச்சாரத்தில் மான்யம் முழு அளவில் வழங்கி ஊராட்சி ஒன்றியங்களின் மூலமும், பிற துறைகள் மூலமும் செம்மையாகத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முனைப்புடன் ஆணையிட்டது. அவ்வாணைக்கேற்ப நெடுஞ்சாலைக் கிராமப்பணித்துறை, வனத்துறை மற்றும் வேளாண்மைத் துறை ஆகியவைகள் ஒருங்கிணைந்து முழு மூச்சுடன் திட்டத்தை செவ்வனே செயல்படுத்தி வருகின்றன.

நலிவுற்று நிற்கும் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின்மூலமும், தனிப்பட்ட பணிகள் ஆதிதிராவிடர் நலத் துறையினர் மூலமும், குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தினராலும், வீடுகட்டும் வசதி ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் மூலமும், குடிசைகளுக்கு மின்னொளி வழங்குதல் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாகவும் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால், எத்திட்டமும் ஆண்டுக்கு இவ்வளவுதான் செய்ய இயலுமென குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, அக்குறியீட்டிற்கேற்ற நிதி செலவு செய்யப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

இந்தத் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் இவையனைத்தையும்கருத்திற்கொண்டு மத்திய மாநில அரசுகள் இணைத்து நிதி வசதி அளித்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 10 விழுக்காடு தனிப்பட்ட முறையில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் பயனடையும் பணிகளுக்காகவே ஒதுக்கப்பட்டு, குறிப்பாக வீட்டு மனை இட ஒதுக்கீடு செய்து போதிய நிதி வசதியின்மை காரணமாக இடத்தை மேம்பாடு செய்ய இயலாமலும், வீடுகட்ட இயலாமலும் உள்ளவர்களுக்கு இடத்தை மேம்படுத்தி ஒட்டுமொத்தமாக வீடுகட்டித் தரவும் அவர்களுக்குக் குடிநீர்வசதி, வடிகால் வசதி, சாலைகள் அமைத்தல்-மேம்பாடு செய்தல் மற்றும் சமுதாயக் கிணறுகள் தோண்டுதல் போன்ற பணிகளை எடுத்து அந் நலிவுற்ற மக்களுக்குத் தனிப்பட்ட முறையில் வேலைவாய்ப்பளிக்கவும் அரசு நெறிமுறைகள் வகுத்துத் தந்துள்ளது.

"நாட்டினைத் துயரின்றிநன் கமைத்திடுவதும்
உளமெனும் நாட்டை ஒரு பிழையின்றி
ஆள்வதும், பேரொளி ஞாயிறேயனைய
சுடர்தருமதியொடு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாகக் கொண்டு"

செயல்படும் திட்டம் என பாரதியின் வழியில் இதனைப் போற்றுதல் மிகையாகாது.

வனங்களைப் பாதுகாத்தல் சமுதாயக் காடுகளை மேம்படுத்துதல் சமுதாயத் தோட்டங்கள் அமைத்தல், சாலையோரங்கள் மற்றும் ஊராட்சி மற்றும் அரசுப் புறம்போக்கு நிலங்களில் மரங்கள் நடுதல் ஒதுக்கப்பட்ட நிதியில் 10 விழுக்காட்டிற்குக் குறையாமல் பயன்படுத்தி இதன்மூலம் ஊராட்சிகளின் வருமானத்தைப் பெருக்குதல் போன்ற ஆலோசனைகளை அரசு நல்கியுள்ளது.

மேற்காணும் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு பெரியார் மாவட்டத்தில் 1981-82ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செம்மையாகச்செயல்படுத்த ரூ.89.74 இலட்சம் நிதியாகவும், 1.4.82ல் எஞ்சியிருந்த அரிசி 436.888டன்னுடன் கூடுதலாக 520 டன் ஒதுக்கி, கூலியாக தொழிலாளர்களுக்கு ரூ. 7 வீதம் நாளொன்றுக்கு 1 கிலோ அரிசியும் ரொக்கமாக ரூ. 5.25ம் வழங்க முதல் அரையாண்டுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்நிதியனைத்தும் முழுஅளவில் தற்போது பயன்படுத்திக்கொண்டு 14434 நபர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்கப்பட்டு, நாளதுவரை 12.44 இலட்சம் மனிதச் சக்தித் திறனை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 5 ஆண்டுகளில் செயல்படுத்த 5689 பணிகள் ரூ. 894.70 இலட்சத்திற்குத் திட்டமிடப்பட்டு மாவட்டக் குழுவின் பரிந்துரையுடன அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாகச் செயலில் உள்ள விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**சமுதாயக் காடுகள் மற்றும் மரம் வளர்ப்புப் பணிகள்:**

1981-82ல் ஆண்டில் 312 பணிகள் 31.02 இலட்சம் மதிப்பீட்டில்எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் சாலையோரங்களில்நிழல் மற்றும் பலன்தரும் மரங்கள் நடப்பட்டும் ஊராட்சி மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களில் தென்னை மரங்களும் நடப்பட்டு வருகின்றன. இம்மரங்கள் இன்னும் சில ஆண்டுகளில் ஊராட்சிகளுக்கு நல்ல வருமானத்தை ஈட்டித்தரும். மேலும், தாளவாடி மற்றும் பர்கூர் வனங்களில் மரம் வளர்ப்பு மற்றும் காடுகளை மேம்படுத்தத் திட்டமிட வன அலுவலருடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

**ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை, குடியிருப்புப் பகுதி மேம்பாடு, சமுதாயப் பாசன வசதியளித்தல்:**

இத்திட்டத்தின் கீழ் 180 பணிகள் 31.58 இலட்சம் மதிப்பில் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலிருந்து மயானம்



களுக்குச் செல்ல சாலை வசதியில்லாத குடியிருப்புகளுக்குச் சாலை வசதியும், கசிவுநீர்தேங்கி சுகாதாரக் கேடு விளைவிக்கும் இடங்களிலெல்லாம் அவைகளை வெளியேற்ற வடிகால் வசதியும் மழைநீர் தேங்காமல் வெளியேற சிறுபாலங்களும். வெள்ளத்தால் பாதிக்கப்படாமலிருக்க வெள்ளத் தடுப்புச் சுவர்களும் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், அரசால் நில ஒதுக்கீடு வழங்கப்பட்டு ஒதுக்கப்பட்ட இடம் வீடுகட்ட முடியாத நிலையில் உள்ளவைகளை மேம்பாடு செய்து வீடு கட்டித்தரத் திட்டமிடப்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆணையர்களால் சர்வே செய்யப்பட்டு வருகிறது. எங்கெல்லாம் மேம்பாடு தேவையென்பதை சர்வே முடிந்ததும் வேலைகள் தொடங்க அனுமதி வழங்கப்படவுள்ளது.

**சாலைகள் அமைத்தலும், மேம்பாடு செய்தலும்:**

இத்திட்டத்தின் கீழ் 987 பணிகள் ரு. 110.10 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய சாலைகள் அமைத்தல், ஊராட்சி ஒன்றியங்களின் மற்றும் ஊராட்சிச் சாலைகளுக்குக்கப்பிப் போடுதல் போன்ற பணிகள் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன.

பள்ளிக்கட்டடங்கள். பாலர் காப்பகங்கள் மற்றும் இதர கட்டட வேலைகளாவன;

இத்திட்டத்தின்கீழ் அரசால் 34 பள்ளிக் கட்டடங்கள்பொருட்களுக்கான தொகை ரூ. 14.28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந் நிதியினைக் கொண்டு தன்னிறைவுத் திட்டம் செயற்படுத்தப்படாத ஊராட்சி ஒன்றியங்களுக்குப்பகிர்ந்தளித்து கூடுதல்கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இட நெருக்கடியில் அவதியுற்ற பள்ளிகளுக்கு இத்திட்டம் ஒரு பெரும்பேறு. மேலும் சத்தி ஊராட்சி ஒன்றியத்தில் பாலர் காப்பகக் கட்டடங்கள் இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.

பள்ளியில் பயிலும் ஏழைச் சிறுவர் சிறுமியர்க்குப் பகல் உணவு சமைக்கக் கூடங்கள் அமைத்தலும், பள்ளிகளின் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாத்திடவும், குழந்தைகளுக்கு நல்ல பழக்கத்தையேற்படுத்தவும், பள்ளிகளுக் கருகில் சிறுநீர் கழிப்பிடங்கள் அமைத்தலும், இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

வாரச் சந்தைகளில் தரையிலே அமர்ந்து நடத்திவரும் வியாபாரத்னித மேடை மீது அமர்ந்து வாங்குவோரின் வசதிக்கேற்ப சந்தைகளிலெல்லாம் மேடைகள் அமைக்கப்பட்டும், சந்தையின் வருமானத்தைப் பெருக்க சுற்றுச் சுவர் இல்லாத சந்தைகளுக்குச் சுற்றுச் சுவர்களும் கட்டப்பட்டுள்ளன.

**சிறுபாசன மேம்பாடு, வெள்ளத் தடுப்பு, வடிகால் வசதி, பள்ளி கட்டடங்கள் இதரப் பணிகள்:**

இம்மாவட்டத்தில் இதுவரை ரூ. 23 இலட்சம் மதிப்புள்ள 243 வெள்ளத்தடுப்பு மற்றும் வடிகால் பணிகள், ரூ.2.56 இலட்சம் செலவில் வன வளர்ப்பு - மரம் நடுதல் ரூ. 52 இலட்சம் செலவில் 504 சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள், ரு.26.64 இலட்சம் செலவில் 15 பள்ளி மற்றும் இதர கட்டடப்பணிகள், ரூ. 5 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர்களுக்குகுடிநீர், வீட்டுமனை வசதி அளிக்கும் பணிகள் ஆகியவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 223 வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டின் இறுதிக்குள் அவை நிறைவுபெறும் வாய்ப்புள்ளது.

மேற்குறித்த திட்டங்களின்கீழ் நடப்பாண்டில் 109 இலட்சம் செலவு செய்யப்பட்டு 1020 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 222 வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தேசிய ஊரக வேலைத் திட்டமான இச்சிறப்புத் திட்டம், கிராமக்களின் வளமான வாழ்வுக்கு வழிகோலுவதோடு அதனால் கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்படுமென உறுதியாக நம்பலாம்.

---

## இயங்கும் மண் ஆய்வுக் கூடம்

மண்ணின் தன்மையை ஆய்வு செய்து அதன் தன்மைக்கு ஒப்ப உரமிடுதல் அல்லது சீர்திருத்தம் செய்து பயிரிடுதல் மிகவும் நன்மை பயக்கும். குமரி மாவட்டத்தில் மண் ஆய்வு செய்வதற்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ள இயங்கும் மண் ஆய்வுக் கூடம் 21—1—1982 அன்று தூத்தூரில் நடைபெற்ற மத்திய அரசு களவிளம்பரத் துறை ஏற்பாடு செய்திருந்த 'வளர்ச்சிப் பணி தீவிர விளம்பர இயக்கத் துவக்க நாள் விழாவில் இயக்கி வைக்கப்பட்டது.

மாவட்ட அளவிலுள்ள விவசாயிகளுக்கு மண் மற்றும் தண்ணீர் பரிசோதனை செய்து அதன்படி பரிந்துரைகளை அன்றே அவர்களிடம் தெரிவிக்கப்படுகிறது. வட்டார வேளாண்மைப் பணியாளர்கள் விவசாயிகளுக்கு விளம்பரம் செய்து இயங்கும் மண் ஆய்வுக்கூடம் முகாம் செய்யும் நாட்களைத்தெரிவித்துமண்மாதிரிக்ளைச்சேகரித்துவைப்பார்கள். இவ்வாறு விவசாயிகளிடமிருந்து வேளாண்மைக் களப்பணியாளர்கள் மூலமோ அல்லது நேரிடையாகவோ பெறப்பட்ட மண் மாதிரிகளை இயங்கும் மண் ஆய்வுக்கூடத்தில் வைத்துப் பரிசோதனை செய்து அன்று மாலையே பரிந்துரைகள் கொடுக்கப்படுகின்றன. இது தவிர விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டு நேரிடையாகத் தீர்க்கப்படுகின்றன.

மண் பரிசோதனையின் மூலம் அதன் கார, அமிலநிலைகள் அறியப்படுகிறது. உதாரணமாக குமரி மாவட்டத்தில் நெல் பயிரிடும் நிலங்களில் பாதிக்கு மேல் அமில நிலங்கள் உள்ளன. இதனால் நெல் மகசூல் மிகவும் பாதிக்கப்படுகிறது. மண்ணைப் பரிசோதனை செய்து பரிந்துரைப்படி சுண்ணாம்பிட்டுஅமிலநிலத்தைத் திருத்துவதால் அதிக மகசூல் பெற்று விவசாயிக்கு இலாபம் கிடைக்க வழி ஏற்படுகிறது. மண் வளம் பாதுகாக்கப்படுகிறது. இது தவிர மண்ணின் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து இவைகளைச் சோதனை செய்து பயிருக்குத் தக்கபடி தக்க தருணத்தில் உரமிடப் பரிந்துரை செய்யப்படுகிறது.

நீரின் தன்மைகளையும் இவ் ஆய்வுக் கூடம் பரிசோதனை செய்து உப்பு நீராக இருந்தால் அதற்கேற்ற மகசூல் தரக்கூடிய பயிர் வகைகள் பரிந்துரை செய்யப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகள் உப்பு நீரைப் பாய்ச்சி, விதையின் முளைப்புத் திறன் பாதிக்கப்படுவதால் அடையும் இழப்பு தவிர்க்கப்படுகிறது.

இந்த இயங்கும் மண் ஆய்வுக் கூடத்திற்காக உதவித் தொகையாக சிறு உழவர் மேம்பாட்டுத் திட்ட நிறுவனம் ரூபாய் 3.23 இலட்சம் கொடுத்திருக்கிறது. மண் பரிசோதனை செய்து அதன் பரிந்துரையின்படி உரமிடுவதால் ஏழை விவசாயிகள் உர விரயத்தைத் தடுத்து உரச் செலவை மிச்சப்படுத்தி அதிக மகசூல் பெற்று நிறைந்த இலாபம் அடையலாம்.

---

# தீண்டாமை வேண்டாமே!



சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் தீண்டாமை ஒழிப்பு வாரவிழா ஒருவாரக் காலம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அவ்வமயம் ஆதிதிராவிடர் நலனைக் காப்பதற்குத் தமிழக அரசு சார்பில் பல்வேறு வகையில் உதவிகள் வழங்கப்பட்டன.

ஒருவார விழாவின் தொடக்க விழாவாக 29-1-82 அன்று சென்னை இராயபுரம் பகுதியில் தீண்டாமை ஒழிப்பு வாரவிழா கொண்டாடப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., விழாவிற்குத் தலைமையேற்று உரையாற்றும்போது, இந்த ஒரு வாரக்காலத்தில் தீண்டாமை ஒழிப்புப் பற்றிய கருத்தரங்கு, தேசிய சமூகப்பணி தொண்டர்களைக் கொண்டு ஆதிதிராவிடர் காலனிகளை சுத்தம் செய்தல் மற்றும் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனையும் செய்தல், ஆதிதிராவிட மாணவர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டி நடத்துதல், கலப்புமணத் தம்பதிகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்குதல் ஆதிதிராவிட மாணவ மாணவிகளுடைய கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழக முதல்வர் ஆதிதிராவிடர் நலனுக்கு நல்ல திட்டங்கள் தீட்டியுள்ளார். அதைச் செயல்படுத்தவும் உங்கள் குறைகளைக் களையவும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் திரு பி.எல். பொன்னுசாமி, இ.ஆ.ப., அவர்கள் 32 ஆதிதிராவிடர்களுக்குத் தையல் இயந்திரம், சலவைக்கருவிகள், வீட்டுமனைப் பட்டாக்கள் போன்றவற்றை வழங்கி விழாவில் பேசும்போது, ஆதிதிராவிட மாணவர்கள் கல்வி சலுகை பெற்றிட அவர்களுடைய ஆண்டுவருமானச் சான்றிதழ் ரூ. 3,000-விருந்து ரூ. 6,000 ஆக உயர்த்திடவும், மலைவாழ் மக்களுக்கென 12 பள்ளிகள் திறக்கவும், உயர்வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆதிதிராவிடர் குடியிருக்கும் பகுதிகளில் வீடு கட்ட முன்வந்தால் ரூ. 1000 மான்யமாகவும், செருப்பு தைக்கும் தொழிலாளருக்கு கடை வைப்பதற்கு ரூ.800 கடனாகவும் அதில் ரூ. 400 மான்யமாகவும் தமிழக அரசு வழங்குகிறது. கிராமங்களில் ஆதிதிராவிடர் குடியிருக்கும் இடங்களில் தான் கூட்டுறவுக் கடைகள் திறக்க வேண்டும் என்று தமிழக அரசு பிறப்பித்த ஆணையைப் பாராட்டி பிற மாநிலங்களும் பின்பற்றுவதற்கு உள்ளன எனக் குறிப்பிட்டார்.

31-1-82 ஸ்டெல்லா மேரிக் கல்லூரியில் கருத்தரங்குக் கூடத்தில் தீண்டாமை ஒழிப்புக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கருத்தரங்கிற்கு வந்திருந்தோரை வரவேற்று பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி.கே. கரியாலி இ.ஆ.ப.


**இரா. வைகுந்தன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**அலுவலகம்,**
**சென்னை-1.**


கருத்தரங்கில் கூறப்படும் கருத்துக்கள் அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்படும் எனக் குறிப்பிட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு என்.டி. சுந்தரவடிவேலு கருத்தரங்கினைத் துவக்கி வைத்துப் பேசினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் திரு பி.எல். பொன்னுசாமி, இ.ஆ.ப.

கருத்தரங்கின் நிறைவுரையாற்றினார்.

மூன்றாம் நாள் (1-2-82) அன்று காலை எழும்பூரையடுத்த பூபதி நகரில் பள்ளிச்சிறுடையில் பாங்காய் பெண்கள் குழுமியிருந்தது கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. அன்றுதான் ஆதிதிராவிடர் குடியிருப்புச் சுற்றுப்புறங்களைத் துப்புரவு செய்தலும் குழந்தைகளுக்குப் பல், கண் பரிசோதனை செய்தலும் நடைபெற்றது. இப்பணியில் மாநிலப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மற்றும் அவ்வை இல்ல டி.வி.ஆர். பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த தேசிய நலப்பணி பெண் தொண்டர்கள் 60 பேரும் மற்றும் மருத்துவர்களும் கலந்து கொண்டார்கள்.

விழாவிற்குத் தலைமையேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இவ்வார விழாவின்போது மாணவர்களும், மாணவிகளும் சுற்றுப்புறங்களைத் தூய்மையாய் வைத்தல், சிறிய குடிசையில் பெரிய குடும்பங்கள் இருக்க இடமில்லாமல் அல்லல்படுவதைக் குடிசை மக்களிடையே இம்மாணவர்கள் எடுத்து விளக்குவார்கள் எனக் குறிப்பிட்டார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் இப்பணியினைத் துவக்கிவைத்துப் பேசும்போது, "இங்கு வந்து சமூக சேவையில் ஈடுபடுபவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை. அவர்கள் சுற்றுப்புறங்களை எப்படிச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டுமென கற்றுத் தருகிறார்களோ அப்படியே தினமும் இங்கேயுள்ளவர்கள் செயல்படவேண்டும். நாம் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் வரவேண்டும். புரட்சித் தலைவரோ அல்லது நாங்களோ மிகவும் சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவர்கள். துன்பம் என்றால் என்னவென்று எங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட துன்பங்கள் எவரும் அடையக் கூடாது என்றுதான் இந்த அரசு பாடுபட்டு வருகிறது" எனக் குறிப்பிட்டார்கள்.

சென்னைப் பெரியமேட்டில் 2-2-82 அன்று கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் உரையாற்றிட மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு எம். விஜய சாரதி அவர்கள் கலப்புமணத் தம்பதிகளுக்கு தலா ரூ.300 ரொக்கப் பரிசுகளும், ரூ. 4000 -க்கு வைப்பு நிதி காசோலையையும் கலப்புமணச் சான்றிதழ்களையும் வழங்கி ஒரு கலப்பு மணத்தம்பதிகளின் குழந்தைக்குத் தமிழ்ச்செல்வி என்றும் பெயர்சூட்டி வாழ்த்தினார். 175 ஆதி ஆந்திரர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், 6 நபர்களுக்குச் சிறுதொழில்செய்ய கடன் தொகைகளும், 3 நபர்களுக்கு இலவசத் தொழிற்கருவிகளும் வழங்கிப் பேசும்போது, ஆதிதிராவிடர் நலன் பெற்றிட தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்தை உடையதாக உள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இச்சமுதாய மககளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கிச் செயலாற்றி வருகிறோம். வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள மக்களின் குறைகளைக் களைவது தான் இவ்வரசின் முக்கிய நோக்கம். மத்திய அரசு அங்கீகாரம் பெற்று மாநில அரசு 1980 முதல் 5 ஆண்டிற்குள் ரூ. 353 கோடி ரூபாய் ஆதி திராவிட மக்களுக்கு செலவிடஉள்ளது. 9 இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டைத் தாண்டிடவும் திட்டமுள்ளது. கிராமப்புறங்களில் சாதி இனக் கலவரங்கள் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட விழாக்களின்மூலம் ஆதிதிராவிடரும் மற்றவரும் ஒருவர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவேண்டும் என்றார்.

ஐந்தாம்நாள் நிகழ்ச்சி(3-2-82) ஆரம்ப, நடுத்தர, உயர்நிலை, மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆதி திராவிட மாணவர்கள் கலந்து கொண்டவிளையாட்டுப் போட்டி நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

கலைவாணர் அரங்கில் 4-2-82-ல் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி.கே. கரியாலி இ.ஆ.ப., தலைமையில் சமூக நலத்துறைச் செயலாளர் திருமதி அஞ்சனிதயானந்த் இ.ஆ.ப. அவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர், மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிமக்கள் நல இயக்குநர் திரு பி.எல். பொன்னுசாமி அவர்கள் சிறப்புரையாற்றினார். மாணவர், மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா இனிது முடிந்தது.

## அயோத்தியா சேலைகள்

"கோஆப்டெக்ஸ்" ஒவ்வொரு வடிவமைப்பு நிலையத்திற்கும் சுமார் 20 அங்கத்தினர் கொண்ட நுகர்வோர் குழுக்கள் ஒவ்வொன்று அமைக்கப்பட்டன. இந்தக் குழு மகளிர் கல்லூரி முதல்வர்கள், மகளிர் சங்கங்களின் உறுப்பினர்கள், மகளிர் மருத்துவர்கள், மாணவிகள் மற்றும் இல்லத்தரசிகள் ஆகியோர் இடம் பெறுமாறு அமைக்கப்பட்டது.

வடிவமைப்பு நிலையங்கள் உற்பத்தி செய்த வடிவமைப்புகள் மற்றும் மாதிரித் துணிகள், அந்தந்த இடங்களில் பிரத்தியேக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் மேற்சொன்ன "நுகர்வோர் குழுவின் அங்கத்தினர்" பார்வைக்கு வைக்கப்பட்டன. அங்கத்தினர் தத்தம் விருப்பத்திற்கேற்ப கவர்ச்சியான வடிவமைப்புகளைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அனைத்து அங்கத்தினர் தேர்ந்தெடுத்த வடிவமைப்புகளை வரிசைப்படுத்தி 10 முதல் தரப்பட்ட வடிவமைப்புகளைக் கொண்டு சேலைகள் முழு அளவில் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வடிவமைப்பிற்கும், 5 வண்ணச்சேர்க்கைகள் உபயோகிக்கப்பட்டன. ஆக இந்த உற்பத்தியில் 50 வித்தியாசமான அமைப்புக் கொண்ட புடவைகள் பங்கு பெறும். இம்முறையில் ஒவ்வொரு வடிவமைப்பு நிலையமும் 25,000 சேலைகள் உற்பத்திக்கு ஏற்பாடு செய்கின்றன.

முதலாவதாகச் சேலம் வடிவமைப்பு நிலையம், இந்த உற்பத்தியை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையத்தால் உற்பத்தி செய்யப்பட்ட சேலைகள் அயோத்தியா சேலைகள் என்று பெயரிடப்பட்டன.

இப்புடவைகள் தமிழ்நாட்டில் உள்ள பெரிய விற்பனை நிலையங்களிலும், பிற மாநிலங்களில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட விற்பனை நிலையங்களிலும் விற்பனைக்குத் தயாராக உள்ளன.







# கோவை மாவட்டம்: கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டப்பணிகள்!

பலவீனப்பட்ட கிராமங்களில் வளம் தேக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டதே தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்.

மத்திய அரசின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு கூறாக அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஊராட்சி மன்றங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஊராட்சி 'மன்றங்களின் ஈடுபாடும் அக்கறையுமே' இத்திட்டத்தின் வெற்றிக்கு முழு முதற் காரணமாகும்.

சாலை வசதி, கல்விச்சாலை வசதி, குடிநீர் வசதி, சிறுபால வசதி போன்ற ஒன்பது அத்தியாவசியக் கிராமத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலேயே தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத்திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வந்தாலும் கூட, இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

மாவட்ட அளவில் இத்திட்டம் எப்படி நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை நேரில் கண்டறிவதற்காக அண்மையில் கோவை மாவட்டத்தில் நாம் சுற்றுப் பயணம் மேற்கொண்டோம்.

சூலூர், பொள்ளாச்சி, பெரிய நாயக்கன் பாளையம், காரமடை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் எங்கள் பயணம் தொடர்ந்தது.


**சூலூர்**

கோவை மாவட்டத்திலுள்ள சூலூர் ஊராட்சி ஒன்றியத்தின் பல்வேறு ஊராட்சிகளிலும் - பள்ளிக்கட்டடம் 3, ஊராட்சி மன்றக் கட்டடம் 7, மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி 19, வடிகால் அமைப்பு 21, சிறு பாலம் மற்றும் சாலைப் பராமரிப்பு 12, வெள்ளத் தடுப்புச் சுவர் 2, மதிய உணவுக்கான சமையல் கூடம் 1, சிறுநீர்க் கழிப்பிடம் 1 என தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 66 பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.




1981-82-க்கான இப்பணிகளில் 25 பணிகள் முடிவுபெற்றுவிட்டன. 26 பணிகள் ஒரு வார

சி.எல்.ஆர்







கால உழைப்பில் முடிந்துவிட இருக்கின்றன. மற்றவை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக நிச்சயம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு விடும் என்று நமக்குத் தெரிவித்தார்கள் ஊராட்சி மன்ற ஆணையர் திரு. எஸ். எஸ். முத்தயா, கூடுதல் கோட்டப் பொறியாளர் முகமது ஜலீல் இருவரும்.

இந்த ஒன்றியத்தில் கட்டி முடிக்கப்பட்ட - முடியும் தறுவாயில் இருக்கிற பள்ளிக் கட்டடங்கள், ஊராட்சி மன்றங்கள், வடிகால், சிறுபாலங்கள், மதிய உணவுக்கூடம் ஆகியவற்றை நாம் பார்க்கிறோம்.

1981-ல், கோவை மாவட்டத்திலேயே கதர் விற்பனையில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது இந்த ஒன்றியம்.

சூலூர் சளக்கரிச்சல் சாலையில் 74 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டு வரும் பத்தாயிரம் ரூபாய் திட்டத்திலான வடிகால், சூலூர் தெற்கில் ரூ. 68 ஆயிரம் திட்டத்தில் உருவாகி வரும் பள்ளிக் கட்டடம், ஐயாயிரம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அண்ணாநகர் சிறுபாலம், இருகூர் சின்னிமலை வழியில் ஒரு 2 கி. மீ. சாலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் அனைத்துமே பெரும்பான்மை மக்களுக்குப் பெரிதும் உதவும் இடத்தில் அமைக்கப்பட்டிருப்பது அந்தந்த ஊர் மக்களாலேயே வாயாரப் புகழப்படுவதை நாம் காண முடிந்தது.

## பொள்ளாச்சி

பொள்ளாச்சி ஒன்றியத்தின் வடக்குப் பகுதிப் பிரிவில் நாம் செல்கிறோம்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், சந்தே கவுண்டன் பாளையம் சாலையில் 150 புளியங்கன்றுகள் நடப்பட்டிருப்பது முதலில் நமக்குக் காட்டப்படுகிறது. வீதியோரத்தில், சுற்றுப்புறப் பாதுகாப்புச் சிறு சுவரோடு செழிப்பாக நின்றன அந்தக் கன்றுகள். அவற்றைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்கென 100 கன்றுகளுக்கு ஒரு காவலாளி நியமிக்கப்பட்டிருக்கிறார். நாளொன்றுக்கு அவருக்கு இதற்கான ஊதியமாக ரூ. 5 தரப்படுகிறது.

யாராவது கன்றுகளைச் சேதப்படுத்தி விட்டாலோ, கால் நடைகள் தின்ன நேர்ந்தாலோ அந்தக் காவலாளியே அதற்குப் பொறுப்பேற்றுத் தன் சொந்தச் செலவில் வேறு கன்று வாங்கி நடவேண்டும்.





''கவனமாகப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே இப்படிச் செய்திருக்கிறோம்'' என்றார்கள் ஆணையர் திரு. ஏ. நாராயணன்நாயரும், ஒன்றியப் பொறியாளர் திரு. கே. ஈஸ்வர மூர்த்தியும்.

இந்த ஒன்றியத்தில் இப்படி 9 இடங்களில் 900 கன்றுகள் நடப்பட்டுள்ளன.

குடிநீர்க் கிணறு, சமுதாய நீர்ப்பாசனக் கிணறு, மதிய உணவுக் கூடம், அரிசனக் குடியிருப்பு, சிறுபாசனம், சாலைகள், வடிகால், தடுப்புச் சுவர், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம், பால்வாடி, பள்ளிக் கட்டடங்கள் ஆகிய பணிகளும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஒன்றியத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலான பணிகள் முடிவுற்றிருப்பதையும் நாம் கண்டோம்.

மகளிர் கழிப்பிடம் ஒன்றை நவீனமுறையில் உருவாக்கி வருவதாகத் தெரிவித்தார் ஒன்றியப் பொறியாளர் ஈஸ்வர மூர்த்தி.

## பொள்ளாச்சி (தெற்கு ஒன்றியம்)

அடுத்த கட்டமாக நாம் பொள்ளாச்சி தெற்குப் பிரிவு ஒன்றியப் பணிகளைப் பார்வையிடச் சென்றபோது ஆணையர் திரு கே. எஸ். பத்மனாபனும், ஒன்றியப் பொறியாளர் திரு குமரனும் நம்மை அன்போடு வரவேற்று அழைத்துச் சென்று தமது ஒன்றிய வேலைத் திட்டங்களைக் காட்டினார்கள்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதியில் மட்டும் 251 பணிகள் 1981-82-ஆம் ஆண்டுக்கெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

சாலை அமைத்தல், வடிகால் கட்டுதல், இடுகாட்டுப் பாதை அமைத்தல் என இவர்கள் மேற்கொண்டுள்ள அப்பணிகளில் பெரும்பகுதி முடிவடைந்து விட்டன. ஏறத்தாழ நூறு பணிகள் மீதமுள்ளன. அவை யாவும் இம்மாத இறுதிக்குள்ளேயே முடிக்கப்பட்டுவிடும் என நம்பிக்கை தெரிவித்தார்கள் அவர்கள்.

சின்னாம்பாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் 50 சதுர மீட்டர் அளவில், இருபதாயிரம் ரூபாய் நிதி மதிப்பீட்டில் மனமகிழ் மன்றம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அங்கே பகலில் 30 ஆதிதிராவிடப் பெண்களுக்குத் தையல் கற்பிக்கப்படுகிறது. இதற்காக 2 ஆசிரியைகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 8 தையல் எந்திரங்கள் இங்குள்ளன.

இரவு நேரத்தில் இக்கட்டடத்தில் முதியோர் கல்வி வகுப்பு நடைபெறுகிறது.

ஜமீன் ஊத்துக்குளியில் 400 மீட்டர் நீள வீதிவடிகால் கட்டப்பட்டுள்ளது போன்ற அரும் பணிகள் பல இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சிறப்புற நிறைவேறியுள்ளன.

## பெரியநாயக்கன் பாளையம்

ஒன்பது ஊராட்சி மன்றங்களும் 6 பேரூராட்சிகளும் கொண்ட பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் பணிகள் பற்றி நமக்கு விளக்கினார்கள் ஆணையர் திரு. டி. ஏ. குழந்தைசாமியும், ஒன்றியப் பொறியாளர் திரு எஸ். பி. பாலகிருஷ்ணனும்.

எடுத்துக் கொண்டபடி இந்த ஒன்றியத்தில் 68 சாலையமைப்பு சாலைச் சீரமைப்புப் பணிகளும், ஒரு வடிகால் திட்டமும், ஒரு



தடுப்புச் சுவரும் முடிவு பெற்றிருக்கின்றன.

மன்னார்க்காடு சாலையிலிருந்து 24 வீரபாண்டி சாலையில் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு இவர்கள் மேற்கொண்டுள்ள சாலைச் சீரமைப்புப் பணி பிரம்மாண்டமானதாக இருக்கிறது. இருபுறமும் கரை உயர்ந்த வாய்க்கால்போல் இருக்கும் இந்தச் சாலையை அகலப்படுத்துவதில் ஆண்களும் பெண்களும் நூற்றுக்கணக்கில் ஈடுபட்டுள்ளனர்.

''விரைவிலேயே வண்டி வாகனங்கள் செல்லுமளவுக்கு இந்தச் சாலை செப்பனிடப்பட்டுவிடும்; நாளடைவில் இதில் பஸ் போக்குவரத்து ஏற்படவும் எங்கள் தொகுதி எம். எல். ஏ. முயற்சி எடுத்துக் கொள்ளப் போவதாகக் கூறியிருக்கிறார்'' என்று மகிழ்வோடு தெரிவித்தார் ஆணையாளர்.

ஊருக்கு நலம் செய்வதில் அவருக்குள்ள ஊக்கத்தையும் உறுதியையும் நம்மால் உணர முடிந்தது.

குறிப்பாக, சாண எரிவாயுத் திட்டப் பணிகள் இந்த வட்டாரத்தில் அதிக அதவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**காரமடை**

காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் பற்றி ஒன்றிய ஆணையாளர் திரு சி. துரைராஜ் நமக்கு விளக்கினார்.

ஊராட்சி மன்றங்கள் 17ம், பேரூராட்சிகள் 7ம் உள்ள இந்த ஒன்றியத்தில் 1980-81-ல் மீதம் வைக்கப்பட்ட 7 பள்ளிக் கட்டடம்-இதர கட்டடப் பணிகளும், பின்னர் ஏற்கப்பட்ட 4 பள்ளிக் கட்டடப் பணிகளும் முடியுந்தறுவாயில் உள்ளன. கல்லாற்றங்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ சத்குரு குருகுலப்பள்ளி இருளர்களுக்காக நடத்தப்படுவதாகும். இப்பள்ளி ஆற்றோரத்தில் இருப்பதால் நீர்ப்பெருக்கெடுக்கும் காலங்களில் அங்கு படிக்கும் மாணாக்கர்களுக்குத் தொல்லை நேரிடும். இந்தத் துயர் துடைக்கும் நோக்கில் ரூ. 30 ஆயிரம் செலவில் ஆற்றோரத்தில் 16 மீட்டர் நீளத் தடுப்புச் சுவரொன்று கட்டப்பட்டுள்ளது.

நாகை கூடலூர் முக்கியச் சாலையிலிருந்து பிரியும் செம்படுகு சாலை, இத்திட்டத்தின் கீழ், விவசாயப் பெருமக்களின் போக்குவரத்து நலங்கருதி சுமார் 3 பர்லாங் தூரத்திற்குச் செப்பனிடப்பட்டுள்ளது. அதையொட்டி ரூ. 14 ஆயிரம் செலவில் ஒரு தடுப்புச் சுவரும் எழுப்பப்பட்டிருக்கிறது.

செங்கல்படுகையில் ரூ. 15,400 திட்டத்தில் செப்பனிடப்பட்டுள்ள சாலை, வெளிப்பாளையத்தில் ஐயாயிரம் ரூபாய் நிதியில் கட்டப்பட்டு வரும் மதிய உணவு சமையல் கூடம், அதே திட்ட மதிப்பில் சிறுமுகைப் புதூரில் கட்டப்பட்டுவரும் மதிய உணவு சமையல் கூடம், ரூ. 14 ஆயிரம் திட்ட மதிப்பில் திருப்பூர்-மேட்டுப் பாளையம் வழியே குமரன் குன்றுக்குச் செல்லும் சாலை செப்பனிடப்பட்டல், சென்னி வீரன் பாளையத்தில் ஐயாயிரம் ரூபாய் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள வடிகால் வாய்க்கால், கன்னார்ப்பாளையத்தில் ஒன்றும் கரைமடையில் ஒன்றுமாகத் தலா ரூ. 47 ஆயிரத்தில் கட்டப்பட்டுவரும் பள்ளிக் கட்டடங்கள், நாலாயிரம் ரூபாய் திட்டத்தில் தோலாம் பாளையத்தில் கட்டப்பட்டுள்ள கழிவுநீர் வடிகால் போன்ற பல திட்டங்களையும் நாம் பார்வையிடுகிறோம்.

கிராமங்களின் வளர்ச்சிக்கு, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் எந்த அளவிற்கு உறுதுணையாக இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

கோவை மாவட்டக் கிராமங்களனைத்தும் நாளடைவில் இத்திட்டத்தின் காரணமாக நகரங்களுக்குரிய அலங்காரத்தையும் அந்தஸ்தையும் பெறக் கூடும் என்று நாம் உறுதியாக எதிர்பார்க்கலாம்.





# பரம்பையில் பாரதி விழா

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் மாவட்ட அளவிலான விழா முதன் முறையாக இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் மார்ச் 14-ஆம் நாளில் ஆயிரவைசிய மேல்நிலைப் பள்ளிக் கலையரங்கில் நடைபெற்றது. மதுரை இசைக் கல்லூரி மாணவ் மாணவிகள் பாரதியார் பற்றிய பாடல்களை பாடி விழாவினைத் துவக்கி வைத்தார்கள். மதுரை இசைக் கல்லூரி முதல்வர் செல்வி எஸ். பிரேமா அவர்களுக்கும், மாணவ மாணவியர்கட்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் விழாக் குழுவின் சார்பாகப் பரிசுகள் வழங்கினார்.

பாரதியாரின் வாழ்க்கை வரலாறு பற்றிய கண்காட்சியினை இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச்.எம். பாண்டே இ.ஆ.ப. அவர்கள் திறந்துவைத்தார்கள்.

மாவட்ட அளவில் நடந்த பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் சிலர் (திரு சொ. செல்லக்குமார், திரு. கே. கோகுல் குமரன், திரு பி.மாரி முத்து, திரு எஸ். செல்வபாஸ்கர் ''இளைய பாரதம்'' என்னும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் திரு புலமைப்பித்தன் அவர்கள் தலைமையில் ''இவர்கள் பார்வையில் பாரதி'' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. ''பாஞ்சாலி' என்னும் தலைப்பில் பேராசிரியர் திரு ச. சவகர்லால், 'பராசக்தி' என்னும் தலைப்பில் கவிஞர் திரு அரு. நாகப்பன், 'கண்ணன்' என்னும் தலைப்பில் பேராசிரியர் திரு சொ. சொ. மீ. சுந்தரம் மற்றும் 'தமிழ்த்தாய்' பற்றி டாக்டர் சிங்கார வடிவேலன் ஆகியோர் கவிதை பாடினார்கள்.



பேராசிரியர் பா. நமசிவாயம் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. 'அன்ன மூட்டிய தெய்வ நங்கைகள்' என்னும் தலைப்பில் பேராசிரியர் தா.கு. சுப்ரமணியன், 'ஒளி படைத்த கண்ணினாள்'' என்ற தலைப்பில் திருபழ. கருப்பையா, 'மெல்லத் தமிழ் இனி' என்னும் தலைப்பில் பேராசிரியர் சாலமன் பாப்பையா ஆகியோர் பேசினர்.

மாலை 6 மணியளவில் சௌராஷ்டிரா மேல் நிலைப் பள்ளி மைதானத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு அரசர் சேதுபதி மேல்நிலைப் பள்ளியை எட்டு மணியளவில் வந்தடைந்தது.

ஊர்வலத்தின் முன்னே யானையில் மீது பாரதிபோல் வேடம் அணிந்த மாணவர் அமர்ந்து வந்தார். ஊர்வலத்தில் மாணவ, மாணவியர்கள், சாரணர்கள், தேசிய மாணவப்படையினர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அதையடுத்து கரக ஆட்டம், காவடி ஆட்டம், நையாண்டி மேளம், அலங்கார ஊர்திகள் முதலியவை இடம் பெற்றிருந்தன. ஊர்வலத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

பரமக்குடியின் முக்கியத் தெருக்களில் எல்லாம் பாரதியின் கவிச் சொற்களைத் தாங்கிய அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஊர்வலம் முடிவுற்றதும் நிறைவுவிழாச் சிறப்புக் கூட்டம் அரசர் சேதுபதி மேல்நிலைப்

மேலும்



பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழாத் துவங்கியது. இராமநாதபுர கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு அர. செல்லமுத்து இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:



''ஏறத்தாழ 60 ஆண்டுகட்கு முன்னர் பாரதி கண்ட கனவு இன்று நனவாகிறது. பாரதிக்கும் முகவைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எந்த மனிதனாவது துன்பத்தினால் கஷ்டப்பட்டால் இந்தச் சமுதாயம் உதவிட வேண்டும் என்று பாரதி கூறினார். அவரும் தன் வாழ்நாளில் அந்தக் கொள்கையைப் பின்பற்றி வந்தார்''.

பாரதி விழாக் குழுவின் சார்பாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கட்கும் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

பரமக்குடி சட்ட மன்ற உறுப்பினர் திரு ஆர். தவசி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பரமக்குடி நகரம் மாநாடு போல் இருந்தது. பாரதியாரின் வாழ்க்கை வரலாறு ஊர்வலத்தில் நல்லமுறையில் சித்தரிக்கப்பட்டு இருந்தது பாராட்டத் தக்கது.

இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு டி. ராமசாமி அவர்கள் பேசுகையில் கூறியதாவது.

''இந்த நாடு சுதந்தரம் அடைவதற்கு முன்னர் பாரதியார் ஆற்றிய பணி மிகவும் பாராட்டத்தக்கது. சாதிகள் இல்லையடி பாப்பா என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இன்னும் இந்தச் சாதி பாகுபாடுகள் தீர்ந்தபாடில்லை. மகாகவி கூறிய கருத்துக்களை நாம் இன்று எண்ணிப் பார்த்துச் செயல்பட வீர சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

விழாவிற்குத் தலைமை தாங்கியும், பேச்சு, இசை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கியும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:



''தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு வழிகாட்டத் தக்க வகையில் முதன் முதலாக பாரதியார் நூற்றாண்டு விழாவை நடத்தும் மாவட்டமாக இராமநாதபுரம் திகழ்கிறது. பாரதியாரைப் போற்றுகிறோம். புகழ்கிறோம்; அவரது கவிதை வரிகளுக்காக நன்றி கூறுகிறோம். ஆனால் பாரதியாரை முழுமையாகப் பின்பற்றி நடக்கவில்லையே என்று வேதனையோடு கூறிக் கொள்கிறேன்.

''ஜாதிகள் இல்லையடிபாப்பா என்று இளம் குழந்தைகளுக்காக பாடினார். அதைப் பெரியோர்களே பின்பற்றி நடக்க முடியாத நிலைமை இருக்கிறது. உலகில் எத்தனையோ கவிஞர்கள் தோன்றினார்கள். அவர்களுக்கு இல்லாத சிறப்பு பாரதியாருக்கு உண்டு. பல கவிஞர்கள் இயற்கையை, கடவுளை, வேதாந்தத்தை ,தத்துவத்தைப் பாடினார்கள். ஆனால் பாரதியார் சிறுவர் முதல் பெரியோர் வரை படிக்கும் அற்புதப் பாடல்களைத் தந்தார்.

''ஒருவர் 100 ஆண்டுகள் வாழ்ந்தாலும் படித்துத் தெரிந்து கொள்ள முடியாத அளவு கவிதைகளைத் தந்திருக்கிறார். பாரதி வாழ்ந்த 39 ஆண்டுகளிலும் வறுமை இல்லாமல் - தொல்லை இல்லாமல் வாழ்ந்தாரா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வறுமையைக் கடைசி வரை சந்தித்தார். எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு, இப்படிப்பட்ட கவிதைகளை நமக்குத் தந்திருக்கிறார்.

''ஒரு புலவர் சொன்னார் எமன் பல்வேறு உருவங்களில் வருவான், பாரதியார் ஆண்மை மிக்கவர் ஆகவே பாரதியாரைக் கொல்ல யானை வடிவில் வந்தான் என்று கூறினார். இப்போது இங்கு நடந்த ஊர்வலத்தில் ஒரு மாணவர் யானை மீது பாரதியார் போல் வேடமணிந்து அமர்ந்து வந்தார். காலா உனை நான் சிறு புல்லென மதிக்கின்றேன். என்றன் காலருகே வாடா சற்றே உனை மிதிக்கின்றேன் என்று பாரதி பாடினாரே, அதுபோல் யானையை வீழ்த்திவிட்டு அவரே அமர்ந்து வந்ததுபோல இருந்தது.

''பாரதியின் கவிதைகள் இனிமை மட்டுமல்ல, நாட்டு நிலையை உயர்த்தும் கவிதைகளாகவும் அமைந்தது. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே என்று பாரதி பாடினார். ஆங்கிலக் கல்வி உயர்வு பெற்றிருந்த காலம் அது. ஆங்கிலத்தில் படித்தால்தான் மதிப்பு என்று நினைத்திருந்த காலம் அது. அந்தக் காலத்திலேயே யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கணும் காணோம் என்று பாடினார்.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுத் தனி அலுவலர் திரு சி.என். கிருஷ்ண பாரதி அவர்கள் நன்றி கூறினார்.

விழாவின் இறுதியில் திரைப்பட நடிகை செல்வி வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினர் பாரதியார் பற்றிய நாட்டிய நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார்கள்.

மாவட்ட அளவில் நடைபெற்ற பாரதியார் நூற்றாண்டு விழா, மனத்தில் பதிந்த விழாவாக அமைந்திருக்கிறது.



# கிள்ளை விழா சொல்வது என்ன?

ஒவ்வொரு ஆண்டும் மாசித் திங்கள் முழுநிலவு (பௌர்ணமி) அன்று தென்னார்க்காடு மாவட்டத்தில் கொண்டாடப்படுவது மாசிமகத் திருவிழா. இத்திருவிழா தில்லைக்கு அருகிலுள்ள கிள்ளை என்னும் சிற்றூரில் சிறப்பாக இந்து, முஸ்லீம் ஆகிய இரு மதத்தினராலும் பல ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இவ்விழாவினைத் தமிழக அரசே பங்கேற்று நடத்தியது. இந்து-முஸ்லீம் ஒற்றுமையை வலுப்படுத்தும்வண்ணம் இவ்விழாவை இனிவரும் காலங்



களிலும் அரசே தொடர்ந்து நடத்தவும் தீர்மானித்துள்ளது.

**வரலாற்றுச் சுருக்கம்:**

இந்தியாவிலுள்ள 8 முக்கிய வைணவத் திருத்தலங்களிலிருந்தும் வடநாட்டிலிருந்தும் திருமுட்டம் (ஸ்ரீமுஷ்ணம்) கோவிலுக்குப் பக்தர்கள் வருவது வழக்கம். இங்குள்ள மூலவிக்கிரகமான வராக மூர்த்தி இயற்கையில் தோன்றியதாக இந்துக்களால் கருதப்படுவதால், சுயம்பு மூர்த்தி என்றும் அழைக்கப்படுகிறது. மற்ற மூல விக்கிரகங்களுக்கு உள்ள 'அஷ்ட பந்தனம்' என்பது இதற்குக் கிடையாது.

மாசிமகத் திருவிழா அன்று திருமுட்டத்திலுள்ள இந்துக்களின் தெய்வமாகிய வராக மூர்த்தி கிள்ளையிலுள்ள முஸ்லீம்களின் தர்க்காவுக்கு வந்து கடற்கரையிலுள்ள முழுக்குத் துறைக்குச் சென்று கடலாடுவதே இவ்விழாவின் சிறப்பான நிகழ்ச்சி.

இதுவரை சாலை போடப்படாது இருந்த இம்முழுக்குத் துறைக்குத் தமிழக அரசு புதியதொரு சாலையை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**இந்து-முஸ்லீம் ஒருமைப்பாடு:**

கிள்ளையிலுள்ள முஸ்லீம்களின் தர்க்காவின் மேல் இந்துக் கோவிலின் மேல் காணப்படும் கலசம் அமைந்துள்ளது. நாகூர் தர்க்காவில் முஸ்லீம்களும் இந்துக்களும் சேர்ந்து வழிபடுவதுபோல் இங்கும் நிகழ்கிறது. அர்ச்சகரும் முஸ்லீம் மத குருவும் பொது மக்களும் இங்கு வந்து எவ்வித இன வேறுபாடின்றி தொழுது கொள்கிறார்கள். அவ்வமயம் 'காசியா' என்னும் உருதில் சர்க்கரையுடன் 'பாத்தியா' என்னும் மந்திரம் ஓதப்படுகிறது. தர்க்காவுக்கு எதிரிலும் முஸ்லீம் தெருக்களிலும் பாண்டு, நாதசுரம், நகடா முதலிய இசைக் கருவிகளும் முழங்கப்படுகின்றன.

தர்க்காவுக்கு எதிரில் இந்துக்கள் தெய்வமாகிய பெருமாள் இருக்கும்போது, அர்ச்சகர் கற்பூரம் காட்டுகிறார். பிறகு, தர்க்கா நிர்வாகி பிரான்சாகிப் இல்லத்திற்கு அர்ச்சகரும் பிறரும் செல்கின்றனர். அங்கு பிரான்சாகிப் அவர்களை நலன் விசாரித்து வழியனுப்பி வைக்கின்றார். இந்நிகழ்ச்சி இந்து, முஸ்லீம் மக்களிடையே ஒரு பரஸ்பர உணர்வை ஏற்படுத்துகிறது. இங்குள்ள முஸ்லீம்களின் தரும ஸ்தாபனத்திலிருந்து இந்துக்களுக்கு 20 காணி நிலம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**அரசின் பங்கேற்பு:**

[illegible]—3—82 அன்று நடைபெற்ற இவ்விழாவை யொட்டி, தமிழக அரசு இங்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் பல்துறை விளக்கப் பொருட்காட்சி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. காலையில், ''சுற்றுலா செல்வது பொழுது போக்கிற்கா? அல்லது அறிவு வளர்ச்சிக்கா?'' என்ற பொருள் பற்றி வழக்காடு மன்றம் ஒன்றும் நடைபெற்றது. விழா நிகழ்ச்சிகள் அனைத்திலும் சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு அலுவலர்களும் பங்கேற்றனர்



மாலை 6 மணியளவில் ஷேக் சின்ன மௌலானா நாதசுர இன்னிசைக் கச்சேரியுடன் அன்றைய மாலை நிகழ்ச்சிகள் தொடங்கின. விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி. சந்திரலேகா, இ. ஆ. ப. அவர்கள் தலைமை தாங்கினார்கள். புவனகிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. வி. சாமிநாதன் அவர்கள், சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். கணபதி அவர்கள் கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**கா. மு. ஷெரீப்:**

முதலில் கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் பேசுகையில், தில்லைக்கு அருகிலிருக்கும் கிள்ளையில் மாசிமகத் திருவிழா இந்து-முஸ்லீம் ஒருமைப்பாட்டு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்துக்களும் முஸ்லீம்களுமாகிய நாம் இருவரும் ஒற்றுமையுடன் வாழும் அளவிற்கு நம் நாடும் ஒற்றுமையாக இருக்கும். இந்த ஒற்றுமைக்கு வழிகோலுகின்ற தமிழக அரசுக்கு நான் மிகவும் நன்றிகூறக்கடமைப்பட்டிருக்கிறேன். நாம் வெவ்வேறு இனத்தவராகயிருந்தாலும் ஒரு தென்னை மரத்திலுள்ள குலைகள் போன்று இருக்கின்றோம்.

மன்னார்குடியிலுள்ள கோவிலுக்குத் திப்புசுல்தான் மானியம் வழங்கினார். ஹைதராபாத்திலுள்ள நந்தி தீர்க்கத்திற்கு ஹைதரலி மானியம் வழங்கினார், தஞ்சையில் நாயக்கர் பரம்பரை முஸ்லீம்களுக்கு மானியம் வழங்கியது. இவையெல்லாம் இந்து-முஸ்லீம் ஒருமைப்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய ஒருமைப்பாடு நமக்கு இன்றியமையாதது. இதைமேலும் வளர்க்க இது போன்ற ஒருமைப்பாட்டு விழாக்கள் எங்கும் நடைபெற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

**கே. ஆர். கணபதி:**

சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். கணபதி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது :

நாட்டில் அங்குமிங்கும் இனக் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில், 'ஒன்றே குலம், ஒருவனே தெய்வம்' என்பதற்கிணங்க இந்து-முஸ்லீம் ஒருவரையொருவர் வரவேற்கும் அற்புதக் காட்சியைத் தமிழ் நாட்டிற் காண்கிறோம். திறன்களை யொட்டி இவ்விழாவைக் கொண்டாடும் வகையில் இங்கு உழவர் திருநாளும் கொண்டாடப்படுகிறது என்று கூறினார்கள்.

**வி. வி. சாமிநாதன்:**

புவனகிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. வி. சாமிநாதன் அவர்கள் பேசுகையில்,

இங்கு இந்துக்கள் தெய்வமாகிய பெருமாளுக்கு முஸ்லீம்களுடைய தர்க்கா திறக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது. வடநாட்டில் பல இடங்களில் தாரை, தம்பட்டை, நாதசுரம் போன்ற இசைக்கருவிகளை முழக்கினாலே, உடனே இந்து-முஸ்லீம் இனக் கலவரம் ஏற்படுகிறது. ஆனால், இங்கோ முஸ்லீம்கள் தங்கள் இல்லங்களிலிருந்து வெளியே வந்து நடைபெறும் நிகழ்ச்சிகளையெல்லாம் கண்டுகளிக்கின்றனர். அருகிலுள்ள தில்லை நடராசர் கோவிலிலும் முஸ்லீம்கள் விரும்பினால், தொழுகை புரிய இடமிருக்கின்றது. இங்கு இந்து, முஸ்லீம் என இன வேறுபாடின்றி ஒருமைப்பாட்டைக் காண்கிறார்கள்.

இந்துக்கள் நாகூர் தர்க்காவுக்குச் சென்று மானியம் வழங்குகிறார்கள். தில்லைக் கோவிலுக்கும் திப்புசுல்தான், ஹைதர் அலி ஆகிய முஸ்லீம் மன்னர்கள் பல நகைகளை மானியமாகக் கொடுத்துள்ளார்கள். இவையெல்லாம் இந்து-முஸ்லீம் ஒருமைப்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றன. இவ்வொருமைப்பாட்டினை மேலும் வளர்க்கத் தமிழக அரசு பெரிதும் முயற்சி எடுத்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள்.

**ஆட்சித்தலைவர் :**

இறுதியாகப் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி. சந்திரலேகா, இ. ஆ. ப. அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—

பொதுவுடைமைக் கொள்கையைத் தந்தை பெரியார், காந்தி மகான் போன்றவர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மதம் என்பது ஒரு குடிபொருள். இதன் அடிப்படையில், இன்னும் பல மதத்தினர் ஒருவரையொருவர் அடித்துக் கொள்கிறார்கள். இவற்றையெல்லாம் தவிர்க்க அக்பர் அக்காலத்திலேயே ஒரு புதிய மதத்தைத் தோற்றுவித்தார். தென்னகத்தை எடுத்துக் கொண்டால், ஒருமைப்பாட்டிற்குக் குறைவேயில்லை. தமிழ் மக்களின் கலாச்சாரம் இந்தியாவிற்கே ஓர் எடுத்துக் காட்டு. இந்த உண்மையை விளக்கத்தான் இவ்விழா அரசு சார்பில் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது என்று கூறினார்கள்.

இரவில் எஸ். என். கிருஷ்ணன் குழுவினரால் நடத்தப் பெற்ற 'சிரித்துப்பார்' என்ற சமூக நாடகத்துடன் விழா இனிது முடிவடைந்தது.

**தொகுப்பு: தே. மணி**





# இலண்டனில் இன்னிசை அரசி

அட்டை சொல்லும் செய்தி

**கே. ஏ. சுந்தரம், இ. ஆ. ப.**

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

இலண்டனில் இந்தியக் கலை விழாவில் தமிழகத்தில், ஏன், இந்தியாவிலேயே தலைசிறந்த இசைக்கலை வல்லுநரான திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள், மார்ச்மாதம் 22-ஆம் தேதி மாண்புமிகு இந்தியப் பிரதம அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் துவக்கி வைத்த இந்தியக் கலை விழாவில் தனது அருமையான, இனிய இசை நிகழ்ச்சியை நடத்தினார்கள்.


''நான் ஒரு சாதாரணப் பிரதம அமைச்சர்; திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களோ இசை அரசி'' என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் புகழப்பட்ட திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் சுமார் 53 ஆண்டுகளாக இசை இன்பத்தை அள்ளி அள்ளிக் கொடுத்து வருகிறார்கள். அவரது கணவர் திரு. சதாசிவம் அவர்கள் அன்னாருக்கு உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து வருகிறார்.

1954-ஆம் ஆண்டு திருமதி எம்.எஸ். அவர்களுக்கு 'பத்மபூஷண்' என்ற விருது இந்திய அரசினால் வழங்கப்பட்டது. சென்னையிலே நடந்த இசை மாநாட்டிற்கு முதல் முறையாகத் தலைமை தாங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணி திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் தான். ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், ரவீந்திர பாரதி பல்கலைக் கழகம், டில்லி பல்கலைக் கழகம், காசிப் பல்கலைக்கழகம் ஆகியவை இவருக்கு கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கிச் சிறப்பித்துள்ளன. 1974-ஆம் ஆண்டு உலகப் புகழ் பெற்ற ''மாக்சேசே'' விருது பெற்றுள்ளார். 1975-ஆம் ஆண்டு இந்திய அரசு ''பத்ம விபூஷண்'' விருதினை இவருக்கு வழங்கியுள்ளது. இந்திய சங்கீத நாடக அகாடமியின் ''பெல்லோஷிப்'' இவருக்கு வழங்கப்பட்டது. சென்ற ஆண்டு விஸ்வபாரதி பல்கலைக் கழகம் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு ''தெசிகோத்தமா'' (தலைசிறந்த ஆசிரியர்) என்ற சிறப்புப் பட்டத்தை அளித்து கௌரவித்தது. ஆந்திர மாநில அரசு இவரை தனது மாநில அரசுக் கலைஞராக நியமித்துள்ளது.

இவ்வாறு எட்டுத்திக்கும் புகழ்பெற்றுள்ள திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள், ஏற்கெனவே ஐ.நா. சபையில் 1966-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ஆம் நாள் இசை நிகழ்ச்சி நடத்திப் பெரும்புகழ் பெற்றுள்ளார். இவரது இனிய குரலோசை கேட்காத நாடுகளே இல்லை எனலாம். இங்கிலாந்து, சுவிட்ஜர்லாந்து, ஜப்பான், தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா, எகிப்து ஆகிய அனைத்து நாடுகளிலும் இவரது இசையைக்கேட்டு மயங்காதவர்கள் கிடையாது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இசைத்துறையில் அனைத்துலகப் புகழ் பெற்றவர்களுக்கு ஐக்கிய நாடுகள் கல்வி, சமூக ,கலாச்சார நிறுவனத்தின் (யுனெஸ்கோ) ஆதரவில் ''அனைத்துலக இசைக்குழு உறுப்பினர் ''என்ற கௌரவ பதவி சென்ற அக்டோபர் திங்களில் இவருக்கு அளிக்கப்பட்டது. திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பல்வேறு பொது நிறுவனங்கள், கல்வி, கலாசார, மத சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஆகியவை தழைத்தோங்கவும், வளர்ச்சி அடையவும் வழிவகை செய்யும் பொருட்டு மகத்தான இசை நிகழ்ச்சிகள் நடத்தியும் இசைத்தட்டுகள் மூலமாகத் தனக்கு வரும் உரிமையை வழங்கியும், செயற்கரிய பொதுநலத் தொண்டுகள் செய்து வருகிறார். இலண்டனில் இந்தியக் கலை விழாவில் இசை நிகழ்ச்சியைத் துவக்குகின்ற பெரும்பேற்றினை அவர்கள் நிறைவேற்றச் சென்றபோது .சென்னை விமான நிலையத்தில் தமிழக அரசின் சார்பாகவும், தமிழக முதல்வர் சார்பாகவும், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் 19.3.82-ல் வழியனுப்பி வைத்தார்கள். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. க. ராசாராம் அவர்களும் வாழ்த்தி வழியனுப்பினார்கள்.

இன்னிசை அரசி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களுடன் திருமதி இராதா விசுவநாதன் அவர்களும் இசைக்குழுவினரும் சென்றனர். இவர்களுடைய இசை நிகழ்ச்சி இந்தியத் திருநாட்டிற்கு அதிலும் குறிப்பாகத் தமிழகத்திற்குப் பெரும்புகழைச்சேர்க்கும்என்பதுஉறுதி



# ஊராட்சி ஒன்றியங்களில் பாரதி விழா


— சி.என். கிருஷ்ண பாரதி

தனி அலுவலர்

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாக் குழு


மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவினைத் தமிழ்நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடும் வண்ணம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் நாள் ஒன்றுக்கு ஒரு விழா வீதம் ஆண்டு முழுவதும் விழா நடத்தப் பெறும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அங்ஙனமே அனைத்து மாவட்டங்களிலும் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற்று வருகின்றது. கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி திங்களில் ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் விழா சிறப்புற நடந்தேறியது. இவ்விழாக்களில் பாரதியாரின் கொள்கைகளையும், கருத்துக்களையும் பரப்பிடும் வகையில் கவின்மிகு கவியரங்கங்கள், சிந்தனைக்கு விருந்தளிக்கும் கருத்தரங்கங்கள், மாண்புமிகு அமைச்சர்கள், அறிஞர்கள் ஆகியோரின் சிறப்புரைகள், மாணவமணிகளின் வீர முழக்கங்கள், கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றோடு செவ்வனே நடைபெற்றன. மகாகவி பாரதியார் வலியுறுத்திய நாட்டுப் பற்று, தேசிய ஒருமைப்பாடு, தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, குடிப்பழக்கத் தீமைகள் ஆகிய சீர்திருத்தக் கருத்துக்கள் மக்களின் மனதில் ஆணித்தரமாகப் பதியும் வண்ணம் இவ்விழாக்களில் அறிஞர் பெருமக்களால் வலியுறுத்தப்பட்டன. சில மாவட்டங்களில் நடைபெற்ற விழாக்கள் குறித்து இங்கு காண்போம் ;

## செங்கல்பட்டு மாவட்டம்

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஜனவரித் திங்கள் 22-ஆம் நாள் (22-1-1982) பாரதி நூற்றாண்டு விழா சீரிய முறையில் நடந்தேறியது. பட்டிமன்றம், கருத்தரங்கம், சிறப்புரை ஆகியவை நடைபெற்றன. இவ்விழாவில் சுதந்திரபோராட்ட வீரர் திரு கே. லட்சுமிபதி அவர்கள் கலந்து கொண்டார். இவ்விழாவினையொட்டி வேளாண்மைத் துணைக் கட்டடமொன்று பாரதியார் நூற்றாண்டு கட்டடமாகப் பெயரிடப்பட்டது. இறுதியில் பள்ளிமாணவ மாணவியர் பாரதியார் பற்றிய கலைநிகழ்ச்சிகள், கிராமிய நடனங்கள் நடைபெற்றன. சுமார் 2,000 மக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்

காஞ்சீபுரம் ஊராட்சி ஒன்றிய பாரதி நூற்றாண்டு விழா 9-2-82 அன்று சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் கலந்துகொண்டார்கள். திருப்புங்குழி ஆதி திராவிடர் குடியிருப்பில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு சமுதாயக்கூடம் ரூ. 54,000 மதிப்பீட்டில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா சமுதாய கூடம் என்னும் பெயரில் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கிராமத்தில் ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஒரு குழந்தைகள் காப்பகக் கட்டடம் ரூ. 17,000 மதிப்பீட்டில் மகாகவி பாரதியார் பெயரைத் தாங்கி திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவினையொட்டி பெரிய நத்தம் கிராமத்திலிருந்து கீழ் புத்தூர் கிராமம் வரையில், செவிலிமேடு கிராமத்தில் அரசு ஊழியர் குடியிருப்பு வரையிலும் புதிய சாலை அமைக்கும் பணி துவக்கப்பட்டது. மற்றும் மரங்கள் நடுதல், ஆதிதிராவிடர் காலனியில் வானொலி அறை கட்டும் பணி ஆகியனவும் தொடங்கப்பட்டன. 77 கிராம இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம் துவங்கப்பட்டது. பாரதி சிந்தனை மேடை கவியரங்கம், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள் ஆகிய நிகழ்ச்சிகளுக்குப் பின் இவ்விழா இனிது முடிவடைந்தது. சுமார் 5,000 மக்கள் விழாவினைக் கண்டு களித்தனர்.




## தென் ஆற்காடு மாவட்டம்

### கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்

ஓரத்தூர் கிராமத்தில் 6-1-82 அன்று பாரதியார் நூற்றாண்டு விழா சிறப்பான வகையில் நடைபெற்றது. இவ்விழாவினையொட்டி சாக்காங்குடி, கண்ணங்குடி, காவாலக்குடி, பக்கிரிமான்யம், கடலையாத்தூர் ஆகிய பள்ளிக் கட்டடங்களுக்கும், கீரப்பாளையம் மகப்பேறு நிலைய கட்டடத்திற்கும் மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவுக் கட்டடமாகப் பெயரிடப்பட்டது. இக்கிராமத்தில் மரம் நடும் விழா நடைபெற்றது. பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இசைப்போட்டி, பேச்சுப்போட்டி கவிதைப் போட்டி கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. விழா இறுதியில்பாரதியார் பாடலுடன் கும்மி, குழு நடனம் மற்றும் மெல்லிசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 4000-க்கும் மேற்பட்ட மக்கள் கண்டு களித்தனர்.

### சிதம்பரம் நகராட்சி

இங்கு 10-1-82 அன்று மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நடைபெற்றது. விழாவில் சட்டமன்ற உறுப்பினர்களும், நகர பிரமுகர்களும் கலந்துக் கொண்டனர். நடுநிலைப் பள்ளிக்கட்டடமொன்றுக்கு 'மகாகவி பாரதியார் நினைவுக் கட்டடம்' என்று பெயர் சூட்டப்பட்டது. மக்களுக்குப் பயன்படும் வகையில் ரூ. 50,000 செலவில் இலவச குளியலறைகள் மற்றும் இதர வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. விழாவில் பள்ளி மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள்நடத்தப்பட்டன.






### தியாகதுருக்கம் ஊராட்சி ஒன்றியம்

இந்த ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நாகலூர் கிராமத்தில் 16-1-82 அன்று விழா நடத்தப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள், நகர பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் விழாவில் பங்கேற்றனர். விழா நினைவாகத் தென்னங்கன்றுகள் நடப்பட்டன. விழாவில் கவியரங்கம் நடைபெற்றது. பள்ளி மாணவ—மாணவியருக்குப் பேச்சு, இசை, விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. 1,500-க்கும் மேற்பட்ட மக்கள் விழாவினைக்கண்டு களிப்புற்றனர்.

### முகையூர் ஊராட்சி ஒன்றியம்

26-1-82 அன்று விழா நடைபெற்றது. விழாவில் சட்டமன்ற உறுப்பினர் நகர பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் பங்கேற்றனர். விழாவில் சில விவசாயிகளுக்கு டயர் வண்டி வாங்க மற்றும் ஆடுகள், கறவைமாடுகள் வாங்கக் கடன் வழங்கப்பட்டது. ஆதரவற்ற பெண்களுக்குத்தையற் கருவிகள் வழங்கப்பட்டன. சித்தாத்தூர் கிராமத்தில் பாரதியார் நூற்றாண்டு நினைவுப் பள்ளிக்கூடம் திறந்து வைக்கப்பட்டது. கண்டாச்சிபுரம் கிராமத்தில் பாரதி நூற்றாண்டு நினைவு கூறுதல் பள்ளிக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பள்ளி மாணவ மாணவியருக்கு இசைப்போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவைகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் 2,500 பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி மாவட்டம்

### தாந்தோணி ஊராட்சி ஒன்றியம்

10-2-82 அன்று விழா நடைபெற்றது. இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்களும், அலுவலர்களும் பங்கேற்றனர். இவ்விழாவில் கருத்தரங்கம், கவியரங்கம் மற்றும்மாணவ-மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 29-12-82 அன்று விழா கொண்டாடப்பட்டது. புதுக்கோட்டை நகராட்சி புதிய ஆரம்பப்பள்ளி கட்டடத்திற்கு 'மகாகவிபாரதியார் நூற்றாண்டு நினைவுக் கட்டடம்' என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. மாணவ மாணவிகளுக்குப் போட்டிகள் வைக்கப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள்வழங்கப்பட்டன. நடனம்

# சேலம் உருக்காலை

உற்பத்தித் திறன் ஆண்டாக 'இவ்வாண்டு கொண்டாடப்படுகிறது. அதனைச் செயல்படுத்திக் காட்டும் அளவில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள சேலம் உருக்காலை மார்ச்சு 13-ஆம் நாள் நாட்டுக்கு முறைப்படி அர்ப்பணிக்கப்பட்டது.

சேலம் உருக்காலையைஅமைப்பது குறித்து இந்திய அரசு 1970-ஆம் ஆண்டில் முடிவு செய்தது. 1977-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் 13-ஆம் நாளன்று இந்த ஆலை செயல்படத் தொடங்கியது.

இந்திய அரசுக்குச் சொந்தமான 'ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்' நிறுவனத்தின் ஒரு பிரிவாக சேலம் உருக்காலை இயங்கி வருகிறது. இவ்வாலையின் முதல் கட்டப்பணிகளுக்கு மொத்த முதலீடு 167 கோடி ரூபாய். மிகவும் நவீன சாதனங்களும் நவீன தொழில் நுட்பத் திறனும் இடம் பெற்றுள்ள இவ்வாலை 1981-82-ஆம் ஆண்டில் 3180 டன் உற்பத்தி இலக்கை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் 11,000 டன் எஃகுத் தகடுகளை இவ்வாலை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது.

சேலம் உருக்காலை அதற்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்து வருகிறது. இதன் இரண்டாவது கட்டமாக இன்னொரு செண்ட் சிமிர் ஆலை நிறுவப்படுவதன் மூலம் இவ்வுருக்கு ஆலையில் உற்பத்தித் திறன் இரு மடங்காகும் வாய்ப்பு உள்ளது.

சேலம் உருக்காலையில் உருவாக்கப்படும் எவர்சில்வர் தகடுகளும் சுருள்களும் பல அகலங்களில் கிடைக்கின்றன. கம்ப்யூட்டர் கண்காணிப்பில் இயங்கும் செண்ட் சிமிர் உருட்டாலை ஒரே திண்மையில் எஃகுத் தகடுகள் தயாராக உதவுகிறது. அவை நன்றாக இழுக்கப் படுவதனால் அவற்றின் மேற்பரப்பு சமனாக ஆகிறது. ஆலையின் இறுதி மெருகேற்றும் தொகுதிகளில் காமா கதிர்முறையில், சுருள்களின் மேற்பரப்பு சமனாக ஆக்கப்படுகிறது.

ஒவ்வொரு சுருளும் கடினமான தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகளுக்கு உள்ளாகின்றது.


இரசாயனப் பொருட்கள், மருந்துகள் உரங்கள் பெட்ரோலிய-இரசாயனப் பொருட்கள், பால்பண்ணை, உணவு உற்பத்தி, மருத்துவமனைகள், அணுசக்தி, அச்சுத்தொழில், காகிதத்தொழில், எண்ணெய் சுத்திகரிப்பு, உந்து வண்டிகள், சமையலறைச் சாமான்கள், பாத்திரங்கள் முதலிய பல்வேறு துறைகளின் தேவைகளைச் சேலம் உருக்காலை நிறைவு செய்யும்.

சேலம் உருக்காலை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்படும் வைபவம் 13-3-1982 அன்று சேலம் உருக்காலை அமைந்துள்ள மோகன் நகர் பகுதியில் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு தலைமையில், இந்திய அரசின் மாண்புமிகு தொழில், எஃகு சுரங்கத்துறை அமைச்சர், திரு. நாராயண் தத் திவாரி உருக்காலையைத் திறந்து வைத்தார்.

விழாவில் கலந்து கொண்டவர்களை சேலம் உருக்காலைத் திட்ட நிருவாக இயக்குநர் திரு ஏ. ஏ. ராஜு வரவேற்றுப் பேசினார்.



# இயற்கையின் கோலங்கள்



கல்லும் சொல்லாதோ கவி! கற்கள் கவிதை மட்டுமா சொல்கின்றன? காவியங்களையே பேசுகின்றன. தென்குமரியிலிருந்து வட இமயம் வரை எத்தனை வகைச் சிற்பங்கள். சிந்து நதிவெளி நாகரிக காலத்திலிருந்து ராய் சௌத்ரி கைவண்ணம் வரை எத்தனையோ சிற்பங்கள். அவை அடுக்கு அடுக்காக, காலத்தினாலும் இயற்கையின் கொடுமைகளாலும் மறைந்த ஒவ்வொரு நாகரிகத்தையும், பண்டைய பண்பாடுகளையும் சித்திரிக்கின்றன.

வில்லினை ஒத்த புருவ மங்கையர். வில்லினைத் தாங்கிய வீரர்கள், தூக்கிய திருவடி கூத்தரசர், மோனத்தவம் செய்யும் புத்தர். நெடிது நின்று வானத்தைத் தொடும் கோமதேச்வரர், அண்ணலை வணங்கும் அனுமன், மண்டியிட்டு மலைபோல் படுத்திருக்கும் மாடு, தோகை மயில், ஏழிசை பேசும் தூண்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், சூரிய வட்டக் கற்கள், இப்படி எத்தனையோ ஆயிரம் கருத்துக்களைக்கொண்ட சிற்பங்கள் ஒரு நாட்டின் சரித்திரத்தைச் சொல்கின்றன.

சிற்பங்கள் என்றுமே புதிய கருத்துக்களைப் பரப்ப, தெரிந்த உண்மைகளைச் சிறப்பாகத் தெரிவிக்கப்பெரிதும் உதவியிருக்கின்றன.

மேலை நாடுகளின் பெரிய தொழில் நிறுவனங்கள், சிற்பங்களையும் சித்திரங்களையும் போற்றுவதற்காகவும் அந்தக் கலைஞர்களை, ஊக்குவிப்பதற்காகவும் பெருந்தொகைகளைச் செலவு செய்கின்றன.

இன்றைய தொழில் வளர்ச்சி, தொழில் நிறுவனங்களின் கொள்கைகள் இவற்றை எடுத்துக் கூற சிற்பங்கள் பயன்படுகின்றன.

ரூர்கேலா, பிலாய், ஜாம்ஷெட்பூர் எஃகு ஆலைகளில் சிறந்த கலைஞர்களால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் அந்த ஆலைகளின் சாதனைகளைப் பறைசாற்றுகின்றன.

அதே வழியில் சேலம் உருக்காலையின் ஓர் எஃகுச்சிற்பம் எழுப்பப்பட்டிருக்கிறது.

சேலம் உருக்காலையில் உற்பத்தியாகும் எவர்சில்வர் தகடுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்தச் சிற்பம் இயற்கையின் படைப்பு விநோதங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றின் மூலம் சேலம் உருக்காலையின் சிறப்பியல்புகளைக் கூறுகிறது.

இயற்கை அன்னை எத்தனையோ வடிவங்களுடன் விளையாடுகிறாள். அவள் விளையாட்டு, அழகுக்கு அழகு செய்து, அழகுக்கே சிற்பம் சமைக்கிறது.

இயற்கை வடிவங்களில் ஒன்று 120 டிகிரி கோணம். அந்த ஆறு கோணங்களைச் சேர்த்தால் அறுகோண வடிவம். மரக் கிளைகள், தேன்கூடு, மலர் இதழ்கள் எல்லாமே இந்த அறுகோண வடிவத்தில்தான் இருக்கின்றன. அறுகோண வடிவம் வலிமை, உறுதி, வளர்ச்சி, இவற்றைப் பறை சாற்றுகிறது.

சேலம் உருக்காலையின் வலிமை, உறுதி, வளர்ச்சி இவற்றைச் சித்திரிக்கும் இந்தச்

## மாதவன்

தமிழ்நாடு அரசு சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு அளித் சிற்பத்தைச் சிற்பக் கலை நுட்பக கல்லூரியில் பேராசிரியராகவும் தமிழ்நாடு நுண்கலைக் குழுவில் உறுப்பினராகவும், மத்திய லலிதகலா அகாடமியின் உறுப்பினராகவும் உள்ள திரு கன்னியப்பன் அமைத்துள்ளார்.

அடியிலிருந்து உச்சிவரை 12 அடி உயரமுள்ள இந்த எஃகுச் சிற்பம், விரிந்த மலர் மொட்டு போல் பத்து அறுகோண வடிவங்களைக் கொண்டது. ஒவ்வொரு அறுகோணத்தின் மேலும் ஒவ்வொரு வகையான கோலங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் இயற்கையில் அங்கங்கே காணப்படும் பலவிதக் கோலங்களைச் சில புள்ளிகள், சில கோடுகள் முதலியவற்றின் மூலம் அருமையாகச் சித்திரிக்கின்றன. இயற்கை அன்னை எழிலுடன் கோலம் பூண்ட தன்மையை இச்சிற்பம் நவீன முறையில் வெளிப்படுத்துகிறது.

இயற்கைக் கோலங்கள் என்ற பெயர் கொண்ட இந்த எஃகுச் சிற்பம் சேலம் உருக்காலைக்கும், சேலம் உருக்காலைக் குடியிருப்பான மோகன் நகருக்கும் இடையே உள்ள முச்சந்தி வட்டச் சதுக்கத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. ஆலைக்கு வரும் ஒவ்வொருவரும் சூரிய வெளிச்சத்தில் பலவித வர்ண ஜாலங்களை வண்ண வண்ணக் கோலங்களைக் காட்டும் இந்தச்சிற்பத்தைக் கண்டுகளிப்பார்கள். சிற்பத்தின் கீழே உள்ள அறுகோண நீர்த் தடாகங்கள் சிற்பத்தில் நிழலை பிரதிபலிக்கின்றன.



நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம்

29-1-82 அன்று அன்னவாசல் சீரணி அரங்கில் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் நகர பிரமுகர்களும் பல்வேறுத் துறையைச் சார்ந்த அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர். ஏழை-எளிய மக்களுக்குக் கடன்களும், இலவசத் தொழிற்கருவிகளும் வழங்கப்பட்டன. உடல் ஊனமுற்ற மாணவ-மாணவியருக்குச் சமூகநலத் துறையினரால் உதவித்தொகை 45 பேர்களுக்கு வழங்கப்பட்டது. வீட்டு மனைப்பட்டா, நிலப்பட்டா 75, நிலவுடமை திட்டத்தின் கீழ் 1,300 நிலப்பட்டாவும் வழங்கப்பட்டது. மருந்தாதலை கிராமத்தில் கட்டப்பட்ட நடுநிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு 'மகாகவி பாரதியார் 'பெயர் சூட்டப்பட்டது. விழாவில் மாணவி — மாணவரின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. சுமார் 3,900 மக்கள் விழாவினைக் கண்டு களித்தனர்.

### இராமநாதபுர மாவட்டம்

இராஜபாளைய ஊராட்சி ஒன்றியத்தில் 8-1-82 அன்று விழா நடை பெற்றது. விழாவில் பாரதியாரின் கனவை நினைவாக்க ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை முதலியவை கடைபிடிக்கப்படுமென விழாவில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. சமுக்காபுரம் ஊராட்சி ஒன்றிய புதிய கட்டடமும், கிழவிகுளம் ஊராட்சி ஒன்றியப் பள்ளி மற்றும் புத்தூர் தாய்-சேய் நலவிடுதி ஆகியவற்றிற்கு மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நினைவு கட்டடமாகப் பெயர் சூட்டப்பட்டது. தவத்திரு குன்றக்குடி அடிகளார், தலைமையில் கருத்தரங்கமும், மாணவ-மாணவிகளின் பேச்சுப் போட்டியும் நடைபெற்றன.

18-1-82 அன்று விழா சிறப்புற நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து கொண்டார். அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்ட கருத்தரங்கமும், பட்டிமன்றமும் நடைபெற்றன. மாணவ-மாணவியர்களுக்குப் பேச்சுப் போட்டி, இசைப்போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு டிசம்பர் 82-க்குள் கட்டி முடிக்கப்படும் அனைத்து அரசு கட்டடங்களுக்கும், பொது நிலையங்களுக்கும் பாரதியாரின் பெயரை இடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. விழாவில் சுமார் 20,000 மக்கள் கண்டு களித்தனர்.

### சேலம் மாவட்டம்

அயோத்தியா பட்டணம் : ஊராட்சி ஒன்றியத்தில் 8-1-82 அன்று விழா செவ்வனே நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு சட்ட பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்களும், மாண்புமிகு சட்டத்துறைஅமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களும் கலந்து கொண்டனர். மேலும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் விழாவில் கலந்து கொண்டனர். ஜலகண்டாபுரம், சர்க்கார் நாட்டார் மங்களம் துவக்கப் பள்ளி கட்டடங்கள் செல்லியம் மன் நகர் வானொலி கட்டடம் ஆகியவற்றிற்கு மகாகவிபாரதியார் பெயர் சூட்டப்பட்டது. நிலமற்ற ஏழைகளுக்கு வங்கிக்கடன் உதவி மூலம் விழாவன்று 19 வண்டிகளும், 22 ஜதை எருதுகளும் 10 கறவை எருமைகளும், 17 வெள்ளாட்டுப்பட்டியும் வழங்கப்பட்டன. பள்ளிக் கல்லூரி மாணவ -மாணவியருக்குப் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி ஓவியப்போட்டி ஆகியவை நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் கருத்தரங்க வழக்காடுமன்றம் ஆகியவைகளும் நடைபெற்றன.

### காடையாம்பட்டி

ஊராட்சி ஒன்றியத்தில் 24-1-82 அன்று விழா நடைபெற்றது. விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். விழாவில் கவியரங்கம், வழக்காடு மன்றம் சிறப்புக் கூட்டம்,பள்ளி மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நான்கு பள்ளிக் கட்டடங்களுக்கும், மூன்று கிராம மருந்தகங்களுக்கும், நான்கு தாய் - சேய் நல விடுதிக் கட்டடங்களுக்கும் பாரதியார் பெயரினைச் சூட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பள்ளி மாணவ மாணவியருக்குப்பேச்சுப்போட்டி பாட்டுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி ஆகியன நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. சுமார் 10,000 மக்கள் விழாவினைக் கண்டு இன்புற்றனர்.

### இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம்

27-1-82 அன்று விழா கொண்டாடப்பட்டது. விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள்கலந்து கொண்டார்கள். விழாவில் கவியரங்கம், கருத்தரங்கம், சிறப்புக் கூட்டங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சட்டமன்ற உறுப்பினர் திரு சிவப்பிரகாசம் எம். எல். ஏ. சேந்தமங்கலம் தொகுதி பாரதியார் படத்தைத் திறந்து வைத்தார்கள். மாணவ-மாணவியருக்குப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப் போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. ஊனமுற்றோருக்குக் கட்டுரைப் போட்டி வைக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. சுமார் 4,000 பேர்கள் விழாவினைக் அண்டு களித்தனர்.

### பெரியார் மாவட்டம்

மொடக்குறிச்சி ஒன்றியம் அவல்பூந்துறை பள்ளித் திடலில் 21-2-82 அன்று விழா கொண்டாடப்பட்டது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நினைவுப் பள்ளிக்கூடத்தைத் திறந்து வைத்து பேருரையாற்றினார்கள். அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்ட கருத்தரங்கமும் மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 3000-திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.



### அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்

இந்த ஒன்றியத்தில் 31-1-82ல் விழா சிறப்பாக நடை பெற்றது. இவ்விழாவில் மாண்புமிகுபோக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நினைவுப் பள்ளிக் கட்டடத்தையும் ஆசிரியைக் குடியிருப்பினையும் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். பட்டிமன்றமும், மாணவ - மாணவியரின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. கோபி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களும் விழாவில் கலந்து கொண்டார். பள்ளி மாணவ- மாணவியர்களுக்குப் பேச்சுப்போட்டி,பாட்டுப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகளாகப் பாரதியார் கவிதைப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. சுமார் 25000 மக்கள் விழாவுக்கு வந்திருந்தனர்.

### தர்மபுரி மாவட்டம்

தர்மபுரி ஊராட்சி ஒன்றியத்தில் 29-1-82 வின்று விழா நடைபெற்றது. தர்மபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். அரங்கநாதன் அவர்கள் பாரதியார் படத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள். விழாவில் பட்டிமன்றம், மாணவ-மாணவிகளுக்குப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. நடுப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடத்திற்குப் பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. 1200-க்கும் மேற்பட்ட மக்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

### பாப்பி ரெட்டி பாளையம்

இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 3-2-82-ல் விழா நடத்தப்பட்டது. மாணவ மாணவியருக்குப் போட்டிகள் நடத்தப்பட்டு மொத்தம் 145 பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் மாணவ மாணவிகளால் இசை, நாட்டியம் நாடக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு என். குப்புசாமி அவர்கள் தலைமை வகித்து விழாவினைச் சிறப்பித்தார்.

துள்ள உதவிகளுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இரும்பு உற்பத்தி ஆணைக் குழுத் தலைவர் திரு சமரப் பூங்காவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''எஃகு உற்பத்தியைப்பொறுத்த வரையில் நமது நிறுவனம் இந்த ஆண்டு 20 சதவீதம் உற்பத்திசெய்துள்ளது. விற்பனையும் 18 சதவீதம் அதிகமாகியுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் உற்பத்தியைப் பெருக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாகப் பட்டினம், பாரதீப் ஆகிய இடங்களிலும் இரும்பாலைகளை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.''

இவ்விழாவுக்குத் தலைமை யேற்றிருந்த மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு பேசுகையில், "சேலம் உருக்காலை அமைய வேண்டும் என்பதற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப் பேற்ற பிறகு 'எழுச்சிநாள்' கூட்டங்கள் நடத்திய நிகழ்ச்சிகளை" நினைவு கூர்ந்தார். மேலும் தொழிலமைச்சர் மத்திய அரசு தொழிலமைச்சரிடம் மூன்று வேண்டுகோள்களை விடுத்தார்.

''சேலம் உருக்காலை அமைவதற்காக இடம் கொடுத்தவர்களின் குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

''சேலம் உருக்காலையின் இப்போதைய அமைப்பின் இரண்டாவது கட்டப்பணிகளை நிறைவேற்றினால் தற்போதைய உற்பத்தி இருமடங்காகும். ஆகவே, மத்திய அரசு இதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

''சேலம் உருக்காலை என்று இப்பொழுது சொல்லப்பட்டா





லும் இது உருக்காலை என்பதை விட உருட்டாலை என்பதே பொருந்தும். எனவே இங்கு முன்பு திட்டமிட்டபடி கஞ்சமலை கனிமத்தைப் பயன்படுதகி உண்மையான உருக்காலையை உருவாக்க வேண்டும்.

''இப்பணிகளுக்குத் தமிழ்நாடு அரசு எல்ல வித உதவிகளையும் செய்யத் தயாராக உள்ளது'' என்றார்

சேலம் உருக்காலையை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து உரையாற்றிய மத்திய அரசின் மாண்புமிகு தொழிலமைச்சர் திரு என். டி. திவாரி அவர்கள், ஐம்பது கோடி ரூபாய் செலவிலான சேலம் உருக்காலைத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணியான விரிவாக்கத் திட்டம் ஆறாவது திட்டக்காலத்தில் நிறைவேற்றப் படும் என்பதைத் தெரிவித்தார். இவ்வுருக்காலையின் இரண்டாவது கட்ட விரிவாக்கத் திட்டத்திற்குத் தலைமையமைச்சர் திரு திருமதி இந்திராகாந்தி அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார் என்பதையும் அவர் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:

''சேலம் உருக்காலைத் திட்டம் போன்ற பல பணிகளுக்குத் தங்கள் நிலங்களைத் தந்தவர்களின் குடும்பங்களில் குடும்பத்திற்கு ஒருவருக்காவது அத்திட்டங்களில் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொள்கிறது.

''சேலம் உருக்காலையிலும் இக் கொள்கை பின்பற்றப்படும். அதே சமயத்தில் இங்கு இடம் கொடுத்த அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாத நிலையும் ஏற்படலாம். எனவே அவர்களுக்குத் தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும். மேலும் இந்த ஆலை அமைந்திட நிலம் அளித்தவர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தால், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து சேலம் உருக்காலையில் உற்பத்தியாகும், ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் ஓரளவு அளிக்கப்படும். அதனைப் பயன்படுத்தி அவர்கள் தொழில் தொடங்கலாம்.

''சேலம் உருக்காலையை முழுமையான இரும்பு தயாரிக்கும் ஆலையாக ஆக்க வேண்டும் என்று இங்கே எடுத்துரைக்கப்பட்டது. இது தொடர்பாக முன்பு தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இப்பொழுது நவீன தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது.



இப்பொழுது இரும்பு தயாரிப்பில் பல்வேறு நாடுகள் நவீன முறையைப் பின்பற்றி வருவதால் சேலம் திட்டம்பற்றி புதியதாகத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். கஞ்சமலையில் கிடைக்கும் இரும்புத் தாதுவைப் பயன்படுத்துவதுடன் நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் இரும்பு தயாரிப்புக்குப் பயன்படுத்துவது பற்றி புதிய திட்ட அறிக்கையில் இடம் பெற வேண்டும்''என்றார்.

முன்னதாக 'இயற்கையின் கோலங்கள்' என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தைத் தொழிலமைச்சர் திரு என். டி. திவாரி திறந்து வைத்தார். விழா முடிவில் சேலம் உருக்காலைத் திட்ட நிதித்துறை இயக்குநர் திரு சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

உற்பத்தித் திறன் ஆண்டில் தனது உற்பத்தித் திறனை மேலும் மேலும் பெருக்கி, நாட்டு மக்களின் நல்வாழ்வில் பங்கு பெற சேலம் உருக்காலை சூளுரை எடுத்துக் கொண்டது போல அன்றைய விழா நிகழ்ச்சிகள் விளங்கின.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




Licence No. TN/MS(C)/PP-23



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013 16-4-1982 75 காசு





…புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் …ள தலைமையில் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் … ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், சென்னை தேனாம்பேட்டை முதலி…டான் தோட்டத் திட்டப் பகுதியில் கட்டப்பட உள்ள குடியிருப்பு…ளை 16.3.82ல் துவக்கிவைத்தார்.



…புமிகு சட்டமன்றப் பேரவைத் …த் தலைவர் திரு பி. எச். … அவர்கள் தலைமையில், …புமிகு உள்ளாட்சித்துறை …ர் திரு ப. குழந்தைவேலு …நெல்லை மாவட்டத்தில் …யில் அமைக்கவிருக்கும் …த்திற்கு 27.3.82-ல் …டிக்கல் காட்டினார்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வாரிய நிருவாக அலுவலகக் கட்டடத்திற்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத் தலைவர் திரு எச். பி. எஸ். ஷெட்டி தலைமையில் 22.3.82-ல் அடிக்கல் காட்டினார்.





# கைத்தறித்தொழில் வளர்ச்சி பெற

## மாண்புமிகு முதல்வர்

சென்ற ஆண்டும் கைத்தறிப் பொருட்காட்சியைத் துவக்கி வைப்பதற்கு வாய்ப்புத் தந்தார்கள். இன்றும் அதே வாய்ப்பை எனக்குத் தந்திருக்கிறார்கள்.

எனக்கு முன்பு பேசியவர்கள் அனைவரும், இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இதை அரசியல் கூட்டமாக மாற்றி விடாமல், சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட விஷயங்களை மட்டும் எப்படிப் பேச வேண்டும் என்று எடுத்துக் காட்டும் வகையிலே பேசியமைக்கு நான் பாராட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு காரியம் ஏதாவது நடைபெற்றால் அதற்கு ஒரு காரணம் இருந்தாக வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றால் அதை ஒட்டிப் பல்வேறு பிரச்சினைகளுக்கு உதவி செய்கிறோம் என்ற பெருமை அதனுடன் தொக்கி உள்ளது.

நாட்டில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக நிறையப் பேர் பங்கு கொள்வது நெசவுத் தொழில்தான். அதை எண்ணிப் பார்த்து, உதவி செய்ய வேண்டிய நிலையிலிருக்கிறார்கள் நெசவாளர்கள் என்பதை எண்ணிப் பார்த்து-கைத்தறித் துணிகளை வாங்கும் நல்ல உள்ளம் படைத்த உங்கள் முன்னர் பேசுகிறேன்.

நெசவாளர் பற்றிப் பேசுகின்ற நாம் அவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை எப்படிப் பெருமையாக எண்ணி வருகிறோம் என்பதை அவர்களுக்குச் செய்கின்ற உதவியிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

நெசவாளர்கள் வாழ்வில் கஷ்டம் இல்லையா? தொல்லை இல்லையா? சிக்கல் இல்லையா? வேலையைச் செய்த பின்னர் அவர்களால் நிம்மதியாக வாழ முடிகிறதா என்றால் இல்லை என்ற பதிலே கிடைக்கும.

நெசவாளர்களுக்கு ஏதாவது நன்மை செய்ய நினைக்கும்போது அதற்குக் காரணமான அமரர் அண்ணா அவர்களைத்தான் எடுத்துக் காட்ட வேண்டி வருகிறது. நான் முதலில் குறிப்பிட்டதுபோல எந்தக் காரியம் செய்தாலும் அதற்கு அடிப்படைக் காரணம் இருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களுக்குக் கடமை ஆற்றும்போது அமரர் அண்ணா அவர்கள் செய்த பணியை நினைத்துப் பார்ப்பது கடமை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

பல வருடங்களுக்கு முன்பு புயல் வந்தபோது, கைத்தறி நெசவாளர்கள் தொல்லைப் பட்ட நேரத்தில்-25 ஆயிரருபாய் நிதி சேர்த்தார். அவர்களுக்குப் பணமாகக் கொடுக்காமல் ஆடைகளாக - கைத்தறி ஆடைகளாக அளித்தார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்ததுபோல். 25 ஆயிர ரூபாய்க்கும் கைத்தறி ஆடைகளை வாங்கி அந்த மக்களுக்குக் கொடுத்தார். அன்பளிப்பாகக் கொடுக்காமல் கடமையாகக் கருதிக் கொடுத்தார். அதே முறையில் கடமையாற்றுகின்ற விதத்தில் நெசவாளர்களுக்கு காணிக்கை கொடுக்கமுடிகிறது என்றால் அது அண்ணா அவர்கள் சொல்லிக் கொடுத்த பாடம்தான்.

எந்தக் காரியம் செய்தாலும் பல்வேறு நன்மைகள் கிடைக்கும் வகையில் பணியாற்ற வேண்டும்.

சாயத் தொழிற்சாலை அமைக்கப்படுவது குறித்து இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிற்சாலை மூலம் சாயம்மட்டும் கிடைக்கவில்லை. அதன் பின்

தமிழரசு
மலர்: 12 இதழ்: 20
16—4—1982
திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — சித்திரை 3

னால் நூற்றுக் கணக்கான பேர் வேலை பெறுகிறார்கள்.

துணிகளை, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பெட்டிகளைத் தயாரிக்கிறோம், பத்திரமாக அனுப்பி வைப்பதற்காக. அந்தப் பெட்டிகளை தமிழகத்தில் செய்ய முடியும். அந்த வேலையை ஊனமுற்றவர்களிடம் ஒப்படைத்தால் அவர்கள் வேலை வாய்ப்புப் பெற முடியும். ஊனமுற்றோர் நல்வாழ்வு பெற் முடியும்.

தமிழ்நாடு அரசு எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் அதன் அடிப்படையில் பல நோக்கங்கள் இருக்கின்றன என்பதைக் கூற விரும்புகிறேன்.

முன்பு, நெசவுத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் துன்பப்பட்டு சேலம் போன்ற இடங்களிலிருந்து சென்னை நோக்கியும் வேறு பல இடங்களுக்கும் சென்ற பழைய நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. குடும்பம் குடும்பமாக குழந்தை குட்டிகளுடன் தெருத் தெருவாக வேலை தேடி அலைந்தார்கள் அவர்கள். அவர்களுக்கு என்ன வேலை தெரியும்? கல் உடைக்கலாம்; மூட்டை சுமக்கலாம்; வீட்டு வேலை செய்யலாம். இவற்றைத் தவிர வேறு தொழில் செய்ய முடியுமா என்றால் முடியாது, அப்படியே முடியும் என்று வைத்துக் கொண்டாலும் படித்துப் பட்டம் பெற்றவர்களே வேலைக்கு அலையும் போது இவர்களுக்கு எப்படிக் கிடைக்கும்? இன்று நெசவாளர்கள் நிலை உயர்ந்திருக்கிறது என்றாலும் அவர்களது தேவை எல்லாம் பூர்த்தி ஆகிவிட்டது என்று கூற முடியாது. இன்னும் அவர்களுக்கு நிறையச் செய்ய வேண்டியுள்ளது.

கைத்தறியாளர்களுக்கு முக்கியமாக மூலப்பொருள் நூல். பஞ்சு விலை ஏறினால் நூல்விலை ஏறுகிறது; பஞ்சு விலை இறங்கும்போது நூல் விலை இறங்குவதில்லை. இதற்கு யார் காரணம்? இடையில் இருப்பவர்கள்தான். இதைத் தடுக்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன் தமிழ்நாட்டில் 5 லட்சத்து 56 ஆயிரம் கைத்தறிகள் இருந்தன. அவற்றில் 1 லட்சத்து 82 ஆயிரம் தறிகள் கூட்டுறவுத்துறையில் இருந்தன. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 32 லட்சத்து 73 ஆயிரம் தறிகள் ஏற்பட்டுள்ளன.

கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்தில் உள்ள தொழிலாளி இறந்து விட்டால் ரூ. 3 ஆயிரம் கொடுக்கப்படுகிறது. இது எதிர்காலத்தில் 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் ரூபாய் ஆக்கப்படலாம்.

1975-76-ல் கைத்தறி ஆடை கொள் முதல் ரூபாய் 13.72 கோடி; 1981-82 ல் ரூபாய் 37 கோடியாக உயர்ந்துள்ளது.

1977-78-ல் கைத்தறித் துணி உற்பத்தி 79.81 மில்லியன் மீட்டர் ஆகும். 1981-82-ல் அது 110மில்லியனாக உயர்ந்துள்ளது.

ஆதி திராவிட இனத்தவர்களுக்குக்கூட, இந்தத் தொழில் கற்றுத் தரப்படுகிறது. எந்த ஜாதியினரும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நிலை தமிழகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்ன தொழிலை இன்ன ஜாதியினர்தான் செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாது. முன்பு குலத்தொழில் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஜாதிப்பிரிவு தொழில்களை அடிமைப்படுத்தக் கூடாது. எனவே ஆதி திராவிட மக்களுக்குக் கைத்தறித் தொழிலில் வாய்ப்புத் தந்தால் அவர்களது வாழ்வு வளம்படும். அந்தச் சமுதாயம் மேன்மையுறும்.

இந்த நிலையை நாம் மாற்றா விட்டால் எதிர்காலத்தில் போராட்டம் குறையாது; பூசல்கள் மறையாது.

கைத்தறியாளர்களுக்கு போதுமான அளவு பணிகளை தமிழக அரசு ஆற்றி வருகிறது; ஆதரவு தருகிறது. காரணம் அவர்களுக்கு ஊக்கம் தருவதற்காக -நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்பதற்காக !

நாம் செய்து தரும் வசதிகள் போதவில்லை என்றால் எதிர்ப்புக் குரல் கொடுங்கள்; தவறுகளைச் சுட்டிக் காட்டுங்கள். அதைத் திருத்தமுயற்சிக்கிறோம்.

எட்டயபுரத்தில் 12 ஆயிரம் கதிர்கள் உள்ள நூற்பு ஆலையை உருவாக்குகிறோம் என்றால் அது பாரதி நூற்றாண்டுக்காக மட்டுமல்ல. அது - பின்தங்கிய பகுதியின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் அமையும் என்பதால் அதைச் செயல்படுத்த இருக்கிறோம்.

கடந்த 34 ஆண்டு சுதந்தர ஆட்சியில் நிறைவேறிய திட்டங்களையும் எங்களது 4½ ஆண்டு ஆட்சியில் நிறைவேறிய திட்டங்களையும் புள்ளி விவரமாகத் தயாரிக்கும்படி நான் கூறியுள்ளேன். கடந்த 30 ஆண்டுகளில் கிடைத்த வேலைவாய்ப்புகளை விட இந்த 4½ ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அதிகம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் புது விதமான -கண்ணைக் கவரத்தக்க வகையில் மட்டுமல்ல - நீண்ட காலம் பயன்படும் வகையில் துணிகளைத் தயாரிக்கிறார்கள். கைத்தறி ஆடைத் தயாரிப்பில் உறுதியான - சீக்கிரம் சாயம் விலகிப் போகாத தன்மைஇருக்க வேண்டும். அத்தகைய ஆடைகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் தட்டுப்பாடின்றிக் கிடைக்க விரைவில் **மூலப்பொருள் வங்கி ஒன்றை அமைக்க இருக்கிறோம்.**

**இதற்கென ஒரு வாரியத்தை உருவாக்க இருக்கிறோம்.**

அதன் வாயிலாக கைத்தறித் தொழில் வளர்ச்சியடையும்; பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

கைத்தறித் தொழில் இன்ன ஜாதியினருக்குத்தான் உரியது என்ற நிலை கூடாது. எங்கள் குலத்தொழில் என்ற நிலை எவருக்கும் இருக்கக் கூடாது. ஏற்ற தொழிலை எவரும் செய்யலாம். அந்த விததிலே கைத்தறித் தொழில் வாழ வேண்டும்; வளர வேண்டும்.

**சென்னையில், அகில இந்திய கைத்தறிப் பொருட்காட்சியை 9-4-82-ல் துவக்கி வைத்து**

### தாய்க்குலத்தின் உதவி



**நெசவுத் தொழில் இதுநாள் வரை நசித்துப்போகாமல் இருக்க-நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள்தான்; ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள்தான் மறவாமல் கைத்தறி ஆடைகளை வாங்குபவர்கள்! ஆகவே கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

# கைத்தறித் தொழில் மேம்பாட்டுக்கு அரசின் உதவிகள்!

## மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம்



**1981**-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இந்தியத் தலைமை அமைச்சரால் அறிவிக்கப்பட்ட துணிநூல் குறித்தபுதிய 20-அம்சத் திட்டத்தின் கீழ், கைத்தறிப் பிரிவிற்கு சிறப்பிடத்தைக் கொடுத்ததுடன் நாட்டின் துணித் தேவையை நிறைவு செய்வதில் கைத்தறித் துறைக்கு ஓர் உயர் முன்னுரிமையை அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இம்மாநிலத்தில் வேளாண்மைக்கு அடுத்த படியாக கைத்தறித் தொழில் ஒரு முக்கிய ஊரகத் தொழிலாக விளங்குவதால், மாநில அரசும் அதற்குரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. கைத்தறித் தொழிலுக்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில அரசு ரூ. 27.82 கோடி செலவிட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 84.58 கோடி அளவிற்கு உயர்ந்தது. இதிலிருந்து மாநில அரசு கைத்தறித் தொழிலுக்கு உயர் முன்னுரிமை அளிப்பது தெளிவாகும்.

கைத்தறித் துணி ஏற்றுமதி அதிகரித்துள்ளதால் அந்நியச் செலாவணியைப் பெற்று தரும் பிரிவுகளில் கைத்தறித் தொழிலும் ஒன்றாக விளங்குகிறது.



**கைத்தறித் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம்:**

தமிழகத்தில் உள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில், 2.89 இலட்சம் (அதாவது 51%) கைத்தறிகள் கூட்டுறவுச் சங்க அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு உள்ளன. இந்த 2.89 இலட்சம் தறிகள், 1,251 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன. கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரும் திட்டத்தின்படி தேசீய குறியளவான 60% க்கு பதில் ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் 67% அளவிற்கு கைத்தறிகளைக் கூட்டுறவின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

1981-82ஆம் ஆண்டில் 80 புதிய தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 5 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தொடங்குவதன் மூலம் 25,300 தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ்கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (1981-82) 31—12—1981 வரை 26,000 நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து விடுவிக்கப்பட்டு கூட்டுறவு அமைப்புக்குக் கொண்டு வரப்பட்டு உள்ளனர். அவர்கள் 64 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில், தறியில்லாத நெசவாளர்களின் நலனுக்காக 20 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இவற்றுள் 7 புதிய தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 7 00 ஆதிதிராவிடர் நெசவாளர்களின் நலனுக்கென்றே ஆரம்பிக்கப்பட்ட உள்ளன. இத்திட்டம் ஆதிதிராவிடர்களின் நலனுக்காகவும், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் பொருட்டு வரையறுக்கப்பட்ட தனித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

1980-81ம் ஆண்டில் கைத்தறித் துணி உற்பத்தி 103 மில்லியன் மீட்டராகும் 1981-82-ஆம் ஆண்டில் 31—12—81 வரை கைத்தறித்துணி உற்பத்தி 86 மில்லியன் மீட்டராகும். 1981-82 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 110 மில்லியன் மீட்டர் உற்பத்திக் குறியீட்டு அளவை முழுமையாக அடைய முடியும். 1982-83 ஆம் ஆண்டிற்கு 120 மில்லியன் மீட்டர் உற்பத்திக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரின் மாறிவரும் ஆர்வங்களுக்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும், புதிய



கைத்தறித் துணிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வளர்ந்து வரும் தேவைகளை ஈடு செய்யவும், கைத்தறி நெசவுத் தொழிலில் புதிய தொழில் முறைகளைக் கையாள வேண்டும். இதைத் கருத்தில் கொண்டு, தறிகளைப் புதுப்பிக்கவும் நவீனப் படுத்தவும் அல்லது புதிய நவீனக் கைத்தறிகளை வாங்கவும் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்கென்று, 1981-82ஆம் ஆண்டில் ரூ. 22.50இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் மூன்றில் ஒரு பங்கு உதவித் தொகையாகவும் மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும் வழங்கப்படுகிறது.

கைத்தறியில் புதிய தயாரிப்புகளையும் புதிய வடிவமைப்புகளையும் உருவாக்குவதற்கு இயலும் வகையில், கோ-ஆப்டெக்ஸ் இதுவரை மதுரை, திருச்சி, சேலம், கோவை மற்றும் கடைய நல்லூர் ஆகிய இடங்களில் 5 வடிவமைப்பு பணிநிலையங்களை அமைத்துள்ளது. இதற்காக அரசு மொத்தம் ரூ. 17.50 இலட்சம் நிதியுதவி வழங்கியது. மேற்கண்ட வடிவமைப்பு பணிநிலையங்கள் ஆண்டுக்கு 1,100 புதிய வடிவமைப்புகளை உருவாக்கி அவற்றை தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றன. மேற்படி வடிவமைப்புகள் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 8 கோடி அளவிற்கு உற்பத்தி பெருகி உள்ளது.

இதைத்தவிர எட்டையபுரத்தில் 12,000 கதிர் திறன் கொண்ட புதிய கூட்டுறவு நூற்பாலை ஒன்று மகாகவி பாரதியாரின் நினைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் எட்டையபுரத்தில் கொண்டாடப்பட்ட பாரதி நூற்றாண்டு விழாவின் அங்கமாக ஆரம்பிக்க இருக்கும் பாரதி கூட்டுறவு நூற்பாலைக்கு 18.12.1981 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதாலும், ஏற்கெனவே இயங்கி வரும் நூற்பாலைகளை விரிவுபடுத்துவதனாலும் கூடுதலாக 3,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் சிட்ட நூல்களை கோ-ஆப்டெக்ஸ் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 22 நூல் விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

அண்மையில் தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் மோட்டா ரக நூல்கள், குறிப்பாக 20 நெ. மற்றும் 2/17 நெ. ரக நூல்கள் கிடைக்காமல் அவதியுற்ற பொழுது ,தேசிய டஞ்சாலை நிறுவனத்தின் ஆலைகள் மூலமாக நூலினைப் பெற்று அவர்களுக்குக் கிடைக்கச் செய்ததன் மூலம் மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டது. எதிர் காலத்தில் நூல் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுப்பதற்காக அரசு ''மூலப்பொருள் வங்கி'' ஒன்று அமைக்க உத்தேசித்துள்ளது. இவ்வங்கி மத்திய அரசும் மாநில அரசும் சம விகிதத்தில் நிதியுதவியைக் கொண்டு அமைக்கப்படவிருக்கிறது. ஆரம்பத்தில் மத்திய அரசு ரூ. 50 இலட்சம் அளவிற்கு நிதியுதவியை அளிக்க முன் வந்துள்ளது. இருப்பினும் மாநில அரசு இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் 1982-83ஆம் ஆண்டு இந்த மூலப் பொருள் வங்கியை ஆரம்பிக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது

**கைத்தறித் தொழிலுக்கு விற்பனை வசதி செய்தல்:**

கோ-ஆப்டெக்ஸ் என்றழைக்கப்படும் தலைமைச் சங்கமான தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அதனுடன் இணைந்த 1,251 தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்களின் உற்பத்தியில் 50% அளவிற்கு விற்பனை வசதி செய்து கொடுக்கிறது.

**சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்**


இத்திட்டத்தின் கீழ் சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்குவதற்காக 1981-82ஆம் ஆண்டில் ரூ. 0.11 இலட்சத் தொகையை அரசு ஒதுக்கியுள்ளது. 1982-83ஆம் ஆண்டிலும் அத்திட்டத்திற்கு இதே அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டிலும் சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நலத் திட்டங்கள்**

சேமிப்பு பாதுகாப்புத் திட்டம்:-கூட்டுறவு அமைப்பின் கீழ் செயலாற்றி வரும் கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு தமிழ்நாட்டில் ''கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு, பாதுகாப்புத் திட்டம்'' என்ற பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 67,000 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்**

1962-ம் ஆண்டிற்குப் பிறகு நிறுத்தப் பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் மீண்டும் புதுப்பிக்சப்பட்டு1979-80 ஆம் ஆண்டிலிருந்து புதிநாக மாற்றி அமைக்கப்பட்ட வீட்டு வசதித் திட்டமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அரசு அளிக்கும் ரூ. 1000 உதவித்தொகையையும், வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகம் அதன் விதிமுறைப்படி அளிக்கும் கடனையும் பயன்படுத்தி 1982-83ஆம் ஆண்டில் 1,000 வீடுகள் கட்டப்படும்.



**கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்**

மத்திய அரசின் நிதியுதவியுடன் இம் மாநிலத்தில் நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும் இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு வகுத்துள்ளது. சிவராமன் குழுவின் பரிந்துரையின் பேரில் இத்திட்டங்கள் தொடங்கப்பட்டன.

**சேலத்தில் கைத்தறிகளுக்குப் பாவு கஞ்சி போடும் எந்திரம்**

உற்பத்தியைப் பல்திறப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, கைத்தறிகளுக்குக் கஞ்சி போட்ட பாவுகள் வழங்குவதற்காக அரசிடமிருந்து ரூ. 21.00 இலட்சம் நிதியுதவி பெற்று, சேலம் கூட்டுறவு நூற்பாலையில் பாவு கஞ்சி போடும் எந்திரம் ஒன்று நிறுவப் பட்டுள்ளது.

**கண்ணைக் கவரும் கைத்தறி ஆடை**

நூல்-எப்போதும் சிக்கலுக்கு உள்ளாவதுதான். நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதுதான். பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவதுதான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்கும் வாய்ப்பும் வசதியும், விஞ்ஞானக் கருவிகளின் உதவியும் கிடைக்காத போதும் கூட, நேர்த்தியான- மெச்சத்தக்க துணிகளை கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்.

ஆலைத்துணியில்தான் கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப் பட்டது. ஆனால் இப்போது கைத்தறியில் வேகமாகத் கண்ணைக் கவரும் ஆடைகள் தயாராகின்றன.

—பேரறிஞர் அண்ணா

**நவீன சாயச்சாலை**

அரசின் நிதி உதவியுடன் மொத்தம் ரூ. 90 இலட்சம் செலவில் சேலம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர் திருச்சிராப் பள்ளி, ஈரோடு, மதுரை ஆகிய இடங்களில் நவீன சாயச்சாலைகளை நிறுவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம், வேலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நவீனச்சாயச்சாலைகள் ஏற்கனவே செயல்படத் துவங்கி விட்டன. இவைகள் சேலம், வேலூர், ஸ்ரீவில்லிபுத்தூர், பேட்டை கூட்டுறவு நூற்பாலைகளின் வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. மற்ற நவீனச் சாலைகள் விரைவில் முடிக்கப்பட்டு செயல்படத்தொடங்கும்.

**தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்.**

காஞ்சிபுரம் தமிழ்நாடு சரிகை நிறுவனம் இரண்டாவது பணி முறையைக் கொண்டு வந்தது. மாதம் ஒன்றுக்குத் தங்கச் சரிகை உற்பத்தியை 500 மார்க்குகளிலிருந்து 1000 மார்க்குகளாக அதிகரித்துள்ளது. இந்நிறுவனம் உற்பத்தி செய்த சரிகை முழுவதும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு விநியோகம் செய்யப் பட்டு வருகின்றது. தமிழ்நாடு சரிகை நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்க இயலும் வகையில் 1981-82ஆம் ஆண்டில் மூலதனப் பங்கு கடன் வகையில் ரூ. 4.00 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

**மாநில கைத்தறி வாரியம் அமைத்தல்**

தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வேறு விதித்துறைகள்) சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று சட்டமாகிவிட்டது.

மேற்படி புதிய சட்டம் செயல்படுத் தப்படுவதைக் கவனிக்கவும், தனியார்துறையில் உள்ள நெசவாளர்களுக்குத் தேவையான உதவிகளை அளிக்கும் பொருட்டும், அரசு மாநில கைத்தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்தி அதற்குப் போதுமான அதிகாரங்கள் வழங்க ஆலோசித்து வருகின்றது.

[தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்கப் பட்ட கைத்தறி மற்றும் துணிநூலுக்கான 1982-83-ம் ஆண்டு கொள்கையும், திட்டங்களும் பற்றிய கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப் பட்டது].



# பெண்களின் முன்னேற்றத்திற்கு கல்வியே அடித்தளம்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

டாக்டர் கா. காளிமுத்து

இங்கு இந்த நல்ல விழாவிலே பங்கேற்க வைத்துப் பாசம் மிகுந்த வரவேற்பையும் எனக்கு வழங்கியிருக்கின்றீர்கள்.

முதன் முதலில் வரவேற்றுப் பேசிய பேராசிரியை வசந்திதேவி அவர்கள் இங்கே இந்த மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் ஒரு வருத்தமும் கலந்திருக்கிறது என்று சொல்லி, இறுதியாண்டு படிக்கின்ற மாணவச் செல்வங்கள் இந்தக் கல்லூரியை விட்டு வெளியேறப் போகிறார்கள் என்றும், அவர்களை இன்னும் பயமுறுத்துவதைப்போல, என்னென்ன அவர்கள் துன்பப்படப் போகிறார்களோ என்றெல்லாம்கூட, அவர்கள் தாயன்போடு நெஞ்சு நெகிழச் சொன்னார்கள்.

வெளி உலகத்திலே நான்கு சுவர்களுக்குள்ளே வாழ்க்கை நடத்துகின்ற பெண்கள் அஞ்சி அஞ்சித்தான் வாழவேண்டும் என்கின்ற நிலைமை இனிமேல் நிச்சயமாக இராது. தமிழகத்திலேயே அத்தகைய மறுமலர்ச்சி உருவாகிக் கொண்டிருக்கிறது. மறுமலர்ச்சி என்பது மட்டும் அல்ல, பெரும்பாலும் வீட்டிலே பெண்களைப் பார்த்து ஆண்கள்தான் பயப்படுகின்றார்கள் என்கின்ற அளவிற்கு நிலைமை இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ஒருவன் அயர்ந்து உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறான். பக்கத்திலே இருக்கின்ற அவனுடைய நண்பன், ''என்ன நீண்ட நேரமாய் யோசிக்கிறாய்?'' என்று கேட்கிறான். இவன் சொல்லுகிறான், 'எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. காட்டிலே சிங்கத்தைப் பார்த்துக் கரடி பயப்படுகிறது; கரடியைப் பார்த்து ஓநாய் பயப்படுகிறது; ஓநாயைப் பார்த்து நாய் பயப்படுகிறது; நாயைப் பார்த்துப் பூனை பயப்படுகிறது; பூனையைப் பார்த்து எலி பயப்படுகிறது; எலியைப் பார்த்து என் மனைவி பயப்படுகிறாள்; என் மனைவியைப் பார்த்து நான் பயப்படுகிறேன், ஆகவே என்ன செய்வது என்று புரியவில்லை!'' என்று சொல்கிறான். ஆகவே, வேடிக்கையாகச் சொன்னாலும், நான்கு சுவர்களுக்குள்ளே நடைபெறுகின்ற இல்லறத்திற்கு ஆண் தலைமை ஏற்க முடியாது. அந்த இல்லறத்தினுடைய தலைவியாக விளங்கக்கூடிய உயர்ந்த நிலையில் இருப்பவள் பெண்தான். ஆகையால் முறையாகக் குடும்பத்தை நடத்திச் செல்லுகின்ற ஆற்றல், திறமை இவைகளைப் பெற்றிருப்பவர்கள் பெண்கள் என்பதை நீண்ட நெடுங்காலமாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வைகறையிலே தொடங்கி, நள்ளிரவு மட்டும் ஒரு குடும்பத் தலைவியினுடைய கடமை எவ்வளவு இருக்கிறது என்பதைக் ''குடும்ப விளக்கு'' என்னும் நூலின் வாயிலாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இன்று ''பெண் கல்வி'' என்ற தலைப்பினை எனக்குக் கொடுத்துப் பேசச் செல்வியிருக்கிறார்கள். பெண்கள் கல்லூரியில் வந்து ஒருவன் பெண் கல்வி தேவையில்லை என்று சொல்லிவிட்டு, அதுவும் கராத்தே வேறு படிக்கின்றீர்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமையில் பேசிவிட்டுச் செல்ல முடியாது. ஆனால், பெண் கல்வி என்பதை மறுக்கின்ற பழைமைச் சித்தாந்தத்திலே ஊறிப்போனவர்களுக்குத்தான் அத்தகைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமே தவிர, இன்றைக்கு வளர்ந்துகொண்டிருக்கின்ற சமுதாயத்திலே பெண் கல்வி தேவை என்பது எடுத்துச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய அளவிற்கு நிச்சயமாக, நிலைமை இல்லை என்பதை நான் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பல்வேறு துறைகளிலும் நீங்கள் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை கல்லூரி முதல்வர் அவர்கள் அறிக்கை வாசிக்கும்பொழுது தெரிவித்தார்கள். நெய்வேலியில் போய் நிலக்கரி வியாபாரம் செய்வது போல, பெண் கல்வி வளர்ந்து, தழைத்து, ஓங்கி இருக்கின்ற ஒரு கல்லூரியில், பெண் கல்வி தேவை என்பதை எடுத்துச் சொல்லுகின்ற அவசியம் இப்போது இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால், பெண்ணுக்குக் கல்வி தேவை என்று சொல்லுகின்ற போது அது ஏதோ வேலை வாய்ப்புக்காக— அலுவல் பார்ப்பதற்காக என்று மட்டுமே குறிப்பிட்டுச் சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. அறிவு என்பது ஆண்களுக்கு ஏன் தேவை என்று சொல்லுகிறோமோ, கல்வி என்பது அதனுடைய குறிக்கோளாக, நோக்கமாக எதைக் குறிப்பிடுகிறோமோ, அந்த நோக்கத்துடன்தான் பெண்களுக்கும் தேவை என்பதை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

பழம் வேண்டுமென்பதற்காகவும், நிழல் தருவதற்காகவும் மரம் பயன்படலாம். ஆனால் அதற்காக அலுவல் பார்ப்பதற்காக மட்டுமே கல்வியின் நோக்கம் இருந்துவிடக் கூடாது. பெண்கள் என்றால் சமுதாயத்தின் பாதிக்கும் மேற்பட்ட பகுதி. ஆகப் பாதிக்கு மேற்பட்ட பகுதியைப் பாதிப்பிற்கு ஆளாக்கி விட்டுச் ''சமுதாயம் முன்னேறவில்லை, முன்னேறவில்லை என்று வருத்தப்பட்டுப் பயனில்லை. வேரைக்கிள்ளி வெளியே எறிந்து விட்டுப் பச்சிலை வளர்வதற்கு என்ன பன்னீரைத் தெளித்தாலும், நிச்சயமாக வளராது. அந்த வகையில்தான் சமுதாய முன்னேற்றம் என்பது பெண்களுக்கும் சேர்த்து முன்னேறுகின்ற அந்த முன்னேற்றத்தைத்தான் குறிக்கக்கூடுமே தவிர வாய்விட்டு எண்ணக் கூடிய சிலபேர், ஆண்கள் முன்னேறிவிட்டால் அது சமுதாய முன்னேற்றம் என்று கூறுவதைக் குறிக்காது.

ஒன்றை நான் தெளிவாக்க விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி ஒரு கருத்தைச் சொல்லுவார்கள். பெண்கள் முன்னேற்றம், பெண்கள் விடுதலை என்பவை ஆண்களை நம்பி நீங்கள் முன்னேறலாம் என்று தயவுசெய்து கருதாதீர்கள். என்றைக்கும் பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடையாது. ஆண் வர்க்கத்தாலே பெண்களுக்கு முன்னேற்றம் நிச்சயம் கிடையாது. ஆகவே, பெண்கள் முன்னேறவேண்டுமானால், அவர்கள் தங்களைத் தாங்களே முன்னேற்றிக் கொள்ள வேண்டும். தாங்கள் உயர வேண்டும். ஆணுக்குச் சமமாக வாழ வேண்டும் என்கின்ற உரிமை உணர்வை அவர்கள் பெற்று முன்னேற வேண்டும். ஆனால், அதே உணர்வைப் பெறுவதற்கு இந்தக் கல்வி நிச்சயமாகப் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற சமுதாய நிலைமையால் எப்பேர்ப்பட்ட வேதனைக்குப் பெண்குலம் பல நேரத்திலே ஆளாக வேண்டியிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கி



றோம். வரதட்சணைக் கொடுமை, திருமணத்திற்குப் பிறகு அது வராததட்சணை என்று கருதும்போது பெண்களைக் கொடுமைப்படுத்துகின்ற நிலைமையை இன்று சமுதாயத்தில் நாம் காணுகின்றோம் நான் ஒரு புள்ளி விவரத்தைப் படித்துப் பார்த்தேன் 1973-ஆம் ஆண்டில் இந்தியாவில் வரதட்சணைக் கொடுமை காரணமாகத் தற்கொலை செய்து கொண்டு இறந்த பெண்களின் எண்ணிக்கை 37.57 சதவிகிதம். பெண்களைப் பாராட்டுவார்கள், புகழ்வார்கள், போற்றுவார்கள். கல்விக்கு அதிபதியான கலைமகள் பெண்தானே என்று சொல்லுவார்கள். எதையும் பூமாதேவி போலப் பொறுமையோடு இருக்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டுவார்கள். மறைந்து விட்ட ஷாஜகான் அவர்கள் எப்படி மும்தாஜ் இறந்தவுடனே, உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைக் கட்டி முடித்தானோ அதைப்போல் பெண்களுக்குப் பெருமையும் சேர்ப்பார்கள். சில நேரத்தில் உயிரோடு அனார்கலிக்குச் சமாதி வைத்ததுபோல் சமாதியும் வைப்பார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையில் பெண் குலம் தன்னை முன்னேற்றிக் கொள்ளுகிறது. தன்னுடைய நிலைமையை எண்ணிப்பார்த்து, அது வாழ்வில் உயர வேண்டும்.

ஆடை அணிகலன்களும், ஆசைக்கு வாசமலர் தேடுவதும், ஆடவருக்குத் தேடிக் கொடுப்பதும் அஞ்சுவதும், நாணுவதும், ஆமையைப் போல வாழ்வதும் கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம் மானிடக் கூட்டத்தின் வலிவற்ற ஒரு பகுதி என்று உள்ள அந்த எண்ணப் போக்கை மாற்றிக் காட்டி சமுதாயத்தின் புகழ்மிக்க இடத்தை— பெருமைமிக்க இடத்தைப் பெண்குலம் பெற வேண்டும். அப்படிப் பெறுவதற்கு வழிகாட்டக் கூடிய பெருமக்கள் இங்குப் பேராசிரியர்களாகப் பணியாற்றுகின்றார்கள்.

நல்ல கல்வியை-பண்புள்ள கல்வியை நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். கற்றுக் கொண்டு இருக்கின்றீர்கள். அது உங்களது எதிர்காலத்திற்குப் பயன்படும் என்கிற நம்பிக்கையை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு நீண்ட நேரம் பேச வேண்டும் என்ற உணர்வு உந்தினாலும் வாய்ப்புக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு கடமைகளுக்கிடையே சிக்கிக் கொண்டு இருக்கின்ற காரணத்தினால் உங்கட்கு வாழ்த்தைக் கூறுகின்றேன்.

அரசியல் சக்தி, சமுதாயத்தை வாழ வைக்கக்கூடிய ஒரு சக்தி என்பதனை நான் தெரிவித்து அந்தச் சக்தியைப் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, பெண் கல்வி வாழ, பெண்கள் சமுதாயம் முன்னேற இவ்வரசு நிச்சயமாகத் துணைபுரியும்; பெண்களுக்காக ஒரு பல்கலைக் கழகத்தையே நிறுவுவதற்கும் அறிவிப்பினை அரசாங்கம் தெரிவித்திருக்கிறது என்பதை உங்களுக்கு நினைவூட்டி இந்த நல்ல வாய்ப்பைத் தந்த கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், பேராசிரியர் பெருமக்களுக்கும் மாணவத் தங்கங்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.


[மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் எம்.வி. முத்தையா பிள்ளை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், கல்லூரி முதல்வர் டாக்டர் சி. பார்வதி அவர்கள் தலைமையில் 15-2-82-ல் ஆற்றிய உரையிலிருந்து.]

## ஆலயப் பணியாளர்களுக்குப் புதிய சலுகைகள்

**250** ரூபாயும் அதற்கு மேலும் ஊதியம் பெறும் ஆலயப் பணியாளர்களுக்குக் குறைந்த அளவு 10 வருடங்கள் பணிக்கால பூர்த்தியான பிறகு, பணிக்காலம் 15 ஆண்டுகளாவது எஞ்சியிருக்கும் நிலையில், வீடுகட்டுவதற்கு முன்பணம் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அதே போன்று 250 ரூபாய்க்குக் குறைவாக உள்ள குறைந்த அளவு ஊதியம் பெறுபவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட பணிக்கால நிபந்தனைக்கு உட்பட்டு 5 ஆயிரம் ரூபாயும் அவர்கள் பணிபுரியும் ஆலயத்தின் நிதி நிலைமைகளை அனுசரித்து வழங்கப்படும்.

நிதி வசதி உள்ள ஆலயங்களில் 250 ரூபாயும் அதற்கு மேலும் ஊதியம் பெறும் நிரந்தரமான பணியாளர்களுக்குத் தனது திருமணத்திற்கோ. அல்லது மகன் அல்லது மகள் திருமணத்திற்கோ உதவி அளிக்கப்படும். திருமணம் செய்து கொள்பவர் பெண்ணாயிருந்தால் 1,500 ரூபாயும். ஆணாக இருந்தால் 1000 ரூபாயும் முன்பணமாகக் கொடுக்கப்படும். அதுபோல் 250 ரூபாய்க்குக் கீழ் ஊதியம் பெறும் நிரந்தரப் பணியாளர்களுக்குத் தனது திருமணத்திற்கோ அல்லது மகன் அல்லது மகள் திருமணத்திற்கோ 1000 ரூபாய் முன்பணமாகக் கொடுக்கப்படும்.

தற்போது ஆலயப் பணியாளர்களுக்கு 22 பணிநாட்களுக்கு 1 நாள் மட்டும் 'ஈட்டிய விடுப்பு' கொடுக்கப்பட்டு வருகிறது. இதனை மாற்றி அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல, நிரந்தர ஆலயப் பணியாளர்களுக்கு 11 பணிநாட்களுக்கு 1 நாள் ஈட்டிய விடுப்பும், அதிக அளவாக 180 நாட்கள் ஈட்டிய விடுப்பு சேமிக்கவும். அவ்வாறே தற்காலிகப் பணியாளர்களுக்கு 22 நாட்களுக்கு 1 நாள் ஈட்டிய விடுப்பும் அதிக அளவாக 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு சேமிக்கவும் அனுமதிக்கப்படும். மருத்துவச் சான்றிதழ் பேரில் 'ஈட்டாத விடுப்பு' அரசு ஊழியர்களுக்கு உள்ளதைப் போல் கொடுக்கப்படும். இத்தகவலைச் சட்டசபையில் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்கள்.



வளரும் தமிழகம்

# தொழில்கள் வளர துணை புரிவோம்!

### மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு

படித்து முடித்து விட்டு வேலை வாய்ப்பின்றி வாடிடும் இளைஞர்கள், உடலில் வலுவும், உள்ளத்தில் தெம்பும், உழைக்க ஆர்வமும் கொண்டிருந்தும் பணிகள் கிட்டாமல் மனம் குமுறும் வாலிபர்கள் வேலையின்மை, வறுமை ஆகியனவற்றால் பொறுமை இழந்து, குமுறும் நெஞ்சங்களுக்குச் சொந்தக்காரர்களாய் மாறுவதால் எழும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள், ஆகியனவற்றை 'வேகமான தொழிற்சாலைகளின் பெருக்கத்தால்மட்டுமே சமாளிக்க முடியும் என்பதைத் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு உரிய முறையில் கவனத்தில் கொண்டுள்ளது.

1977-க்குப் பின்னால் தமிழகம் தொழில் துறையில் சீரான - விரைவான வளர்ச்சியைப் பெற்று வருகிறது என்பதைப் பல்வேறு சான்றுகளால் எடுத்துரைக்கலாம். 1977-ல் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை சுமார் 8,000 ஆக இருந்தது; 1981ல் சுமார் 10,000 ஆக உயர்ந்துள்ளது. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மின் சக்தியின் அளவு 1977ல் சுமார் 3,000 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது இப்போது 4,000 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரித்துள்ளது. பதிவு பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 1980-81ல் சுமார் 5 இலட்சமாக இருந்தது தற்போது 5.5 இலட்சமாக உயர்ந்துள்ளது. நிரந்தரப்பதிவு பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை கடந்த நான்கு ஆண்டுகளில் ஏறத்தாழ 100 சதவீதம் உயர்ந்துள்ளது. 1987-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரை 19 ஆயிரம் சிறுதொழில்களுக்கு நிரந்தரப் பதிவு கொடுக்கப்பட்டது. இது 1981-ஆம் ஆண்டு மே திங்கள் வரை 37 ஆயிரமாக உயர்ந்துள்ளது. 1977க்குப் பின் தொழில் உற்பத்தி வளர்ச்சி இந்தியா முழுவதும் 5.5 சதவீதமாக இருக்க, தமிழகத்தினுடைய உற்பத்தி 10. 5 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பின் தங்கிய-பகுதிகளில் தொழில் துவங்க வழங்கப்படும் மைய அரசின் மூலதன மானியத்தைப் ( Capital-Investment Subsidy ) பெறுவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. ஐ.டி.பி.ஐ. (Industrial Development Bank of India) என்னும் மைய அரசின் தொழில் வளர்ச்சி வங்கி வழங்கிய தொழில்களுக்கான மொத்தக் கடன் ஒதுக்கீட்டிலும் சுமார் 17 சதவீதம் பெற்று இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது. தமிழகத்தில் வேகமான தொழில் வளர்ச்சிக்கு இவை அடையாளங்கள்.

தொழில்கள் வளர அடிப்படை வசதிகள் ஆதாரமானவை என்பதை அரசு உணர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (Tamil Nadu Industrial Investment Corporation) என்னும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தொழில்களுக்குக் கடன்கள் வழங்குவதில் வேகமும், விரைவும் காட்டி அதிக தொழில்களுக்குக் கடன் வழங்கி வருகிறது. கடன் வழங்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாவட்டக் கிளைகள் அளவிலேயே சுமார் ஒரு லட்சம் வரை கடன் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 'சிப்காட் (State Industries Promotion Corporation of Tamil Nadu ) என்னும் தமிழக தொழில் மேம்பாட்டுக் கழகம் சுமார் 8 மாவட்டங்களில் தொழில் இணையங்களை சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்புகளில் உண்டாக்கி நடவடிக்கை எடுத்து வருகிறது. வெளிநாடுகளில் வாழும் வசதிமிக்க இந்தியர்களின் மூலதனத்தைத் தமிழகத்தில் கொண்டு வந்து முதலீடு செய்ய, புதிய பிரிவு ஒன்று ( Sipcot )-ல் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

'டிட்கோ' எனும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ,பொதுத் துறையிலும், கூட்டுத்துறையிலும் பல தொழில்களை நிறுவி வருகிறது. சுமார் 18க்கும் மேற்பட்ட புதிய கூட்டுத் தொழில்கள் ரூபாய் 170 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட் இருக்கிறது. சுமார் ஒன்றரை ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட உளுந்தூர்பேட்டை கூட்டுறவுசர்க்கரை ஆலை, அரியலூர் சிமெண்ட் ஆலை, ஆலங்குளம் ஆஸ்பெஸ்டாஸ் ஆலை, தூத்துக்குடி ஆல்காலிக் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை - இவைகள் பொதுத்துறையின் தொழில் வேகத்திற்குச் சான்றுகள். பொதுத்துறை, கூட்டுத் துறை, கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் பல, [illegible]



# இந்த இதழுடன் இலவச இணைப்பு

## முதல்வரின் உரைத் தொகுப்பு

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரைகளின் தொகுப்பு.)

நீங்கி இலாபத்தில் நடைபோடத் துவங்கி உள்ளன.

''வெட்டுக்கனிகள் செய்து தங்கம்முதலாம்,
வேறுபல பொருளும் குடைந்தெடுப்போம்''

என்ற பாரதியின் கனவை நனவாக்கப் பூமித் தாயின் மடியில் புதைந்து கிடக்கும் தங்கம், ஆபரணக் கற்கள் போன்ற கணக்கற்ற கனிமச் செல்வங்களை ஆய்வு செய்து கண்டுபிடித்து வெட்டியெடுக்க உதவிட தனியான இயக்குனரகம் ( Directorate of Geology ) ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனியார்கள், பெரும் லாபம் பெற உதவிய கருப்புக்கல் ( Black Granite ) போன்ற கனிமங்கள் 'டாமின்' ( Tamil Nadu Minerals Ltd. ) என்னும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் இவ்வரசு பொறுப்பேற்ற பின் ஏற்படுத்தப்பட்டு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. அரசுக்கும் இலாபம் கிட்டுகிறது. அதேபோல், சேலம் மாவட்டப் பகுதியில் கிடைக்கும் மாக்னசைட் என்கிற கனிமத்தை வெட்டி யெடுத்து, புதியதாக ஏற்படுத்தப்பட்ட 'டான்மேக்' (Tamil Nadu Magnesite Limited) என்கிற தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் மூலம், பெரும் லாபத்தை அரசு பெற்று வருகிறது. எலக்ட்ரானிக் தொழில்களை ஊக்குவிக்க 'எல்காட் (Tamil Nadu Electronics Corporation Ltd.) என்னும் தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் ஒன்று புதியதாக நிறுவப்பட்டுள்ளது. தோல் பொருட்கள் உற்பத்திக்கும் ஏற்றுமதிக்கும் தமிழ்நாடு தோல் நிறுவனம் (Tamil Nadu Leather Corporation) என்னும் நிறுவனம் இவ்வாண்டு தோற்றுவிக்கப்படுகிறது.

தொழில் வளம் பெருக்கிட மாநில அளவில் தொழில் அதிபர்கள், வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்றும் அமைத்திட உள்ளோம்.

அரசுத் துறைகளின் மூலமாக மட்டுமின்றி தனியார்களுக்கும் பல்வேறு விதமான அடிப்படை வாய்ப்பு உண்டாக்கித் தரப்படுகின்றன. பின் தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் புதுத் தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ரூபாய் 50 இலட்சத்தில் இருந்து ரூபாய் ஒரு கோடியாகவும், விரிவாக்கத்திற்கு ரூ. 15 இலட்சத்திலிருந்து 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மின்னணு ( Electronics ), மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ( Drugs and Pharmaceuticals ) மற்றும் மோட்டார் வாகன உபரித் தொழில்கள் ( Automobile ancillaries ) தமிழகத்தில் எந்தப் பகுதியில் துவங்கினாலும் 10 சதவீத மூலதன மானியம் முதல் முறையாக, இந்திய நாட்டின் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இச்சலுகை அளிக்கப்படுகிறது. தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாக மாநில அரசே 24 தாலுக்காக்களை அறிவித்து இருக்கிறது. இன்னும் 6 தாலுக்காக்களையும் அறிவிக்க இருக்கிறது. இப்பகுதிகளில் சிறிய தொழில்களுக்காக வழங்கப்பட்ட வசதிகள், பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கும் சமீபத்தில் விரிவாக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி, கடலூர் ஆகிய ஐந்து தொழில் இணையங்களில் தொடங்கப்படும் புதிய தொழில்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மின்வெட்டு இல்லையென்று இந்தியாவில் இவ்வசதியை அறிவித்துள்ள இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு தான். தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் அடிப்படை என்பதை உணர்ந்த இந்த அரசு சுமார் 1200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனல், புனல் மின் உற்பத்தி நிலையங்களை விரிவாக்க -புதிதாக உண்டாக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரின் ஆலோசனைப்படி வட மாநிலங்களில் தொழில் அதிபர்களைச் சந்தித்து-தரப்படும் வசதிகள் விளக்கப்பட்டபோது, பலர் தொழில் துவங்க முன்வந்த வண்ணம் உள்ளனர்.

''பட்டினில் ஆடையும்,
பஞ்சில் உடையும் பண்ணி
மலைகளென வீதி குவிப்போம்''

என்ற பாரதியின் எண்ணப்படி சுமார் 35 கோடி ரூபாய் அளவில் புதிய நூற்பாலைகள், நூற்பாலை விரிவாக்கங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ''ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்'' என்ற பாரதியின் எண்ணப்படி இந்தியாவிற்கே முன் மாதிரியாக சுமார் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் செய்தித்தாள் காகிதஆலை தமிழகத்திற்கு புகழும், வளமும் சேர்க்கும் .1977 முதல் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 160 தொழில் உரிமங்கள் ( Industrial Licences ) பெறப்பட்டுள்ளன என்பது தமிழகத்திற்கு இனிக்கும் செய்தியாகும். சர்க்கரை ஆலைகள், சிமிண்ட் ஆலைகள், நூற்பாலைகள், மின்னணுத் தொழிற்சாலைகள், இரசாயன தொழிற்சாலைகள் ஆகியன வேகமாய் உருவாக்கப்பட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. சிட்கோ-நிறுவனம் சிறு தொழில்கள் பெருகிடப் பணிசெய்து வருகிறது.

தஞ்சைத் தரணியில் வேதாரண்யம் பகுதியில் இருக்கிற எண்ணெய்க் கிணறுகள் இந்தியா முழுமைக்கும் இனிக்கும் செய்தியாகும். ஒரு மாநில அரசு எவ்வளவு பெரு முயற்சி எடுத்துக் கொண்டாலும், பொதுத் துறை. கூட்டுத் துறை, கூட்டுறவுத் துறை, தனியார் துறை இப்படி பல்வேறு துறைகளில் ஊக்கம் காட்டி உற்சாகப்படுத்தினாலும்-மாநில வருவாயின் அளவுக் குறைவால்- மைய அரசின் தொழில் முதலீடும், மைய அரசின் பொதுத் துறை நிறுவனங்களும் அதிகம் கிடைக்கப் பெற்றால்தான் முழுமையான, அதிகமான பெருந் தொழில்கள் உருவாக முடியும். பெருந்தொழில்களின் பெருக்கமே சிறு தொழில்களை வளர்க்க முடியும். இந்த இரண்டும் இணைந்து வளர்ந்தாலே வேலையில்லாத் திண்டாட்டம் போக்கிடப்படும்; வறுமை நீக்கப்படும். மைய அரசின் தொழில் முதலீடும் மைய பொதுத் துறைத் தொழிற்சாலைகளும் குறைந்து வருகின்றன. தமிழகத்தில் தொழில் பெருக்கம் உண்டாக்க உதவிடும் மனோபாவம் கொண்டிருக்கிற மைய அரசுக்கு, நன்றிகூறும் அதே வேளையில் சேலத்தில் கிட்டும் கஞ்சமலை இரும்புத் தாதைப் பயன்படுத்தி முழுமையான இரும்பாலை ( Full fledged Steel Plant ) பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் ( Petrochemical complex ) சுங்கத் தீர்வை விலக்களிக்கப்பட்ட தொழில் மையங்கள் ( Free Trade Zone) அதிகமான தொழில் முதலீடு, வேகமாக உரிமங்கள் வழங்குதல், தொழில் துவங்க அனுமதியளிக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து பரவலாக்குதல் இப்படிப் பல்வேறு பணிகள் மூலம் தமிழகம் வளம் பெற மைய அரசு உதவும் என நம்புகிறேன்.

தமிழகப் பிரதிநிதிகளான எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும், மைய அரசிடமும் தமிழகத் தொழில் வளர்ச்சிக்குக் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு உதவிட வாதிட வேண்டும் என வேண்டுகிறேன். தமிழக மக்களுக்கு உரிய பங்கை உரிமைகளைப் பெறுவதில் உறவு மனப்பான்மையோடு, மைய அரசிடம் இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும். தமிழகம் ஓர் அமைதிப் பூங்கா; ஆரவாரமற்ற, அற்புத ஆற்றல் மிக்க தொழிலாளர் நிறைந்த, தொழில் அமைதி மிக்க மாநிலம். தமிழக அரசால் வழங்கப்படும் கடன்கள், மானியங்கள், உதவிகள், உற்சாகங்கள், ஒத்துழைப்புகள் ஏராளம். வசதி படைத்தவர் தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் தொழில்கள் துவங்க முன்வந்து வேலையில்லாத் திண்டாட்டம் போக்கி, உற்பத்தியை உயர்த்தி, ஏழை எளியவர்கள் நலன் பெற, பலன் பெற பாடுபடும் புரட்சித் தலைவரின் அரசுக்கு உதவிட வேண்டுகிறேன். தொழில்கள் துவங்கிட அனைத்து உதவிகளும் விரைவில், எளிதில் கிட்டிட அரசின் சார்பில் ஒத்துழைப்புத் தர உறுதி அளிக்கிறேன். ஒன்றுபட்டு உழைப்போம் - உற்பத்தியைப் பெருக்குவோம். ஏழ்மை எனும் கொடிய நோயை அகற்றுவோம் - வாரீர்! வாரீர் என வணங்கி வரவேற்கிறேன்.


[4.4.82 மாலை 6-15 மணிக்கு வானொலியில் ஆற்றிய உரை.]

---

வடஆர்க்காடு மாவட்டம் வில்வாரணி கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கான வில்வாரணி கிராம ஆதிதிராவிட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு தொழிலியல் விற்பனைச் சங்கத்தை 31.3.82 அன்று கோ-ஆப்டெக்ஸ் ஆலோசனைக் குழுத்தலைவர் அனகாபுத்தூர் திரு சி. இராமலிங்கம் எம்.எல்.சி. தொடங்கி வைத்தார்.

''தமிழ்நாடு அரசின் வரவு செலவுத் திட்டத்தில் கைத்தறி மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி தொடங்கப்பட்டுள்ள முதல் தொழிலியல் சங்கம் இது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் நெசவுத் தொழிலுக்கு பாதுகாப்புத் தரும் வகையில் நெசவாளர் பாதுகாப்புச் சட்டம், கொண்டுவராமல் இருக்கும்போது, தமிழக அரசு மட்டும் இதனை நிறைவேற்றி நெசவாளர்களைப் பாதுகாத்து உள்ளது என்றும் அனகாபுத்தூர் சி. இராமலிங்கம் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டிலேயே ஆதிதிராவிட மக்களுக்காக முழுத்தொகை மானியமாக அளிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட தொழிலியல் சங்கம் இது.



# கைத்தறிக்கு ஒரு கண்காட்சி



கைத்தறியாளரின் வாழ்வில் முன்னேற்றத்தைக் காண வேண்டும். அவர்களைக் கூட்டுறவின் கீழ் கொணர்ந்து, அவர்தம் உற்பத்திகளை வர்த்தக ரீதியில் விற்பனை செய்து, கைத்தறித் தொழிலைச் சீராக வளர்க்க நிறுவப்பட்ட அமைப்பே இன்று பாரெல்லாம் சுருக்கமாக 'கோ-ஆப்டெக்ஸ்' என்று அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

இச்சங்கத்தின் தலையாய பணி கூட்டுறவில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறியாடைகளைப் பிரதம சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து, நாடெங்கிலும் பரந்து நிற்கும் கிளைகள் மூலம் விற்பனை செய்து, நெசவாளர்களுக்கு வாழ்வளிப்பதேயாகும்.

தமிழகத்தில் இன்று மொத்தம் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 2.55 இலட்சம் தறிகள் கூட்டுறவில் இயங்குகின்றன. ஏறக்குறைய 30 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாப்பினை நல்கும் தமிழகத்தின் மிகப் பெரிய கைத்தொழில் கைத்தறியேயாகும். இன்று தமிழகத்தில் 1150-க்கும் மேற்பட்ட பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்களின் தாய்ச் சங்கமே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமாகும்.

கோ-ஆப்டெக்ஸின் முக்கிய நோக்கம், இணைக்கப்பட்டுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படுகின்ற கச்சாப் பொருள்களான • நூல், சரிகை, சாயங்கள், செயற்கைப்பட்டு நூல் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து நியாய விலையில் வழங்குவதும், பிரதப சங்கங்கள் உற்பத்தி செய்கின்ற கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து, தன் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதும், கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்குப் பட்டியல் தொகை வழங்கி, உற்பத்திக்கு வழி வகுப்பதுமாகும்.

**மூலப்பொருள் வழங்குதல் :**

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பல்வேறு எண் கொண்ட நூல்களைத் தமிழகத்தில் கூட்டுறவில் செயல்படும் 12 கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து பெற்று தன்னுடைய 22 நூல் வழங்கும் நிலையங்கள் மூலம் கோ-ஆப்டெக்ஸ் வழங்கி வருகிறது. மாதம் ஒன்றுக்கு இவ்வாறு வழங்கப்படும் நூல்களின் அளவு 4,000 முதல் 5,000 பேல்களாகும். நூல் வழங்குவதுடன் கைத்தறித் துணித் தயாரிப்புக்குத் தேவைப்படுகின்ற இதர கச்சாப் பொருள்களான பட்டு நூல், செயற்கைப் பட்டு நூல், சாயப்பொருள்கள் வழங்குவதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது. இப்படி வழங்கப்படும் கச்சாப் பொருள்களின் மதிப்பு ரூ. 40 கோடியாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியாண்டில் வழங்கப்பட இருக்கும் கச்சாப் பொருட்களின் மதிப்பு ரூபாய் 60 கோடியாக உயரும்.

நாட்டு மக்கள் அளிக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் 1980-81-ஆம் ஆண்டில் ரூபாய் 42 கோடி அளவிற்கு கைத்தறித் துணி விற்பனையில் சாதனை அடைந்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 1981-82-க்கு ரூ. 75 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ. 54.74 கோடி விற்பனை ஆகியுள்ளது.

அந்தக் குறியளவினை எட்டுவதற்கு இக் கைத்தறி விழா பெரிதும் துணை புரியும் என்றும் நம்புகிறோம்.

கூட்டுறவில் கைத்தறிகளின் எண்ணிக்கைகளை 67 சதவிகிதமாக உயர்த்த மேற்கொண்டுள்ள திட்டத்தின் விளைவாய், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியாண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி அளவு ரூபாய் 90 கோடியிலிருந்து ரூபாய் 100 கோடி அளவிற்கு உயரும். இந்த உற்பத்தியின் பெரும்பகுதியைக் கொள்முதல் செய்து, விற்பனைக்கு வழிகாணும் தலையாய கடமை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு உரித்தாகும்.

அதாவது ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 300 இலட்சம் செலவில் 250 புதிய விற்பனை நிலையங்களைத் துவக்குவதற்கும், தற்போதுள்ள நிலையங்களில் 200-க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவதற்கும் கோ-ஆப்டெக்ஸ் திட்டமிட்டுள்ளது.

1981-82 கூட்டுறவு ஆண்டில் இதுவரை 90 புதிய விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. மேலும் கர்நாடக மாநிலத்திலும், கேரள மாநிலத்திலும் புதிய வட்டார அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, மேலும் புதிய புதிய விற்பனை நிலையங்கள் துவங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வடிவமைப்பு நிலையங்கள்:**

நாளும் மாறும் மக்களின் ரசனைகளைக் கருத்தில் கொண்டு, புதிய புதிய வடிவமைப்புகளில், கைத்தறியாடைகளை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் கூட்டுறவு நெசவாளர்களுக்கு உண்டு. அந்த வகையில் புதிய வடிவமைப்புக்களை உருவாக்க மதுரை, திருச்சி, சேலம், கோவை மற்றும் கடையநல்லூர் ஆகிய இடங்களில் ஐந்து வடிவமைப்பு மற்றும் சேவா நிலையங்கள் பணி



**அனகாபுத்தூர் சி. இராமலிங்கம்,**
**எம். எல். சி.**
**ஆலோசனைக்குழுத் தலைவர்,**
**கோ-ஆப்டெக்ஸ்.**

---

புரிந்து வருகின்றன. இந்நிலையங்கள் மூலம் ஆண்டொன்றுக்கு 500 முதல் 600 வரை வடிவமைப்புக்கள் உருவாக்கப்பட்டு நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**பாலியஸ்டர் இரக உற்பத்தி:**

இது பாலியஸ்டர் யுகம் என்று சொல்லும் அளவிற்குப் பாலியஸ்டர் ஆடைகள் குவிந்துள்ளன. அந்த வகையில் மில்களுக்கு இணையாக நாமும் முன்னேற வேண்டுமென்ற முனைப்புடன் தமிழகக் கூட்டுறவு நெசவாளர்கள் செயல்பட்டதன் விளைவே இன்று, கைத்தறியில் வண்ண வண்ண மாதிரிகளில் பாலியஸ்டர் இரகத் துணிகள் உருவாகி, தமிழகக் கைத்தறி பாலியுஸ்டர் துணிகள் மக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு அவர்தம் மேனியை அழகுபடுத்தி வருகின்றன.

இந்தியாவில் முதல் முதலாக பாலியஸ்டர் துணி உற்பத்தியைக் கைத்தறியில் மேற்கொண்டு உருவாக்கிய பெருமை தமிழகத்தின் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கே உரித்தாகும். பாலியஸ்டர் சட்டைத் துணிகள் நெய்வதில் இன்று 2,300 தறிகள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. மற்றும் பாலியஸ்டர் வேஷ்டி நெய்வதில் 1200 தறிகளும், பாலியஸ்டர் சேலை நெய்வதில் 2300 தறிகளும் பாலியஸ்டர் சூட்டிங் நெய்வதில் 230 தறிகளும் செயல்பட்டு வருகின்றன. 1981-ஆம் ஆண்டு 21 இலட்சம் மீட்டர் பாலியஸ்டர் துணிகளை உற்பத்தி செய்து, அச்சிட்டு சென்ற தீபாவளி விற்பனையில் மக்களுக்கு வழங்கியது கோ-ஆப்டெக்ஸ்.

மேலும் கீழ்க்கண்ட புதிய இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் பெருமிதத்துடன் அறிமுகம் செய்தது. அச்சிட்ட சில்டன், அச்சிட்ட சில்க் கோன்சா புடவைகள், பருத்தியில் அச்சிட்ட துணிகள் புதிய அச்சிட்ட அலங்கார வகைத் துணிகள் இவற்றில் அச்சிட்ட சில்டன், அச்சிட்ட சில்க்கோன்சா சேலைகள் மகளிரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு, பெரும் புகழ் பெற்றுள்ளன. கைத்தறியில் புதியவை காணும் இம்முயற்சி, அயர்வின்றித் தொடரும்.

ஏழை எளிய மக்களின் அன்றாடத் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஜனதா இரகங்களான சேலைகள், வேட்டிகள், லுங்கிகள், காடா, கலர்த் துணி ஆகியவற்றை உருவாக்குவதில் 20,000 தறிகள் ஈடுபட்டுள்ளன. 1982 மார்ச் வரை 25 மில்லியன் மீட்டர் ஜனதா துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1981-82-ஆம் ஆண்டிற்கு 37 மில்லியன் மீட்டர் ஜனதா துணி உற்பத்தி செய்வதற்காகக் குறியீட்டை மத்திய அரசு கொடுத்துள்ளது.

**ஏற்றுமதி:**

கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்ற தனி அமைப்பு கைத்தறித் துணிகளின் ஏற்றுமதிக்கென அமைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி அமெரிக்கா போன்ற நாடுகளுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

சிங்கப்பூரில் ஒரு கிளை விற்பனை நிலையம் துவங்க அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு துவங்கப்பட்டுவிட்டது என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அந்த முயற்சியில் ஈடுபட்டு, வெற்றியுடன் திரும்பியுள்ளார் கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள்.

**கைத்தறிக் கண்காட்சி சென்னை.**

கடந்த பல ஆண்டுகளைவிட இந்த ஆண்டில் மிகச் சிறப்பாகக் கைத்தறிக் கண்காட்சி விழாவைக் கொண்டாட திட்டமிட்டுள்ளோம். கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டிலும்

300 ஸ்டால்கள் இடம் பெறுகின்றன. இவைகளில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கு பெறும் ஸ்டால்கள் எண்ணிக்கை 270 ஆகும். கோ-ஆப்டெக்ஸ் ஸ்டால்கள் எண்ணிக்கை 30 ஆகும்.

ஆந்திரப்பிரதேசம், பாண்டிச்சேரி, கருநாடகம் ஆகிய மாநிலங்களும் அரியானா கைத்தறிக் கழகமும் கைத்தறி மாளிகையும் பங்கேற்றுள்ளன.

பொதுமக்களுடைய விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுத்துக் கொள்ள உதவும்பொருட்டு பட்டு நூல் வகைகள் மற்றும் அச்சிட்ட பட்டு வகைகள், பாலியெஸ்டர் வகைகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணிகள், லுங்கிகள், கைத்துண்டுகள், உடைகள் ஆகிய அச்சிடப்பட்ட வகைகள் விற்பனை செய்வதற்குக் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனிப்பிரிவுகளை ஏற்பாடு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டில் கைத்தறிக் கண்காட்சி காஞ்சிபுரம், திருச்சி, கும்பகோணம், மதுரை திண்டுக்கல், திருநெல்வேலி, நாகர்கோவில், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய இடங்களிலும் நடைபெறுகிறது.

கடந்த ஆண்டு சென்னை கைத்தறிக் கண்காட்சியில் விற்பனையளவு ரூ. 236.32 இலட்சமாகும். 1982ஆம் ஆண்டு எதிர் பார்க்கப்படும் விற்பனை அளவு ரூ. 300 இலட்சமாகும். கண்காட்சியின் போது அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கடந்த ஆண்டு விற்பனையாகிய தொகை ரூ. 827 இலட்சம் ஆகும். 1982-ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் விற்பனை அளவு ரூ. 12 கோடியாகும்.



## உலகம் முழுதும் கைத்தறி ஆடை பவனி வர...

காலகாலமாகப் பலர் ஈடுபட்ட தொழில்-ஒரு காலத்தில் ரோமானிய நாடு பாராட்டிய கைத்தறித் தொழில்-பஞ்சத் தொழிலாக மாறி விட்டது. பத்து பைசா தரலாமா? தோளில் சுமந்து விற்கலாமா? கண்காட்சி ஏற்படுத்தி விற்கலாமா என்று சந்தை தேட வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் யார்?

வெளி நாடுகளில் நமது தூதுவர்கள் இருக்கிறார்கள். வியாபாரத்தைப் பெருக்குவதற்கென்றே சில அதிகாரிகள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அதற்காக கோடிக் கணக்கான ரூபாய் செலவாகிறது. அவர்கள் வெளி நாட்டில் கைத்தறியாடைகள் வாங்க வேண்டிய ஆர்வத்தைப் பிறருக்கு ஊட்டியிருந்தால் நல்ல சந்தை கிடைத்திருக்கும். அவர்களும் கைத்தறி ஆடைகளை அணிந்து கொண்டு உலகச் சந்தைகளில் மட்டுமல்ல-ஒவ்வொரு இடத்திலும் கைத்தறிக்குச் சந்தை ஏற்படுத்த வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

**முன்பக்க அட்டையில்**

**வண்ணக் கைத்தறிப் பட்டாடையின்**

**வனப்புக் காட்டும் முகப்பு**

**வண்ணப்படம் உதவி: கோ-ஆப்டெக்ஸ்.**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பல புதிய ரகங்களில் நூல் துணி மற்றும் பாலியெஸ்டர் லுங்கிகளிலும், சேலைகளிலும் மற்றும் ஜாகார்டு பர்னிசிங்குகளிலும் ஏற்பாடு செய்து வருகிறது.

ப்ராப்ளோன் சால்வை மற்றும் கார் பெட்டுகள் கோப்டெக்ஸால் உற்பத்தி செய்யப்பட்டு அவை கம்பளி போர்வை தேவைப் படுகிற இடங்களில் விற்பனைக்கு அனுப்பப் படுகின்றன.

அச்சிடப்பட்ட சட்டைத் துணி வகைகள் அல்லது, மேலும் சுயவண்ணம் வடிவமைப்பு பாலியெஸ்டர் ஜாகார்டு சட்டைத் துணிகளை உற்பத்தி செய்யுமளவிற்கு கோ-ஆப்டெக்ஸ் தற்போது முன்னேற்றம் அடைந்துள்ளது.

[illegible] செல்களிலும் [illegible] பிளாங்கட் [illegible] மற்றும் [illegible] களிலும் மற்றும் மா நிலங்களின் [illegible]

துணி வகைகளைப் போன்று கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் அத்தகைய துணிகளின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்துள்ளது. மற்ற மாநிலங்களிலிருந்து அந்த வகை மாதிரி வடிவமைப்புகள் பெறப்பட்டு, அதனை நம் மாநிலத்தில் உற்பத்தி செய்து வருகிறது. அத்தகைய துணி வகைகள் வெளிமாநிலங்களிலுள்ள விற்பனை நிலையங்களுக்கும் அனுப்பப் படுகின்றன.

தேசிய வடிவமைப்புச் சேலைகளில் தொடர்ந்து இரண்டாவதாகப் பருத்தியில் அச்சிடப்பட்ட 'மொகல்' வடிவமைப்புச் சேலைகள் தமிழ்ப் புத்தாண்டு நாளான 14.4.82 அன்று வெளியிடப்பட்டது. விலை ரூ. 65 ஆகும். இந்தவகைச் சேலைகளுக்குச் சிறப்புத் தள்ளுபடி இல்லை.

நெசவாளர்களுக்குப் பட்டுநூல் கிடைக்காத பொழுது அப்பொழுது மத்திய நிதி அமைச்சராக இருந்தவரும் இன்றைய பாதுகாப்பு அமைச்சராக உள்ளவருமான திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களையும் தலைமையமைச்சர் அவர்களையும் சந்தித்து இங்குள்ள நிலை எடுத்துரைத்தோம். அதனால் சீனாவிலிருந்து பட்டுநூல் இறக்குமதி செய்து கொடுத்தார்கள்.

கடந்த [illegible] ஆண்டுகளில் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காகப் பல்வேறு [illegible] தமிழ்நாடு அரசு ஆற்றியுள்ளது [illegible]

# தமிழகத்தில் கைத்தறித் தொழில்


**ஆர். வரதராஜுலு, இ.ஆ.ப.,**

**கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர்**


இந்தியப் பிரதமரால் அறிவிக்கப்பட்ட புதிய 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா வசதிகளையும் கொடுப்பதுடன் தொழில் நுட்ப முறையில் நவீன முறைக்கும் வழிவகை செய்கிறது. மத்திய அரசின் கொள்கைக்கேற்ப மாநில அரசும் கைத்தறித் தொழிலுக்கு முன்னுரிமை கொடுத்து திட்டங்களைச் செயல்படுத்தி, வருவது 5வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கைத்தறித் தொழிலுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 27.82 கோடியை ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு ரூ. 84.58 கோடியாக உயர்த்தியிருப்பதிலிருந்து புலனாகும். தறி முதலாளிகளின் பிடியில் சிக்குண்டு வாடும் நெசவாளர்களை விடுவித்து, அவர்களை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களாக்கி, அரசினால்செயல்படுத்தப்படும் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் பயனை அவர்களும் பெற, அரசு கொள்கையளவில் ஒரு முடிவெடுத்துள்ளது. அரசினால் செயல்படுத்தப்படும் எல்லா கைத்தறி வளர்ச்சித் திட்டங்களும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பையும் நிரந்தரமான நல்ல ஊதியத்தையும் பெற்றுத் தர வேண்டும் என்ற இரட்டை நோக்கிலேயே செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

### கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரல்:

தமிழ் நாட்டிலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 2.93 இலட்சம் கைத்தறிகள் இதுவரை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு அவை 1,263 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இயங்கி வருகின்றன. தற்போதைய கூட்டுறவு அமைப்பில் இயங்கி வரும் தறிகளின் அளவு சுமார் 52.7% ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள தறிகளின் அளவு 67% ஆக இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து அரசு செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு அமைப்பில் தறிகளைக் கொண்டு வரும் திட்டங்களில், சொந்தத்தில் தறியில்லாத நெசவாளர்களுக்கு, பொதுப் பணியிடம் அமைத்து, தொழில் செய்ய வசதி செய்து கொடுத்தல் மிக முக்கியமான ஒன்றாகும். இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் பிரிவைச் சேர்ந்த 700 நெசவாளர்களுக்கெனத் தனியே புதிய 7 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1982-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நெசவாளர்களின் நலனுக்காகப் பொதுத் தொழிற்கூடம் கட்டுவதற்கென அரசு ரூ.44.59 இலட்சம் மொத்த நிதியுதவி 100% மானியம் என்ற அடிப்படையில் வழங்கியுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும் கடன் வசதி பெற்று, அதன் மூலம் தறி முதலாளிகளின் பிடியிலுள்ள நெசவாளர்களை விடுவித்து அவர்களை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக்கத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

### மூலப் பொருட்கள் விநியோகம்:

தமிழகத்திலுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகளும் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலை உற்பத்தி செய்து வருகின்றன. கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்பட்டு வரும் கைத்தறிகளின் அதிகரித்துவரும் எதிர்கால நூல் தேவையைக் கருத்தில் கொண்டு ரூ. 21கோடி மொத்த மூலதனச் செலவில் ஒவ்வொன்றும் 25,000 கதிர்கள் திறன் கொண்ட மூன்று கூட்டுறவு நூற்பாலைகள், ஒவ்வொன்றும் புதுக்கோட்டை, தருமபுரி, தேனி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் ஆரம்பிக்கும் விதத்தில் சமீபத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களுக்குத் தேவையான செயற்கை நூலிழையை உற்பத்தி செய்யவென, 12,000 கதிர்கள் திறன்கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை மகாகவி பாரதியாரின் நினைவாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் "பாரதி கூட்டுறவு நூற்பாலை" என்ற பெயரில் அமைக்கப்பட உள்ளது. சமீபத்தில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, அந்த நூற்பாலைக்கு 13.12.81 அன்று எட்டையபுரத்தில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. சேலம் மற்றும் வேலூரில் தற்பொழுது செயல்பட்டு வரும் நூற்பாலைகள் அவற்றின் தற்போதைய கதிர்த் திறனுடன் மேலும் . 12,000 கதிர்கள் திறனைச் சேர்க்கும் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. முகவை மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர்களின் நலனுக்கென அவர்களுக்காக பிரத்தியேகமாகப்புதிய நூற்பாலை ஒன்று அமைக்க தனித் திட்டத்தில் அரசு ரூ. 2 கோடிக்கு மான்யம் அளித்துள்ளது. மேற்கூறிய புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதாலும், ஏற்கெனவே செயல்பட்டு வரும் நூற்பாலைகளில் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்துவதாலும் 3,500 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

சமீபத்தில் தனியார் துறையில் உள்ள நெசவாளர்கள், மோட்டா ரக நூல்கள், குறிப்பாக 20 நெ. மற்றும் 2-17 நெ. ரக நூல்கள் கிடைக்காமல் பிரச்சினைகள் ஏற்பட்டு சிரமப்பட்ட பொழுது அரசு, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய துணி நூல் கழக ஆலைகளினின்று நூல் பெற்று பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நூல் தட்டுப்பாட்டினைக் கருத்தில் கொண்டு தமிழ் நாடு அரசு, 'ஒரு மூலப்பொருள் வங்கி' ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. தற்பொழுது மாநிலத்திலுள்ள பட்டு நெசவாளர்கள் நியாயமான விலையில் அவர்களுக்குத் தேவையான 'கோரா' பட்டு கிடைக்காமல் சிரமப்பட்டு வருகிறார்கள். மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, மத்திய அரசு சீனாவிலிருந்து பட்டு நூல் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பட்டு நூலில் தமிழ்நாட்டுக்கு [illegible] டன் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 32.50 டன் ஏற்கெனவே பெறப்பட்டு மாநிலத்திலுள்ள கூட்டுறவு அமைப்பிலுள்ள மற்றும் தனியார்த் துறை பட்டு நெசவாளர்கட்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

[illegible] வங்கி 1981-82ம் ஆண் டிற்கு நமது மாநிலத்திலுள்ள [illegible]

தோப்புகளில் சேகரித்துப் பதப்படுத்தி விநியோகிக்கப்படுகிறது. இராமநாதபுரம் தருமபுரி மாவட்டங்களில் நூற்றுக்கும் அதிகமான பயிற்சி நிலையங்களை நடத்துவதற்குப் புதுக்கோட்டை மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இம் மாவட்டத்தில் ஏற்றுமதிக்குரிய நல்ல ரகத் தும்பும் சேகரிக்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மிரட்டு நிலையில் நார்ப் பயிற்சி நிலையத்தையும், கோனாப்பட்டு விராலிமலை முதலிய இடங்களில் பனை ஓலைப் பயிற்சி நிலையங்களையும், மணமேல்குடியில் பனையேறும் பயிற்சி நிலையத்தையும் நிறுவிப் பயிற்சியளித்தது.

புதுக்கோட்டை மாவட்டத்துக்கென ஒரு பெருந் திட்டம் ( Master plan ) ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தயாரித்து அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். இத்திட்டத்தின்படி அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தனது பங்கைத் தமிழ்நாடு மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையத்துக்குத் தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலமாக வழங்கியது. மாநில இணையம் தன்னிடமுள்ள திட்ட நிதிகளைப் பயன்படுத்திப் புதுக்கோட்டையில் பனைத் தொழில் பேட்டைக்கான கட்டடங்களை நிறுவியுள்ளது. படிப்படியாகப் பனைத்தொழிலின் ஒவ்வொரு தொழில் பிரிவும் தொடங்கப்பட்டது. தற்போது இத் தொழிற்பேட்டையில் பனந்தும்பு உற்பத்தி ஏற்றுமதிப் பிரிவு, பனை ஓலைத் தொழில் பிரிவு, பனை நார்த்தொழில் பிரிவு, தாழை மடல் தொழில்பிரிவு பிரஷ் தொழில்பிரிவு, பாம் கூலா பிரிவு ஆகியவை நிறுவப்பட்டன.

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பெருவளத் திட்டத்தை ( palmyrah products complex ) தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில் தமிழகத்தில் உள்ள 4 கோடிப் பனை மரங்களில் இதுவரை பயன்படுத்தப்படாமல் உள்ள 2 கோடி பனை மரங்களையும் பயன்படுத்தி கிராமிய வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்னோடியாக இத் திட்டத்தைச் செயல்படுத்துவதாகக் கூறினார். விவேக சிந்தாமணியில் '' கற்பகத்தைச் சார்ந்த காகமும் அமிர்தமுண்ணும்'' என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து பனைதான் கற்பக தரு என்பதை உணர முடிகிறது. தேவலோகத்தில் கற்பகத் தரு இருப்பதாகக் கற்பனை செய்யாமல் நம் கண்முன் நிற்கும் கற்பக தருவைப் பயன்படுத்தி நாட்டு மக்கள் நலம் பெற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். பனை ஏறுவது இழிவு என்று கருதிய காலம் மாறிவிட்டது. இப்போது எல்லா சமூகத்திலும் உள்ள இளைஞர்களும், யுவதிகளும் பனைத்தொழிலைச் செய்ய முன்வரும் அளவுக்கு இத் தொழிலை நவீனமயமாக்கி, வருவதைப் பாராட்டினார். படித்த பெண்கள் ஏணி முறை மூலம் பனை மரங்களில் ஏறுவதைத்தாம் இங்கு பார்த்ததாகக் கூறி அவர்களைப் பாராட்டினார். பனையிலிருந்து கிடைக்கும் பல வகையான மூலப் பொருட்களிலிருந்து செய்யப்படும் பொருட்கள் உள் நாட்டுத் தேவையை நிறைவு செய்வதோடு ஏற்றுமதியும் செய்யப்படுவதை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குஉகந்ததாகும் என்றும் குறிப்பிட்டார். பனையிலிருந்து 40க்கும் மேற்பட்ட வகையான பொருட்கள் செய்யப்படுவதைப் பாராட்டி புதுக்கோட்டை மக்கள் பனைத் தொழில் பேட்டையையும் பொருட்காட்சியையும் பார்க்கும்படிக் கேட்டுக்கொண்டார். திருக்கோகர்ணம் கோவில்பட்டியில் நிறுவப்பட்டுள்ளபனைத்தொழில் பேட்டை, புதுக்கோட்டை மாவட்டத்தினருக்குச் சுயவேலை வாய்ப்பு வழங்க உதவும் எனவும் குறிப்பிட்டார்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தும்பு ஏற்றுமதிப் பிரிவைத் துவக்கி வைத்துப் பேசுகையில் பனந்தும்பைத் தவிர வேறு எந்த ஒரு தனிப் பொருளும் 35க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரியவில்லை என்றும், 35 நாடுகளுக்கு மேல் ஏற்றுமதி செய்யப்படும் பனந்தும்பை ஏற்றுமதி செய்வதற்காகப் பதப்படுத்தும் ஒரு பிரிவை துவக்கி வைப்பதில் பெருமைப் படுவதாகவும், இத்தொழில் பேட்டையைப் போல் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றியத்திலும் ஏற்படுத்தப்படுமானால் பயனின்றி வீணாகும் பனைச் செல்வத்தின் மூலம் கிராமங்கள் சிறப்படைய ஏதுவாகும் என்றும் குறிப்பிட்டார்

பனை ஏறும் தொழிலாளர்களுக்குச் சொந்தமாகப் பனை மரங்கள் இல்லாமையால் கஷ்டப்படுவதைக் குறைக்கவும் இதனை அறவே போக்கவும் நபர் ஒருவருக்கு 100 ஏற்றுப் பனைகள் வீதம் குறைந்த குத்தகைக்கு வழங்கத் திட்டமிட்டு, இன்று முதல் கட்டமாக 35 பேருக்கு பனைகள் வழங்கப்படுகிறதுஎனக் கூறி தமிழக அரசு பனைத் தொழில் வளர்ச்சிக்காக எடுத்துள்ள நடவடிக்கைகளை மாண்புமிகு கதர் கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ்.என். இராஜேந்திரன் அவர்கள் விளக்கினார். மாண்புமிகு கதர் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் 'மணமேல்குடியில் புதிதாகப்பனை ஏறுவதற்குப் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குப் பனை மரங்களை வழங்கும் அத்தாட்சிப் பத்திரங்களையும் வழங்கினார்.



பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் பனங்கிழங்கு மாவில் ருசிமிக்க அதிரசங்களை செய்வதைத்தாம் மிகவும் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

விழாவில் பனந்தும்புத் தொழிலில் திறமையாகப் பணிபுரியும் பெண்களுக்கு டியன் காரியர் பரிசாக வழங்கப்பட்டது. சுமார் 24 ஆண்டுகளாகத் தொடர்ந்து தலைவராக இருந்து திறம்பட சங்கத்தை நடத்திவரும் மேலஸ்தானம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு ராமையா நாடாருக்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.



# தமிழின் சிறப்புரைக்கும் தமிழறியும் பெருமாள்

சங்க காலத்துத் தமிழ்ப் புலவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளையும் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய அரிய தொண்டுகளையும் விளக்கும் 'விநோத ரசமஞ்சரி' என்னும் நூலில் சொல்லப்பட்டுள்ள அரிய கருத்துக்களைக் கொண்டு 'தமிழறியும் பெருமாள்' என்னும் கதையை உருவாக்கி அதைச் சிறந்த நாட்டிய நாடகமாக மலரச் செய்திருக்கிறார்கள் கலை மாமணிகள் நடராஜ்-சகுந்தலா. மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமியும் தமிழக அரசும் அளித்த நிதியுதவியின் மூலம் இந்நாடகம் அரங்கேறியுள்ளது.

உலகில் மனிதன் வாழ்வதற்குக் கல்வி அவசியம், கற்றதற்கேற்ப மனிதர்கள் வாழவேண்டும்-நன்றி மறவாத் தன்மை வேண்டும்- கல்வி கற்ற பெண்டிருக்குக் கல்விச் செருக்கு ஆகாது — போன்ற பல தத்துவங்களை இந்நாடகம் எடுத்துரைக்கிறது. தமிழகக் கலைக்கும் தமிழ் மொழிக்கும் இந்நாடகம் பெருந்தொண்டு புரிகிறது.

நடிப்பு -பாடல்கள், கதைக் கோப்பு -காட்சி அமைப்பு-ஒளி அமைப்பு அனைத்தும் அற்புதம்; குறிப்பாக மன்னன் மகள் ஏலங்குழலாள் பேயாக மாறி பலரைத் துன்புறுத்தும் காட்சி காண்போரைத் திகிலடையச் செய்கிறது. இக்காட்சி திரைப்படங்களில் வரும் தந்திரக் காட்சிக்கு இணையாக விளங்குகிறது.

இந்நாடகம் வி.ஜி.பி. கல்சுரல் அகாடமியின் சார்பில் தியாகராயநகரில் உள்ள சங்கரதாஸ் கலை அரங்கில் மார்ச் 14ஆம் நாளன்று அரங்கேறியது. இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வி.ஜி. பன்னீர்தாஸ் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''இந்தச் சிறந்த நாட்டிய நாடகம் நமது தமிழகக் கலையைத் தரணிக்கு எடுத்துச்சொல்லும் தன்மையுடையது. இதையும், நடராஜ்-சகுந்தலா நடத்தி வரும் ஏனைய நாடகங்களையும் வீடியோ டேப்பில் எடுத்து வெளிநாடுகளுக்கெல்லாம் அனுப்புவதற்கு நாங்கள் சித்தமாக இருக்கிறோம். இதன் மூலம் நமது நாடகக் கலையை வெளிநாட்டினர் எளிதில் உணர இயலும்''

தலைமை ஏற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''கலையை மக்கள் நெருங்கி வரவேண்டும்; நாட்டில் கலாசார உயர்வுக்குப் பாடுபட வேண்டும் என்ற முறையில் உருவாக்கப்பட்டிருப்பது இந்த நாடகம்.

''சாதாரண - பாமர மக்களின் உணர்ச்சியைத் தொடுவது கலையின் சிறப்பம்சமாகும். அந்தச் சிறப்பம்சம் இந்த நாடகத்தில் இருக்கிறது.

''படிக்காத ஒருவன் படும் தொல்லையை இதில் சித்திரித்துக்

தமிழ்ப்பித்தன்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனம் அளிக்கும் விதத்தில் சலுகை வட்டி விகிதத்தில் மொத்தம் ரூ. 46.31 கோடி காசுக் கடனாக அளித்துள்ளது. இது இந்தியாவில் கூட்டுறவு கைத்தறித் தொழிலுக்கு ரிசர்வ் வங்கி அளிக்கும் நிதியுதவியில் 50 சதவீதம் ஆகும். 1982-83-ம் ஆண்டிற்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும், தலைமைச் சங்கத்திற்கும் சேர்த்து மொத்தம் ரூ. 85 கோடி காசுக் கடன் கேட்டு ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### வடிவமைப்பு மற்றும் சேவா நிலையங்கள்:

கைத்தறிகளில் புதிய ரகங்களையும், வடிவமைப்புகளையும் அறிமுகப்படுத்த 'கோ-ஆப்டெக்ஸ்' அரசிடமிருந்து ரூபாய் 17.50 இலட்சம் நிதியுதவிபெற்று 5 வடிவமைப்பு மற்றும் சேவா நிலையங்களை மதுரை, திருச்சி, கோவை, சேலம் மற்றும் கடையநல்லூர் ஆகிய இடங்களில் திறந்துள்ளது. சமீபத்தில் சேலத்திலுள்ள வடிவமைப்பு மற்றும் சேவா நிலையம், நுகர்வோர் கவுன்சிலால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவமைப்புகளைக் கொண்ட 'அயோத்தியா சேலைகள்' என்ற புதிய வகை சேலையை உற்பத்தி செய்துள்ளது. இவ்வகை சேலைகள் 5-3-82 அன்று மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறி அமைச்சரால் வெளியிடப்பட்டது. அது வாங்குவோரிடையே புகழ் பெறத் தொடங்கியுள்ளது.

### கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வசதி செய்தல்

கோ-ஆப்டெக்ஸ் மூலமாகப் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான விற்பனை வசதிகளை அரசு பெரும் அளவில் செய்து கொடுக்கிறது. 1980-81-ம் ஆண்டு கோ-ஆப்டெக்சின் விற்பனை ரூ. 45 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ரூ.48 கோடி அளவுக்கு கோ-ஆப்டெக்சின் விற்பனை இருந்தது. 1981-82ம்ஆண்டில் கோ-ஆப்டெக்சின் விற்பனையளவு ரூ. 65 கோடியைத் தாண்டியுள்ளது. இதைவிட அதிகமான விற்பனையை கோ-ஆப்டெக்ஸ் மேற்கொள்ள வசதியாக அரசு ரூ. 1கோடியை அதிகப்படி பங்கு மூலதனமாக இந்த நிறுவனத்தில் 1981-82-ம் ஆண்டில் முதலீடு செய்துள்ளது. கடந்த தீபாவளி காலத்தில் (அக்டோபர் 1981) கோ-ஆப்டெக்ஸ் ரூ. 32 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்தது. இது 1980 தீபாவளியின் பொழுது கோ-ஆப்டெக்ஸ்செய்த விற்பனையைவிட 1½ மடங்கு அதிகமாகும். இவ்வாண்டில் கோ-ஆப்டெக்சின் பொங்கல் விற்பனை ரூ. 15.33 இலட்சம் ஆகும். இது கடந்த பொங்கல் விற்பனையை விட 1-3/4 அளவு அதிகமாகும். கோ-ஆப்டெக்சின் 1982-83-ம் ஆண்டு திட்டத்தின்படி அதன் விற்பனை அடுத்த ஆண்டு ரூ. 100 கோடியாக இருக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கினை எட்டும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் நூதன ரகங்களுக்கும் மக்கள் விரும்பி வாங்கும் துணிவகைகளுக்கும் முதலிடம் கொடுத்து உற்பத்தித் திட்டத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்கியுள்ளது.

கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களின் நலனுக்கென 'கூட்டுறவு நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்' என்ற நல்வாழ்வுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 67,000 நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இதுவரை கொண்டு வரப்பட்டுள்ளனர். 1980 மார்ச் 1 முதல் இத்திட்டத்தின் கீழ் எந்த ஒரு நெசவாளியாவது இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரருக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து காப்புத் தொகையாக ரூ. 3,000 பெற்றுத் தரப்படுகிறது. இத்தொகையினை அதிகப்படுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கூட்டுறவு இயக்கத்தைச்சார்ந்த நெசவாளர்களின் நலனுக்காக, நெசவாளர் வீட்டுவசதித் திட்டம் ஒன்று 1979-80ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டுக்கு ஆகும் மொத்தச் செலவு அதிக பட்சம் ரூ. 8,000. இதில் ரூ.1000 மாநில அரசால் மானியமாகத் தரப்படுகிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஒரு வீட்டுக்கு ஆகும் மொத்தச் செலவில் 70 சதவீதத்திற்கு மேற்படாமல் ரூ. 5,600 வரை கடனாக வழங்குகிறது. ஆறாவது திட்டக் காலத்தில் 5,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 2,073 வீடுகளின் கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டு அதில் இதுவரை 1,054 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மிகுதி பலவித கட்டுமான நிலையிலுள்ளன. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் இதுவரை ரூ.59.79 இலட்சம் கடனாக அளித்துள்ளது. மேலும் ரூ. 53.23 இலட்சத்திற்கான கடன் விண்ணப்பம் ஒன்றும் ஹட்கோவின் பரிசீலனையில் உள்ளது. 1982-83-ம் ஆண்டில் அரசு அளிக்கும் ரூ. 1,000 மானியத்தையும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக நிதியுதவியையும் கொண்டு 1,000 வீடுகள் கட்டப்படும்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் (வேலை வாய்ப்புப் பற்றிய விதிகள் மற்றும் பலவகைப் பிரிவுகள்) மசோதா 1981, தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும்பெற்று சட்டமாகி உள்ளது. இப்புதிய சட்டத்தினைச் செயல்படுத்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இச்சட்டம் மாநிலத்திலுள்ள நெசவாளர்களின் வேலை முறைகளை ஒழுங்குபடுத்துகிறது. இச்சட்டம் 12-3-82முதல் அமுலுக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் கூறியவற்றைச் செயல்படுத்தும் நோக்கிலும், தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவும் உரிய அதிகாரங்களுடன் 'மாநிலக் கைத்தறி வாரியம்'' அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கைத்தறித் துணிகளை விற்கவும் மக்களுக்குக் கைத்தறியை நினைவூட்டும் வகையிலும், அகில இந்தியக் கைத்தறி இருவார விழாக்கள்' கைத்தறிக் கண்காட்சியுடன் சென்னையிலும் மற்றைய மாவட்ட முக்கிய நகரங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில்நடத்தப் பெறுகின்றன. இவ்வாண்டு 28 வது அகில இந்திய கைத்தறி இருவரை விழா 9-4-82 முதல் 23-4-82 முடிய 15 நாட்களுக்குச் சென்னையிலும் மற்றும் 11 முக்கிய நகரங்களான காஞ்சிபுரம், திருச்சி, விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், சேலம், கோவை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விழாக்களின் ஒரு பகுதியாகக் கைத்தறிக் கண்காட்சிகளும் இந்த நகரங்களில் நடத்தப்படுகின்றன. இந்தக் கண்காட்சிகளுக்குச் சென்னையிலும் இதர நகரங்களிலும் அதிக அளவில் பொதுமக்கள் வந்து அவர்களுக்குத் தேவையான துணி முழுமையையும் அரசு அளிக்கும் 10 சதவிகிதம் தள்ளுபடி சலுகையைப் பயன்படுத்திக் கைத்தறி, துணிகளை வாங்கி ஏழை கைத்தறி நெசவாளர்களின் வாழ்வுயரக் கை கொடுப்பார்களென நம்புகிறோம்.



# பனைப் பொருள் பெருவளத் திட்டம்


இரா. பூர்ணலிங்கம், ஐ.ஏ.எஸ்.,
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம்.


புதுக்கோட்டையில் திருக்கோகர்ணம் அருகில் உள்ள கோவில் பட்டியில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்துக்கு வழங்கியுள்ள 10 ஏக்கர் நிலத்தில் பனைத் தொழில் பேட்டை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்பேட்டையைப் புதுக்கோட்டை மாவ்ட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ்.டி. காசிராஜன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் செய்தி அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் 20.12.81 அன்று குத்து விளக்கேற்றித் துவக்கி வைத்தார்கள்.

இப்பனைத்தொழில் பேட்டையில் முதல் கட்டமாகச் சில பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. பனை மரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் மூலப் பொருளாக வைத்துச் செய்யப்படும் கிராமத் தொழில் பிரிவுகளில்பனந்தும்பு ஏற்றுமதி பிரிவும் ஒன்று. இதுவரை தமிழகத்தின் வட மா.வட்டங்களில் உற்பத்தியாகும் கோராத்தும்பை ( Korafibre ) மாநில இணையத்தின் கடப்பாக்கம் துமபுக் கொள்முதல் நிலையத்தின் மூலம் வாங்கி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சலுக்கு அனுப்பப்பட்டு வந்தது. குளச்சலில் உள்ள மாநில இணையத்தின் பனந்தும்புத் தொழில் கூடத்தில் இத் தும்பு சுத்திகரிக்கப்பட்டு (processed) ஏற்றுமதிக்கு ஏற்றவாறு பேல்களாக்கித் ( Ballots ) தூத்துக்குடி துறைமுகத்தின் வழியாக சுமார் 35 வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. போக்குவரத்துச் செலவு அதிகமாவதாலும், தென் மாவட்டங்களில் தும்புஉற்பத்திகுறைந்து வருவதாலும் தமிழகத்தின் மையப் பகுதியில் இறுதிச் சுத்திகரிப்பு நிலையத்தை ( Final processing centre ) நிறுவவேண்டும் என மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம் கடந்த சில ஆண்டுகளாகக் கருதியது. இத் தருணத்தில் 1977-ல் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 10 ஏக்கர் நிலத்தையும், கோரையாற்றுப் படுக்கையில் உள்ள பனை மரங்களையும் மாநில இணையத்திற்கு வழங்கி பனைப் பொருள் பெருவளத் திட்டம் ( palmyrah products complex ) ஒன்றை நிறுவ உதவினார்கள். தஞ்சைச் சத்திரம் நிர்வாகத்துக்குச் சொந்தமான பலதோப்புகள் இம்மாவட்டத்தில் இருப்பதை மாநில இணையம் அறிந்து அத் தோப்புகளில் உள்ள சுமார் 50,000 பனைகளை ஒட்டுமொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துள்ளது.

தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில்வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் சாரோளை, குருத்தோலை, அகணி நார், புணிநார் முதலியவற்றை இ


காட்டியிருக்கிறார்கள். ஆணும் பெண்ணும் போட்டியின்றிச் சமமாக வாழவேண்டும் என்ற கருத்தையும் விளக்கியிருக்கிறார்கள்.

''இதில் பங்கு பெற்றோர், பாத்திரங்களாகவே மாறி விடுகின்றனர். 2 மணி நேரத்திற்கு மேல் சலிப்பின்றிக் கொண்டுசெல்லப்படும் இந் நாடகம் நமது உள்ளத்தைக் கவரத்தக்க அளவுக்கு அமைந்திருக்கிறது.

''இதனை உருவாக்கியுள்ள நடராஜ் - சகுந்தலா அவர்கள் புதிய புதிய நாடகங்களை உருவாக்க வேண்டும் என்னும் ஆர்வத்துடன் நாற்பதாண்டுக்காலம் சலிப்பின்றி உழைத்து வருகின்றனர். கலைத் துறைக்குத் தொண்டாற்றி வருகின்றனர்; அவர்களுக்குப் பாராட்டுகளை வழங்குகின்றேன்.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு நீதிபதி திரு எஸ். மோகன் குறிப்பிட்டார்:

''தமிழர் பண்பாட்டையும் கல்விச் சிறப்பையும் இலக்கியவளத்தையும் பாராட்டுவதற்கு ஒரு நாடகம் இருக்கிறதா என்றால், இருக்கிறது, அதுதான் 'தமிழறியும் பெருமாள்' என்று கூறிவிடலாம். உள்ளத்தை ஈர்க்கும் வகையில் அமைந்திருக்கிறது இந்நாடகம். இதனை உருவாக்கிய கலைமாமணி நடராஜ் -சகுந்தலா இருவரும் நம்மை, நமது முன்னோர்கள் வாழ்ந்த காலத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டார்கள் என்றால் அது மிகையாகாது''



அடுத்து உரையாற்றிய இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு டி.வி. நாராயணசாமி தெரிவித்தார்:

''ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கதையை நாடகமாக்கி, இன்றைய நவீன காலத் திரைப்படம் போல' அமைத்து, அரங்கேற்றி அனைவரையும் கவர்ந்துவிட்டனர் நமது கலைமாமணிகளான நடராஜ் - சகுந்தலா. இந்நாடகம் விடியோ டேப் மூலம் உலகெங்கும் பரவுவதை நான் வரவேற்கிறேன்''.

நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்கள், தொழில் நுணுக்கக் கலைஞர்கள் அனைவரையும் பாராட்டிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 'ஆடற்கலை அறிஞர்' என்னும் விருதினை நடராஜ-சகுந்தலாவுக்கு வழங்கினார்.

சமூக நாடகங்கள் பெருகிவரும் இந்த நவீன நாட்களில் பழங்காலக் கதையை நாடகமாக உருவாக்குவது - அதிலும் நாட்டிய நாடகமாகத் தீட்டுவது என்பது துணிவுக்கு எடுத்துக்காட்டாகும். துணிவு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

## கல்வி, அறிவியல் தொழில்நுட்பவியல் துறை

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்குத் தமிழக அரசு மிகுந்த முக்கியத்துவம் தந்து வருகிறது. பள்ளிக் கல்வியிலும், கல்லூரிக் கல்வியிலும் அறிவியல் வளர்ச்சிக்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளில் மிகச் சிறந்த முறையில் நடந்து வருகிறது. கல்வித்துறையில், அறிவியல், தொழில் நுட்பவியல் பகுதிகளின் தலையாய பங்கைச் சுட்டிக்காட்ட வேண்டியும் அனைத்து மட்டங்களிலும் இவற்றிற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும் அரசு. தலைமைச் செயலகக் கல்வித்துறையின் பெயரை "கல்வி, அறிவியல். தொழில் நுட்பவியல் துறை" (Department of Education, Science and Technology) என்று மாற்றி உள்ளது.

# நூல் நயம்

இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள், இப்பகுதியில் மதிப்புரை செய்யப்படுவதில்லை.

—ஆசிரியர்.

## பாரியும் கபிலரும்

ஆசிரியர்: எஸ். இராஜு செட்டியார் பி.ஏ.பி.எல்.,

வெளியீடு: கம்பன் பதிப்பகம், 16, தெளிசிங்கப் பெருமாள் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை–600005.

விலை ரூ 15 பக்கம் 244.

இலக்கிய நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்துக் கட்டப்பட்ட மாளிகை இந் நாடகம்—மெய்யாக நடமாடிய பாத்திரங்களையும், கற்பனைப் பாத்திரங்களையும் கொண்டு படைக்கப் பெற்ற இந்நாடகத்தின் உரையாடல்கள் இனிமையாகவும் எளிமையாகவும் விறுவிறுப்பாகவும் திகழ்கின்றன.

திருக்குறளின் கருத்துக்களும் அக்காலத்து வரலாற்றுச் செய்திகளும் பாத்திரங்களின் வாயிலாக எடுத்துச் சொல்லப்படும்போது உணர்ச்சிக் காவியத்தைப் படிப்பது போன்ற நிலையை நாம் அடைகிறோம்.

நமது நாட்டில் படிப்பதற்கென்று எழுதப் பெறும் நாடகங்கள் நடிக்க இயலாதனவாக உள்ளன. ஆனால் இந்நாடகம் நடிப்பதற்கும் ஏற்ற வகையில் அமைந்திருப்பது. ஆசிரியரின் திறனை எடுத்துரைக்கிறது.

வள்ளல் பாரிக்கும் புலவர் கபிலருக்கும் இடையே செறிந்திருந்த நட்புக் குறித்துப் புறநானூற்றுச் செய்யுள்களின் வாயிலாக அறிந்துள்ளவர்களுக்கு இந்நூல் ஒரு பெரும் விருந்தாக அமைகிறது. பாத்திரங்களை ஆசிரியர் அறிமுகப்படுத்தியிருக்கும் திறம் பாராட்டுக்குரியது. கல்வியின் பெருமையைக் குறித்தும் ஒழுக்கத்தினால் விளையும் உயர்வு பற்றியும் நூல் முழுதும் சுட்டிக் காட்டியுள்ளார் ஆசிரியர். இலக்கியத்தையும் வரலாற்றையும் சுவையான இந் நாடகத்தின் வாயிலாக நிலைக்க வைத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

## பாரதியின் போர்க்குரல்

ஆசிரியர் : ம.பொ. சிவஞானம்

வெளியீடு : பூங்கொடி பதிப்பகம், சித்திரக்குளத் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை ரூ. 7.00 பக்கம் 152

பாரதியாரையும் அவரது கவிதைகளையும் திறனாய்வு முறையில் தெரிவிக்கிறது இந்நூல், இதில் உள்ள கட்டுரைகள் அனைத்தும் பாரதியின் தேச பக்தியையும் கவிதைப் புலமையையும் அணு அணுவாக -அங்குலம் அங்குலமாக எடுத்துச் சொல்கின்றன. பாரதி ஓர் இமயம் என்பதை நூலாசிரியரின் கட்டுரைகள் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

பாரதியின் சோஷியலிசப் பாதையை ஆசிரியர் தக்க வகையில் எடுத்துரைத்து நிறுவுகிறார். பாட்டாளிகளுக்காகப் பாடியவர் மகாகவி பாரதி என்பதை மிக அருமையாக விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. பாரதி எங்கள் கவி என்ற கட்டுரையைப் படிக்கும்போது நமது தோள்களெல்லாம் பூரிக்கின்றன.

''இலக்கிய வானில் பாரதி என்னும் கவிஞன் பிறைச்சந்திரன் அல்லன்; பூரண சந்திரன்'' என்று ஆசிரியர் ஆணித்தரமாகக் கூறுவதை எவரால் மறுக்க இயலும்?

## மழலைத் தேன்

ஆசிரியர் : கவிஞர் நீல கணேசன்

வெளியீடு : மஞ்சுளா பதிப்பகம் 34, காந்தி ரோடு கடுப்பேட்டை குடியேற்றம் (வ.ஆ.).

விலை ரூ. 2-00 பக்கம் 32

74 சிறு கவிதைகள் கொண்ட தொகுப்பு இந்நூல். பிள்ளைக் கனியமுது-பேசும் பொற்சித்திரம் என்றெல்லாம் வருணிக்கப்பெறும் மழலைத் தங்கங்கள் படித்துப் பயன் பெறும் வகையில் இனிமையும் எளிமையும் நிறைந்த சுவைப் பாடல்களின் குவியலாக இந்நூல் திகழ்கிறது. பல்வேறு அறிஞர்களின் அணிந்துரைகளுடன் வெளிவந்திருக்கும் இந்நூல் சிறுவர்களுக்கு நல்ல நீதி நெறிகளைப் போதிக்கின்றது. உலகப் பெரியார் என்னும்தலைப்பில் உள்ள கவிதைகள் குறிப்பிடத்தக்க வகையில் உள்ளன.

—புலவர் தமிழ்ப்பித்தன்

## இமயம் எங்கள் காலடியில்

ஆசிரியர்: புலவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்,

வெளியீடு: வசந்தா பதிப்பகம், 21, தருமராசா கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை-600016.

விலை: ரூ. 8.50. பக்கங்கள்: 19[illegible]


அழகிய தலைப்புடன் விளங்கும் இந்நூலில் ஏராளமான கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொன்றும் ஒருவகையில் சிறக்கின்றன. 'பாடுகிறேன்!' என்ற பாடலே இந்நூலுக்கு(மத்)தாய்ப்பாக விளங்குகிறது எனலாம்.

இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பாடல்கள் - கவிதைகள் சென்னை வானொலியிலும், பத்திரிகைகளிலும் வெளி வந்தவை. படித்துச் சுவைக்கவும், பாடி மகிழவும் ஏற்பப் பல்சுவைப் பாடல்கள்விரவியுள்ளன.

இமயம் எங்கள் காலடியில், அந்தி மாலை, மனச் சிறகு, மது விலக்கு, மனச்சான்று பேசினால்? காந்தியடிகள், முன்னேற்றம், பாரதியும் பாவேந்தரும் ஆகிய கவிதைகள், பாடிய கவிஞரின் திறமையை வெளிப்படுத்தும் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

— பி. வி. கி.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR


# ஐ.ஐ.டி

ஆல்கஹாலில் ஓடும் ஊர்தியைப் பார்க்க வேண்டுமா?

குட்டி செயற்கைக் கடலைக் காணவேண்டுமா?

சூரிய ஒளியின் மூலம், குளிர் சாதனத்தை அனுபவிக்க வேண்டுமா?

எல்லாவற்றுக்கும் கிண்டி செல்லவேண்டும்! அங்கே காந்தி மண்டபத்துக்கு அருகிலுள்ள ஐ.ஐ.டி.க்குள் நுழையவேண்டும். ஆம். இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும்.

இந்தியத் தொழில் நுட்பக் கழகம் ( Indian Institute of Technology ) பரந்து விரிந்த வானம் போலல்லவா காட்சி தருகிறது!

இயற்கை எழில் மண்டிக்கிடக்கும் அழகான, அமைதியான சூழலில் அமைந்திருக்கும் இந்த அறிவாலயம், ஆயிரமாயிரம் மாணவமணிகளை, பல்துறை வல்லவர்களாகத் தயார்ப் படுத்தி வருகிறது.



சென்னைக்குப் பெருமை சேர்க்கும் இந்தத் தொழில் நுட்பக் கழகம், 1959ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத் திற்கென்ற நாட்டில் அமைக்கப் பட்டுள்ள தலையாய கல்விக் கழகங்களுள் ஒன்றாக இது விளங்கி வருகிறது.

ஜெர்மன் கூட்டுப் பேராட்சிக் குடியரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற தாராள நிதி - தொழில் நுட்ப உதவியுடனும், அதற்குச் சரிநிகராக இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்து வரும் உதவியுடனும் இந்த நிறுவனம் தொடங்கப் பெற்று இன்று ஆல் போல் தழைத்திருக்கிறது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கழகமாக விளங்கும் இது, சுயாட்சிப் பொறுப்புள்ள குழுமமாகவும் விளங்குகிறது.

B.Tech., M.Tech., M.Sc., M.S., மற்றும் டாக்டர் பட்டப் படிப்பிற்கான கல்வித் திட்டங்களை இக்கழகம் நிறைவேற்றி வருகிறது. கல்வி வசதி அளிப்பதுடன், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறைகள், தொழில் துறை ஆலோசகர் பயிற்சித்துறை, தொடக்கக் கல்வி வசதி ஆகியவற்றிற்குப் பரவலான நடவடிக்கைகளிலும் இக்கழகம் சடுபட்டு வருகிறது.

இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளையும் செயல்படுத்துவதற்காகச் சில ஆராய்ச்சி மையங்களையும் பள்ளிக்கூடங்களையும், வெளியிலுள்ள நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள தனிப் பிரிவுகளையும் இக்கழகம் அமைத்துள்ளது.

பின்வரும் பிரிவுகள் வெளியேயுள்ள நிறுவனங்களோடு பணியாற்றியும் வருகிறது :


மத்திய நூல் நிலையம்.
மத்திய கண்ணாடிப்பொருள் தயாரிப்புப் பிரிவு
மத்திய தொழிற்கூடங்கள்
மத்திய புகைப்படப் பிரிவு

பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு , வருங்காலத்தில் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய வேலைவழங்குபவர்களுக்கு மிடையே தொடர்பு கொள்வதற்காக, இக்கழகத்தின் வேலை அளிக்கும் அலுவலகம் ஒன்றும் செயல்படுகிறது.

நான்காண்டுக் காலப் பயிற்சிக்கான பி.டெக். (B.Tech) வகுப்பில் சேரக் குறைந்தபட்சக் கல்வித் தகுதியாக 10+2 வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது கணிதம், பௌதிக, வேதியியல் ஆகிய பாடங்களைக் கொண்ட அதற்குச் சமமான வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள மற்ற ஐ.ஐ.டி. நிலையங்களுக்கும் (1, பம்பாய் 2. டில்லி 3. கான்பூர் 4. கரக்பூர்) பொதுவாகக் கூட்டு நுழைவுத் தேர்வுகள் ( Joint Entrance Examination) நடத்தப் பெற்ற, திறமையின் அடிப்

பி.வி.கிரி



சூரிய வெப்பச் சக்தியைத் திரட்டுவதற்கான தகடு வரிசைகள்.

படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

M.Tech., M.Sc., DIIT போன்றவைகளுக்கு, மேல்நிலைப் பட்ட வகுப்புக்கான போட்டித் தேர்வின் கீழ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். M.S., Ph.D., போன்றவைகளுக்குத் துறைத் தேர்வுக் குழுவினால், எழுத்துத் தேர்வு மற்றும்பேட்டி போன்றவை மூலமாக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.


M.Tech., M.S., Ph.D.. பட்ட வகுப்புகளைக் கொண்ட கம்ப்யூட்டர் பயிற்சி நிலையம் ( Computer Centre ), ஆசியாவிலேயே சிறந்தவொரு நிலையமாகத் திகழ்கிறது.


இதுதவிர, கடல் பொறியியல் நிலையம் ( Ocean Engineering Centre), கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரித்தல், கடலுக்கடியில் எண்ணெய் வளம் இருப்பதைக் கண்டறிதல், அலைகள் பற்றிய ஆய்வு, கடல்வாழ் இனங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் முதலானவற்றைக் கற்றுத் தருகின்றது.

இந்தப் பிரிவில் தான் 100 அடி சதுர வடிவத்தில் ஆழமான பிரம்மாண்டமான தொட்டி ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். இதை மேலே இருந்து பார்க்கும்போது குட்டிக் கடலாகக் காட்சியளிக்கிறது!

இங்கே, கதிரவனின் ஆற்றல் ( Solar Energy ) சம்பந்தமான கல்வியும் புகட்டப்படுகிறது. கதிரவனின் ஆற்றல் மூலமாக, குளிர்சாதன வசதி, மின் உற்பத்தி, நீரைக் கொதிக்கவைத்தல், சமையல் அறைகளை வெதுவெதுப்பாக்குதல் மற்றும் செயற்கைக் கோளை இயங்கச் செய்தல் போன்றவைக்கான நுணுக்கங்கள் கற்றுத் தரப்படுகின்றன.

சூரிய வெப்பத்தால் இயங்கும் குளிர் சாதனம்





நீரைக் காய்ச்சி நன்னீர் வடித்தெடுக்கப் பயன்படும் சூரிய வெப்பத்தால் இயங்கும் கருவி.

Fibre மூலமாகச் சிறிய-பெரிய குழாய்கள், பஸ் ஜன்னல்களுக்கான சட்டங்கள், தலைக்கவசம் போன்றவை செய்வதற்கான தொழில் நுணுக்கங்களும் இங்குக் கற்றுத் தரப்படுகின்றன.

உலோகவியல் (Metallurgy) சம்பந்தமான தொழில் நுணுக்கங்கள்-உலோக இணைப்பு, உருக்கு, இரும்பு, எஃகு தொழில் நுட்பங்கள் இங்குக் கற்றுத்தரப் படுகின்றன.

விமானப் பொறியியல் (Aeronautical Engineering ) சம்பந்தமான கல்வியும் இங்குப் புகட்டப்படுகிறது. விமானம் சம்பந்தப்பட்ட அத்தனை நுணுக்கங்களிலும் மாணவர்கள் சடுபடுத்தப்படுகின்றனர்.

கட்டடப் பொறியியல் (Structural Engineering ) சம்பந்தமான எல்லாவிதமான நுணுக்கங்கள், பயிற்சிகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றில் மாணவர்கள் சடுபடுத்தப்படுகிறார்கள்.

பொதுவாக, நம் நாட்டில் பொறியியல் சம்பந்தமான சிக்கல் ஏதேனும் இருந்தால் உடனே இங்கே உள்ள ஐ.ஐ.டி.யை நாடினால் போதும். சிக்கல் தீர்ந்து சீக்கிரமே அதற்கு ஒரு வழிவகை ஏற்பட்டுவிடும்.


நம் நாட்டிலுள்ள ஏராளமான தொழிற்கூடங்களுக்குக் கட்டுமான ஆலோசனைகளை இது வழங்கி வருகின்றது. குறிப்பாக பெல், ஸ்பிக், டி.வி. கோபுரம், திருப்பதி தேவஸ்தானம், தபால், தந்தித் துறை இன்னும் பல்வேறு துறைகளுக்கு இது தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இவ்வாறு ஆலோசனை வழங்குவதன் மூலம் இவ்வாண்டு 50 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஐ.ஐ.டிக்கு வருமானம் கிடைத்திருக்கிறது.

இந்தப் பிரிவில் தண்டவாளத்திற்கிடையே பொருத்தப்படும் நவீன ஸ்லீப்பர் கட்டைகள் உருவாக்கப்படுவதை நேரில் பார்க்கிறோம். சாதாரணமாக, மரக் கட்டைகள்தான் இதற்குப் பயன்படுத்தப்படும். ஆனால், காங்க்கிரிட்டினால் தயாரிக்கப்படும் இது, மரத்தைவிட உறுதியாகவும், நெடுங்காலத்துக்கு உழைக்கக் கூடியதுமாகவும் இருக்கிறது. மர ஸ்லீப்பர் கட்டை 10

கம்ப்யூட்டர் நிலையம்



# குதுப்மினார் வரலாறு



குதுப்மினார் கோபுரம் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டதாகும்.

இந்தியாவில் துருக்கிய வம்ச ஆட்சிநிறுவப்பட்டதன் வெற்றிச் சின்னமாக இது கட்டப்பட்டது. டில்லியை ஆண்ட அடிமைவம்சத்தின் முதலாவது மன்னர் குதுப்-உத்-தீனால் இந்தக் கோபுரம் கட்டப்பட்டது.

இக்கோபுரம் மொத்தம் 5 நிலைகளைக் கொண்டதாகும். குதுப்-உத்தீன் இந்தக் கோபுரத்திற்கு அடித்தளத்தை அமைத்து 21 மீட்டர் (சுமார் 63 அடி) உயரத்திற்கு முதலாவது நிலையைக் கட்டி முடித்தார்.

கி.பி. 1206 முதல் 1210 வரை குதுப்-உத்-தீன் டில்லியை ஆண்டார். குதுப் உத்தீன்னுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த சுல்தான் இல்டு மிஷ், இக்கோபுரத்தின் பாக்கி 4 நிலைகளைக் கட்டி முடித்தார். இந்தக் கோபுரத்தின் மொத்த உயரம் 72.5 மீட்டர் (சுமார் 217 அடி).

குதுப்மினார் கோபுரத்திற்குள் மொத்தம் 379 கருங்கல் படிகள் உள்ளன. இவை மிகவும் குறுகலானவையாகும். ஒரு படியில் ஒரே சமயத்தில் 4 பேர் மட்டுமே நிற்க முடியும்.

இந்தக் கோபுரம், காலத்தை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டு நிலைத்து நின்றுள்ளது.

இருமுறை இந்தக் கோபுரத்தின் மீது இடி விழுந்தது, டில்லியில் நடைபெற்ற பல பூகம்பங்களுக்கு ஈடுகொடுத்து நின்றுள்ளது.

1368-ல் இக்கோபுரத்தின் மீது இடி விழுந்தபோது, இதன் இரு நிலைகள் சேதமடைந்தன. அவற்றை அப்போது டில்லியை ஆண்ட பிரோஷ் ஷா துக்ளக் மீண்டும் கட்டினார்.

1503-ஆம் ஆண்டில், மீண்டும் குதுப்மினாரை இடி தாக்கியது. இதனால் இதற்கு விரிவான சேதமேற்பட்டது. அப்போது, டில்லியை ஆண்ட சிக்கந்தர் லோடி என்னும் மன்னன், இதனைப் பார்த்துத் திருத்தி அமைத்தார்.

1803-ஆம் ஆண்டில் நடைபெற்ற பூகம்பத்தில் இக்கோபுரத்தின் மாடப்பகுதி நகர்ந்து விழுந்து விட்டது.

இந்தக் கோபுரம் டில்லியில் தெற்குப் பகுதியில் இருக்கிறது. இதன் உள்ளே இருக்கும் சுற்றுப் படிக்கட்டுகளில் ஏறி மேலே சென்றால், அங்கிருந்து டில்லிமாநகர் முழுவதையும் பார்க்க முடியும்.

இந்தக் கோபுரம் 1211 முதல் 1235-க்குள் கட்டி முடிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. முன்னதாக அங்கே ஒரு விஷ்ணு ஆலயம் இருந்தது, அந்த ஆலயத்தை முகாலாயர் கைப்பற்றி அங்கு இந்தக் கோபுரத்தை எழுப்பியதாகக் கூறுவர். அந்த ஆலயத்தின் இடிபாடுகளை இன்னமும் குதுப்மினார் அருகில் காணலாம்.

# நமக்குள் பகையுண்டோ?

உலகம் முழுதும் ஒன்றாகி
உணர்வால் செயலால் ஒருமித்து
கலகம் நீங்கி வாழும்நாள்
கண்ணில் தெரிதல் எந்நாளோ?
பலவாய்ப் பிரிவுப் பகைசொல்லும்
பழக்கம் நீங்கி மண்ணுள்ளே
உலவும் மக்கள் எல்லோரும்
ஒன்றாய்க் கூடும் நாளென்றோ?
இனங்கள் கிறங்கள் மொழியென்று
இதனில் எதையும் எண்ணாமல்
எனது இனிய தாய்நாடு
என்னும் இயல்பை மறந்தெங்கும்
தனது தாயாய் தரணியினை
தினமும் தொழுது தரிசித்தால்
பிணக்குப் பிரிவுப் பிளவுண்டோ?
பிறகும் நமக்குள் பகையுண்டோ?

கே. சத்தியநாராயணன்
மேல்நிலை முதலாம் ஆண்டு
நேருஜி நினைவு நகரவை
மேல்நிலைப் பள்ளி
திண்டுக்கல்.



# பயனுள்ள பத்து நாள் முகாம்

இயற்கை நலம் மிக்க நீலகிரியில், அறியாமை போன்ற தவறுகளால் கேடுற்றிருக்கும் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கவும், இம்மலைவாழ் மக்கள் நலன் பெறவும் மத்திய அரசு, தமிழ்நாடு அரசு ஆகியவை பேரார்வமும் பெருமுயற்சியும் எடுத்துவருவது கண்கூடு.

அரசுப்பணிகளுக்கு உறுதுணையாக, நாட்டுநலப் பணித் திட்டத்தில் மாணவர்கள்செயல்பட்டு வருவது,நல்ல அறிகுறி அன்றோ? அவ்வகையில் உதகை அரசுகலைக் கல்லூரி,நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில், அண்மையில் புறச்சூழ்நிலை வளர்ச்சிப் பணிக்கான 10 நாள் முகாம் நடந்தது.

நீலகிரி, கோவை, பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் சுமார் 60 பேர் இம்முகாமில் கலந்து கொண்டனர். இவர்கள் உதகமண்டலம், முதுமலை ஆகிய இடங்களில் பல்வேறு பணிகள் செய்து, நீலகிரியில், இயற்கைச் சூழல பாதுகாப்பு, மேம்பாட்டுக்கு உதவியதோடு, மக்களிடையே விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினார்கள் என்றால் அது மிகையாகாது.

தொட்டபெட்டா மலையைச் சார்ந்த கோரிமேடு என்ற பகுதியில், மலைச்சரிவு சார்ந்த இடத்தில், முட்புதர்களும், செடி, கொடிகளும் இருண்டு அடர்ந்து கிடந்த காட்டு இடங்களைத் திருத்தும் மிகக் கடுமையான பணியில், மாணவ மணிகள் ஈடுபட்டனர்.

உதகைக் குளிர் காற்றையும் ஒரு பொருட்டாகக் கருதாது, 2 ஹெக்டேர் பகுதியை இவ்வண்ணம் இவர்கள் திருத்திச் சிறக்கச் செய்து முடித்தது பாராட்டுக்குரியது. இப்படியாக, இக்கடும்பணியில், இவர்கள் கைகள் பதம் பார்க்கப்பட்டன என்றாலும், மாணவர்களின் மன உறுதி அவற்றையெல்லாம் வென்று நின்றதை நேரிடையாகப் பார்க்க முடிந்தது.

இப்பணிகளின் தொடர்ச்சியாக கோரிமேடு வனப் பகுதியில், வன துறையினர் ஒதுக்கித் தந்துள்ள 5 ஏக்கர் பகுதியில், நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள், புத்தம் புதிய காட்டை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள்.

முகாமின் எஞ்சிய நான்கு நாட்கள் முதுமலைக் காடுகளில் கழிந்தன. கொடியதாக வருணிக்கப்படும் காட்டின் உட்பகுதியில் 13 கி.மீ. பகுதியை உள்ளடக்கி, மாணவர்கள் நடந்து சென்று வனச் சூழல் அறிவை வளர்த்துக் கொண்டனர்.

மாணவர்கள் 9 குழுக்களாகப் பிரிந்து, மோயாறு-மசினகுடியை ஒட்டியுள்ள "ஜெயதேவ் அவினியூ" என்ற வனப் பகுதியில், வன விலங்குகள் கணக்கெடுப்புப் பணியில் மிகுந்த தைரியத்தோடு ஈடுபட்டார்கள். காட்டெருமைகள், களிற்றினங்கள் போன்றவற்றைக் காணும் வாய்ப்புப்பெற்றார்கள். மற்றும் சிறுத்தை, புலிகள், கரடிகள் போன்ற விலங்கினங்களின் காலடிச் சுவடுகளை ஆங்காங்கு கண்ட மாணவர்கள், மும்முரமாக அவற்றை ஆராயும் பணியில் ஈடுபட்டார்கள்.

காடுகளைத் தீ பரவுவதினின்றும் காப்பது எப்படி? என்பது போன்ற விளக்கப் பயிற்சிகளிலும் மாணவர்கள் திறம்பெற்றார்கள். வனவிலங்குகளின் பண்பு நலம் அறியும் அறிவுப் பயிற்சி பெற்ற மாணவர்கள், அவற்றைப் பாதுகாத்து, அவைபோன்ற வனச் செல்வங்களை மேம்படுத்தும் வகையிலும் பயிற்சி பெற்றார்கள்.

முகாம் பணிகளை நேரில் பார்த்த அரசுத் துறை அலுவலர்களும், மக்கள் பிரதிநிதிகளும் வெகுவாகப் பாராட்டினார்கள்.



ஆண்டுகளுக்கு உழைக்கக்கூடியது என்றால், காங்கிரீட் கட்டை 50 ஆண்டுகள் உழைக்கும் திறனுள்ளவையாம்.

"பம்பாய் ஆழ்கடல் பகுதியில் பெட்ரோலியம் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுவதற்குக் கடலின் நடுவே மிகப் பெரிய இயந்திர மேடைகளை நிர்மாணிக்கும் பணியில் இந்நிலையம் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கியுள்ளது. இதனால், இதுவரையில் இப்பணியை நிறைவேற்ற வெளிநாட்டுத் தொழில் நுட்ப நிபுணர்களை நம்பி இருந்து வந்தநிலை மாறி விட்டது" என்று இந்நிலையத்தின் இயக்குநர் திரு பி.வி. இந்திரேசன் அவர்கள் கூறினார்.

கம்பிகளில் மின்சாரம் கொண்டு செல்லும்போது ஏற்படும் விரயத்தைக் கணிசமாகக் குறைப்பதற்குத் தொழில்நுட்ப ரீதியில் வழிமுறைகளைக் காண இக்கழகம் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி, அங்குள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சோதனை முறையில் மேற்கொண்ட 'நாராயணபுரத்திட்டம்' வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்தத்திட்டத்தை அமலாக்க வங்கிகளிடம் இருந்து வாங்கிய கடன்களை வட்டியுடன் திருப்பித் தந்துவிட்டு, சொந்த வருவாயிலேயே செயல்படும் நிலை இப்போது உருவாகி உள்ளது.

இந்த நிலையத்தின் மாணவர் விடுதிகளில், கழிவு நீரைச் சுத்தப்படுத்தி, மீண்டும் பயன்படுத்துவது குறித்து சோதனைகள் நடத்தப்பட்டு வெற்றிகரமாக அமலாக்கப்பட்டு வருவதையும் நாம் பார்க்கிறோம்.

சென்னை கூவம், அடையாறு ஆகிய ஆறுகளைச் சுத்தப்படுத்த என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது குறித்து ஐ.ஐ.டி. ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

இந்நிலையம், பெட்ரோலில் ஓடும் வாகனங்களில் 'எதனால்' சாராயத்தைப் பயன்படுத்தி ஓட்டுவது குறித்து ஆராய்ச்சி நடத்திய பிறகு, தற்போது டீசல் வண்டிகளில் 'எதனால்' பயன்படுத்துவது குறித்து ஆராய்ச்சிகள் செய்யப்பட்டும் வருகிறது. ஆல்கஹாலில் ஓடும் 'வேன்' ஒன்று வளாகத்தைச் சுற்றிச் சுற்றி வருவதைப் பார்க்கவும் செய்கிறோம்.

தமிழ்நாடு அரசு நன்கொடையாக வழங்கியுள்ள,620 ஏக்கரா பரப்பளவு கொண்டது இக்கழகம். இங்கே 2500 பேர் பயிலுகின்றனர். இவர்களுகளுள் 117 பேர் மாணவியர். இவர்களுக்காக 12 மாணவர் விடுதிகள் உள்ளன. 400 ஆசிரியர்கள் பணியாற்றும் இக்கழகத்தில், 1000 குடியிருப்புகள் உள்ளன. 2500 பணியாளர்களும் இருக்கின்றனர்.

இந்த வளாகம் ஒரு நகரியமாகவே விளங்குகிறது. இந்த வளாகத்துக்குள் குழந்தைகள் பூங்கா, மருத்துவமனை, பள்ளிகள், பணியாளர்கள் - மாதர் சங்கங்கள், கோவில்கள், அஞ்சல் நிலையம், வங்கி, அங்காடி, திறந்தவெளி அரங்கம், நீச்சல் குளம், விளையாட்டுத் திடல் போன்ற பல வசதிகள் உள்ளன. வளாகத்துக்குள்ளே போய் வர 25 காசுக் கட்டணத்தில் தனியாகப் பேருந்துகளும் விடப்படுகின்றன.

பழமரம் நாடிவரும் பறவைகள் போல, உலகின் பல பகுதிகளிலிருந்தும் வரும் நூற்றுக்கணக்கான மாணவர்களைத் தம்பால் ஈர்க்கும் இந்தியத் தொழில் நுட்பக் கழகம், சொந்தக்காலில் நிற்க-சுயதேவையைப் பூர்த்தி செய்ய, ஓர் அறிவாலயமாகத் திகழ்ந்து வருகிறது.

மாணவர்களின் திறமையை கல்விக் கழகத்தின் அரிய பெரிய பணிகளைப் பொதுமக்களும் காணவேண்டாமா? அதற்காகப் பிப்ரவரி 27,28 தேதிகளில் பொது மக்கள் — மாணவர்கள் இங்கே அனுமதிக்கப்பட்டார்கள். அவர்கள் பிரம்மாண்டமான அந்தக் கல்வி நிலையத்தைப் பார்த்து மகிழ்ந்தார்கள், பாராட்டினார்கள். இத்தனை பெருமை வாய்ந்த கல்வி நிலையத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எல்லாருக்கும் எழுவது இயல்புதானே? அதற்கு இரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்!

## காகிதத் தொழிற்சாலை நிறுவிட...

திருச்சி மாவட்டம் புகளூரில் 190 கோடி ரூபாய் திட்டத்தில் கரும்புச் சக்கரையை மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் டன் செய்தித்தாளும் 40 ஆயிரம் டன் எழுது தாளும் தயாரிக்கும் காகிதத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் தொழிற்சாலையில் 3 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும் 5 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு ஏற்படும். இத்திட்டத்திற்கு உலக வங்கி, இந்திய அரசு மற்றும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் மூலம் 10 கோடி அமெரிக்க டாலர் கடன் உதவி வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகவலை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்கள்.

## நெசவுத் தொழில் மேம்பட...

நெசவுத் தொழில் மேம்பாட்டிற்காகப் பல்வேறு முயற்சிகளை அரசு செய்து வருவதாகவும் தமிழ்நாட்டில் ஐந்து இடங்களில் கோ-ஆப்டெக்ஸ் வடிவமைப்புப் பணி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் இந்த நிலையங்களுக்கு ஆலோசனை கூறப் பெண்கள் கல்லூரி முதல்வர்கள், பெண் மருத்துவர்கள், பெண் ஊழியர்கள், மாணவிகள் மற்றும் குடும்பப் பெண்கள் அடங்கிய 20 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த குழுவினர் அவ்வப்போது புதிய வடிவமைப்புகளைத் (Designs) தேர்ந்தெடுப்பார்கள் என்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார்கள்.

## மாணவர் பக்கம்



# நில்-கவனி-செல்!

சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில், பெரியார் திடலுக்கு அருகில், போக்குவரத்துத் துணை ஆணையாளர் அலுவலகம் இருப்பதைப் பார்த்து இருப்பீர்கள். அங்குதான் சிறுவர் போக்குவரத்துப் பூங்கா (Children's Traffic Park) உள்ளது.

இந்தப் பூங்காவில் சென்னை நகரச் சாலைகள் போலவே, பல குட்டிச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. சாலைகள் போக்குவரத்து அடையாளங்கள், சமிக்ஞை விளக்குகள் ஆகியவையும் இங்கு பொருத்தப்பட்டுள்ளன.

பள்ளிப் பருவத்திலேயே போக்குவரத்து விதிமுறைகளைத் தெரிந்து கொள்வது, வருங்காலத்துக்கு மிகவும் நல்லது. அதனை மனத்தில் கொண்டுதான் இந்தப் பூங்காவை அமைத்து, நகரத்திலுள்ள பல பள்ளி மாணவ, மாணவியரை இதில் ஈடுபடுத்தி வருகின்றனர் என்று உறுதியாகக் கூறலாம்.

இந்தப் பூங்கா முன்பிருந்த பர்மாஷெல் எண்ணெய் நிறுவனத்தால் ஒன்றரை இலட்சம் ரூபாயில் கட்டுப்பட்டு, பின்னர் பாரத் பெட்ரோலியம் கூட்டு நிறுவனத்திற்குக் கிடைத்தது; பின்னர் இது சென்னை நகர காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சென்னை நகரப் போக்குவரத்துக் காவல்துறை அதிகாரிகள் இதுவரை 27,065 மாணவர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளார்கள். 1981-82ஆம் ஆண்டில் மட்டும் 4,218 மாணவர் பயிற்சி பெற்றனர்.

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில் (1979), போக்குவரத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பங்கு கொண்டு சிறந்த முறையில் சேவை புரியும் மாணவர்களின் பள்ளிக்குச் சுழற் கோப்பைப் பரிசுத் திட்டத்தை, பாரத் பெட்ரோலியம் கூட்டு நிறுவனம் அறிவித்தது.


ஆண்டுதோறும் இந்தச் சுழற் கோப்பைப் பரிசுடன், பல்வேறு பரிசுகளும் சிறுவருக்கும், சிறுமியருக்கும் அளிக்கப்பட்டுள்ளன. சென்னை நகர போக்குவரத்துக் காவல் துறையினர் ஏற்பாடு செய்துள்ள வினா-விடை எழுத்துப் போட்டிகளிலும் சிறுவர், சிறுமியர் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.

இப்போட்டிகளில் 30 பள்ளிகள் கலந்து கொண்டன. வினா-விடைப் போட்டியில் மிக உயர்ந்த மதிப்பெண் பெற்ற பள்ளி, சுழற் கோப்பைப் பரிசைப் பெற்றது.

2.3.82 அன்று இந்தப் பூங்காவிலுள்ள மேடையில், பாரத் பெட்ரோலியம் சாலைப்பாதுகாப்புக்கான சுழற்கோப்பை வழங்கும் விழா நடந்தது.

காவல்துறை ஆணையாளர் திரு எஸ். ஸ்ரீபால் அவர்கள் சுழற்கோப்பையை வழங்கிப் பேசுகையில், இளம் வயதிலேயே சாலைப் போக்குவரத்து விதிமுறைகளைக் கற்றுத் தந்தால், அது அப்படியே மனத்தில் பதியும் என்றார்.

இந்த விழாவில் வினா-விடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் காவல் துறை ஆணையாளர் அவர்கள் வழங்கினார்.



நடந்தே ஒரு இலட்சத்து இருபதினாயிரம் கிலோ மீட்டர் பயணம் செய்து உலகச் சாதனையை ஏற்படுத்த வேண்டும் என்ற இலட்சியத்தோடு ஆந்திர மாநிலம் அனந்தபூரைச் சேர்ந்த 20 வயது இளைஞர் வெங்கடேஷ் புறப்பட்டிருக்கிறார்.

பட்டதாரியான வெங்கடேஷ், தமது கல்லூரி வாழ்க்கையிலேயே இம்மாதிரி சாதனைகள் சிலவற்றை நிகழ்த்தியிருக்கிறாராம். இதையும் மிஞ்சி புதிய சாதனை ஏற்படுத்துவதே தமது இலட்சியம் என்கிறார்.

மத்திய அரசின் கல்வித் துறையின் கீழ் உள்ள நேரு யுவ கேந்திரா, வெங்கடேஷின் இப்பயணத்திற்கான ஆதரவை அளித்துள்ளது.

# ரூ55 முதல் ரூ55000 வரை

முட்டை ஓட்டின் மேல் ஓவியம் வரையலாம். ஆனால், முட்டைக்கு உள்ளே ஓவியம் வரைய முடியுமா?

அரிசியைச் சோறாக்கலாம். அதிலே ஒரு அரசியை உருவாக்க முடியுமா?

சந்தன மரத்தை இழைத்து மணம் நுகரலாம். ஆனால், அதிலே நுண்ணிய சிலை வடிக்க முடியுமா?

'முடியாது என்பது என் அகராதியிலே இல்லை' என்று சொல்லும் வகையிலே, இத்தனை அற்புதங்களையும் பார்க்க முடிகிறது அந்த ஓவியக் கண்காட்சியில்!

சென்னை அண்ணா சாலையிலுள்ள வி.டி.ஐ. என்று புகழப்படும் 'விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்' ஆண்டுதோறும் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளில் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்துகிறது. அதேபோல, இவ்வாண்டும் நடந்தது. இது பன்னிரண்டாவது கண்காட்சியாகும்.

இந்த ஓவியக் கண்காட்சியில் வழக்கம்போல் தமிழ்நாடு, கர்னாடகா, ஆந்திரம், கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்து கலைஞர்கள் கலந்து கொண்டார்கள். இவர்களில் தமிழ்நாட்டுக் கலைஞர்களே அதிகம் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

இந்தக் கண்காட்சியில் 168 படைப்புக்கள் இடம் பெற்றன. கல், துணி, காகிதம், மரம், உலோகம் ஆகியவற்றாலான ஓவியங்கள், சிலைகள் முதலானவை கண்ணைக்கவரும் வகையிலே அமைந்துள்ளன. இவ்வாண்டு நடந்த கண்காட்சியில் சிறப்பு அம்சம், வேங்கை மரத்தாலான பெரிய, அழகிய, மிக நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த வாயில் கதவுதான்! ஆந்திர மாநிலம் சித்தூரைச் சேர்ந்த கே. தர்மாச்சாரி என்பவர் இதனை உருவாக்கியுள்ளார். இதை அவர் உருவாக்க ஒன்றரை ஆண்டுகள் ஆயினவாம். இதன் விலை எவ்வளவு தெரியுமா? - 55,000 ரூபாய்! கண்காட்சியிலே உள்ள கலைப் பொருள்களில் அதிக விலையுள்ளது இதுவேயாகும்! குறைந்த விலை எவ்வளவு? ரூ. 55

இங்கே வண்ண ஓவியங்கள், ஆந்திரக் கலைஞர்களின் கைவண்ணத்தில் மிளிரும் 'கலம்காரி' எனப்படும் சித்திரங்கள், வண்ண மரத்துண்டுகளைப் புதைத்து உருவாக்கப்படும் படைப்புகள் (Inlay and Relief work) எம்ப்ராய்டரி, கல், மர, உலோகச் சிலைகள் எல்லாம் படைப்பாளிகளின் கை வண்ணத்தை - திறமையை வெளிப்படுத்துகின்றன.

இந்தக் கண்காட்சியில், ஊனமுற்ற பள்ளி மாணவர்கள் உருவாக்கிய சித்திரங்கள், கைவேலைப்பாடுகள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கவனிக்கும்போது, ஊனம் அவர்களிடத்திலே இருந்ததே தவிர, அந்த ஓவியத்தில் இல்லை என்பதைப் பார்க்க முடிந்தது.

'கீதோபதேசம்' என்னும் பெரிய அளவு வண்ணப்படம் ஒன்று காட்சியளிக்கிறது. இது வண்ணத் துண்டுத் துணிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இதன் விலை ரூ. 3250. இதனைப் பார்க்கின்றபோது உழைப்பும் திறமையும் இருந்தால், வேண்டாத பொருள் எதற்குமே ஒரு உருவம் கொடுக்க முடியும்; உயிர் கொடுக்க முடியும் என்று உணர முடிந்தது.



—பி. வி. கிரி.


. மாமல்லபுரம் சிற்பக்கலைப் பள்ளியில் பயிலும் மாணவர் உருவாக்கிய கல்லாலான கடவுள் சிலை கண்ணைக் கவர்கிறது. இதன் விலை ரூ. 11,800.

வட்ட வடிவ மேசை ஒன்றை நம் கண்கள் வட்டமிடுகின்றன. அதில் வண்ண மரத்துண்டுகளைப் புதைத்து உருவாக்கிய, (Inlay work) சித்திர வேலைப்பாட்டைக் கண்டு வியக்கிறோம். ஆம், இராமாயணக் காட்சிகளை விளக்குகிறது இந்த (வி)சித்திர மேசை! இதன் விலை ரூ. 45,000. கர்நாடகத்தைச் சேர்ந்த கௌரய்யாவின் கைவண்ணம் இது.

ஓவியர் மாதவன் பிள்ளையின் வண்ண ஓவியங்கள் (oil paintings) கண்ணைக் கவர்கின்றன. ரூ. 2000 விலையுள்ள உமர் கய்யாம் சித்திரம் மனத்தைக் கவர்கின்றது.

திருமழிசையைச் சேர்ந்த டி. கே. மூர்த்தியின் சந்தன மரத்தாலான மிகமிக நுண்ணிய வேலைப்பாடான சிவதாண்டவம் காட்சியைச் சித்திரிக்கும் படைப்பினை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம். இவரது தந்தைதான் அரிசியால் உருவங்களைச் சமைத்திருக்கிறார்.

அங்கே இருப்பது என்ன? வெள்ளைக் குட்டி யானை ஒன்று நிற்கிறதே! ஆம். மைசூரைச்சேர்ந்த எம்.வி. முதலியார் உருவாக்கிய இந்த யானையின் விலை ஆயிரம் அல்ல, 9,500! இது விற்பனையாகிவிட்டது. மிக விரைவில் அமெரிக்காவுக்குச் செல்லவிருக்கிறது இந்த யானை!.





பார்வையில்லாதவர் படம் வரைய முடியுமா? அல்லது இரு கைகளும் இல்லாதவர்தான் படம் வரைய முடியுமா?


'முடியும்' என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறவர்கள் இரண்டு சிறுவர்கள்!

பார்வையற்ற சிறுவன் போட்ட படத்துக்கு முதல் பரிசும், கைகள் இரண்டும் இல்லாத சிறுவன் போட்ட படத்துக்கு இரண்டாவது பரிசும் கிடைத்தன!

## ஓவியத்தில் இல்லை ஊனம்

சென்னை அண்ணாசாலையிலுள்ள விக்டோரியா டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட் சார்பில், ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஓவியப் போட்டி பிப்ரவரி 20-ந் தேதி கில்டு ஆப் சர்வீஸ் மண்டபத்தில் நடந்தது.

இந்தச் சிறுவர்கள் சித்திரப் போட்டியில் 23 கல்வி நிலையங்கள் கலந்து கொண்டன. இவற்றில் மூலம் 77 சிறுவர்களும் 32 சிறுமிகளும் கலந்து கொண்





டார்கள். இவர்கள் அனைவரும் ஊனமுற்ற குழந்தைகளாகும். போட்டியில் பங்கு கொண்ட 12 கல்வி நிலையங்கள் மூலம் 20 சிறுவர்களும், 5 சிறுமிகளும் பரிசு பெற்றார்கள்.

இவர்களுள் முதல் பரிசான ரூ. 500ஐ தட்டிச் சென்றவன் தான், சென்னை அடையாறு செயின்ட் லூயிஸ் காது கேளாதோர், பார்வையற்றோர் பள்ளியைச் சேர்ந்த சி. மகாதேவன். 14 வயதான இவன் இரு கண் பார்வையற்றவன்.

"நான் முதன் முதலாக இந்தப் போட்டியில் கலந்து கொண்டேன். எடுத்த எடுப்பிலேயே நான் முதல் பரிசு பெற்றதற்குக் காரணம் எனக்குப் பாடம் மட்டுமல்ல படம் வரைவதற்கும் பயிற்சி தந்த ஆசிரியர் திரு ஏ. எஸ். நடராஜன் அவர்களேயாவர்" என்று கூறும் அம்மாணவன், மெழுகு கலர் பென்சிலை உபயோகித்துப் படம் வரைந்துள்ளான். ஒருசாலை-பஸ் செல்கிறது-ஆடு, மாடுகளை ஒருவன் ஓட்டிச் செல்கிறான்- இந்தச் சித்திரம் தான் முதல் பரிசு பெற்றது.

இந்தச் சிறுவனால், வண்ணம் கொடுக்க எப்படி முடிந்தது?

"எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் லேசாக ஏதோ தெரிகிறது. ஆனால், அது என்ன வண்ணம் என்று மட்டும் தெரியவில்லை" என்று கூறும் இம்மாணவன் 6வது படிக்கிறான். பிறவியிலேயே பார்வை இழந்தவனாம்.

இந்தப் போட்டியில் 2-வது பரிசு பெற்ற சிறுவன்தான் சுப்பிரமணி. சென்னை அறிஞர் அண்ணா நகர் "மித்ரா" நிறுவனத்தைச் சேர்ந்த இவனுக்கு, இரு கைகளும் கிடையாது. பிறகு எப்படிப் படம் வரைந்தான்?

தனது வலது காலில், பிரஷ்ஷைப் பிடித்து வரைந்திருக்கிறான்!

படம் வரைவது மட்டுமல்ல, சாப்பிடுவதும் காலில்தான்! கால் விரல் இடுக்கில் ஸ்பூனைப் பிடித்துச் சாப்பிடுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. சாப்பிட யாராவது உதவி செய்தால், வேண்டாம் என்று தடுத்து விடுகிறானாம் அவன்!

போட்டியில் கலந்து கொண்ட - பரிசு பெற்ற இந்த ஊனமுற்ற குழந்தையைப் பார்க்கும்போது, அவர்கள் உள்ளத்தில் மட்டுமல்ல ஓவியத்திலும் இல்லை ஊனம் என்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது"

மகாத்மா காந்தியடிகளின் நூற்றாண்டு விழா நினைவுப் பரிசு வழங்கும் விழா மார்ச் 11-ந் தேதி நடந்தது.

சென்னை உயர்நீதி மன்றத் தற்காலிகத்தலைமைநீதிபதி திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். அவர் பேசுகையில், "தமிழகத்தில் உள்ள சிறந்த கைவினைக் கலைஞர்களைத் தெரிந்தெடுந்து, அவர்களுக்குத் தேவையான ஊக்கம் கொடுத்தால், கலைத்துறையில் தமிழகம் உலகத்திலேயே முன்னணி நிலை வகிக்கும்" என்றார்.

இவ்வாண்டு நடந்த போட்டியில் திருமழிசையைச் சேர்ந்த இளைஞர் திரு டி.கே. மூர்த்தி முதற்பரிசு பெற்றார். அதற்கான இரண்டாயிரம் ரூபாயும், சான்றிதழும் அவருக்கு வழங்கப்பட்டன.

சந்தன மரத்தாலான சிவ தாண்டவக் காட்சியை மிக நுண்ணிய வேலைப்பாட்டோடு சித்திரித்தமைக்காக இவர் இப்பரிசைப் பெற்றார். இதைச் செய்துமுடிக்க எட்டு மாதங்கள் பிடித்ததாம்.

தென் மாநிலங்களைச் சேர்ந்த திருவாளர்கள் இக்பால் உசேன், பி.பி. சுரேந்திரநாத், கே. தர்மாச்சாரி, ரவீந்திரநாத் சிட்டிபாபு, வி. மாதவன் பிள்ளை, பி. கௌரய்யா ஆகியோரின் சிறந்த கலைப்படைப்புகளுக்குத் தலா ரூ 1000 பரிசாக வழங்கப்பட்டது.

இந்த விழாவைத் துவக்கி வைத்து, நீதிபதி திரு எஸ். நயினார் சுந்தரம் அவர்கள், போட்டியில் கலந்து கொண்ட கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார்.




# தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு - ஒரு கண்ணோட்டம்

டாக்டர்: பா. நடராஜன்

தொழில் வளர்ச்சி என்ற சொல்லானது வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொருளில் அல்லாமல், இங்கே அதைவிட ஆழமான, விரிவான ஒரு கருத்தில் கொள்ளப்படுகிறது. தொழில் வளர்ச்சி என்பதன் நோக்கம் மேன்மேலும் தொழிற்பிரிவுகளைத் துவக்குதல் -அதிகமாக உற்பத்தி செய்தல் என்பது மட்டுமல்ல; அதனுடைய நோக்கமே ஆழமான பொருள் கொண்டதாகும். அதிக அளவில் உற்பத்தி என்பது அந்தந்த வட்டாரத்தின் சமசீரான வளர்ச்சியோடு ஒருங்கிணைந்து அமைந்திருக்க வேண்டும். வட்டாரத்தின் வளர்ச்சி தொழில்களின் வளர்ச்சி இரண்டும் கைகோத்து சீராக நடைபோடவேண்டும். அது மட்டுமல்ல; அதனால் உருவாக்கப்படும் வேலைவாய்ப்பு வசதி அளிக்கும் நோக்கமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எல்லாவற்றையும் விட, முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய அம்சம்-இதற்கான திறவுகோல் மத்திய அரசின் கையில் உள்ளது என்பதேயாகும். எல்லாவற்றிலும் இறுதி முடிவு செய்வதும் மத்திய அரசே. நாட்டின் கொள்கை நடை முறைகளுக்கொப்பவே, மாநிலங்களின் தொழில் முன்னேற்றம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, தொழில்வளர்ச்சியில் இந்த மாநிலம் முந்தியுள்ளது; இந்த மாநிலம் பிந்தியுள்ளது என்று வரிசைப்படுத்திக் கூறுவதை அப்படியே அப்பட்டமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு மாநிலத்தின் தொழில் முன்னேற்றத்தினை இன்னும் விரிவான பரந்தஆய்வின் அடிப்படையின் கீழ்தான் துல்லியமாகக் கணிக்க முடியும்.

இப்பொழுது காற்றுவாக்கில் பரவலாக சொல்லப்படுகிற ஒரு கூற்று, தமிழகத்தின் வளர்ச்சி-தொழில் வளர்ச்சி அப்படியே ஸ்தம்பித்துப் போய் கிடக்கிறது என்பதாகும். தமிழகம் தொழில் வளர்ச்சிப் பாதையிலிருந்து தடம் புரண்டுவிட்டது என்ற ஒரு கருத்தும் நிலவிவருகிறது. இந்தக் குற்றச்சாட்டு ஒரு தலைப்பட்சமாகக் கூறப்படுகிறதென்று முழுக்க முழுக்க கூறுவதற்கில்லையென்றாலும், இந்தக் குற்றச்



சாட்டு, அளவுக்கு மீறியது; ஆராய்ந்து பாராமல் வாரி வீசப்படுகிற ஒரு குற்றச்சாட்டு என்று நான் கருதுகிறேன். ஆழ்ந்து, நிதானமாகச் சிந்தித்து நோக்கினால், உண்மை நிலை என்ன என்பதும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை நல்ல முறையில் சீர்தூக்கிப் பார்க்கவும் இயலும். மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்பது நாட்டின் தொழில் வாய்ப்புகளுடன் பின்னிப் பிணைந்து இருப்பதைக் காண வேண்டும். உண்மையில் எத்தனைவிதமான கட்டுப்பாடுகளுக்கும் - நுண்ணிய சிக்கல்களுக்கும் மாநிலம் இத்துறையில் ஆளாக வேண்டியுள்ளது என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்பொழுது தேசிய நீரோட்டத்திற்கொப்ப மாநிலம் கைகோர்த்து வந்துள்ளது என்பதே ஒரு சாதனை என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.


1950 முதல் 1960வரையிலான காலகட்டத்தில் நமது மாநிலமானது 'தொழில் மும்மூர்த்திகள்' என்ற வரிசையில் மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களோடு இணைந்து, நாட்டின் வேகமான தொழில் முன்னேற்றத்திற்கு அடிகோலியதாக அமைந்திருந்தது. 60-ல் சராசரி தொழில் வளர்ச்சி விகிதம் 6.2 சதவிகிதமாகும். நாட்டின் நிகரதொழில் உற்பத்தியில் 10 சதவிகிதம் அளவு தமிழகத்தில் உற்பத்தியாகியது. நாட்டின் பெரிய, சிறிய தொழில் உற்பத்திச் சாலைகளில் 11 சதவிகிதம் தமிழ்நாட்டில் மட்டும் இருந்தது.

பிரிட்டிஷ் ஆதிக்க நாட்களில், இந்த மாநிலம் பெற்றிருந்த அருமையான தொடக்க நிலை, பெரும் தொழில்கள், மின்சக்தி நிலையங்கள் பாசனத் திட்டங்கள் உருவாக்கித்தந்ததின் மூலம், பெருந்தொழில்கள் அமைப்பதற்கான அடித்தளங்களை உருவாக்கித் தருதல் ஆகியவற்றில் மைய அரசு காட்டிய தாராள மனப்பாங்கு, வேளாண்மைத் துறையிலிருந்து கிடைத்த நிலையான சுமுகமான உதவி, எல்லாவற்றிற்கும் மேலாக, ஓரளவுக்குப் படித்த-தொழிற்பயிற்சி பெற்றிருந்த தொழிலாளர்கள், அவர்களை வழிநடத்திச் செல்ல கணிசமான அளவில் முதலீட்டாளர்கள் இந்த எல்லா அம்சங்களும் மாநிலத்தை அதனுடைய இயற்கையான தட்டுப்பாடுகளை வெற்றிகரமாக சமாளித்து வெற்றி காணவும், தொழில் வளர்ச்சிப் பாதையில் ஏறுநடை போடவும் உறுதுணையாக அமைந்திருந்தன.

## மாறுபட்ட அடித்தளம்

மேற்சொன்ன இந்தச் [illegible] மான அம்சங்களின் [illegible]

இந்நாள் வரையில் நமதுதொழில் துறையில் ஆதிக்கம் செலுத்தி வந்த நெசவுத் தொழில்-ஆடைகள் தயாரிக்கும் தொழிலிலிருந்து மாறுபட்டு - பல்வேறு விதமான வேறு வேறு நவீனரகத் தொழில்களில் மாநிலம் தன் கவனத்தைத் திருப்பியது. பொறியியல், இரசாயனப் பொருட்கள், மின்னணுக் கருவிகள் உருவாக்கிடும் கூடங்கள் உருவாகத் தொடங்கின. மணலி, சென்னை, மேட்டூர்;



தூத்துக்குடி போன்ற இடங்களில் பெரிய பெரிய தொழிற்கூடப் பிரிவுகள் உருவாகி-நல்லதொரு அடித்தளம் அமைக்கப்பட்டு அதன் தொடர்பாக சிறுசிறு தொழில் பிரிவுகள், தொழில் பேட்டைகள் தோன்றலாயின. இராணிப் பேட்டை மற்றும் ஒசூர் பகுதிகளில் மலர்ந்துள்ள தொழில் வளர்ச்சி-அதில் நாம் பெற்ற வெற்றிகள் இவை மட்டுமே நமது மாநிலத்தை பஞ்சாப், அரியானா, குஜராத் போன்ற மற்ற மாநிலங்களைப் போல் தொழில் வளர்ச்சியில் சிறந்ததொரு முன்னோடி மாநிலம் எனப்பறை சாற்றிக்கொண்டிருக்கப் போதுமானவையாகும். ஆனால் இங்கே இந்தக் காலக்கட்டத்தோடு -இந்த மாநிலத்தில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. தொழில் மயமாக்குதல் என்பது அயராமல் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்க வேண்டிய ஒரு கடுமையான முயற்சி என்பது புரிந்து கொள்ளப்படாமல் - தேக்கம் ஒன்று ஏற்பட்டது.


தமிழகத்தில் தொழில் துறையில் வளர்ச்சி 1970க்கு மேலும் தொடர்ந்தது. இருந்தாலும், கடந்த பத்தாண்டுக்கால மத்தியில் நாடு முழுமைக்கான தொழில் முன்னேற்றத்தைப் பாதிக்கும் வகையில் ஏதோ ஒரு நலிவு நாட்டிலும்-இந்த மாநிலத்திலும் ஏற்பட்டுவிட்டதோ என்று எண்ணும் படியான நிலை உருவாயிது என்றே சொல்லலாம். தொழில் உற்பத்தியின் வளர்ச்சி 1974ல் உச்சகட்டத்தை அடைந்து. அதன் பிறகு பல்வேறு வேகமான தடுமாற்ற நிலைகள் ஏற்பட்டு விட்டன. 1979ல் இதன் அளவு 171ஆகக் குறைந்தது. 1974ல் இதன் அளவு 180. அது மட்டுமல்ல; 70ல் மாநிலத்தின் தொழில் நிலை இவ்வளவு ஏற்றத்தாழ்வினைக் காணவில்லை. மாநிலத்தின் நிகர உற்பத்தியில் தொழில் பிரிவின் பங்கு 1970-71ல் 85.6 சதவிகிதம்;

## மந்தமான முன்னேற்றம்

இந்த மந்தமான முன்னேற்றத்துக்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லலாம்; சில மாநிலங்களிலேயே ஏற்பட்டவை; சில இந்த மாநிலத்துக்கு வெளியே ஏற்படுகின்றவையாகும். மத்திய முதலீடு படிப்படியாகக் குறைந்துவிட்டது; இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிற மற்ற மாநிலங்களுக்கு மத்திய அரசின் முதலீடு திருப்பிவிடப்பட்டது. அடித்தள அமைப்பு முறையில் ஏற்பட்ட நெருக்கடிகள், தட்டுப்பாடுகள் மறுபடியும் தலைதூக்க ஆரம்பித்துவிட்டன. மின்சக்தி நிலைமை திருப்திகரமாக இல்லை. பொதுவாக, தனியார்துறையிலிருந்து எதிர்பார்த்த வரவேற்பு இல்லாமல் போய்விட்டது. அத்துடன், தொழில் உறவுகள் படிப்படியாகக் குறைந்துவிட்டன.

மத்திய அரசின் பங்கீடு குறைந்து அதனால் உருவாக்கப்பட்ட மந்த நிலையை, மாநில அரசு எடுத்துக் கொண்ட பெரு முயற்சி-அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட சிறுசிறு தொழில் பிரிவுகள் கணிசமான அளவுக்கு நிறைவு செய்தன என்றே சொல்ல வேண்டும். எண்ணிக்கையிலும், உற்பத்தியிலும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் - இந்த சிறு தொழில் பிரிவுகள் தொடர்ந்து தங்களுடைய நிறைவான பணியையாற்றிக் கொண்டு வந்துள்ளன.





வேலைவாய்ப்பு அளிப்பதில் இந்தியாவிலேயே அவை மற்ற மாநிலங்களை விட தலையாய இடத்தைப் பெற்றிருந்தன. அகில இந்தியாவில் 15 சதவிகித அளவினை அவை பெற்றிருந்தன. இந்தக்காலக்கட்டத்தில் தொழில் கூட்டுறவுகளின் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. தொழில் துறையில் புதுப் புது முயற்சிகளை மேற்கொள்வதற்காக சிப்காட், டிட்கோ, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிட்கோ போன்ற நிறுவனங்களை மாநில அரசு உருவாக்கியது. இதன் விளைவாக, 60ஆம் ஆண்டின் வேகத்தை எட்டிப்பிடிக்க முடியாவிட்டாலும், தேர்ந்தெடுத்த பகுதிகளில் மாநிலம் தொடர்ந்து முன்னணியிலே நின்று வந்தது. தோல், மற்றும் தோலிலான பொருட்கள் உற்பத்தியில் அதன் பங்கு 70 சதவிகிதமாக அமைந்திருந்தது. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிக் கருவிகள், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள் தயாரிப்பதில், மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு தான் அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது. 1975-76ல் மாநிலம் மொத்தம் 142 உரிமங்களைப் பெற்றது; நாட்டிலேயே இது இரண்டாவதாகும். 1978-79ல் தமிழகம் பெற்ற உரிமங்கள் 31 தான். இருந்தாலும் மாநிலங்களின் வரிசையில் இந்த எண்ணிக்கை மூன்றாவதாகும்.

## படிப்படியான சீரான முன்னேற்றம்

கடந்த இரண்டாண்டுகளாக, தொழில் துறையில்படிப்படியான சீரான முன்னேற்றத்தினை நாம் காண்கிறோம். மின்சக்தி நிலைமை அவ்வளவு தாறுமாறாக இல்லாமல்-ஓரளவுக்கு உதவிகரமாக இருக்கிறது. தொழில் உறவுகள் சீர்பட்டு உள்ளன. அத்துடன் விற்பனை வரியில் சலுகைகள் போன்ற தொழில் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருக்கக் கூடிய சில அறிவிப்புகளை கடந்த இரண்டாண்டுகளாக நிதிநிலை அறிக்கைகளில் கண்டோம். இவையெல்லாம் தொழில் வளர்ச்சிக்கு சாதகமானதொரு சூழ்நிலையை உருவாக்கிட உறுதுணையாக அமைந்தன. 1980ல் தமிழ்நாடு 37 தொழில் உரிமங்களைப் பெற்றது. 1981ல் ஜனவரியிலிருந்து சூன் வரையிலான இடைப்பட்ட காலத்திலும் மேலும் 14 உரிமங்கள் பெறப்பட்டன.

மற்ற மாநிலங்களைப்போலவே தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியின் எதிர்காலமும் -மாநிலம் எடுக்கின்ற முயற்சிகளோடு மட்டும் அல்லாமல் மத்திய அரசின் ஒதுக்கீட்டின் அளவையும் பொறுத்தே அமைந்திருக்கும். மின்சக்தி நிலைமை நிச்சயம் இதை முடிவு செய்கிற ஒன்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. நமது மாநிலத்தில் நீர் மின்திட்டங்களுக்கு இனிமேல் வழிவகை கிடையாது. ஆகவே அனல்மின் நிலையங்களையே நமது மாநிலம் சார்ந்துள்ளது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல் ஓரளவுக்கு நமக்கு உதவியாக இருக்கும். அணு மின் சக்தி என்பது நீண்ட நெடுநாட்களாகவே ஆசைக் கனவாகத்தான் இருந்து வருகிறது.




இப்படிப்பட்ட நேர்வுகளில், மத்திய அரசுக்கு முதலீடு செய்கின்ற பொறுப்பு இருந்தாலும், மாநில அரசுக்கு அவற்றை திறமையாக நிர்வகிக்கின்ற பொறுப்புள்ளது. சாண எரிவாயு வளர்ச்சிக்கு மாநிலத்தில் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. இந்த வாய்ப்பை மாநில அரசு நழுவ விடக்கூடாது. நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மிக அதிக அளவில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உள்ளடக்கியுள்ள சிறுதொழில் பிரிவுகளுக்கு பல பிரச்சனைகள் உள்ளன. உரிமங்களைப் பெறுதல்; மூலப் பொருட்கள் கிடைக்கப் பெறுதல்; கடன் தொகை கிடைக்கப் பெறுதல்போக்குவரத்து போன்ற பல பிரச்சனைகள் உள்ளன. இவையெல்லாம் தீர்க்க முடியாத பிரச்சனைகள் அல்ல; தன்னுடைய வழி வகைகளிலிருந்தே மாநில அரசு இவற்றிற்கெல்லாம் வழிவகை காணமுடியும்.

மேலும் சுமுகமான தொழில் உறவுகள், மேன்மேலும் பாடுபட தூண்டிவிடும் வரி அமைப்பு முறை, நிலம், நீர்மின்சக்தி போன்றவைகளை ஒதுக்குவதில் நடைமுறைகளை மேலும் இலகுவாக்குதல், உடனடியாக நடவடிக்கை எடுத்தல் இவற்றையெல்லாம் மாநிலமே செய்யமுடியும். மாநிலத்தின் தொழில்முயற்சிக்கு இந்த முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மாநிலத்தின் தொழில்வளர்ச்சி ஓங்கிடவும், பல்கிப் பெருகவும் ஆக்கரீதியாக வெகுவாகப் பயன்படும். அதுமட்டுமல்ல, இப்படிப்பட்டதொரு சாதகமான சூழ்நிலை, வெளிமாநிலத்தவரையும் நம் மாநிலத்தில் தொழில் துவங்க ஈர்க்கக்கூடும்.

இருந்தாலும், இத்துணை முயற்சிகளினால் கிடைக்கப் பெறும் பயன் முழுமையாக இராது. ஓர் அளவினதாகவே இருக்கும். நமது நாட்டின் அமைப்பு முறையே அதற்குக் காரணம். இதற்குக் காரணம் நமது மாநிலத்தில் தொடர்ந்து தொழில் வளர்ச்சி நிலவவேண்டுமானால், குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்ற அளவிலாவது பெரிய தொழில்கள் மையம் ஒன்று இருத்தல் அவசியம். சிறு தொழில் பிரிவுகள் துணைப்பிரிவுகளாக இத்தொழில் மையத்துடன் இணைக்கப்படுமேயானால், இச்சிறு தொழில் பிரிவுகள் [illegible] வளரவும் செழிக்க [illegible] முடியும் [illegible]. இந்தப் [illegible] தொழில்கள் பொதுத்துறையில் தான் இருக்க வேண்டுமென்ற கொள்கை அமல் செய்யப்படுமேயானால், அரசின் மிகப் பெரிய அளவிலான வாய்ப்புகளும் வசதிகளும் இருந்தாலுங் கூட, காணுகின்ற முன்னேற்றம் கணிசமான அளவில் இராது. கூட்டுத்துறையே வளர்ச்சிக்கு சரியான வழி. ஆகவே அத்துறையை ஊக்குவிக்க வேண்டும் என நான் கருதுகிறேன். சமுதாய இலட்சியங்களையும் முதலாளித்துவ நோக்கங்களையும் இணைப்பது என்பது மிகமிக சிரமமான ஒன்றாகும். ஒன்றோடொன்று இணைந்தே இருக்கும் நம்முடைய கூட்டுப் பொருளாதார வாழ்வில் இதைத்தவிர வேறு வழியில்லை.



நாம் விரும்பின அளவுக்கு கடந்த சில ஆண்டுகளில் நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சி மகத்தானதோர் வளர்ச்சியாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், எந்தக் காரணத்தை முன்னிட்டும் நமது தொழில் வளர்ச்சி ஸ்தம்பித்துப் போய் விட்டது; இருளடைந்து போய் ஒன்றுமே இல்லாமல் போய்விட்டது என்று மட்டுமே யாரும் சொல்லிவிட முடியாது. இன்றுள்ள மாநில அரசின் வழிவகைகள், முயற்சிகள் இவற்றைக் கொண்டு நிலையை மேலும்மேம்பாடடையச் செய்ய முடியும். இந்த வகையில், ஒரு மகத்தான வேகமான கண்ணோட்டம்-எண்ணம்-நோக்கம் நமக்கு மிகமிகத் தேவை. அதுதான் நாம் ஆற்றிட வேண்டிய பணி - நடந்து செல்ல வேண்டிய பாதை.

[Eastern Economist தமிழ்நாடு சிறப்பிதழில் (9-10-81) வெளிவந்த ஆங்கிலக் கட்டுரை.தமிழாக்கம்: வ.சம்புர்கம்]



# சட்டமன்றத்தில் திரட்டிய தகவல்கள்

தொகுப்பு: **மருது**

**1980-81** ஆம் ஆண்டில் தமிழகத்தில் உற்பத்தியான பனை வெல்லத்தின் அளவு 59,645 மெட்ரிக் டன்களாகும். மதிப்பு ரூ. 1,257.77 இலட்சம். தமிழகத்திலிருந்து அமெரிக்காவுக்கு 1979-80ல் பரீட்சார்த்தமாக 37 டன் பனை வெல்லப் பாகு அனுப்பப்பட்டது.

* * * *

மத்திய அரசு 5-1-81 நாளிட்ட தனது அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு 50 அகில இந்திய சுற்றுலா டாக்சி உரிமங்களை வழங்க அனுமதித்தது. இந்த உரிமங்களைக் கோரி 346 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவற்றை மாநில போக்குவரத்து அதிகாரி பரிசீலித்து 11-11-81 அன்று தகுதி வாய்ந்த 50 நபர்களுக்கு உரிமங்கள் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

* * * *

போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகளை மானிய விலையில் பள்ளிகட்கு விற்கும் பொருட்டு எல்லாப் போக்குவரத்துக் கழக இயக்குநர்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

* * *

சட்டக் கல்லூரியில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மாநில அரசுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் சென்னையில்* ரூ. 70 வீதமும் மாவட்டங்களில் ரூ. 65 வீதமும் உண்டி உறைவிடத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு உதவித் தொகை திட்டத்தின்கீழ் தற்பொழுது ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 80 முதல் 100 வரை பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது. மேற்படி உண்டி உறைவிடத்தொகையை உயர்த்தி மத்திய அரசு சமீபத்தில் ஆணையிட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. 125 முதல் ரூ. 140 வரை உதவித் தொகை கொடுக்கப்படும். இவ்வாணை ஜுலை 1981 முதல் அமல்படுத்தப்படுகிறது.

* * *

குடிசை வாசிகளின் சிரமங்களைப் போக்க சாதாரண மின் பயனீட்டாளர்களைப் போல் அல்லாமல் குடிசை வாசிகள், பிரிவு அலுவலகத்தில் இதற்கென அமர்த்தப்பட்டுள்ள வணிக உதவியாளர்களிடம் நேரடியாக மின் கட்டணத்தைச் செலுத்தலாம். ''அட்டைப்பட்டியல்முறை'' முழுமையாக அமலாக்கப்பட்ட பின்குடிசை வாசிகளிடம் அந்தந்த இடத்திலே பணியாற்றும் லைன் மேன்கள் மூலம் மின் கட்டணம் வசூலிக்கலாமா என்பது பற்றி மின் வாரியம் பரிசீலிக்கும்.

* * *

தமிழ்நாட்டின் மின்சாரப் பற்றாக்குறையினால் உச்சநேர மின் விநியோகம் நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்க எரி வாயு மின் உற்பத்தி இயந்திரங்கள் சிலவற்றை நிறுவ ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறன் கொண்ட ஆறு கியாஸ் சுழலி மின் உற்பத்தி நிலையங்கள் ரூ. 112.6 கோடி செலவில் நிறுவ மைய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

* * *

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காஞ்சீபுரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் பட்டு வளர்ப்பினைப் பெருக்குவதற்கென்று தனியாகத் திட்டம் ஏதும் இல்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் நவீன பட்டுவளர்ப்புத் திட்டங்கள் இப்பகுதியிலும் அமல்படுத்தப்படுகின்றன. மேலும் இப்பகுதியில் உள்ளபட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுவளர்ச்சிப் பயிற்சி கிடைக்க காஞ்சீபுரத்தில் முன்னோடி மற்றும் சேவை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

* * *

பழுப்பு நிலக்கரி தாரிலிருந்து சாலை பிணைப் பொருள் தயாரிப்பதற்கான சோதனைகள் நெடுஞ்சாலைஆராய்ச்சி நிலையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பிணைப் பொருள் தயாரிக்கும் முன்னோடி இயந்திரம் நிறுவப்பட்டு வெள்ளோட்டம் விட உள்ளது.

* * *

தேசீய நெடுஞ்சாலை எண். 45,4 மற்றும் 5-ஐ இணைத்து சென்னை நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் வேலையின் மதிப்பு 1980-81 வீதங்களைத் தழுவி ரூ. 995இலட்சம் ஆகும். இச்சாலையின் மாற்றப்பட்ட நேர்பாடானது இந்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அது தற்பொழுது மத்திய அரசின் நிதிக்குழுவின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட 1980-85 ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 240 இலட்சம் நில உரிமைக்காகவும் மண் வேலைக்காகவும், வடிகால் வசதிக்காகவும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. நில உரிமை பெறல் மதிப்பீடு முடிவாகும் தருவாயில் உள்ளது.

* * * *

தற்போது பதவியில் உள்ள உடல் நலப் பணியாளர்களைப் பல நோக்குத் திட்டப் பணியாளர்களாக அமர்த்துவதற்காக 40 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 31-12-80 முடிய மொத்தம் 3633 உடல் நலப் பணியாளர்கள் (ஆண், பெண்) பயிற்சி பெற்று இருக்கிறார்கள். மேலும் மேற்கண்ட 9 தலைமை மாவட்ட மருத்துவமனைப் பள்ளிகளில் ஆண்டுதோறும் 780 பேர்கள் (பெண்கள்) பயிற்சி பெறுகிறார்கள்.

* * *

தமிழ்நாட்டில் உள்ள மொத்த தொழுநோய் சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை 320 ஆகும்.

* * *

தமிழகத்தில் தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்கள் 1,198. தனியார் வசம் உள்ள வழித்தடங்கள் 3,771.

* * *

தமிழ்நாட்டில் காது கேளாத அனைவருக்கும் காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்குவதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கான விவரங்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைக்கப் பெற்றவுடன் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

* * *

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் கிராமப் பகுதிகளில் திரையரங்குகள் கட்டுவதற்கு 81 நபர்களுக்கு டிசம்பர் 1981 முடிய ரூ. 87.25 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

* * *

இலங்கையில் உள்ள சர்வதேச கண் வங்கி மூலம் பெறப்படும் விழிகளைத் தவிர, மற்றபடி வேறு நாடுகளிலிருந்து விழிகளை இறக்குமதி செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

* * *

டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களில் பொருத்தப்படும் மீட்டர்களில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்காக, மீட்டர் திருத்துபவர்களுக்கு (மெக்கானிக்) அதிகாரச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அதிகாரச் சீட்டு பெறாதவர் மீட்டர் சரி பார்க்கும் பணியில் ஈடுபட முடியாது. அதிகாரச் சீட்டு பெற்றவர்களுக்கு தனிப்பட்ட மீட்டர் முத்திரைகள் வழங்கப்படும். அவர் சரி செய்த மீட்டரின் மீது அவரின் முத்திரை இடப்படும். பின்னர் அந்தப்பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மீட்டரை ஆய்வு செய்து அவரின் முத்திரையும் மீட்டர்மீது இடப்படும். இதில்அதிகாரச்சீட்டு பெற்ற மெக்கானிக் ஏதேனும் முறைகேடுகளில் ஈடுபட்டதாக தெரியவந்தால் அவரின் அதிகாரச் சீட்டு ரத்து செய்யப்படும். மேற்கூறிய அரசின்கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் திருத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை முதலாவதாக சென்னை நகரில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் 'மீட்டர்' குறைபாடுகளைக் கண்டறிந்து தவறு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி போக்குவரத்து மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

* * *

விபத்துக்களைக் குறைப்பதற்கென கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

1. விபத்தின்றிப் பணி புரியும் ஓட்டுநர்களுக்குப் பரிசுத் தொகை அளிக்கப்படுகிறது.
2. விபத்துக்களில் சம்பந்தப்படும் ஓட்டுநர்களுக்குப் பாதுகாப்பு அறிவுரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
3. விபத்துக்களில் சம்பந்தப்படும் ஓட்டுநர்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கு மறு பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர்.
4. போக்குவரத்து விதிகளை மீறும் ஓட்டுநர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.
5. அதிக வேகத்தைக் கட்டுப்படுத்த ''டைசிகன்'' என்ற வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் பேருந்துகளில் பொருத்தப்பட்டு வருகின்றன.

* * *

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவிப் பயிற்சியை 4, 5, 7 வகுப்புகளில் அறிவியல் பாடத் திட்டத்தின் கீழ் முதலுதவியைப் பற்றிக் கற்றுத்தரப்படுகிறது. மேலும் மாணவர்களின் உபயோகத்திற்கென முதலுதவிப் பொருள்களும் மருந்துகளும் அடங்கிய முதலுதவிப் பெட்டி வைத்தல்; ஒவ்வொரு வகுப்புக்கும் முதலுதவிக்கென ஒரு முதலுதவிப் பெட்டி வைத்திருத்தல்; முதலுதவி அவ்வப்போது செய்ததைக் குறித்து ஒரு குறிப்புப் புத்தகம் வைத்திருத்தல் ஆகியவை 7-ம் வகுப்பிலேயே பயிற்றுவிக்கப்படுகின்றன. எட்டாம் வகுப்பு ஆங்கிலப் பாட நூலிலும் முதலுதவி பற்றிய பாடம் ஒன்று உள்ளது.

* * * *

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல். இருக்க தமிழக அரசு ஜுன் 1981 முதல் 10,000 மோட்டா ரக நூல் பேல்களை தேசிய பஞ்சாலைக் கழகத்தின் கீழ் இயங்கும் நூற்பாலைகள் மூலம் நியாய விலையில் விநியோகம் செய்யுமாறு மத்திய அரசின் கீழ் இயங்கும் கைத்தறி வளர்ச்சி ஆணையாளரைக் கேட்டுக் கொண்டது. தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு மோட்டா ரக நூல் விநியோகிப்பதற்காக மத்திய அரசு ஒரு திட்டத்தை வகுத்து அமல்படுத்தியது. அதன்படி ஜுலை 1981 முதல் 4565 பேல் மோட்டா ரக நூல் ஒதுக்கீடு பெறப்பட்டு தனியார்துறை நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

* * * *

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ் நூல்களை வெளியிடுவதற்காகப் புத்தக வெளியீட்டுத்துறை ஒன்றை ஏற்படுத்தி இயக்குநர் ஒருவரை நியமனம் செய்து தனியாக அச்சகம் அமைத்து இப்பணியினை ஆற்ற, தொடக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

* * *

காவிரி நதியின் டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ரூ. 366.60 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் மூலமாக உலக வங்கியின் நிதி உதவி கோரலாமா என்பதும் அரசின் ஆய்வில் உள்ளது.

* * * *

கரும்புச் சாற்றிலிருந்து சர்க்கரை எடுக்கப்பட்ட பிறகு அதி

டுமாயின் காவலரிடம் சட்ட உதவிக் கழகத்தை அணுக உதவி நாடலாம். இல்லையேல் அருகில் உள்ள தமிழ்நாடு சட்ட உதவிக் கழகத்தின் கிளையில் உள்ள அலுவலரை அணுகித் தகவல் தெரிவித்தால் அவர்கள் ஆவன செய்வார்கள்.

மேற்கண்ட அமைப்பின் கிளை நிறுவனமான செங்கற்பட்டு மாவட்ட சட்ட உதவிக் குழு, கோவளத்தில் 20.3.82ல் முகாம் நடத்தியது. தமிழ்நாடு மாநில சட்ட உதவிக் கழகத் துணைத் தலைவர் திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார், தலைவர் திரு பி. ராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநிலத் தலைமை வழக்கறிஞர் திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு பி.ஆர். கோகுலகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி திரு எஸ். மூர்தாசா பாசல் அலி அவர்கள் செங்கை மாவட்ட சட்ட ஆலோசனைக் குழுவின் சார்பில் வழக்காடிப் பெற்றதற்கான தொகையினை வழங்கிச் சிறப்புரை யாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

''குக்கிராம மக்கள் இப்பணிக் கழகம் மூலம் தகுந்த நேரங்களில் உதவியை நாடிப் பெறலாம். சட்டம் இயற்ற மக்கள் மன்றம் வேண்டும், மக்கள் மன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களை முற்படுத்த நிர்வாகம் வேண்டும். நிர்வாகத்திற்கு, சட்டத்தினால் ஏற்படும் சிக்கல்களுக்கு நீதிமன்றம் தான் பரிகாரம் காணவேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயகம் தழைக்கும். இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தில் உள்ளவர்கள் சட்டத்திலே உள்ள சில நடைமுறைகளைப் பயன்படுத்தி, கிடைக்க வேண்டிய ஈட்டுத் தொகையைச் சரிவரக் கொடுப்பதில்லை. ஒருவன் தான் செய்த குற்றத்திற்காகத்தான் தண்டனை பெறுகிறான். ஆனால் அவனுடைய குடும்பத்திற்கு என்ன பரிகாரம்? தண்டனையக்குறைத்து பணத்தின் ஒருபகுதியை வழங்க வேண்டும்; நடைமுறையில் ஆற்றிவரும் இலவசச் சட்ட உதவிப் பணியை மிகவும் பாராட்டுகிறேன். பொது மக்கள் இப்படிப்பட்ட சட்ட உதவிக் குழுக்கள் மூலம் பயன் பெறலாம்''

**செங்கல்பட்டு மாவட்டத்தில் இலவசச் சட்ட உதவிக் குழுக்கள் செயல்படும் இடங்களும் பணிகளும்.**

**1. செங்கல்பட்டு 2. காஞ்சிபுரம் 3. திருத்தணி 4. திருவள்ளூர் 5. பூவிருந்தவல்லி 6. பொன்**னேரி 7. திருவொற்றியூர் 8. மதுராந்தகம் ஆகிய ஊர்களில் நீதிமன்றக் கட்டடங்களில் இலவச சட்ட உதவி அலுவலகங்களில் சட்டச் சிக்கல்கள், வாழ்க்கைச் சிக்கல்கள் பற்றிய மனுக்களை காலை 10.30 மணிமுதல் மாலை 5.00 மணிக்குள் கொடுக்கலாம்.



4.8.1980ல் வளக்கணாம் பூண்டி சுப்பிரமணி (22 வயது) என்பவர், தந்தை பெரியார் போக்குவரத்து பேருந்தில் சிக்கி சாலை விபத்துக்குட்பட்டு இறந்தார். கர்ப்பிணியாகஇருந்த அவரது மனைவி எல்லம்மாள் (19 வயது), அம்மையார் குப்பத்தில் நடந்த இலவசச் சட்ட உதவி முகாமில் கொடுத்த மனுவின் பேரில் அவருக்காக செங்கல்பட்டு சட்டஉதவிக் குழு இழப்பீட்டு வழக்குத் தொடர்ந்தது. போக்குவரத்துக் கழகம் எல்லம்மாளிடம் ரூபாய் ஐயாயிரம் இழப்பீடாகக் கொடுப்பதாகச் சொல்லி அவரது சம்மதத்தைப் பெற்றுவழக்கைத் திரும்பப்பெற சொல்லி கையொப்பம் பெற்றதாக எல்லம்மாள் சட்ட உதவிக் குழுவிற்கு 26.2.81ல் மனுச் செய்தார். மேற்படி குழு இதற்கு மறுப்புத் தெரிவித்து, மேற்கொண்டு வழக்கை நடத்தி 19.10.1981ல் எல்லம்மாளுக்கும் அவரது குழந்தைக்கும் ரூ. 30.000 இழப்பீட்டுத் தொகை வாங்கிக் கொடுத்திருக்கிறது சாலை விபத்தில் சிக்கியவர்கள் தங்களுக்கு, சட்டப்படி கிடைக்கக் கூடிய, இழப்பீட்டுத்தொகை சுமாராக எவ்வளவு என்பதை அருகிலுள்ள சட்ட உதவிக் குழுவினரிடமிருந்து தெரிந்துகொண்டு சமரசமாகப் போவது நலம்.

விவசாயப் பொறி இயல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற வி. சந்திரனுக்கு ஓய்வு ஊதியத்தை ஒட்டு மொத்தமாக உடனடியாக ரூ. 5345 செலுத்த உத்தரவாயிற்று. பணம் பெறு முன் அவர் இறந்து விட்டார். மேற்படி உத்தரவை அதிகாரிகள் ரத்து செய்துவிட்டார்கள். செங்கல்பட்டு இலவச உதவிக் குழு மாத்தூரில் நடத்திய முகாமில் 16.11.1980-ல் சந்திரனின் மனைவி மனுக் கொடுத்தார். அதற்குத் தக்க சான்றுகள் காட்டி அந்த உத்தரவை ரத்து செய்து பழையபடி உத்திரவான ரூ.5345 ஐக் கொடுக்கும்படி 13.1.81ல் மேல் அதிகாரிகளிடம் மேற்படி குழு உத்தரவு வாங்கிக் கொடுத்தது. இது ஆதிதிராவிடவகுப்பைச் சேர்ந்த-காலஞ்சென்ற சந்திரனுடைய மனைவிக்கும் அவரது 7 குழந்தைகளுக்கும் பெரும் உதவியாக இருந்தது.


''இவ்வளவு பெரியகாரியத்தை மிகவும் சுலபமாக முடித்துத்தந்து இருக்கிறீர்கள். இதற்கெல்லாம் நாங்கள் அடிபணிந்து எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்''என்று சந்திரன் மகன் மனோகரன் 24.2.81 ல் தெரிவித்து இருக்கிறார்.


சென்னைக்கு அருகிலுள்ள கௌதமபுரத்தில் வசிக்கும் ஒருவர் 1980 நவம்பரில் தன் மகளும் மருமகனும் மணவாழ்க்கை நடத்தாமல் பிரிந்திருப்பதைப் பற்றி உதவிகோரி எழுதினார். தந்தைக்குப் பார்வை யில்லை. நேரில் வந்துபோக வசதியற்றவர். செங்கல்பட்டு இலவச சட்ட உதவிக் குழுவினர் அவர்களுடைய மகள், மருமகன் இருவருடனும் உடனடியாகத் தொடர்பு கொண்டு நண்பர்கள் உதவியுடன் சமரசப் படுத்தி 28.11.1980 முதல் கணவருடன் மனைவியும் சேர்ந்து வாழ ஆவன செய்தது.


''இந்த விதத்தில் என்னை என் கணவர் அழைத்துச் சென்று என் வாழ்க்கையைத் தொடர உதவி செய்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று 27.11.1980-ல் மனைவி செங்கல்பட்டு உதவிக் குழுவிற்கு எழுதியிருக்கிறார்.

**தமிழ்நாடு மாநில சட்டஉதவி ஆலோசனைக் கழகம், இல்லாதோர்க்கும் இயலாதோர்க்கும் இலவசச்சட்ட உதவியை அளித்து அவர்தம் வாழ்வுக்கு ஒளி விளக்காகத் திகழ்கிறது என்றால் அது மிகையல்ல!**

# கவி கண்ட உலகு











தொழிலாளர் சிறப்பதனை உயர்த்திக் காட்டி
தொழிலாலே வளமைதனை எங்கும் நாட்டி
எழிலார்ந்த சோலையிலே தமிழை மீட்டி
எந்நாளும் பகுத்தறிவால் மடமை ஓட்டி
விழிப்போடு தமிழகத்தில் புதுமை தீட்டி
வியக்கின்ற சமுதாயத் திறனைக் கூட்டி
மொழிக்காகத் தன்னுயிரை நாளும் வாட்டி
மெய்யுலகைப் பண்ணுலகில் கண்டார் வாழி!

ஒருவனுக்கு ஒருத்தியெனும் பண்பை நெய்து
ஒருகுலமாய் ஓரினமாய் அமைப்பைச் செய்து
பெருந்தீங்கு செய்வோரைச் சொல்லால் கொய்து
பெட்பில்லாச் சமுதாயம் திருத்தம் செய்து
அருநெஞ்சைப் பாலெனவே நாளும் சேர்த்து
அரியதொரு மாற்றத்தை நினைவில் தைத்து
கருமைநிறப் புற்கட்டு மீசை வைத்து
கயமையிலாச் சமுதாயம் கண்டார் வாழி!

கலப்புமண வாழ்வுக்கே வழிவ குத்தார்
கைம்பெண்ணின் திருமணத்தை ஆதரித்தார்!
நலமெல்லாம் தமிழுக்கே என்று ரைத்தார்
நயமான கொள்கைக்குப் பண்தொ டுத்தார்!
உலகத்தை அறிவுலகாய் ஆக்க வந்தார்
உதவாத புல்லர்களின் திமிரொ டித்தார்!
குலம்விளங்கக் குடும்பத்தில் விளக்கு வைத்தார்
குருட்டுமதி பெற்றவர்க்கு ஞானம் தந்தார்!

தேக்கிவிடும் அணைநீர்போல் பயனைத் தேக்கித்
தேவையிலாச் சாதிமதச் சண்டை நீக்கி
ஆக்கிவரும் செயலுக்கே திறனை ஊக்கி
ஆற்றலிலே அறிவுலகின் தீமை போக்கி
தாக்குகின்ற அறியாமை நோயைத் தாக்கித்
தமிழ்மானங் காத்திடவே பாட லாக்கி
போக்கற்ற நிலைதிருத்தப் பேனா தூக்கி
போரில்லாச் சமுதாயப் புரட்சி செய்தார்!

வீரத்தால் வினர்களைத் திணறச் செய்தார்
வியப்பூட்டும் புரட்சிமழை பொழிய வைத்தார்
தீரத்தால் பகைமைதனைக் குனிய வைத்தார்
தீண்டாமைப் பேய்நீங்க முழக்க மிட்டார்
ரோத்தில் கதிர்போல எழுந்தே வந்தார்
நேர்கோட்டைப் போலவொரு நெறியில் நின்றார்!
ஓரத்தில் ஒதுங்கிநின்ற மாந்தர் தம்மை
ஓயாமல் கவியெழுதி நிமிரச் செய்தார்!

ிருந்து உண்டாகும் கழிவுப் பொருள்களில் ஒன்றான மொலாசஸிலிருந்து எரிசாராயம் தயாரிக்கப்பட்ட பின்பு அதனை பெட்ரோலுக்குப் பதிலாக 'எத்னால்' என்கிற பெயரில் அரசு மோட்டார் வாகனங்களுக்கு உபயோகிக்கலாம் என்கிற கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழக அரசுக்குச் சொந்தமான மூன்று வண்டிகளை எத்னாலை எரிபொருளாக உபயோகித்து ஆராய்ச்சி முறையில் ஓட்டுவதற்கு முடிவெடுக்கப் பட்டுள்ளது.

* * * *

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கை அருகில் 600 ஏக்கர் நிலப் பரப்பில் கிடைக்கும் கிராபைட் கனிமத்தை அகழ்ந்தெடுத்து, அதனைப் பயன்படுத்தி கிராபைட் சம்பந்தப்பட்ட உற்பத்திப்பொருட்களைத் தயாரிக்கத் தொழிற்சாலை நிறுவும் திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

* * * *

தமிழ்நாடு மின்சார வாரியம் சாதனை போனஸ் திட்டத்தைச் செயல்படுத்திவருகிறது.

1. மாதாந்திர அனல்மின் உற்பத்தி ஊக்கப்படி

2. பட்டியல் தயாரிக்கும் உதவியாளர்களுக்கும், கணக்காளர்களுக்கும் வழங்கப்படும் ஊக்கப்படி

3. காசாளர்களுக்கும்-துணை காசாய்வாளர்களுக்கும் வழங்கப்படும் ஊக்கப்படி இத்திட்டம் முறையே 1-4-78, 1-1-81 மற்றும் 1-4-81 முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

* * * *

நாகர்கோவிலில் வானொலி நிலையம் அமைப்பதற்கு வானொலித் துறைக்குத் தகுந்த இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு, மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கேட்கப்பட்டிருக்கும் நிலம், மற்றும் அதிலுள்ள கட்டடங்களின் விலை மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்படும்.

* * * *

1979-80, 1980-81 மார்ச் முடிய தமிழகத்தில் விளையும் சின்ன வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு வருமாறு :

| | மெட்ரிக் டன்கள் |
|---|---|
| 1979-80 | 5199.06 |
| 1980-81 | 7138.60 |

கூட்டுறவு விற்பனைச் சங்க அங்கத்தினர்களிடமிருந்தும் மற்றும் மண்டிகளிடமிருந்தும் வாங்கியதை "நேபட்" (N.A.F.E.D.) நிறுவனம் கொள்முதல் செய்து சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

* * * *

நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மழைத் தண்ணீரைத்தடுத்து சிறு குட்டைகள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. மற்றும் ஒருங்கிணைந்த மலை வாழ் மக்களின் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு, சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் மலைப் பகுதிகளில் மழைத் தண்ணீரைத் தேக்கிக் குட்டைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் நீர்பிடிப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகளில் மழைக்கால வெள்ள வேகத்தைக் கட்டுப்படுத்த ஓடைகளின் குறுக்கே செக்டேம்கள் தேவையான இடங்களில் கட்டப்படுகின்றன.

* * * *

தர்மபுரி மாவட்டம் போச்சம் பள்ளியில் உள்ள தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின், சூரியகாந்தி எண்ணெய்த் தொழிற்சாலையில் கடலெண்ணெய் தயாரிக்க மைய அரசு ஜூலை 1981-ல் அனுமதி வழங்கியுள்ளது. நிலக்கடலைப் பருவத்தில் அவற்றை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கொள்முதல் செய்து கடோலா என்ற பெயரில் சுத்திகரிக்கப்பட்ட கடலெண்ணெய் தயாரித்து விற்பனை செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.

* * * *

கிராமப்புறங்களில் பெரிய அளவில் மாட்டுச் சாண எரிவாயு உற்பத்தி செய்வதற்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 35,000 சாண எரிவாயு அமைப்புக்களை நிறுவத் திட்டமிட்டுள்ளது. அவற்றில் நடப்பு ஆண்டில் 3,500 அமைப்புக்களை ஏற்படுத்தும்.

தொழில் வணிகத் துறையில் இருந்த பாய் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், காதி வாரியத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. பாய்நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடனுதவி வழங்கி வருகிறது.

* * * *

சேலம் மாவட்டத்தில் 19 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுகின்றன. கதர் கிராமத் தொழில் வாரியம் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் நூற்பு நிலையங்களைத் துவங்கிட உத்தேசித்துள்ளது.

1. கோவில்பட்டி,
2. தார மங்கலம்,
3. தோப்பூர்,
4. முத்துகாபட்டி.

* * * *

இந்த அரசு செயல்படுத்தி வரும் முற்போக்குத் திட்டங்களில் ஒன்று, ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாடுற்று, சமய வாழ்வில் முழு அங்கம் வகிக்குமளவிற்கு அவர்கள் உயர்த்தப்பட வேண்டும் என்பதாகும். இந்த அடிப்படையில், தற்சமயம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வரும் பள்ளிகள் அனைத்தையும் கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * * *

மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி உடற்கல்வி ஆசிரியர்கள் நிலை-1 மற்றும் நிலை 2-ல் உள்ள ஊதிய வேறுபாடுகள் நீக்கப்பட்டு ஒரே ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த சம்பள விகிதமும் இடைநிலை ஆசிரியர்களின் சம்பள விகிதமும் தற்போது ஒரே மாதிரியானதால் இடைநிலை ஆசிரியர் எவரும் உடற்பயிற்சி ஆசிரியராக நியமனம் பெற, சாதாரணமாக விரும்ப மாட்டார்கள்.

இடைநிலை ஆசிரியர்கள் பி. ஏ. பட்டமும் பி. எட். பட்டமும் பெற்றிருந்தால் அவர்கள் உடற்கல்வி இயக்குனராக உயர் நிலைப் பள்ளிகளில் நியமனம் பெற விதிகள் இடமளிக்கின்றன



# இல்லாதார்க்கும் இயலாதார்க்கும் இலவசச் சட்ட உதவி

-அ.ம. விநாயகம்

வாய்ப்பு வசதியற்ற ஏழை மக்களுக்கு நீதி கிடைப்பதில் சம வாய்ப்பு அடைவதை உறுதிப்படுத்த வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. ஆகவே சட்ட உதவியை நாடுவது மக்களின் உரிமையாகும். இது நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் 39-ஏ விதியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழக அரசு தனது கடமையை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு மாநிலச் சட்டஉதவி ஆலோசனைக் கழகத்தை ஏழை எளிய மக்களுக்காகவே நிறுவியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தின் கிளைகள் நீதிமன்றங்கள் அமைந்துள்ள ஒவ்வொரு இடத்திலும் உள்ளன. இக்கழகத்தில் உதவி பெற விரும்புவோர் தத்தம் குடியிருப்பின் அருகில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் அமைந்துள்ள கிளை அலுவலகத்தை அணுகலாம்; ஏழை எளியோர்களின் பிரச்சனைகள் எதுவானாலும் இங்கே மனுச் செய்து தீர்வுக்கு முயலலாம். சாலை விபத்துக்கள் நமது நாட்டில் மிகவும் அதிகம். (தமிழ்நாட்டில் குறிப்பாக மற்ற மாநிலங்களைவிட அதிகம்) ஒவ்வொரு ஆண்டும் நேரின்ற சுமார் 20,000 சாலை விபத்துக்களில், உயிர் இழப்போ, படுகாயமோ 5,000க்கு மேல் ஏற்படுகிறது.

1981ஆம் ஆண்டில் சென்னை நகரில் நேர்ந்த 6,086 விபத்துக்களில் உயிர் இழந்தோர் எண்ணிக்கை 364, படுகாயமுற்றோர் எண்ணிக்கை 593. இந்த விபத்துக்களில் ஏழை மக்கள் தான் அதிகம் இரையாகிறார்கள். இறந்தவர்கள் குடும்பத்திற்கோ, காயமுற்றோர்க்கோ இழப்பீடு பெறச் சட்டத்தில் வழி உள்ளது. ஆனால் இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் ஏழை மக்களுக்கு இருக்கும் சிக்கல்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்கு முழு இழப்பீட்டுத் தொகைகிடைக்காதவாறு தரகர்களும் சுயநலவாதிகளும் தலையிடுகின்றனர். ஆகவே ஏழை மக்களின் துயரத்தைப் போக்கும் பொருட்டுத் தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவிக் கழகம் மக்களுக்கு துணை நிற்கத் திட்டமிட்டுள்ளது. மோட்டார் விபத்துக்களில் உயிர் இழந்தோர், காயமுற்றோர் ஆகியோர்க்கு நீதிமன்றங்களின் மூலமாக ரூபாய் 32,00,000 இழப்பீட்டுத் தொகையைச்சட்ட உதவிக் கழகம் இதுவரை பெற்றுத் தந்துள்ளது.

தமிழ்நாட்டில் விபத்துக்களை ஆராயும் காவலர்கள் இழப்பீட்டு மனுவைத் தயாரித்து இழப்பீடு கோரும் மனுதாரிடம் கையொப்பம் வாங்கி நீதிமன்றத்திற்கு அனுப்பச் செய்ய, சட்டத்தின் கீழ் ஆணையுள்ளது. இத்தகைய மனுக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பும் போது ஒரு நகலைச் சட்ட உதவிக் கழகத்திற்கும் அனுப்ப வேண்டும் என்பது ஆணை. மேற்படி மனுவை நீதிமன்றத்தில் 180 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டுமென்று சட்டத்திலிருந்த போதிலும், பாதிக்கப்பட்டவர்களின் பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு கருணை அடிப்படையில் காவலர் அதிகாரிகள் தனிக் கவனம் செலுத்தி விபத்து நடந்த 15 தினங்களுக்குள்ளாகவே சம்பந்தப்பட்ட ரிகார்டுகளையும் மனுவையும் பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இந்தப் பணியைக் காவலர்கள் மக்களிடம் கூறுவதோடு இலவசச்சட்ட உதவி இயக்ககத்தினால் கிட்டும் சலுகைகளையும் எடுத்துரைத்து அன்புடன் பணியாற்ற வேண்டியது அவசியம். காவலர்கள் இந்தக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்கும் உரிமையும் மக்களுக்கு வேண்டும்.

சாலை விபத்துக்களினால் உயிர் இழந்தோர் அல்லது காயமுற்றோர் இழப்பீடு பெற வேண்



# காவலர் குடியிருப்பில் மருத்துவ மையம்

சென்னை மாநகரில், செம்பியம் சரகத்தில் உள்ள கே. 1. காவல் நிலையக் குடியிருப்பில் அரிமா சங்கத்தினர் ஒரு புதிய மருத்துவச் சாதனையை நிகழ்த்தி வருகிறார்கள்.

காவலர் குடியிருப்பில் உள்ள ஒரு வீடே இந்தப் புதிய பணிக்காக இவர்களுக்கு ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது.

சென்னையில் பணியாற்றுகிற மருத்துவர்களான டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ், டாக்டர் என். சுந்தரவல்லி, டாக்டர் எம்.எஸ் கிருஷ்ணர், டாக்டர் குணசாகரன், டாக்டர் மனோரமா போன்ற பலரும் வாரந்தோறும் திங்கள், புதன், சனி ஆகிய மூன்று கிழமைகளில் இங்கே வருகை தருகிறார்கள். அந்நாட்களில் காவலர் இல்லங்களில் உள்ள காவலர்கள், அவர்கள் வீட்டுத் தாய்க்குலத்தார், குழந்தைகள் ஆகியோர் இவர்களிடம் மருத்துவச் சோதனை செய்து கொள்ளுகிறார்கள். நோய் நொடிகளுக்குத் தக்க மருந்துகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. நோய் நீங்கி வாழத்தக்க நல்ல பல ஆலோசனைகள் அந்நாட்களில் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மேற்கண்ட அரிமா சங்க மருத்துவர்களுக்கு உதவியாக டாக்டர் எஸ். தியாகராசன், டாக்டர் சே. நெடுஞ்செழியன், டாக்டர் ஜே.சி. மோகன்தாஸ் போன்ற- கண் மருத்துவமனை, குழந்தைகள் மருத்துவமனை பொது மருத்துவமனை, பல் மருத்துவமனை, அரசுப் பொது மருத்துவமனை செவிலியர் பயிற்சிக் கல்லூரி டாக்டர்களும், பயிற்சியாளர்களும், மாணவர்களும் வருகிறார்கள்.

இவர்களால் அந்தக் குடியிருப்பில் உள்ள 48 வீடுகளைச் சேர்ந்த அனைவரும் சிறந்த மருத்துவத்தை - சிறந்த ஆலோசனைகளைப் பெறுகிறார்கள்.

சி.எம். ராஜேந்திரன்

அரிமா சங்க மருத்துவர்களும், மற்றவர்களும் இங்கே தாங்கள் வேலை நேரத்தில் அல்ல; ஓய்வு நேரத்திலேயே வருகை தருகிறார்கள் என்பதும், இதற்கென அவர்கள் எந்தவித ஊதியத்தையும் பெறுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள். ஏழை எளியவர்களுக்கு மருத்துவம் செய்யும் உன்னதப் பணியையே அவர்களெல்லாம் தங்கள் ஓய்வு நேரப் பொழுதுபோக்காகக் கொண்டிருக்கிறார்கள்.

"சட்டம் ஒழுங்கைக் காக்கும் பணியிலேயே பெரும்பாலான நேரத்தைச் செலவிட வேண்டியிருப்பதால், மனைவி மக்களைக் கவனிக்க எங்களுக்குப் போதுமான நேரமில்லை. அந்தப் பெருங்குறை எங்களுக்கு இவர்களால் அடியோடு நீங்கி விட்டது ''என்று பெருமகிழ்வோடு சொன்னார் செம்பியம் சரகம் காவலர் குடியிருப்பில் உள்ள காவலர் ஒருவர்.





இந்தக் குடியிருப்பில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு அடையாள அட்டை தரப்பட்டுள்ளது. அதில் ,அந்தந்த வீட்டிலுள்ள உறுப்பினர்கள் பெயர், வயது, தடுப்பு ஊசி போன்றவை இடப்பட்டதற்கான விவரம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

''ஒரு வீட்டிற்கு ஒரு அட்டை இப்படித் தருகிறோம்; இதைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவுக் கட்டணமாக ஒரே ஒரு ரூபாய் மட்டுமே வீட்டுக்கு வீடு பெறப்படுகிறது. இது தவிர, வேறு எதற்காகவும் ஒரு காசும்நாங்கள் வாங்குவதில்லை, மருந்தெல்லாம் கூட அரிமா சங்கப் பணத்திலேயே வாங்கிக்கொள்கிறோம்'' என்றார் டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ்.

செம்பியம், அபிராமபுரம், மத்திய சென்னை, கிழக்குச் சென்னை, சென்னைப் பெருநகர் (கிழக்கு) ஆகிய பிரிவுகளில் உள்ள அரிமா சங்கங்களும், சென்னை அரிமா சங்க மகளிர் பிரிவும், கஸ்தூரிபா சேவாசங்கமும் இணைந்து இந்தத் தூய பணியைத் துவளாமல் செய்து வருகின்றன.

நோய் வாய்ப்பட்டவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதும், பெரிய டாக்டர்களை அணுகி பரிசோதிக்கச் செய்வதும் மிகச் சிரமம்எனக் கருதும் இக்குடியிருப்பினர், நோய்வாய்ப்பட்டவர்களை நாடி, பெரிய பெரிய டாக்டர்களே வருவதைப் பெரும் பேறாகக் கருதுகிறார்கள். அங்கே வைத்துப் பார்க்க இயலாத 'கேஸ்'களுக்குத் தாங்கள் பணிபுரிகின்ற பெரிய மருத்துவ மனைக்கு வரச்சொல்லி அவர்கள் சீட்டுக் கொடுப்பதும், அப்படிக் கொண்டு செல்லப்படும் 'கேஸ்'கள் தனிக் கவனத்தோடு பார்க்கப்படுவதும் எல்லோருக்கும் திருப்தியளிப்பதாக இருக்கிறது.

எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையின் அனுபவம் முதிர்ந்த டாக்டர்களில் ஒருவரும், குழந்தை மருத்துவக் கழக இணைப் பேராசிரியையும், மகளிர் அரிமா சங்கத்தலைவியுமான டாக்டர் செல்வி. என். சுந்தரவல்லி, காவலர் இல்லக் குழந்தைகளை ஆழ்ந்து பரிசோதிப்பதும், கவனத்தோடு மருந்திடுவதும் நமக்கே வியப்பாக இருக்கிறது.

அவரை அணுகி, ''உங்கள் மகளிர் அரிமா சங்கம், இந்தக் குடியிருப்பிற்கு ஏதாவது தனிப்பட்ட முறையில் உதவி யிருக்கிறதா?'' என்றோம்.

''இந்தக் குடியிருப்பில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் ஒவ்வொரு மரம் உண்டாக்குவதற்காக, அந்தந்த வீட்டுக்காரர்களே கவனித்துக் கொள்ள வேண்டும் என்றுசொல்லி ஏராளமான தென்னை, மா, யூகலிப்டஸ் கன்றுகளைத் தந்திருக்கிறோம். நோயற்ற வாழ்வுக்கு நல்ல காற்றோட்டம் அவசியமல்லவா?'' என்றார் அவர்.

இவரது மருத்துவப் பணிக்காக அரிமா சங்கச்சார்பில், அனைத்து மாவட்டப் பரிசொன்றும் விரைவில் இவருக்கு வழங்கப்பட இருக்கிறது.

செம்பியம் சரகம் காவல்துறையினர் குடியிருப்பில் உள்ள இந்த மருத்துவ முகாம் 14.11.1981 அன்று துவக்கிவைக்கப்பட்டது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எச்.வி. ஹண்டே, மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு ,சி.பொன்னையன் இருவரும் பங்கேற்ற அவ்விழாவில்-காவல் துறை ஆணையர் திரு ஸ்ரீபால், துணை ஆணையர் திரு கே. சுப்பையா, உதவி ஆணையர் திரு எம். சிதம்பரசாமி ஆகியோரும், அரிமாசங்கத்தைச் சேர்ந்தஜோசப் ஈனாக், டாக்டர் மோகன்ராவ்,கண் வங்கித் தலைவர் தவே முதலிய பலரும் மகிழ்வோடு பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.









''இந்தியாவிலேயே, காவலர் குடியிருப்பில் இப்படியொரு நிரந்தர மருத்துவ மையம் அமைக்கப்படுவது இதுவே முதல்தடவை'' என்பதை அவ்விழாவில் பேசிய அனைவருமே குறிப்பிட்டனர்.

''தலைநகரிலுள்ள எல்லா காவலர் குடியிருப்பிலுமே அரசின் அனுமதியோடு இப்படிப் பட்ட மருத்துவ மையம் அமைப்பதுபற்றிப் பரிசிலிக்கப்படும்' எனறு தனது உரையின் போது குறிப்பிட்டார் காவல்துறை ஆணையர் திரு ஸ்ரீபால்.

அந்த விழாவில் - . காவல்துறையினர் பலரும், செம்பியம் வட்டாரத்திலுள்ளவர்களும், இராணிமேரி கல்லூரியில் படிப்பவர்களுமான தேசிய சமூக சேவை சங்க மாணவிகள் பலரும் கண்தானம் வழங்கியது இங்கே குறிப்பிடத்தக்கதும், பாராட்டத்தக்கதும் ஆகும்.

செம்பியம் காவலர் குடியிருப்பில் உள்ள இந்தப் பகல்நேர மருத்துவ மையம் மாலை நேரத்தில் இரவுப் பள்ளியாக மாறிவிடுகிறது. அரிச்சுவடியில் இருந்து பத்தாம் வகுப்பு வரை பயிலும் 60 மாணவ-மாணவிகள் இங்கே படிக்கிறார்கள்.

இராணிமேரிக் கல்லூரி தேசிய சமூக சேவை சங்கத்தாரும், செம்பியம் பகுதியினருமான மாணவிகள், எம்.டி. சுஜாதா, ஆர். சாரதா, கே. வைஜயந்தி, டி. சுகுணா, டி. பிரியா, கே. உமா, சி. ராணி, தேவசேனா, ஆர். கௌரி ஆகியோரே மாறி மாறி இந்த இரவுப் பள்ளியின் ஆசிரியைகளாகப் பணியாற்றுகிறார்கள். வைஷ்ணவா மகளிர் கல்லூரி தேசிய சமூக சேவை சங்கத்தாரும் இத்தகைய மருந்துவ முகாம்களில் பங்கேற்று பணிபுரிகிறார்கள்.

''அவர்கள் தவிர ,எங்கள் அரிமா சங்கத்தினர் சார்பில் ராஜேஸ்வரி என்பவரையும் கௌரவச் சம்பளத்தோடு இப்பள்ளி ஆசிரியையாக நாங்கள் நியமித்திருக்கிறோம்'' என்றார் டாக்டர் எம்.எஸ். கிருஷ்ணா.

தேசிய சமூக சேவை சங்க மாணவிகளை அச்சங்க திட்ட அலுவலர் செல்வி பிரேமாவதி வழி நடத்துகிறார்.

குழந்தைகளுக்கான நூல் நிலையமொன்றும் இயங்கும் இக்கட்டடத்தில் காவல்துறையால் வழங்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியொன்றும் வைக்கப்பட்டுள்ளது.

அரிமா சங்கத்தார், இம் மையம் சார்பில் அக்குடியிருப்புக் குழந்தைகளிடையே அவ்வப்போது பல்வேறு போட்டிகளும், கேளிக்கை நிகழ்ச்சிகளும் நடத்தி அங்குள்ளாரை மகிழ்விப்பதுண்டு.

அண்மையில் 27.3.82அன்று பெரம்பூரிலுள்ள 'ரயில்வே நியூ ஹாலில்' அப்படியொரு பல்வகைப் பொழுதுபோக்குக் கலை நிகழ்ச்சி தமிழக அரசின் இரண்டாவது செயலாளர் திரு, கே. சொக்கலிங்கம் (இ.ஆ.ப.) தலைமையில் நடத்தப்பெற்றது.

அபிராமபுரம் அரிமா சங்கத்தார் முன்னின்று நடத்திய இவ்விழாவில் டாக்டர் டி. குணசாகரன் வரவேற்புரையாற்றினார். காவல்துறை ஆணையர், துணை ஆணையர், உதவிஆணையர், இராணிமேரி கல்லூரி தேசிய சமூக சேவை சங்க திட்ட அலுவலர் செல்வி பிரேமாவதி, வைஷ்ணவா மகளிர் கல்லூரி சமூக சேவை சங்க திட்டஅலுவலர் செல்வி, ஏ.சுதா ஆகியோர் உரையாற்றினர்.

திரு எம். சுப்பிரமணியம் நன்றி கூறினார்.



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

## 23—2—82

பார்வையற்றவர்களுக்கு வாழ்வளிக்கும் நோக்கத்தில், வேலைவாய்ப்பு, கல்வி கற்றுக் கொடுத்தல் முதலிய பல்வேறு திட்டங்களுக்காகத் தமிழக அரசு 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 24—2—82

150 ஊராட்சி ஒன்றியங்களில், 30 கோடி ரூபாய் செலவில் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 26—2—82

தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூட்டுறவுத் துறையில் தையல் நிலையங்களைத் திறப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 28—2—82

குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் ஒரு வேளைக்கு கூட உணவில்லாமல் கஷ்டப்படும் ஏழை குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு அளிக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது என்று மத்திய அரசு பாராட்டு தெரிவித்துள்ளது.

## 1—3—82

உதகமண்டலத்தில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலையில் வண்ண பிலிம் தயாரிப்புக்காக 100 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கத் திட்டம் ஒன்றை மத்திய அரசு பரிசீலனை செய்து வருவதாகவும், இந்த விரிவாக்கம் உதகமண்டலத்திலேயே ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டு வருகிறது.

## 2—3—82

அண்ணா சாலைக்கும் வேளச்சேரிக்கும் இடையே அடையாறு பகுதியில் 1 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் 110 கிலோ வாட் திறன்படைத்த துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஒன்று தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனை அமைப்பதற்கு மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் இந்தப் பகுதியில் மின் வினியோகம் சீராகவும், தடங்கலின்றியும் நடைபெறும் என்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

ஸ்வீடன் நாட்டு உதவியுடன் 105 ஹெக்டேர் பரப்பில் சூபாபுல் பயிரிடும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது. நீர்ப்பாசனம் இருந்தால் இந்த மரம் நன்றாக வளரும். நாட்டுத் தீவனத் திட்டத்தின் கீழ் இதனைப் பயிராக்கலாம். இந்தக் சூபாபுல் வளர்ப்பு பற்றி மேலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

பணியாளர் இறந்து விட்டால், வாரிசுதாரருக்குப் பணிதரும் திட்டத்தைத் தனியார் பள்ளிப் பணியாளர்களுக்குப் பயன்படும் வண்ணமும் விரிவாக்க அரசு பரிசிலனை செய்து வருகிறது. இச்சலுகைகள் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் பணி புரியும் பணியாளர்களுக்கு இப்பொழுது கிடைத்து வருகின்றன. இத்தகவலைச் சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 3—3—82

தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் ஒன்று 10 கோடி ரூபாய் மூலதனத்துடன் நிறுவப்பட்டுள்ளது. இக்கழகம் பிற்பட்டோர் மற்றும் குற்றப்பரம்பரையில் இருந்து நீக்கப்பட்ட இனத்தோரின் நலனுக்காகச் செயல்பட உள்ளது. இந்திய கம்பெனிகள் சட்டப்படி தனியார் கம்பெனியாக இக்கழகம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சட்ட மன்றத்தில் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்கள்.

தூத்துக்குடி அருகே அந்தோனியார்புரத்தில் பனை பொருட்களிலிருந்து சீனி கற்கண்டு, பாம்கோலா, ஆகியவை தயாரிக்கும் தொழிற்கூடம் ஒன்றை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

ஏழைமக்களுக்கு வரும் காசநோயை அறவே ஒழிக்கத் தமிழ்நாட்டு மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகள் அதிகரிக்கப் படும் என்று மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் அறிவித்தார் கள்

விவசாயிகளுக்காக 104 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியு டன் விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட விருக்கின்றன. 1959-ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண் பொருள் விற்பனைச் சட் டத்தின் கீழ் விற்பனைக் கூடங்கள் திறக் பட்டு உற்பத்தி செய்கிற பொருட் களை விவசாயிகள் நல்ல விலைக்கு விற்க அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுத் திருக்கிறது. இத்தொழிற்கூடங்களிலேயே விவசாயிகள் தங்கள் பொருட்களைச் சேமித்து வைக்கவும் அங்கேயே தங்கவும் வசதி செய்யப்படவிருக்கிறது என்று சட்ட மன்றத்தில் மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் திரு கா. காளி முத்து அவர்கள் அறிவித்தார்கள்.

## 5—3—82

நிர்வாக வசதியின் காரணமாகப் பெரிய மாவட்டங்களான இராமநாதபுரம், மதுரை, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப் படும். முதலில் இராமநாதபுர மாவட் டத்தையும் அடுத்து மதுரை மாவட்டத் தையும் இரண்டாகப் பிரிக்க நட வடிக்கைகள் எடுக்கப்படும். மூன்றாவ தாக வட ஆர்க்காடு எடுத்துக் கொள்ளப் படும் என்று மேலவையில் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோம சுந்தரம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 6—3—82

மத்திய அரசின் புதிய சிமெண்ட் விநி யோகக் கொள்கையின் காரணமாக ஏற் கனவே வழங்கப்பட்ட சிமெண்ட் பர் மிட்டுகள் செல்லாது என்றும் புதிதாக சிமெண்ட் பர்மிட்டுகள் வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது என்றும் இனி எல்லோரும் வெளிச் சந்தையில் தான் சிமெண்ட் வாங்க வேண்டும் என் றும் மேலவையில் கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்.

## 7—3—82

சென்னை மாநகரில் சேரும் குப்பைகளை கொட்டி அவற்றை உரமாக மாற்றும் பொருட்டு சைதாப்பேட்டையில் ஒன் றரை கோடி ரூபாய் செலவில் ஒரு கம் போஸ் உரக் கிடங்கு அமைக்கப்படும் என்று சட்டசபையில் மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் அறிவித் தார்கள்.

## 9—3—82

சேலம் மாவட்டத்தில் வறட்சி நிவா ரணப் பணிகளுக்காக அரசு 401 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது என்று சட்ட சபையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்கள்.

• சென்னையில் சாலைகள் அமைக்க, விளக்குகள் போட, மழை நீரை வடிகால் மூலம் வெளியேற்ற, வடிகாலைப் பரா மரிக்க, தனியார் தெருக்களுக்கு அடிப் படை வசதி செய்ய ஆகியவற்றிற்காக மாநகராட்சிக்கு அரசு 5 கோடி ரூபாய் கொடுத்துள்ளது என்று சட்டசபையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச் சர் திரு. குழந்தைவேலு அவர்கள் அறி வித்தார்கள்.

## 10—3—82

தமிழ்நாட்டில் சாகுபடி பரப்பை அதிகப் படுத்த ஸ்வீடன் நாட்டு உதவியுடன் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கோவையில் நீர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்படுகிறது என்று சட்ட சபையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் அறிவித்தார்கள்.

## 11—3—82

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏலகிரி, சாத்தனூர் ஆகிய இரு இடங்களையும் சுற்றுலா மையமாக்க அரசு திட்டமிட்டி ருக்கிறது என்று சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித் தார்கள்.

## 12—3—82

சென்னை மாநகரில் கொசுத் தொல் லையை ஒழித்து மலேரியா ஒழிப்புப் பணி யைத் தீவிரமாக மேற்கொள்ள மாநக ராட்சிக்கு 25 இலட்சம்ரூபாய் கடனுதவி செய்யத் தமிழக அரசு முடிவெடுத் துள்ளது என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் அறிவித்தார்கள்.

### வழி பிறக்கும்

டில்லி சென்றிருந்தபோது கூட மற்றவர் களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. எனக்கு மட்டும் கைத்தறி ஆடைகள் அணி விக்கப்பட்டன. ஏன் என்று கேட்டதற்கு 'உங்களுக்கு இந்த ஆடைகள் தானே பிடிக்கும்?'' என்றார்கள்.

ஆனால் இதனால் மட்டும் பிரச்சினைகள் தீராது. நமது மத்திய அரசு உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்தால் நிச்சயம் இதற்கு ஒரு வழி பிறக்கும்.

மத்திய அரசுடன் வம்புக்கு நிற்க நான் விரும்பவில்லை. அதனால்தான் 'நம்ம மத்திய அரசு' என்று பாத்யதை கொண்டாடிக் கூறுகிறேன்.

—பேரறிஞர் அண்ணா

## 13—3—82

நகராட்சிச் சந்தைகள் மூலம் தனி யாருக்குச் செல்லும் லாபம் பொதுமக்க ளுக்குக் கிடைக்கும் வகையில் தனியார் நடத்தும் சந்தைகளை அரசே ஏற்று நடத்தும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்கள்.

## 15—3—82

கன்னியாகுமரி மாவட்டக் கலவரத்தி லும் துப்பாக்கிச் சூட்டிலும் இறந் தோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற் கும் 10 ஆயிரம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்படும் என்றும், காயம் பட்டோ ருக்கு உதவி வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறி வித்தார்கள்.

22 கோடி ரூபாய் செலவில் 4 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய பட்டு உற்பத்தித் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு செயல்படுத்தவிருக்கிறது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்கள்

## 16—3—82

தமிழ்நாட்டில் புதிதாக 2 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என்றும் 1982-83-ஆம் ஆண்டில் கல்விக்காக அரசு 318 கோடி ரூபாய் செலவிட இருக்கிறது என்றும் சட்டசபையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு அரங்க நாயகம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 17—3—82

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பில்லூரில் 20 கோடி ரூபாய் செலவில் மிகப் பெரும் நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டத் தமிழக அரசு முயற்சி செய்து வருகிறது என்று சட்டப்பேரவையில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. கே. ராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்கள்.

## 21—3—82

'மெரினா கடற்கரையை அழகுபடுத்த 25 இலட்சம் ரூபாய் செலவில் திட்ட மொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தில் பல நிறங்களில் 10 முதல் 15 அடி உயரம் வரை வளரும் மரங்கள், தென்னை மரங்கள் முதலி யவை நடப்படும்; திறந்தவெளி சிற் றுண்டிச் சாலைகள் கட்டப்படும்என்றும் மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு எஸ். என் ராஜேந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 22—3—82

தனிப்பட்டவர்களிடம் அநியாய வட்டிக் குக் கடன் வாங்கி அவதிப்படும் ஏழை-எளிய, நடுத்தர மக்களின் துயர்துடைக் கும் வகையில் 150 கோடி ரூபாய் நகைக் கடனை அரசு வழங்கவிருக்கிறது. என்று சட்டப் பேரவையில் மாண்புமிகுசட்டத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்கள்.

ஆசிரியர்களுக்குப் பல்வேறு சலுகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அடுத்த ஆண்டில் 10 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்படும் என்றும் 150 உடற்பயிற்சி ஆசிரியைப் பதவிகளும் புதிதாக ஏற்படுத்தப்படும் என்றும் மேலவையில் மாண்புமிகுகல்வித் துறை அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 23—3—82

முகவை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் களுக்காக 4 கோடி ரூபாய் செலவில் நூற்பு ஆலை அமைக்கப்படும் என்று மேலவையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்திரு விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்கள்.

## 24—3—82

மூன்று தியணைப்பு அலுவலர்களுக்கும் 117 பணியாளர்களுக்கும் இலவசக் குடி யிருப்புகள் அளிக்கப்படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

## 25—3—82

திருச்சி நகராட்சியை மாநகராட்சி யாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது என்று மேலவையில் மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் திரு குழந்தை வேலு அவர்கள் அறிவித்தார்கள்.

போக்குவரத்துத் துறைத் தொழிலாளர் களுக்கும் பொது மக்களுக்கும் பல சலுகைகளை அளிக்கும் வகையில் 77 அறிவிப்புகளைச் சட்டப் பேரவையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

உதவி பெறும் கல்லூரிகளில் முதுகலைப் பேராசிரியர்களாகவும் துறைத் தலைவர்களாக வும் பணியாற்றுபவர்கள் தற்போது ரூ 1200—50—1600—60—1900 என்னும் விகிதத்தில் ஊதியம் பெறுகின்றனர்; ஆனால் அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் முதுகலைப் பேராசிரி யர்களும் துறைத் தலைவரும் ரூ 700—40—1100—50—1600 ரூ 50 தனிச் சம்பளம் என்னும் விகிதத்தில்தான் ஊதியம் பெற்று வருகின்றனர். ஒரே வகைப் பணியை ஆற்று கின்றவர்களுக்கு இரு வேறு வகை ஊதியம் அளிக்கப்படும் நிலையைக் களைந்து, உதவி பெறும் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் துறைத் தலைவர்களுக்கும் வழங்கப்படும் ஊதியம் அரசுக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு நபர் குழு பரிந்துரை அளித்துள்ளது. இதனை அரசு ஏற்று, நடைமுறைப்படுத்த ஆணையிட்டுள்ளது.








# சட்டமன்ற உறுப்பினர் தின விழா





திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துமி — சித்திரை 18

# தமிழரசு

1-5-1982 75 காசு





# ஒரு கிராமம் புது வாழ்வைத் தேடுகிறது!

மு. முத்துக்காளத்தி,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

கடலூர் பழைய நகர்ப் பகுதியொன்றுக்குப் பெயர், பனங்காட்டுக் காலனி. இந்தக் கிராமத்தின் பெயர் சிலருக்குக் கிளுகிளுப்பூட்டும். பலருக்குக் கலவரத்தையும் பயத்தையும் கொடுக்கும். கள்ளச் சாராயம் காய்ச்சுவது இங்கே ஒரு குடிசைத் தொழில் போல் பெருகியிருந்தது. ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருந்தார்கள். சட்டத்திற்குப் புறம்பான செயலில் தாங்கள் ஈடுபடுவது அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. பசிக்கும் வயிற்றுக்குச் சோறிட வேறுவழி தோன்றாமல் அவர்கள் அந்தப் பாவ காரியத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்கள்.

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி. சந்திரலேகா, காவல்துறை கண்காணிப்பாளர் திரு டி.எஸ். பஞ்சாபகேசன், சமூக நல ஊழியர் திரு என்.வி. ஜெயசீலன் ஆகியோர் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகளின் விளைவாக இந்தக் கிராமத்தைச் சீர்திருத்த இளைஞர்கள் வரிந்து கட்டி முன் வந்தனர். பெரியவர்களும் அவர்களோடு ஒத்துழைத்து, இளைஞர்களின் முன்னேற்றக் கருத்துக்களை ஏற்று வாலாயமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்து சாராயப் பானைகளையும், அடுப்பையும் உடைத்து நொறுக்கி, "இனிமேல் நாங்கள் இந்தத் தொழிலில் ஈடுபட மாட்டோம். வேறு கண்ணியமான தொழில் செய்து பிழைப்போம்" என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இவர்கள் அனைவரும் ஆதிதிராவிடர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

எப்படியும் பிழைக்கும் எண்ணத்தை விட்டு, இப்படித்தான் வாழ்வோம் - உழைப்பால் உயர்வோம் என்று சபதம் செய்தனர். இந்தச் சங்கற்பம் நிலைத்து நிற்க வேண்டுமானால், ஒவ்வொரு குடும்பமும் நிரந்தர வருமானம் வரும் ஒரு தொழிலில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இதற்கான திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்திட, ஆட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட அலுவலர் டாக்டர் மணி அவர்கள் இந்தக் குக்கிராமத்தினை ஆய்வு செய்து, அங்குள்ள 108 குடும்பத்தினரையும் பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டமொன்றை உருவாக்கியுள்ளார். இதற்கான கடன் வசதிகளை கடலூர் பழையநகர் பாரதீய ஸ்டேட் வங்கி அளிக்க முன்வந்துள்ளது.

ஒரு கறவை மாடு ரூ. 2,000 வீதம் ஆளுக்கு இரண்டு கறவை மாடுகள் வீதம் மொத்தம் 93 பேருக்கு ரூ. 3,72,000 கடன் வசதி கிடைக்கச் செய்யப்படும். இதில் 50 சதவிகிதம் அதாவது ரூ. 1,86,000 மானியம். ஒரு நபர் ரூ. 4,000 மதிப்பில் இரு கறவை மாடுகள் வாங்கிவளர்த்து வருவார். இந்தத் தொகையில் அவர் ரூ. 2,000 கடன் தொகையையடைத்தால் போதும். மீதி ரூ. 2,000 மானியமாகும். சைக்கிள் ரிக்ஷா வாங்க 20 பேருக்கு, தலா ரூ. 1,800 வீதம் மொத்தம் ரூ. 36,000 கடன் வழங்கப்படும். இதில் மூன்றில் ஒரு பாகம் அதாவது ரூ. 12,000 மானியம். ஒருவருக்கு ரூ. 600 மானியம். டயர் வண்டிகள் வாங்க ஒருவருக்கு ரூ. 5,500 வீதம் 10 பேருக்குக் கடன் வழங்கப்படும். மொத்தக்கடன் தொகையான ரூ. 55,000ல் மூன்றில் ஒரு பங்கு அதாவது ரூ. 18,333 மானியமாகும். ஒரு நபருக்கு ரூ. 1,830 மானியமாகக் கிடைக்கும். மீதித் தொகையை அவர் அடைத்தால் போதும். இவ்வாறே ஆடுகள் வாங்க, பெட்டிக் கடைகள் வைக்க, சைக்கிள் கடைகள் நடத்த, ஒலி பெருக்கி கடை வைக்க, கூட்டுறவுச் சங்கம் மூலம் ஆட்டோ ரிக்ஷா வாங்க, குதிரை வண்டி வாங்க என்று பல்வேறு தொழில்களுக்கு மொத்தம் ரூ 6 இலட்சத்திற்கு மேல் கடன் கிடைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 3 இலட்சத்திற்கு மேல் மானியமாகக் கிடைக்கும்.

இந்தத் திட்டங்கள் செயல் வடிவம் பெறுவதற்கு முன்பாக இடைக்கால உதவித் தொகையாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 50 வழங்கும் நிகழ்ச்சி, 20.3.82 அன்று பனங்காட்டுக் காலனியில் நடந்தது. தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வி. சந்திரலேகா வழங்கினார். விழாவில் கடலூர் பழைய நகர் பாரதிய ஸ்டேட் வங்கிக் கிளை மேலாளர் திரு வி. சிவராஜ், வேளாண்மைப் பிரிவு மேலாளர் திருமதி விமலா கோபலன், திட்ட அலுவலர் டாக்டர் மணி மற்றும் பனங்காட்டுக் காலனிவாழ் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






தஞ்சையில் தந்தை பெரியார் நினைவுத்தூண்
திறப்பு விழா (9-4-1982)



மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய 'அக்கரைச்சீமையில் ஆறுவாரங்கள்' நூல் வெளியீட்டு விழா (18-4-1982)

சென்னை கலைவாணர் அரங்கில் டாக்டர். அம்பேத்கார் அவர்களின்
92 வது பிறந்த நாள் விழா (18-4-1982)





தொழிலாளர் உரிமைகளையும் அவர்கள் நலனையும் எவ்வளவுக்கு எவ்வளவு பாதுகாக்கின்றோமோ அவ்வளவு விரிந்த அளவில் தொழில்வளம் பெருகும். நாட்டுடைமை சேதமாகாமல் செயல்படுமானால் தொழிலைப் பெருக்கலாம். தொழிலாளர் தங்கள் வாழ்வு ஒளிவிடும் அளவு உழைக்கவேண்டும்.

—பேரறிஞர் அண்ணா



புரட்சிக் கவிஞர்
பாரதிதாசனார்
தோற்றம் : 29-4-1891
மறைவு : 21-4-1964

## புதிய உலகு செய்வோம்!

புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்
(புதிய)

பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்
(புதிய)

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இதுஎனதெ'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்.
(புதிய)

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒருபொருள்தனி' எனும் மனிதரைச் சிரிப்போம்!
(புதிய)

இயல்பொருள் பயன்தா மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்.
(புதிய)

—பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழரசு
மலர்: 12 இதழ்: 21
1—5—1982
திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — சித்திரை 18

# சுற்றுலா வளர்ப்போம்



கதிரவன் எழுவதையும், விழ்வதையும் காட்சியாக்கும் கன்னார்ந்த கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற சுற்றுலாத்தலமாக அமைகின்றது. இங்குள்ள காடுகளும், கண்டோர் வியக்கும் அருவிகளும், நீர் நிலைகளும், கலை நுட்பமும், கற்பனைத் திறனும் வாய்ந்த திருக்கோயில்களும் பொலிவார்ந்த விலங்குப் புகலிடங்களும், மகிழ்வூட்டும் மலைப் பகுதிகளும், சுற்றுலாப் பயணிகளின் சிந்தையைக் கவர்ந்து அவர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன. சாலைப் போக்குவரத்து, ரெயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து ஆகியவற்றின் மூலம் இவ்விடங்கள் அனைத்திற்கும் எளிதில் சென்று வரத்தக்க வகையில் ஆவன செய்யப்பட்டுள்ளன. அறிவியல், தொழிலியல், தொழில் நுணுக்கவியல் வளர்ச்சிகளால் புதுமைகள் மலர்ந்தாலும் தொல்மரபு, கலைத்திறம், பண்பாடு தழுவிய பழக்க வழக்கங்கள் முதலிய பழமையான நல்லியல்புகள் புதுமையோடு இணைந்து பொலிவுறுவதைச் சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்தோடு கண்டு மகிழ்ந்து போற்றுகின்றனர்.

அண்மைக் காலம் வரையில் இம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு அரசு ஓரளவே முதன்மை அளித்து வந்தது. சுற்றுலா இடங்களை மேம்படுத்துவதற்கும், தேவையான வசதிகளுக்கு வகை செய்வதற்கும் அதிகச் செலவாகிறது. சுற்றுலா வாயிலின் மூலம் கிட்டும் நலன்களை இந்த அரசு முழுவதுமாக அறிந்துள்ளதால் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி உதவி அண்மை ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இதற்காக 1975-76-ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 22.70 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இத்தொகையின் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு 1982-83ஆம் ஆண்டில் ரூபாய் 140.40 இலட்சமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கொள்கையின் நோக்கங்கள் :**

(1) அயல்நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை அதிக அளவிற்கு ஈர்க்கும் வண்ணம் அனைத்து நாட்டு முதன்மை வாய்ந்த இடங்களை மேலும் மேம்படுத்துதல், அயல் நாடுகளிலிருந்து இந்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை அதிக அளவிற்கு ஈட்டித் தருவதற்கு வழி வகுத்தல் :

(2) உள்நாட்டுப் பகுதியில் சுற்றுலாவை வளர்ப்பதற்காகச் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்துதல், அதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதோடு பயணிகளுக்கும் கைவினைத் தொழில்களுக்கும் ஊக்கமளித்தல் :

(3) தமிழ்நாட்டின் சிறந்த பண்பாட்டு மரபைத் தமிழ்நாட்டு மக்கள் அறிந்து கொள்ளச் செய்வதற்கு ஊக்கமளிக்கவும் பொழுதுபோக்கு வாய்ப்புக்களுடன் கல்வி அறிவையும் இணைத்து அளிப்பதற்காக இம்மாநிலத்தில் அதிகமாக நம் நாட்டவர் அறியாத சுற்றுலா இடங்களை மேம்படுத்தி, இம்மாநிலத்திற்குள் சுற்றுலாப் பணியை வளர்த்தல் ;



மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்

## திரு. இராம. வீரப்பன்

(4) சுற்றுலாப் பயணிகளுக்கு, சுற்றுலாவில் கிடைக்கும் பயன்கள் உரிய வகையில் கிடைக்கப் பெறவில்லை எனும் குறையைப் போக்கும் வண்ணம் ஓரளவு வசதி வாய்ப்புள்ள சுற்றுலாப் பயணிகளுக்கும் அதிகச் செலவு இல்லாத வகையில் இடவசதிக்கு வகை செய்தல் ;

**சுற்றுலாப் பயண வட்டங்கள் மேம்பாடு :**

முக்கியச் சுற்றுலாப் பயண வட்டங்களைத் திட்டமிட்டு ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்கு உறுதி செய்யும் பொருட்டு, மத்திய அரசோடு கலந்தாலோசித்து மூன்று சுற்றுலாப் பயண வட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) சென்னை - மாமல்லபுரம் - திருக்கழுக்குன்றம் - காஞ்சிபுரம் - திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர் - புதுக்கோட்டை - மதுரை - இராமேசுவரம் - கன்னியாகுமரி - குற்றாலம் - திருவனந்தபுரம்.


(2) சென்னை-கிருஷ்ணகிரி - ஒகேனக்கல் - ஏர்க்காடு - கோயம்புத்தூர் - உதகமண்டலம் - முதுமலை - மைசூர் - பெங்களூர்.

(3) இராமேசுவரம் - மதுரை - கொடைக்கானல் - புதுக்கோட்டை - திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர் - மாமல்லபுரம் - சென்னை.

சுற்றுலாப் பயண வட்டங்களை மேம்படுத்துவதற்காகச் சுமார் 70 கோடி ரூபாய் மொத்த மூலதனச் செலவில் பெருந்திட்டம் ஒன்றைத் தயாரித்து மத்திய அரசு நிதி உதவி வேண்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச் சுற்றுலாப் பயண வட்டங்களின் அடிப்படையில் மேம்பாட்டுக்குரிய வரைபடத்தையும் இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளோம். 1981-ஆம் ஆண்டு டிசம்பரில் புதுடில்லியில் நடைபெற்ற மாநில சுற்றுலாத் துறை அமைச்சர்களின் மாநாட்டில் இத்திட்டம் குறித்து முழுமையாக விவாதிக்கப்பட்டது. மத்திய அரசின் நிதியுதவி குறித்த நமது செயற்குறிப்புகள் இந்திய அரசின் ஆய்வில் உள்ளன.

**மாமல்லபுரம் :**

மாமல்லபுரம் மேம்பாட்டிற்காக ரூபாய் 6 கோடி செலவில் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டத்தில்



முன்னுரிமை அளிக்கும் வகையில் பின்வரும் ஐந்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(1) சுற்றுச் சாலை ஒன்றை அமைத்தல்.

(2) போக்குவரத்து முனைகளை அமைத்தல்.

(3) விற்பனைக் கடைகளைக் கட்டுதல்.

(4) எழில் வளாகம் (Vista Formation) உருவாக்குதல்.


(5) மனமகிழ்வு வசதிகள்.

மேற்கூறிய ஐந்து திட்டங்களை மேம்படுத்துவதற்காக முதல் தவணையாக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கும்படி இந்திய அரசைக் கேட்டுள்ளோம். மைய அரசு இன்னும் அதற்கு ஏற்பளிக்கவில்லை.

மாமல்லபுரத்தில் உள்ள கற்றேர்ப் புறத்தில் (ஐந்து தேர்ப் பகுதி) அல்லது கடற்கரைக் கோவிலுக்கு அருகில் "ஒலி-ஒளிக்" காட்சி அமைப்பது குறித்து மாமல்லபுரம் மேம்பாட்டிற்கான சுற்றுலாப் பெருந்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாநில அரசு இத்திட்டத்தை ரூபாய் 47 இலட்சம் செலவில் நிறைவேற்ற வேண்டுமென முடிவு செய்தது. இத்திட்டத்தின் மூலதனச் செலவிற்காக ரூபாய் 20 இலட்சம் வழங்க மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்தைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிறைவேற்றும். மேலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து பராமரிப்பதற்கான செலவையும் அக்கழகமே ஏற்கும்.

மாமல்லபுரத்தைக் காண வரும் குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக அடிப்படை வசதிகளுடன் கூடிய ஒய்வுக் கூடத்தைக் கட்டுவதற்கென்று 1978-79-ல் ரூ. 1,31,814 வழங்கப்பட்டது. விடுமுறை நாட்களில் பயணிகள் தங்கவும், உணவு சமைக்கவும் ஏற்ற தங்கு மிடங்களை அமைப்பதற்கென்று 1979-80-ல் ரூ. 3.50 இலட்சம் வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டு கடற்கரைக் கோவிலுக்கருகில் தங்குமிடத்திற்குச் சுற்றி வேலி அமைப்பதற்கும் சிற்றுண்











டிச்சாலை, பாதுகாவலர் அறை ஆகியவற்றைக் கட்டுவதற்கும் ரூபாய் 2.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய மூன்று பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு 1981-82-ல் கூடுதலாக ரூ. 1.63 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் திறந்தவெளி அரும் பொருட்காட்சியகம் ஒன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அரும் பொருட்காட்சியகத்தில் முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளும், தமிழ் இலக்கியக் காட்சிகளும் சிற்பங்களாகச் செதுக்கப்படும். கடற்கரைக்கருகில் சுமார் 25 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள பூங்காவில் இக்காட்சியகத்தை அமைக்கக்கருதப்பட்டுள்ளது. இது தொடர்பான தொடக்கப் பணிகளை நிறைவேற்றும்


பொருட்டு 1980-81-ல் ரூ. 9.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு 1981-82-ல் கூடுதலாக ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டது. இக்காட்சியகத்தில் சிற்பங்களைச் செதுக்குவதற்குரிய மூலக்கருத்துக்

களைத் தெரிந்தெடுப்பதற்கெனத் துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கையைத் துணைக் குழு முடிவு செய்யும் நிலையில் உள்ளது.

மாமல்லபுரத்தில் "ஒலி-ஒளிக்" காட்சிக்கு வகை செய்யும் பொருட்டு 1982-83-ல் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யவும் தற்போதுள்ள தங்குமிடங்களை 1982-83-ல் ரூபாய் 5 இலட்சம் செலவில் மேம்படுத்தவும் குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கென்று கூடுதல் தங்குமிட வசதிகளை அளிக்கவும், கருதப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் சுற்றுலா அலுவலகக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கென்று ரூபாய் 2.50 இலட்சம் ஒதுக்கக் கருதியுள்ளது.

**இராமேசுவரம் :**

இராமேசுவரத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு இராமேசுவரத்தையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் மேம்படுத்தும் வகையில் ரூபாய் 28 கோடி மூலதன ஒதுக்கீட்டுடன் பத்து ஆண்டுகளில் நிறைவேற்றும் பொருட்டு பெருந் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இராமேசுவரம் மேம்பாட்டுத் திட்டம் பல வகையிலும் அனைத்து நாட்டு உதவி பெறத் தகுதி வாய்ந்த திட்டமாக விளங்குவதால், குறிப்பாக இத்திட்டம் நம் நாட்டிற்குக் கூடுதல் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் என்பதாலும், உலக வங்கி போன்ற அனைத்து நாட்டு நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறும்பொருட்டு 1980-ல் மத்திய அரசை நாம் அணுகினோம்.




மைய அரசின் பதிலை எதிர்நோக்கியுள்ளோம். இதற்கிடையில் இம்மாநில அரசின் நிதி நிலைக்கேற்ப முக்கியமான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1979-80ஆம் ஆண்டில் இராமேசுவரத்தில் ரூ. 3 இலட்சம் செலவில் துயில்கூடம், சுற்றுலாத் தகவல் நிலையம், ஆகியவற்றைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டிடப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. செலவு வரம்பிட்டுச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்காக (Budget tourist) இராமேசுவரத்தில் இளைஞர் இல்லம் (Youth Hostel) ஒன்றைக் கட்டவும், ரூ. 10 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்த இல்லத்தைக் கட்டி வருகிறது.

பாம்பன் சாலைப் பாலம் கட்டி முடிக்கப்பட்டவுடன் வடஇந்தியாவிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இராமேசுவரத்திற்கு வருவர். இராமேசுவரம் காசிக்கு இணையான திருத்தலமாகவும், இந்தியாவிலுள்ள பயணத்தலங்களுள் மிக முக்கியமானதாகவும் இருப்பதால் இங்கு வடஇந்தியத் திருத்தலப் பயணிகள் ஏராளமாகவரும்வாய்ப்புள்ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான இட வசதி அறவே போதாது. சாலைப் பாலம் கட்டிமுடிக்கப்பட்டவுடன் ஏராளமான பயணிகள் இங்கு வருவர் என்பதை எதிர்பார்த்து இராமேசுவரத்தில் அடிப்படை வசதிகளை மேலும் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு இட வசதி செய்து கொடுக்கவும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கூடாரங்களில் தங்குவதை விரும்புவர் என்பதால் அவர்களுக்குக் கூடாரம் அமைத்துக் கொடுக்கவும், அதற்குப் பக்கத்தில் குடில்களையும், படகுத் துறையையும் கட்டவும் கருதப்பட்டுள்ளது. இதற்கு 1982-83ஆம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவாகும்.

**கன்னியாகுமரி :**

கன்னியாகுமரி சுற்றுலாப் பயணிகள் ஏராளமாய் வரக்கூடிய இடமாக இருப்பதால் இதனையும் வட்டக்கோட்டை உட்பட சுற்றுப் புறங்களையும் சுமார் ரூ. 16 கோடி செலவில் மேம்படுத்த பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.



**உதகமண்டலம் :**

மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் ஏரியையும் அதன் சுற்றுப் புறங்களையும் மேம்படுத்தும் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம். உதகமண்டலத்தையும் முதுமலையையும் இணையாக மேம்படுத்த முதல்வர் விரிவான உத்திரவுகள் அளித்துள்ளார். அவ்வாறே அரசுத் துறைகளிடமிருந்தும், நிதி உதவி நிறுவனங்களிடமிருந்தும் நிதி திரட்டி, அதனைக்கொண்டு உதகமண்டலத்தையும், முதுமலையையும் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**கொடைக்கானல் :**

கொடைக்கானல் மிகவும் புகழ்வாய்ந்த மலைவாழ் நகரமாகும். எனவே இங்கு வரும் சுற்றுப் பயணிகளுக்கு மேலும் இடவசதி செய்து கொடுக்க வேண்டும். இதற்காக 1982-83ஆம் ஆண்டில் கொடைக்கானலில் மாளிகை ஒன்றையும், அதனைச் சுற்றியுள்ள



நிலங்களையும் கையகப்படுத்த அரசு ஆய்ந்து வருகிறது.

**பிச்சாவரம் :**

தென்னார்க்காடு மாவட்டத்தில் பிச்சாவரத்தைச் சுற்றுலா இடமாக மேம்படுத்தும் திட்டத்தின் முதற்கட்டமாகச் சில பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சமையலறை கொண்ட இரு துயிற்கூடங்களையும் உணவருந்தும் கூடமும், ஒரு குடிலும் படகுத் துறையும் கட்டவும் சாலை போட நிலத்தைக் கையகப்படுத்தவும் 1978-79-ஆம் ஆண்டில் ரூ. 4.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாகச் செங்கற் சுவருடன் வளைவு கூரை அமைத்த குடில்கள் கட்டவும் சிறு சிற்றுண்டியகம், வரவேற்பு இல்லம், சமையற் கூடம், கழிவறை கட்டவும், படகுத் துறை கட்டவும் 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. படகு இல்லம் கட்டவும் பிச்சாவரத்தைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உல்லாசப் படகுகள் வாங்கவும் 1981-82-ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இது மேற்படி திட்டத்தின் மூன்றாம் கட்டப்பணியாகும். இப்பணிகள் நடந்தேறி வருகின்றன. 1982-83-ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் செலவில் குடில்கள் கட்டவும், உல்லாசப் படகுகள் வாங்கவும் கருதப்பட்டுள்ளது. இவை தவிர பிச்சாவரத்தை மாவட்ட உலாத் தலமாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**திருச்சிராப்பள்ளி :**

திருச்சிராப்பள்ளி, இயல்பாகவே ஒரு சுற்றுலாத் தலமாக விளங்குவதோடு, திருவரங்கம், சமயபுரம், திருவாணைக்காவல், குமாரவயலூர் ஆகிய திருத்தலங்களுக்குச் செல்வதற்கான ஒரு மையமாகவும் விளங்குகிறது. காவிரியிலிருந்து கொள்ளிடம் பிரிந்து செல்கின்ற இடமான, முக்கொம்பில் அண்மையில் சுற்றுலா மையம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் செலவு வரம்பினைத் திட்டமிட்டுக் கொள்கிற சுற்றுலாப் பயணிகளுக்குப்போதிய இடவசதி இல்லை. எனவே, இங்கு இளைஞர் இல்லம் ஒன்று கட்ட வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது. இளைஞர் இல்லம் ஒன்று அமைப்பதற்காக 1982-ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த முறையில் பணியாற்ற சுற்றுலா அலுவலகத்திற்காகக் கட்டிடம் கட்ட ரூ. 2.50 இலட்சம் ஒதுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட உலாத் தலங்கள் :**

மாவட்டங்களில் உள்ள உள்ளூர் மக்களுக்குக் குறிப்பாக கிராமப் புறங்களில் வாழ்கின்றவர்களின் பயனுக்கென உள்ளூர் சுற்றுலா வசதியை மேம்படுத்துவதற்காக மாவட்டம் ஒன்றுக்கு இரண்டு மையங்கள் வீதம் மாவட்ட உலாத் தலங்கள் ஏற்படுத்த அரசு திட்டம் வகுத்து வருகிறது. இதற்காக உலாத் தலங்களாக மேம்படுத்துவதற்கு வாய்ப்புள்ள பகுதிகள் தெரிந்து எடுக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் போக்குவரத்துப் பணி நடத்தும் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், அங்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் அவற்றை மேலும் கவர்ச்சி யூட்டி எழிற்படுத்துவதற்கும் தங்கள் உபரி நிதிகளிலிருந்து ரூ. 3 இலட்சம் முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு அந்த இடங்களில் வசதிகளை மேம்படுத்துவதால் அங்கு சென்றுவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து, அதன் வாயிலாக முதலீடு செய்கின்ற அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் பெருகும். இந்தத் திட்டம் 1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலேயே வகுக்கப்பட்டாலும்கூட பல போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமை சரியில்லாததால் செயற்படுத்தப்படுவது தொடக்கத்தில் சற்று மந்தமாகவே இருந்தது. நிலைமை தற்போது சீரடைந்து வருகிறது. அடுத்து வரும் ஆண்டு





களில் இப்பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் :**


1971-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெருமளவில் தனது பணிகளை விரிவுபடுத்துவதில் விரைவாக முன்னேறியுள்ளது. தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தகுந்த அடிப்படையான வசதிகளுக்கு வகை செய்வதற்கு 1977-ஆம் ஆண்டிலிருந்து இக்கழகம் வணிக அடிப்படையில் சீரிய மாற்றம் பெற்றது. இக்கழகத்தின் வருமானம் 1971-72 ல் ரூ. 4.58 இலட்சமாக இருந்து 1980-81-ல் ரூ. 164.51 இலட்சமாக உயர்ந்துள்ளது. 1981-82-ல் ரூ. 225 இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83-ஆம் ஆண்டு திட்ட மதிப்பீடு ரூ. 300 இலட்சமாகும். இக்கழகம் மேற்கொண்டுள்ள முக்கிய வளர்ச்சிப் பணிகளாவன :

**உணவகங்கள் (ஓட்டல்கள்) :**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ல் அமைக்கப்பட்டபோது அரசிடமிருந்து ஆறு சுற்றுலா மாளிகைகளை மேற்கொண்டது எனினும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேலும் பல புதிய பணிகளைத் தொடங்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் சுற்றுலா மாளிகைகளைச் சுற்றுலாப்பயணிகள் செலுத்தும் கட்டணத்திற்கேற்ப சிறந்த வசதியுடன் கூடிய உயர்வகை உணவகங்களாக (ஓட்டல்களாக) மாற்றியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா முதன்மை வாய்ந்த இடங்களில் ''ஓட்டல் தமிழ்நாடு'' ''கடற்கரைப் பொழுது போக்கிடங்கள்'' போன்றவற்றையும் 'பெருவழி விடுதிகளையும் ( Motels ) நடத்துகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் ஓட்டல்களை நடத்தி வருகிறது:

கோயில் நகரங்கள் :—சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை (2 பிரிவுகள்), இராமேசுவரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி.

குறிஞ்சி நகரங்கள் :—உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு.



பொழுதுபோக்கு இடங்கள் :—ஒகேனக்கல், மாமல்லபுரம்.

பெருவழி விடுதிகள் :— இராணிப்பேட்டை, உளுந்தூர்ப் பேட்டை.

1971-ஆம் ஆண்டில் தங்குமிடங்களில் மொத்த படுக்கை வசதிகள் 253 ஆக இருந்தன. தற்போது 1,059 ஆகப் பெருகியுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் பல ஓட்டல்களில், மதுரையிலுள்ள 'ஓட்டல் தமிழ்நாடு' நட்சத்திர ஓட்டலாகும். பிறிதொரு நட்சத்திர ஓட்டல் கோயம்புத்தூரில் விரைவில் தொடங்கப்படும். மூன்றாவது பெருவழி விடுதி ( Motel ) கிருஷ்ணகிரியில் விரைவில் உருவாகும்.

**இளைஞர் இல்லங்கள் :**

நடுத்தர வகுப்பினர், இளைய தலைமுறையினர் முதலியோரின் தேவைகளை நிறைவு செய்யத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முன்னோடித் திட்டமாக இளைஞர் இல்லங்கள் பலவற்றைக் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளது. 2-8-1981 அன்று ஏர்க்காட்டில் தொடங்கப்பட்ட இளைஞர் இல்லம் சுற்றுலாப் பயணிகளிடையே புகழ்பெற்றுள்ளது. மண்டபம், ஒகேனக்கல், உதகமண்டலம், இராமேசுவரம் ஆகிய இடங்களில் உள்ள இளைஞர் இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டுத் தங்குவதற்குத் தயார் நிலையில் உள்ளன. அவை விரைவில் தொடங்கப்படும். பிச்சாவரம், கொடைக்கானல், கன்னியாகுமரி, ஆகிய இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் தங்கி சமைத்துச் சாப்பிடுவதற்கான வசதிகளுக்கு வகை செய்வதற்காக மாமல்லபுரத்தில் முகாமிடம் (Camping site) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இருபத்தெட்டுப் படுக்கை வசதிகளுடன் கூடிய குடில்கள் மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை விரைவில் கட்டி முடிக்கப்படும். கூடுதல் வசதிகளைச் செய்து தருவதன் மூலம் உதகமண்டலம், மாமல்லபுரத்திலுள்ள ஓட்டல்களின் தரத்தை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் கடற்கரைப் பொழுதுபோக்குத் தொகுதிகளை (Beach Resort Complex) விரிவுபடுத்தும் பணி முடியுந்தருவாயில் உள்ளது. புதுக்கோட்டை, முதுமலை, காஞ்சிபுரம், சென்னை ஆகிய இடங்களில் புதிய ஓட்டல்களும், திருத்தணி பெருவழி விடுதியும் கட்டுவது குறித்து ஆய்வில் உள்ளது.

சுற்றுலா செல்ல விழையும் பயணிகளிடம் சுற்றுலாவின் சிறப்புகளை எடுத்துரைத்து பயணிகளைச் சேர்க்கும் பணிக்கென சிங்கப்பூர், மலேசியாவில் முகவர்களைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகந்தான் இத்தகைய தொரு வசதியை முதன் முதலாகப் பெற்றுள்ளது. 1972ஆம் ஆண்டில் இரண்டே இரண்டு சொகுசுப் பேருந்துகளுடன் தொடங்கப்பட்ட இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவில் தற்போது பதினாறு சொகுசுப் பேருந்துகள் உள்ளன. அவற்றில் மூன்று சீர்வளி வசதி ( air conditioned ) பெற்றவை. இன்னும் நான்கு வண்டிகள் இப்பேருந்துத் தொடரில் விரைவில் சேர்க்கப்படும்.

தமிழ்நாட்டில் சுற்றுலா முதன்மை வாய்ந்த இடங்களை மேம்படுத்துவதற்கும், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என்பதை இதுகாறும் கூறியவற்றால் அறியலாம். சுற்றுலா வளர்ச்சிக்கு ஆகும் பெரும் செலவில் ஒரு பகுதியை ஏற்பதன் மூலம் மத்திய அரசு மாநில சுற்றுலா வளர்ச்சிக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டுமென மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சுற்றுலா வளர்ச்சிக்கான முக்கியத் திட்டங்களை மேற்கொள்வதற்கு மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் இப்பிரிவுக்குப் பல்வகை வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் முதன்மை நல்க வேண்டுமென இவ்வரசு மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தும்.

[தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட சுற்றுலாத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது].



# வளரும் சுற்றுலா

பழமையான நமது நாட்டின் சிறந்த பண்பாட்டுப் பாரம்பரியம் மற்றும் காணக்கிடையாத இயற்கை அழகு ஆகியவை குறித்து அயல்நாடுகளுக்கு தகுந்த முறையில் தெரியப்படுத்துவதன்மூலம் சுற்றுலாத் துறைக்கு புதிய உத்வேகத்தை அளிக்க கடந்த இரண்டாண்டுகளாக அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்று மாண்புமிகு மத்திய சுற்றுலா-போக்குவரத்து அமைச்சர் திரு ஏ.பி. சர்மா குறிப்பிட்டார்.

மார்க்கெட்டிங் மற்றும் மானேஜ்மெண்ட் நிறுவனத்தின் உயர்மட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களிடையே அமைச்சர் 19—4—1982 அன்று உரையாற்றினார். அவரது உரையில், ''வரும் 1985-இல் 1.7 மில்லியன் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வகையிலும், 1990-இல் 3.5 மிலியன் பயணிகளை வரவேற்கும் வகையிலும், சுற்றுலா உள் கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைப்புகளை வலுப்படுத்த 1980 மற்றும் 1981-இல் முயற்சிகளை மேற்கொண்டது'' என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

சுற்றுலா சர்க்யூட் கொள்கை அடிப்படையில் நாட்டில் சுற்றுலா மேம்பாட்டுக்காக, நீண்டகாலத் திட்டமொன்றினை வரைய தீவிர முயற்சிகளைத் துறை மேற்கொண்டுள்ளது. 441 சுற்றுலா மையங்களைக்கொண்ட 61 சுற்றுலா சர்க்யூட்டுகளாக நாடு பிரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா மேம்பாட்டுக்காக மத்திய மாநிலத் துறைகளில் ஒதுக்கப்படும் எதிர்கால திட்ட ஒதுக்கீடுகளை, முழுக்க முழுக்க சுற்றுலா சர்க்யூட்டுகளுக்கே ஒதுக்கப்படும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் சுற்றுலா கிராம வளாகம் ஒன்றினை அமைக்க அமைச்சகம் முடிவு செய்துள்ளது. மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் இவை உருவாக்கப்படும். கைவினைப் பொருட்கள் மற்றும் கிராமியக் கலைகள் உட்பட கிராமப்புற வாழ்க்கையினை விளக்கும் பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய விடுமுறை மையங்களாக இவை திகழும்.

கடந்த 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில், 8000 அறைகளைக் கொண்ட 83 ஓட்டல்கள் கட்டும் திட்டத்திற்கு அமைச்சகம் அனுமதி வழங்கி உள்ளது. இத்துடன் ஒப்புதலளிக்கப்பட்ட ஓட்டல்களின் எண்ணிக்கை 159 (30,000 அறைகள்). இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபின், 1985-ஆம் ஆண்டு இலக்கான 1.7 மிலியன் சுற்றுலாப் பயணிகளுக்கு இடவசதியினைச் செய்துதர துறையால் முடியும். 1985-இல் 40,000 அறைகள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள சுற்றுலா வளத்துக்கு ஏற்ப சுற்றுலா கட்டமைப்பு உருவாக்கும் அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு தனியார் துறையினருக்கு அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

தொழில் திறனும், நுட்ப அறிவும் விஞ்ஞான வளர்ச்சியும் வசதி படைத்த ஒருசிலர் வசமாகச் சிக்காமல், சமூகத்தில் எல்லா மட்டங்களிலும் எல்லா உழைப்பாளிகளுக்கும் உரித்தாக வேண்டும். நம் நாட்டின் பின் தங்கிய நிலையையும் பிற நாட்டின் முற்போக்கு நிலைமையையும் ஒப்பிட்டு நம் தேக்கத்துக்கும் அவர்கள் வளர்ச்சிக்கும் காரணம் காட்டுகிறார் கவிஞர். 'பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார் என்பதெல்லாம், கூடித்தொழில் செய்யும் கொள்கையினால் தோழர்களே' - அது அங்குள்ள வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் காரணம். 'வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம் கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே! - இது இங்குள்ள



வறுமைக்கும் நலிவுக்கும் தேக்கத்துக்கும் துன்பத்துக்கும் காரணம். பலரும் கூடி ஒவ்வொருவரும் ஒருசிறிது முதலிட்டு, ஒன்று, சேர்ந்து தொழில் செய்தால் முதலாளி யார், தொழிலாளி யார்? பணக்காரன் ஒருவன் அவனை நம்பிப் பாட்டாளிகள் பலர் என்ற நிலை மாறிப் பங்காளிகள் அனைவரும் என்ற நியதியில் தொழில் வளரும். சுரண்டிச் சேர்த்த செல்வத்தை வைத்து சுருட்டும் இலாபத்தையே குறியாகக் கொண்டு, ஏழையின் உழைப்பை மட்டுமல்ல, உடலையும் உயிரையும்கூட, போட்ட முதலுக்கு வட்டியாக வசூல் செய்யும் முதலாளித்துவ ஆதிக்க முறை முறிய வேண்டுமானால், கூடித் தொழில் செய்யும் நெறி வளர்த்துக் குடிமக்கள் கூடி உழைக்க வேண்டும். பொதுநலன் நாடி வளரவேண்டும். 'கூடை முறம் கட்டுநரும் கூடித் தொழில் செய்யின் தேடிவரும் லாபம், சிறப்பு வரும்.' சிறு தொழிலிலும் சரி, பெருந்தொழிலிலும் சரி, கூடித் தொழில் செய்வதே குலத்துக்கு நல்லது, கூட்டு முயற்சியே நாட்டுக்கு நல்லது என்று, உழைப்போடு உறவை, உணர்வை, ஒற்றுமையை வளர்த்து, செழிப்போடு செம்மையைப் போற்றிப் பொருளோடு பொதுமையைப் பிணைத்துப் போதனை செய்கிறார் புரட்சிக் கவிஞர்.

இத்தகைய தொழில் நெறியைப் போற்றுகையில் பொருளாதாரம் பலப்பட்டு, பண்பாடு வலுவடைந்து, சமுதாயம் சீர் திருந்தித் தனிமனிதன் தழைப்பான். பொருள் நெறியிலிருந்து அருள் நெறியினைக் கடைந்தெடுக்கும் கவிஞர், பொதுமை உணர்வை, பரந்த உள்ளத்தை, விரிந்த அன்பைப் போற்றுகின்றார்; போதிக்கின்றார்.

''துன்பம் பிறர்க்கு நல் இன்பம் தமக்கெனும் துட்ட மனோபாவம் அன்பினை மாய்க்கும், அறங்குலைக்கும்; புவி ஆக்கம் தனைக் கெடுக்கும், வன்புக்கெலாம் அதுவே துணையாய் விடும், வறுமையெல்லாம் சேர்க்கும்'' என்று எச்சரித்து, மனிதன் மனத்தையே மாற்றி, மனிதத் தன்மையை வளர்ப்பதை வலியுறுத்துகின்றார். 'தான், தனது' என்பவற்றிலிருந்து விடுதலை பெற்றால் தான் விமோசனம் என்று சமயத் தத்துவ மெய்யறிஞர்கள் கூறுகின்றனர். மறுமைக்கு வழிகாட்டி, இம்மையிலேயே செம்மை பெறவும், தானென்ற தளையிலிருந்து விடுபட்டுச் சமுதாயத்துடன் சங்கமமாக வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறார், அறிவுக்கவி பாரதிதாசன். 'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம், இவையுண்டு தானுண்டு என்போன் சின்னதொரு கடுகுபோல் உள்ளம் கொண்டோன். 'கடுகுள்ளம் களைந்து கடல்போல் உள்ளம் பெருக வேண்டும். 'தூய உள்ளம் அன்புள்ளம், பெரிய உள்ளம் தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்' என்று தரணிக்குத் தகைமைசால் பொதுமை நெறியினைத் தருகின்றார் தமிழ்க் கவிஞர்.

பள்ளந்தனில் விழும் பிள்ளைப் பூச்சிபோல், பயந்து, நடுங்கி, உள்ளத்தை, உடலை, உயிரைச் சுருக்கி, உணர்விழந்து உழல்வதை ஒழித்து, மனிதன் எழுச்சி பெற வேண்டும். ''அறிவை விரிவு செய்; அகண்டமாக்கு, விசாலப்பார்வையால் விழுங்கு மக்களை:, அணிந்து கொள், உனைச் சங்கமமாக்கு'' என்று அவர் விடும் அழைப்பில் சமயத்தின் சார்மும் சமதர்மத்தின் சாரமும் சங்கமமாகின்றன. அன்பும் அறிவும் கூடிக் கலக்கின்றன.. ''உன் வீடு உனது பக்கத்து வீட்டின் இடையில் வைத்த சுவரை இடித்து, வீதிகள் இடையில் திரையை நீக்கி, நாட்டோடு நாட்டை இணைத்து மேலே ஏறு'' என்று அறமும் அரசியலும் கலந்து பாடும்போது பாரதிதாசன், உண்மையில் பாருக்கே தாசனாகி விடுகின்றார்.

வாழப் பிறந்தவர் சிலர், வாடி நலியப் பிறந்தவர் பலர், உழைப்பவர் பலர், உயர்பவர் சிலர், அடிமைகள் பலர், ஆண்டார் சிலர், என்ற இழிவினை மாற்றி புதியதொரு பொதுமையான சமுதாயத்தைச் சமைக்கவேண்டும், தரித்திரத்தை வென்ற தனிமனிதன், தானென்னும் தளையிலிருந்து மீண்டும் தரணிக்கெல்லாம் தொண்டாற்ற வேண்டும். கூடித் தொழில் செய்து, கோடி நலன் சேர்த்து, மனித குலம் வளரச் செய்யவேண்டும். அதற்கு ஆதரவாக அரசியல் துறையில் சனநாயகம் அமையவேண்டும். பொருளாதாரத் துறையில் கூட்டுறவுப் பாதையைப் போற்றவேண்டும்; சமூகத் துறையில் பகுத்தறிவின் எழுச்சி வேண்டும்; அறிவியலில் தன்னலம் பேணாப் பொது உணர்வு வேண்டும். அப்பொழுது தான் வறுமையும் சிறுமையும் இல்லாத சமுதாயம், வஞ்சமும் வன்முறையும் இல்லாத சமுதாயம், சூதும் சுரண்டலும் இல்லாத சமுதாயம், அறியாமையும் ஆதிக்கமும் நிலவாத சமுதாயம் உருவாகும். ஊனுடலில் உயர்வு காண மானுடம் வேண்டுமென்பதே பாரதிதாசனின் தாரக மந்திரம். மனிதத் தன்மையும் மனச்சான்றும் வளருகின்ற சமுதாயத்தில் தான், எனது என்னும் சிறுமை தவிர்த்து இன்பம் எல்லார்க்கும் என்ற பேரிகை எங்கும் முழங்கிடும் என்று இலட்சியக் கனவு காண்கிறார், புதுமைக் கவிஞர்- பொதுமக்கள் கவிஞர்- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

[வானொலிப் பேச்சு]

## கோவை மாவட்டத்தில் பிற்பட்டோர் நலத்துறையின் நல்வாழ்வுத் திட்டப் பணிகள்

கோவை மாவட்டத்தில் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் 9,502 பேருக்கு ரூ. 31,84,000 உபகாரச் சம்பளமும், 33 பேருக்கு மதிய உணவு வழங்க ரூ. 1,000மும், பள்ளி மாணவ, மாணவியர் 1,909 பேருக்கு சீருடை ரூ. 24,600 செலவிலும், 33 துவக்கப்பள்ளி மாணவர்களுக்குப் புத்தகங்கள், சிலேட்டுகள் ரூ. 627 செலவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. 27 பேருக்குப் பாசனக் கிணறு தோண்டுவதற்காக ரூ. 25,705 மானியமும், படிப்பில் சிறந்த இரண்டு மாணவர்களுக்குப் பரிசுகளும், சலவைத் தொழிலாளி 225 பேருக்கும், சவரத் தொழிலாளி 200 பேருக்கும் ரூ. 1,00,813 செலவில் தொழில் கருவிகளும் அதைப்போல 40 பேர்களுக்கு ரூ. 6,000 செலவில் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஒரு மாணவர் விடுதிக்கு உணவு வழங்குவதற்காக ரூ. 11,115 மானியமும், 50 பேருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கான ரூ. 62,445 செலவிடப்பட்டு நிலமும் வாங்கப்பட்டுள்ளது.

# புத்துலகம் கண்ட புரட்சிக்கவி



**கா. திரவியம் இ.ஆ.ப**
தலைமைச்செயலாளர், தமிழக அரசு

காடு களைந்தும், நல்ல கழனி திருத்தி உழவு புரிந்தும், ஆழ் கடல், காடு, மலை, அத்தனையிலும் பல சத்தெடுத்தும், புவி பதமுறவே நிதமும் உழைக்கின்றனர் பாட்டாளி மக்கள். அந்த உழைப்புக்கு அவர்களுக்குக் கிட்டும் பரிசு, வறுமை; போதாக் குறைக்குப் பொறுமையும் பணிவும் அடக்கமும் புகட்டும் அறிவுரை. கந்தையணிந்து, இரு கையை விரித்துத் தங்கள் மெய்யினைப் போர்த்தும் அவல நிலையில் அவர்கள் அலக்கழிக்கின்றனர். இவ் இழி நிலையைக் கண்டு கவிஞர் பாரதிதாசன் இரத்தக் கண்ணீர் சிந்துகின்றார்.

செருக்கையே முதலாக வைத்து, சுரண்டலையே தொழிலாக நடத்தி, சோம்பலிலே வாழ்க்கையைத் தோய்த்து, சூழ்ச்சியால் ஆதிக்கம் செலுத்தும் செல்வர்களையும், வீணர்களையும் அவர் சாடுகிறார். சாபமிடுகிறார்; சொல்லால் சுட்டெரிக்கின்றார்.

இயற்கையின் எழிலைச் சித்தரித்து, அந்த இரசனையில் இலயித்துவிடுகின்றனர். இலக்கிய மரபில் மட்டுமே ஊறிய சொல்லேர் உழவராம் புலவர்கள். ஆனால் நம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோ, அதற்கு அப்பால் சென்று, ஆழத் துருவி அந்த இயற்கை அழகினைக் கடைந்தெடுத்து, உலகுக்குக் காணிக்கையாகப் படைக்கும் உழைப்பாளிகளின் சாதனையையும் அவர்கள் அனுபவிக்கும் துன்பவேதனையையும், பசியோடும் நோயோடும் நலிவோடும் அவர்கள் நித்தம் நித்தம் நடத்தும் போராட்டத்தின் கொடுமையையும் காண்கின்றார்; கலங்குகின்றார். சோலையின் குளிர்ச்சியையும் கொள்ளை யழகையும் காண்பதுடன் அவர் நிற்கவில்லை. அந்தச் சித்திரச் சோலைகளை வளர்க்க எத்தனை தோழர்கள் தம் இரத்தத்தைச் சிந்தினர் என்றுஎண்ணிப்பார்த்து ஏங்குகிறார். நெல்லினை-நன்னிலத்தினை நோக்குகின்றார் கவிஞர். நிலம் திருத்திப் பயிர் செய்ய எத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வையை நீராய்ப் பாய்ச்சினர் என்று நினைத்து, அவர் வியர்வைக்கு ஈடாகத் தம் வேதனைக் கண்ணீரைச் சொரிகின்றார் கவிஞர்.

'சீர்த்திகொள் போகப்
பொருட்புவியே—உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் எங்கள்
சீர்த் தொழிலாளர் உழைத்த
உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

என்ற பாடல் அவர் இலக்கிய இரசனையிலிருந்து மட்டும் தோன்றியதல்ல; அவர் இலட்சியத் துடிப்பிலிருந்து, அவர் இதயக் கனலிலிருந்து தெறிக்கும் பாடல்.

உழைப்பையே உரமாக இட்டு உடலையே பணயமாக வைத்து உழவு செய்யும் உழைப்பாளிகள், அரும் நெல் மணிகளை அறுவடை செய்து, ஆண்டானுக்கு அளந்து விட்டு அரை வயிற்றுக் கஞ்சி குடித்து அடிமைகளாகவே வாழும் நிலை அடுக்குமா, அத்தகைய நியதி நெடுநாள் நிலைக்குமா என்று அறைகூவுகிறார் கவிஞர். உழைப்பாளிகள் கெஞ்சும் வரைதானே இது நிலைத்து நிற்கும்? கெஞ்சுவதை விட்டு அவர்கள் கிளர்ந்தெழுந்தால்? அந்தக் கணக்குத் தீர்க்கும் நாள் வருமுன்பே, புதிய கணக்குப் போட்டுப் பொருளைப் பொதுவுடமையாக்கு என்று செல்வர்க்கு, சமூகத்துக்கு அறிவுரையாற்றுகின்றார் கவிஞர்.

செப்புதல் கேட்பீர்.. இப்பொழுதே
நீர்
பொது இன்பம் விளைத்திட
உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே-எங்கள் உடலின்
இரத்தம் கொதிப்பேறு முன்பே

என்று பாருக்கு எச்சரிக்கின்றார் பாரதிதாசன். அந்த எச்சரிக்கையை ஏற்றுக் கொள்ளாவிடில்-வேகம் வந்து வெள்ளமென அடித்துச் செல்லுமுன் விவேகத்துடன் நடந்து கொள்ளாவிடில்..

'ஓடப்பரா யிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்
நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்வி உணர்ப்பா
ரீ...'

என்று உலகப்பனுக்கு உணர்த்துகின்றார் உரிமைக் குரலுக்கு உணர்வூட்டும் உலகக் கவிஞர் பாரதிதாசன்.

பாதிக்குதே பசி என்று ஏழை பதைக்கும்போது, செய்த பாவத்தைக் காரணம் காட்டும் போக்கு, பொருளாதார ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் வகையில் சமய சித்தாந்தங்களைக் குதர்க்கம் செய்வதாகும். சமூகம் செய்யும் சதிக்குச் சமாதானம் கூற, சர்வேசுவரன் இட்ட விதி என்று சப்பைக் கட்டுக் கட்டுவது, பாமர மக்களின் பகுத்தறிவை முடக்கிப் பண்பைக் குலைத்து, ஆண்மையை ஒடுக்கி, ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கல்லவா? வாதனை சொல்லிவணங்கி நின்றால் தெய்வ சோதனை என்றவர் சொல்லுவதும், பணச் சாதனையால் நம்மை வெல்லுவதும், மனிதத் தன்மைக்கு மட்டுமல்ல மக்களைப் படைத்த மகேசுவரனுக்கே மாசு கற்பிப்பதல்லவா? 'நடவு செய்த தோழர் நாலணாவை ஏற்பதும், உடலுழைப்பில்லாத செல்வர் உலகை ஆண்டுலாவலும்' ஏழைகளை என்றென்றும் இருளிலே அடைத்து வைத்து அறியாமையிலும் அடிமைத் தனத்திலும் அவர்களை அடக்கி வைக்கும் சூழ்ச்சியல்லவா? என்று கனல் தெறிக்க வினாவுகிறார் கவிஞர்.

'உடை சுமந்த கழுதை கொண்டு உழைத்தோர் . நிலைமையும் உடைமைமுற்றும்படையை ஏவி அடையும் மன்னர் நிலைமையும், கடவுளாணையாயின், அந்த உடை வெளுக்கும் தோழரைக் கடவுள்தான் முன்னேற்றுமா, தன் கழுதைதான் முன்னேற்றுமா என்று ஆயாசப் பட்டு அங்கலாய்க்கிறார் அருஞ்சொற் கவிஞர். நீயும் உன் கழுதையும் நலியப் பிறந்தவர்கள் என்று சாபமிடும் சமுதாயத்தை, இயன்றால் திருத்த, இல்லாவிடில் தகர்க்கத் துடிக்கின்றார் அவர். அநீதிக்கு உடந்தையாக ஆண்டவனை அழைப்பது பகுத்தறிவுக்குத் துரோகம் மட்டுமல்ல, பகவானுக்கே துரோகம் என்றுஅடித்துச் சொல்கிறார் பாரதிதாசன். பிறிதொரு பாடலில் அவர் ஆண்டவனின் உண்மையான தொண்டர்களுக்கு இலக்கணம் வகுத்தளிப்பதிலிருந்து இது தெளிவாகிறது. 'ஆண்டவன் தொண்டர்கள் ஆகிடத் தக்கவர் யாவர் எனில் அன்னியர், தான், என்ற பேதமில்லாதவர் தோழா' என்று அவர் கூறி, உண்மையான பக்தன், பொதுமை நெறியைப் போற்றித் தன்னைப்போல் பிறரையும் கருதக் கடமைப் பட்டவன் என்று உணர்த்துகிறார்.

'தொண்டர்கள் உள்ளனர், தொண்டு பிறந்தது' என்று கூறி தத்துவங்களின் உள்ளுணர்வைத் தவற விட்டோம் என்பதையும், அமைப்புகளின் ஆசாரத்திலே அடிப்படைகளின் சாரம் அழிந்து விட்டது என்பதையும் சுருக்கமான சொற்றொடரால் சுருக்கெனத் தைக்கிறார்சுப்புரத்தினக் கவி.

"எல்லாம் அவன் செயலே என்று பிறர் பொருளை, வெல்லம் போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும், காப்பார் கடவுள் உமைக் கட்டையில் நீர் போகு மட்டும் வேர்ப்பீர், உழைப்பீர் என உரைக்கும் வீணருக்கும், மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த தேனின் பெருக்கே, "என் செந்தமிழே கண்ணுறங்கு" என்று கவிஞர் இசைத்த தாலாட்டுப் பாடல், பிறந்த குழந்தைக்கல்ல, பிறக்கவிருக்கும் புத்துலகுக்குப் பாடப்பட்ட பாடலே ஆகும். 'பாடுபட்டுப் பருக்கையிலாததொரு பட்டியில் மாடென' வாழ்கின்ற பாட்டாளி மக்கள், விழிப்புற்று பகுத்தறிவுப் பாதையிலே பீடு நடை போட்டுத் தங்கள் உரிமையைக் கோரிப் பெறுமாறு கூவி அழைக்கின்றார் கவிஞர். "பலி பீடத்தை விட்டினி நீங்குவீர்; செல்வ நாடு நமக்கென்று வாங்குவீர்".

இல்லார், உடையார் இடையே இன உணர்ச்சியை மட்டுமே மூட்டிவிட்டு பகைமையையும் போராட்டத்தையும், வெறுப்பையும் விரோதத்தையும், மட்டுமே வளர்த்திருந்தால், பாரதிதாசன் ஆசுகவியாகவும் தேசக் கவியாகவும் விளங்கியிருக்க மாட்டார். வெறும் ஏசுகவியாகவே இருந்திருப்பார். வர்க்கக் கொடுமை பற்றி வசை பாடி மட்டும் சென்றிருந்தால், அவர் வறட்சிக் கவியாகவே வற்றியிருப்பார்; புரட்சிக் கவியாக மலர்ந்திரார். சீற்றத்தை மட்டுமே கொட்டிவிட்டுச் சிந்தனை வளத்தினால் சீர்திருத்தப் பாதை வகுக்காமலிருந்தால், அவர் கட்சிப் பிரசாரகராகவே இருந்திருப்பார்; கவிஞர் வரிசையில் இடம் பெற்றிரார். ஆனால், பாரதிதாசனோ நிந்தனைக் கவிஞராக மட்டும் நின்றுவிடாமல், சீரிய சிந்தனைக் கவிஞராகவும் உயர்ந்துள்ளார். பகைமை உணர்வை மட்டுமேபரணி பாடாமல், இன எழுச்சியை மட்டுமே இலக்கியமாகக் காட்டாமல், பாரதிதாசன் புதிய சமுதாயத்துக்குப் பாதை வகுத்து, பொதுமை நெறிக்குப் பொருள் காட்டி, இலட்சிய உலகுக்கு இலக்கணம் வகுக்கின்றார். கன்னியை மட்டும் அவர் காட்டவில்லை; கழனி திருத்தவும் வழிகாட்டுகின்றார். களத்தைக்காண்பிப்பதோடு அவர் நிற்கவில்லை; களங்கமற்ற அன்புப் பாதையையும் அறநெறியையும் காட்டுகின்றார்; அவர் காணும் இலட்சிய உலகில் செழிப்பும் செம்மையும் சேர்ந்து இருக்கும்; செல்வமும் சீர்மையும் கலந்து நிற்கும், பணமும் பண்பும் இணைந்து செல்லும், வளமும் வாய்மையும் ஒன்றையொன்று தாங்கித் தழைக்கும். நல்லவரே வல்லவராயும் வாழ்வார் அவ்வுலகில். அங்குச் சோம்பல் இராது சுரண்டலுக்கு இடம் இல்லை என்பதால்; அங்கு வஞ்சனை இராது, பாட்டாளி மக்கள் பகுத்தறிவு எழுச்சி பெற்றதால்; அங்கு வறுமை இராது, பிறர் உழைப்பை உறிஞ்சும் சிறுமை இராததால்.

வாழ்வும் வளமும் பெற்ற சமுதாயம், வரையின்றி வளர்ந்து முழுநிறைவு எய்தவேண்டுமானால், அருளும், பொருளும் ஒருங்கே நாடவேண்டும். அருள் தேட, அவர்காட்டும் அறவழி பொதுமை நெறி;பொருள் தேட அவர் தரும் பொருளாதாரத் திட்டம் - கூட்டு முயற்சி.

'இருவர் ஒரு தொழிலில் இரண்டு நாள் ஒத்திருந்த சரிதம் அரிது நம் தாய்நாட்டில் தோழர்களே' என்று நாட்டின் அவல நிலையைக் கண்டு அங்கலாய்க்கிறார் பாரதிதாசன். பிறர் தாழ்ந்தால்தான் தாம் உயர முடியுமென்ற சுயநலச் சிறுமை, சிறிய தொழில் கலைஞர் பலரை விழுங்கிச் சிலர் நிலைநிறுத்தும் ஏகபோக ஆதிக்கம், ஆயிரம் பேர் அழிவை அடித்தளமாக ஆக்கிச் செழிப்பு மாளிகையைச் சிலர் எழுப்பும் செப்படி வித்தை, எண்ணற்றவர் உழைப்பை ஏப்பமிட்டு சிலர் ஏற்றம் காணும் சூழ்ச்சி, அறிவும் ஆற்றலும் தகுதியும் திறமையும் பலரிடமும் வளர்ந்து விரிந்து விளங்க வாய்ப்பளிக்காமல் பணபலத்தாலும், அதிகார அமைப்பின் ஆணவத்தாலும், செல்வாக்குச் செருக்காலும், படாடோபப் பகட்டாலும், வாய்ப்புகளும் வசதிகளும் வளங்களும் நலன்களும் ஒரு சிலரிடமே சிக்கச் செய்யும் பொருளாதாரக் குவியல் முறையின் கொட்டம் இவற்றிலிருந்து சமுதாயம் விடுதலை பெற வேண்டுமானால் கூடித் தொழில் செய்யவேண்டுமென்று கூட்டுறவுப் பாதையைக் காட்டுகின்றார் கவிஞர்.

'ஒருவர் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கி பெரும் பேறடைவது தான் வெற்றி என்க தோழர்களே!' என்றபொதுமைப் பெற்றியினைப் போதிக்கின்றார்.




# பெருமை மிகு பெரியார் நகர்!

சென்னை அகரத்திலுள்ள ஜவகர்நகருக்கு அருகில் உள்ளது தான் பெரியார் நகர்.

காடு திருத்தி வீடு அமைத்திருக்கும் பாங்கினை நேரில் பார்க்கின்ற வாய்ப்பு மார்ச்21-ந் தேதி கிடைத்தது. ஆம். அன்று தான் அந்நகரின் திறப்பு விழா!

தமிழக அரசின் உயர் அதிகாரிகள் பலர் பங்கு கொண்ட இந்த விழா, மிகச் சிரும் சிறப்புமாக நடந்தது.

மாநிலத் திட்டக்குழுத் தலைவர் திரு வே. கார்த்திகேயன் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், இந்நகர் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்களை வெகுவாகப்பாராட்டினார். அதோடு, 'உங்கள் குழந்தைகளுக்கு வைத்துவிட்டுப் போகக் கூடிய ஒரே சொத்து இந்த வீடு தான்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக ஊழியர்கள் இங்கே தம் சொந்தப்பொறுப்பில் வீடுகளைக் கட்டிக் கொண்டு குடி வந்திருக்கிறார்கள். இன்னும் சிலரின் வீடுகள் முடியுந்தறுவாயில் உள்ளன.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு கே. திரவியம் ஐ. ஏ. எஸ். அவர்கள், நகரைத் திறந்து வைத்துப் பேசுகையில், ''அனைவரும் ஒன்று சேர்ந்து முயற்சி எடுத்தால் எக்காரியமும் வெற்றி பெறும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு'' என்று குறிப்பிட்டார். மேலும் அவா் பேசுகையில், 'தந்தை பெரியாருக்குப் புகழைத் தேடித் தரும் வகையிலே, இந்தக் குடியிருப்புகள் விளங்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திருமதி லட்சுமி பிரானேஷ் ஐ. ஏ. எஸ். அவர்கள், குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி. கே. கரியாலி ஐ.ஏ.எஸ். அவர்கள், சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி யாஸ்மின் அகமது ஐ. ஏ. எஸ். ஆகியோர் இந்நகர் உருவாக இருந்தவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

இந்நகர், இன்று படிப்படியாக வளர்ச்சி பெற்றுவருகிறது.

சாலைகள் அமைத்தல், சாலை விளக்குகள் போடுதல், மழைத் தண்ணீர் வடிகால் திட்டம் போன்ற வேலைகள், சென்னை மாநகராட்சியிடம் ரூ. 68 இலட்சம் செலவில் ஒப்படைக்கப்பட்டன. சாலைகள் போடும் வேலை அநேகமாக முடிந்து விட்டது. தலைமைச் சாலைகளில் தார் போடப்பட்டு வருகிறது. மிகக் குறுகிய காலத்திலேயே தெரு விளக்குகள் போடப்பட்டு விட்டன. வடிகால்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

சென்னை மின்சார வாரியம், பெரியார் நகரில் ஒரு 'டிரான்ஸ் பார்மரை' அமைத்துள்ளது. விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்புக்கும் ஏற்பாடு செய்து வருகிறது.

தொடக்கத்தில் வாடகைக் கட்டடத்தில் பள்ளிக்கூடம் தொடங்கப் பெற்றது. இதற்கான கட்டடம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு உயர்நிலைப்பள்ளியாக இது உயரும் என்ற நம்பிக்கையிருக்கிறது.

''அமுதம்'' நுகர்வோர் -பங்கீட்டு-பண்டகச் சாலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி, அதன் கிளையொன்றை இங்கு நிறுவ முன்வந்துள்ளது.

பெரியார் நகரில் நில அடி நீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. சென்னை குடிநீர் வடிகால் வசதி வாரியத்திடம் இதுபற்றி விளக்கிக் கூறியதன் பேரில், அந்த வாரியம் குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

ஆலய நிர்மாணப்பணி வேலை ஒன்றும் தொடங்கப் பெற்றுள்ளது. பால் விநியோகத்திற்கு, பால்வள நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

போக்குவரத்து வசதியும் இருக்கிறது. பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் இந்நகருக்கு 42, 8ஏ, 29 எண்ணுள்ள பேருந்துகளை, காலையிலும் மாலையிலும் விடுகின்றன.

அஞ்சல் நிலையம் அமைக்க, ஒரு இடம் ஒதுக்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, பரந்து விரிந்த அளவில் காட்சி தரும் இந்தப் பெரியார் நகர், தந்தை பெரியாரின் பெருமையினைப் பறைசாற்றும் என நம்பலாம்.

—பி. வி. ஜி.

# இந்தியாவுக்கே வழிகாட்டும் சென்னை நிருபர்கள் கழகம்!

**ஜி. ஆனந்தன்**

பத்திரிகை நிருபர்கள் சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் நிருபர்கள் எதிர்பாராத வகையில் இயற்கை எய்திவிட்டால் அவரது குடும்பத்திற்கு ரூ. 10 ஆயிரம் உதவி செய்வதற்கான ஒரு புதிய திட்டத்தை சென்னை நிருபர்கள் கழகம் கொண்டு வந்துள்ளது. இதனை யொட்டி சென்னை மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடைபெற்ற விழாவுக்கு நிருபர்கள் சங்கத் தலைவர் திரு. என். நரசிம்மன் தலைமை வகித்தார். சென்னை நிருபர்கள் கழகம் 'குரூப் இன்சூரன்சுத் திட்டத்தை' எடுத்து இருக்கிறது. அதற்கான



பாலிசியை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களிடம் பொது மேலாளர் (எல். ஐ. சி'') திரு எஸ். வி. நாராயணன் வழங்கினார்.

விழாவுக்குத் தலைமை வகித்த சென்னை நிருபர்கள் கழகத்தின் தலைவர் திரு என். நரசிம்மன் பேசுகையில்,

**தமிழக அரசுக்கு நன்றி :**

''பத்திரிகைப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் புதிதாக ஒரு மசோதாவை செய்தித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார். அவரைச் சந்தித்துச் சில மாற்றங்கள் செய்து மசோதாவைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்கள் மசோதாவைப்பொறுக்குழுவுக்கு அனுப்பி வைக்க, சட்டப் பேரவையில் வலியுறுத்தினார்கள். அதன்படி பத்திரிகைப் பணியாளர் பாதுகாப்பு மசோதா பொறுக்குழுவிற்கு' அனுப்பப்பட்டது. பத்திரிகையாளர்கள் நல்வாழ்வில் அக்கரை எடுத்துக் கொண்ட அமைச்சருக்கும் தமிழக அரசுக்கும் இந்தக் கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

செய்தி சுற்றுலா மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைச்செயலாளர் திரு பி.பி. கிருஷ்ணசாமி ஐ. ஏ. எஸ். அவர்கள் உரையில் பத்திரிகை நிருபர்களுக்காக 'குரூப் இன்சூரன்சு திட்டம்' கொண்டு வரப்பட்டதை வெகுவாகப் பாராட்டினார்.

திட்டத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு செய்தி-அறநிலைத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

**அமைச்சர் பாராட்டு !**

''இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எங்கேயும் இல்லாத அளவுக்கு சென்னைப் பத்திரிகை நிருபர்கள் ஒன்றாகச் சேர்ந்து இந்த நல்ல திட்டம் கொண்டு வந்ததை வெகுவாகப் பாராட்டுகிறேன். இந்தியாவிலே பத்திரிகைத் துறையில் இப்படி ஒரு திட்டம் சென்னையிலிருந்து முதலாவதாக வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அதுவும் நிருபர்களிடமிருந்து ஒரு நயா பைசா கூட வசூலிக்காமல் நிருபர்கள் சங்கமே பிரிமியம் தொகையாக 6 ஆயிரம் ரூபாய் கட்ட முன் வருவதைக் கண்டு பாராட்டுகிறேன.

**இந்தியாவுக்கே வழிகாட்டி**

**சென்னை :**

''இந்தியாவுக்கு, தமிழகம் எத்தனையோ வகையில் வழிகாட்டியாக விளங்கியிருக்கிறது. தலைசிறந்த அறிஞர்களையும், வல்லுநர்களையும் தந்தபெருமை தமிழகம் பெற்றிருக்கிறது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதிலும் தமிழகத்திற்கே சிறப்புப் பெயருண்டு!

அதே போல தலைசிறந்த பத்திரிகையாளர்களையும் தமிழகம் தான் பெற்று இருக்கிறது. விஞ்ஞான வசதிகளையும் கொண்டு சிறப்போடு வெளியிடும் பத்திரிகைகளும் தமிழகத்தில் தான் இருக்கின்றன.

''தாங்கள் பெறும் ஊதியத்தில் மாதம் ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற நிலையை அரசாங்க ஊழியர்களுக்கு அரசு கொண்டு வந்துள்ளது. மாதா மாதம் 1 ரூபாய் கட்டி வந்த அந்த அரசு ஊழியர் இயற்கை எய்தினால் அவரது குடும்பத்தாரிடம் 10 ஆயிரம் ரூபாயை அரசு வழங்கும்.

**தமிழக நிருபர்களுக்கு ஒரு வரலாறு உண்டு :**

''ஒரு ரூபாய்கூடக் கட்டாமல் நிருபர்கள் சங்கமே கட்ட இருப்பது இந்தியாவுக்கே ஒரு முன்னோடியாகும். இதற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காற்றுப் புக முடியாத புகை நுழைய முடியாத இடத்திலும்-துப்பறியும் நிபுணர்கள்கூட நுழைய இயலாத இடத்திலும் பத்திரிகை நிருபர்கள் சென்று செய்தியைத் திரட்டவும் முடியும் என்பதைப் பல நேரங்களில் நிருபர்கள் நிரூபித்துக் காட்டிய வரலாறு உண்டு. ஆற்றல் மிக்க-சக்தி வாய்ந்த அப்படிப்பட்ட பத்திரிகையாளர்களில் சிலருக்கு தன்னுடைய வாழ்க்கையை நடத்த முடியாத அளவுக்கு வறுமை வாட்டி எடுக்கிற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்களின் வாழ்வுக்கு இதனை நிறைவேற்ற இருக்கிறீர்கள். ஒரு உயிரோட்டமான திட்டம் இது. நிருபர்கள் கழகத்தின், மனிதாபிமான மிக நல்ல எண்ணத்தைப் பாராட்டுகிறேன். பத்திரிகைகளில் பணியாற்றுகிறவர்களில் சிலர் மற்ற எல்லாத் தகுதிகளையும்-பத்திரிகை நிருபர்களுக்கு இருக்கிற திறமைகளையும் - பணியினையும் பெற்றும் பெரிய பத்திரிகைகள் வழங்கப்படும் ஊதியத்தைப் பெற முடியாதவர்களாக இருப்பதைக் காண முடிகிறது. துரதிருஷ்டவசத்தின் காரணமாகவோ என்னவோ அந்த அளவுக்கு ஊதியத்தை அந்த நிருபர்கள் பெற முடியவில்லை.

**அரசு கொண்டுவரும் பத்திரிகை பணியாளர் சட்ட முன்வடிவு :**

ரத்த நாளங்களாக இருக்கிற பத்திரிகையாளர்களுக்கு உதவி செய்கிற வகையில் தமிழக அரசு பத்திரிகையாளர் பிரச்சினையை கவனிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகப் பத்திரிகையாளர்களுக்கு ஒரு பாதுகாப்புச் சட்ட முன்வடிவைத் தயாரித்து கடந்த 3 ஆண்டுக் காலத்திற்கு முன்பே மத்திய அரசுக்கு அனுப்பியது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பிறகு அந்தச் சட்டமுன்வடிவு, நடந்து முடிந்த சட்டம் பேரவையில் கொண்டு வரப்பட்டது. இந்தக் கூட்டத் தொடரில் அந்தச் சட்ட முன்வடிவு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட இருந்தது. பத்திரிகையாளர்களின் நன்மைக்காகக்கொண்டு வரப்போகும் அந்த சட்டமுன்வடிவைப் பத்திரிகையாளர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்தத் திட்டம் முழுப் பலன் பெறுவதற்கு வகை செய்வதற்காகக் கூட்டுப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. இப்போது அது ஆய்வில் இருக்கிறது. அந்தச் சட்டம் முன் வடிவு நிறைவேற்றப்பட்டால் நிருபர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள அனைவருக்கும் அது பலன் தருவதாக இருக்கும்.

''இந்த 'குரூப் இன்ஷூரன்ஸ்' திட்டத்தில் மொத்தம் 100 உறுப்பினர்களே இருப்பதாக அறிகிறேன். 200 பேரை உறுப்பினர்களாக ஆக்கினால் இந்தத் திட்டத்தால் லாபம் இருக்கிறது.

''ஆயுள் இன்ஷூரன்ஸ்'' நிறுவனம் ஒரு காலத்தில் மக்கள் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியது உண்டு. தேசியமயமாக்கப்பட்ட பிறகு இன்ஷூரன்சு திட்டம் என்பதே மக்களுக்காகப் பயன்படும் நிறுவனம் என்ற அளவுக்குச் சிறப்புப் பெற்றுள்ளது. எறும்புகூடத் தனது எதிர்காலத்திற்காகச் சேமித்து வைத்துக் கொள்ளும் பழக்கத்தை வைத்துள்ளது. அந்த எறும்புக்குள்ள உணர்வு கூட மனிதனுக்கு இல்லாமல் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் சேமித்து வைக்கிற பழக்கம் இருக்க வேண்டும். இன்ஷூரன்சின் தேவையை நம் மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.



**நானும் ஒரு எழுத்தாளனே !**

''நான் திராவிட நாடு-நடிகன் குரல், குடியரசு, ஞாயிறு ஆகிய இதழ்களில் பணியாற்றியவன், நானும் ஒரு பத்திரிகையாளன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன். எழுத்தாளர்கள் மீது அதிகப் பற்றும் பாசமும் கொண்டவன்.

சென்னை நிருபர்கள் கழகம் இந்த இன்ஷூரன்சு திட்டத்திற்குப் பிரிமியம் தொகையாக ஆண்டுக்கு ரூ. 6 ஆயிரம் கட்டுகிறது. இப்பிரிமியத்திற்கு என்னுடைய சொந்தப் பொறுப்பிலிருந்து ரூ.1,000 அளிக்கிறேன்.

''இந்த நல்ல திட்டத்திற்கு எனது நல் வாழ்த்துக்கள்''

விழாவில் பங்கேற்ற ஆயுள் இன்ஷூரன்சு காப்பீட்டுக் கழகத்தின் பொது மேலாளர் திரு எஸ். வி. நாராயணன் தமது உரையில்; ''தேசியமயமாக்கப்பட்டபோது ஏழை- எளிய மக்களுக்கும் இன்ஷூரன்ஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று எண்ணிய எண்ணம் நிறைவேறி வருகிறது. பொது நலம் கருதி தானே முன்வந்து குழு வமைத்துப் பணியாற்றும் இந்த நிருபர்கள் கழகம் போன்ற ஒரு நிறுவனம் இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்வது இந்நாட்டிலேயே இதுதான் முதல் என்று சொல்லலாம்' என்று குறிப்பிட்டார்.

**இவ்விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் ஐ.ஏ.எஸ். அவர்கள் பங்கேற்றார்.**

சென்னை நிருபர்கள் கழகத்தின் செயலாளர் திரு சந்திரசேகர் நன்றி கூறினார்.

உண்மையிலேயே இந்தப் புதிய திட்டம் தமிழகப் பத்திரிகையாளர்களுக்கு மிகப் பெரும் பேறாக அமைவதுடன் மற்ற மாநிலத்தவர்களுக்கு வழிகாட்டும் திட்டமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.



# வளர்ந்து வரும் நெய்வேலி

**சி**ல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் சிறிய கிராமமாக இருந்த நெய்வேலி படிப்படியாக வளர்ச்சி கண்டு இப்போது பாரதத்தின் எரிசக்தி வரைபடத்தில் நிரந்தர இடம் பிடித்திருக்கிறது. இந்திய அரசுத்துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் வெள்ளி விழாவில் அடியெடுத்து வைக்க இருக்கிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் இப்போது பணிகள் மும்மரமாகி இருக்கின்றன. இரண்டாவது அனல் மின்நிலையம் அதோடு இரண்டாவது பழுப்பு நிலக்கரி சுரங்கம் ஆகியவற்றுக்கான பணிகள் சுறுசுறுப்படைந்து வருகின்றன.

2-வது மின் நிலையம் அதன் முதல் கட்டத்துக்கு ஆகும் செலவுத் தொகை கிட்டத் தட்ட 254 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தலா 210 மெகாவாட் மின்சார உற்பத்தியில் மூன்று பிரிவுகள் செயல்படும். முதலாவது பிரிவு 1984-ம்ஆண்டு செப்டம்பர் மாதத்தில் செயல்படத்துவங்கும். 2-வது கட்டம் 400 கோடி ரூபாய் செலவுத் தொகையில் முடிக்கப்படும். 2வது கட்டம் செயல்படத்துவங்கியதும் இந்நிலையத்தில் உற்பத்தி திறன் 1470 மெகாவாட் அளவுக்கு உயரும்.

நெய்வேலியில் 1,500 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் மேலும் ஓர் அனல் மின் நிலையம் அமைக்கும் உத்தேசமும் இருக்கிறது. தற்போது இருக்கும் மின்நிலையம் போலவே மற்ற மின்நிலையங்களும் பழுப்பு நிலக்கரி எரிசக்தியில் அமைக்கப்படும்.


கடந்த ஆண்டு நிறுவன நிர்வாகம் 11கோடி ரூபாய்க்கு மேல் லாபம் சம்பாதித்து இருக்கிறது. பல்வேறு சிரமங்கள் காரணமாக பழுப்பு நிலக்கரி தோண்டும் பணியில் ஏற்பட்டிருந்த தடைகள் நீங்கித் தற்போது பணிகள் மும்மரமாகி இருக்கின்றன.

நாட்டின் 95 சதவிகிதம் பழுப்பு நிலக்கரி தேவையில் தேவைப்படும் முழு அளவையும் இந்த பழுப்பு நிலக்கரி நிறுவனம் சமாளித்து வருகிறது. 50 முதல் 100 மீட்டர் ஆழத்தில் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது.

ஆகவே நெய்வேலியல் சககர வாளித் தொழில் நுட்பம் கைக் கொள்ளப்பட்டுள்ளது. சக்கர வாளித் தொழில் நுட்பத்தில் ஜெர்மனிதான் முன்னோடி. அந்நாட்டில் மண் மிருதுவானது. ஆனால் நெய்வேலியில் மண் அதற்கு நேர்மாறானது.

ஆகவே சக்கரவாளி வடிவமைப்பின் பாரதப் பொறியாளர்கள் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதன் பலனாய் உலகில் சக்கர வாளித் தொழில் நுட்பத்தில் நெய்வேலி தனக்கே உரித்தான விதத்தில் சக்கரவாளியை வடிவமைத்திருக்கிறது.

இந்தப் பகுதியில் பூமி அமைப்பை ஆராய்ந்த பிறகு தற்போது சராசரி 3000 காலன் தண்ணீர் ஒரு நிமிடத்தில் பூமிக் கடியிலிருந்து வெளியேற்றப்படுகிறது. 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இப்பகுதியில் பழுப்பு நிலக்கரி முதல் முறையாகக்கண்டு பிடிக்கப்பட்டபோது சராசரி 28,000 காலன் தண்ணீர் ஒரு நிமிடத்திற்கு வெளியேற்றப்பட்டது. நடுவில் அதாவது 1964-ம்ஆண்டு



வாக்கில் நிமிடம் ஒன்றுக்கு 5,000 காலன் அதிகபட்சம் வெளியேற்றப்பட்டது.

கடந்த 20 ஆண்டு காலத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மூலம் பூமியிலிருந்து கிட்டத்தட்ட 150 கோடி கிலோ லிட்டர் தண்ணீர் வெளியேற்றப் பட்டிருக்கிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரியின் தரம் சர்வதேச பழுப்பு நிலக்கரி தரத்திற்கு ஈடிணையானவை. நெய்வேலி பகுதியில் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 200 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி இருப்பதாகக்கணக்கிடப் பட்டிருக்கும் மதிப்பீடு தற்போது இன்னும் அதிகரித்திருக்கிறது. அதாவது 470 சதுர கிலோ மீட்டர் பரப்பில் 330 கோடி டன் பழுப்பு நிலக்கரி இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவது சுரங்கத்தில் ஆண்டொன்றுக்கு துவக்கத்தில் உற்பத்தித்திறன் 35 இலட்சம் டன்னாக மட்டுமே இருந்தது. சிறிது காலத்தில் அனுபவத்திற்குப் பிறகு ஆண்டொன்றில் இச்சுரங்கத்தின் உற்பத்தித் திறன் 65 லட்சம் டன்னாக அதிகரித்து இருக்கிறது. சுரங்க முறைகள் நவீனப்படுத்துவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் மத்திய அரசு போதுமான நிதியுதவி அளித்திருக்கிறது. முதலாவது சுரங்கத்தின் செயல் திறன் அதிகரித்து சாதனை புரிந்திருப்பதாக நிறுவனத் தலைவர் திரு ஜி.எல். டாண்டன் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

2-வது சுரங்கத்திற்கான பணிகள் மும்மரமாக நடைபெற்று வருகின்றன. இதற்கு சுமார் 198 கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் உற்பத்தித் திறன் 47 லட்சம் டன்னாக இருக்கும். மேற்கொண்டு 230 கோடி ரூபாய் கூடுதல் முதலீடு செய்வதன் மூலம் உற்பத்தித் திறனை 105 இலட்சம் டன்னாக அதிகரிக்க ஏற்கனவே ஒரு திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. 3வதாக 105 இலட்சம் டன் ஆண்டு உற்பத்தித் திறனுடன் சுரங்கம் ஒன்றையும் அமைக்க மத்திய அரசு திட்டம் தீட்டி வருகிறது. அதோடு முதலாவது சுரங்கத்தின் உற்பத்தித் திறனை 85 இலட்சம் டன்னாக விஸ்தரிக்கவும் மத்திய அரசு திட்டம் தீட்டி வருகிறது.

பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலையத்திற்குப் பிரதானமாகத் தேவைப்படுகிறது. இங்கு அமைக்கப்படும் அனல் மின்நிலையம் தென்கிழக்கு ஆசியாவில் பழுப்பு நிலக்கரி பயன்படுத்தும் முதலாவது அனல் மின்நிலையம் என்ற பெருமை பெறுகிறது. பாரத சோவியத் ஒத்துழைப்பின் கீழ் அமைக்கப்பட்ட இந்த அனல் மின்நிலையத்தின் முதல் பிரிவு 50 மெகா வாட் மின்சார உற்பத்தியை 1962 மே மாதம் துவங்கியது. கடைசியும் 9-வதுமான பிரிவு 1978-ம் ஆண்டு செப்டம்பரில் மின் உற்பத்தியைத் துவக்கியது. இதன் உற்பத்தித்திறன் 180 மெகாவாட். தமிழ் நாட்டின் மொத்த மின்சாரத் தேவையைக் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியை நெய்வேலி அனல் மின்நிலையம் தனியாக சமாளித்து வருகிறது. பருவ மழை தவறினாலும் தவறும் ஆனால் நெய்வேலி அனல்மின்சப்ளை மட்டும் தவறுவதில்லை என்ற பெருமை இதற்கு உண்டு.

ஆற்றல் திறன் முழுவதையும் பூரணமாகப் பயன்படுத்தும் மின் திட்டம் என்ற பெருமையும் இதை பேசவைக்கிறது. தரம் பராமரிப்பு அதுவும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஒரு அம்சம். 50 மெகா வாட் உற்பத்தித்திறன் கடந்த 19 ஆண்டுகளாகத் தொடர்ந்து வருவது பாராட்டக் கூடிய அம்சம்.

1984-ல் செயல் படத்துவங்கும் 2-வது மின்நிலையத்திற்கு முன்னதாக முதலாவது மின்சார நிலையத்தில் மேற்கொண்டு 100 மெகாவாட் அல்லது 210 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பிரிவை புதிதாக






துவக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ப்ரீகெட்டிங் அண்டு கார்பனைசேஷன் ஆலையும் பழுப்பு நிலக்கரியை முக்கியமாகப் பயன்படுத்தும் 2-வது ஆலையாகும். லீக்கோ நிலக்கரி என்னும் வீட்டு உபயோக நிலக்கரியை 3.27 லட்சம் டன் உற்பத்தி செய்வதற்காக 1966-67-ல் இந்த ஆலை துவக்கப்பட்டது. 1980-81ம் ஆண்டு வரையில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் துவங்கிய இந்த ஆலை கிட்டத்தட்ட 53 கோடி ரூபாய்க்குமேல் நட்டமடைந்திருக்கிறது. ஆனால் இங்கே இப்போது நிலைமைமாறி வருகிறது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளின் பலனாய் இந்த ஆண்டு லாபம் பெறக்கூடுமென்று ஆலை நிர்வாகிகள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள்.

இந்த ஆலையின் விற்பனைப் பிரிவு, பெருகிவரும் தேவையைச் சமாளிப்பதிலும், குறித்த காலத்தில் சப்ளை செய்வதிலும் தயாராக இருக்கும் விதத்தில் வலுப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்த கார்ப்பரேஷன் உர ஆலையும் ஆற்றல் திறனைப் பயன்படுத்தும் விதத்தில் சிறந்து விளங்குகிறது. கடந்த ஆண்டு 1 இலட்சத்து 34,000 டன் யூரியா உரமும் 85,000 டன்னுக்கும் அதிகமாக அம்மோனியா உரமும் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டுகளில் படித்த அனுபவத்தின் பலனாய், சிறந்த தொழில் நுட்பங்கள் பின்பற்றப் பட்டு வருகின்றன.

தங்கு தடையில்லாமல் தண்ணீரையும் மின்சக்தியையும் அள்ளித்தரும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு நன்றி சொல்லவேண்டும்.

—நன்றி: அகில இந்திய வானொலி.
நெய்வேலி பழுப்புநிலக்கரி நிறுவனம்.

சென்னை நகரை 4 காவல் மாவட்டங்களாகப் பிரித்து, 4 துணை ஆணையாளர்களை நியமிக்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இவர்கள் 4 பேரும் சென்னை மாநகர் காவல் துறை ஆணையாளர் நிர்வாக வரம்பிற்குள் செயல்படுவார்கள். இந்த 4 பிரிவுகளும் செயல்படும்போது, செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்தில் உள்ள 10 காவல் நிலையங்களும் சென்னை மாநகர காவல் சரகத்தின் கீழ் இணைந்துவிடும். இத்தகவலைச் சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள்.

நாகர்கோவிலில் வானொலி நிலையம் அமைப்பதற்கு அந்தந்தத் துறைக்குத் தகுந்த இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கேட்கப்பட்டு இருக்கும் நிலம் மற்றும் அதில் உள்ள கட்டடங்களின் விலை மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. அந்தப் பணிமுடிந்தவுடன், வானொலித் துறைக்கு இடம் அளிக்கப்பட்டுவிடும். இத்தகவலைச் சட்டப்பேரவையில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

பத்து இலட்சம் ரூபாய் மூலதனத்துடன் தமிழக அரசே சீட்டு நிறுவனம் ஒன்றை விரைவில் தொடங்கவிருக்கிறது. சென்னையில் 2 இடங்களிலும் மற்றும் மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், திருப்பூர், நெல்லை, நாகர்கோவில் ஆகிய இடங்களிலும் அரசின் சீட்டு நிறுவனங்கள் அமைக்கப்படும். படித்து வேலை இல்லாமல் திண்டாடும் இளைஞர்களுக்கு இந்தச் சீட்டு நிறுவனங்களில் வேலை கொடுக்கப்படும். சீட்டு நடத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானம், மக்களுக்குப் பயன் அளிக்கும் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். இத்தகவலைச் சட்டசபையில் மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சி அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்கள்.

திருத்தணியில் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ள பெரிய சர்க்கரை ஆலைக்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைத்துவிட்டது. தமிழ்நாட்டில் 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 5 கோடி ரூபாய் செலவில், நாள் ஒன்றுக்கு 500 டன் கரும்பு பிழியக்கூடிய 6 சிறிய சர்க்கரை ஆலைகளும் 9 கோடி ரூபாய் செலவில் நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியக்கூடிய 2 பெரிய சர்க்கரை ஆலைகளும் நிறுவ அரசு தீர்மானித்துள்ளது. இத் தகவலைச் சட்டப்பேரவையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்கள்.

# தென் இந்தியப் பயணம்

சுற்றுலா வாசிகள் பயணம் மேற் கொள்வதற்குப் பாரதம் தனித்தன்மை வாய்ந்தது. பரந்து விரிந்து கிடக்கும் அதன் பரப்பு விவரிக்க முடியாதது. வடக்கிலிருந்து தெற்கும் கிழக்கிலிருந்து மேற்கும் இப்படியாக 3000 கிலோ மீட்டர் பரந்து கிடக்கும் பாரதத்தை மலைப்பகுதியாகவும் ஹிமாலய கங்கை சமவெளியாகவும் தென் தீபகற்பமாகவும் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கலாம். ஹிமாலயப் பகுதி 2400 கிலோமீட்டர் நீளத்திற்கும் 320 கிலோமீட்டர் வரை ஆழத்திலும் பரந்து கிடக்கிறது. கங்கை சமவெளி அதிகப்படியான மக்கள் அடர்ந்து கிடக்கும் பகுதியாகும். தென் தீபகற்பகத்தில் மலைகளும் குன்றுகளும் கிழக்கு மேற்கு மலைத்தொடர்களும் பரந்து கிடக்கிறது. இமயம் முதல் கன்னியாகுமரி வரை பரந்து கிடக்கும் பாரதத்தில் கன்னியாகுமரி மூன்று கடல்களின் சங்கமம் குறிப்பிடத்தக்கது. வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்துமகா சமுத்திரம் மூன்றின் சங்கமம் அங்கே.

பனி படர்ந்த குன்றுகள், இயற்கை தவழும் மலைச்சாரல்கள், கண்ணைக் கவர்ந்திழுக்கும் பச்சைப் பசேல் சமவெளிகள், வனவிலங்குகள் சுற்றித் திரியும் காடுகள், மனத்தைக் கொள்ளை கொள்ளும் கடற்கரைகள், கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் படம் பிடித்துக் காட்டும் கலாசார பாரம்பரியம் நெடிது உயர்ந்து நிற்கும் கோபுரங்கள், கோவில்கள், மொகலாயர்கள் காலத்து மண்டபங்கள் இப்படி பாரதம் பெருமையோடு சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் அருமையான இடமாகத் திகழ்கிறது.

வேற்றுமையில் ஒற்றுமை-அதுதான் பாரதம். நூற்றுக்கணக்கான மைல்களை கடந்து சுற்றுப் பயணம் தொடர ஆரம்பித்தால் ஒவ்வொரு நிலப்பகுதியிலும் சீதோஷ்ண நிலையில் மாற்றம் உணவு முறையில் மாற்றம், ஆடை அணிகலன்களில் இசையில், கலையில், கைவினைப் பொருட்களில் இப்படி பலப்பல மாற்றங்கள். தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களும் புதுச்சேரி யூனியன் பிரதேசமும் அடங்கியதாகும்.

தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை. இது தென்னிந்தியாவின் நுழைவாயில். சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு முதல் முதலாக பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி குடியமர்ந்த இடம் இதுதான். சென்னை நகரத்தின் பெரும்பாலான வரலாறு எழுதப்பட்டிருப்பதும் செயின்ட் ஜார்ஜ் கோட்டைதான். இதுவே கிழக்கில் மிகவும் தொன்மையான ஆங்கிலிக்கன் சர்ச்சாகக் கருதப்படுகிறது. தென்னிந்தியாவில்


ரவீந்திர சேத்

கோட்ட மேலாளர்

(மக்கள் தொடர்பு)

இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம்.


கிறித்துவ மதம் பரவுவதற்குக் காரணமான புனித தாமஸ் கடைசியாகத் தங்கியிருந்தது சாந்தோம் கதீட்ரல் கிறித்துவ ஆலயம் என்று கருதப்படுகிறது.

சென்னையிலிருந்து கடற்கரையோரமாக ஒரு மணி நேரம் பயணம் மேற்கொண்டால் வரவேற்பது ஏழாம் நூற்றாண்டில் புகழ்பெற்ற கடற்கரைக் கோவில். உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கும் கடற்கரைப் புகலிடமாக மகாபலிபுரம் விளங்குகிறது. அங்கிருந்து மிக அருகில் இருப்பது காஞ்சிபுரம். இங்கு ஆயிரம் கோயில்கள் இருப்பது என்பது ஐதீகம். இதேபோல தமிழ்நாட்டில் கோவிலுக்குப் பேர்போன இடம் மதுரை. மதுரையிலுள்ள மீனாட்சியம்மன் கோயில் புகழ்பெற்ற கோயிலாகும். ஒன்பது கோபுரங்கள் உள்ள இந்தக் கோவிலில் சிற்பக்கலை கண்ணில் ஒற்றவைக்கும். இதனையடுத்து ராமேஸ்வரம், திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் ஆகியவையும் கோவிலுக்குப் பேர்சொல்லும் ஊர்களாகும். ராமேஸ்வரத்தில், ராமர் வழிபாடு நடத்தியதாகப் புராணம். திருச்சியில் இருக்கும் மலைக்கோட்டை குறிப்பிடத்தக்கது. தஞ்சாவூர், பாரம்பரிய கைவினைப் பொருட்களுக்குப் பேர் சொல்லும் ஊராகும். கலைவேலைப்பாடு அமைந்த தட்டுகள், புராதன தங்க, வெள்ளி நகைகள் பட்டு மற்றும் ஜமுக்காளங்கள் பாராட்டுக்குரிய படைப்புகள். ஊட்டி என்று அழைக்கப்படும் உதகமண்டலம் பிரபலமான கோடை வாசஸ்தலம். தென்னிந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் போது யாரும் காணத் தவறக் கூடாத ஒரு நிகழ்ச்சி பாரதத்தின் புகழ்பாடும் அற்புதமான பரத நாட்டிய நடனம்.



கிழக்குக் கடற்கரையோரத்தில் பரந்து கிடக்கும் ஆந்திர மாநிலம் மலைகளும், காடுகளும் பச்சைப் பசேல் வயல் வெளிகளும் நிறைந்த மாநிலம். கோவில் கோபுரங்களும், மசூதி அமைப்புகளும் கட்டடக் கலைக்குப் பேர் சொல்ல வைக்கும். ஐதராபாத் என்றாலே எல்லாரின் நினைவிற்கும் வருவது சார்மினார் கட்டடம் தான். சார்மினாரை அடுத்து மிகவும் அருகில் அமைந்திருப்பது மெக்கா மசூதி. மூசாராம் என்று பிரபலமான இருந்த மொன்சீயர் ரேமாண்டின் நினைவுக் கல்லறை ஆந்திராவில் குறிப்பிடத்தக்க ஒன்று. ஐதராபாத்துக்குத் தெற்கில் அமைந்திருப்பது திருப்பதி. இங்கே உள்ள ஏழுமலையான் கோவில் மிகவும் பழமையான கோவிலாகும்.

அதோடு அதிகப்படியான வசூலாவதும் இக்கோவிலில்தான். திருப்பதியில் குடிகொண்டிருக்கும் மூலவர் வெங்கடேஸ்வரர். கட்டடக் கலையின் தொழில் நிபுணத்துவத்துக்கு இந்த ஏழுமலையான் கோவில் ஓர் எடுத்துக்காட்டு. கூட்டம் கூட்டமாகத் திரண்டு வரும் பக்தர்கள் தங்கள் முடியைக் காணிக்கையாக ஆண்டவருக்குச் செலுத்துகிறார்கள். இதனால் விக் தயாரிப்பதற்கு அதிக அளவில் தலைமுடி கிடைக்கிறது.

பெங்களூர் கர்நாடக மாநிலத்தின் தலைநகரம். தோட்டங்களும், பூங்காக்களும் நிறைந்த நகரம், லால்பாக் கிட்டத்தட்ட 240 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கும் மிகவும் பெரிதான தோட்டமாகும். இந்தத் தோட்டத்தில் கிடைக்காத மிகவும் அரிதான வண்ண வண்ணப் பூக்களும் அரிய தாவரங்களும் தாமரைக் குளமும், ரோசாப்பூ தோட்டமும், மான்கள் துள்ளி விளையாடும் பூங்காவும் இருப்பது பெருமளவுக்குச்சுற்றுலாப்பயணிகளைக் கவர்ந்திழுத்து வருகிறது. தொடர்ச்சியாக 10 நாட்கள் செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் நடைபெறும் தசரா திருவிழாவில் மைசூர் நகரமே புதுப் பொலிவு பெற்று நிற்கும். மைசூர் வாசிகள் அத்தனை பேரும் இந்த தசரா விழாவை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

மைசூர் மகாராஜா அரண்மனை பாரதத்தில் இருக்கும் கட்டடங்களில் மிகவும் பெரியதாகும். லலிதமஹால் அரண்மனை ஓட்டல் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான சொகுசு வசதிகளை அளித்து வருகிறது. இங்கிருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் ஸ்ரீரங்கப் பட்டினம் அமைந்திருக்கிறது. ஐதரலி, திப்புசுல்தான் போன்ற முஸ்லீம் மன்னர்கள் ஆட்சிக் காலத்தின்போது ஒரு காலத்தில் ஸ்ரீரங்கம் தலைநகராக விளங்கியது. ஸ்ரீரங்கப் பட்டினத்தில் தான் திப்புசுல்தான் தோற்கடிக்கப்பட்டார். மைசூரிலிருந்து 35 கிலோமீட்டர் தொலைவிலுள்ள சோமநாத்பூர், ஹொய்சலா கோவில்கள் பெருமளவில் நிறைந்த ஊராகும். சோமநாத்பூரிலிருந்து 80 கிலோ மீட்டர் விலகிச் சென்றால் நிலப்பரப்பில் எங்கு பார்த்தாலும் கண்ணைப் பறிக்கும் பசுமை மண்டிக் கிடக்கும் காடு, உயர்ந்து நிற்கும் மலைகள். இங்குதான் பாரதத்தில் புலிகள் பராமரிப்புத் திட்டத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் ஒன்பது சரணாலயங்களில் ஒன்றாகப் பந்திப்பூர் வனவிலங்கு சரணாலயம் அமைந்திருக்கிறது. மைசூரிலிருந்து வடக்குப் பக்கம் கோமதேஸ்வராவின் பிரம்மாண்டமான வழிபாட்டுச் சிலை வரவேற்கும். ஜெயின் சமூகத்தாரின் புனித வழிபாட்டுக்குரிய கோமதேஸ்வரா சிலைஅமைந்திருப்பது சரவனபெலகோலாவில். நகர்ந்து அங்கிருந்து 100 கிலோமீட்டர் நகர்ந்துசென்றால் இருப்பது பேலூர் சென்னகேசவ கோவில் என்று அழைக்கப்படும் பேலூர் கோவில் பண்டைய கட்டடக் கலையில் தொழில்நுட்பத் திறமையை வெளிப்படுத்தும்.

பாரதத்தின் தென்மேற்கு முனையில் இருப்பது பசுமை கொழிக்கும் கேரளம். கண்ணெதிரில் தெரிவது போல, பசுமை வளம் கொழிக்கும் மாநிலம் கேரளம். கேரளக் கரைகளில் அரபிக்கடல் அலை மோதும்; தென்னைமரங்கள் வானளாவ உயர்ந்து நிற்கும்.

கேரளத்தின் தலைநகரமான திருவனந்தபுரம் மலைகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. திருவனந்தபுரத்திலிருந்து அரைமணி நேரத்தில் அடையக்கூடிய இடம் கோவளம் கடற்கரை. உலகிலுள்ள கடற்கரைகளில் பேர் சொல்லக்கூடிய சிறப்பான கடற்கரைகளில் கோவளமும் ஒன்று. கோவளம் கடற்கரையில்சொகுசு வசதிகளுடன் அற்புதமாகஅலங்கரிக்கப்பட்ட தங்குமிடங்களும் அறைகளும் உண்டு.

விடுமுறை நாளில் கடற்கரையில் யோகாசனத்தில் பயிற்சி ஒரு பக்கம். மனத்தைஒரு நிலைப்படுத்தும் ஆழ்ந்த தியானம் ஒருபக்கம். புத்துணர்ச்சி ஊட்டும் ஆயுர்வேத எண்ணெய் மசாஜ் ஒரு பக்கம். இவைதவிர, திறந்த வெளி அரங்கில் கண்ணைக் கவர்ந்திழுக்கும் ரசனைக்குரிய கதகளி நடனம் மறுபக்கம். பொழுதுபோவது தெரியாமல் ஒருபுதுவித அனுபவம் உண்டாக்கும் இடம் கோவளம் கடற்கரை.

கேரளத்தின் வரலாற்றுக்கும் வர்த்தகத்துக்கும் பேர்போன தலைநகரம் கொச்சி. இங்கு அமைந்திருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க புனித பிரான்சிஸ் கிறித்துவ ஆலயம் 1510-ல் கட்டப்பட்டது. பாரதத்திலிருக்கும் மிகவும் புராதன ஐரோப்பிய கிறித்தவ ஆலயங்களில் இதுவும் ஒன்று.

பாரதத்தில் அமைந்திருக்கும் பிரெஞ்சு நகரம் புதுச்சேரி. புதுச்சேரியிலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருப்பது வருங்கால ரசனைக்கு முன்னோடியான ஆரோவில் நகரம்.

விடுமுறை நாளில்உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கும் உத்தேசமிருந்தால் தென்னிந்தியா அருமையான சுற்றுலா இடம். தென்னிந்தியா அனைவரையும் வரவேற்கிறது.


பிச்சாவரம்

# உல்லாசப் பயணிகளே வருக!

உல்லாசப் பயணிகளே வருக!—எங்கள்
உன்னதத் தமிழகத்தின் கலையழகைப் பருக!

சென்னை : தெள்ளுதமிழ் திருவள்ளுவர் கோட்டம்!—எழில்
சிந்தும் சென்னை கடற்கரைத் தோற்றம்—நெஞ்சை
அள்ளும் அண்ணாகாந்தி காமராஜர்—நினை
வாலயங்கள் எங்கும் மக்கள் கூட்டம்!

மாமல்ல பழந்தமிழர் சிற்பக்கலை எல்லை! இங்கு
புரம் : கவிபாடச் செய்திருக்கு கல்லை!
பல்லவ மாமன்னன் கண்டமல்லை!—இதற்குப்
பாரினிலே ஈடு எங்கும் இல்லை!

(வேறுநடை)

வேடந் பறவைகளின் சரணாலயம்!—வேடந்தாங்கல்
தாங்கல்: பார்வைக்கு அழகோவியம்!
மரமெல்லாம் பறவைமயம்!—வருவோர்கள்
மனமெல்லாம் அன்பின்வயம்!

(வேறுநடை)

சிதம்பரம் : ஆண்டவன் கூத்தாடுகின்ற சிதம்பரம்!—அதன்
அருகினிலே அழகிய பிச்சாவரம்!
காண்பவரின் கண்களைக் கவர்ந்திடும்—பல
கனவுகளும் நெஞ்சினிலே மலர்ந்திடும்!

பூம்புகார் : சோழமன்னர் ஆட்சிசெய்த பூம்புகார்!—பெருந்
துறைமுகமாய் விளங்கிவந்த பூம்புகார்!
ஆழ்கடலில் அந்த நகர் அழிந்தது!—இன்று
அதன்நினைவாய் புதியநகர் எழுந்தது!

தஞ்சாவூர்: ராஜராஜசோழன் ஆண்ட தஞ்சை—இதன்
நாற்புறமும் வளம் கொழிக்கும் நஞ்சை!—கோயில்
நந்தி ஒரே கல்லிலான விந்தை!—தஞ்சைத்
தட்டும் வீணையும் மயக்கும் சிந்தை!

மதுரை : திருமலை நாயக்கர் மஹாலும் பெரிய
தெப்பக்குளம் வீதிநாலும்!
தெரிசனம் அளிக்கும் மீனாட்சி—கோயிலும்
தென்மதுரைப் பெருமைக்குச் சாட்சி!

கன்னியா கன்னியாகுமரி எனும் அன்னை—காவல்
குமரி: காக்கிறாள் கடலோரம் நின்று தமிழ் மண்ணை!—[இங்கு
புண்ணியன் விவேகானந்தன்—தவம்
புரிந்த இடம் காண்போரின் நெஞ்சையே அள்ளும்!

(வேறுநடை)

திருக் தென்றல் இசை பாடி வரும்!
குற்றாலம்: தேனருவி ஆடி வரும்!
கண்கவரும் காட்சி தரும் திருக்குற்றாலம்!—நமது
கற்பனைக்கே எட்டாத அழகின்கோலம்!

(வேறுநடை)

உதகை : ஏரியில் படகேறிக் குலவி—மலர்
மாரியைப் பொழிகின்ற பூங்காவில் உலவி!
தேன்நிலவைத் தம்பதிகள் ரசிக்க—மிகச்
சிறந்த இடம் மலைமுடியில் பனிதவழும் உதகை!

கவிஞர்
அ. மருதகாசி



குறிஞ்சி நகரங்களின் கோலம் மிகு காட்சிகள்

கொடைக்கானல் ஏரி

ஏர்க்காடு ஏரி

உதகமண்டலம் ஏரி

## ஆடற்கலைக்கு அழகு தேடித் தரும் தமிழ்நாடு







# நீலத்திரை கடலோரத்திலே




இராமேசுவரம் தீவில் தனுஷ்கோடி அமைந்திருந்த பகுதியில் உள்ள கோதண்டராமசுவாமி கோவிலின் அருகிலிருந்து இராமேசுவரம் திருக்கோயில் டெலிலென்ஸ் உதவியால் எடுக்கப்பட்ட படம்.



இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயில்




திருச்செந்தூர் திருக்கோயில்



சித்தம் தவம் செய்யும் குமரிமுனை



அலைபாடும் கடல்மல்லை



வேளாங்கண்ணி ஆலயம்

# தமிழ் வளர்ச்சிப் பணியில் சில படிக்கட்டுகள்

அனைத்துத் துறைகளிலும், அரசுப் பணிகள் அனைத்திலும் தமிழைப் பயன்படுத்தச் செய்வதற்கான முனைப்பான நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சித் துறை எடுத்து வருகிறது. அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவதற்கான மூவாண்டு முனைப்புத் திட்டம் ஒன்று 1981-82-ல் 17 துறைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் அது மேலும் பல துறைகளுக்கு விரிவாக்கப்படும்.

1867-1935 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களின் விவர அட்டவணை 19 தொகுதிகளாக இதுவரை வெளியிடப்பட்டுள்ளது. 1935-க்குப் பின் வெளியான தமிழ் நூல்களுக்கான விவர அட்டவணையைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது.

1981-82-ல் இத்திட்டத்தின் கீழ் 7 புத்தகங்களின் ஆசிரியர்களுக்கு நிதியுதவி தரப்பட்டது. தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் இரண்டாவது பதிப்பைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மூலமாகத் தயாரித்து வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த தமிழ் நூல்களுக்கு விருது அளிக்கும் திட்டத்தின்கீழ் 1975-80 ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற்றுக்கு 1982-ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் அன்று (சனவரி 15) விருதுகள் அளிக்கப்பட்டன.

**தமிழ்நாட்டு வரலாறு:**

தமிழ்நாட்டு வரலாற்றில் தொல் பழங்காலத்தைப் பற்றிய முதல் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி இரண்டு பகுதிகளாக விரைவில் வெளியிடப்படும்.

**மொழிபெயர்ப்புப் பணி:**

பிறமொழி நூல்களில் சிறந்தவற்றைத் தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்குமான திட்டத்தின் கீழ் இதுவரை மொழிபெயர்ப்பு நூல்கள் ஆறு வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு நூல்கள் விரைவில் வெளியாகும். மேலும் நூல்கள் மொழிபெயர்ப்புக்கு எடுக்கப்பட்டுள்ளன.

**தமிழ்க் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு:**

இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப்புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று; சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கிறித்துவ இலக்கிய வளர்ச்சிக்கு அறக் கட்டளை ஒன்று; சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக ஒன்றும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் நினைவாக ஒன்றுமாக இரண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் 'விருது' ரூ. 10,000, இதுவரை கவிஞர்கள் திருவாளர்கள் சுரதா, வாணிதாசன், எஸ். டி. சுந்தரம், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், முத்துலிங்கம் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்தாளர்களுக்கான திரு.வி.க. விருது ரூ. 10,000 இதுவரை திருவாளர்கள் நாரண துரைக் கண்ணனுக்கும், அ. கி. பரந்தாமனாருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியம்:**

மாத வருமானம் ரூ. 400-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் ஒய்வூதியம் தரப்படுகிறது. இதுவரை 120 அறிஞர்களுக்கு ஒய்வூதியம் தரப்பட்டுள்ளது.

**பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்:**

பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் 24-க்கு தமிழில் பகுதி நேரப் பட்டய வகுப்புகள் தொடங்குவதற்காக இதுவரை நிறுவனத்துக்கு ரூ. 15,000 வீதம் மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்திலுள்ள ''திராவிட மொழிகளில் மொழியியல் ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி''யின் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும் மானியம் தரப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமிழ் கற்றுக் கொள்ளப் பயன்படுத்தக் கூடிய பாடங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை வெளியிடும் பணியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

**செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி**

செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலியின் முதல் மடலத்தின் முதல் பகுதி மொழியியலறிஞர் மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்கள் தொகுத்தது-விரைவில் வெளியிடப்படும். அவ்வகர முதலியின் மற்றப் பகுதிகளைத் தொகுக்கும் பணி தொடருகிறது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 19 ஆராய்ச்சி அலுவலர்கள், 12 முழு நேர ஆராய்ச்சி மாணவர்கள், டாக்டர் பட்டம் பெற ஆய்வு நிகழ்த்தும் 38 பகுதி நேர மாணவர்கள்; ஆகியோர் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது. வெளிநாட்டு மற்றும் பிற மாநில மாணவர்கள் 28 பேருக்கு இந்நிறுவனம் இவ்வாண்டு தமிழ் கற்றுத் தந்தது. தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய மாதாந்திரக் கருத்தரங்குகளுடன் இந்நிறுவனம் இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளில் தமிழரின் மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. 1981-82-ல் வரலாற்று மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. 1981-82-ல் வரலாற்று மரபுச் செல்வம் பற்றிய பெரும் கருத்தரங்கு நடத்தப்பட்டது. தமிழ் இலக்கியம், வரலாறு பற்றிய சிறந்த நூல்களும், இதுகாறும் வெளியிடப்படாத சில ஓலைச் சுவடிகளின் அச்சிட்ட வடிவங்களுமாக இதுவரை 44 தரமான நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தில் 'சுவடியியல்' 'மொழி பெயர்ப்பியல்' எனும் பட்ட மேற்படிப்பு பட்டய வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்ப் பல்கலைக் கழகம்**

இவ்வாண்டு 15-9-1981-ல் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்வேறு புலங்களுடனும் துறைகளுடனும் செவ்வனே செயல்படுகிறது. அண்மையில் வெளியீட்டுப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அருகில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் இப்பல்கலைக் கழகத்துக்காக, கையகப்படுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகத்திற்கான கட்டட வேலை இன்னும் சில மாதங்களில் தொடங்க இருக்கிறது.

**உலகத் தமிழ்ச் சங்கம்**


மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு நிறுவப்படும். இச்சங்கம் நிறுவுவதற்கான நிலம் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிறுவனத்தில் தமிழ்மொழி வல்லுநர்கள் பணிபுரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழுத் தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகமெங்கணும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும். இச்சங்கம் நிறுவ 1982-83-ல் ரூ. 105 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

---

**செ**ன்னைத் துறைமுகத்தில பாரதி துறையில் 14.4.82 அன்று ''கண்டெயினர்களை'' ஏற்றி இறக்கி அடுக்கி வைப்பதற்கான புதிய கிரேன்கள் இயங்கத் தொடங்கின.

30 கோடி ரூபாய் செலவில் 'கண்டெயினர்' நிலையம் அமைக்கும் திட்டத்தின் முதற் கட்டப் பணி இதன் மூலம் நிறைவுற்றது. இரண்டாவது கட்டப்பணிகள் 1983 சூலைத் திங்களில் முடிவடையும். இந்தப் பணிகள் முற்றுப்பெறும் பொழுது, இந்த நிலையம் ஒரு முதல்தரமான 'கண்டெயினர் நிலையமாக' ஆகிவிடும்.

ஜப்பானிய மேற்பார்வையில் அமைக்கப் பட்ட நவீன கிரேன்கள் இயக்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் பாரதி துறையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவர் திரு ஏ. செல்வராஜ், ஐ.ஏ.எஸ்., பங்குகொண்டார். கழகத்தின் துணைத் தலைவர் திரு அசோக் ஜோஷி ஐஏஎஸ், அனைவரையும் வரவேற்றார்



# உழவியல் பயிர்ப் பாதுகாப்பு




ப. சந்திரசேகரன்
உதவிப் பேராசிரியர் (உழவியல்)
தே. சீனிவாசவரதன்
இணை-ஆராய்ச்சியாளர் (பயிர் நோயியல்)
பயிர் மருத்துவ மையம்
திருநெல்வேலி.


பயிர்களைத் தாக்கும் பூச்சிகளும், நோய்களும், மிகுந்த சேதத்தை விளைவித்து, விளைச்சலையும், விளைபொருட்களின் தரத்தையும் குறைப்பதால், வேளாண்மையில் அவை பெரும் முக்கியத்துவத்தை வகிக்கின்றன. பொதுவாக, பூச்சிகளின் தாக்குதலால் தானிய-நிவன மற்றும் பணப் பயிர்களின் மகசூல் 16 முதல் 25 விழுக்காடு வரை குறைகின்றது. உதாரணமாகப் பருத்திக்கு உண்டாகும் சேதத்தை அளவிட, அயல்நாட்டில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் பூச்சிகளின் தாக்குதலினால் மட்டும் பருத்தியின் மகசூல் 25.5 முதல் 41.8 விழுக்காடு வரை குறைவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பூமியில் சுமார் 250 மில்லியன் ஆண்டுகளாக, செடிகளைத் தாக்கும் பூச்சிகள் பல்வேறுபட்ட சூழ்நிலைகளிலும் வாழ்ந்து வந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.

**பயிர்ப்பாதுகாப்பின் நோக்கம்:**

பயிர்களில் பூச்சிகள், நோய்கள் மற்றும் மண்வளக் குறைவால் ஏற்படும் சேதத்தைத் தவிர்த்து மகசூலைப் பெருக்குவதே பயிர் பாதுகாப்பின் முக்கிய நோக்கமாகும். பயிர்பாதுகாப்பு.

(1) பூச்சிகள் பயிரைத் தின்பதிலிருந்து பாதுகாப்பது.

(2) அவற்றின் இனப் பெருக்கத்தை மட்டுப்படுத்துவது.

(3) பூச்சிகள் மற்றும் நோய்க் கிருமிகள் பரவுவதைக் கட்டுப்படுத்துவது.

(4) அவைகளை முழுவதுமாக ஒழிப்பது.

(5) மண் வளத்தைப் பாதுகாப்பது போன்ற முறைகளால் சாத்தியமாகிறது. பூச்சிகளையும் நோய்களையும் அறவே ஒழிப்பதென்பது இயலாது. ஆகவே பயிர்களுக்கும் அவற்றைத்தாக் [illegible] நோய் மற்றும் பூச்சிகளுக்கும் [illegible] ஒரு சமரச நிலையை [illegible] நல்ல மகசூல் பெறும் [illegible] நோய்கள் மற்றும் பூச்சிகள் [illegible] செய்தலும் [illegible] நோய் நிர்வாகம், பூச்சி [illegible] கட்டுப்பாடு, பூச்சி நோய் [illegible] ஒருங்கிணைந்த பூச்சி [illegible] போன்ற முறை [illegible] கடைப் பிடித்து, பயிர்ப் [illegible] பொருளாதார நிலை [illegible] மேல் தாண்டாமல் காத் [illegible] அவசியமாகிறது.

**[illegible]ம் நோய்களும் பரவும் வி[illegible]**

[illegible] (1) பயிர்களைக் க[illegible]னை, (2) சாறு உறி[illegible]னை (3) பயிரின் பல பாகங்களின் [illegible]ருந்து உண்பனை. (4) வேர்களைத் தாக்குபனை மற்றும் (5) சேமிப்பு தானியங்களையும், விதைகளையும் தாக்குபனை என பல வகைப்படும். இவை மண்ணிலிருந்தும், விதை, மரம், செடி, கொடிகளிலிருந்தும் பழைய செத்தை மற்றும் குப்பைகளிலிருந்தும் பரவுகின்றன.

பலவித பயிர் நோய்களை உண்டு பண்ணும் பூஞ்சாளம், பாக்டீரியா, வைரஸ் போன்ற நுண்கிருமிகள் செடியின் மேல் பாகத்தைத் தாக்கும் நோய்களாகவும் அல்லது வேர்பாகத்தைத் தாக்கும் நோய்களாகவும் வெளிப்படுகின்றன. இவைகள் விதை, மண், செடி, கொடி, செத்தை, குப்பை, பாசனநீர், காற்று போன்றவைகள் மூலமாகவும், உழவியல் சாதனங்களாலும், ஆடு, மாடு, மனிதன் போன்ற உயிரினங்கள் மூலமாகவும் பரவுகின்றன.

**தடுப்பு முறைகள்:**

பயிர்கள், பூச்சி மற்றும் நோய்களால் தாக்கப்படுவதைத் தவிர்க்க (1) இயற்கையும் (2) செயல் முறைகளும் பயன்படுகின்றன.

(1) பயிர்களைத் தாக்கும் பூச்சிகளும், நோய்களும், தட்பவெப்பநிலை, நில அமைப்பு, பூச்சிகளின் இயற்கை எதிரிகள் மற்றும் சில பயிர்களின் இயற்கையான எதிர்ப்புச் சக்தி ஆகியவற்றால் தடுக்கப்படுகின்றன.

(2) செயல் அல்லது செயற்கை முறையில் (அ) பயிர்களில் நோய்கள், பூச்சிகள் தோன்றுவதற்கு முன்னதாகவே பலவகை பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு வருமுன் காத்துக் கொள்ளுதல் மேலும் (ஆ) பூச்சி மற்றும் நோய் தோன்றிய பின் அதை அழித்து / கட்டுப்படுத்திப் பயிருக்கு விளையும் சேதத்தைக் குறைப்பதுமாகும். இம்முறையில் (1) இயந்திரங்கள் அல்லது கைமுறைகளைக் கையாண்டு முட்டையிடும் முதிர்ந்த பூச்சிகளையும், முட்டைகளையும், பூச்சி மற்றும் நோய்கள் தாக்கிய செடி, கொடிகளையும் அகற்றி பயிர் காத்தல்.

உதாரணங்கள் : (அ) அம்சக்டா, நெல் தண்டுப்பூச்சி சிகப்பு கம்பளிப் புழுக்களின் முட்டைகளைக் கையால் எடுத்து அழித்தல்.

(ஆ) தென்னையில் காண்டாமிருக வண்டை கம்பியால் குத்தி எடுத்தல்.

(இ) நிலக்கடலையில் சிகப்பு கம்பளிப் புழுவின் தாய்ப்பூச்சியை விளக்குப்பொறி வைத்து அழித்தல்.

(ஈ) மேலும், பல சாதனங்களாகிய ஹாப்பர், டோஜர், ஹாப்பர் கேட்சர்ஸ், ப்ளைடிரேப்ஸ், பாத் ட்ரேப்ஸ், மேக்கட் ட்ரேப்ஸ், விளக்குப் பொறி போன்றவைகளைப் பயன்படுத்துதல்.

(2) பூச்சிக் கொல்லிகளான புதிய பல இரசாயன கூட்டுப் பொருட்களாகிய தொடு நஞ்சு, ஊடுருவிப் பாயும் நஞ்சு, புகை நஞ்சு, வெறுப்பூட்டி விரட்டுவன, இனக் கவர்ச்சி ஊட்டுவபவன மற்றும் பூச்சிகளின் மலட்டுத் தன்மையை ஏற்படுத்துவன போன்றவற்றை பயன்படுத்துதல்.

(3) பயிருக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகளை உண்டுவாழும் பிற பூச்சிகளையும் ஒட்டுண்ணிகளையும் பயன்படுத்துதல்.

(4) சில நோய்களும் பூச்சிகளும் பரவக் காரணமாயிருக்கும் பயிர்களையும், பயிர் ரகங்களையும் அயல் நாடுகளில் இருந்து கொண்டு வருவதை அரசு உத்தரவின் மூலம் தடுத்தல்.

(5) பூச்சி, நோய்களின் தாக்குதலுக்குஎதிர்ப்புத்திறன்கொண்ட ரகங்களை உற்பத்தி செய்தல்.

**உழவியல் முறைகள்:**

மேலே குறிப்பிட்ட முறைகள் யாவும் கையாளப்படுவதில் நடைமுறை இன்னல்கள் இருப்பதுடன் அதிக செலவும் செய்ய வேண்டியுள்ளது. மேலும், முழுப்பலனும் பெற மிகுந்த சிரத்தையுடனும் கவனத்துடனும் மேற்கூறிய முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. ''உழவியல் முறையில் பயிர்ப் பாதுகாப்பு'' என்பது சாதாரணமாக நிலத்தில் செய்யப்படும் அன்றாட உழவு மற்றும் செய்முறைகளின் மூலம் பயிர்களில் தோன்றும் பூச்சிமற்றும் நோய்களைக்கட்டுப்படுத்தி பயிர்ச் சேதத்தையும் தவிர்ப்பதேயாகும். இம்முறையில், நிலத்தில் செய்யப்படும் உழவு முறைகளையும், மற்ற சாகுபடி முறைகளையும் தக்க நேரத்தில் தகுந்தவாறு மாற்றிச் செய்து நம்குறிக்கோளை அடைவதால், இதில் கூடுதல் செலவு எதுவும் இல்லை. இம்முறை சிறுவாய்ப் பயிர்கட்கு மிகவும் எளிய, சிக்கனமானமுறையாகும். அதிக வருவாய் கொடுக்கக்கூடிய பயிரிலும் இம்முறை பயிர்ச் சேதத்தை மிகவும் குறைக்கவல்லது.

**(அ) முறைப்படி சாகுபடி செய்தல்:**

பலவித உழவு முறைகளைக் கடைப்பிடித்து, வயல், வரப்பு போன்றவற்றில் தோன்றும்களைகளையும், பூச்சிகள் நோய்கள் தங்கக் கூடிய பிற செடி கொடிகளையும் அகற்றுவது பயிர்ப் பாதுகாப்பிற்கு ஓரளவு வழிவகுக்கும். அறுவடைக்குப் பின், அடித்தட்டை, செத்தை, குப்பைகளை அகற்றி தீயிட்டு கொளுத்தி விடுதல் நலம். கரும்பில், தட்டை உரிப்பதால் மீலி பூச்சியும், செதில் பூச்சிகளும் அழிகின்றன. நட்ட 40-வது நாள் உரமிட்டு மண் அணைப்பதால், கரும்பில், இளந்தண்டுப் புழு தாக்குதல் மிகவும் குறைகிறது. ஈரம் காக்கும் பொருட்களை இடுவதாலும் இளந்தண்டுப் புழுவினால் உண்டாகும் பாதிப்பு குறைகிறது.

**(ஆ) நிலத்தை உழவு செய்தல்:**

நிலத்தைக் கலப்பை கொண்டு உழுவதாலும், மண்வெட்டி கொண்டு வெட்டுவதாலும் மண்ணில் இருக்கும் பூச்சிக் கூடுகள் வெளியே தள்ளப்பட்டு வெய்யிலில் மடிகின்றன; அவற்றுள் சில பறவைகளினாலும் அழிக்கப்படுகின்றன. மேலும் சில பூச்சிக் கூடுகள் அதிக ஆழத்தில் தள்ளப்பட்டு காற்றின்மையால் செத்து மடிகின்றன.

**(இ) காலத்தே பயிர் செய்தல்:**

விதைகளைச் சரியான நேரத்தில் விதைப்பதின் மூலம் பல பூச்சிகளின் தாக்குதலிலிருந்து நாம் பயிர்களைக் காத்துக் கொள்ள முடியும். உதாரணங்கள் (1) வெட்டு வீச்சு: ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், பெரும்பாலோர் சரியான நேரத்தில் சோளத்தை விதைத்து விட்டு, ஒரு சிலர் மட்டும் காலம்தாழ்த்தி விதைப்பதால், முன்னால் விதைக்கப்பட்ட சோளப் பயிரிலிருக்கும் குருத்துப் புழு போன்ற பூச்சிகள், புதிதாக விதைக்கப்பட்டபயிரை மிகவும் அதிக அளவு தாக்கி விடக் கூடும். இதையே 'வெட்டு வீச்சு' என்பார்கள்.

**(2) பூச்சி மற்றும் நோய்கள் அவை தாக்கும் பருவம்—பயிரின் வயது:**

ஒரு குறிப்பிட்ட பருவமும், பயிரின் குறிப்பிட்ட வயதும் ஒன்றுபடும்போது சில பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதல் மிகவும் அதிகமாகிறது. எனவே 5 அல்லது 10 நாட்கள் முன்னதாகவே விதைப்போமானால் பூச்சி நோய்களால் தாக்கப்படும் வயது, அவை தோன்றும் பருவத்திற்கு முன்பாகவோ முடிந்து விடுகிறது. இதனால், அவை அப்பயிரில் சேதம் விளைவிக்க இயலாது போகிறது. இதனால், அப்பயிரை, அப்பூச்சி/நோய் தாக்கும் பருவம் கழிந்தபின் விதைப்பதன் மூலம் அப்பூச்சியை அப்பயிரில் தோன்றாமலேயே செய்து விடலாம். எனவே, சரியான நேரத்தில் விதைப்பதால்பூச்சிகள் நோய்கள் தோன்றும் நேரத்தில் அப்பயிர் அவற்றின் தாக்குதலினால் பாதிக்காவண்ணம்வளர்ந்து விட முடிகிறது.

**(ஈ) விதை அளவு:**

சோளத்தில் தண்டுப்புழு தாக்கும் இடங்களில், அளவுக்கு அதிகமான விதைகளை விதைத்து பின்னர் தண்டுப்புழுவில் தாக்கப் பட்ட செடிகளை அகற்றி விடுவதால், இப்புழுவினால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க முடியும்.

**(உ) சரியான இடைவெளியில் நடுதல்:**

பயிர்களைத் தகுந்தவாறு, சரியான இடைவெளி விட்டு நடுவதனால் பல பூச்சிகள், வைரஸ் நோய்கள் சுலபமாகப் பரவுவதைத் தடுக்க முடியும், உதாரணமாக, நிலக்கடலையில் 'ரிங் மொஸைக்' எனும் வைரஸ் தேமல் நோய்க் குறைப்புக்கு 15 செ. மீ. இடைவெளி விட்டு நட வேண்டும். நெற்பயிரை மிகவும் நெருக்கமாக நட்டால் புகையான் தாக்க வாய்ப்புண்டு.

**(ஊ) சரியான உர அளவும், இடும் நேரமும்:**

பயிர்களுக்கு மண் பரிசோதனையின் பேரில், போதிய





## ஆலய ஊழியர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

அறநிலையத் துறையில் உள்ள அர்ச்சகர்களில் 5 சதவிகிதம் பேர்தான் நிரந்தரமான வருமானத்தைப் பெறுகிறார்கள். மீதமுள்ள 95 சதவிகிதம் பேர் 25 ரூபாய், 50 ரூபாய் மற்றும் 100 ரூபாய் என்று சம்பளம் பெற்றுக்கொண்டு வாழ்க்கையில் கண்ணீர் விடுகின்றார்கள். அவர்கள் வாய் இல்லாத பூச்சிகளாக இருக்கிறார்கள்.

ஆலயங்களின் சொத்துக்களை வைத்திருப்பவர்களும் குத்தகையை ஒழுங்காகச் செலுத்துவதில்லை. தமிழகத்திலுள்ள ஆலயங்களில் பணிபுரியும் 1 இலட்சம் பேரில் 90 ஆயிரம் பேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று இந்தக் கருத்தை வெளியிடுகிறேன்.

ஆலய ஊழியர்களில் 100 ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ளவர்கள் எதிர்பாராத விதத்தில் மரணமடைந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் வகையில் அறநிலையத்துறை ஆயுள் இன்ஸ்ஸூரன்ஸ் கட்டி இவர்களுக்காகத்தரவேண்டிய பிரிமியத்தை அறநிலையத் துறையே செலுத்தும்.

மற்ற அலுவலர்கட்கு செலுத்த வேண்டிய பிரிமியத்தை அதிகாரிகள் விவாதித்து சொன்னால் அதன் பேரில் நடவடிக்கைகளை அறநிலையத்துறை மேற்கொள்ளும்.

(மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சென்னை நிருபர்கள் சங்க விழாவில் 18.4.82 அன்று ஆற்றிய உரையிலிருந்து.)

அளவு சத்துக்களைக் குறிப்பிட்ட நேரத்தில் இடவேண்டும். இல்லையெனில், மண்ணில் சத்துக் குறைவாகி, பூச்சி-நோய் தாக்குதலினால் உண்டாகும் அறிகுறிகளைப் பயிரில் தோற்றுவித்து, மகசூலையும் குறைத்துவிடும்.

மணிச்சத்து, சாம்பல் சத்துக்களை மண்ணில் இட்டவுடன் 20 சதவிகிதம் மட்டுமே பயிருக்குக் கிடைக்கும். மிகுதி 80 சதவிகிதம் உடனடியாகப் பயிருக்குக் கிடைப்பதில்லை. ஆகவே இவைகளை அடியுரமாக இடுவதால், பயிர்கள் வளர்ந்து வந்த பின் இச்சத்துக்கள் பயிர்கட்கு எளிதாக கிடைக்க ஏதுவாகும். உதாரணமாக,

(1) பருத்தியில் செந்தழை நோயும், சரியாக வெடிக்காத காய்களும் மண்ணில் சாம்பல் சத்துக் குறைந்துள்ளதனாலேயே ஏற்படுகின்றன.

(2) தென்னையில் பென்சில் கூர் நோய், நுண்ணூட்டச்சத்துக் குறைவினால் ஏற்படுகின்றது.

தழைச் சத்தை பயிருக்குத் தேவைப்படும் நேரத்தில் 2 அல்லது 3 முறையாகப் பிரித்து இட வேண்டும். இதனால்தழைச் சத்து வீணாக்கப்படுவதில்லை. மேலும், பயிருக்குத் தேவைப்படும் நேரத்திலும் கிடைக்கும். தழைச் சத்து இடப்படும் அளவு, நோய் மற்றும் பூச்சித் தாக்குதலுக்கும் காரணமாகிறது. உதாரணமாக : (1) நெற்பயிரில் அதிக தழைச் சத்து இடுவதால் புகையான் இலைச் சுருட்டுப் புழு மற்றும் கொள்ளை நோய் தாக்குதல் ஏற்படுகிறது.

(2) நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கப்பட்ட நாற்றுகளுக்குத் தாக்குதலுக்குப் பின்னர் அதிக அளவு தழைச் சத்து கொடுத்தால் பயிர் நன்கு வளர முடியும்.

### (எ) பயிர் சுழற்சி செய்தல்:

பருவத்திற்குப் பருவம் வேறுபட்ட பயிர்களைச் சாகுபடி செய்வதால் மண் மூலம் பரவும் பல பூச்சிகளையும் நோய்களையும் தடுக்க முடியும். மேலும் ஒரே வகைப் பயிரைச் சாகுபடி செய்வதால் அது நிலத்தின் ஒரே பகுதியிலிருந்து உரம் மற்றும் நீரை எடுத்துக் கொள்வதால் அந் நிலத்தில் சத்துக் குறைவு ஏற்படும். இதனால் ஒரே பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்தால் அப்பயிர் நல்ல மகசூல் தர முடியாமல் போகிறது.

### (ஏ) தடுப்புப் பயிர்களைப் பயிர் செய்தல்:

வருவாய் குறைவாகக் கொடுக்கக்கூடிய சில பயிர்களைபயிரிட்டு வருவாய் அதிகமாகக் கொடுக்கக் கூடிய பயிர்களில் தோன்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். இதை ஆங்கிலத்தில் டிரேப் கிராப்பிங் என்பார்கள்.

**உதாரணங்களாவன:**

(1) எலுமிச்சம் தோட்டத்தைச் சுற்றித் தக்காளி நடுவதால் எலுமிச்சைப் பழம் உறிஞ்சும் பூச்சி எலுமிச்சையைத் தாக்குவதிலிருந்து தடுக்கலாம். மாறாக அப்பூச்சி தக்காளியைத் தாக்குவதால் எலுமிச்சை காக்கப்படுகிறது.

(2) நெயிலை நாற்றங்காலில் தோன்றும் லெபிக்மா புழுவைத் தடுக்க நாற்றங்காலைச் சுற்றி கேழ்வரகு நடலாம்.

(3) மிளகாய்த் தோட்டத்தில் தோன்றும் புகையிலைப் புழுவை, தோட்டத்தைச் சுற்றி ஆமணக்கு நடுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

### (ஐ) பயிரின் இலைத் தோகையைக் கிள்ளுதல்:

நடவுக்கு முன் நெல் நாற்றுக்களின் நுனியை நறுக்கி விடும் வழக்கம். தண்டுப் புழுவின் முட்டைகளை அகற்றி, பயிருக்கு ஏற்படும் பாதிப்பைச் குறைக்க உதவுகிறது.

### (ஒ) எதிர்ப்புச் சக்தி கொண்ட ரகத்தை பயிர் செய்தல்:

பயிர்களின் பூச்சிகளுக்கு எதிராக உண்டாகும் எதிர்ப்புச் சக்தி, (1) பயிரின் திடமாக வளரும் தன்மை (2) கடினமாகத் தண்டு மற்ற பாகங்கள் (3) பூச்சித் தாக்குதல்னால் பாதிக்கப் படாத திறன் ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது.

சில பயிர்களில் மேல் பாகங்கள் மிகவும் கடினமாக இருப்பதால்

உறிஞ்சும் பூச்சிகளினால் பாதிக்கப்படுவதில்லை. நெற்பயிரின் தண்டு கடினமாக இருந்தால் தண்டுப் புழுவினால் தாக்கப்படுவது தடுக்கப்படுகிறது. சில பயிர்கள் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் இனவிருத்திக்கு ஏற்றவாறு அமைவதில்லை. மேலும் சில பயிர்கள் பூச்சிகளின் சரியான வளர்ச்சிக்கு அனுகூலமாக இருப்பதில்லை.

சில பயிர்களின் இலைகள் கடினமாகவும்; கரடு முரடாகவும் இருப்பதால்பூச்சிகள் அதிகம் நகர கஷ்டப்படுகின்றன. மேலும் சில பயிர்களின் நிறம், வாசம், சுவை ஆகியவை பல பூச்சிகள் வெறுக்கும்படியாக உள்ளன.

ஆகவே, ஒரு குறிப்பிட்ட பூச்சி அல்லது நோய்த் தாக்குதலுக்கு இலக்காகும் பகுதியில் அவற்றிற்கு எதிர்ப்புத் திறன் கொண்டுள்ள சரியான பயிரைத் தேர்ந்தெடுத்து சாகுபடி செய்வதே அப்பகுதிக்கு இலாபகரமானதாகும்.

**(ஓ) மண்ணின், அமில, உப்பு. காரத்தன்மையைச் சீர்திருத்துதல்:**

மண்ணில் அமிலமோ, காரமோ, உப்போ அதிகமாக இருந்தாலும் பயிர்கள், நோய் மற்றும் பூச்சிகளால் தாக்கப்பட்டது போன்ற அறிகுறிகளைக் காட்டும். மகசூலும் குறையும். உதாரணமாக பாசன நீரில் பைகார்பனேட்டு இருப்பதால், நெற்பயிர் நாற்றங்காலில் 1 வார வயதுள்ள நாற்றுக்கள் பழுப்பு நிறத்தைக்காட்டுகின்றன. இதைச் சீர்செய்ய 1200 கிராம் சுண்ணாம்பை 120 லிட்டர் நீரில் கரைத்து ஓர் இரவு வைத்துவிட்டு பின்னர் இக்கரைசலை, நாற்றுக்களின் இலைகளில் படாமல் நாற்றங்காலின் ஓரங்களிலிருந்து ஊற்ற வேண்டும். நெல் சாகுபடி செய்யும் மண்ணில் அமிலத் தன்மை இருந்தால், அதைச் சீர் செய்ய ஒரு பருவத்திற்கு ஒரு ஏக்கருக்கு 400 கிலோ சுண்ணாம்பு வீதம் 5 பருவங்களுக்கு இட வேண்டும்.

உப்புத் தன்மையுள்ள மண்ணை நன்றாக உழுது, உப்பில்லாத நீரை அதிக அளவு இட்டு, தேங்க வைத்து பின்பு வடிக்க வேண்டும்.

காரத் தன்மையுள்ள மண்ணில் 1 ஏக்கருக்கு 4,800 கிலோ ஜிப்சம் அல்லது 480 கிலோ சல்பர் அல்லது 20 டன் கரும்பாலைக் கழிவு இட்டு, நன்கு உழுத பின் நீர் தேக்கி பின்னர் வடி கட்ட வேண்டும்

இதற்குப் பின்னர், காற்றில் இருக்கும் தழைச் சத்தைப் பயன் படுத்தக் கூடிய நுண்ணியிர்களை வேரில் கொண்ட பயிர் வகைகளைப்பயிர் செய்து, பூக்கும் பருவத்திலேயே உழுதுவிட வேண்டும். உதாரணங்கள்; கொழிஞ்சி, கணப்பை, மேலும், ஆரம்பநிலையில் அமில, உப்பு அல்லது காரத் தன்மையுடைய நிலங்களில் தகுந்த எதிர்ப்புச் சக்தி கொண்ட பயிர் ரகத்தை பயிரிட வேண்டும். உதாரணங்கள்: உருளைக் கிழங்கு, சுகர் பீட் ஆகியவை அமிலத்தில்தன்மைக்கு எதிர்ப்புச் சக்தி கொண்டவை. பார்லி, சூரியகாந்தி, கேழ்வரகு, கொத்தவரை ஆகியவற்றை மற்றும் காரத் தன்மையுள்ள நிலங்களில் பயிரிடலாம்.

**(ஔ) சரியான நேரத்தில் அறுவடை செய்தல்:**

பெரும்பாலும் பயிர்கள் முதிர்ச்சி அடையும்போது, பூச்சிகளும் முதிர்ச்சி அடைகின்றன. இவைகள் மற்ற பயிர்களுக்கும், அடுத்த பருவத்தில் சாகுபடி செய்யப்படும் பயிருக்கும் பரவும். ஆகவே, பயிர்கள் போதிய அளவு முற்றிய பின்னும் அவற்றை அறுவடை செய்யாமல் நிலத்தில் காய்வதற்காக விட்டு வைக்காது உடனே அறுவடை செய்து விட வேண்டும். இதனால், பல பூச்சிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். மேலும், விதைகளின் முளைப்புத் திறனும் குறையாமல் இருக்கும்.

**(ஃ) சரியான சேமிப்புமுறை:**

அறுவடைக்குப் பின் சேமித்து வைக்கும் விதைகளையும், தானியங்களையும், தகுந்த அளவு உலர வைத்து, சரியான சேமிப்பு முறையில் சேமித்து வைப்பதால் விதைகளும் தானியங்களும் சேமிப்புக்கிடங்குகளில்தோன்றும் பூச்சி, நோய்களிலிருந்து காக்கப் படுகின்றன.

மேற்கூறிய பல உழவியல்முறைகளைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக அதிக செலவுகள் ஏதுமில்லாமல் பயிரைத் தாக்கும் நோய்கள் மற்றும் பூச்சிகளிலிருந்து பாதுகாத்து அதிகமகசூல் பெற முடிகிறது.

வெளியீடு :

தகவல் தொடர்பு நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை.

**மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்**

மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 120.1 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ. 25,10,000 மதிப்பீட்டிலும், 115 கல் பாலங்கள், தடுப்புச் சுவர்கள் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டிலும், 15.7 கி.மீ. நீளமுள்ள ஆதி திராவிடர் குடியிருப்பில் இருந்து மயான பூமிக்குச் செல்லும் 26 சாலைகள் ரூ. 1,46,700 மதிப்பீட்டிலும், 22 பள்ளிக் கட்டடங்கள் ரூ. 13,78,000 மதிப்பீட்டிலும் நிறைவேற்றப் பட்டுள்ளன.


சேலம், கொச்சி சாலையோடு இணைக்கிற வகையில் 2 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ. 50,000 மதிப்பீட்டில் சின்னம்பதி, புதுப்பதி ஆகிய மலைவாழுநர் வாழ்கின்ற கிராமங்கள் பயன் அடையும் விதத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இந்தச் சாலையில் 12 கற்சுவர்கள், பாலங்கள் ரூ. 2,80,000 மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளன.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 75 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. சாலைகள் அமைப்பதற்காக ரூ. 53,000 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

சமூக நலத்துறையின் மூலம் விதவைகளின் குழந்தைகள் 13 பேருக்கு உபகாரச் சம்பளமும் 18 பேருக்கு புத்தகங்களும், உடல் ஊனமுற்றோர் 13 பேருக்கு தலா ரூ. 1,000 வீதம் தொழில் கடனும் மானியமும், 4 விதவைகளுக்குத் தையல் இயந்திரங்களும், 55 பெண்களுக்குத் தையல் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன.



# சுற்றுலாத் திட்டங்கள்



மத்திய சுற்றுலா-விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் பொதுத்துறை நிறுவனமான இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வர்த்தக மற்றும் மேம்பாட்டு ரீதியான திட்டங்களை மேற்கொள்ளும்.

அமைச்சகத்தின் 1981-82 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வடகிழக்கு மாநிலங்கள், ஜம்மு-காஷ்மீர், உத்திரப்பிரதேச மலைப்பகுதி மற்றும் இதர பின்தங்கிய பகுதிகளுக்கான சுற்றுலாத் திட்டங்களைக் கழகம் வரைந்துள்ளது.

சமூக-பொருளாதார இலட்சியங்களை நிறைவேற்ற இத்தகைய திட்டங்களை மேற்கொள்வதற்கு இது சரியான தருணம் என்று அறிக்கை கருதுகின்றது.

கொள்கை மற்றும் திட்டமிடல் உத்திகளுக்கு ஏற்ப, உள்நாட்டுச் சுற்றுலாவை மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் நிறைவேற்ற கழகம் முக்கியத்துவம் அளித்து வருகின்றது.

மாநில அரசுகளுடன் கூட்டு முயற்சி திட்டம் ஒன்றைக் கழகம் வடிவமைத்துள்ளது. வட்டார வாரியாகச் சுற்றுலா இடங்களின் வளர்ச்சிக் கழக நிபுணத்துவத்தின் பரவலாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது இத்திட்டம் என்கிறது அறிக்கை.

நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கும், தன்னுடைய இலாபத்தினை அதிகரிக்கவும் மும்முனை மார்க்கெட்டிங் உத்தி ஒன்றினையும் கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சி மார்க்கெட்டுகளை உருவாக்குவதற்காக, தன்னுடைய சொந்த சுற்றுலா ஏஜன்சி ஒன்றையும் கழகம் நிறுவியுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட சுற்றுலா மையங்களில் விற்பனை ஏஜெண்டுகளும் நியமிக்கப் படுகின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா இயக்குநர்கள் 45 சுற்றுலாக் கார்களை வாங்க நிதியுதவி அளிக்கவும் அமைச்சகம் ஒப்புதலளித்துள்ளது. இந்த ஆண்டில் மேலும் 5 சுற்றுலா இயக்குநர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா இயக்குநர்களின் எண்ணிக்கை 130-ஐ எட்டியது. பழைய இறக்குமதி செய்யப்பட்ட கார்கள் ஒதுக்கீடு, மற்றும் நிதியுதவி ஆகியவற்றுக்கு இந்த அங்கீகாரம் வகை செய்யும்.

மற்றும் வழிகாட்டிகளுக்குப் பயிற்சி வகுப்புகள் ஊழியர்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற வழிகாட்டிகளுக்கு உதவும் வகையில் ஜப்பானிய, பிரெஞ்சு மற்றும் இத்தாலிய மொழிப் பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றை நடத்த சுற்றுலாத் துறை நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பம்பாய், வாரணாசி மற்றும் தில்லியிலுள்ள இமிகிரேசன் மற்றும் சுங்க அதிகாரிகளுக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள குறைவான வளங்களை அதிகபட்சம் பயன்படுத்தி சுற்றுலாவை வளர்த்து சுற்றுலா சர்க்யூட் கொள்கையைப் பயன்படுத்த அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

நாடு முழுவதும் 441 சுற்றுலா மையங்களைக் கொண்ட 61 சுற்றுலா சர்க்யூட்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கையாக, இத்தகைய மையங்களில் உள்ள வசதிகள் குறித்தும், எதிர்காலத்தில் வழங்கப்படவிருக்கும் வசதிகள் குறித்தும் மத்திய அரசுக்கு மாதிரி திட்டங்களை அனுப்பி வைக்குமாறு மாநில அரசுகளும் யூனியன் பிரதேசங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

பரிசீலனைக்குரிய 1981-82-ல் கூடுதலாக 916 அறைகள் கொண்ட சர்வதேச தரத்துக்கு ஏற்ற ஓட்டல்கள் கட்டப்பட்டன. கவுகாத்தி, ஷில்லாங், இம்பால் மற்றும் இடாநகர் ஆகிய இடங்களில் நான்கு புதிய சுற்றுலா அலுவலகங்கள் துவக்கப்பட்டன.

1981-ல், பாகிஸ்தான், மற்றும் வங்காள தேசத்தினர் தவிர்த்த 853,148 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியா வந்தனர். 1980 ஆண்டு வருகையைவிட இது 7.1 சதவிகிதம் அதிகம். 1976-77 விலைகளின்படி 1981-ல் நாட்டுக்கு கிடைத்த அந்நியச் செலாவணி மதிப்பு 564 கோடி ரூபாய்.




# திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பாவேந்தர்-புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்குச் சிறப்புச் செய்யும் வகையில் தமிழக அரசு திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை உருவாக்கியுள்ளது. அதன் தொடக்கவிழா ஏப்ரல் 29, 30 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

திருச்சியில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாக இருந்து வந்த கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு, அதனைச் செயலாற்ற முனைந்துள்ளது.

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள பொறியியல் கல்லூரி ஒன்று, சட்டக் கல்லூரி ஒன்று, மருத்துவக் கல்லூரி ஒன்று, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இரண்டு - உட்பட மொத்தம் 39 கல்லூரிகள் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்படுகின்றன. தற்போது திருச்சிராப்பள்ளியில் இயங்கி வரும் சென்னைப் பல்கலைக் கழக முதுகலை மையம் புதிய பல்கலைக் கழகத்திற்குரிய பணிகளை ஆற்றிவருகிறது.

தற்சமயம் இந்த மையத்தில் கணிதம். பௌதீயல், வேதியல்,



பேராசிரியர்
பி. எஸ். மணி சுந்தரம்

தாவர இயல், ஆங்கிலம், பொருளாதாரம் ஆகிய 6 துறைகள் மட்டுமே உள்ளன. இந்த மையம் ஆய்வுத் துறையில் அரும்பணியை ஆற்றி அனைத்துலகச் சிறப்புப் பெற்றிருக்கிறது.

இந்த மையத்தின் அருகில் உள்ள நிலங்களைக் கையகப்படுத்தி அங்கே பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைத் துவக்குவதாக முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் மாவட்டவிளையாட்டுக் குழுவுக்குச் சொந்தமான விளையாட்டுத் திடலும், தந்தை பெரியார் கல்லூரியும், இடைப்பட்ட பகுதியில் இருப்பதாலும், மையத்தைச் சுற்றிலும் புதிய வீடுகள் உருவாகி வருவதாலும், அந்த இடம் கைவிடப்பட்டது. புதுக்கோட்டைச் சாலையில் திருச்சி ரயில் நிலையத்திலிருந்து 16. கி.மீ. தொலைவிலும் - விமான நிலையத்திலிருந்து 10 கி. மீ தொலைவிலும் உள்ள மிகப் பெரியதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே பல்கலைக் கழகத்தை நிறுவ அரசு முடிவு செய்தது. இந்த இடம், போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகிய பல வசதிகளைக் கொண்டதாகத் திகழ்கிறது. ஏறக்குறைய 525 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது.


தேர்வு முறையில் சீர்திருத்தத்தை உருவாக்குவதற்கு இந்தப் பல்கலைக் கழகத்தின் ஆளுமைக்குட்பட்ட கல்லூரிகளில் பணியாற்றும் புகழ்பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட குழு ஒன்றினை இந்தப் பல்கலைக் கழகம் அமைத்துள்ளது. அந்தக் குழு, தற்போது நடைமுறையில் உள்ள தேர்வுமுறை, பயிற்றுவிப்பு முறை ஆகியவற்றையும், பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்துவதற்கும் இன்றைய நிலைக்கு ஏற்ற முறையில் அமைப்பதற்கும் உரிய வழிவகைகளை ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திருச்சியில் மண்டலப் பொறியியல் கல்லூரியில் முதல்வராக இருந்த பேராசிரியர் திரு பி.எஸ். மணிசுந்தரம் அவர்கள் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப் பெற்றிருக்கிறார்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30-4-'82ல் துவக்கி வைத்தார்கள்.

அட்டையில்
திருச்சி மலைக்கோட்டை
வண்ணப்படம் உதவி
சுற்றுலாத் துறை

சுற்றுலா புகைப்படங்கள் :
ஏ. இராஜரத்தினம் (சுற்றுலாத் துறை)



# அத்திக்காய்

ஏ. ஆர். என். துரைராஜ், ஆர்.ஐ.எம்.பி.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமென்பது முதுமொழி. அது மாதிரி வாழ்க்கையை இயற்கையே நமக்கு அளித்துள்ளது ஆச்சரியமான செய்தி. மனிதன் பிறக்கும்போதே கூடவே பல விதமான நோய்களுடன் காணப்படுகிறான். அது தொடர்ந்து காலா காலத்தில் பல நோய்களாக வளர்வடையும். தவிர, வெளியேயுள்ள பல விஷ அணுக்களும் உடலில் சென்று நோய்களைப் பரப்புகின்றன. இந்நோய்களைக் குணப்படுத்தப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே, நமது மூதாதையர்கள் சித்தவைத்தியம் செய்து உணவு முறையிலேயே உடல் நலத்தைப் பேணிக்காத்து வந்திருக்கிறார்கள். நமது அன்றாட உணவு முறையிலே ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. உடலை ஓர் அளவிற்கு நலமானமுறையில் இருக்கச் செய்வதற்கு உணவு முறையில் செயல்படுத்தலாம். பலவிதப் பிணிகளைப் போக்குவதற்கு உணவோடு சேர்ந்த மருத்துவப் பொருள் ஆகிய காய்கறிகள், கீரைகள், பழங்கள் முதலியவை இருக்கின்றன. இயற்கை அன்னை அளித்த இந்த மூலிகையில் ஒன்று அத்திக்காய் ஆகும். பிணி தீர்க்கும் சிறப்பு அம்சங்கள் இதில் ஏராளமாக உள்ளன. இது பிணியிலிருந்து நம்மை விடுவிக்கும் சஞ்சீவியாகத் திகழ்கிறது.

அத்திக்காய் நமது அன்றாட வாழ்விற்கு உணவாகவும், மருந்தாகவும் பயன்படுகிறது. காய், பழம், பிஞ்சு ஆகியவற்றின் பயன் பற்றித் தெரிந்தவர்கள் இந்த நவ நாகரிக காலத்தில் 50 சதவிகிதம் தான் இருப்பார்கள்.

அத்திக்காய் உடல் நலத்துக்கு உகந்தது. வலிமை தரவல்லது; சத்துக்கள் நிறைந்தது. நாம் சாப்பிடும் உணவில் அத்திக்காயைச் சேர்த்து வாரம் இரு முறையாவது பயன்படுத்தி நலன் அடையலாம்.

சாதாரணமாக தோப்புக்களிலும் சிலரது வீடுகளிலும் அத்தி மரத்தைக் காணலாம். அது கொத்துக் கொத்தாகப் பழம், காய், பிஞ்சு இலைகளுடன் காட்சி தரும்.

**தீரும் வியாதிகள்:**

உஷ்ண சம்பந்தமான நோய்களும், பெரும்பாடு, வெள்ளை, வெட்டை, சிறுநீர்க் கடுப்பு, மூலம், ஆசனக்கடுப்பு, வாய்நாற்றம், மலச்சிக்கல், கைகால்சோர்வு அசதி, பித்த மயக்கம், நீரிழிவு, பாதங்களில் ஏற்படும் வெடிப்பு ஆகியவற்றை அத்திக்காய் நிவர்த்தியாக்கும்.

**பயன்படுத்தும் முறை:**

அத்திக்காயை வாங்கிய உடன் தண்ணீரில் நன்றாக அலசிச் சுத்தம் பார்க்க வேண்டும். பிறகு சுத்தம் பார்த்துத் துண்டு துண்டாக அறுத்த பிறகு நன்றாகப் பிசைந்து பருப்பில் கூட்டாய்ச் சேர்த்துக் கொள்ளலாம். பொரியல் மாதிரி சமைத்துச் சாப்பிடலாம். உதாரணத்திற்கு உருளைக் கிழங்குப் பொரியல் எப்படிச் செய்கிறோ அதுபோலச் செய்து உணவில் சேர்த்துக்கொள்ளலாம். சமையலில் பல விதமாகச் சமைத்துச் சாப்பிட உகந்தது. வாரத்திற்கு இரண்டு தடவை சமையலில் சேர்த்துச் சாப்பிட, உடல் நலம் பெருகும். தாது கெட்டியாகும். இரத்தம் விருத்தியாகும். நன்றாகச் சீரணிக்க வல்லது. பத்தியத்துக்கும் ஏற்றது.



இயற்கை நமக்கு அளித்துள்ள மூலிகைகளை முறையாகப் பயன்படுத்தத்தெரிந்தால், தீராது என்று மேல்நாட்டு மருத்துவர்கள் கைவிட்ட பல நோய்கள் கூடத் தீரும்.

—காந்தியடிகள்.

**அத்திப் பிஞ்சு: (பெரும்பாட்டிற்கு மருந்து)**

அத்திப் பிஞ்சு எடுத்து, முதலில் தண்ணீரில் அலசிச் சுத்தம் பார்க்க வேண்டும். புழு, பூச்சிகள் இருக்கக்கூடும். ஆகையால், சுத்தம் பார்த்த பிறகு அப்பிஞ்சை நன்றாக இடித்துச் சுடு தண்ணீர் விட்டுப் பிசைந்து, பிசைந்ததை வடிகட்டி (ஒரு வாரம்) தினம் காலை, மாலை இருவேளையும் அருந்தவேண்டும். அருந்தியபிறகு மூன்று தம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும். இவ்வாறு செய்துவந்தால், பெண்களின் பெரும்பாடு தீரும் என்பதில் ஐயமில்லை.


**அத்திக்காயின் குணம்:**

பத்தியமே யாறு
நாளுமே காத்திடு
முத்திய கள்ளிப் பூ
வானதில் கிரந்தியும்
அத்திக்காயின் கிரந்தி
சூலைமேகக் கிரந்திகள்
சத்தியமாகவே
யோடுங் கைகண்டதே
ஹசித்தர் குறுநாவல்

கண்ட தெநாச்சிக்
கிரந்தி யழுகளும்
விண்ட யோனிக்
கிரந்தியரிப்புடன்
மண்ட சூலக்
கிரந்தி செங் கிரந்தியும்
அண்ட சூலையும்
மாறிடக் கேளுநீ

—சித்தர் குறுநாவல்

# நூற்றாண்டு கண்ட அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி



**1982** ஏப்ரல் முதல் தேதியுடன் அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி நாட்டிற்கு ஒரு நூற்றாண்டு சேவையினைப் பூர்த்தி செய்கின்றது. அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி மக்களிடையே பிரபலம் அடைந்திருந்தாலும், இதற்கு முன்னோடியாக அரசு சேமிப்பு வங்கி எனும் நிறுவனம் இருந்து வந்தது என்பது பல பேருக்குத் தெரியாது.

1833-ல் பிரசிடெண்டு வங்கிகள் வடிவில் அரசு சேமிப்பு வங்கி உருப்பெற்றது. 1870-ல் பல மாவட்ட சேமிப்பு வங்கிகள் நிறுவப் பெற்றன. 1882 ஏப்ரல் முதல் தேதியன்று இந்தச்சேமிப்பு வங்கிகள் அஞ்சல் நிலையங்களுக்கு மாற்றப்பட்டன. முதல் 180 கிளைகளுடன் துவக்கப்பட்ட இந்த வங்கி, முதல் ஆண்டிலேயே 4838 கிளைகளைக் கொண்டதாகப் பிரகாசித்தது. மாற்றம் ஏற்பட்ட முதல் ஆண்டில் அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கியில் சுமார் 39,000 பேர்களே கணக்கு வைத்து இருந்தனர். அவர்கள் கணக்கில் வைத்திருந்த தொகை ரூ. 28 இலட்சம்.

எந்தத் திட்டத்தினையும் செயல்படுத்த இயன்றவகையில் உள்ள அஞ்சல் நிலையங்களிடம் சேமிப்பு வங்கி திட்டம் ஒப்படைக்கப்பட்டது. மக்களிடையே சேமிப்பு உணர்வினை ஊட்டுவதே அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகளின் இலட்சியமாக இருந்தது.

கடந்த நூற்றாண்டுகளில் சேமிப்பு வங்கியின் வளர்ச்சி பாராட்டத்தக்கதாக உள்ளது. தற்போது நாடெங்கிலும் 1,40,000 அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இதில், 1,25,000 கிளைகள் கிராமப்புறங்களில் உள்ளன. நாட்டிலுள்ள அனைத்து பொதுத்துறை மற்றும் தனியார் துறை வங்கிகள் அனைத்தையும் சேர்த்தாலும் இதற்கு ஈடாகாது.

**ஐந்து கோடிக்கும் மேற்பட்ட கணக்குகள்**

நாடெங்கிலுமுள்ள அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகளில் கணக்குகளின் எண்ணிக்கை ஐந்து கோடிக்கும் அதிகமாகும். எல்லா விதமான கணக்குகளின் மதிப்பு சுமார் 9 ஆயிரம் கோடி ரூபாயாகும். மக்களின் ஒருங்கிணைந்த நம்பிக்கையின் பேரிலேயே இந்த வளர்ச்சி.

**அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கியின் பல திட்டங்கள்**

1873, அரசு சேமிப்பு வங்கி திட்டத்தின்கீழ் நான்கு திட்டங்களை அஞ்சல்நிலைய சேமிப்பு வங்கி நடத்தி வருகின்றது. தனிநபருக்கு அதிகபட்சம் ரூ. 25,000 வரையிலும், கூட்டுக் கணக்குகளுக்கு அதிகபட்சம் ரூ. 50,000 வரையிலும், சாதாரண சேமிப்பு கணக்குகள் இதில் பணம் திரும்பப் பெற நிபந்தனைகள் ஏதும் இல்லை; 10 ஆண்டு மற்றும் 5-ஆண்டு குமுலேடிவ் டைம் டெபாசிட்டுகள்


மக்களின் அனைத்துத் தரப்பினரும் ஒப்புக்கொள்ளும் வகையில் விதிமுறைகளை எளிமைபடுத்திக் கொள்வதன் மூலம் அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி தன்னுடைய நடைமுறைகள் தன்னைத் தானே நவீனப்படுத்திக்கொள்கின்றது. தற்போது வர்த்தக வங்கிகள் காசோலைகள் மூலம் பணம் பெறும் முறையையும் அறிமுகப்படுத்தியுள்ளனர். டெபாசிட்தாரர் தனக்கு வாரிசையும் நியமிக்க அஞ்சல் நிலையசேமிப்பு வங்கி வசதி செய்து தருகின்றது.

வர்த்தக வங்கிகளில் உள்ள "டெல்லர் முறை" போல், ரூ. 300 வரை பணம் பெறும் 'டெல்லர் முறை'யினையும்அரசு நிலைய சேமிப்பு வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. சுமார் 10,000 அஞ்சல் நிலையங்களில் இவ்வசதி உள்ளது. தலைமை அல்லது துணை அஞ்சல் நிலையங்களின் முன் அனுமதியின்றி ரூ. 250 வரை பணத்தை திருப்பிக் கொடுக்க கிராம கிளை அஞ்சல் நிலையங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எழுதப்படிக்கத் தெரியாத பாமர கிராமப்புற டெபாசிட்டர்களுக்கு வசதியாக, அடையாள அட்டைகளை அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி இலவசமாக வழங்கி வருகின்றது. டெபாசிட்டர்களின் புகைப்படம் மற்றும் கையெழுத்து உள்ள ஓட்டுநர் உரிமங்கள், பாஸ்போர்ட்டுகள், ரயில்வே சீசன் டிக்கெட்டுகள் போன்றவற்றையும் டெபாசிட்டர்கள் பயன்படுத்தி தங்களை அடையாளம் காட்டிக் கொள்ள வசதி செய்து கொடுக்கப்பட்டு உள்ளது.

நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்குக் கணிசமான அளவுக்கு வளங்களை உருவாக்க அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகளையே மத்திய - மாநில அரசுகள் நம்பி உள்ளன. ஐந்தாண்டு திட்டங்களுக்கான மதிப்பீட்டில் 5 சதவிதம் அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கிகளிலிருந்தே பெறப்படுகின்றது.

கடந்த 1981-82-ல் அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி டிபாசிட்டுகள் 18 சதவிதம் அதிகரித்திருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



# பாவாணருக்குப்பின் அகரமுதலிப்பணி

**இரா. மதிவாணன்,**
பொறுப்பு இயக்குநர்,
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்,
சென்னை.

**மொ**ழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் தலைமையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் ( Tamil Etymological Dictionary Project ) திட்டத்தைத் தமிழக அரசு 1974-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் உருவாக்கியது.

எருதந்துறை பேரகரமுதலி ( Oxford Dictionary 13 volumes ) போல் தமிழிலும் பதின்மூன்று மடலங்கள் வெளியிடத் திட்டமிடப்பட்டது. சொற்பொருள் கூறும் இருமொழி (தமிழ்—ஆங்கிலம்) அகரமுதலியாக அமைவது மட்டுமன்றி சொல்லின் வேரும் வரலாறும் கூறி, பாவாணரின் ஞால முதன் மொழிக் கொள்கைக்கு அரணான சான்றுகளை நிரலே நெறிப்படுத்திக் காட்டுவது இவ்வகரமுதலியின் தனிச் சிறப்பாகும். 1936-இல் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதிக்குப் பின் தமிழில் சிறந்த கருவிநூலாகப் பெரிய அளவில் பன்மடல அகரமுதலி வெளிவரவில்லை என்னும் நெடுநாளைய குறை இதனால் நீங்கும். ஆங்கில இலக்கிய வரலாற்றில் அகரமுதலிப் போர்க்காலம்( War of Doctionaries ) என்றே ஒரு காலத்தைக் குறிப்பிட்டு, 'தனியார் நிறுவனங்களுள் யார் சிறந்த அகரமுதலி வெளியிடுவது என்ற போட்டி நிலவியதால் ஆங்கில மொழியில் சிறந்த கருவிநூல்கள் தோன்றின; ஆங்கிலம் விண்ணளாவி, மண்ணளாவி வளரச் சொல்வளம் பெருகியது' என்று கூறுகின்றனர். ஆங்கிலத்தில் கீற்று, சேம்பர்சு குழுவினர், கிளெயின், ஆனியன், வீக்லி என்னும் ஐந்திறத்தார் தனித்தனியாக வெளியிட்ட ஐந்து ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் ( Etymological Dictionary of the English Language) வெளிவந்து ஆங்கில மொழியை அணி செய்கின்றன. தமிழிலும் பாவாணரை அடியொற்றி, சொற்பிறப்பியல் ஆராய்ச்சி பெருக ஊக்கமூட்டும் வகையில் பாவாணர் எழுதி முடித்த முதன்மடல் முதற்பகுதியை வண்ண விளக்கப் படங்களுடன் வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது. இன்னும் ஆறு திங்களுக்குள் அச்சுப்பணி நிறைவுற்று, நூல் வெளிவந்து விடும்.

பாவாணர் சொல்லாய்வு முறையை அடியொற்றி அகரமுதலியின் அடுத்த பகுதிகளை எழுதும் பணி நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் எழுதப்படும் சொல் விளக்கங்கள் கருத்தரங்கில் இடம் பெறுவதோடு, தமிழறிஞர்களிடையில் சுற்றுக்கும் விடப்படும்.

ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் முன்னோடியான கீற்றுப்பெருமகனார்(W.W.Skeate) ஒரு மடலமாக அகரமுதலியை வெளியிட்டு, சொற்பிறப்பியல் நெறிமுறைகளை ( Principles of English Etymology ) இருமடலங்களாக வெளியிட்டார் ஆனால், தமிழ் செய்ததவக்குறையின் பயனாக இவ்வகரமுதலிக்கான சொற்பிறப்பியல் நெறிமுறைகளை எழுதுமுன்னும், அகரமுதலிப்பணி நிறைவுறுமுன்னும் பாவாணர் மறைந்துவிட்டார். பாவாணர் நெறிப்படிச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள் வகுகப்பட்டு மாதக்கருத்தரங்குகளில் அறிஞர் முன்னிலையில் வைக்கப்படும்.

ஆங்கிலத்தின் சொல்வளம் எட்டு இலக்கம். தமிழின் சொல்வளம் (சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியில் உள்ளபடி) ஓரிலக்கம். தமிழில் இன்னும் ஏழு இலக்கம் சொல்வளம் பெருகவேண்டும். அவற்றுள் 4 இலக்கம் சொற்கள் அறிவியல், தொழில்நுட்பக் கலைச் சொற்களாகவே இருக்கும், எஞ்சிய மூன்றிலக்கம் சொற்களைப் புதிதாகத் தொகுக்கும் முயற்சியில் இத்துறை ஈடுபட்டுள்ளது. எருதந்துறை ஆங்கில அகர முதலித் தொகுப்பின்போது நானூற்றுவர் எழுபதாண்டுகளில் ஐந்திலக்கம் சொற்களையும் இருபதிலக்கம் மேற்கோள்களையும் திரட்டினர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. 7000 பேர் அக்காலத்தில் தம்மைப் பகுதி நேரப் பணியாளராகப் (Part time voluntary workers) பதிந்துகொண்டு, பேச்சு வழக்கிலும், நூல் வழக்கிலும் பல்வேறு துறை தழுவிய சொல்லாட்சிகளைத் தொகுத்து அனுப்பிக் கொண்டிருந்தனர் என்பர். தமிழிலும் அத்தகு அகரமுதலிப்பணித் தொண்டர் எண்ணிக்கை பெருகுதலை விழைகிறோம். மொழிநூற் பகலவனின் சொல்லாய்வு முறை தமிழுக்குக் கிடைத்த பெரும் பேறு. அவர் குறிக்கோள் நிறைவுறத் தமிழன்பர் தோள் கொடுத்துத் துணைபுரிய வேண்டும்.

பரோ எமனோவர் 33 ஆண்டுகள் உழைத்து (5461 சொற்கள் திரட்டி) ஆங்கிலத்தில் வெளியிட்ட திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியைப் (Dravidian Etymological Dictionary) படித்த பிறகுதான் சப்பான் மொழிச் சொற்கள் தமிழ்ச் சொற்களாக இருப்பதை ஒனோ கண்டறிந்தார். பாவாணர் அகரமுதலி வெளிவரின் உலகமுழுதும் எண்ணற்ற ஒனோக்கள் உருவாவர் என்பது திண்ணம்.

**தஞ்சையில் தந்தை பெரியார் நினைவுத்தூண் திறப்பு விழா 9-4-82'ல் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**
(கட்டுரை 47-ஆம் பக்கத்தில்)





# சிறுசேமிப்பில் நெல்லைக்கு முதல் பரிசு

[illegible]நெல்லை சங்கீத சபாவில் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாகசிறுசேமிப்பு வசூலில் மாநிலத்திலேயே மற்ற மாவட்டங்களை விட குறியீட்டிற்கும் மேலாக அதிகத் தொகையை வசூல் செய்ததற்காக சுழற்கேடயத்தை நிரந்தரமாக நெல்லை மாவட்டத்திற்கே வழங்கும் விழா நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு கதர் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். என். இராசேந்திரன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் சுழற்கேடயம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு நீ. கி. ஹீரா, ஐ. ஏ. எஸ். அவர்களிடம் வழங்கப்பட்டது.

விழாவில் சட்டப்பேரவை துணைத் தலைவர் மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

மேலும் விழாவில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 51 தையல் இயந்திரங்கள் 51 பெண்களுக்கு மானியத்துடன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்களால் வழங்கப்பட்டன.

1981-82 நிதியாண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகத் தொகை கடன் வழங்கிய வங்கிகளுக்கு கேடயம் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது.

சமூகநலத் திட்டத்தின் மூலம் —

(1) இவ்விழாவில் ஊனமுற்ற 37 பேர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும்,

(2) காது கேட்காத 30 பேர்களுக்கு காதுகேட்கும் கருவியும்,

(3) 120 நபர்களுக்கு தையல் இயந்திரங்களும்,

(4) நல்ல சுகாதார முறையில் உள்ள 16 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு 16 வானொலிப் பெட்டிகளும் வழங்கப்பட்டன.

பிற்பட்ட நலத்துறையின் மூலம்—

(1) சலவைத் தொழிலாளிகள் 12 பேர்களுக்குத் "தேய்ப்பு பெட்டிகளும்"

(2) சவரத்தொழிலாளர்கள் 5 பேர்களுக்கு தொழிற்கருவிகளும் வழங்கப்பட்டன.

**திருநெல்வேலி மாவட்டத்தில் சிறு சேமிப்பு வசூல்**

**இலக்கும் நிறைவேற்றமும்**

| ஆண்டு | இலக்கு நிகர வசூல் (இலட்சங்களில்) | நிறைவேற்றம் மொத்த வசூல் (இலட்சங்களில்) | நிறைவேற்றம் நிகர வசூல் (இலட்சங்களில்) | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1978—79 | 75 | 1140.00 | 253.43 | 338 % |
| 1979—80 | 200 | 1321.00 | 325.00 | 162 % |
| 1980—81 | 275 | 1541.66 | 360.49 | 131 % |
| [illegible] | 275 | 1796.36 | 407.[illegible] | 14[illegible] % |

# வங்கி நடத்திய விளையாட்டு விழா!

அண்மையில் ஆயிரம் விளக்குத் தொகுதியில் மாநகராட்சிப் பள்ளிச் சிறார்களுக்கு கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தில் "விளையாட்டுப் போட்டிகள் நடந்தன.

இப்போட்டிகளில் சுமார் 30 மாநகராட்சி பள்ளிகளினின்றும் 1000-க்கும் மேற்பட்ட பள்ளிச் சிறார் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியை கனரா வங்கி நடத்தியது. இவ் வங்கியின் வட்ட அலுவலகக் கட்டடத்தில், வங்கியின் உயர் அலுவலர் திரு எம். என். கினி அவர்கள் போட்டிகள் துவங்குவதற்கான தீபத் திலை ஏற்றிவைத்தார்.

விளையாட்டுத் துறை இயக்குநர் திரு யு. எஸ். நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்தார்.

மாநகராட்சி தனி அலுவலர் திரு டி. முருகராஜ், இ.ஆ.ப. அவர்கள் தலைமை உரையாற்றினார். அவர்தம் உரையில் தேசியமயமாக்கப்பட்ட ஒவ்வொரு வங்கியும் இம்மாதிரி முன்வந்து ஒவ்வொரு பள்ளியினை ஏற்று முன்னேறச் செய்ய வேண்டும் என்றார்.

காவல் துறையின் உயர் அலுவலர் திரு என். பாலசந்திரன், ஐ.பி.எஸ்., அவர்கள் மாணவ மாணவியரின் அணிவகுப்பில் சிறந்த அணியைத் தேர்ந்தெடுத்தார்.

மாண்புமிகு தமிழக ஊரகத் தொழில் அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றி பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

மாநகராட்சி ஆணையாளர் திருமதி. யாஸ்மின் அஹமத் அவர்களும் விழாவில் கலந்து கொண்டார்.

இவ்வரிய வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி பல போட்டிகளில் வென்று அதிகபட்ச மதிப்பெண்களைப் பெற்ற மாநகராட்சி நுங்கம்பாக்கம் பெண்கள் உயர் நிலைப் பள்ளி சிறந்த பள்ளிக்கான பரிசினைத் தட்டிச் சென்றது. சிறந்த விளையாட்டு வீரனாக மாணவன் முரளிகுமாரும் (நுங்கம்பாக்கம் ஆண்கள் உயர் நிலைப் பள்ளி) சிறந்த விளையாட்டு வீராங்கனையாக மாணவி ரமாமணியும் (நுங்கம்பாக்கம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி) சிறப்பிக்கப்பட்டனர்.



# கடற்பயணம் 1982

பாண்டிச்சேரியிலிருந்து கடலூருக்கும், கடலூரிலிருந்து நாகப்பட்டினத்துக்கும் சென்று திரும்பும் 150 மைல் கடல் பயணம் ஒன்று மார்ச் 14-ந் தேதி முதல் 18-ந் தேதிவரை மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கடல் பயணத்தில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி என். சி.சி. இயக்குநரகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டார்கள். பாண்டிச்சேரிக்கும், நாகப்பட்டினத்துக்கும் இடையே உள்ள தூரம் 75 கடல் மைல்களாகும்.

இந்தப் பயணத்தில் 27 அடி நீள பாய்மரக் கப்பல் ஒன்று பங்கேற்கிறது. பாண்டிச்சேரி. நாகப்பட்டினம் துறைமுக அதிகாரிகள் இதற்கு உதவி செய்தார்கள். என்.சி.சி. இயக்குநரகத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாணவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

கடல் பயணம் என்பது வீரதீரப் பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது என்.சி.சி. பயிற்சிகளின் முக்கிய அம்சமாகும். இத்தகைய கடல் பயணத்தை ஆண்டுதோறும் பாண்டிச்சேரி-கடலூர் இடையே நடத்திவந்தனர். இந்த ஆண்டு தூரம் அதிகமாக்கப்பட்டுள்ளது. கடக்க வேண்டிய மைல்கள் 150 ஆகும்.

# நோபல் பரிசின் கதை

உலகம் தழுவிய மிகப்பெரிய பரிசுகளுள் ஒன்று நோபல் பரிசு. இதை ஏற்படுத்தியவர் டாக்டர் ஆல்பிரட் நோபல் என்ற ஸ்விட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானி. டைனமைட்டைக் கண்டுபிடித்தவர் இவர் தான். இதன் மூலம் இவருக்குப் பெரும் செல்வம் கிடைத்தது. இறுதி வரை திருமணமே செய்து கொள்ளாமல் பிரம்மச்சாரியாகவே வாழ்க்கை நடத்திவந்த இவர், தனது சொத்துகளை நல்ல வழியில் செலவு செய்ய விரும்பினார்: அதைக்கொண்டு அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தினார். இந்த அறக்கட்டளை ஆண்டுதோறும், ஐந்து துறைகளில் சிறந்தவர்களுக்குப் பரிசு வழங்கி கௌரவிக்கிறது. அவை: துறைகள், இரசாயனம்; பௌதிகம், உடற்கூறு அல்லது மருத்துவம், இலக்கியம், சமாதானப் பணி, ஆகியவையாகும்.


டாக்டர் நோபல் 1833-ல் பிறந்தார். 1896-ல் தனது 63-ஆம் வயதில் காலமானார். இதன் பின்னர் 5 ஆண்டுகள் கழித்து 1901 முதல் இப்பரிசு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் அல்லது நவம்பரில் பரிசு பெறுபவர்களது பெயர்கள் அறிவிக்கப்படுகின்றன. டிசம்பர் 10-ஆம் தேதி [illegible] காலமானார்.

ஒவ்வொரு பரிசும் சுமார் 15,000 பவுன் மதிப்புள்ளவை. இந்நிதியில் இப்போது இருக்கும் தொகை சுமார் 4,12,000 பவுன்கள் ஆகும்.

இப்பரிசைப் பெற்றவர்களுள் மிகவும் இளையவர் சுங் தேவ்லீ என்ற சீனாவைச் சேர்ந்த விஞ்ஞானிதான். இவர் தன 30-ஆம் வயதில் இப்பரிசைப் பெற்றார். இரண்டு முறை இப்பரிசைப் பெற்ற ஒரே ஒருவர் மேடம் க்யூரி.

நோபல் பரிசைப் பெற்ற இந்தியர்கள் : 1. கீதாஞ்சலிக்காக ரவீந்திரநாத் தாகூர். 1: ராமன் விளைவுக்காக சர். சி. வி. ராமன் 3. பிறப்பணுக்கள் ( Genes ) பற்றிய ஆராய்ச்சிக்காக கொரானா (இவர் இந்தியாவில் பிறந்து பின் அமெரிக்கா சென்றவர்), 4. அமைதிப் பணிக்காக அன்னை தெரசா (இவர் வெளி நாட்டில் பிறந்தாலும், இந்தியாவுக்கு வந்து, இங்கு மக்களுக்குத் தொண்டு செய்து இந்தியராகவே ஆனவர்).

—பி. சலாவுத்தீன்
12-ஆம் வகுப்பு
புனித அந்தோணியார்
மேல்நிலைப்பள்ளி
வேளிப்பாளையம், நாகப்பட்டினம்




## நூலின் தொண்டு

அறியாமை இருளை நீக்கி
அறிவெனும் ஒளியைச் சிந்தும்;
தெரியாத புதுமை எல்லாம்
தெரிவித் தின்பம் நல்கும்;
புரியாத தத்து வங்கள்; பின்னும்
புரிந்திட வைக்கும் செல்லாம்
திரியாத மனத்துக் கெல்லாம்
தெம்பினை நித்தம் சேர்க்கும்;


சென்றநாள் மன்னர் வாழ்வைச்
செம்மையாய் விளக்கச் செய்யும்;
குன்றுகள், ஆறு, காடு
குடிபுகு மக்கள் பண்பை
நன்றுற எடுத்துச் சொல்லும்;
நலமெலாம் நாளும் கூட்டும்;
மன்றிலே பேச தற்கு
மேற்கோள் ஈந்தே காக்கும்;

மண்முதல் விண்ணைப் பற்றி
மலர்ந்துள ஆய்வுச் சேதி
பண்முதல் தாளம் ஈறாய்
படர்ந்துள நாத கீதம்
கண்மணி, முக்கு, முளை
காவியப் பனுவல் மற்றும்
எண்முதல் எழுத்தெல் லாமும்
இயம்புதல் நூலின் தொண்டே!


கே. அனிதா
மேல்நிலை முதலாண்டு,
அறிவியல் பிரிவு,
பெண்டிக் பெண்கள் மேல்நிலைப் பள்ளி
வேப்பேரி,
சென்னை



"APPU" THE MASCOT FOR IX ASIAN GAMES DELHI-1982



"APPU" THE MASCOT FOR IX ASIAN GAMES DELHI-1982



"APPU" THE MASCOT FOR IX ASIAN GAMES DELHI-1982

# நேருவின் கனவு நனவாகிறது


"நம் நாட்டின் தேசிய உடல் தகுதியை வளர்ப்பது நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்.....

நமது இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் அவசியமானவை. நம் நாட்டு இளைஞர்களுடைய வளர்ச்சிக்கும் நட்பு முறையில் போட்டியிடவும், நம் நாட்டில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது அவசியம் நமக்கு விளையாட்டு மிக முக்கியமானதாக இருக்கிறது. ஏனெனில் நாம் இதுநாள் வரை இதனை ஒதுக்கி வந்திருக்கிறோம்.

—ஜவஹர்லால் நேரு.


அகில உலக விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு தேசத்து இளைஞர்களை ஒன்று சேர்க்க உதவுவதுடன், தோழமையும், ஒத்துழைப்பும், வளர்வதற்கு உதவுகிறது என்று முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டியைத் துவக்கி வைத்தபோது, விளையாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அதில் இளைஞர்கள் பங்கேற்பதின் முக்கியத்துவம் குறித்தும் நேரு அவர்கள் தமது உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

ஆசிய நாடுகளிடையே கலாசாரப் பரிவர்த்தனை ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. விடுதலைக்குப் பின்னர் இந்நாடுகள் இதனை அரசியல்—பொருளாதார வளர்ச்சி மூலம்





# Jawaharlal Nehru Stadium



*Model of the Jawaharlal Nehru Stadium which will be the Main Athletic Stadium for the Games*

மேலும் பலப்படுத்த எண்ணினார்கள். இதில் இளைஞர்களுக்குப் பெரும் பங்குண்டு. பல நாட்டு இளைஞர்கள் ஒன்று சேர தகுந்த இடம் விளையாட்டு அரங்கம் என்று கருதப்பட்டது. இதனை மனத்தில் கொண்டு பல்வேறு நாட்டு இளைஞர்கள்ஒன்று கூடி ஒருமனத்தினராய் முடிவெடுத்தனர். இதன் அடிப்படையில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் உருவானதுதான் இந்த முதல் ஆசிய விளையாட்டுப் போட்டி. கடும் எதிர்ப்புகள் இருந்தும், நேரு அவர்களின் உற்சாகமும், ஊக்கமும், உறுதுணையும்தான் ஆசிய விளையாட்டுப் போட்டிக்குப் புத்துயிர் வந்தது என்றால் அது மிகையாகாது...

முதல் ஆசிய விளையாட்டுப் போட்டியில் 11 நாடுகள் கலந்து கொண்டன. 6 வகையான விளையாட்டுப் போட்டிகள் மட்டும் நடத்தப்பட்டது. இதில் சுமார் 500 பேர் கலந்து கொண்டனர். ஆரம்ப விழா எல்லோரும் மனமகிழும் வண்ணம் கோலாகலமாக நடந்தது.

30 ஆண்டுகளில் கழித்து மீண்டும் இந்தியாவில் புதுடெல்லியில் 9வது ஆசிய விளையாட்டுப் போட்டி துவங்க உள்ளது.

இதில் 30 நாடுகள் கலந்து கொள்கின்றன. 21 வகையான போட்டிகள் நடைபெறும். 5,000 பேர் இதில் கலந்து கொள்வர்.

9வது ஆசிய விளையாட்டுப் போட்டி இந்தியாவிலேயே மிகப் பெரிய விளையாட்டு மைதானமான ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நடைபெறும். இந்த மைதானத்தில் 75,000 பேர் அமர்ந்து பார்க்கலாம். எங்கும் ஒளி மயமாகத் திகழ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வண்ணத் தொலைக்காட்சியும் செயல்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

9 மீட்டர் உயரம் 23 மீட்டர் அகலத்தில் உள்ள அறிவிப்புப் பலகை [மின்வசதியில் தானியங்கி முறையில்] (Electtoric Computer System) இயங்கும். ஒரே சமயத்தில் ஆங்கிலத்திலும் இந்தியிலும் முடிவுகள் வெளியிடப்படும்.

உள்ளூர் மற்றும் வெளியூர் பத்திரிகையாளர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது. யமுனை நதிக்கரையில் ராஜ்காட் அருகே உலகிலேயே மிகப் பெரிய விளையாட்டு. மைதானம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. 25,000 பார்வையாளர்கள்/அமர்ந்து பார்க்க வசதி செய்யப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானம் 17 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. விளையாட்டு வளர்ச்சிக்காகப் பாடுபட்ட நேரு பெயர் இதற்குச் சூட்டப் பட்டுள்ளது.

உலக விளையாட்டு வீரர்கள் அனைவரும் இந்த மைதானத்தில் தோழமை உணர்வுடன் போட்டியிடுவார்கள். அச்சமயம் நேரு அவர்களின் கனவு [illegible] வேறும் என்பதில் [illegible]

## வண்ணத் தொலைக்காட்சியில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

இவ்வாண்டு. நவம்பர்—டிசம்பர் மாதங்களில் துவங்கவிருக்கும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு போதிய விளம்பரம் அளிப்பதற்காக பிரம்மாண்டமான ஏற்பாடுகளை மத்திய செய்தி-ஒலிபரப்பு அமைச்சகம் செய்து வருகின்றது.

விளம்பரம் மற்றும் பத்திரிகையாளர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைப் பத்திரிகைத் தகவல் அலுவலகம் கவனிக்கின்றது. ஆசிய விளையாட்டுப் போட்டிகளை வண்ணத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகளை தொலைக்காட்சி பிரிவு செய்து வருகின்றது. நாட்டின் உள்ளேயும் வெளியிலும் விரிவான விளம்பரங்களை அகில இந்திய வானொலி செய்யும். பத்திரிகைகள் மற்றும் பிரச்சார சாதனத்துறைகளுக்குப் புகைப்படம் எடுக்க வசதிகள் புகைப்படப் பிரிவு செய்து கொடுக்கும். திரைப்படப் பிரிவு முழுநீள திரைப்படம் ஒன்றைத் தயாரிப்பதோடு, இந்திய செய்திப்பிரிவு. மற்றும் துண்டுப் படங்கள் வாயிலாக பிரச்சாரத்தை கவனிக்கும்.

# தமிழ் நாட்டில் தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள்


க. ச. லோகவிநாயகம்
தலைமைப் பொறியாளர்
நெடுஞ்சாலை — கிராமப்பணித்துறை


மக்கள் தொகையில் எழுபத்தைந்து விழுக்காடு கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். சிறு தொழில்களும், பெருந்தொழில்களும் பெரும்பாலும் நகர்ப்பகுதிகளிலும், புறநகர்ப் பகுதிகளிலும் அமைவதால், கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு மிகவும் குறைவாகவே கிடைக்கின்றது. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை அளிக்கும் முக்கிய சாதனமாக விவசாயம் ஒன்றே விளங்குகின்றது. ஆனால், குறிப்பிட்ட காலத்தில்தான் இது பயன்தருகின்றது. மக்களின் நிரந்தரத் தேவைகளை ஆண்டு முழுவதும் இது பூர்த்தி செய்யவில்லை. இதன் விளைவாக நகரங்களை நோக்கி கிராமங்களிலிருந்து ஏற்படும் குடிபெயர்த்தலால் நகரங்களின் மக்கட்தொகை பெருகி எண்ணற்ற பிரச்சினைகள் உருவாகின்றன. போதுமானதும், அதற்கு மேலாகவும் உணவுத் தானியங்களை நாடு உற்பத்தி செய்யினும், குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு இரண்டு வேளைக்காவது தொழிலாளர்களுக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. இத்தகைய கிராமப்புற சூழ்நிலையை மனத்தில் கொண்டே, கிராமத் தொழிலாளர்களின் இனிய வாழ்க்கைக்குகந்த பல்வேறு வேலை வாய்ப்பு வசதிகளை அரசு உருவாக்கி வருகின்றது.

பொதுப்பணிகள் பராமரிப்பதற்காகச் செலவிடப்படும் மாநில அரசின் நிதி பற்றாக்குறையை ஈடு செய்ய,''வேலைக்கு உணவுத் திட்டத்தை'' 1977ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்திய அரசு ஏற்படுத்தியது. துவக்கத்தில் அது முனைப்பாகச் செயல்படவில்லை. இருப்பினும் 1978-79 ஆம் ஆண்டு முதல், நல்லதொரு வரவேற்பும், செயல்முறையில் முன்னேற்றமும் ஓரளவிற்கு அதிகரித்தது. அந்த ஆண்டிற்காக 10 இலட்சம் டன் கோதுமையையும் ஒதுக்கீடு செய்தது.

இத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களாவன:—

(1) வேலை யற்றோருக்கும், போதுமான வேலையில்லாதோருக்கும், வருமானத்தைப் பெருக்குகின்ற வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், அதன் விளைவாக அவர்களின் உணவுத் தரத்தை மேம்படுத்துதல்.

(2) நீண்ட காலம் பயன்தரும் சமூக சொத்துக்களை (வளங்களை) உருவாக்குதல், ஊரக அடிப்படை வசதிகளை வளப்படுத்தி அதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துதல், கிராம வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்

(3) உபரி உணவுப் பொருட்களை மக்களின் மேம்பாட்டிற்காக உபயோகப்படுத்துதல்

சிறுபாசனம், வெள்ளப்பாதுகாப்பு,நிலநீர்ப்பாதுகாப்பு வளங்களை உருவாக்குதல், சாலை ஓரம் மரங்களை நடுதல் வாய்க்கால் வெட்டுதல், நீர்நிலை தூரெடுத்தல், மாநிலச் சாலைகள் அமைத்தல், பழுதுபார்த்தல், வனச்சாலைகளையும் கால்வாய்க் கரைச் சாலைகளையும் அகலப்படுத்துதல், மேம்பாடு செய்தல், பள்ளிக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், குடி நீர்க் கிணறுகள் அமைத்தல்,கிராமக் குளங்களைச் சீரமைத்தல் போன்ற பல்வேறு துறையைச் சார்ந்த பணிகள் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல் படுத்தப்படுகின்றன.



மேலும் திட்டப்பணிகள், திட்டத்திற்கப்பாற்பட்ட பணிகள், பராமரிப்புப் பணிகள், புதிய பணிகள் ஆகியவைகளையும் சேர்க்கும் வண்ணம் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. ஊரக அடிப்படை வசதிகளை வளப்படுத்தும் சமூக சொத்துக்களைப் (வளங்களை) பெருக்குதல், உற்பத்தித் திறனை உயர்த்துதல் ஆகிய உள்நோக்கங்களைக் கொண்டு இப்பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

ஒரு தனிமனிதனுக்கென்றில்லாமல் ஒரு சமூகம் அனைத்திற்கோ ஒரு சமூகத்தின் பெரும்பான்மையினருக்கோ பயனளிக்கக்கூடியதாயும், நீண்ட காலம் உதவக்கூடியதாகவும், உள்ள பணியே ஒரு நிலையான சொத்தாகக் கருதப்படுகிறது. சிறுபாலங்கள், பாலங்கள் இன்றி அமைக்கப்படும் கச்சா சாலைகள், நிலையான சொத்தாக ஏற்கப்படமாட்டா. அதே சமயத்தில் இத்திட்டத்தின் கீழ் நீண்ட தார் சாலைகள் போடுதலும் இயலாது. இருப்பினும் செய்யப்படும் ஒவ்வொரு பணியும் நீண்ட நிலையான பயனைத் தரக்கூடியதாக அமையுமாறு மிகுந்த கவனம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.



மத்திய கிராம மேம்பாடு அமைச்சகத்தால் மாநிலத்திற்கு அளிக்கப்படும் உணவுத் தானிய உதவியின் நோக்கம் அதற்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள அம்மாநிலத்தின் திட்ட ஒதுக்கீட்டுக் குறிக்கு மேலாக வழங்கப்படும் ஓர் உபரி வசதியாகும்.


தொழிலாளர்களின் ஊதியத்தில் ஒரு பகுதிக்கான தொகையையும், செங்கல், சிமெண்ட், இரும்பு, ஜல்லி, மணல் ஆகியவற்றுக்கான செலவினங்களுக்கான தொகையையும் மாநில அரசு ஏற்கும். மொத்த ஊதியத்திற்கீடாகவோ அதன் ஒரு பகுதியின் மாற்றாகவோ உணவுத் தானியமாகவே அளிக்கப்படும்.

முதன் முதலாக ஓராண்டில் நான்கு மாதங்களில் அமல் படுத்தப்பட வேண்டி ஏற்படுத்திய இத்திட்டத்தின் கால அளவு, பிற்பாடு ஆண்டு முழுவதும் செய்வதற்கான வகையில் தளர்த்தப்பட்டது.

தமிழகத்தில் 1979-80 ஆம் ஆண்டிலிருந்து அரசு இத்திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. இம்மாநிலம் துய்த்த சுமார் 73000 மெட்ரிக் டன் அரிசியிலிருந்து 3892 மெட்ரிக் டன், நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையால் 1979-80ஆம் ஆண்டிற்காக உபயோகப்படுத்தப்பட்டது. இத்துறை, மண்வேலை செய்து சாலைகளையும், சாலைப் புருவங்களையும் (பெர்ம்ஸ்) பராமரித்தல் போன்ற புனரமைப்பு வேலைகளாகவும், மற்றும் மாநிலச்சாலைகள்,முக்கிய மாவட்டச் சாலைகள் ஏனைய மாவட்டச் சாலைகள் ஆகியவற்றில் தடுப்புச் சுவர், சாய்மானச்சுவர், சிறு பாலங்கள் போன்ற புதிய வேலைகளாகவும் 2107 பணிகளை, ரூபாய் 55 இலட்சம் பெறுமானமுள்ள 3892 மெட்ரிக் டன் உணவுத் தானியத்தைக்கொண்டு செய்து முடித்தது. தொழிலாளர்களுக்கு 50 விழுக்காடு தொகையாகவும் ,50 விழுக்காடு தானியமாகவும் ஊதியமாகவும் வழங்கப்பட்டது. இவ்வாறு முடிக்கப்பட்ட பணிகளின் மொத்த மதிப்பீடு ரூபாய் 110 இலட்சங்களாகும். இத்தொகையின் மூலம் சுமார் 15 இலட்சம் மனித நாட்களைத் தொழிலாளர்களுக்கென உருவாக்க முடிந்தது.

1979-80ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு, இத்துறையினரின் பராமரிப்பு வேலைக்கான செலவுத்தொகை ஆகியவற்றின் கூட்டுத்தொகை ரூ. 14.60 கோடியாகும். 3892 டன் அரிசியை உபயோகித்ததின் வாயிலாகச் சுமார் ரூ. 55 இலட்சங்களை, மாநிலம் தன்னுடைய திட்ட நிதி ஒதுக்கீட்டில் கணிசமான அளவு சேர்க்கமுடிந்தது.

1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல், இவ்வேலைக்கு உணவுத் திட்டம், தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டமாக மாறுதல் செய்யப்பட்டது. இத்திட்டத்தினால் உருவாகப்போகும் பல்வேறு வளங்களாக, கல்வி வசதியை மேம்படுத்தும் அடிப்படைத் தேவைகளைக் கிராமப்புறங்களில் பெருக்குவதற்காக நம் மதிப்பிற்குரிய தமிழக அரசு 2000 பள்ளிக்கூடங்களைக் கட்டும் திட்டத்தை அமல்படுத்தியது. அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையினரின் தொழில் நுட்ப ஆலோசனையுடன் ஒன்றியங்கள் இப்பணிகளைச் செயல்படுத்தி வருகின்றன. சுமார் ரூ. 50000-



மதிப்புள்ள ஒவ்வொரு பள்ளிக் கூடமும் இத்துறையின் மூலமாகவே கட்டப்பட்டு வருகின்றது. ஒப்பந்தக்காரர் மூலம் செய்யப்படும் வேலை முறை முனைப்புடன் கைவிடப்பட்டது. 31.1.82 முடிய சுமார் 416 பள்ளிக்கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

1981-82ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு உதவும் திட்டமாக இது கருதப்பட்டு, மத்திய மாநில அரசுகள் செலவினங்களை தம்மிடையே சமபாகங்களாகப் பிரித்துக்கொண்டன. '79-80ஆம் ஆண்டுக்கு 73,000 மெட்ரிக் டன் அரிசியையும், '80-81ஆம் ஆண்டுக்கு 60000 மெட்ரிக் டன் அரிசியையும் இத்திட்டத்திற்காக தமிழகத்தில் அமல்படுத்த மைய அரசு ஒதுக்கிடு செய்தது. '80-81ஆம் ஆண்டில், தளவாடங்கள் வாங்குவதற்கென ரூ 873 லட்சங்களையும், தொழிலாளர்களின் ஊதியமாக ரூ. 186.50 இலட்சங்களையும் அரசு ஒதுக்கியது.

தற்போதைய நிதி ஆண்டான 81-82ன் முதல் அரையாண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 14.80 கோடியில் மாநிலத்தின் பங்கு ரூ. 7.40 கோடியாகும். எஞ்சியுள்ள '81-82க்கான, மூன்றாவது காலாண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 7.40 கோடியில், ரூ. 3.70 கோடிக்கு மாநிலம் பங்கேற்கும்.

தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் '79-80 ஆண்டிலும், '80-81ஆம் ஆண்டிலும் அடைந்த முன்னேற்றம் வருமாறு:—

**தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள்**

| | விவரங்கள் | 1979-80 | 1980-81 |
|---|---|---|---|
| 1. | எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் | 42,390 | 38,226 |
| 2. | முடிவுற்ற வேலைகள் | 32,914 | 28,518 |
| 3. | உபயோகித்த அரிசி | 58,232 மெ.டன் | 47378 மெ.டன் |
| 4. | சம்பளத்தொகை ரூ. | 126.73 இலட்சங்கள் | ரூ. 195.75 இலட்சங்கள் |
| 5. | வேலையின் மதிப்பீடு ரூ. | 920.90 இலட்சங்கள் | ரூ. 872.30 இலட்சங்கள் |
| 6. | உருவாக்சப்பட்ட மனித உழைப்பு நாட்கள் | 142.04 இலட்சங்கள் | 146.75 இலட்சங்கள் |

தற்போதைய நிதி ஆண்டில் 44729 பணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் 28317 பணிகள் 31.1.82 வரை செய்து முடிக்கப்பட்டன.

வடஆர்க்காடு மாவட்டம் அய்யம்பாளையம் கிராமத்தில், தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 44547 மூலதனத்தில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளியால் 2284 மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன.



கோவை மாவட்டம், காரைமடை பஞ்சாயத்து ஒன்றியத்தில் கட்டப்பட்ட வடிகால் மற்றும் தடுப்புச் சுவர்களின் படங்களும், இத்திட்டத்தினால் உருவாக்கப்படும் வளங்களைத் தெளிவாக்குகின்றன.

இவை யாவும் ஒரு முன்மாதிரியே. எண்ணற்ற இத்தகைய பணிகள் மாநிலம் முழுவதும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. பயன்தரும் கணக்கிலடங்கா இத்தகைய செயல்முறைகள் வருங்காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.



# தஞ்சை-நெல்லையில் தந்தை பெரியார் கல்தூண்

— மருது

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரைகளில் ஒன்று தந்தை பெரியார் அவர்களின் பொன்மொழிகளைக் கொண்ட கல்வெட்டுக்கள் மாவட்டத் தலைநகர்களில் அமைக்கப்பட வேண்டும் என்பதாகும். அதன்படி தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் மாவட்டத் தலை நகர்தோறும் நிறுவப்பட்டு வருகிறது. நான்காவது நினைவுத்தூண் 9-4-1982 அன்று தஞ்சையிலும், ஐந்தாவது நினைவுத் தூண் 11-4-1982 அன்று திருநெல்வேலியிலும் திறந்து வைக்ககப்பட்டது.

**தஞ்சையில் இர்வின் பாலம் அருகில் பெரியார் நினைவுத் தூண் :**

தஞ்சையில் விழா, பரிதியப்பர் கோவில் திரு பி.கே. சவுந்திரராசன் குழுவினரின் நாயன இசையுடன் துவங்கியது.

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ச. மெய்கண்டதேவன் (இ.ஆ.ப.) அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

முன்னிலை வகித்த மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தந்தை பெரியாரின் கொள்கைகளையும் தத்துவங்களையும், ஆற்றல்களையும் இன்றைய இளைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தந்தை பெரியார் பல தலைவர்களையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் உருவாக்கியுள்ளார். பெரியார் பெண்ணுரிமைக்காகப் பாடுபட்டார். கலப்புத் திருமணம் விதவை மறுமணம் முதலியவற்றிற்காகவும் பாடுபட்டார். ஆணுக்குப் பெண் அடிமை இல்லை என்றும், மனைவி கணவனுக்கு அடிமை இல்லை என்றும் பெரியார் கூறினார்.

பெரியோர்கள், அறிவாளிகள், ஆசிரியர்கள், மாணவர்களை மதவாதிகளாக்காமல் அறிவாளிகளாக ஆக்க வேண்டும். மக்கள், தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றி பகுத்தறிவு வாதிகளாக ஆக வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நினைவுத் தூணைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு வழிகாட்டியவர் தந்தை பெரியார். ஆயிரம் ஆயிரம் ஆண்டு நிலைத்து நிற்கும் வகையில் கல்தூண் நிறுவப்படுகின்றது. மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில் சென்னையில் 95 அடி உயரத்தில் கல்தூண் நிறுவப்படும். பெரியாரின் சிந்தனைகள் அவருடைய பொன்மொழிகள் ஆயிரமாயிரம் ஆண்டு நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகக் கல் தூண் எழுப்பப்பட்டு அதில் அவருடைய பொன்மொழிகளைப் பொறித்து இருக்கிறோம். நானும் நீங்களும் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் தந்தை பெரியார்தான். நாட்டில் சிந்தனைச் சிற்பியாக இருந்து செயல்பட்டார் அவர். செயற்கரிய செய்வர் பெரியார், அந்த வகையில் பணியாற்றினார் தந்தை பெரியார். எனக்கு நானே தலைவன், நான் யாரையும் தலைவனாக ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று பெரியார் கூறினார். மூடநம்பிக்கை, குருட்டுப் பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமென்று தன்னுடைய வாழ்நாள் இறுதி வரையும் பாடுபட்டார். அறிவுக்கு மதிப்புத் தர வேண்டுமென்று கூறினார். பழக்கம் வேறு



# தமிழரசு

16-5-1982 75 காசு



சிந்தனை வேறு, அறிவுக்கும் ஆற்றலுக்கும் மதிப்புத் தர வேண்டும். எதற்கு எப்படி மதிப்புத் தர வேண்டுமோ, அப்படி மதிப்புத் தர வேண்டும். இந்த வீட்டான் அடுத்த வீட்டில் உள்ளவனை மதிப்பது இல்லை. அந்த நிலை மாறவேண்டும். இன்னமும் மதக் கலவரங்கள் நீங்கின பாடில்லை. தந்தை பெரியார் பாடுபட்டு வந்த கருத்துக்களை இந்த நேரத்தில் நினைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் ஒரே ஜாதி, ஒரே சமயம், ஒரே கூட்டம் என்று பேச வேண்டும் என்று பாரதியார் கூறினார். அதை இன்று சமுதாயம் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டிற்குத் தேவையான கருத்துக்களை துணிந்து சொன்னவர் பெரியார். சிந்திக்கத் தெரிந்தவன்தான் மனிதன். சிந்திக்க மறுப்பவன் வஞ்சகன். சிந்தித்ததைச் செயல்படுத்துபவன்தான் அறிஞன். மனித சமுதாயம் ஒன்று எனக் கருதிச் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

விழாவில் திரு நன்னிலம் அ. கலையரசன் எம்.எல்.ஏ., திரு ஏ.பி. சனார்த்தனம், எம்.பி., திரு ந. சிவஞானம், எம்.எல்.ஏ., திரு தா. வீராச்சாமி, எம்.எல்.ஏ., திரு பொ. உத்திராபதி, எம்.எல்.ஏ., திரு துரை கோவிந்தராசன் (தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்), திரு எஸ். நடராஜன் எம்.எல்.ஏ., திருமதி ச.வெ.கி. சுலோசனா சம்பத், திரு எம். ராசகோபால், திருவாரூர் திரு கே. தங்கராசு, திரு நெ. து. சுந்தரவடிவேலு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

விழா இறுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு. வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றி கூறினார்கள்.

**திருநெல்வேலியில் பொருட்காட்சி திடலின் முன்புறம் பெரியார் நினைவுத் தூண்:**

திருநெல்வேலியில் விழாத் தொடக்கத்தில் கலைமாமணி திரு சின்ன சுப்பையா குழுவினரின் நாயன இசை நடைபெற்றது. பாரதியார் நூற்றாண்டுக் குழு தனி அலுவலர் திரு சி.என். கிருஷ்ணபாரதி அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள்.

விழாவிற்கு, மாண்புமிகு கதர்-பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். என். இராசேந்திரன் அவர்கள் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தந்தை பெரியார் அவர்கள் நினைவுத் தூணைத் திறந்து வைத்துத் தலைமை யேற்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். பெரியாரின் கருத்துக்களுக்கும் சுயமரியாதைக் கருத்துக்களுக்கும் நெல்லை மாவட்டம் பக்கத் துணையாக இருந்தது. திரு கே. வி. கே. சாமி அவர்கள் பெரியாருக்கு உறுதுணையாக இருந்தார். பெரியார் நினைவுத் தூணில் உள்ள கருத்துக்கள், பெரியார் யாரென்று இளைஞர் சமுதாயம் உணரும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை எடுத்துரைக்கின்றன. மேல்நாட்டில் சாக்ரட்டீஸ் தோன்றினார். அதேபோல் இந்தியாவில் தந்தை பெரியார் தோன்றினார். மருந்து கொடுக்க வேண்டிய இடத்தில் மருந்து கொடுத்தும் அறுவை செய்ய வேண்டிய இடத்தில் சிகிச்சை செய்தும் தமிழக மக்களுக்குத் தொண்டாற்றினார். ஒரு சமுதாயம் வாழ்ந்து மற்ற சமுதாயங்கள் தாழ்ந்து இருந்ததை மாற்றி ஒரே நிலைக்குக் கொண்டு வரப் பாடுபட்டார்.

தமிழ்ச் சமுதாயம் நன்றியுடையது என்ற அடிப்படையின் வாயிலாக இவ்வாறு இங்கே நினைவுத் தூணை அவருக்கு நிறுத்துகிறது. பெரியாரின் சீர்திருத்தத் திருமணத்தைச் சட்டபூர்வமாகப் பேரறிஞர் அண்ணா ஆக்கினார். தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.

விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

தந்தை பெரியாரின் நினைவுத் தூணை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு வாழ்வு தந்தவர் தந்தை பெரியார். மானம், அறிவு ஆகியவற்றிற்கு மறு மலர்ச்சி ஏற்படக் காரணமாயிருந்தவர் தந்தை பெரியார். இந்த நாட்டிற்கு யார் யார் பாடுபட்டார்களோ அவர்களுக்கெல்லாம் இந்த அரசு விழா நடத்துகிறது. அதேபோல இங்கு தந்தை பெரியாருக்கு விழா நடத்துகிறது.

"பெரியார் ஒரு தனி மனிதரல்ல. அவர் ஒரு சகாப்தம். ஒவ்வொரு மாவட்டத் தலைநகர்களிலும் இப்படிப்பட்ட விழாக்களும், பெரியாரின் கொள்கை விளக்கக் கூட்டங்களும் நடந்து வருகின்றன.

"தந்தை பெரியார் 5-வது வகுப்புவரைதான் படித்தார்.



ஆனால் எம்.ஏ. படித்த பேரறிஞர் அண்ணா போன்ற பல தலைவர்கள் அவரது பாதையில் இருந்தனர் என்றால் பெரியாருடைய கொள்கை பிடிப்புதான் காரணம். இந்த ஆட்சிக்கு ஆணிவேர் பெரியார்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

"புத்தருடைய கருத்துக்களை எப்படி அசோகர் பரப்பினாரோ அதேபோல் இந்த அரசும் பெரியாரின் கருத்துக்களைப் பரப்பி வருகின்றது. நான் சொல்லுகிறபடி மக்கள் நடக்க வேண்டும் என்று சிறுவயதிலேயே தந்தை பெரியார் நினைத்தார். அதேபோல தன்னுடைய வாழ்நாளிலும் வாழ்ந்து காட்டினார். சமுதாயத்தில் நச்சுச் செடிகளை அகற்றியவர் பெரியார்.

"மக்கள் சிந்திக்க வேண்டும், சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார் பெரியார். தந்தை பெரியாரை அன்று எதிர்த்தார்கள். இன்று பாராட்டிப் பேசுகிறார்கள். சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஊட்டியவர் பெரியார். இந்த நூற்றாண்டின் தலைசிறந்த அறிவாளி தந்தை பெரியார்.

எப்பொருள் யார் யார் வாய்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

என்று சிந்தித்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

விழாவில் திரு எம். ராசகோபால், புலவர் இந்திரகுமாரி, ச.வெ.அ. வள்ளிமுத்து, எம்.எல்.சி. திருவாரூர் கே. தங்கராசு, திரு ஆலடி அருணா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

மொத்தத்தில் நினைவுத் தூண் திறப்பு விழா, நினைவை விட்டு அகலாத விழாவாக அமைந்து விட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.





தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா 28.4.82 அன்று சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள கல்வி இயக்கக வளாகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் பல்கலைக் கழகக் குழுவின் தலைவர் டாக்டர் திருமதி மாதுரிஷா திறந்து வைத்தார்.



மேதகு [illegible] அலி 5.5.1982 அன்[illegible] தறிக் கண்கா[illegible] தந்த பொழுது [illegible] துணிகளைப் பார்[illegible] டார். படத்தில் [illegible] டெக்ஸ் ஆலோசனை[illegible] தலைவர் அ[illegible] திரு சி. இராமலி[illegible] எம்.எல்.சி. அவர்[illegible] தனி அலுவலர் திரு [illegible] நாதன் அவர்க[illegible] காணலாம்.

[illegible]புரத்தில் 19.4.82 அன்று அரசினர் ஆதிதிராவிட [illegible] மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை [illegible] விஜயசாரதி அவர்கள் திறந்து வைத்தார்.





# நல்வழி காட்டும் பல்கலைக் கழகம்

## மேதகு ஆளுநர் திரு. சாதிக் அலி

இந்தப் பல்கலைக் கழகம்- இந்த நூற்றாண்டில் தோன்றிய மிகப் பெரிய கவிஞர்-அருஞ் சிந்தனையாளர் - செயல் வீரர்- பாரதிதாசனின் பெயரைத் தக்க வகையிலே சூட்டிக் கொண்டிருக்கிறது.

பல நம்பிக்கைகள் இந்தப் பல்கலைக் கழகத்தில் மையம் பெறுகின்றன. பல்கலைக் கழகத் துணைவேந்தரும், அவரது சகாக்களும் மாணவப் பெருமக்களும் மாநில அரசின் உதவியினாலும்- ஒத்துழைப்பினாலும் -புதிய பல்கலைக் கழகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உருவாக்க -நமது மக்களின் சமூக-பொருளாதார-பண்பாட்டு உணர்வுகளுக்கு முக்கியமான தொண்டுகளைச் செய்ய இயலும்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஒருவர், பல்கலைக் கழகத்தின் செயல்முறைகளையும் அவசியத்தையும் எண்ணிப் பார்ப்பது தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது. பல்கலைக் கழகம் நமது கல்வியாளர்களாலும் மற்றவர்களாலும் அவ்வப்போது உருவாக்கப்பட்டு வந்திருக்கிறது. உயர்ந்த அறிவிற்காகவும் -உண்மையைத் தேடும் பணிக்காகவும் நிலைபேறுடைய கொள்கைகளைக் காப்பதற்காகவும் ஒரு காலத்தில் பல்கலைக் கழகங்கள் மதிக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களும் கல்வி கற்றுத்தருவோர்களும் கல்வி சம்பந்தமான பணிகளிலேயே ஈடுபடுத்தப்பட்டார்களே தவிர, சாதாரண ஆடவர், பெண்டிர் ஆகியோரது வாழ்க்கைப் போராட்டத்தில் உள்ள கரடுமுரடான பகுதிகளைக் காணவிடாது தடுக்கப்பட்டனர். அறிவு அறிவுக்காகவே தேடப்பட்டது. உயர் கல்வி பெற அனுசரிக்கப்பட்ட இந்த அணுகுமுறை நீண்ட காலம் நிலைக்கவில்லை.

வாழ்க்கையின் பல்வேறு களங்களையும் சந்திக்கும் ஆற்றலை ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் அளித்து, சமூகத்தை நல்ல முறையில் நடத்த -அதன் பல்வேறு பிரச்சினைகளைச் சமாளிக்க பேராற்றல் வழங்குவது கல்வியாகும். அந்தக் கல்வி, புதிய அறிவையும் புதிய சிந்தனைகளையும் வழங்க வேண்டும். அதன் வாயிலாகத்தான் நமது பண்பாடு சரியான திசை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். கல்வியாளர் உருவாவது அவசியம் தான், நல்லதும் கூட. ஆனால் நமது பல்கலைக் கழகங்கள், வாழ்க்கைப் போராட்டங்களின் பல்வேறு வகையான சவால்களை எதிர்கொள்ளும் பேராற்றலை நமது இளைய சமுதாயத்தினரிடம் உருவாக்க வேண்டும்.

புதிய பல்கலைக் கழகமாம்- பாரதிதாசன் பல்கலைக் கழகம் உயர் கல்விக்கும் நிலைத்த பணிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை உருவாக்கி புதிய களத்தை அமைக்கும். எல்லா ஆடவர்களும் பெண்களும் நல்லவர்களாக இருக்கும் வாய்ப்பை பெற்று, திருப்தியுடன், அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு வலிமையையும் முன்னேற்றத்தையும், வழங்க, புதிய சமுதாயத்தையுருவாக்குவதில் நமது நாடு எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு இந்தப் பல்கலைக் கழகம் தீர்வு காணும். புதிய சவால்கள் பெரும்பாலும் அறிவியல் ஆராய்ச்சி இயல் களத்தைச் சேர்ந்தவையாகும். நமது நிலைமைக்கு ஏற்றவாறு வழிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்றாலும் இந்தியா அறிவியலையும் பொறியியலையும் நோக்கித்தான் நடைபோடவேண்டியுள்ளது.

வறுமையையும் வேலையின்மையையும் சமாளித்து நல்ல வாழ்க்கையை அளிக்கும் வகையில் அறிவியலையும் பொறியியலையும் பயன்படுத்தி, மனிதன் தன்னைத் திருப்திப் படுத்திக் கொள்ளும் வகையில் - தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்தில்- நாட்டின் பொறுப்புள்ள - ஒளிமிக்க குடிமகனாக விளங்கும் வகையில் ஆற்றிவரும் பணிகளுக்கு நாமே பாராட்டுக் கூறிக்கொள்ள வேண்டும். நமது மனிதத் தன்மையும் சமூக அறிவியலும் நமது கலைகளும் நீதிபோதனைகளும், தெய்வீக உணர்வுகளும் இங்கே இடம் பெறுகின்றன மனிதனின் பல்வேறு வகையான தேவைகள், சமூக, தெய்வீக, போதனை உணர்வுகள் நல்லதொரு வாழ்க்கையின் இலட்சியங்களாக அமைவது குறித்து நாம் அக்கறை எடுத்துக் கொள்ளாவிட்டால் -நமது பல்கலைக் கழகங்கள் மக்களின் வாழ்க்கையைச் சரியானபடி கவனிக்காவிட்டால் நமது கல்வி முழுமையற்றதாக - திருப்தியற்றதாக ஆகிவிடும்.

அமைதி காப்பதில் தீவிர உணர்ச்சிகொண்ட சூழ்நிலை, பெருஞ்செயல்களைக் கடமையுடன் நிறைவேற்றும் திறன் ஆகியவை பல்கலைக் கழகத்தின் தேவைகள் ஆகும். நமது மாநிலம் இவற்றிற்குத் தேவைப்படும் உதவிகளைக் கட்டாயம் உருவாக்கித்தரும். ஆனால் சரியான சூழ்நிலைகளை உருவாக்கும் பணி ஆசிரியர்களையும் மாணவர்களையும் உள்ளடக்கிய கல்வியாளர்களின் தோள்களில் விழுகின்றது. சரியான சூழ்நிலைகளை உருவாக்கும் பணி அரசியல தலைமைகளின் கரங்களிலும் உள்ளது. இளைஞர்கள் தங்களின் பல்வேறு வகையான பேறுகளையும்- திறன்களையும் அறிந்து கொள்வதற்கும் - நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர்கள் பாடுபடுவதற்கும் வழிவகை காண்பிப்பதற்கே பல்கலைக் கழகம் இயங்கி வருகிறது. ஒருமித்த உணர்வுடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் செயல் பட்டால்தான் இந்தச் சாதனையைச் செய்ய முடியும்.

**(30.4.82ல் திருச்சியில் நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக் கழகத் திறப்பு விழாவில் ஆற்றிய உரையின் தமிழ் ஆக்கம்)**

பாரதி போன்ற பெருங்கவிஞர்களின் கருத்துக்கள் என்றும் முடிவடையாமல் நித்தமும் வளர்ந்து வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த அரசியல் கட்சிப் பேச்சாளரும் யார் மனத்தையும் புண்படுத்தாமல் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற தலைமைக்கு இடையூறு இன்றி தமிழ்ப் பற்றை முன் வைத்துப் பேசினார்கள். அவர்களுக்குத் தலை வணங்குகிறேன். இவ்வாறு பேசுவது, புதிய நாகரிகம் என்று சொல்வதைவிட, நமக்குத் தேவையான பண்பு என்று சொல்லலாம்.

இங்கே தொழிலாளர் தலைவர்கள் சில பிரச்சினைகளைச் சொல்லி யிருக்கிறார்கள். பாரதியாரும் தொழிற்சங்கத் தலைவராக இருந்திருக்கிறார். தொழிலாளர்களுக்காகப் பாடியிருக்கிறார்.

பாரதியாருக்கும் மற்றும் பல பெரியோர்களுக்கும் இருந்த ஒற்றுமையை இங்கு எடுத்துக் கூறினார்கள்.

நூற்றுக்கணக்கான புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொள்வதை விட, உண்மையில், இங்கே கேட்டு மகிழ்ந்திருக்கிறீர்கள் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கு பாவேந்தர் பாரதிதாசன், பாரதியார் இருவரின் உருவப் படங்களும் திறக்கப்பட்டன. யாருக்குப் பாராட்டுச் கூறுகிறோம் என்று சொல்லுவதைவிட யாருக்கு நாம் வணக்கம் செலுத்துகிறோம் என்று நினைத்தால் எதிர்காலத்திற்கு நன்மை கிடைக்கும்.

இவை எல்லாம் கட்சிக்காக நடத்தப்படும் காரியம் இல்லை. தந்தை பெரியார் அவர்களின் விழா கொண்டாடப்பட்டபோது பலர் குறை சொன்னார்கள். பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்போதும் குறை கூறுகிறார்கள்.

பாரதி விழா, தினமும் ஒரு ஊரில் நடத்தப்பட வேண்டும் என்ற முறையில் கொண்டாடப் பட்டு வருகிறது. பாரதி ஏற்றுக் கொண்ட எதிலும் நம்பிக்கை வைத்திருந்தார் அவரது தாசன் என்பதை நினைவூட்டும் விழா இது. அடுத்து நடைபெறும் பாரதி, பாரதிதாசன் விழாக்களில் இன்னும் பலரும் கலந்து கொள்ள வேண்டும். மாறுபட்ட கருத்துக்கள் இல்லாமல் நாடு இருக்க முடியாது. ஆனால் தமிழைப் பற்றி-தாய் மொழியைப் பற்றி மாற்றுக் கருத்து இருக்க முடியாது.



## மாண்புமிகு முதல்வர்

திட்டங்களை நிறைவேற்றும்போது கேள்வி கேட்கிறார்கள். பதில் சொல்கிறோம். எங்களால் முடியும் முயற்சிகளை எல்லாம் மேற்கொள்கிறோம்.

ஒருங்கிணைந்த திட்டம், தன்னிறைவுத் திட்டம் ஆகியவற்றின் கீழ், திருச்சி மாவட்டத்தில் பெரிய அளவில் சில காரியங்களைச் செய்யத் திட்டமிட்டு நிறைவேற்றுகிறோம். திட்டம் தீட்டுவது மட்டுமல்ல; அதிகாரிகள் முன் நின்று செயல்பட வைத்திருக்கிறோம். 87 லட்ச ரூபாய் செலவில் 145 பள்ளிக் கட்டடங்கள் உருவாக்கியிருக்கிறோம். ஒரு கொள்கையை உள்ளன்போடு ஏற்றுக் கொண்டுள்ளோம். ஒன்றியத்திற்கு ஒரு பள்ளிக்கூடத்திற்கு பாரதியாரின் பெயர் சூட்டப்படும்.

பாண்டித்துரைத் தேவர் பெயரில் பல்கலைக் கழகம் அமைக்கவேண்டும் என்று சொன்னார்கள். பரிசீலனை செய்து, வாய்ப்பு இருந்தால் அவ்வாறு செய்கிறோம். பல கோடி ரூபாய்த் திட்டங்கள் - மக்களுக்குத் தேவையான -அவசியமான திட்டங்கள் எல்லாம் தக்க வகையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மக்கள் தேவையை உணர்ந்து செய்ய வேண்டும் என்று அமரர் அண்ணா சொன்னார். அவரைத் தெய்வமாக வழிபடுகிறோம். அதே கருத்தைச் சொல்லிய பாரதிதாசன், பாரதியார் மற்றும் பெரியார்களை நாம் வணங்குகிறோம். மரியாதை செலுத்துகிறோம்.

சாதிகள் தேவையில்லை. மதப் பிரச்சினை தேவையில்லை. மனிதர்களாக நாம் வாழவேண்டுமென்றால் சாதி, மதப் பிரச்சினைகளை வைத்துப் பேசக்கூடாது.

என்னை தேசியத் தலைவராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தேசியம் என்ன என்பதைப் புரிந்தவன் நான். தேச பக்தி உள்ளவன்தான் தேசத்துக்கு சொந்தக்காரன்.

நம் இந்தியா, இந்தியத் துணைக்கண்டம் என்று ஏன் சொல்லப்படுகிறது? தேசியம் என்று பேசிக்கொண்டு, யார் யார் நாட்டுக்கு என்னென்ன தொண்டாற்ற வேண்டுமோ அதை விட்டுவிடக்கூடாது.

முன்பு சீனாக்காரன் படை எடுத்துவந்த போது அமரர் அண்ணா திராவிட நாட்டுப் பிரச்சினையைக் கைவிட்டுவிட்டு, இந்தியா விற்குப் பாடுபட்டார்.

மதிய உணவுத் திட்டத்தில் புதிய செயல் முறையை அறிமுகப்படுத்த இருக்கிறோம். 100 கோடி ரூபாய் செலவில் 60 லட்சம் குழந்தைகள் நன்மை பெறும் வகையில் ஒரு திட்டம் தீட்டியுள்ளோம்.

2 வயது முதல் 10 வயது வரை உள்ள பள்ளி செல்லும் ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் மதிய உணவு அளிக்கத் திட்டம் தீட்டியுள்ளோம். உணவுக்குப் பதிலாகத் தாய்மார்களிடம் பணத்தைக் கொடுத்துவிடுங்கள் என்று சிலர் ஆபத்தான யோசனையைக் கூறுகிறார்கள். அப்படிச் செய்தால் தாய்மார்கள் பணம் கிடைத்தவுடன் வேலைக்குப் போக விரும்புவார்களா?

மகளிர்க்கு வேலையைக் கொடுத்து அவர்களுக்குப் பணம் கொடுப்போம், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுப்போம். இந்த இரண்டும் ஒரு சேர நடக்க இருக்கின்றன.

பள்ளி விடுமுறைகளிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்கிறோம். அது மட்டுமல்ல - குழந்தைகளுக்கு விளையாட்டு, பண்பான, முறையான, வாழ்க்கை முறைகள் அங்கே சொல்லிக் கொடுக்கப்படும்.

இந்தத் திட்டம் தோல்வியுறாதா எனச் சிலர் நினைக்கிறார்கள். அவ்வாறு நேராமல் இருப்பதற்குத் தக்க வகையில் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவிருக்கிறோம். அதற்கென அனைத்துத் தரப்பினரும் பங்கு கொள்ளும் வகையில் மக்கள் குழுக்களை அமைக்க இருக்கிறோம். அவர்கள் தவறு நடக்காமல் கவனித்துக் கொள்வார்கள்.

உணவில்லாமல் யாரும் கஷ்டப்படக் கூடாது என்று பாரதி கூறினார். நான் 3 நாள் பட்டினி கிடந்து, கஞ்சிகூட இல்லாமல் கஷ்டப்பட்டிருக்கிறேன். பக்கத்து வீட்டிலிருந்தவர்கள் அரிசியை என் தாயிடம் கொடுத்து உணவு சமைத்துத் தருமாறு சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்ற கஷ்டங்களை எல்லாம் சிறு வயதில் அனுபவித்து உணர்ந்தவன் தான் இன்று உங்கள் முன்னர் நின்று கொண்டிருக்கிறேன். கஷ்டங்களை உணர்ந்ததனால்தான் இந்தத் திட்டங்களைத் தீட்டுகிறேன்.

இன்று பல இடங்களில் சமதர்மம் இல்லை. இருப்பதாக ஒரு பிரமை காணப்படுகிறது. ஒருவேளை மதிய உணவைச் சிறுவர்களுக்கு வழங்குவதால் வேலைக்குச் செல்வோரின் குழந்தைகளுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது. 1300 கோடி ரூபாய் வரவு வரும் தமிழக அரசுக்கு 100 கோடி ரூபாய் ஏழைக் குழந்தைகளுக்கு ஒருவேளை மதிய உணவுக்குச் செலவிடுதல் தவறா! வேறு பல திட்டங்களை நிறைவேற்றாவிட்டாலும் பரவாயில்லை; இந்தத்திட்டத்தினை நிறைவேற்றியே தீருவோம். 'நான் உழைக்கிறேன்; என் பிள்ளைகள் பத்திரமாக இருக்கிறார்கள்' என்ற நம்பிக்கையில் ஏழைப் பெற்றோர்கள் வேலைக்குச் செல்கிறார்கள். அவர்களுக்கு அமைதி-நிம்மதி வேண்டும்.

கோடீஸ்வரன் கோடீஸ்வரனாக இருந்து விடுவதில்லை. அதேபோல் ஏழையும் ஏழையாகவே இருந்துவிடுவதில்லை. காலம் மாறும் போது சரித்திரம் மாறுகிறது. இதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

இங்கே ஜாதி -மதம் பற்றிச் சொன்னார்கள். எல்லா மதத்திலும் கொலைகாரர்கள் இல்லையா-கொள்ளைக்காரர்கள் இல்லையா? நீதிபதி இல்லையா? நல்லவர்கள் இல்லையா? எந்த மதத்திலும் நல்லவர்-தீயவர் இருக்கத்தான் செய்கிறார்கள். சிலர் சூரியனைத் தெய்வமாக வணங்குகிறார்கள்; சிலர் சந்திரனை வணங்குகிறார்கள்; சிலர் தங்களின் மனத்தில் எதை தெய்வமாக ஏற்றுக் கொள்கிறார்களோ-யாரை வணங்கவேண்டும் என்று நினைக்கிறார்களோ- விரும்புகிறார்களோ அவர்களை வணங்குகிறார்கள்.

மனிதன் கஷ்டம் தீர்க்க - புனிதப் பணி செய்ய ஒன்றுபட்டாக வேண்டும். அதற்காக இப்படிப்பட்ட பெரியார்களின் பிறந்தநாளை ஆண்டு தோறும் கொண்டாடுகிறோம்.

தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை நன்கு படிக்க வைக்க வேண்டும். பெண்கள் இப்போது நன்றாகப் படிக்கிறார்கள். ஆண்கள் சற்றுப் பின்தங்கி விடுகிறார்கள். சமத்துவம் என்பது அறிவிலும் இருக்க வேண்டும். அதில் வேற்றுமை ஏற்பட்டால் தீமை நேர்ந்து விடும். எனவே அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பாரதியும் பாரதிதாசனும் யாருக்குச் சொந்தம்? தமிழ்நாட்டுக்கு மட்டுமா? இந்தியாவுக்கு மட்டுமா? உலகத்திற்கே சொந்தம்! வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர் வாழிய பாரத மணித்திரு நாடு என்று சொல்லிச் சென்றார் பாரதி. அவர் வாழ்ந்த திருநாடு இது என்கிறோம்.

தேசம் என்றால் அதன் உறுப்புகள் எல்லாம் நல்லபடியாக இருக்க வேண்டும். ஒரு பக்கம் வறுமை, ஒரு பக்கம் வளமை என்ற நிலை கூடாது. எந்த மாநிலமும் பின்தங்கி விடுமானால் அந்த நாடு முன்னேற முடியாது என்று சொல்லிவிடலாம். எந்த ஒரு மாநிலத்திலும் மொழிப் பிரச்சினையில் அது பின்தங்கிவிட்டால் அந்த நாடு முன்னேற்றம் அடைந்ததாகக் கருத முடியாது.

இளைஞர்கள் அனைவரும் ஜாதி வேற்றுமைகளைக்களையும் படி சொன்னார் பாரதி. அதைத் தொடர்ந்து சொன்னார் பாரதிதாசன். சாதிப் பெயரைத் தயவு செய்து அறவே ஒழித்துவிடுங்கள். பள்ளிக் கூடங்களுக்கு கூட ஜாதிப் பெயரை வைப்பது நல்லதல்ல. தங்களுக்குப் பிடித்தமான தலைவர்களின் பெயரைச் சூட்டுங்கள். தந்தை-தாய்-முன்னோர்கள்-ஆசான் இப்படி எவரது பெயரையேனும் சூட்டுங்கள். எதை வேண்டாம் என்று சொல்கிறோமோ அதை அந்தப் பள்ளியே தனது பெயரில் தாங்கிக் கொண்டிருந்தால் அது நாட்டுக்கு நன்மை தராது.

பெண் பதவி பற்றி பாரதியார் குறிப்பிட்டார். இன்று இந்திய நாட்டின் பிரதமராக இருப்பவர் ஓர் அம்மையார்தான். தமிழகத்தில் 4 மாவட்டங்களில் பெண்கள் மாவட்ட ஆட்சியாளராக இருக்கிறார்கள். பாரதியார் இப்போது இருந்திருந்தால் இதைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தாய்மார்களுக்கு ஒரு வேண்டுகோள். நீங்கள் உங்கள் பிள்ளைகளை நன்றாகப் படிக்கவையுங்கள். அவர்களிடம் அக்கறை காட்டி அவர்களைக் கட்டுப்பாட்டுடன் வளர்த்து, நாகரிகத்தில் முதிர்ந்தவர்களாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக பிரச்சினைகளுக்குப் போராட்டம் தேவையில்லை, மனப்போராட்டம்தான் தேவை, அதாவது பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

**(திருச்சியில் 29.4.'82ல் பாரதி நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**

## நான்காவது அட்டையில்

**வி**டுதலைப் போராட்டத்தில் முழுமூச்சோடு ஈடுபட்டு, திருத்தணி தமிழகத்தோடு இணைந்திட முழுமுதற் காரணமான மாண்புமிகு மேலவைத் தலைவர், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்களுக்கு திருத்தணி பேரூராட்சி மன்றத்தின் அருகே அமைக்கப்பட்ட திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் (28.4.'82ல்) திறந்து வைத்துப் புகழ்மாலை சூட்டினார். இவ்விழாவையொட்டி பழைய தருமராஜா கோயில் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

கடல்போல் மக்கள் அலை மோதிய இக் கூட்டத்தில் சிலை அமைப்புக் குழுத் தலைவர் கோல்டன் சுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் சிலம்புச் செல்வர் அவர்களின் சிறப்பியல்புகள் பற்றி தமிழரசுக்கழகப் பொதுச் செயலாளர் திரு. சின்னையன், தவத்திரு பேராயர் அடைக்கலம் காந்திகாமராஜ்தேசிய காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. குமரி ஆனந்தன், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு நெடுமாறன், ராஜா சர் முத்தையா செட்டியார், தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் கட்சிச் செயலாளர் திரு. கிருஷ்ணசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு, மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

திருத்தணிசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தேவஸ்தானம் சார்பிலும், குன்றக்குடி அடிகளார் சார்பிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் சிலம்புச் செல்வர் அவர்களுக்கும் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன. திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சண்முகம், மயிலை கபாலீஸ்வரர் கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. குப்புசாமி, திரு ஈ. எஸ். தியாகராசன் ஆகியோரும் பொன்னாடை போர்த்தினர். பல்வேறு அமைப்புகளின் சார்பில் மாலைகள் அணிவிக்கப் பட்டன. சிலையினை அழகுறச் செய்த திருஜெயராமன் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு மேலவைத் தலைவர், சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் உரையாற்றினார்.

கலைவை அ.கோபாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**பா**வேந்தர் பல்கலைக் கழகம் தமிழக மக்களின் ஆசியுடன் இன்று தொடங்கப்படுகிறது. ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க, தாய் என்னென்ன சிரமப் படுவாளோ அதேபோல, தமிழக அரசு, தமிழக மக்களின் ஆதரவில், தொல்லைகளை எல்லாம் மறந்து இது போன்ற நல்ல நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வருகிறது. நேற்றும் இன்றும் நடைபெறுகிற நிகழ்ச்சிகளைக் கண்டு மக்கள் என்ன நினைப்பார்கள் எவரு என்னால் நிச்சயமாக எண்ணிப் பார்க்க முடிகிறது. நாட்டுக்கு என்னென்ன நல்ல பயனுள்ள பணிகளைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்கிறோம் என்பதைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

பெண்களுக்காகத் தனிப் பல்கலைக் கழகம் தொடங்க உறுதி பூண்டு அதனைக் கொடைக்கானலில் தொடங்க இருக்கிறோம். கொடைக்கானலில் தொடங்குவதற்கு முக்கியமான காரணம் உண்டு. வேறு இடம் இல்லையா என்று சிலர் கேட்கலாம். இந்தியத் துணைக் கண்டத்துடன் மட்டும் நின்று விடப் போவதில்லை அந்தப் பல்கலைக் கழகம் உலகளாவிய அளவில் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள விரும்பும் வகையில் - உலக மக்கள் எல்லாம் தொடர்பு கொள்ளும் பல்கலைக் கழகமாக அது உருவாக வேண்டும் என்பதால் அதனைக் கொடைக்கானலில் உருவாக்க விரும்புகிறோம்.

அடுத்த ஆண்டிலாவது காரைக்குடியில் பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும் என்ற நீண்டநாள் வேட்கை நிறைவேறும் என எண்ணுகிறேன். அதுபோல் நெல்லை மாவட்டத்திலும் சேலம் மாவட்டத்திலும் பல்கலைக் கழகங்கள் தொடங்க வேண்டும் எண்ணும் தீராத வேட்கையை நிச்சயம் நிறைவேற்றி ஆக வேண்டும் என்ற உறுதியைக் கொண்டிருக்கிறோம்.

மாணவர்களை விட மாணவியர் அக்கறையோடு படிக்க முயல்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகி வருகிறது.

நான் எனது கடமைகளை விரைவாகச் செய்ய வேண்டும் என்று கருதுகிறேன். என்னை முதல்வராக ஏற்று ஆட்சியை அமைக்கச்செய்த மக்களை ஏமாற்றாமல் என் கடமைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும்.

இந்தத் திடலில் பந்தல் போடலாம் என்று சொல்லப்பட்டது. அந்தச் செலவு தேவையில்லை; வெட்ட வெளியில் வெயில் இல்லாத நேரத்தில் விழா நடத்துவோம், காற்றும் வரும்; வெயில் நேரத்து நிகழ்ச்சிகளை தியாகராசபாகவதர் அரங்கில் நடத்திக் கொள்வோம் என்று நான் சொல்லி அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் பல லட்சம் மக்கள் பகல் நேரத்து நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பை இழந்துவிட்டார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திருச்சி-பொன்மலை - ஸ்ரீரங்கம் குடிநீர் சாலை-யின் வசதிக்காக 70 லட்ச ரூபாய் அரசு அனுமதி அளித்துள்ளது. கிராமப் புறங்களில் மின்சாரம் கிடைக்கத் தடை ஏற்பட்டால் அதற்குச் சரியான காரணங்களைக் கேட்க அதிகாரிகளைச் சென்னையிலிருந்து அனுப்பி,கிராம மக்களிடம் நேரில் கேட்டறிய இருக்கிறேன்.

100 கோடி ரூபாய்க்கு பள்ளிச் சிறுவர்களுக்கு இலவச மதிய உணவு அளிக்கப்படும் திட்டத்தை இன்று இந்தியாவே கவனித்துவருகிறது. அதனை நகல் எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பிவையுங்கள் என்று மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே பண்பு வளரவேண்டும் என்பதற்குத்தான் இது போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. என் பெயரில் உள்ள பள்ளிக் கூடத்தில் பல்லாண்டுகளுக்கு முன்பேயே சீருடைத் திட்டத்தை அறிமுகப் படுத்த எண்ணினேன். ஒரு குழந்தை சில்க் சட்டையும் மற்றொரு குழந்தை சாதாரண சட்டையும் அணியும் போது சில்க் சட்டையைத் தொட்டுப்பார்த்து அதன் மென்மையை - பளபளப்பை-உணர்ந்து



# வேர் நிலைத்தால்தான் மரம் நன்கு வளரும்

—மாண்புமிகு முதல்வர்

அது போன்ற சட்டை வேண்டும் என்று அந்தக் குழந்தை தன் பெற்றோர்களைக் கேட்கும் போது ''அவர்கள் பணக்காரர்கள்; நாம் ஏழைகள்'' என்று தாய் தந்தையர் சொல்லும் பதிலிலிருந்து, ஏழை பணக்காரர் என்ற வேற்றுமை சொல்லிக் கொடுக்கப்பட்டுவிடுகிறது. வேற்றுமை உணர்வை குழந்தை உள்ளத்தில் அப்போதே ஏற்படுத்தி விடுகிறோம். ஆனால் சீருடை என்றால் வித்தியாசமான உணர்வு வருவதில்லை.

நல்ல பணிகளுக்கு நாம் செலவு செய்ய தாராளமாக முன்வரவேண்டும். 2 அல்லது 3 கட்சிகள் சேர்ந்து ஆட்சியை அமைத்திருந்தால் எப்படிப்பட்ட நிலை வந்திருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். பல்கலைக் கழகத்திற்கு 'பாரதிதாசன்' பெயரை வைக்க வேண்டும் என்று சொல்ல, மற்றொருவர் 'வேண்டாம்' என்று சொன்னால், என்ன ஆகும்?

பல்கலைக் கழகங்களை அமைப்பது மட்டுமல்ல, அங்கே மாணவர்கள் எப்படி வளரவேண்டும் என்ற திட்டத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும். நமது தமிழ்நாட்டில் 2% பேர்தான் கல்லூரிக்குச் செல்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. கேரளத்தில் மிக அதிகமான அளவில் செல்கிறார்கள். நம்மை விடச் சிறிய மாநிலமான கேரளம், கல்வியில் மிகவும் முன்னேறியிருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். கல்விக்கு நாம் செலவிடும் தொகை விழலுக்கு இறைத்த நீராகிவிடக் கூடாது.

இன்று காலையில் பல்கலைக் கழக வளாகத்தில் மாணவ, மாணவியர் உற்சாகத்துடன் மரம் நடும் பணியில் ஈடுபட்டனர்; அதனைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

15 ஆண்டுகளுக்குப் பிறகு 1 கோடி மரம் வளர்க்கப்பட்டுவிட்டால் திருச்சி மாவட்டம் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நான் ஒரு ஓவியனாக இருந்தால் படம் தீட்டியும் காட்ட முடியும். அந்த மரங்களின் உதவியினால் எவ்வளவு மழை கிடைக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று உழைப்பவர்கள், நாளைய எதிர் காலத்திற்கு வழிகாட்ட முடியும். நான் 3வது வரைதான் படித்தேன்; மேற்கொண்டு படிக்க வழியில்லை; இன்று படிப்பு உங்களைத் தேடி வருகிறது. நான் வேலைக்குப் போக நினைத்தேன், வறுமையின் காரணமாக; இன்று நீங்கள் தொழில் தொடங்க அரசு உதவி தருகிறது. அதைப்பயன் படுத்திக் கொள்ள வேண்டும். தங்களது குழந்தைகளை நன்கு வளர்த்து - நிறைய மதிப்பெண்களை அவர்கள் வாங்குவதற்குப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். தாய்மார்கள் அந்தத் தொண்டினைச் செய்ய வேண்டும். அதற்கு உதவியாக நாங்கள் இருக்கிறோம். வேர் நிலைத்தால்தான் மரம் நன்றாக இருக்க முடியும். அரசு, தனிப்பட்டவர்கள் அமைப்பு எல்லாம் ஒன்று கூடி இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

(30.4.'82ல் திருச்சியில் இராணுவத் திடலில் நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக் கழகத் தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து....)

## முதல்வரின் பேட்டி

சென்னை தலைமைச் செயலகத்தில் 12.5.82. அன்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கூறிய முக்கியக் கருத்துக்களாவன:

100 கோடி ரூபாய் செலவில் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் செயல்படுத்துவதை, வருகிற ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து செய்வதா அல்லது பேரறிஞர் பெருந்தகை அமரர் அண்ணா அவர்களின் பிறந்த நன்னாளிலிருந்து அமல்படுத்தி அதற்கு இன்னும் சிறப்பைச் சேர்க்கலாமா என்று கருதுகிறோம். மதிய உணவுத் திட்டத்திற்குரிய நடைமுறை செயல்வடிவ முறை வடிவங்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டுவிட்டது.

ஏழை எளிய மக்களிடம் ஜப்தி கூடாது என்று அரசு கண்டிப்பான ஆணையினைப் பிறப்பித்துள்ளது. ஜப்தி செய்யும் போது குறிப்பாக உழவு மாடு, ஆடு, பாத்திரம், உணவுத் தானியங்கள், தாலி போன்றவற்றைத் தொடக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஹெலிகாப்டர் வாங்கியுள்ளது. இதனை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அரசு சில முறைகளைக் கடைப்பிடித்து வருகிறது.

மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் ஆபத்தில் சிக்கிக் கொண்டால் அவர்களைக் காப்பாற்றுவது முதல் நோக்கம்.

புயல், வெள்ளம் வரும்போது மக்களைக் காப்பாற்றுவது இரண்டாவது நோக்கம், குறிப்பிட்ட இடத்திற்கு அவசரப் பணி காரணமாகச் செல்ல வேண்டும் என்பதற்குப் பயன் படுத்தப்படும். பாதை சரியில்லை—எப்படியாவது அந்த இடத்தைச் சென்றடைய வேண்டும் என்ற நிலை ஏற்படும்போது ஹெலிகாப்டர் பயன்படுத்தப்படும்.

இந்து கோவில்களுக்கு அறநிலையத்துறையும், இஸ்லாமியர் கோவில்களுக்கு வக்ஃப் வாரியமும் அரசின் கண்காணிப்பில் இருப்பது போல கிறிஸ்துவக் கோவில்களுக்கு ஏராளமான பணம் வருகிறது. அதை ஒரு அமைப்பாக்கும் எண்ணமிருக்கிறதா? என்ற கேள்விக்கு, "தக்க சமயத்தில் அந்த மதத் தலைவர்களுடன் பேசி என்ன செய்வது என்று அரசு பரிசீலிக்கும் என்றார்.



# தமிழர்கள் எதிலும் முதன்மையானவர்கள்

மைய அரசின் மாண்புமிகு பாதுகாப்பமைச்சர்
திரு. ஆர். வெங்கட்ராமன்

திருச்சியில் 3 கல்லூரிகள் அந்நாளில் இருந்தன. ஆனால் ஒரு பல்கலைக் கழகம் கூட இல்லை. அதனை அமைக்க யாரும் முன்வரவில்லை. இன்று திருச்சியிலே பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைத் துவக்கும் தமிழக அரசுக்கு எனது பாராட்டு. தமிழக அரசு துணிந்து முன்வந்து ஏராளமான பணச் செலவு செய்து புதிய பல்கலைக் கழகத்தைத் தொடங்குவது, கல்வியில் தமிழக அரசு காட்டும் ஆர்வத்தை எடுத்துக் காட்டுகிறது.

பல்கலைக் கழகங்கள் குறித்து நாட்டில் பல்வேறு விமரிசனங்கள் செய்யப்படுகின்றன. எதற்கு மேலும் மேலும் பல்கலைக் கழகங்கள்? பட்டங்களைப் பெற்றவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே பல்கலைக் கழகங்களால் என்ன நன்மை இருக்கிறது? பல்கலைக் கழகங்களை மூடிவிடுவது நல்லது என்று சிலர் அறிவுரை கூற முன்வந்துவிடுகின்றனர்.

பல்கலைக் கழகத்தின் மூலம் நாம் பெரும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம்; பெரும் பயன் பெற்றிருக்கிறோம். பல்கலைக் கழகங்கள் நாட்டுக்கு—மக்களுக்கு அருஞ்சேவையைச் செய்திருக்கின்றன. விஞ்ஞானத்தைப் புகுத்தி அறிவியலை வளர்க்கின்றன பல்கலைக் கழகங்கள் என்றால் அது மிகையாகாது.

விவசாயத்தைப் பொறுத்த அளவில் 10 ஆண்டுக்கு முன்னர் நமது நாடு இருந்த நிலைவேறு; இன்றிருக்கும் நிலை வேறு. முன்பு, உலகநாடுகளுக்கெல்லாம் சென்று உணவு கேட்க கையேந்தி நின்றோம். பத்து வருஷத்துக்கொரு முறை நாட்டில் பஞ்சம் வரும் என்று பெரியவர்கள்சொல்வதுண்டு. ஆனால் இன்று அப்படி இல்லை; விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறது. அண்டை நாடுகளுக்கு உணவை மானியமாகக் கொடுக்கின்ற அளவுக்கு நாம் உணவு உற்பத்தியில் முன்னேறியுள்ளோம். இந்தச் சாதனை எப்படி வந்தது? அலசி ஆராய்ச்சி செய்ததன் விளைவுதான் இது. விஞ்ஞானத்தை விவசாயத்தில் புகுத்தி பண்ணை வளர்ச்சியில் ஆய்வு செய்து அவற்றை நிறைவேற்றியதன் காரணமாக அதிக அளவில் உற்பத்தி செய்து வருகிறோம். பக்கத்தில் உள்ள சிறிய நாடுகள் உணவு உதவி வேண்டும் என்று நம்மிடம் கேட்கிறார்கள். விஞ்ஞானிகள் தான் இதற்குக் காரணம்.


தொழில்துறையை எடுத்துக் கொண்டால் கூட விடுதலை அடைவதற்கு முன்பு இருந்ததை விட, இன்று உள்ள நிலை மேம்பாடு அடைந்திருக்கிறது.


இந்தியா ஒரு விவசாய நாடு. தொழில் வளர்ச்சியில் அது உலகத்தில் 10வது இடத்தில் உள்ளது. இந்தச் செய்தியை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டியுள்ளது. இந்த வளர்ச்சி எப்படி ஏற்பட்டது? தொழில் நுட்ப அறிவும் திறமையும் பெற்ற விஞ்ஞானிகள் பெரியசாதனைகளைச் செய்ததனால் தான் விளைந்தது. பல்கலைக் கழகம் விஞ்ஞானிகளைத் தயாரித்துத் தரவில்லை என்றால், தொழில் திறன் உள்ளவர்களை உற்பத்தி செய்யாமல் இருந்திருந்தால் இந்த அளவு முன்னேறியிருக்க முடியுமா?


விஞ்ஞானத் தொழில் திறன் பெற்றவர்கள் வரிசையில் உலகில் 3-வது இடத்தை இந்தியா வகிக்கிறது. முதல் இடத்தை அமெரிக்காவும் 2-ம் இடத்தை ரஷ்யாவும் பெறுகின்றன.

பல்கலைக் கழகங்கள் வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வியைப் புறக்கணிப்பதற்கு எந்த அளவுக்கு விஞ்ஞானிகள் பாடுபடவேண்டும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தொழில் விஞ்ஞான ரீதியில் இந்தியா முதன்மையாகத் திகழவேண்டும். இந்த வகையில் தமிழ் மக்களும் முதன்மையானவர்களாகத்தான் திகழ்கிறார்கள். பல வகைகளில் தமிழர்கள் 2வதாக இருக்கமாட்டார்கள்; முதல்வர்களாகவே இருப்பார்கள்.







[30.4.82-ல் திருச்சியில் 'பாரதிதாசன்' பல்கலைக் கழகத் தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து].



# புதுப்பாதை நோக்கி புதிய பல்கலைக் கழகம்!

**மைய அரசின் மாண்புமிகு திட்ட அமைச்சர்**

**திரு எஸ். பி. சவான்**

நமது இந்தியத் திருநாட்டின் முதல் பிரதமரும், சிறந்த மனிதாபிமானியுமாகிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒருமுறை பட்டமளிப்பு விழா ஒன்றில் உரையாற்றுகையில் "மனிதாபிமானத்துக்காக -சகிப்புத் தன்மைக்காக - பகுத்துணரும் வகையில் நல்ல குறிக்கோள்களை எய்த-மனித இனத்திற்குத் தலைமை ஏற்று அதனை நடத்தி செல்வதற்குரிய உண்மைகளைக் கண்டு பிடிக்க-பல்கலைக் கழகங்கள் பாடுபட வேண்டும்'' என்று குறிப்பிட்டார். இந்தப் புதிய பல்கலைக் கழகம் இங்கே குறிப்பிட்ட இந்தக் குறிக்கோள்களை எல்லாம் எய்தி - நமது மக்களிடையேயுள்ள ஒற்றுமையை வலுப்படுத்தும் என நம்புகிறேன்.

சமூக ஆதிக்கத்தையும் சமூக அநீதிகளையும் எதிர்த்துப் போராடி, மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காக-போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காக- பாடுபடுவதையே தம் வாழ்நாளின் குறிக்கோள்களாகக் கொண்டு விளங்கிய பெருங்கவிஞர் -சிறந்த கல்வியாளர் பாரதிதாசன் அவர்களின் பெயரை இந்தப் பல்கலைக் கழகம் சூட்டிக் கொண்டிருப்பது மிகவும் பொருத்தமானதே. அவரது நினைவுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பண்பாட்டுக்கும் அவர் படைத்த படைப்புகளுக்கும் இப் பல்கலைக் கழகம் புகழ்மாலை சேர்க்கும்.

கடந்த மூன்று தலைமுறைகளாக நமது கல்வி முறை விரிவடைந்திருக்கிறது. 11 கோடி மாணவர்கள் உருவாகியிருக்கிறார்கள். நமது நாட்டின் வளர்ச்சித் திட்டம் தொடங்கப் பெற்ற 1951ஆம் ஆண்டில் இருந்ததை விட இது 4 மடங்கு அதிகமாகும். 1950-51ஆம் ஆண்டில் கல்விக்காக அரசு செலவு செய்த தொகை 78 கோடி ரூபாயாகும். 1980-81ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 3746 கோடி. இது முன்பிருந்ததைவிட 48 மடங்காகும். மூன்று தலைமுறையாக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள், பள்ளிக்கூடங்களை வீடுகளுக்கே அழைத்துச் செல்லும் வகைக்கு நம்மை ஆளாக்கியிருக்கின்றன. 6 முதல் 11 வயதுவரை உள்ள குழந்தைகளில் 85 .சதவீதமும், 11 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளில் 44 சதவீதமும் முறையே துவக்கப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் பயிலும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.


உயர் கல்வி முறை மிகவும் வேகமாக முன்னேறி வருகிறது. 1951-81ல் நமது நாட்டில் பல்கலைக் கழகங்கள் மற்றும் நிலையங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 27லிருந்து 125 ஆக உயர்ந்துள்ளது. கல்லூரிகள் (பொதுக் கல்வி-தொழில் கல்வி) 550லிருந்து 4000 ஆக உயர்ந்துள்ளன. கல்லூரி, பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 3.31 லட்சத்திலிருந்து 25 லட்சத்துக்கு அதிகரித்திருக்கிறது. இந்த விரிவாக்கம் இந்திய நாடு முழுவதிலுமே ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு இதற்கு விதிவிலக்கல்ல.

தற்போது தமிழகத்தில் உருவாகும் இந்த மூன்று பல்கலைக் கழகங்களின் அமைப்பின் வாயிலாக -இந்த மாநிலம் மேலும் சில அடி தூரம் முன்னோக்கிச் செல்கிறது. இவை நிறுவப்பட்ட பின்னர், இவற்றிற்குத் தேவைப்படும் வசதிகளையும் மற்ற ஆதாரங்களையும் தமிழக அரசு வழங்கும் என்று பெரிதும் நம்புகிறேன். இந்தப் பல்கலைக் கழகங்கள் சிறந்த கல்வி மையங்களாக மட்டும் திகழாமல் - மக்களுக்கு சமூக - பொருளாதாரத்தொண்டு செய்யும் மையங்களாகவும் திகழும் என நம்புகிறேன்.

இந்தப் புதிய பல்கலைக் கழகம் புதிய பாதையில் நடைபோடச் செய்வதற்குத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கும் செய்தி மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். தஞ்சாவூர்ப் பல்கலைக் கழகம் தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்காக தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இந்தப் பல்கலைக் கழகமும் கோவைப் பல்கலைக் கழகமும் மக்களின் சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்வதற்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டுள்ளன. இந்தப் பல்கலைக் கழகம் மனித சக்தியின் தேவைகளைக் கொண்டு வேலை வாய்ப்புகளையும் சமூக - பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்தும் வகையில் தனது கல்வி முறையை அமைத்துக் கொள்ள விரும்புகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பல்கலைக் கழகம், கல்லூரி நிலை வகுப்புகளை சமூக - பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் படைக்கலனாக மாற்றியமைக்கும் விதத்திலும் மாணவர்களின் தேவை என்ன என்பதை உணர்ந்து பூர்த்தி செய்யும் வகையிலும் செயலாற்றுவதை அறிந்து மேலும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

**(30.4.82ல் திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துவக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து...)**





# முதுபுகழ்த் திருச்சியில் முப்பெரும் விழாக்கள்!

சோழ மண்டலத்தில் அங்கம் பெற்று தமிழுக்கும், தமிழ்ப் பண்புக்கும் நிலைக்களனாக விளங்கும் திருச்சி நகரில் மகா கவி பாரதியார் நூற்றாண்டு விழா, பாரதிதாசன் பிறந்த நாள் விழா, பாரதிதாசன் பல்கலைக் கழகத் துவக்க விழா என முப்பெரும் விழாக்கள் ஏப்ரல் 29,30 ஆகிய நாட்களில் அரசின் சார்பில் சிறப்பாக நடைபெற்றன.

வெள்ளம் போல் தமிழர் கூட்டம் நகர் எங்கும் அலைபாய்ந்தது. ஏறுநடைப் புலவன் பாரதிதாசனுக்கும், அவனை 'எழுக நீ புலவன்' என வாழ்த்தி உரைத்த அவனது ஆசான் பாரதிக்கும் தமிழக அரசு விழா நடத்திப் பெருமை செய்வதைக் காண மக்கள் பெரு வியப்புடன் திரண்டிருந்தார்கள். அரசு ஊழியர்களும் மற்றும் பலரும் அரியதோர் விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்னும் நல்லுணர்வின் காரணமாக ஏப்ரல் 30ஆம் நாளை திருச்சிமாவட்டத்தில் விடுமுறை நாளாக அரசு அறிவித்திருந்தது.

பாட்டுப் புலவர்களுக்கு எடுக்கும் விழா இசைவல்லார் எம்.கே. தியாகராஜபாகவதரின் பெயரால் இயங்கி வரும் கலைமன்றத்தில் 29.4.82 காலை 9 மணிக்கு பாவேந்தர் நல்லிசையுடன் துவக்கம் ஆகியது. இசைமாமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் குமாரர் திரு சிவசிதம்பரம் தனது குழுவினருடன் பாவேந்தரின் இசைப் பாடல்களைப் பாடி அரங்கத்தைத் தன்வயப்படுத்தி விட்டார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர். சௌந்தரராஜன் வரவேற்றார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதிக்கு எத்தனையோ சீடர்கள்

**தமிழ்ப் பித்தன்**



கிடைத்திருக்கலாம்; ஒரு பாரதிதாசன் அவருக்குச் சீடராகக் கிடைத்ததுதான் அவரது பெருமையை உலகுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

''நாட்டு விடுதலைக்குக் கவி பாடினார் பாரதி; சமுதாய விடுதலைக்குக் கவி யாத்தார் பாரதிதாசன். கவிஞர்கள் என்றதும் அவர்கள் கற்பனைக்கு ஆட்பட்டவர்கள் என்றுதான் எண்ணுகிறோம். பாவேந்தர் கற்பனையில் மூழ்கிடவில்லை. அவர் ஒரு 'கமாண்டர்-இன்-சீப்' போல், 'இப்படி இருந்தால் நீ ஏற்றம் பெறுவாய்' என்று எடுத்துச் சொன்னார்''.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று உரையாற்றினார். அவர் குறிப்பிட்டார்:


''பாரதியானாலும் பாரதிதாசனானாலும் அவர்கள் இருவரும் மதத்தை-சாதியைச் சாடினார்கள். சமுதாயத்தை எவை எவை கெடுத்தனவோ அவற்றை எல்லாம் சாடினார்கள்.

''பாரதி தேசிய கவி, பாரதிதாசன் தன்மானக் கவி. இவர்கள் இருவரும் தமிழை மறக்கவில்லை. தமிழை எப்படி ஏல்லாம் வளர்க்கவேண்டும் என்று கூறினார் பாவேந்தர். தமிழனின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்று கூறினார்.''

மகாகவி பாரதியார் அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையிலே உருவாக்கப்பட்டிருந்த பொருட்காட்சி அனைவரையும் கவர்ந்தது. அநேக புகைப்படங்கள் இரு பெரும் கவிஞர்களின் பெருமையை நமக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தன. பாரதி எழுதிய நூல்களும் அவரைக் குறித்து மற்றவர்கள் எழுதிய நூல்களும் என ஏறக்குறைய 400 நூல்கள் இடம் பெற்றிருந்தன. பாரதி எழுதிய கடிதங்களும் பிறர் அவருக்கு எழுதிய கடிதங்களும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அதுபோலவே, பாவேந்தர் பாரதிதாசனின் கடிதங்கள், புகைப்படப் பிரதிகளாக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. இரு பெரும் கவிஞர்களும் கவிதை எழுதுவதில் மட்டுமல்ல- வரவு செலவுக் கணக்குகளை எழுதி வைப்பதிலும் கடமையுணர்வுடன் விளங்கியிருக்கிறார்கள் என்பதைப் பொருட்காட்சி எடுத்துச் சொல்லியது. அரும்பெரும் களஞ்சியமாகத் திகழ்ந்த இந்தப் பொருட்காட்சியை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார். அவர் தெரிவித்தார்:

'இரண்டாயிரம் ஆண்டுகளாக மக்களைப் பற்றி அக்கறை கொள்ளாத கவிஞர்களின் மத்தியில் மக்களைப் பற்றி அக்கறை கொண்டவர் பாரதிதாசன்; அவர் புதுயுகக் கவிஞர்.

''பல நாடுகளில் புரட்சிக் கருத்துக்களைச் சொல்லியதற்காகக் கவிஞர்கள் துரத்தியடிக்





...ப்பட்டிருக்கிறார்கள். சில நாடுகளில் சிறை...ல் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். நாடு ...த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அனை...ரும் ஒன்று சேர்ந்து, ஒரு கவிஞரைப் பாராட்...ம் அரிய நிலைமையை முதன் முதலில் செய்...ள்ளது தமிழ்நாடுதான் என்று கூறலாம்''

அதன்பின்னர், மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர்களின் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. 'புதியதோர் உலகு செய்வோம்' என்னும் தலைப்பில் பாவேந்தரின் மகனார் திரு. மன்னர் மன்னன், 'நிறை உழைப்புத் தோள்கள் எல்லாம் எவரின் தோள்கள்' என்னும் தலைப்பில் திரு. இளந்தேவன், 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்னும் தலைப்பில் திரு பொன்னடியான், 'மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ' என்னும் தலைப்பில் திருமதி ரோகிணி, 'உலகம் உண்ண உண்' என்னும் தலைப்பில் திரு ஈரோடு தமிழன்பன் ஆகியோர் கவிதை பாடினர்.

பின்னர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் நடுவராகப் பொறுப்பேற்க 'பாரதிதாசன் படைப்புகளில் விஞ்சி நிற்பது தமிழ் எழுச்சியே' என்றும் 'சமுதாய மறுமலர்ச்சியே' என்றும் இருவகை விவாதம் கொண்ட பட்டிமன்றம் நடைபெற்றது.

பட்டிமன்றத்தின் நடுவர் பொறுப்பை ஏற்றிருந்த மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், ''இரண்டு அணியின் விவாதத்திற்குத் தலைமை ஏற்றிருக்கிறேன் என்பதைவிட இரண்டணிகளிடம் நான் சிக்கிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்வது பொருந்தும்'' என வேடிக்கையாகக் குறிப்பிட்டபோது அவையினர், மகிழ்ந்து, ரசித்து வரவேற்றனர். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:



''கவிதை என்பது இன்ப ரசாயனம், இதய விஞ்ஞானம், உதய மெய்ஞ்ஞானம் என்று சொல்வார்கள்.

''புரட்சிக் கவிஞரின் கவிதைப் பார்வை பீடும் பெருமையும் கொண்டது. அவர் எளிய நடையில் கவிதைகளை எழுதினார். இரும்பைத் தங்கமாக மாற்றுவதுபோல், கவிதை வரிகளில் ஒளியை ஏற்றினார். சமுதாயத்தின் மாசு போக்க வேண்டும், என்பது அவரது கொள்கை. தமிழகத்தின் முதல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார்; அவரது பாடல்கள் படைக்கலங்களாகக் கைகொடுக்கின்றன.

'தமிழ் எழுச்சியே' என்ற பொருளில் அணித் தலைவர் திரு அ.வ. இராச கோபாலன் மற்றும் திருமதி காந்திமதி, திரு ஜெகந்நாதன் ஆகியோர் வாதிட்டனர். 'சமுதாய மறுமலர்ச்சியே' என்ற பொருளில் அணித் தலைவர் திரு சத்திய சீலன் மற்றும் திருமதி ... மணிமேகலை, திரு அறிவொளி ஆகியோர் வாதிட்டனர்.

...க்குப் பெருமை சேர்க்க வேண்... சொல்ல வந்த சத்தியசீலன் 'எனது ... சமையல் வேலை செய்யும்போது



தொட்டிலிலுள்ள குழந்தை அழ நேருவதுண்டு. அப்போது நான் தொட்டிலை ஆட்டித்தாலாட்டுப் பாடுகிறேன்'' என்று குறிப்பிட, அதன் பின் எதிர் அணியின் சார்பில் வாதிட வந்த ஜகந்நாதன், ''நண்பர், தமது மனைவி சமையல் செய்யும்போது, தான், குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவதாகச் சொன்னார், நாங்கள் மனைவியரைச் சமையல் செய்வதற்கே விடுவதில்லை; நாங்களே சமையல் செய்து அவர்களுக்கு ஒத்தாசை புரிகிறோம்'' என்று குறிப்பிட்டபோது அரங்கமே அதிர்ந்தது கையொலியின் காரணமாக!

அனைவரின் வாதங்களையும் ஆய்ந்து பார்த்த நடுவர் அவர்கள் 'பாரதிதாசன் படைப்புகளில் விஞ்சி நிற்பது தமிழ் எழுச்சியே' என்று தீர்ப்பளித்தார். அதனை அவையினர் மட்டுமல்ல எதிரணியினரும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டனர்.

பிற்பகல் நிகழ்ச்சி 3.30 மணி அளவில், திருவையாறு அரசு இசைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவியர் பாடிய பாரதி இசைப் பாடல்களுடன் தொடங்கியது.


மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அப்போது குறிப்பிட்டார்:

''தமிழக மக்களின் அறிவை உயர்த்துவதற்குக்கவிதை பாடினார் பாரதியார். அடித்தளத்து மக்கள் புரிந்து கொள்ளும் வகையிலே அவரது கவிதைகள் இருக்கின்றன.



''மக்கள் எல்லோரும் சமம் என்று கூறிய பாரதி, 'உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேதம் கிடையாது' என்னும் கருத்தைக் கவிதைகளின் வாயிலாகப் புகுத்தினார். மக்கள் இன்னும் ஜாதி வேறுபாட்டுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றால், மகாகவியின் வார்த்தைகளை மக்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் பொருள்''.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையேற்று உரையாற்ற, 'இளைய பாரதம்' என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. அவர் குறிப்பிட்டார்:



சட்டமன்ற உறுப்பினர் திரு கே. சௌந்தரராஜன் நன்றி கூறினார்.

மாலை 6.30 மணிக்கு எல்லைக் காவற் படைத் திடலில், திறந்தவெளி அரங்கில் வண்ண விளக்குகளின் பின்னணியில் - மகா கவி பாரதியார் மற்றும் பாவேந்தர் பாரதி தாசன் விழா நடைபெற்றது. விழா நடைபெறும் அரங்கில் மட்டுமல்ல-நகரமெங்கும் பற்பலஇடங்களில் வண்ண விளக்குகள் பல்வேறு வடிவங்களில் காட்சி தந்தன. தங்கள் நகரில் ஒரு பல்கலைக் கழகம் உருவாவதை எண்ணி உள்ளம் பூரித்த தனிப்பட்ட சிலர், தங்களின் நிறுவனச் செலவில் வண்ண விளக்குகளைப் பல்வேறு இடங்களில் அமைத்து, இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தார்கள்; மக்கள் நெஞ்சங்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தார்கள்.

விழாவுக்கு வந்திருந்தோரை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்றார்; அப்போது அவர் குறிப்பிட்டார்:

''ஒரு மாநிலத்தின் வளர்ச்சியைக் கல்வியிலிருந்து உலகு கணக்குப் போடுகிறது. ஆராய்ச்சி அறிவுமிக்க பல்கலைக் கழகம் எத்தனை ஒரு மாநிலத்தில் தோன்றுகிறதோ, அப்போதுதான் அந்த மாநிலம் பெருமை பெறும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

''தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறடி என்ற முறையில் பாரதியும் பாவேந்தரும் வாழ்ந்து காட்டி மறைந்தனர். 1977 ஆம் ஆண்டிற்குப் பின்பு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னர் தான் பாவேந்தருக்கு அரசின் சார்பில் விழா எடுக்கப்பட்டு நாட்டு மக்களுக்கு அவரை நினைவு படுத்தும் நல்ல பணி தொடரப்படுகிறது.''

மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு க. இராசாராம அவர்கள் தலைமையேற்று பாரதியார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். அவர் தெரிவித்தார்:



''அடிமை விலங்கொடித்த வீரராக- இந்திய நாட்டின் விடிவெள்ளியாக பாரதி தோன்றினார். கற்பனை நயத்துடன் உண்மைகளைக் கவிதை வடிவாக்கினார். சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த கொள்ளை நோய்களுக்கு அவரது பாடல் மருந்தாக விளங்கியது.

''அவரது பாடல்கள் புதிய தெம்பையும் புத்துணர்ச்சியையும் அச்சமின்மையையும் அனைவருக்கும் ஏற்படுத்தின. மனித சமுதாயம் கைக்கொள்ள வேண்டிய நல்ல சிந்தனைகள் அவரது கவிதைகளில் காணப்படுகின்றன''.

'அச்சந்தவிர்' என்னும் பொருளில் செல்வி சுபா, 'புதியன விரும்பு' என்ற தலைப்பில் செல்வன் மோகனசுந்தரம், 'கீழோர்க்கஞ் சேல்' என்ற தலைப்பில் செல்வி சித்திரா, 'வையத் தலைமை கொள்' என்ற தலைப்பில் செல்வன் இராமலிங்கம்', 'எண்ணுவதுயர்வு' என்ற தலைப்பில் செல்வி சீதாலட்சுமி, 'கூடித் தொழில் செய்' என்ற தலைப்பில் செல்வன் இரவீந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர், திருமதி அ.ரா.இந்திரா அவர்கள் தலைமையில் 'மகளிர் மன்றம்' நிகழ்ச்சி நடைபெற்றது. டாக்டர் லீலாவதி, செல்வி பிரேமா, திருமதி நிர்மலா சுரேஷ், திருமதி தங்க அன்புவல்லி ஆகியோர் உரையாற்றினர்.





'பாரதி ஜாதியற்ற சமுதாயத்தைக் காண விரும்பியிருக்கிறார். சுதந்திர தாகம்-சுதந்திர சங்கநாதம் இந்தியத் துணைக் கண்டத்தில் பல பகுதிகளில் ஒலிக்காமல் இருந்த நேரத்தில் சுதந்திர முழக்கமிட்டவர் பாரதியார்.

''புரட்சிக் காரியங்கள் பலவற்றை அவர் ஆற்றியிருக்கிறார். அதன் காரணமாக ஒரு முறை தமது மாமனாரின் ஊரான கடையத்தை விட்டு அவர் வெளியேற்றப்பட்டார். அப்படி வெறுக்கப்பட்ட கவிஞரின்—ஒதுக்கப்பட்ட கவிஞரின் உருவப்படம் இன்று திறக்கப்படுவது பாராட்டுக்குரியது.''

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் டாக்டர் ம.பொ. சி அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் உருவப் படத்தைத்திறந்து வைத்து உரையாற்றினார். அதுபோது அவர் குறிப்பிட்டதாவது:

''வெள்ளை உள்ளம்-வீர வாசகம்-கண்ணில் ஒளிவீச்சு-மொழிப்பற்று ஆகிய அரும் பேறுகள் கொண்ட கவிஞர் பாரதிதாசன்.

''வடமொழியின் ஆதிக்கத்தை அவர் வெறுத்தவர். ஆனால் வடமொழிக் காவியமான பில்ஹணனை எடுத்து, ''புரட்சிக் கவி'' என்னும் காவியமாக அவர் பாடினார். சிறந்த கவிஞனுக்கு மொழி வேற்றுமை கிடையாது என்னும் தத்துவத்தை அவர் எடுத்துக் காட்டினார்.''


சமுதாயத்தின் குறைகளை—சமுதாயத்தில் உள்ள கொடுமைகளை அவர் கவிதையில் வடித்துக் தந்திருக்கிறார்.

'எல்லார்க்கும் எல்லாம் என் றிருப்பதான இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்' என்று கூறினார் பாரதிதாசன்''.

'பாரதியும் பாண்டித் துரைத் தேவரும்' என்னும் பொருளில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு எஸ்.ஆண்டித் தேவர் (சட்டமன்ற உறுப்பினர்), 'பாரதியும் பரலி சு. நெல்லையப்பரும்' என்னும் பொருளில் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தஞ்சை ராமமூர்த்தி, 'பாரதியும் சுப்பிரமணிய சிவாவும்' என்னும் தலைப்பில் தமிழ்நாடு காங்கிரஸ் (எஸ்) பாலசுப்ரமணியம், 'பாரதியும் உமறுப் புலவரும்' என்னும் தலைப்பில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த திரு ஜே.எம். மியாகான், 'பாரதியும் வாஞ்சிநாதனும்' என்னும் பொருளில் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு குமரி அனந்தன், 'பாரதியும் சக்கரைச் செட்டியாரும்' என்னும் தலைப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. பி.மாணிக்கம், 'பாரதியும் வ.உ.சி.யும்' என்னும் தலைப்பில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி (இ) தலைவர் திரு எம்.பி. சுப்ரமணியம் ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர், பாரதி, பாரதிதாசன் ஆகியோர் நினைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசு வழங்கினார். கலைமாமணி கவிஞர் புத்தனேரி சுப்ரமணியம் அவர்களுக்கு பாவேந்தர் விருது வழங்கி பத்தாயிரம் ரூபாய் அளித்துப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்த மாண்புமிகு முதல்வர், அரசுக் கலைஞர் கிளாரினெட் இசை மேதை திரு ஏ.கே.சி. நடராசன் அவர்களுக்கு விருது வழங்கிப் பாராட்டினார். திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு அண்ணாதாசன் நன்றியுரை கூற, பின்னர் கலைமாமணி வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியுடன் முதல் நாள் விழா முத்திரை பதித்த விழாவாக நிறைவேறியது.

ஏப்ரல் 30-ம் நாள் காலை பாரதிதாசன் பல்கலைக் கழக வளாகத்தில் (10000) மரங்







கள் நடு விழா-காலை 9 மணியளவில் தொடங்கியது. நாகலிங்க மரம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நட்டார்கள். அதன்பின், மாணவ மாணவியர் மரம் நடுவதை, திறந்த ஜீப்பில் சென்றவாறு பார்வையிட்டார்.

இந்த வளாகத்தில் பல்வகை மரங்கள் இடம் பெற உள்ளன. ஏறக்குறைய 200 ஏக்கர் நிலத்தில் முந்திரி பயிரிடப்பட உள்ளது; இதன் வருவாயைக் கொண்டு தோட்டத்தின் செலவைச் சரிக்கட்டலாம் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு மணி சுந்தரம் நிருபர்களிடம் குறிப்பிட்டார்.

மரம் நடு விழாவில் பங்குகொண்டவர்களையும், கலந்து கொண்டவர்களையும் மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''லட்சம் மரங்களை பாரதிதாசன் பல்கலைக் கழக வளாகத்தில் உருவாக்கும் முயற்சியின் தொடர்பாக இன்று மரம் நடும் பணி நடைபெறுகிறது.

''இதுவரை ஒதுக்கப்படாத அளவுக்கு 16 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தமிழகத்தில் மரம் நடுவதற்கு ஒதுக்கியுள்ளார்கள். ஆங்காங்குள்ள பொதுமக்களும் மரங்களை வளர்க்க வேண்டும், பாதுகாக்க வேண்டும், வெட்டாமலாவது இருக்கவேண்டும்''.





பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மரம் நடுவதன் அவசியம் குறித்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''மாணவர், மகளிர் கூடி, இரு மா பெரும் பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, நாட்டின் எதிர்காலம் யாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமோ அவர்கள் இப்போதே அந்தப் பணிக்குத் தயாராகிவிட்டார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

''மரங்களை நடுவது மட்டும் போதாது. அவற்றைப் பாதுகாப்பதில் தான் பெருமை இருக்கிறது. குழந்தையைப் பெற்றெடுத்த தாய், அதனைப் பொறுப்புடன் வளர்ப்பது போலவே, மரங்களையும் பாதுகாக்கவேண்டும்.''

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ அரங்கநாயகம் அவர்கள் நன்றி கூறினார்.

காலை 10 மணியளவில் தியாகராசபாகவதர் மன்றத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. வருகைபுரிந்தவர்களை வரவேற்று திருச்சி 1 சட்டமன்ற உறுப்பினர் திரு முசிறிப் புத்தன் உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''பாவேந்தர் பாரதிதாசன் அவர்களை இளைஞர் மத்தியிலே அறிமுகம் செய்து வைத்த பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு. அவருக்குப் பின்னர் இன்று அந்தப் பணியைப் புரட்சித் தலைவர் மனமகிழ்ச்சியுடன் செய்து வருகிறார்.

''பாவேந்தர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவர் சரிவரக் கவனிக்கப்படவில்லை. சரியான முறையிலே மருத்துவ சிகிச்சை அவருக்கு அளிக்கப்படவில்லை என்னும் கருத்து நிலவி வருகிறது''.

கருத்தரங்கிற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் தலைமை ஏற்று உரையாற்றினார். ஐந்து பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த துணைவேந்தர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்கு கொண்டனர்.


''வேந்தர்களுக்கு மத்தியில் அமைச்சராகிய நான் தலைமை ஏற்றுப் பேசுவது விசித்திரமாகவே இருக்கிறது'' என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் உரையைத் தொடங்கிய போது அரங்கமே கைதட்டி வரவேற்றது. அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

''பொன்னுக்குப் பாடிய கவிஞர் உண்டு, கூழுக்குப் பாடிய கவிஞர் உண்டு. அவர்கள் மத்தியில் கொள்கைக்குப் பாடிய கவிஞர் என்பதால் பாரதிதாசன் சிறந்தவராகத் திகழ்கிறார்.

''மக்களைப் பாடிய கவிஞர்கள் பாரதியும் பாரதிதாசனும் ஆவர். என்றாலும் சில இடங்களில் குருவுக்கும் விஞ்சிய சீடராக பாரதிதாசன் விளங்குகிறார்.''

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு எஸ்.வி.சிட்டிபாபு (பாரதி-பாரதிதாசன் கண்ட சமூக மறுமலர்ச்சி), அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வா.செ.குழந்தைசாமி (அறிவியல் வளர்ச்சி), காந்தி கிராம பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு.அறம் (பொருளியல் ஏற்றம்), மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துணைவேந்தர் திரு. வ.சுப. மாணிக்கம் (தமிழ்ப் பண்பாடு), கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு அ.வெங்கட்ராமன் (பல்கலைக் கழகப்பணி), தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வி.ஐ.சுப்பிரமணியம் (தமிழ் மொழிவளர்ச்சி), ஆகியோர் உரையாற்றினர். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் அவர்கள் நன்றி கூறினார்.





மாலையில் திருச்சி சிந்தாமணியில் அண்ணா சிலையில் இருந்து, மாணவ மாணவியர் பங்கேற்ற அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது. திருச்சி ரயில் நிலையப்பகுதியில் எல்.ஐ.சி. அலுவலகம் அருகே அமைக்கப்பட்டிருந்த தனிமேடையில் அமர்ந்தவாறு அணிவகுப்பினை, மேதகு ஆளுநர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் பார்வையிட்டனர். ஊர்வலம் எல்லைக் காவல்படைத் திடலை அடைந்தவுடன், பாரதிதாசன் பல்கலைக் கழகத் தொடக்க விழா மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்களின் தலைமையில் தொடங்கியது.

வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றுப்பேசிய மாண்புமிகு கல்விஅமைச்சர் திரு செ. அரங்கநாயகம் குறிப்பிட்டார்:

''இதுவரை பல்கலைக் கழகத் தொடர்பானவிழா படித்தவர்களிடையே மட்டுமே இருந்து வந்தது. அந்த நிலையை மாற்றி பொதுமக்கள் லட்சக் கணக்கில் திரண்டுவரும், வகையில் செய்திருப்பது புரட்சித் தலைவர் அவர்களின் சாதனையாகும்.



''பாரதிதாசன் பல்கலைக் கழகம் பல பிரச்சினைகளை ஆய்வு செய்து பலன் காண வேண்டும். சின்னத்தில் உள்ளதுபோல் புதியதோர் உலகுசெய்வோம்-என்ற வகையில் அதன் பணி அமைய வேண்டும்.''

மேதகு ஆளுநர் தமது தலைமை உரையைத் தொடர்ந்தார். அவரது ஆங்கில உரையை செயின்ட் ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் திரு சி.கே. சாமி அவர்கள் மொழி பெயர்த்தார்.

அதன்பின்னர், பல்கலைக் கழகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்க, மைய அரசின் மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பல்கலைக் கழக நிர்வாகக் கட்டடங்களுக்கும், மைய அரசின் மாண்புமிகு திட்ட அமைச்சர் திரு எஸ்.பி.சவான் அவர்கள் மாணவர் விடுதிக்கும், மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பட்டமளிப்பு விழா மண்டபத்திற்கும் அடிக்கற்களை நாட்டினர்.

பாவேந்தர் பல்கலைக் கழகத் திறப்பு விழாவை முன்னிட்டு அவரது பெயர் பொறிக்கப்பட்ட அஞ்சல் உறையை மாண்புமிகு பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வெளியிட, மாண்புமிகு தமிழக முதல்வர் பெற்றுக் கொண்டார்.

பல்கலைக் கழகச் சின்னம் பொறிக்கப்பட்ட கேடயங்களைச் சிறப்பு விருந்தினர்களுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் வழங்கினார்.

அடுத்து, மைய அரசின் மாண்புமிகு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ஆர்.வெங்கட்ராமன் உரையாற்றினார்.

''பல்கலைக் கழகத் துவக்க விழா என்றதும், ஒரு கட்டடத்துக்குள் ஒரு சிலர் மாத்திரம் கூடியிருந்து ஆங்கிலத்தில் பேசி முடியும் விழாவாகத்தான் இருக்கும் என எண்ணி நான் ஆங்கிலத்தில் கட்டுரை எழுதி வந்தேன்.

# ஊனமுற்றோர் ஆண்டு நிறைவு விழா



சமூகநலத் துறை அமைச்சர் உரை:

உலக ஊனமுற்றோர் ஆண்டு நிறைவு நாள் விழா (10-4-82) சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா மண்டபத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

மாலை 3 மணியளவில் தொடங்கிய இவ் விழாவில், ஊனமுற்றோர், நலன்காக்கும் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற மாணவ மாணவிகள் பலரும் பங்கேற்ற நடனம்-நாடகம் போன்ற வெவ்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

6 மணியளவில் தொடங்கிய பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே, சமூகநலத் துறைச் செயலாளர் திருமதி ஜே. அஞ்சனி தயானந்த் (இ.ஆ.ப.), சமூகநலத் துறை இயக்குநர் திருமதி ஓ.பி. சோசம்மா (இ.ஆ.ப.), சமூகநல வாரியத் தலைவர் திருமதி தாரா பி.வி. செரியன் முதலான பலரும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

இவ்விழாவிற்குத் தலைமையேற்ற மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் தனது துவக்க உரையில் குறிப்பிட்டதாவது:

மற்ற எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாடுதான் உடல் ஊனமுற்றோருக்கான நல்ல பல திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி வருகிறது. இந்த வகையில் மற்ற நாடுகளைவிடத் தமிழகம்தான் முதன்மை பெற்று விளங்குகிறது.

ஊனமுற்றோர் பற்றிய கணக்கெடுப்புப் பணி மாவட்டந்தோறும் நடந்து வருகிறது. அவர்களுடைய கல்வி, தொழிற்பயிற்சி பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. ஊனமுற்றிருப்போர் ஒவ்வொருவரின் தகுதிக்கும் ஏற்ப எப்படியெல்லாம் உதவலாம் என்பது பற்றிஆராய்ந்து வருகிறோம்.

ஊனமுற்றோரின் உயர்வு கருதி, தமிழக அரசு இருபது சிறப்புத் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது. ஊனமுற்றோர் ஆண்டில் (1981) இந்த அரசு 125 லட்சம் ரூபாய் ஒதுக்கி நல்லபல திட்டங்களை நாடு முழுதுமுள்ள ஊனமுற்றோருக்காகச் செயல்படுத்தியது. அவ்வகைத் திட்டங்களால் தமிழகத்தில் இதுவரை 30 ஆயிரம் ஊனமுற்றோர் பயன் பெற்றுள்ளனர்.

ஊனம் குறித்த தடுப்புச் சிகிச்சை முகாம் திருச்சியில் நடைபெற்றது. அடுத்த முகாம் தஞ்சையில் நடகக்கும்.

—இவ்வாறு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் உரையாற்றினார்.

**ராஜேந்திரன்**

தமிழ்த்தாய் வாழ்த்தின் பின் தொடங்கிய இக்கூட்டத்தில் சமூக நலத்துறை இயக்குநர் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

உலக ஊனமுற்றோர் ஆண்டில் தமிழக அரசு ஆற்றிய அரும்பணிகள் குறித்த அறிக்கையினை, ஊனமுற்றோருக்கான மாநில வாரியச் செயலாளர் திரு அ. பிச்சை படித்தார்.



ஊனமுற்றோருக்குப் பரிசு

**மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் உரை:**


மாநில நிம்கர் விருதுகள், காது கேட்கும் கருவிகள், மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், தொழில் பழகும் பயிற்சியில் அமர்த்திடும் ஆணைகள், தொலைபேசி வழங்கிடும் ஆணைகள், அரசு மானியம், வங்கிக் கடனுதவி ஆகியவற்றை ஊனமுற்றோருக்கு வழங்கி - உரையாற்றுகையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதாவது:

சமூகநலத் துறையின் ஆக்கப் பணிகளுக்காக முன்பு 10 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது நம்முடைய முதல்வர் அவர்கள் உங்கள் நலனை இங்கு வந்து பார்த்தால் தமிழ் மக்கள் அனைவரும் பங்கு எடுக்கும் விழா என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. எனவே அக் கட்டுரையின் சில கருத்துக்களைத் தமிழிலேயே உங்களிடம் சொல்லலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்'' என்று அவர் உரையைத் தொடங்கிய போது, மக்கள் அனைவரும் அதை ஆமோதித்துக் கர ஒலி எழுப்பினர்.

அவரையடுத்து, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு சாந்தப்பா ஆங்கிலத்தில் உரையாற்ற திரு சி.கே. சாமி தமிழில் மொழி பெயர்த்தார்.

''சென்னைப் பல்கலைக் கழகம் தாய்ப் பல்கலைக் கழகம். அது பல்வேறு பல்கலைக் கழகங்களைப் பெற்றிருக்கிறது. இந்த ஆண்டு அது இரட்டைப் பல்கலைக் கழகத்தைப் பெறுகிறது. பல்வேறு மக்களுக்கு வேலை கொடுப்பது இந்தப் பல்கலைக் கழகத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும். தாயை இந்தக் குட்டி விஞ்சினால் அப்போது பொறாமை அடையாது, மகிழ்ச்சி கொள்ளும்.''

அடுத்து உரையாற்றிய முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் குறிப்பிட்டார்.



''ரஷ்ய நாட்டுக்குத் தனிப் பெருமை உண்டு; கவிஞர்களை - எழுத்தாளர்களை அந்த நாடு போற்றிப் பெருமைப்படுத்தி வருகிறது. இன்று தமிழக அரசு அந்தக் கருத்தை மாற்றிவிட்டது. கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் தமிழக அரசு பாராட்டுகிறது. பாவேந்தர் பாரதிதாசன் சமூக சீர்திருத்தச் சிற்பியாகத் திகழ்ந்தார். பால்ய விதவைகளுக்காக அவர் கண்ணீர் விட்டார்.''



அடுத்து உரையாற்றிய மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்கள் தெரிவித்ததாவது:

''ஆங்கிலத்தை மீடியமாகக் கொள்ளாத பெரும் புலவர்கள் இருவரின் பெயரால் பல்கலைக் கழகங்கள் தொடங்கப் பெறுவது மிகவும் மகிழ்ச்சியான சேதியாகும். பல்வேறு வகையில் இந்தியாவுக்கே வழிகாட்டும் ஆற்றல் தமிழ்நாட்டுக்கு இருந்து வருகிறது. அதில் இதுவும் ஒன்று.

''பாவேந்தர் பாரதிதாசன் இதயத்திலிருந்து பேசுபவர். பாரதிதாசனைப் போன்ற மகாகவிகள், பாரதியைப் போன்ற மகாகவிகள் இந்தப் பல்கலைக் கழகத்தில் தோன்ற வேண்டும்'':

அடுத்து, உரையாற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர்திருநெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

''கல்வித் துறையில் பணத்தைச் செலவிடுவதன் வாயிலாக பொது அறிவை வளர்க்க முடிகிறது. இந்த ஆண்டு கல்விச் செலவுக்காக ரூ. 318 கோடியைத் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. பிற நாடுகளோடு அறைகூவி நிற்க வேண்டும் என்ற எண்ணம்தான் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வதற்குரிய காரணம்.

''அறிவை எது எது கெடுக்கின்றதோ அதை எல்லாம் நீக்கி, நாடு முன்னேற்றமடைய வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் சொல்வதற்காகப் பாவேந்தர் கவி பாடினார்.''

அதன் பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் பேருரையாற்றினார். (உரை பிறிதோரிடத்தில்) பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் மணி சுந்தரம் நன்றியுரை கூறினார்.



இரவு 10 மணி அளவில் கலைமாமணி சாமுண்டீஸ்வரி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியுடன் முப்பெரும் விழா நிறைவுபெற்றது. திருச்சியில் நடைபெற்ற முப்பெரும் விழா அற்புதத் திருவிழாவாக மட்டுமல்ல, தமிழ் மக்களின் அகமெல்லாம் நிறைந்த விழாவாக ஒளிவீசித் திகழ்ந்தது.



சமூகநலத் துறை இயக்குநரும், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரும

யெல்லாம் கருதி அத்துறைக்கு 23 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்றார். இது மாபெரும் சாதனை ஆகும்.

ஊனமுற்றோருக்கு உதவிகள் புரிவதில், மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் திருச்சி மாவட்டம் முன்மாதிரியாக இருக்கிறது. அதற்காக, இங்கே வருகை தந்துள்ள அம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பு இருந்ததைவிட, இப்போது, ஊனமுற்றோருக்குப் பல வகைகளிலும் அரசு உதவி வருகிறது. அகில இந்தியாவிலும் இந்த மாநிலத்தில் போல வேறு எந்த மாநிலத்திலும் ஊனமுற்றோர் உயர்வுக்காக இப்படி உதவியதில்லை.

—இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

**விருதுகள் உதவிகள்:**

இவ்விழாவில்:—

ஊனமுற்றோர் நலனுக்கான திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றிய மாவட்டத்திற்கான ட நில விருது திருச்சி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது. இதனை திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி சாந்தா ஷீலா நாயர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

ஊனமுற்றோர் நலனுக்குச் சிறந்த சேவை புரிந்த மருத்துவ நிபுணர்களான டாக்டர் திரு நடராஜன், மேரி தங்கராஜ், திரு அந்தோணிசாமி, திரு எட்வர்ட் சாலமோன் ஆகியோருக்கும் சிறப்பு மாநில விருதுகள் அளிக்கப்பட்டன.

ஊனமுற்றோருக்கு அதிக அளவில் கடனுதவி செய்த யுனைடெட் வங்கிக்கும், தேனா வங்கிக்கும் மாநில விருதுகள் வழங்கப்பட்டன.

1982 ஆம் ஆண்டு நிம்கர் விருது 8 பேருக்கு வழங்கப்பட்டது. இதனுடன் ரொக்கப்பரிசும் அளிக்கப்பட்டது.

20 பேருக்குக் காது கேட்கும் கருவிகளும், 70 பேருக்கு மூன்று சக்கர வண்டிகளும் 18 பேருக்குச் சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன.

735 பேர் வேலைக்கான உத்தரவு பெற்றனர். சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 940 பேருக்கு உதவப்பட்டது. 146 பேருக்குப் பெட்டிக்கடைக்கான கடனுதவி அளிக்கப்பட்டது.

ஊனமுற்றோர் அமைப்புக்களுக்காக அளிக்கப்பட்ட துணிகளை—ஆந்திர மகிள சபாவின் சார்பில் செல்வி, பி. சாவித்திரி, ஊனமுற்றோர் பாதுகாப்பு இல்லத்தின் சார்பில் திருமதி சகுணா போன்ற பல அமைப்புகளைச் சேர்ந்தோர் பெற்றுக்கொண்டனர்.

இவற்றையெல்லாம் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் வழங்கினார்கள்.

விழாமுடிவில், சமூகநலத்துறை இணை இயக்குநர் திரு சி. டபுள்யு அப்பாதுரை நன்றி கூறினார்.

**பணிகள் விவரம்:**

1981-82-ல், ஊனமுற்றோர் நலனுக்காகத் தமிழக அரசு, சமூகநலத்துறை மூலம் ஆற்றிய பணிகள் பற்றிய விவரத் தொகுப்புப் பின் வருமாறு:—

"ஊனமுற்றோருக்கு சமத்துவம் அளிப்போம்" அவர்கள் எல்லாப் பணிகளிலும் முழுப் பங்கேற்க ஒல்லும் வகையால் உதவி செய்வோம்..."

என்பதே உலக ஊனமுற்றோர் ஆண்டான 1981-ல் அறிவிக்கப்பட்ட இலட்சியமாகும். அந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாடு அரசு சமூக நலத்துறை 1980-ஆம் ஆண்டு ஆரம்ப முதலே ஊனமுற்றோர் நலனுக்காகவும், நல் வாழ்விற்காகவும், ஆன திட்டங்களைத் தீட்ட முயற்சி எடுத்தது. ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ள சமூகநலத் தொண்டர்களையும், மருத்துவ நிபுணர்களையும், பிற நிர்வாகிகளையும் கலந்து, அவர்களின் கருத்துக்களைப் பெற்று ஊனமுற்றோரின் மறுவாழ்விற்கான திட்டங்களைத் தீட்டியது.

அவைகளில் சுமார் 20 புதிய திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியது. அத்திட்டங்களின் நோக்கங்கள் ஊனமுற்றோருக்குக் கல்வி வசதியைப் பெருக்குவது, தொழிற்பயிற்சி அளிக்கும் பொருட்டு தனிப் பயிற்சிப் பள்ளி பிரிவுகளை ஏற்படுத்துவது, வேலை வாய்ப்பினை விரிவாக்குவது, சுய தொழிலில் ஈடுபட வங்கிக் கடனும், அரசு மானியமும் வழங்க எற்பாடு செய்வது, ஊனம் ஏற்படாமல் தடுப்பதற்கு அல்லது ஊனம் ஏற்பட்டால் அதன் கடுமையைக் குறைப்பதற்கு மருத்துவ வசதியைப் பெருக்குவது, ஊனமுற்றோருக்கு எல்லா வகையிலும் உதவ மண்டல மறுவாழ்வு நிலையங்களை அமைப்பது ஆகியவை ஆகும்.

1980-81-ல் தமிழ்நாடு அரசு ஊனமுற்றோர் நலனுக்காக ரூ. 65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. 1981-82-ல் நிதி ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக்கியது. அதாவது ரூ. 125 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.



**கல்வி வசதி:**

ஊனமுற்றோருக்குச் சிறப்புக் கல்வி வசதி வழங்கும் பொருட்டு அரசுப் பள்ளிகளும், அரசு மானியம் பெறும் பள்ளிகளும் இயங்குகின்றன. அப்பள்ளிகளில் உணவு, உடை, இருப்பிடம் இலவசமாக வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறப்புக் கல்வி வசதியும் வழங்கப்படுகிறது.

கண்தெரியாதவர்களுக்கென்று அரசுப் பள்ளிகளும், அரசு மானியம் பெறும் பள்ளிகளுமாக 1981 மார்ச் வரை 19 பள்ளிகள் செயல்பட்டு வந்தன. 1981-82-ஆம் ஆண்டில் கண் தெரியாதவர்களுக்கென்று இரண்டு புதிய பள்ளிகள் கோயம்புத்தூரிலும் தர்மபுரியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காது கேளாதவர்களுக்கென்று 19 பள்ளிகள் இயங்கி வந்தன. 1981-82-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு பள்ளிகள் விருதுநகரிலும், ஈரோட்டிலும் தொடங்கப்பட்டுள்ளன.

கை, கால் கடுமையாக ஊனமுற்றவர்களுக்கென்று தமிழ் நாட்டில் தனியார் பள்ளி ஒன்று மட்டுமே இயங்கி வந்தது. 1981-82-ல் கை கால் ஊனமுற்றவர்களுக்கான சிறப்புப் பள்ளி ஒன்று மதுரையில் தமிழ்நாடு அரசால் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இத்தகைய பள்ளிகள் மூலம் சிறப்புக் கல்வி வசதி பெறும் ஊனமுற்றோர் மொத்தம் 5000 பேர் ஆவார்கள்.

**கல்வி உதவித்தொகை:**

8-வது வகுப்பிற்குக் கல்வி அல்லது பயிற்சி பெறும் ஊனமுற்றவர்கள் கல்வி உதவித் தொகை ஏற்கனவே பெற்றுவருகிறார்கள். இந்த உதவியை 1981-82-ல் 1378 பேர் அடைந்தனர்.

1981-82 முதல் 1 வது வகுப்பு முதல் 8 வது வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவ மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தியது. இப்புதிய திட்டத்தால் ஊனமுற்ற மாணவ, மாணவியர் சுமார் 8000 பேர் பயன் பெற்றுள்ளனர். ஆக 1981-82-ல் கல்வி உதவித் தொகை பெற்ற ஊனமுற்ற மாணவ மாணவியர் 9378. பேர்.

மனவளர்ச்சி குன்றியவர்களுக்கும், கல்வியும், பயிற்சியும் அளிக்கும் நிலையம் ஒன்று ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பள்ளி விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதனால் 100 குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

கண் தெரியாத அல்லது காது கேளாத அல்லது மனவளர்ச்சி குன்றிய மாணவ மாணவியருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்கும் திட்டம் 1981-82-ல் விரிவாக்கப்பட்டது. இதனால் 1981-82-ஆம் ஆண்டில் 80 ஆசிரியர்கள் சிறப்புப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**சிறப்புப் பயிற்சிகள்:**

காது கேளாதவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கும் பொருட்டு சென்னை கிண்டியிலும், மதுரையிலும் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் தனி பயிற்சி பிரிவுகள் 1981-82 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. சென்னை கிண்டியில் உள்ள பிரிவில் பொறிப் பகுதி பொருத்துபவர் பணியிலும், மதுரையில் மின் கம்பியாளர் பணியிலும் காது கேளாதவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றன. காது கேளாதாவர்கள் 32 பேர் இத்தகைய சிறப்புத் தொழிற் பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

சென்னை கிண்டியில் இயங்கி வரும்-கண் தெரியாதவர்களுக்கு சிறு பொறியியல் பயிற்சி அளிக்கும் நிலையத்தை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தின் அளவிற்கு உயர்த்தும் கருத்துரை அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி கண் தெரியாதவர்கள் அடிப்படை இயந்திரம் இயக்குதல், புத்தகம் கட்டுதல், வெண்டர் ஆகிய பணிகளில் பயிற்சி அளிக்கப்படும். இதனால் கண் தெரியாதவர்கள் 40 பேர் ஆண்டுதோறும் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பு வசதியும் பெறுவார்கள்.

**வேலை வாய்ப்பு:**

10வது வகுப்பு தேறிய அல்லது தொழில் பயிற்சி நிலைய கல்வி பெற்று கண் தெரியாதவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் வேலை பெறாமல் இருந்தால் அவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை மாதம் ரூ 50 உதவிப் பணம் வழங்கும் திட்டம். 1981-82 முதல் செயல்படுத்தப்படுகிறது. இதனால் கண் தெரியாதவர்கள் சுமார் 194 பேர் இவ்வுதவியைப் பெறுகிறார்கள்.

ஊனமுற்றோர் பெட்டிக் கடை வைத்து சுய வேலை வாய்ப்பின் மூலம் பிழைக்கும் பொருட்டு அவர்களுக்கு வங்கிக் கடனும், அரசு மானியமும், இட ஒதுக்கீடும், பெட்டியும் அளித்து அவர்கள் சுயமாகத் தொழில் செய்ய உதவி செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 681 பேர் பெட்டிக் கடை வைப்பதற்காக உதவி செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

ஊனமுற்றோருக்கு வங்கிக் கட[illegible]னும் அதற்கு சமமான அரசுமா[illegible]யமும் (அரசு மானியம் ஒருவருக்கு ரூ 1000 வரை) வழங்கி சுய வேலை வாய்ப்பில் ஈடுபடும் திட்டம் 1981-82-ல் புதிதாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தால் 9181 ஊனமுற்றோர் சுய தொழில் செய்ய உதவி செய்யப்பட்டு இருக்கிறார்கள். இதற்காக அரசு ரூ. 25 இலட்சம்



டாக்டர் நடராஜனுக்குப் பரிசு



ஊனமுற்றோருக்குத் தையல் எந்திரங்கள்

1981-82-ஆம் ஆண்டில் செலவு செய்துள்ளது.

கடந்த ஆண்டில் சென்னை, வேலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்டு மண்டல மறுவாழ்வு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஊனமுற்றோருக்கு மருத்துவ வசதி, கல்வி வசதி, தொழிற் பயிற்சி, வேலைவாய்ப்பு, சுய வேலைவாய்ப்பு ஆகிய எல்லாத் துறைகளிலும் உதவும் பொருட்டு இந்நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள ஊனமுற்றோர் மண்டல மறுவாழ்வு நிலையங்களை அணுகி அவர்களுடைய மறு வாழ்விற்கான உதவியைப் பெற்று வருகின்றனர். இந்நிலையங்கள் அடங்கிய மாவட்டங்களில் ஊனமுற்றோருக்கு எல்லா வகையிலும் வழிகாட்டி, கை கொடுத்து உதவும் பணி நிலையமாக இவை செயல்பட்டு வருகின்றன.

## செயற்கை உறுப்புகள் வழங்குதல்:

இரு கால்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்ட 100 நபர்களுக்கு 1981-82-ஆம் ஆண்டில் சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

காது கேளாத குழந்தைகள் 2[illegible] பேருக்கு காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கை கால் ஊனமுற்றோர் 1000 பேருக்கு மூன்று சக்கர வண்டிகள் இலவசமாகக் கடந்த ஆண்டிலே வழங்கப்பட்டன.

## மருத்துவ வசதிகள்:

காது கேளாதவர்களுக்கு மருத்துவ வசதி வழங்கும் செவியியல் பிரிவுகள் திருநெல்வேலி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலே கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேற்கூறிய நிலையங்களில் கடந்த ஆண்டு சுமார் 473 பேர் மருத்துவ வசதியை பெற்று இருக்கிறார்கள்.

கை கால் ஊனமுற்றோருக்கு செயற்கை அவயவங்கள் வழங்கும் நிலையங்கள் கடலூர் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அரசு பொது மருத்துவ மனையில் நிறுவப்பட்டன. இந்நிலையங்களின் மூலம் 442 பேர் மருத்து வசதி பெற்றனர்.

## பிற திட்டங்கள்:

ஊனமுற்றோருக்கான விளையாட்டுப் போட்டி மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளும், கேடயங்களும் வழங்கப்பட்டன. மாநில விளையாட்டுப் போட்டியிலே வெற்றி பெற்றவர்கள் தேசிய அளவில் அகமதாபாத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியிலே பரிசு பெற்றார்கள். இப்போட்டியிலே தமிழ் நாட்டிலிருந்து 60 ஊனமுற்றோர்கள் பங்கேற்றனர். அவர்கள் 58 பரிசுகளையும் 4 கேடயங்களையும் பெற்று இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெறும் சிறப்பைப் பெற்றனர்.

ஊனமுற்றோரின் எண்ணிக்கையையும், அவர்களது பிரச்சினைகளையும் தன்மைகளையும் அறியும் பொருட்டு, புள்ளியியல் துறையின் மூலம் ஓர் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இக்கணக்கெடுப்பில் அறிக்கை விரைவில் வெளிவர இருக்கிறது. அவ்வறிக்கையின் அடிப்படையில் ஊனமுற்றோருக்கான நலனுக்கு மேலும் பல திட்டங்களைத் தீட்ட சமூக நலத்துறை தீர்மானித்துள்ளது.

ஊனம் ஏற்படாமல் தடுப்பது, ஊனம் ஏற்பட்டால் அதனைக் குணப்படுத்துவது ஊனமுற்றோருக்கு அரசு வழங்கும் உதவிகள் ஆகியவற்றை விளக்கும் செய்தித் திரைப்படம் ஒன்று எடுக்கப்பட்டு வருகிறது. இத் திரைப்படத்தால் பொதுமக்களும், குறிப்பாக ஊனமுற்றோரும் பயன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு அல்லது அரசு சார்ந்த அல்லது உள்ளாட்சி நிறுவனங்களில் இருக்கும் காலியிடங்களில் 3 சதவிகிதம் இடங்கள் ஊனமுற்றோருக்காகத் தமிழ்நாடு அரசால் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழிற் பயிற்சி நிலையங்களிலும் ஊனமுற்றோருக்கென்று 3 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊனமுற்றோரின் வசதிக்காகப் புதிய பொது கட்டிடங்களில் லிப்ஃட் வசதியும், சாய்வுப் பாதை வசதியும் செய்து கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

கல்வி நிலையங்களுக்கு அல்லது மருத்துவ மனைக்குச் செல்லும் ஊனமுற்றோருக்கு மாநிலத்திலுள்ள போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசப் பயணச் சீட்டு வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## மாநில விருதுகள்:

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் மாநில விருதுகளையும் வழங்கி வருகிறது.

கண் பார்வையற்றோர், காது கேளாதோர், கை கால் ஊனமுற்ற, மனவளர்ச்சி குன்றிய, தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களில் ஒவ்வொரு வகையிலும் அதிகமான அளவில் வேலை வாய்ப்பு அளித்த ஐந்து நிறுவனங்களுக்கு மாநில விருதுகள்.

மேற்கூறிய ஐந்து வகை ஊனமுற்றோர்களில் சிறந்த பணியாளர்களுக்கு மாநில விருதுகள்.

மேற்கூறிய ஐந்து வகை ஊனமுற்றோர்களில் ஒவ்வொரு வகையினருக்கும் கல்வி கற்பிக்கும் சிறந்த ஆசிரியருக்கு மாநில விருதுகள்.

ஊனமுற்றோருக்குப் பயிற்சி அளிக்கும் சிறந்த பயிற்சி நிலையத்திற்கும் மாநில விருதுகள்.

## உடல் ஊனம், தடுப்பு சோதனை மறுவாழ்வு தீவிர முகாம்:

இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து முத்தடுப்பு ஊசி ஆகிய மருத்துவ வசதிகளை சுமார் 20 சதவிகித குழந்தைகள் இதுவரை பெற்றுள்ளதாகத் தெரிகிறது. இத்தகைய மருத்துவ வசதியைப் பெறாத 80சதவீதக் குழந்தைகள் இளம்பிள்ளைவாதம், கக்குவான், இருமல் போன்ற நோயினால் பாதிக்கப்படும் அபாயத்திற்குள்ளாவார்கள். இளம்பிள்ளை வாதம் ஏற்பட்ட பின்பு உயரிய மருத்துவ வசதியும் நகர்ப்புற மக்களுக்குக் கிடைப்பதுபோல் கிராமப்புற மக்களுக்குக் கிடைப்பது இல்லை.

ஆகவே, குழந்தைகள் அனைவருக்கும் இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்தும், முத்தடுப்பு ஊசியும் போட்டு அதன் மூலம் ஊனம் ஏற்படும் அபாயத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடனும், கை, கால் ஊனம் ஏற்பட்டு விட்டால் அதனை முழுமையாகக் குணப்படுத்தி அல்லது அதன் கடுமையைக் குறைத்து, அவசியமானால் அறுவை சிகிச்சை செய்து அதன் பின் செயற்கை அவையவங்கள் வழங்கும்நோக்கத்துடன் ஓர் முகாம் ''உடல் ஊனம், தடுப்பு, சோதனை, மறுவாழ்வு தீவிர முகாம்'' என்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முதலாவதாக நடத்தப்பட்டது.

முதல் முகாம் 7-1-1982 மற்றும் 8-1-1982-லும் இரண்டாவது முகாம் 7-2-1982 மற்றும் 8-2-1982-லும் மூன்றாவது முகாம் 15-3-1982 மற்றும் 16-3-1982-லும் நடத்தப்பட்டன.

சென்னை, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுமுள்ள சுமார் 500க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் இம்முகாமிலே பங்கேற்றுப் பணியாற்றினார்கள்.

இம்முகாமின் மூலம் சுமார் 1,40,000 குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்தும் முத்தடுப்பு ஊசியும் போடப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஊனம் ஏற்படும் அபாயத்திலிருந்து காக்கப்பட்டு இருக்கிறார்கள்.

1981—82;ல் தமிழ் நாடு அரசு ஊனமுற்றோர் நலனுக்காக ஒதுக்கிய தொகை ரூ. 125 இலட்சம். அதனால் பயன்பெற்றவர்களின் விவரம் வருமாறு:

| வரிசை எண். | திட்டம் | பயன் பெற்றோர் |
|---|---|---|
| 1. | இலவசக் கல்வி பெற்றவர்கள் | 4400 |
| 2. | கல்வி உதவித் தொகை பெற்றவர்கள் | 9245 |
| 3. | பயிற்சியில் அமர்த்தப்பட்டவர்கள் | 937 |
| 4. | பணியில் அமர்த்தப்பட்டவர்கள் | 3115 |
| 5. | மூன்று சக்கர வண்டிகள் இலவசமாகப் பெற்றவர்கள் | 1120 |
| 6. | சக்கர நாற்காலிகள் இலவசமாகப் பெற்றவர்கள் | 100 |
| 7. | செவிப்புலன் கருவிகள் இலவசமாகப் பெற்றவர்கள் | 1088 |
| 8. | செயற்கை அவயவங்கள் இலவசமாகப் பெற்றவர்கள் | 842 |



சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள்



ஊனமுற்றோர் கலை நிகழ்ச்சி

| | | |
|---|---|---|
| 9. | சுய வேலைவாய்ப்புக்கு வங்கிக் கடனும் அரசு மானியமும் பெற்றவர்கள் | 9181 |
| 10. | இலவசக் கண்ணாடி பெற்றவர்கள் | 567 |
| 11. | இலவச ஊன்றுகோல் பெற்றவர்கள் | 430 |
| 12. | ஆதரவற்ற ஊனமுற்ற முதியோர் உதவித் தொகை பெற்றவர்கள் | 3250 |
| 13. | பிற உதவிகள் | 4200 |
| 14. | உடல் ஊனம், தடுப்பு, சோதனை, மறுவாழ்வு தீவிர முகாம் - திருச்சிராப்பள்ளி மாவட்டம்: | |
| அ) | மருத்துவ வசதி பெற்ற ஊனமுற்றோர் | 4925 |
| ஆ) | மருத்துவ வசதி பெற்ற குழந்தைகள் | 1,32,000 |

**மொத்தம் பயன் பெற்றவர்கள்:**

| | |
|---|---|
| பயன் பெற்ற ஊனமுற்றவர்கள் | 43400 |
| ஊனம் வராமல் தடுப்பு மருத்துவ வசது பெற்ற குழந்தைகள் | 1,32,000 |

**பிற சலுகைகள்:**

அரசு, அரசு சார்ந்த அல்லது உள்ளாட்சி அலுவலகப் பணிகளில் ஊனமுற்றோருக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு.

அரசுப் பணிகளில் சேர ஊனமுற்றோருக்கு உச்ச வயது வரம்பில் 10 ஆண்டுகள் தளர்த்தப்படுதல்.

பள்ளி அல்லது மருத்துவ மனைக்குச் செல்லும் ஊனமுற்றோருக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை.

அரசு அலுவலகங்களில் உள்ள மின் தூக்கி இயக்கும் பணிகள் ஊனமுற்றோருக்காகவே ஒதுக்கீடு ஆகியவைகளாகும்.

'பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி'

என்ற திருக்குறளின் கருத்தை மெய்ப்பிக்கும் வகையிலே இந்த அரசு ஊனமுற்றோர் நலன் கருதி மேற்கொள்ளும் முயற்சிகள் இவை மட்டுமல்ல; இன்னும் தொடரும்.



# ஊனமுற்றோருக்கு கூட்டுறவு அமைப்புகளின் உதவி

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் உடல் ஊனமுற்றோருக்கு 1978ஆம் ஆண்டிலிருந்தே உதவிபுரிந்து வந்துள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில், சென்னை மாநகரிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுதோறும் கிடைக்கிற இலாபத்திலிருந்து வைக்கப்பட்டுள்ள தம் பொது நல நிதியிலிருந்து, 1.24 இலட்சம் மதிப்புள்ள சக்கர நாற்காலி போன்ற துணைக் கருவிகளை 317 உடல் ஊனமுற்றோருக்கு வழங்கியும், ஏழை மகளிருக்கு ஐந்து தையல் மெஷின்களைக் கொடுத்தும், தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியும் உதவி புரிந்துள்ளன.

# தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம்

தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் முன்பு தனியார் நிறுவனமான சேலம் மாக்னசைட் பிரைவேட் நிறுவனம் இயக்கிய சுரங்கங்களை மேற்கொண்டு மாக்னசைட் கனிப் பொருள்ளை வெட்டி எடுக்க 17.1.79இல் நிறுவப்பட்டது. டான்மாக் நிறுவனம் 2400 பேர்களுக்கு வேலை அளிக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்நிறுவனம் மகத்தான முன்னேற்றத்தினைக் கண்டுள்ளது. 1981-82ஆம் ஆண்டில் (டிசம்பர் 81 வரை) இந்நிறுவனத்தின் செயல்திறன் பின்வருமாறு:—

கச்சா மாக்னசைட் உற்பத்தி (டிசம்பர் 81 வரை) 1,03,917 மெட்ரிக் டன்.

கச்சா மாக்னசைட் விற்பனை: 1,00,688 மெட்.

விற்பனை வரவு: ரூ. 410 இலட்சம்.

அகற்றப்பட்ட கழிவுகள்: 21,17,155 மெட்ரிக்டன்.

தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே ரூ. 60.64 இலட்சமும், இரண்டாவது வருடம் ரூ. 30.79 இலட்சமும் டான்மாக் நிறுவனம் நிகர இலாபமாக ஈட்டியுள்ளது. 1981-82ல் தேய்மானங்களுக்காக ஒதுக்கிய ரூ. 40.37 இலட்சம் போக, இந்நிறுவனம் ரூ. 81.22 இலட்சம் நிகர இலாபமாக ஈட்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் ரூ. 1.50 லட்சம் ஊதிய பங்காக (Dividend) அரக்குச் செலுத்தியுள்ளது.

டான்மாக் நிறுவனம் வரும் ஆண்டுகளில் தனது பணிகளை விரிவாக்க உத்தேசித்துள்ளது. கச்சா மாக்னசைட்டை விட சுத்தப்படுத்தவும், கரிந்த மாக்னசைட் மற்றும் சிறந்த தரமான மாக்னசைட் செங்கற்களை உற்பத்தி செய்யவும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உள்ளது. இதன் முதல் கட்டமாக சுழலும் சூளை ஒன்றை ரூ. 4.93 கோடி செலவில் நிறுவும். இதற்கான திட்ட அறிக்கை வரப்பெற்று இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினால், நிறுவனத்தில் இலாபம் அதிகரிப்பதுடன், வேலை வாய்ப்பும் பெருகும்.

# தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறுவப்பட்டு 1975ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் இயங்கத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் உப்பு தயாரித்தலும் மற்றும் உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதும் ஆகும்.

வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதுமான இராமநாதபுரம் மாவட்டத்தில் 5617 ஏக்கராக்கள் மொத்தப் பரப்பளவு கொண்ட மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டத்தை நிறுவனம் மேற்கொண்டது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 145 இலட்சம். இத்திட்டத்திற்காக இதுவரை சுமார் ரூ. 105 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. உப்பு உற்பத்தி 1976ஆம் ஆண்டுமுதல் தொடங்கியது. 1981ஆம் ஆண்டு முதல், இரசாயனத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய தரமான உப்பு தயாரிக்கப்படுகிறது. தவிரவும் இவ்வாண்டு முதல் பொடி செய்த உப்பு தயார் செய்யப்பட்டு (500 கிராம் பாக்கெட்) விற்பனை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலமாக சுமார் 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் மற்றும் 1000 நபர்களுக்குப் பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மரவக்காடு வடக்காடு கிராமங்களில் 4092 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யும் திட்டம் தயாரிக்கப்பட்டு, 1979ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.120 இலட்சமாகும். இத்திட்டத்தில் உப்பு உற்பத்தி 1982ஆம் ஆண்டுதொடங்கும். இத்திட்டத்தின் மூலமாகத் தற்போது 20 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு மற்றும் 300-600 நபர்களுக்குப் பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கழுவேலி சதுப்பு நிலப்பகுதியான கண்டாடு பகுதியிலும், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வட செம்மஞ்சேரி பகுதியிலும் உப்பு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு கூடிய விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது. மாரியூர் வாலிநோக்கம் உப்புத் திட்டத்தில் உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# கோயம்புத்தூர் கோட்டத்தில் ஊரக வளர்ச்சிப் பணிகள்

கோவை கோட்டத்திற்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகள் ரூ 1,10,000 கிராமக் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ 5,12,000 செலவிலும், பள்ளிக் கட்டடங்கள் ரூ 6,60,000 செலவிலும், சமூக கல்விக்காக ரூ 15,000 செலவிலும், தாய்சேய் நலப்பணிகள் ரூ 30,500 செலவிலும், குறைந்த பட்ச தேவைத் திட்டம் ரூ 14,000 செலவிலும், குடும்பநலத்திற்கு மருந்துகள் வாங்க ரூ 12,000 செலவிலும், ஆசிரியைக் குடியிருப்புக்கு 5,800 செலவிலும், ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள் இறந்துவிட்டால் ஈமச் சடங்கிற்கு ரூ 40,000 செலவிலும், பட்டினிச் சாவைத் தடுப்பதற்கு ரூ 4,000 செலவிலும், வேளாண்மை வளர்ச்சிக்கு ரூ 1,80,000 செலவிலும், கால்நடைப் பராமரிப்பிற்கு ரூ 47,000 செலவிலும், மதிய உணவுத் திட்டம், 20,000 செலவிலும், தாய்சேய் பராமரிப்பிற்கு ரூ 3,28,000 செலவிலும் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.



# திரைப்படப் பயிற்சி நிலையம் ஆண்டு விழா!

— பி.எல். சுந்தர்

தமிழ்நாடு அரசு திரைப்படம்-தொலைக்காட்சி பயிற்சி நிலையத்தின் ஆண்டு விழா, சென்னை அடையாறிலுள்ள திரைப்படப் பயிற்சிக் கல்லூரியில் மிகச் சிறப்பாக (25-4-1982) நடைபெற்றது.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் (இ.ஆ.ப.) அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் மாண்புமிகு நீதிபதி திரு எஸ். சாமிக்கண்ணு, படத்தயாரிப்பாளர் திரு கே. பாக்கியராஜ், திரைப்பட இயக்குநர் திரு புல்லையா முதலானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

திரைப்படக் கல்லூரி மாணவர் திரு நித்தியானந்தம் வரவேற்புரையாற்றினார்.

**அமிர்தலிங்கம்**

திரைப்பட - தொலைக்காட்சி பயிற்சி நிலையத் தலைவரின் பொறுப்பு அதிகாரி திரு அமிர்தலிங்கம் அவர்கள் தனது துவக்க உரையில் குறிப்பிட்டதாவது:

திரைப்படக் கல்லூரியின் எல்லா வகையான முன்னேற்றத்திற்கும் தமிழக அரசு பெரிதும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

12.6 இலட்சம் ரூபாய் திட்டத்தில் இங்கே ஒரு ஒலிப்பதிவு நிலையம் அமைக்கப்படுகிறது.

இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு விடுதியில்லாக்குறை நீங்குவதற்காக 30 அறைகளைக் கொண்ட மாணவர் விடுதியொன்று அடுத்த ஆண்டு இறுதிக்குள் கட்டப்படும்.

15 இலட்சம் ரூபாய் செலவில் திரைப்படச் சுருளுக்கு வண்ண மேற்றும் பிரிவு ஒன்று அமையவிருக்கிறது. டப்பிங் தியேட்டர் ஒன்றும் இங்கே கட்டப்படவிருக்கிறது.

இப்படி இந்தியாவிலேயே இதைச் சிறந்த ஒரு அமைப்பாக ஆக்க நமது அரசு தனிக் கவனம் செலுத்திவருகிறது.

**நாகராஜன்**

திரைப்படக் கல்லூரி முதல்வர் திரு நாகராஜன் அவர்கள் பேசுகையில்-''யார் குறுக்கீடும் இன்றி இங்குள்ள மாணவ மாணவிகள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். எல்லோரும் சகோதர பாசத்தோடு பழகுகிறார்கள். ஆழ்ந்த நுணுக்கத்தோடு இங்கே பயிற்சியளிக்கப்படுவதால், இங்கிருந்து செல்வோர் மேனாட்டு நிபுணர்களாலும் போற்றிப் புகழப் படும் நிலை இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

**கே. ஏ. சுந்தரம்**

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் (இ.ஆ.ப.) அவர்கள் பேசியதாவது:

இந்தியாவிலேயே முதன் முதலில் துவக்கப்பட்ட தொன்மைச் சிறப்புடையது இந்த நிறுவனம். பூனாவில் கூட இதற்குப் பிறகு தான் துவக்கப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் இங்கிருந்து எழுபதுக்கும் மேலான மாணவ மாணவியர், பயிற்சி பெற்று வெளியே சென்று கொண்டிருக்கின்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களும் இந்த நிறுவனத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கரை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, இத்தருணத்தை நாம் நல்ல விதமாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த நிறுவனம் நல்ல முறையில் வளர்ந்தால், நம் குழந்தைகள் முன்னேற்றம் நல்லபடி இருக்கும் என்ற எண்ணம் இங்கு படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஏற்பட்டாக வேண்டும்.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் ஒற்றுமையோடிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயிற்சி முடிந்து வெளியேறும் மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்று கூறி மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

**பி. புல்லையா**

திரைப்பட இயக்குநர் திரு பி. புல்லையா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

கலைக்குடும்பத்தைச் சேர்ந்தவரான எம். ஜி. ஆர் அவர்கள் இந்த நாட்டின்முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் கலையுலகம் எல்லா வகையிலும் மேம்பட்டு வருகிறது. அவருக்கு அடுத்தபடியாகத்தான் அமெரிக்க நாட்டில் ரீகன் வெற்றி பெற்றார். செய்தித்துறை அமைச்சராக இருக்கிற ஆர். எம். வீ. அவர்களும் கலைக்குடும்பத்தைச் சேர்ந்தவர்தான்.

இந்தத் திரைப்படக் கல்லூரி போன்ற கலை நிறுவனங்களுக்கு அவர்களெல்லாம் உறுதுணையாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இங்கே, படத்தொகுப்புப் பிரிவில் சில பெண்களும் முன்வந்து பயிற்சி பெறுவதானது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இங்கிருந்து பயிற்சி பெற்றுச் செல்கிறவர்கள், உங்களிடமிருந்து மக்கள் புதுப்புதுத் திறமைகளை



எதிர்பார்க்கிறார்கள் என்பதை நினைவிற்கொள்ளவேண்டும்.

**ரமேஷ்**

பிரசாத் கலர் லேபரட்டரியைச் சேர்ந்த திரு ரமேஷ் அவர்கள் பேசுகையில் 1980-ல் ஹான்வுட் பெண்ணொருத்தி சிறந்த படத் தொகுப்பாளருக்கான பரிசு பெற்



றதைக் குறிப்பிட்டுக்கூறி, "வரும் ஆண்டிலிருந்து இங்கே பயிற்சி பெற்று வெளி வரும் சிறந்த படத் தொகுப்பாளருக்கு எங்கள் அறக் கட்டளை மூலம் பரிசு வழங்கப் படும்'' என்று தெரிவித்தார்.

**என். கிருஷ்ணசாமி**

திரைப்படக் கல்லூரியில் முதல் மாணவராகச் சேர்ந்த சிறப்பு டையவாரன திரு என். கிருஷ்ண சாமி அவர்கள் பேசுகையில்_இக் கல்லூரி ஆரம்பத்தில் வெறும் 17 ஆயிரம் ரூபாயில்தான் துவக் கப்பட்டது என்றும், பிறகு தாமெல்லாம் முயன்றதன் பேரில் அப்போது தொழிலமைச்சராக இருந்த வி.வி. கிரி அவர்கள் மூலம் இரண்டேகால் இலட்சம் ரூபாய்க்கு அனுமதி கிடைத்த தென்றும் தெரிவித்து இதன் வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் ஒத்துழைக்கத் தயாராக இருப்ப தாகவும் கூறினார். தமது அறக் கட்டளை சார்பில் சிறந்த ஒலிப் பதிவாளருக்காக ரூ. 2000 பரிச ளிப்பதாக உறுதி கூறினார்.

**எஸ். சாமிக்கண்ணு**

மாண்புமிகு நீதிபதி திரு எஸ். சாமிக்கண்ணு அவர்கள் பேச்சு விவரம் வருமாறு:—

இயல், இசை, நாடகம் என்று, எந்த மொழியிலும் இல்லாத பகுப்பு முறை தமிழிலே இருக் கிறது. இயற்றமிழும், இசைத் தமிழும் இணைந்ததே நாடகத் தமிழ்.


பம்மல் சம்பந்த முதலியார், டி.கே. சண்முகம் போன்றவர் களும், நாரண துரைக்கண்ணன், எஸ்.வி. சகஸ்ரநாமம், பேரறி ஞர் அண்ணா, சங்கரதாஸ் சுவா மிகள், கே.பி. சுந்தரம்பாள், எஸ்.ஜி. கிட்டப்பா, ராஜாம்பாள், எம். எஸ். சுப்புலட்சுமி, பாலா மணி, கந்தசாமி முதலியார், கன் னையா நாயுடு போன்ற பலரும் நாடகத் தமிழின் வளர்ச்சிக்காக ஆற்றிய அரும்பணிகள் மகத்தா னவைகளாகும்.



திரைப்படத் துறைக்குத் தாய் போன்றது நாடகத்துறை.

திரைப்படக் கல்லூரியைச் சேர்ந்த நீங்களெல்லாம் கடமை யுணர்வும் கட்டுப்பாட்டு உணர் வும் மிக்க ஆசிரியர்களால் உரு வாக்கப்பட்டிருப்பதால் - வருங் காலத்தில் தலைசிறந்த நடிகர் களாக, எடிட்டர்களாக, டைரக் டர்களாக, பலதுறைக் கலைஞர் களாக, விளங்குவீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

நடிப்பு ஒரு தெய்வீகமான தொழிலாகும். மற்றவர்களுக்குக் கிடைக்கும் மரியாதை இத்துறை யைச்சேர்ந்தவர்களுக்கும்கிடைக் கவேண்டும். தமிழ்நாட்டில் மட் டும் தான் இப்போது நடிப்புக் கல் லூரி இருக்கிறது என்பது பெரு மைக்குரியதாகும். இதிலுள்ள இடங்களின் எண்ணிக்கை அதி கரிக்கப்படவேண்டும். திரைப் படக் கல்லூரி, கல்லூரி என்ற நிலையிலிருந்து பல்கலைக்கழ கம் என்ற அளவுக்கு விரிவடைய வேண்டும் என்பது என் ஆசை.



இக்கல்லூரியைச் சேர்ந்த நீங் களெல்லாம் உலகமே வியக்கும் அளவுக்கு உயர வாழ்த்துகிறேன்.

**பழநியப்பன் ராமசாமி**

ஜெமினி கலர் லேபரட்டரியைச் சேர்ந்த திரு பழநியப்பன் ராம சாமி அவர்கள் பேசுகையில், படச் சுருளுக்கு வண்ணமூட்டுதல் பிரிவில் சிறந்த மாணவராகத் தேர்ச்சி பெறுபவருக்கு ஜெமினி அறக்கட்டளை மூலம் அடுத்த ஆண்டிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் பொறுப்பு நிதி வழங்குவ தாக அறிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் ''படத் தயாரிப்பாளர், படத் திற்கு நிதி உதவுபவர் ஆகிய இரண்டு விஷயத்திற்குத்தான் இக்கல்லூரியில் பயிற்சி அளிக்கப் படவில்லை. அதற்கும் இங்கே பயிற்சி வகுப்புகள் தொடங்கப் படவேண்டும். இங்கே பட்டம் பெற்று வெளியேறும் மாணவர் கள் கூட்டாகப் படம் பிடிக்கலாம். திரையுலகில் உங்கள் எல்லோ ருக்குமே வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. நம்பிக்கையோடு இருந்து முன்னேறுங்கள்'' என் றார்.

**கே. பாக்கியராஜ்**

திரைப்படக் கல்லூரி மாணவ- மாணவியரிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டி, நடிப்புப் போட்டி, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் வெற்றி பெற்ற அனைவருக்கும் திரைப்படத் தயாரிப்பாளர் திரு கே. பாக்கியராஜ் பரிசுகள் - சான் றிதழ்கள் வழங்கினார்.

பின்னர் அவர் உரையாற்று கையில் குறிப்பிட்டதாவது:

இந்தத் திரைப்படக் கல்லூரி யிலே பயின்ற முருகேசன் என்ப வருக்கு எங்கள் கம்பெனியில் அசிஸ்டென்ட் டைரக்டராக வேலை தந்தேன். அவர்தான் என் படத்திற்குச் 'சுவரில்லாத சித்திரங்கள்' என்று பெயரிட்ட வர். அவர் இப்போது, 'கேள்வியும் நானே, பதிலும் நானே' என்ற படத்தை டைரக்ட் செய்கிற அளவிற்கு உயர்ந்திருக்கிறார். ஆனால் அவர் இங்கே படித்தது வேறு ஒன்றுக்கு! அதேபோல் இங்கு நடிப்புப் பிரிவில் படித்த வேறு ஒருவர் இப்போது என்னிடம் அசிஸ்டெண்ட் டைரக்டராகப் பணியாற்றி வருகிறார்.

இதை நான் இங்கே சொல்லக் காரணம் - இக்கல்லூரியில் பயிற்சி முடிக்கும் மாணவர்களின் எதிர்காலம் பற்றியும் நாமே ஏதாவது ஏற்பாடு செய்து அதே துறையில் அவர்கள் வளர வழி வகை செய்வது நல்லது.

திரைப்படத் துறையில் பணி யாற்றும் எங்களுக்கும் இங்கே பயிலுகிறவர்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லாமல் இருக்கி றது. நாங்கள் படங்களைத் தயா ரிக்கும் போது, இங்குள்ள ஒவ் வொரு துறை மாணவர்களும் ஸ்டுடியோவுக்கு வருவார்களா னால் 'பிராக்டிகலாக' அவர்கள் பல விஷயங்களை நேரில் தெரிந்து கொள்ளலாம். நாங்களும் இந்த மாணவர்களின் திறமையை நேரில்புரிந்துகொள்ளவாய்ப்பேற் படும். அப்படியொரு தொடர்பை எங்களுக்கும் இவர்களுக்குமி டையே உண்டாக்குவது நல்லது.

இங்கே பயிற்சி பெறும் மாண வர்களை வைத்து, ஆண்டுக்கு ஒரு 'கமர்சியல்' படம் எடுத்து வெளியிடலாம். அப்படிச் செய் தால் இங்கே தயாராகும் மாண வர்களின் பல துறைத் திறமை களையும் வெளியே உள்ள படத் தயாரிப்பாளர்கள் உணர்ந்து இவர்களுக்கு வாய்ப்புத் தரக் கூடும்.

—இவ்வாறு படத்தயாரிப்பா ளர் திரு கே. பாக்கியராஜ் பேசி னார்.

**பரிசுகள்**

மாண்புமிகு நீதிபதி திரு சாமிக் கண்ணு அவர்கள், திரைப்படக் கல்லூரியின் பல்வேறு பிரிவுகளி லும் முதன்மை பெற்றோருக்கு இயக்குநர் கே. சுப்பிரமணியம் அறக்கட்டளை, வெங்கட் நினைவு நிதி, சித்திரமகால் கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை, ஏவி. எம். நினைவுநிதி, ஏவி. எம். அறக்கட்டளை, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் சுழல் பரிசுத்திட்டக் கேடயம் ஆகிய வற்றை வழங்கிவாழ்த்தினார்.

பின்னர் கல்லூரி மாணவர்கள் சார்பில் திரு மஞ்சுநாதன் நன்றி கூறினார்.

விழா முடிவில், திரைப்படக் கல்லூரி மாணவ மாணவியர் பங் கேற்ற- ஓரங்க நாடகம், ஒற்றை நபர் நடிப்பு, யோகாசனங்கள், ஆங்கில நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிறகு, செக்கோஸ்லாவேகிய நாட்டுத் திரைப்படம் ஒன்று காட்டப்பட்டது.

# வேளாண்மைத் தொழில் இணையகம்



தமிழ் நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் 1966-ம் ஆண்டு திறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் :

1) வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவற்றை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

2) உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். இதில் ரூ. 360 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத் தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 195 இலட்சமும் இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.

விவசாயத்திற்கு இன்றியமையாததும், பெருமளவு பயன்படுத் தப்படுவதுமான உரத்தின் பெருகி வரும் தேவையை ஈடுகட்டும் வகை யில் உழவர்களுக்குத் தங்களுடைய தேவைகளுக்கேற்ப நியாயமான விலையில் தரமுள்ள உரத்தை வழங்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் சென்னையிலுள்ள மெஸர்ஸ் சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் உற்பத்தி செய்யப்படும் உரவகைகளை விநியோகம் செய்யும் உரிமையை 1979-80-ம் ஆண்டில் பெற்றது. இக்கழகம் மேலும் மங்களூர் பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடட் என்ற நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் யூரியா உரத்தையும், இண்டியன் பெர்டிலைசர்ஸ் அண்டு பார்மர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைட்டி லிமிடெட் என்ற நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் உரக்கலவைகளையும் விநியோகிக்கும் உரிமையையும் பெற்றுள்ளது சென்ற 1979-80-ம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட 8040 மெ டன் அளவிற்கெதிராக, 1980-81 ஆண்டில் 18405 மெ. டன் அளவு உரத்தை விற்றுள்ளது. 1981-82-ம் ஆண்டில்-டிசம்பர் திங்கள் முடிய 19658 மெ. டன் அளவு உரத்தை விற்பனை செய்துள்ளது. 1981-82-ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மூன்று மாதங்களில் 10947 மெ. டன் அளவு உரத்தை விற்பனை செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.





# விளையும் பயிர்

சீறு தரும்பும் பல்குத்த உதவும் என்பார்கள். அதைப் போல நமக்கு வேண்டாத பொருள்களையும் நாம் பயன் படுத்தலாம்.

துண்டுக்காகிதம், துணி, கண்ணாடி இப்படி எதையும் கலைக் கண்ணோடு பார்த்தால், அது ஒரு கலைப் பொருளாக உருவாகிவிடும்.

பென்சிலை சீவுகிறோம். எழுதுகிறோம். ஆனால், சீவிய பென்சிலிலிருந்து விழும் மரச் சீவலைப் பயன்படுத்த முடியுமா? முடியும் என்கிறான், ஒரு பள்ளி மாணவன். அவன் பெயர் பி. மனோகர். புளியங்தோப்பு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் எட்டாவது படிக்கும் இம் மாணவனுக்கு வயது 14.

அண்மையில் நடந்த அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-மாநக ராட்சி அரங்கில், இம்மாணவன் பென்சில் சீவலை வைத்து அதை ஒரு அட்டையில்மலராக உருவாக்கி பதிக்கிறார். இதே போல மரத்தூள், கழிவுக் காகிதம் போன்றவற்றுக்கும் உருவம் கொடுத்து அதைக் கணகவர் பொருளாக மாற்றும் இந்த மாணவனின் தந்தை, ஒரு கைத்தொழில் ஆசிரியர்.

**மாணவர் பக்கம்**

விடுமுறை நாட்களில் வீணாகப் பொழுதைப் போக்கா மல், பயனுள்ள வகையில், ஏதாவது சித்திரம் வரைந்து கொண்டும், புதுப்புது வடி வமைப்புகளில் வாழ்த்து அட்டைகள் தயாரித்துக் கொண்டும் இருப்பதை நாம் வெகுவாகப் பாராட்ட வேண்டும்.



## தார் மணலிலிருந்து பெட்ரோல் எடுக்கச் சிக்கனமான புது வழி

தார் மணல் பெருமளவில் கனடா, அமெரிக்க நாடுகளில் கிடைக்கிறது. இதி லிருந்து பெட்ரோலியம் எடுக்க முடியும்.

தார் மணலிலிருந்து பெட்ரோல் எடுக்க ஒரு சிக்கனமான வழியைக் கனடா - அமெரிக்கக் கம்பெனி ஒன்று கண்டுபிடித்திருக்கிறது. இப் புது வழி முறை சுற்றுச் சூழ்நிலையைக் கெடுப்பதும் இல்லை என்பது அதன் மற்றொரு சிறப்பு.

இன்றுள்ள முறைப்படி தார் மணலிலிருந்து பெட்ரோலைப் பிரித்தெடுக்க வெந்நீரும் காஸ்டிக் சோடாவும் பயன்படுகின்றன. பெட்ரோலைப் பிரித்த பின் இந்த அழுக்குத் தண்ணீரை வெளியே குட்டைகளில் நிரப்பு வர்; அங்கே சோடா உப்பு மெல்லக் கீழே படியும்.

புதிய முறையில், எண்ணெயைக் கவரும் பொருள் பூசிய சுமை தாங்கிச் சல்லடைப் பட்டையின் மேல் தார் மணல் கலந்த நீர்க் கலவையை ஓட விடுவார்கள்; அந்தப் பட்டையின் சல்லடைக் கண்கள் வழியே நீரும் மணலும் கீழே ஒழுகிவிடும்; எண்ணெய் மட் டும் பட்டையில் பூசியுள்ள எண்ணெய்-கவர் பொருளால் இழுத்து வைத்துக் கொள்ளப் படும்.

பட்டையில் ஒட்டியுள்ள கச்சா எண்ணெயை அதிலிருந்து பிரித்து, கார்களுக்கும் விமானங் களுக்கும் உரிய பெட்ரோலாகவும் பிற பெட்ரோலியப் பொருள்களாகவும் மாற்று கிறார்கள்.

இந்தப் புது முறைப்படி தார் மணலின் உள்ள எண்ணெய் 98 அல்லது 99 பங்கு கைக்குக் கிடைத்து விடுகிறது. கலப்பதற்குப் பயன்பட்ட தண்ணீரைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தலாம்.

கனடாவில் ஆல்பெர்ட்டா மாநிலத்தில் வின்குரூடு கனடா லிமிட்டெட்டு என்ற கம்பெனியின் ஆலையில் இந்தப் புது முறையைப் பயன்படுத்த ஏற்பாடாகியுள்ளது.

## சேரிடம் அறிந்து சேர்!

தங்கத தோடு சேர்ந்திடின்
வைரத் திற்குப் பெருமையே!
தகரத் தோடு சேருமேல்
தகுதி இழந்து போகுமே!

பொங்கும் பாலைச் சேர்ந்திடின்
தேனின் சுவையோ மிகுதியே!
புழுதி யோடு சேருமேல்
தேனும் புழுதி யாகுமே!

பச்சை வயலைச் சேர்ந்திடின்
பருவ மழைக்குப் பெருமையே!
பாலை வனத்தைச் சேருமேல்
பயனில் லாமல் வறளுமே!

பச்சை மயிலைச் சேர்ந்திடின்
பசுங்கி ளிக்குப் பெருமையே!
பாழும் கழுகைச் சேர்ந்திடின்
பாவம் கிளிக்குச் சிறுமையே!

சேரி டத்தை அறிந்துசேர்!
சீரும் சிறப்பும் அடையலாம்!
சூழ்நிலையால் தம்பி! நீ!
இமயம் அளவும் உயரலாம்!

—குமணன்,




# மாணவர்கள் கண்டுபிடித்த சூரிய அடுப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் துறைப் பேரா சிரியர் திரு வீர. முத்து வீரப்பன், துணைப் பேராசிரியர் திரு அரு. ராமநாதன் ஆகியோர் தங்கள் மாணவர்களான சி. திருமேனி, மு. வீரப்பன் ஆகிய இரண்டு இயந்திரப் பொறியியல் துறை யைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவர்கள் கண்டுபிடித்த சூரிய அடுப்பை செய்தியாளர்களுக்கு முன்னால் பயன்படுத்தி, சோறு, குழம்பு, கூட்டு இவைகளை ஒரு மணி நேரத்தில் சுவையாகவும், சத்துள்ள உணவாகவும் அளித் துள்ளார்கள்.

2 அடி நீளம் 2 அடி அகலம் கொண்ட மரப் பெட்டியில் அலு மினியத்தகடு கண்ணாடி பொருத்தி செய்யப்பட்டு இருந் தது. நாம் குக்கரில் சமையல் செய் யும் பொழுது எப்படி அளவான அரிசி, தண்ணீர், கறிகாய்கள் சேர்ந்து கூட்டு, குழம்பு தனிப் பாத்திரங்களில் வைக்கின் றோமோ, அதேபோல் இந்தப் பெட்டிக்குள் தனித்தனியாக வைத்துவிட்டு முதலாவது கண்ணாடிக் கதவை மூடி விட வேண்டும். இரண்டாவது கண்ணாடிக் கதவை, நிமிர்த்தி அதனுடைய சூரிய ஒளி மூடப் பட்ட கண்ணாடிக் கதவின் மேல் படும்படி வைக்க வேண்டும். இந்த வகையில் 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு, ஒரு மணி நேரத் தில் உணவு தயாராகிவிடுகின்றது!

இந்த நேரத்தில், சமைப்பவர் கள் அதனிடத்தே கவனம்செலுத் தத் தேவையில்லை. மற்ற வேலைகளில் ஈடுபடலாம். மேலும், இதை ரூ. 350ல் தயா ரிக்கலாம். பத்தாண்டுக் காலத் திற்கு மேலாகப் பயன்படுத்த லாம். இதை உபயோகப் படுத்தும் காரணத்தால், விறகு, கரி, மண்ணெண்ணெய், காஸ்(எரி வாயு) போன்ற எரிபொருள்கள் தேவையில்லாமல் போய்விடுகின் றது. இது ஏழை எளிய மக்களுக் குப் பயனுள்ளதாக அமைக்கப் பட்டுள்ளது. இதற்காக மாதாந் திர தனிச் செலவு கிடையாது. ஆனால், நம் நாட்டில் 8 மாதங் கள் வெய்யில் உள்ளது. எட்டு மாதங்களுக்கு இதைப் பயன் படுத்தலாம் என்றும், இந்த எட்டு மாதங்களுக்கு எரிபொருள் செலவு மிச்சம் என்றும், இது மேலும் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் ஆராய்ச்சி செய்து வரு வதாயும், மேலும் இதை அதிக அளவில் தயாரித்தால், அதன் விலை குறையும் என்றும் பேரா சிரியர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சாதனத்தைக் கண்டு பிடித்த மாணவ மணிகளை, பல் கலைக் கழகத் துணை வேந்தர் திரு சை.வே. சிட்டிபாபு அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.



விற்பன்னராக விளங்கினார். இவரது சொற்பொழிவுகள் அனைத்தும் அக்காலத்தில் மொழித்துறையில் மாபெரும் மலர்ச்சியை ஏற்படுத்தியது எனலாம்.

இசையாத உள்ளங்களை இணைக்கும் பாலமாகத் திகழ்ந்த தமிழிசையியக்கத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தேடினார். தமிழிசையை துக்கடாவாகக் கருதிய தமிழ்ப் பெருமக்களின் உள்ளங்களிலே விழிப்புணர்வை ஏற்படுத்திய பெருமையை நினைக்கும்தோறும் நெஞ்சம் நெகிழ்ச்சியடைகிறது.

பண்டிதமணியவர்களின் நிர்வாகத்திறமை அனைவரும் வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பல பொறுப்புகளில் பல்லாண்டு தொடர்ந்து பணியாற்றியதே இவரது நிர்வாகத் திறமைக்குச் சீரிய சான்றாகும். கனிவு காட்ட வேண்டிய நேரத்திலே கனிவும் கண்டிப்போடு செயல்பட வேண்டிய நேரத்தில் கண்டிப்பும் கொண்டு பணியாற்றி அனைவரின் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராகத் திகழ்ந்தார்.

தன் கருத்துக்களைத் துணிவோடு வற்புறுத்தும் அதே நேரத்தில், மாற்றுக் கருத்துள்ள பல அறிஞர்களுடன் நட்புறவுடன் பழகிய தன்மை மிகவும் போற்றுதற்குரிய ஒன்றாகும். பண்டிதமணியவர்களின் ஆற்றலை உணர்ந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் ''முதுபெரும்புலவர்'' என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தது. அவ்வாறே 'பல்கலைமணி' என்ற பட்டம் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையால் வழங்கப்பட்டது. செட்டிநாட்டுப் பகுதியில் தமிழ்வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு, 1909-ஆம் ஆண்டில் பண்டிதமணியவர்களின் முயற்சியால் மேலைச் சிவபுரியில் நிறுவப்பட்ட சன்மார்க்க சபை என்ற அமைப்பு கணேசர் செந்தமிழ்க்கல்லூரியை நிறுவி இன்றளவும் ஆற்றி வரும் தமிழ்த் தொண்டு பண்டிதமணியவர்களின் இறவாப் புகழுக்குச் சான்றாகத் திகழ்கிறது. பண்டிதமணியவர்களின் இலக்கியத் தொண்டினைப் பாராட்டி 1951-ஆம் ஆண்டு குன்றக்குடியில் அவருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

தாய்மொழியாம் தமிழின்மீது தணியாக் காதல் கொண்ட பண்டிதமணியவர்கள் தமிழின் சிறப்பிலும், வளர்ச்சியிலும் வைரநம்பிக்கை கொண்டு பணியாற்றினார்கள். தமிழ் வளர்ச்சிக்கு ஏற்படும் தடைகளைக் கேடயமாக நின்று எதிர்த்துப் போராடினார்கள். தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அந்தக் காலத்திலேயே பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே துணிந்து வரவேற்றுச் செயலாற்றியவராவார். ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்து பணியாற்றிய ஒரு சில தமிழறிஞர்களுள் பண்டிதமணியும் ஒருவராவர். தமிழ் உலகமொழியாக விளங்க ஆங்கிலமே என்றும் துணை நிற்கும் என்பது அன்னாரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அவ்வாறே தமிழ்பயிற்றுமொழிக் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, தெளிவாக அக்கருத்தினை வலியுறுத்தி வந்தார்.

எழுபது ஆண்டுகளுக்கு மேல் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த பண்டிதமணியவர்கள் 1953-ல் அமரரானார். அய்யா அவர்கள் மறைந்து விட்டாலும் அவர் விட்டுச் சென்ற தமிழ்ப் பணி, மொழியார்வம் என்றென்றும் நம் நெஞ்சங்களில் தமிழுள்ளவரை நிலைத்து நின்று நலம் பயக்கும் என்பதில் ஐயமில்லை. பண்டிதமணியவர்களின் இலட்சியப் பாதையில் நாம் அனைவரும் பீடு நடைபோட்டுத் தமிழ்நாட்டில் பொற்காலம் காண்போம்!

## கோவை மாவட்டத்தில் கிராமப்புற மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள்

**கோ**வை மாவட்டத்தில் உள்ள அன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் 26 கிராமங்கள் குடிநீர் பெறும் வகையில் ரூ 14,00,000 செலவிலும், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்தில் 22 கிராமங்கள் குடிநீர் பெறும் வகையில் ரூ 23,61,000 செலவிலும், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தில் 15 கிராமங்கள் குடிநீர் பெறும் வகையில் ரூ 17,47,000 செலவிலும், மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் 9 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 13,60,000 செலவிலும், தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 18 கிராமங்கள் குடிநீர் பெறும் வகையில் ரூ 13,94,000 செலவிலும், காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் 44 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 39,68,000 மதிப்பீட்டிலும், சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 23 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 39,58,000 செலவிலும், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் 20 கிராமங்கள் குடிநீர் பெறும் வகையில ரூ 40,00,000 செலவிலும், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் 52 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 53,91,000 செலவிலும், அவிநாசி ஊராட்சி ஒன்றியத்தில் 18 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 27,43,000 செலவிலும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் 9 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 3,85,000 செலவிலும், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 10 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 13,00,000 பெறும் வகையிலும், பெரிய நாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் 8 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி பெறும் வகையில் 2,55,000 செலவிலும், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 7 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 8,00,000 செலவிலும், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 4 கிராமங்கள் குடிநீர் வசதி பெறும் வகையில் ரூ 5,00,000 செலவிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.





# தொழிலாளர் நல அமைச்சர் சுற்றுப்பயணத்தில்...

**மா**ண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் 23.4.82 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அரவக்குறிச்சி சட்ட மன்றத் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்தார்கள். அவ்வமயம், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.26,503 செலவில் கட்டப்பட்டுள்ள முன்னூர் ஊராட்சி அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள். தமது உரையில் ''அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதிக்கு மட்டும் குடிநீர்த் திட்டத்திற்காக ரூ. 90 இலட்சம் செலவு செய்து இருக்கிறோம். இன்னும் 22 இலட்சம் செலவு செய்ய இருக்கிறோம். சென்னையில் ரூ. 350க்கும் கீழ் மாத வருமானம் உள்ள குடிசையில் வாழ்பவர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் சுமார் ரூ. 14,500- மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடுகளை ரூ 20-க்கு வாடகைக்குக் கொடுக்கிறோம்.

குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்று திட்டம் போட்டு இருக்கிறோம். அதற்கான விவரங்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தகவல்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறோம். ஏழை எளிய குழந்தைகளுக்கு ஒரு வேளையாவது சத்துணவு வழங்க திட்டமிட்டு ரூபாய் 100 கோடி ஒதுக்கி இருக்கிறோம். இதற்காக சுமார் 25,000 கட்டடங்களைக் கட்ட திட்டமிட்டு இருக்கிறோம். இத்திட்டத்திற்காகப் பெண்களை நியமிக்க இருக்கிறோம். இதில் குறிப்பாக, விதவைப் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க இருக்கிறோம். முதியோர் ஓய்வுத் தொகை ரூ. 25 என்று இருந்ததை ரூ. 35 ஆக உயர்த்தி இருக்கிறோம்'' என்று குறிப்பிட்டார்.

பிறகு, அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மொண்டியத்தான் காரை கிராமத்தில் ரூ. 56,000 மதிப்பீட்டில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அரவக்குறிச்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெடிக்காரன்பட்டி என்ற கிராமத்தில் சுமார் ரூ. 56,000 செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சிஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது; ''திருச்சி மாவட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையில் 4ல் ஒரு பகுதியை இப்பகுதிக்குச் செலவு செய்து இருக்கிறோம். பள்ளி கட்டடமாக இருந்தாலும்; சாலை வசதிகளாக இருந்தாலும் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறோம். புரட்சித்தலைவர் ஆட்சியிலே தான் ஆதிதிராவிடர் மக்களுக்கு ரூபாய் 3,200 வீடுகட்டிக் கொள்வதற்காகக் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக கடனாகக் கொடுக்கிறோம். இதில் ரூ. 1000 அரசு மானியமாகக் கொடுக்கிறது. மீதமுள்ள ரூ. 2,200 ஐ 20 ஆண்டுத்தவணையில் குறைந்த வட்டியில் வசூல் செய்கிறோம். ஆதி திராவிடர் அல்லாதோருக்கும் ரூ. 3,200 கடன் கொடுக்கிறோம். இவர்கள் ஆதி திராவிடர்களோடு ஒட்டி வீடு கட்டி வாழ முன்வந்தால், அவர்களுக்கு ரூ. 1,000 மானியமாக அளிக்கிறோம். மீதமுள்ள தொகை ரூ. 2,200ஐ 20 ஆண்டு கால தவணையில் குறைந்தவட்டியில் வசூல் செய்கிறோம்.

24.4.82 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்திலுள்ள வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் சுற்றுப்பயணம் செய்தார்கள். முதலாவதாக இராமகிரியில் ரூபாய் 93,000 மதிப்பீட்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பாலத்தைத் திறந்துவைத்தார்கள்.

அடுத்து, எல். புதூரில் சுமார் 260 பேர் மக்கள் தொகை உள்ள இக்கிராமத்தில் ரூ. 93,100 மதிப்பீட்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேல் நிலை நீர்த் தேக்கத்தொட்டியினைத் திறந்து வைத்தார்கள். இம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு 15,000 லிட்டர் ஆகும். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது: ''இந்தியாவிலேயே கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்கக் கூடிய அரசு புரட்சித் தலைவர் அரசு தான் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் தண்ணீரைக் குடிப்பதற்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும், குளிப்பதற்கோ, பாத்திரம் கழுவுவதற்கோ, ஆடுமாடுகளைக் கழுவுவதற்கோ, பயன்படுத்தக்கூடாது. கூட்டுறவு வங்கிகள் மூலமாக வாங்கிய கடனைத் திருப்பிக்கட்ட, தானாகவே முன் வரவேண்டும்'' விழா நிகழ்ச்சியில் திரு வெள்ளைச்சாமி மற்றும் 20 பேர்கள் கூட்டுறவு வங்கி மூலம் வாங்கிய கடனில் ரூ. 1000வீதம் தானாகவே முன் வந்து செலுத்தினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள். மேலும் ரூ. 2500- மதிப்பீடுள்ள 50 பால் மாடுகளை விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

அடுத்து, வெள்ளப்பாறை என்ற கிராமத்தில் தன்னிறைவுத்

# நோய்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடி

நமது உடல் திறனைக் காட்டும் அற்புதமான ''கண்ணாடி'' நமது வாயினுள்ளிருக்கும் சளிச் சவ்வுப் படலம் ஆகும்.

நமது உடலை நோய் தாக்கா வண்ணம், நோயூக்கும் கிருமிகளிலிருந்து பாதுகாப்பளிப்பதும், ஜீரணத்தை முறையாக நடத்துவதும், வாயினுள் 'உள்ள அந்த சளிச் சவ்வே. உணவை உமிழ் நீருடன் கலக்கச் செய்து ஜீரணத்திற்கு உதவுகிறது வாய் என்றுதான் நெடுங்காலமாக நம்பப்பட்டு வந்தது. ஆனால், உண்மையில் அந்தச் சவ்வுப் பகுதி, பல்வேறு வகையான 50 'என்ஸைம்' களைச் சுரக்கிறது. அவற்றில் சில 'என்ஸைம்' கள் இல்லையெனில், அதன் காரணமாகவயிற்றிலும், குடலிலும் சில கோளாறுகள் ஏற்படுகின்றன.

குடலிலும், கணையத்திலும், பித்த நீர்ப் பையிலும் ஏற்படும் பல்வகைப்பட்ட அழற்சிக்கும், வாயிலுள்ள சவ்வுப் படல சுரப்புகளுக்கும் தொடர்புண்டு என்று பல ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வந்துள்ளது. வேறு விதமாகக் கூறிப் போனால், வாயில் புண் ஏற்பட்டால், நம் இரைப்பையையும், குடலையும் சோதிக்க வேண்டும்.

வயிற்றிலோ, குடலிலோ ஏதேனும் ஒரு கோளாறு இருந்தால், ஒரு குறிப்பிட்ட 'ஆன்டிஜன்' அதிகமாகச் சுரக்கிறது. 'ஆன்டிஜன்' என்பது பல வகைப் பட்ட நோய்களிலிருந்தும், நமக்குப் பாதுகாப்பளிப்பதற்காக உடலில் சுரக்கும் ஒருவகைப் புரோட்டீன் பொருள்.

வாயிலுள்ள சவ்வுப் பகுதியில் ஏதேனும் புண் ஏற்பட்டாலோ, அல்லது ஈறுகளில் வீக்கம் காணப்பட்டாலோ, இந்தக் குறிப்பிட்ட 'ஆன்டிஜன்' அதிகமாகச் சேகரமாவதை சோதனைகள் காட்டின. நாட்பட்ட இரைப்பை நோய்களின் போது குறிப்பாக இந்த 'ஆன்டிஜன்' அதிகமாக உற்பத்தியாவது கண்டறியப்பட்டுள்ளது.

உதாரணமாக, உமிழ் நீர் சுரப்பிகளில் உண்டாகும் ஆரம்ப நிலையிலுள்ள கட்டிகளை இந்த ஆன்டிஜனைக் கொண்டு கண்டுபிடித்து விடலாம். ஆரம்ப நிலையிலேயே அதற்கு சிகிச்சை அளிப்பது சாத்தியமாகிறது.

இந்த குறிப்பிட்ட 'ஆன்டிஜனைக் கொண்டு வாய், தொண்டை, இரைப்பை, குடல் போன்ற பற்பல உறுப்புகளில் ஆரம்ப நிலையிலுள்ள நோய்களையும் கண்டுபிடித்துவிட முடிகிறது.

உலக சுகாதார ஸ்தாபனம் முன்வறிவிப்புக்களின் படி, கி.பி. 2000-ஆம் ஆண்டுக்குள்ளாக, 'அலெர்ஜி' நோயே மனித குலத்தைப் பாதிக்கும் மிகப்பெரும் பிணியாக இருக்கும். மூச்சுக் குழல் மண்டலத்தையும், தசை இயக்க மண்டலத்தையும் பாதிக்கும் இந்நோய் முக்கியமாக வாயிலுள்ள நோயூக்கி மையங்களிலிருந்தே தோன்றுகிறது.

எனவே, 'அலெர்ஜி' நோய்களைக் குணப்படுத்துவதிலும், இந்தப் புதிய 'ஆன்டிஜன்' பெரும் பங்காற்றும் என்று நம்பலாம்.

# புதுமை உலோகம்

பல்வரிசை சயை நேராக்குதல் முதல், விபத்துக்குள்ளாகக் கூடிய ரயில்களை நிறுத்துவது வரையில் ஒரு உலோகம் பயன்படுகிறது. இது அமெரிக்கக் கடற்படை விஞ்ஞானிகள் உருவாக்கிய கலப்பு உலோகம். பெயர்: ''நிட்டினால்''.

வெப்ப நிலையில் மாறுதல்கள் ஏற்படுகையில் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை 'நினைவில் வைத்துக் கொள்ளும்' பண்பும் இதற்கு உண்டு.

நிக்கல், டிட்டானியம் ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரு கலப்பு. 'நிட்டினால்' 1962ல் விஞ்ஞானிகள் முதலில் இதைக் கண்டுபிடித்தனர்.

பறக்கும் குண்டுகள் கொண்டு செல்லும் கணைகள் எரிந்து போகாமல் மீண்டும் வாயு மண்டலத்துக்குள் திரும்பி வரச் செய்யும் ஒரு உலோகம் என்ற முறையில் இதை உருவாக்கினார்கள்.

சூடானால் 'நிட்டினால்' தன் பழைய வடிவத்துக்குத் திரும்பி விடும்.

கப்பல், விமானப் படைகளில் இவ்வுலோகம் பயன்படுத்தப்பெறுகிறது. பொதுமக்கள் நன்மைக்குத் தனியார் துறை பயன்படுத்துகிறது.

ரயில் 'பிரேக்' பொறிகளில் 'நிட்டினால்' புகுத்தப்பட்டிருந்தால், அளவுக்கதிகமாகப் பேரிங்குகள் சூடாகையில் இது தன் பழைய வடிவத்தை அடைந்து, 'பிரேக்' பொறிகளை இயக்கி வண்டியை நிறுத்தி விடுகிறது. நீர்த் தெளிப்புக் கருவிகளிலும் இது பயன்படுகிறது.

துருத்திக் கொண்டிருக்கும் பற்களை வரிசைப்படுத்த 'எவர்சில்வர்' வில்களுக்குப் பதில், 'நிட்டினால்' வில்களைப் பயன்படுத்தினால் வலி குறைவாக இருக்குமெனப் பல மருத்துவர்கள் கண்டுள்ளனர்.

பிற பயன்களும் ஆராயப்படுகின்றன. இரத்தம் கட்டியாவதைத்தடுக்கும்வடிகட்டிகள் செய்ய முடியுமா என்று பார்க்கிறார்கள்.



## தமிழ் வளர்த்த பெரியார்

# பண்டிதமணி

### இல. பழனியப்பன்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உலகப் பண்பாட்டைத் தந்த கணியன் பூங்குன்றனாரின் ஊராகிய இராமநாதபுர மாவட்டத்தைச் சார்ந்த இன்றைய மகிபாலன் பட்டியில் 16-10-1881-ல் பிறந்த பண்டிதமணி கதிரேசனார், தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்த ஒப்பற்றமேதை எனில்மிகையாகாது. நுட்பமான அறிவும், பார்த்தோரைப் பரவசத்தில் ஆழ்த்தும் பண்பும் இயற்கையிலேயே அமையப் பெற்ற பண்டிதமணி ஆங்கில ஆட்சிக்காலத்தில் மொழியுணர்ச்சியற்று வாழ்ந்துகொண்டிருந்த தமிழர்களைத் தன் தமிழறிவால் தட்டியெழுப்பினார். தாய்மொழி மீதிருந்த ஆர்வத்தால் இளமையிலேயே இலக்கியத்திலும், இலக்கணத்திலும் ஈடுபாடு கொண்டு தன் சொந்த முயற்சியால் தமிழ்கற்று முன்னேறியவர் எனும் செய்தி பலருக்கு வியப்பளிக்கும். இளமையிலேயே தந்தையை இழந்து, மூத்த பிள்ளை என்பதாலே குடும்பப் பொறுப்பினை ஏற்று தளராது இறுதிவரை அத்தனை பொறுப்புக்களையும் கட்டிக் காத்த பெருமை பண்டிதமணியவர்களைச் சாரும்.

இளமைக் காலத்தில் ஏற்பட்ட இளம்பிள்ளை வாதத்தால் தன் இடக்கையிலும் இடக்காலிலும் வலுக்குறைந்து ஊன்றுகோலோடு உலா வந்த அவர் பலர் வாழ்க்கைக்கு ஊன்றுகோலாகவிருந்த பெருமகனாராவார். ஆண்டவனையே ஆசானாகக்கொண்டு தன் சொந்த முயற்சியாலும் ஊக்கத்தாலும் தமிழ் பயின்று முன்னேறிய அவருடைய தமிழறிவை, சோழவந்தான் அரசன் சண்முகனாரும், தத்துவ வளத்தை காரைக்குடி சொக்கலிங்க அய்யா அவர்களும் மெருகிட்டு, தமிழ்கூறும் நல்லுலகம் பயன் பெறச் செய்தார்கள்.

அறிவுவளர்ச்சிக்கு ஆசிரியப் பணியே துணை செய்யும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட பண்டிதமணியவர்கள் தமிழ்ப் பண்பாட்டையும், தமிழிசையையும் இரு கண்களாகப் போற்றிக் காக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராக, விரிவுரையாளராக, பேராசிரியராக ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பணியாற்றிய காலம் தமிழ் வரலாற்றின் பொற்காலமாகும். நவில்தொறும் நூல் நயம்போல ஒவ்வொரு முறையும் ஓர் புது அணுகுமுறை கண்ட பண்டிதமணியவர்கள் தான் கற்றுத்தெளிந்த தமிழறிவைத் தன் மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி தமிழறிவை ஊட்டிக் கொண்டேயிருந்தார். இன்று தலைசிறந்து விளங்கும் பல தமிழறிஞர்கள் பண்டிதமணியவர்களின் மாணவர்கள் என்பதே அவர் புலமைக்குச் சான்றாக விளங்குகிறது. மாணவர்கள் அனைவருக்கும் எளிதில் விளங்குமாறு எந்த நூலையும் பயிற்றுவிப்பதில் பண்டிதமணிக்கு நிகர் பண்டிதமணியவர்களே! ஆசிரியர்-மாணவர் உறவு முறையில் ஒரு புதிய மரபையே உருவாக்கிக் காட்டினார்.

கல்வியறிவு மிக்க புலவர்கள் பலரை ஒரு சேர நண்பர்களாகப் பெற்றிருந்த பண்டிதமணியவர்கள் தமிழ்த்தாத்தா உ. வே. சா, நாவலர் சோமசுந்தர பாரதியார், தனித்தமிழியக்கத்தின் தந்தை மறைமலையடிகளார், தமிழ்த் தென்றல் திரு. வி. க. போன்ற தமிழறிஞர்களுடன் தொடர்பு கொண்டு தமிழ்ப் பணியாற்றினார்.

வண்டமிழையும் வடமொழியையும் வகையாகக் கற்றுணர்ந்த ஒரு சில தமிழ்ப் பெரியார்களில், பண்டிதமணி தலையானவர் எனில்மிகையாகாது. இவரது வடமொழியறிவுக்கு சுக்கிர நீக்கம், சுவேரசனை, உதயண சரிதம், போன்ற தமிழாக்கப் படைப்புக்கள் இன்றளவும் நிலைத்து நின்று சான்று பகர்கின்றன.

அவ்வாறே கௌடில்யரின் அர்த்தசாத்திரத்தை அழகு தமிழில் மொழி பெயர்த்த பெருமையும் பண்டித மணியவர்களையே சாரும். வடமொழி 'மிருச்சகடிகத்தை' ''மண்ணியல் சிறுதேர்'' என்ற பெயரில் மொழி பெயர்த்துத் தமிழுக்கு அழகிய நாடக நூலாக அளித்துள்ளார். வடமொழியிலிருந்து மொழியாக்கம் செய்யும் போது மரபு வழுவாது உருவாக்கிய பாங்கு கண்டு நாம் அனைவரும் நினைவு கூரத்தக்கது. இத்தகைய ஆற்றலால், தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே.சா. விற்குப் பின் மகாமகோபாத்தியாய என்ற இரு மொழிப் பட்டம் இவரைத் தழுவிக் கொண்டது

இவர் புலமைக்கு திருவாசக ஆராய்ச்சி பற்றிய கட்டுரைகளும் கதிர்மணி விளக்கமும் சான்றாகத் திகழ்கின்றன. அவ்வாறே 'திருவாசகம்', 'திருச்சதகம், 'நீத்தல் விண்ணப்பம்' திருவெம்பாவை ஆகியஉரை நூல்கள் இவர் தலைசிறந்த உரையாசிரியர் எனத் தாரணி போற்றக் காரணமாக அமைந்துள்ளன.

நகைச்சுவை உணர்வுமிக்க பண்டிதமணியவர்கள், தமிழ் மொழியை ஒதுக்கியவர்களை ஒருபோதும் சாடத் தயங்கியதில்லை. தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக பாண்டி நாட்டைச் சார்ந்த சிற்றூர்களிலும், பேரூர்களிலும், தன் உடல் நலம்பற்றிக் கவலைப்படாமல் நீண்ட சுற்றுப் பயணம் செய்து, இலக்கிய அன்பர்களுக்கு சிறந்த விருந்தளித்

## நிலமேம்பாட்டுத் திட்டம் - புது நோக்கு...

மதுரை மாவட்டம், பழனி வட்டம், பாப்பம்பட்டி கிராமத்தில் நில மேம்பாட்டுத் திட்டத்தை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் தலைமையில். துவக்கி வைத்தார்கள்.

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் உள்ள நிலமற்ற ஏழைகளுக்கு நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் 19,76,800 ஏக்கர் நிலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவை தவிர அரசின் தரிசு நிலங்கள், வனத்துறையின் தரிசு நிலங்கள் இலட்சக்கணக்கான விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும், விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைத் தரம் உயராததற்குக் காரணம், வினியோகிக்கப்பட்டநிலங்கள் அபிவிருத்தி செய்து விவசாயத்திற்கு உகந்த நிலமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் உருவாகாததால் தான்.

இதைக் கண்ணுற்ற தமிழக அரசு ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் அபிவிருத்திசெய்து விவசாயத்திற்கு உகந்தநிலமாக மாற்றும் பொருட்டு ஒரு முன்னோடித் திட்டமான நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தை முதன் முதலில் மதுரை மாவட்டம். பழனி வட்டம். பாப்பம்பட்டி கிராமத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளியிலும், திருநெல்வேலியிலும் இத்திட்டம் தொடங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில் 100 ஏக்கர் புஞ்சை நிலத்தை 50 ஆதிதிராவிடர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தை அபிவிருத்தி செய்து விவசாயம் செய்வதற்கு வேண்டிய தண்ணீர் கிடைப்பதற்கு வசதியாக. கிணறுகள் தோண்டவும், டிராக்டர் மூலம் நிலத்தைப் பயன்படுத்தவும், 50 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கும். குடியிருப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் தமிழக அரசு பல்வேறு நிறுவனங்களின் மூலம் ரூ. 16,00,000 செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உதவியாகப் பணிகள் புரிய மேயர் டிரஸ்ட் என்ற நிறுவனம் ரூ. 3,00,000 செலவு செய்ய ஒத்துக் கொண்டுள்ளது. 50 குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்ட 100 ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு உணவு தானியங்கள் விளைவிக்கவும். இரண்டு பங்கு கரும்பு. கடலை போன்ற பணப் பயிர்கள் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 1984-ஆம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு ரூ.1,50,000 வருமானம் கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. 1989க்குள் முதலீட்டினைத் திரும்ப எடுத்துக் கொண்டு எவ்விதச் சுமையுமின்றி நல்ல நிலமாக இந்தக் குடும்பங்களிடம் ஒப்படைக்கப்படும்.

திட்டத்தின் கீழ் ரூ. 96,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலத்தைத் திறந்து வைத்தார்கள். ''புரட்சித் தலைவர் ஆட்சியிலே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பாலங்கள் அமைத்தல், சாலைகள் போடுதல், மருத்துவ மனைகளை அமைத்தல், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்தல், சுடுகாட்டுக்குச் செல்ல பாதைகளை அமைத்தல் போன்ற பணிகளைச் செய்து வருகிறோம். மேலும் இப்பகுதியில் 40 கோடி ரூபாய் மூலதனத்திலே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த முயற்சிகள் நடந்து கொண்டு வருகிறது. இதனால பல ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறேன். தமிழக அரசின் சார்பாகக் கொண்டுவரும் நல்ல பல திட்டங்களுக்கு மக்கள் நல்லாதரவைத் தரவேண்டும்'' என்று அவ்வமயம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 30,000 செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சாலைகளை அவர் திறந்து வைத்துப் பேசுகையில், ''தமிழ்நாட்டிலுள்ள 378 ஒன்றியங்களில் 69 ஒன்றியங்களைத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்து, சாலைகள் போடுதல், பாலங்கள் கட்டுதல், பள்ளிக் கட்டடங்களைக் கட்டுதல் போன்ற பணிகளை கிராம மக்களுக்குச் செய்து கொடுத்து இருக்கிறோம். இந்த ஆண்டு 150 ஒன்றியங்களை எடுத்து இருக்கிறோம். அடுத்த ஆண்டு 159 ஒன்றியங்களை எடுத்து செயல்படுத்த இருக்கிறோம். புரட்சித்தலைவர் ஆட்சியிலே 2 வயதுக்கு மேற்பட்ட 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு வேளையாவது சத்துணவு வழங்க ரூ.100 கோடி ஒதுக்கி இருக்கிறார்கள். இத்திட்டத்தைச் செயல் படுத்த பெண்களுக்கு குறிப்பாக விதவைகளுக்கு முன்னுரிமை அளித்து இருக்கிறோம் என்றும், இத்திட்டத்திற்கு மக்கள் முழு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

அடுத்து, சேர்வைக்காரன் பட்டியில் சுமார் 49,904 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக்கட்டடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இவ்விழா நிகழ்ச்சியில் அமைச்சர் அவர்கள் "புரட்சித் தலைவர் ஆட்சியிலே ஆதிதிராவிட மக்களுக்காக 5 ஆண்டுக் காலத்தில் 3 இலட்சம் வீடுகள் கட்ட திட்டம் தீட்டி இருக்கிறோம் என்றும், 2 ஆண்டுக்காலத்தில் 80 ஆயிரம் வீடுகள் கட்டி இருக்கிறோம் என்றும், இந்த ஆண்டு 40 ஆயிரம் வீடுகளும் அடுத்த ஆண்டு 40 ஆயிரம் வீடுகளும் கட்ட இருக்கிறோம்." என்று கூறினார்கள். இவ்விழா நிகழ்ச்சியில் 10 பெண்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அடுத்து சி.சி.சி. குவாரியில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 52,163 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள்.



# காரைக்குடியில் பாரதியார்

**– ராய. சொக்கலிங்கம்**

முப்பது ஆண்டுகட்கு முன், திடீரென ஒரு நாள். சிவந்த உடம்பு, மொட்டைத்தலை முறுக்கிய எதிர்மீசை, குறுகுறுத்த கண்கள் இவற்றோடு, கையில் தடியுடன் ஒரு கம்பீர உருவம், காரைக்குடியில் தோன்றியது. அவ்வடிவம் நம்மை விட்டு மறைந்து இப்பொழுது, இருபத்தேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. அதுதான், மகாகவி சுப்பிரமண்ய பாரதியாரின் மேனி. காரைக்குடியில் மூன்று நாளே பாரதி இருந்தார் என்பது என் நினைவு. அப்பொழுது காரைக்குடியில் ஹிந்து மகாபிமான சங்கம் நல்ல பணி செய்து கொண்டிருந்தது. அங்குதான் பாரதி தங்கியிருந்தார். அவரைச் சுற்றிலும், ஒரு சரியான நாட்டுப் பற்றுள்ள இளைஞர் கூட்டம் சூழ்ந்துகொண்டது. பாரதி, கூட ஒருவரை அழைத்து வந்திருந்தார். அவரும் ஒரு அரைப் பயித்தியம் மாதிரியே காணப்பட்டார். பாரதியாரோ ஒரு ஞானக் கிறுக்கர். இருவரும் நடந்துகொண்ட முறைகள் எங்கட்கு வேடிக்கையாகவே இருந்தன. பாரதி, உடன்வந்தவரை, ''மொட்டையா'' என்று அழைத்ததாக எனக்கு ஞாபகம். பாரதியை, அவர் ''சுவாமி'' என்று அழைப்பார். நாங்கள் எல்லோருமே, பாரதியை ''சுவாமி'' என்றுதான் அழைக்க வேண்டும். அது அவர் கட்டளை.

பாரதியின் பாடல்களைப் படித்து. அதில் இளைத்துப்போயிருந்த நாங்கள், பாரதியை நேரில் கண்டு, விருந்தினராக்கிக் கொள்ளும் பேறு பெற்றதற்கு, எல்லையற்ற மகிழ்ச்சியடைந்து, அவரை மிகவும் பாராட்டினோம். அந்த நாட்களில் நாங்கள் அவரை விட்டு அகலவேயில்லை. அப்பொழுது நாங்களெல்லாம் ஏறக்குறைய இருபது வயதினர். ஒரு நாள் மாலை அவரை அழைத்துக் கொண்டு, நாங்கள் பத்துப் பதினைந்து பேர், காரைக்குடியில், இப்போது, ''நியூடவுன்'' என்று அழைக்கப்படும் ஒரு காட்டுப்பக்கம் நீண்ட தூரம் சென்று உலாவி வந்தோம். அந்நாள் அப்பகுதி நல்ல காடாக இருந்தது. அதற்கு வடகாடு என்று பெயர். பாரதியாரோடு கூட இருந்த நாட்களில் அவர் செய்யும் செயல் ஒவ்வொன்றிலும் நாங்கள் வீரத்தைக் கண்டோம். எழுந்து நடப்பாரானால் ''ஏறுபோல் நட'' என்று அவர் சொன்னபடி கோணாமல், வளையாமல், நிமிர்ந்து சிம்மம் போலவே நடப்பார்.

ஒரு நாள், ஓமப்பொடியை அள்ளிக் கையிலே வைத்துக்கொண்டார். மீசையை எதிராகத் தடவி விட்டுக்கொண்டு, கையை முறுக்கிக்கொண்டு, சண்டை போடுவது போல் பாவனை செய்து அவர் சாப்பிட்ட மாதிரி ''புதுமையாகவே'' இருந்தது. எங்களையெல்லாம் பாரதியார், 'பாண்டியா' அல்லது 'தம்பி' என்று அன்போடு அழைப்பார். தம்பி என்ற சொல் தமிழில் மிகச் சிறந்த ஒரு அன்புரிமைச் சொல். பாண்டியன் என்பது ஒரு நாடு பற்றிய வந்த சொல். அச்சொல்லில் பாரதிக்கு மிகவும் பிரியம். அவர் பாண்டி நாட்டாரல்லவா? நாங்களும் அந்நாட்டாராதலால், எங்களைப் பாண்டியா என்று அழைப்பது பொருத்தந்தானே. பாண்டி நாட்டில் எல்லோருக்குமே ஒரு மயக்கந்தானே கடவுளுக்கு உறைவிடம் எது? எங்கும் அவர் இருக்கின்றாரானாலும், ''தென் பாண்டி நாடே தெளி'' என்று செப்புகின்றது திருவாசகம்.

பாரதியைப் படம் பிடிக்க விரும்பினோம். எதற்கும் அவரை இணக்குவது முடியாத காரியம். அவருக்கே மனம் வந்தால்தான்.



படம் பிடிக்க ஒப்புக்கொண்டார். வேண்டியன எல்லாம் தயார் செய்யப்பெற்றன. பாரதியாரை உட்கார வைத்தோம். ஒரு தடிக் கம்பைத் தூக்கித் தலைக்கு மேலே கம்பு தோன்றும்படி நிறுத் திக்கொண்டார். அம்மாதிரிபடம் பிடிப்போருக்குச் சம்மதமில்லை. அவர் எவ்வளவோ சொன்னார். 'முடியாது', நீர் சொல்வதை நான் என்ன கேட்பது? என்று சொல்லிவிட்டார் பாரதியார். பிறகு அப்படியே எடுக்கச் செய் தோம்.

பாரதி அவருடைய பாட்டை மிக நன்றாகப் பாவத்தோடு பாடு வார். ஏதாவது ஒரு பாட்டின் பெயரைச் சொல்லி, ''சுவாமி, அதைப்பாடவேண்டும்' என்று நாங்கள் கேட்போம். 'அது வேண் டாம், பழைய பாட்டு. புதுப் பாட்டு ஜமாய்க்கிறேன் கேள் பாண்டியா' எனச் சொல்லிவிட்டு நாங்கள் அறியாத அவருடைய புதுப்பாட்டிலே ஒன்றைப் பாடிக் காட்டுவார். 'பிள்ளைப் பிராயத் திலே' என்ற ஒரு பாட்டை மெது வாகப் பாடிக்கொண்டே இருந் தார். நாங்கள் அமைதியாகக் கேட்டுக்கொண்டே இருந்தோம். ''அன்னை வடிவமடா'' என்று திடீரென்று ஓங்கி ஒரு கத்துக் கத்தினார். அதை நாங்கள் எதிர் பார்க்கவேயில்லை. ஆதலின் அதிர்ச்சி தூக்கி வாரிப் போட்டு விட்டது. காதலும், வீரமும் மாறி மாறி வரும் ஒரு பாட்டு. அதை மிக நன்றாகப் பாடினார்.

''கிள்ளைமொழிச் சிறு வள்ளி
யெனும்பெயர்ச் செல்வத்தை

என்றும்

கேடற்ற வாழ்வினை இன்ப
விளக்கை மருவினாய்''.

என்று பாடும்போது அப்படியே சொற்களைக் கொஞ்சி விடுவார்.

'கொள்ளை கொண்டே
அமராவதி வாழ்வு
குலைத்தவன்..

பானு

கோபன் தலை பத்துக் கோடி
துணுக்குறக் கோபித்தாய்.''

என்று சொல்லும்போது, அந்த பானுகோபன் எதிரில் இருப்ப தாகக் கருதிக்கொண்டு குமுறு கிறார்.

அவரோடு இருந்த சில நாட் களில் நாங்கள் பெற்ற உள்ளக் களிப்பு மிகுதி. மதுரைக்குப் புறப்பட வேண்டும் என்றார். இன்னும் சில நாள் தங்கிப் போக லாம் என்றோம். கேட்கவில்லை. பிடிவாதமாகப் புறப்பட வேண் டும் என்று சொல்லிவிட்டார். அந்த நாளில் காரைக்குடியில் ரயில் இல்லை. அவரை அழைத்து கொண்டு நாங்கள் அனைவரும் கார் ஏற்றியனுப்பக் கல்லுக் கட் டிக்குச் சென்றோம். அப்பொழுது கார் புறப்படும் இடம் கல்லுக் கட்டியே. கார் புறப்படச் சிறிது நேரம் இருந்தது. அவரை அணித்தேயுள்ள அன்பர் சொ. முருகப்பனார்க்குச் சொந்தமான ஒரு கடையில் கூட்டிப்போய் வைத்துப் பேசிக்கொண்டிருந் தோம். பாரதியார் அங்கிருந்த மூன்று நாட்களிலும் எங்கள்நினை வுக்கு வராத ஒன்று அந்தச் சம யம் தோன்றியது. சுவாமி நமது சங்கத்தைப் பற்றிப் பாடவேண் டும் என்று கேட்டோம். சரி என்று ஆரம்பித்தார். பேனாவைஎடுத்து எழுதத் தொடங்கினார். கட கட வென்று எழுதிக்கொண்டே வந் தார். நாங்களெல்லாம் பார்த்துக் கொண்டேதான் இருந்தோம். இரண்டொரு அடிப்புகள் மட்டும் செய்தார். மற்றபடி விரை வாகவே பாட்டை எழுதினார். உடனே பாடக்கூடியவரை ''ஆசு கவி'' என்று கூறுவதுண்டு. பாரதி ''ஆசு கவியே'' ஆவார். பாரதி பாட்டுக்கள் எழுதிக்கொண் டிருந்தபோதே, கார் புறப்படப் போகும் செய்தி வந்தது. பாட்டை முடித்துவிட்டு அடுத்த காரில் புறப்படலாம் என்று எவ் வளவோ கெஞ்சினோம். முடியா தென்று எழுந்துவிட்டார். புறப் பட்டுப்போய் மதுரையிலிருந்து பாட்டுக்களை முடித்து அனுப்பு வதாகச் சொன்னார்.

நாங்கள் அதுவரை முடிந்த பாட்டுக்களையாவது தந்துபோ கும்படி வேண்டினோம். மறுத்து விட்டார். ஆனால் சொன்னபடி மதுரையிலிருந்து பாட்டுக்களை முடித்தனுப்பி விட்டார்.

நல்ல பாடல்கள். அறுசீர்விருத் தங்கள். சில பாடல்களை இங்கே தருகிறேன்.

இத்தகைய துயர்நீக்கிக்
கிருதயுகம் தனை,உலகில்
இசைக்கவல்ல
புத்தமுதாம் இந்துமதப்
பெருமைதனைப் பார் அறிய
புகட்டும் வண்ணம்
தந்துபுகழ் வளப்பாண்டி
நாட்டினில் காரைக்குடியூர்
தனிலே சால
உத்தமராம் தனவணிகர்
குலத்துதித்த இளைஞர்பலர்
ஊக்கம் மிக்கார்.

உண்மையே தாரகம் என்
றுணர்ந்திட்டார்,
அன்பு ஒன்றே
உறுதியென்பார்,
வண்மையே குலதர்மம்
எனக்கொண்டார், தொண்டு
ஒன்றே
வழியாகக் கண்டார்,


இக் கட்டுரையானது, 9-11-1919-ல், சிறந்த தேசபக் தரும், தமிழறிஞரும், 'ஊழியன்' வார இதழின் ஆசிரியருமாகிய, தமிழ்க்கடல், திரு. ராய. சொ. அவர்கள், தேசியகவி, திரு. சுப்ரமணிய பாரதியார் அவர் களைச் சந்தித்துப் பேசிய நிகழ்ச் சியை, நாமார்க்கும் குடியல்லோம் என்ற நூலில், காரைக்குடியில் பாரதியார் என்று வெளி வந்துள்ளது. பாரதியாரின் நூற் றாண்டு விழாக் கொண்டாடும் இவ்வாண்டில் பலரும் அறியும் வண்ணம், அக்கட்டுரையைப் படி யெடுத்து உதவுபவர் மேலைச் சிவபுரி, திரு மு. அண்ணாமலை

ஒண்மைஉயர் கடவுள்.இடத்து
அன்புடையார், அவ்வன்பின்
ஊற்றத்தாலே,
திண்மையுறும் இந்துமத
அபிமான சங்கம் ஒன்று
சேர்த்திட்டாரே.

இவ் உலகத்துள்ள துயர்களை யெல்லாம் நீக்கிக் கிரேத யுகத் தைப் பூமியில் நிலைக்கச் செய்ய வல்ல புதிய அமிழ்தமாகிய இந்து மதத்தின் பெருமையை அவனி முழுதும் அறியப் பரப்பும் பொருட்டாக, வலிமைமிக்க இந்து மதாபிமான சங்கத்தைக் கண்டார்கள். எங்கே? புகழ் திரு நடம் செய்கின்ற, வளஞ் செறிந்த பாண்டிநாட்டிலுள்ள காரைக்குடி நகரத்தில் சங்கம் நிறுவியோர் யார்? மிகவும் பெரு மைகொண்ட தனவணிகர் மர பிலே தோன்றிய பல இளைஞர் கள். அன்னார் ஊக்கம் மிகுந்த வர், மெய்தான் தாரக மந்திரம் என்று உணர்ந்தவர், அன்பு ஒன் றுதான் உறுதிப்பொருள் என்று கண்டவர், கொடையே குலத் தொழிலாகக் கொண்டவர். தொண்டே நெறியென ஏற்றவர். ஒளியும் சிறப்பும் மிக்க இறைவ னிடத்தில் அன்புடையவர்.... அவ்வன்புப் பெருக்குக் காரண மாக இச்சங்கத்தைக் கண்டார்.

பாரதியார் பழகிய சில நாட் களில், அவர் கண்களால் கண்ட வற்றை இவ்விரண்டு பாடல்களில் அப்படியே சித்தரித்துவிட்டார். சங்கத்தின் பணிகளைச் சொல்லி மனமார, வாயார, ஒரு அருமை யான வாழ்த்துப்பாட்டைப் பாடி வாழ்த்துக் கூறினார் பாரதியார்.

பல நூல்கள் பதிப்பித்தும்,
பல பெரியோர் பிறசங்கம்
பண்ணு வித்தும்,
நலமுடைய கலாசாலை
புத்தகசாலை பலவும்
நாட்டியும் தம்
குலம்உயர, நகர்உயர,
நாடுஉயர உழைக்கின்றார்,
கோடி மேன்மை
நிலவிட இச்சங்கத்தார்
பல்லூழி. வாழ்ந்தொளிர்க,
நிலத்தின்மீதே.



# ஒரு கல்லில் மூன்று மாங்காய்

''இருப்பதை வைத்தே சிறப் புற வாழலாம்' என்பார்கள்.

நம்மிடம் இருக்கும் பொருளை வீணாக்காமல், அதையே ஆக்க வழியில் பயன்படுத்தலாம்.

ஆம். உள்ளதைக் கொண்டே உயரலாம். சிக்கனம், சீரான வாழ்வு என்றெல்லாம் சொல்கி றோம். ஆனால் நடைமுறையில் அவற்றையெல்லாம் கடைப் பிடிப்பது எத்தனைப் பேர்?

கிராமங்களில் ஆடு மாடுகளை வைத்திருப்பவர்கள், அவற்றை வளர்த்து விற்றுவிடுகிறார்களே தவிர, அவற்றின் சாணத்தைத் தக்க வகையில் பயன்படுத்திக் கொள்ள மறந்து விடுகிறார்கள். ஏன், நகரங்களிலே இருப்பவர் களும் இப்படி நடந்து கொள்கி றார்களே!

அன்றாட வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத சாதனமாக இருப்பது அடுப்பு என்பது நமக் குத் தெரியும். அடுப்பு எரிக்க விறகு- மண்ணெண்ணெய் என்று அலைகிறோம். 'காஸ்' கிடைக்க வில்லையே எனக் கண்ணீர் விடு கிறோம். விறகு, மண்ணெண் ணெய் என்றால் புகைப் பிரச் சினை. அழகான வீடு புகை மண் டலத்தால் அழகு குன்றிக் காணப் படுவதுண்டு 'காஸ்' வைத்திருப்ப வர்கள் பரவாயில்லை. ஆனால் இல்லாதவர்களுக்கு அது கிடைக்க வேண்டுமே!

இந்தப் பிரச்சினைகளெல் லாம் இல்லை- மாடுகள் வைத்தி ருப்பவர்களுக்கு!

ஆம். சாண எரிவாயு அவர் கள் வீட்டுச் சமையலை மட்டு மல்ல, விளக்கு எரிக்கவும், கிணற் றிலிருந்து தண்ணீரை இறைக்க வும் கூட உதவுகிறது. ஒரே கல் லில் மூன்று மாங்காய்.

அண்மையில் தருமபுரி மாவட் டத்தில் சுற்றுப் பயணம் செய்த தில் இந்த உண்மை விளங்கியது. கிருஷ்ணகிரியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகிறோம். ஓரிடத்தில் 'கைலாசகிரி' என்ற பெயர்ப் பலகை தெரிகிறது. உள்ளே நுழைகிறோம். திரு.கே. கணேஷ் அவர்கள் புன்முறுவ லுடன் நம்மை வரவேற்கிறார். மேல்நாட்டுப் பாணியில் கட்டப் பட்ட அழகிய வீடு. அருகே தோட்டம், துரவு, மாடுகள்-இப் படிக் காட்சியளிக்கின்றன. திரு. கணேஷ் அவர்கள் ஒரு தொழி லதிபர். அவர் பயன்படுத்துவது சாண எரிவாயுவைத் தான்!

ஒரு ஏக்கர் நிலத்தில் வீடு, மாட்டுக் கொட்டில், தோட்டம், கிணறு என்று திட்டமிட்டு அழ காய் அமைந்திருக்கிறார். இவரி டம் 30 மாடுகள் உள்ளன. மாடு களுக்குக் காமதேனு, காவேரி, லட் சுமி, சாந்தி, சரஸ்வதி, சித்ரா என்று பெயர்கள் வைத்து அதை எழுதியும் வைத்திருக்கிறார். மாட்டுக் கொட்டில் சுத்தமாக

பி.வி.கிரி



திரு கே. கணேஷ்

காட்சி தருகிறது சாணம் கொஞ்சங்கூட வீணாகாமல் சேகரிக்கப் படுகிறது. வீட்டுக்குப் பின்னே சாண எரிவாயுக்கான சாதனம் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை அமைத்து இரண்டு ஆண்டுகளாகின்றன என்றும், இதுவரை எந்தத் தொந்தரவும் ஏற்பட்டதில்லை என்றும் தெரிந்து கொள்கிறோம்.

ஒரு நாளைக்கு ஒரு முறைதான் சாணம் இடப்படுகிறது. இந்தச் சாண எரிவாயு சமையல் செய்யவும், விளக்குகள் எரிக்கவும், கிணற்றிலிருந்து தண்ணீரை இறைக்கவும் பயன்படுகிறது. 90 சதவிகிதம் இந்த எரிவாயு மூலமாக அந்தப் பெரிய கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கப்படுகிறது. 'கைலாச கிரி' ஒரு மாதிரி சாணஎரிவாயு இடமாக விளங்குகிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள சில ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களில், சாண எரிவாயுவின் மூலம் மக்கள் பயன் பெறுகிற தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

பர்கூரில் சாண எரிவாயுத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது.

சாண எரிவாயுச் சாதனம் ஒன்றின் மதிப்பு ரூ. 4,800. இதில் அரசு மான்யம் 25 சதவிகிதம் கால்நடைகள் 10க்குமேல் வைத்திருப்பவர்களுக்குச் சாண எரிவாயு அடுப்பு அமைக்க, வங்கி மூலம் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இவ்வொன்றியத்தில் இதுவரை 15 சாண எரிவாயு அடுப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இதற்காக வங்கி கடனாக ரூ. 49,000 வழங்கியுள்ளது. அரசு ரூ 11,980 மான்யமாக தந்துள்ளது. மேலும் 11 பேர் இந்தச் சாதனம் கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சாண எரிவாயுச் சாதனம் அமைக்கவும், அதற்கு வங்கி மூலம் கடன் பெறவும் கேட்டு நிறைய விண்ணப்பங்கள் ஒன்றிய ஆணையாளருக்கு வந்துள்ளனவாம்.

ஓசூரில் 52 சாண எரிவாயுச் சாதனம் அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.



சாண எரிவாயுத் திட்டத்தைப் பெருமளவில் நிறைவேற்றுவதற்கென இந்திய அரசு ஒரு பெரும் திட்டம் தீட்டியுள்ளது. அதன்படி ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 4 இலட்சம் சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட வேண்டும். அதில் 1981-82-ஆம் ஆண்டில் மட்டும் 35,000 அமைக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்ததில் 3500 பிரிவுகள் தமிழ்நாடு அரசிற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தருமபுரி வட்டாரத்தில் 1981-82ல் ஐந்து சாண எரிவாயுச் சாதனம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு (82-83) 20 சாதனங்கள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாடுகள் வைத்திருப்பவர்கள் சாணத்தை வீணாக்காமல் பயன்படுத்திக் கொண்டால் சமையல், விளக்கு, நீர் இறைத்தல் போன்ற பிரச்சினைகளை எளிதில் சமாளிக்கலாம். அதிகச் செலவையும் மிச்சப்படுத்தலாம்.

சாண எரிவாயுச் சாதனம் அமைத்துக்கொள்ள அரசும், வங்கியும் உதவுகின்றபோது, அதனை மக்கள் பயன்படுத்திக் கொள்ள முன்வரலாமே!

சாண எரிவாயுவின் மூலம் தண்ணீர் இறைக்கப்படுகிறது.






# பதநீர் - சில இனிய செய்திகள்

நம்முடைய நாட்டின் இயற்கைச் செல்வங்களுள் சிறப்பானது பனைச்செல்வம். இஃது ஒரு பதநீர் ஊற்று-என்றே கூறலாம். பனைமரத்தின் ஒவ்வொரு உறுப்பும் ஆதிகாலம் தொட்டுப் பயன்பட்டு வருவதால் இதை மக்கள் 'கற்பகத் தரு' எனப் போற்றினர். தமிழகத்தில் மட்டும் சுமார் 4 கோடி பனைமரங்கள் இருக்கின்றன. இவற்றில் ½ கோடி மரங்களிலிருந்து பதநீர் இறக்கப்படுகிறது. பதநீரைப் பானமாகப் பருகுதல், பனைவெல்லம் செய்தல், பனஞ்சீனி தயாரித்தல், பனங் கற்கண்டு தயாரித்தல் முதலியனவற்றிற்கு உபயோகப்படுத்துகிறோம்.

பதநீர் என்பது பருவ காலத்தில் தோன்றும் பனைப் பாளையிலிருந்து சுரக்கக் கூடிய இனிப்பான நீர். இதற்குப் பதநீர், பதிநீர், பக நறா, அமிர்தம் என்று வேறு பெயர்களும் உண்டு. பதநீர் என்றால் பதப்படுத்தி எடுக்கக் கூடிய நீர் என்று பொருள். அதாவது பாளையைத் தட்டிப் பதப்படுத்தி பக்குவமாக வடித்தெடுக்கப்படுகின்ற நீர் என்று பெயர். பனைமரம் ஆறு மாதங்கள் பதநீர் தரும். தென்னை ஆண்டு முழுவதும் பதநீர் தரும். ஈச்ச மரங்களின் மரக் கொண்டையிலேயிருந்து 10 மாதங்கள் பதநீர் சேகரிக்கப்படுகிறது.

அரசர்கள் இதை விரும்பிப் பருகியதால் பதநீர், பதி-அரசர், நீர்-விரும்பிய பானம்; பதிநீர் என்று பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

பதநீர் ஆண் பாளைகளிலிருந்தும் பெண் பாளைகளிலிருந்தும் இறக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் பெண் பாளைகள் முற்றிய பிறகு அவற்றில் உள்ள காய்களை நீக்கி விட்டு காம்பை இடுக்கி பதநீர் சேகரிக்கிறார்கள். இதற்குப் 'பண்டப் பாளை பதநீர்' என்று பெயர். இது குடிப்பதற்கு மிகவும் அருமையாக இருக்கும். இந்த முறை இந்தியாவில் தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் கையாளப்படுகிறது.

தென்னை மரப் பதநீர் கோவை மாவட்டத்தில் ஏராளமாகத் தயாரிக்கப்படுகிறது. தென்னை மரப் பதநீர் அதிக இனிப்பாக இருக்கும். கோவை மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் பதநீர் விற்பனையாகிறது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் ஈச்சம் பதநீர் கிடைக்கிறது.

### பதநீர் கிடைக்கும் பருவம்

தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர இதர இடங்களில் ஜனவரியில் ஆரம்பித்து ஜூலை மாதம் முடிய பதநீர் கிடைக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜூலை முதல் டிசம்பர் முடிய கிடைக்கிறது. தமிழகத்தில் ஆண்டு முழுவதும் பதநீர் கிடைப்பது ஒரு பெருமைக்குரிய செயலாகும்.

### கள்ளும் பதநீரும்

நம்மில் இன்னும் சிலர் கள்ளுக்கும் பதநீருக்கும் வித்தியாசம் விளங்காமல் பேசுகிறார்கள். பாளை முகத்திலிருந்து பதநீர் துளிகள் சொட்டும்பொழுது இயற்கையான தித்திப்புடன்தான் இருக்கும். கலயத்தில் பதநீர் சொட்ட ஆரம்பித்து, சுமார் 3 மணி நேரம் கழித்தவுடன் கலயத்தில் உள்ள பதநீர் லேசாகப் புளிப்படைய ஆரம்பிக்கும். எனவே, பதநீர் புளிப்படையாமல் இருப்பதற்கு முன் கூட்டியே கலயத்தின் உள்புறத்தில் சுண்ணாம்பு தடவப்படுகிறது. சுண்ணாம்பு தடவிய கலயத்தில் சேகரிக்கப்படும் பதநீர் இனிப்பாகவே இருக்கும். இதற்குதான் 'பதநீர்' என்று பெயர்.

### பதநீர் ஒரு சத்துள்ள உணவு

பதநீரில் சர்க்கரை இருக்கிறது. அது உடலுக்குச் சக்தியைத் தருகிறது. சுண்ணாம்புச் சத்து இருக்கிறது. அது எலும்பு, பல், நகங்களை வளர்க்கிறது. இரும்புச் சத்து இருக்கிறது, அது இருதயத்தை வளர்க்கிறது. ரிப்போபிளோரான் இருக்கிறது. இது இரத்தத்தை விருத்தி செய்கிறது. பாஸ்பரஸ் இருக்கிறது. இது மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. மேலும் களைச்சூடு தணியும், இரத்த அழுத்தத்தைக் குறைக்கும், நெஞ்செலும்பு தள்ளிய குழந்தைகளைப் பாதுகாக்கும் என்று நாகர்கோவிலைச் சேர்ந்த அரசாங்க ஓய்வு பெற்ற மருத்துவர் டாக்டர் ஷில்லையா கண்டுபிடித்தார

### பள்ளிச் சிறாரும் பதநீரும்

மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் வி. பான்ஸே என்பவர் பள்ளிக் குழந்தைகளுக்குப் பதநீர் கொடுத்து அதன் பயனை நிரூபித்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். அந்தக் குழந்தைகளை மருத்துவப் பரிசோதனை செய்ததில் கீழ்க்கண்ட நன்மைகள் ஏற்பட்டதைக் கண்டுபிடிக்கப்பட்டன.

1. காதுகளில் நீர் வடிந்தது நின்று விட்டது.
2. குழந்தைகளின் சருமம் பாதுகாக்கப் பட்டது.
3. சத்துக் குறைவு நோய்கள் ஏற்படவில்லை.
4. இரத்த அணுக்கள் வலுவடைந்திருந்தன.
5. நோய்க்கிருமிகளால் உடல் பாதிக்கப்படாவண்ணம் தாங்கும் சக்தியை பெற்றிருந்தன.
6. குழந்தைகள் சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் முகப் பொலிவுடனும் தென்பட்டனர்.
7. முக்கியமாய் எடையில் கூடுதல் தெளிவாய்க் கண்டுபிடிக்கப்பட்டது.

எனவே, பதநீர் ஒரு ஊட்டச் சத்தும் உயிர்ச் சத்தும் உள்ள உணவு என்பதை நாம் அறிய வேண்டும்.

கண்ணோய் நிபுணர் மதுரை டாக்டர் திரு ஜி. வெங்கடசாமி, சில கண் நோய் வியாதிகளுக்கு மருத்துவமனையில் பதநீர் வைத்து, மருந்தாகக் கொடுத்து நோயைக் குணப்படுத்தினார். இந்த ஆராய்ச்சியில் நல்ல பயன் கிட்டியது. இதை அனைத்து இந்தியக் குருடு தடுப்பு நிறுவனம் ஒப்புதல் செய்து மாநில இணையத்தைப் பாராட்டியுள்ளது.

தமிழ்நாடு மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம், மாதவரம் பால் பண்ணை 10,000 பனை மரங்களைக் குத்தகைக்கு எடுத்து, பருவ காலத்தில் பதநீர் இறக்கி பதநீரைச் சுத்தப்படுத்தி, குளிர வைத்து, சென்னை மக்களுக்குப் பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்து வருகிறது. பதநீரை விரும்பி மக்கள் சாப்பிடுவதால் அதற்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு வருகிறது. பால் விற்பனை செய்யும் பங்குகளில் பால் விற்றவுடன் பதநீர் விற்பனை தொடங்குகிறது. மாலை பால் விற்பனைக்கு வரும் முன்னர் பதநீர் விற்பனை முடிவடைகிறது. பதநீர் இந்தியா முழுவதும் விற்பனை செய்யப்பட்டாலும் தமிழகம் பதநீர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அதிகமாக விற்பனை செய்கிறது. கடந்த ஆண்டு ரூ. 50.40 இலட்சம் மதிப்பில் பதநீரை கூட்டுறவுச் சங்கங்களும் உற்பத்தியாளரும் குடி பதநீராக விற்றுள்ளார்கள்.

பதநீர் உற்பத்தியாளர்கள், வெல்லம் காய்ச்சுவதைக் காட்டிலும் குடி பதநீராக விற்று நல்ல வருமானம் பெறுகின்றனர். ஒரு உற்பத்தியாளர் சராசரி 80 லிட்டர் பதநீர் சேகரிக்கிறார். மர வாடகை, சுண்ணாம்பு, கருவிகள் தேய்மானம் போக தினம் 15லிருந்து ரூ. 20 வரை சம்பாதிக்கிறார். எனவேதான் கிராமங்களில் இத்தொழில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் பதநீரை கிராமங்களில் வாங்கி விற்பனை செய்வதில் 11,000 பேர் ஈடுபட்டுள்ளனர். தலா ரூபாய் 6லிருந்து 7 வரை சம்பாதிக்கிறார்கள்.

### பதநீர் விற்பனையில் நவீனம்

எட்டு அவுன்ஸ் பதநீரை பாட்டில்களில் அடைத்து இதுகாறும் மாநில இணையம் விற்று வந்தது. பாட்டில் உடைவதால் ஏற்படும் சேதாரம் விரைவில் பாட்டில்களில் நிரப்பும் சிரமம், பாட்டில்களை வண்டிகளில் சிரமப்பட்டு ஏற்றுதல், இறக்குதல், பதநீர் பாட்டில்களைச் சுத்தமாக கழுவ முடியாமை போன்ற சிரமங்களைத் தவிர்ப்பதற்கு ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. பாலை, பாலிதீன் பைகளில் விற்பனை செய்வதுபோல் பதநீரையும் விற்க இவ்வாண்டு முடிவெடுக்கப் பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு ரூ. 2.50 இலட்சம் மானியமாக மாநில இணையத்திற்கு தந்தது. அதைக்கொண்டு வாங்கிய தானியங்கி இயந்திரம் பதநீர் பைகளை ஒரு நிமிடத்திற்கு 50 வீதம் தானாக நிரப்பி தானாகவே சீலிட்டு தந்துவிடுகிறது. அதிகாலையில் இரண்டு மணி நேரத்திற்குச் சுமார் 6000த்திலிருந்து 7000 பதநீர் பைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பைகள் இலகுவில் பதநீர் விற்பனை நிலையங்களை அடைகின்றன. 220 மிலி அளவுள்ள பதநீரை மாநில இணையம் 40 காசுக்கு விற்பனை செய்கிறது. வண்ணாரப்பேட்டை, அம்பத்தூர் போன்ற கிளைகளில் பாட்டில்களுக்குப் பதிலாக பைகளில் பதநீர் கொடுக்கப்படுகிறது.

### வேலை வாய்ப்பு

பதநீரை அதிகாலையில் பையிலிட்டு அனுப்புவதால் விற்பனை அதிகரிக்கிறது. கடந்த ஆண்டு 30 பால் பங்குகளில் பதநீர் விற்கப்பட்டன. நடப்பு ஆண்டில் 100 பால் பங்குகளில் விற்பனை செய்வதுடன், தள்ளு சைக்கிள்களிலும் வைத்து விற்பனையாகிறது. இதில் 100 ஏழை, விதவை வேலையில்லாத பெண்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். பள்ளிக்கூட விடுமுறையில் இருக்கும் மாணவர்கள் பதநீர் விற்கின்றனர். முக்கியமாக நரிக்குறவ விடுதி மாணவர்கள் நல்ல முறையில் பதநீர் விற்கின்றனர். வட சென்னை அன்னிபெசண்ட் மகளிர் சங்க உறுப்பினர்கள் பெரும்பாலும் பயன்பெறுகின்றனர். காலை 7 மணியிலிருந்து மதியம் 3 மணி வரை பணிபுரிவதற்கு மாதம் ரூ. 120 ஊதியம் பெறுகின்றனர்.

எனவே, பதநீர் ஊட்டச் சத்தும், உயிர்ச் சத்தும் நிறைந்த சைவ சுத்த பானம். தேசிய பானம். கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பானம். ஒவ்வொரு பனையும் ஒரு பருவத்தில் சுமார் 200 லிட்டர் பதநீரை சுரந்து தரத் தயாராக இருக்கிறது. பதநீர் சேகரிப்போருக்கு வேலை, விற்பனைசெய்பவருக்கு வேலை, குடிப்பவர்களுக்குத் தேக பலம்; குழந்தைகளுக்கு எடையில் கூடுதல் முகத்தில் பொலிவு, உடல் வலு தரும் பானம். ஒரு பை பதநீர் சாப்பிட்டால், அதை உற்பத்தி செய்யும் வறுமைக் கோட்டின் கீழே வாழும் உற்பத்தியாளர் 6 காசு பெறுகிறார்.



## வாழ வழிகாட்டும் வங்கி

SYNDICATE BANK
சிண்டிகேட் வங்கி

காலை நேரம்:

'சுள்' ளென்று தெறிக்கும் வெய்யிலில் அந்தச் செருப்புத் தைக்கும் தொழிலாளி சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்.

நடைபாதையில் போவோர் வருவோரின் கால்களைப் பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்துப் போகிறது.

செருப்பு வாங்க—தைத்துக் கொள்ள யாராவது வரமாட்டார்களா என்று ஏங்குகிறது மனம்.

அன்றாட வாழ்க்கையை அல்லலுடன் கழிக்கும் அந்தத் தொழிலாளிக்குக் கைகொடுத்து உதவ முன்வருகிறது ஒரு வங்கி, அது தான் சிண்டிகேட் வங்கி.

### வழிகாட்டியாக....

ஏழை எளியவர்களுக்கு - அடித்தளத்தில் அல்லலுறும் மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, வாழ வழி காட்டியாக இருப்பவை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள். அந்த வகையில் சிண்டிகேட் வங்கியும் கடந்த 57 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகிறது. இந்த வங்கி எப்படித் தோன்றியது? இந்த வங்கியின் நிறுவனரும், இயக்குநர்களில் ஒருவருமான, திரு உபேந்திரா ஆனந்த் பாய் அவர்கள், ஏழை எளிய நெசவாளர்களின் துயரங்களை அறிந்தார். அவர்களுக்கு உதவினால் என்ன என்று எண்ணினார். அதன் விளைவாக எழுந்ததுதான் இந்த வங்கி.

முதலில் இதன் பெயர் 'கனரா இன்டஸ்ட்ரியல் அண்டு பாங்கிங் சிண்டிகேட் லிமிடெட்' என இருந்தது. 1925ஆம் ஆண்டில் தென் கன்னட மாவட்டத்தில் உள்ள உடுப்பி என்று சிறு நகரில் உதயமான இந்த வங்கி, இன்று நாட்டில் எட்டாவது மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றாகத் திகழ்கிறது

### மகளிர்க்கு வேலைவாய்ப்பு

இந்த வங்கி துவக்கத்தில், உடுப்பியில் ஒரே ஒரு ஊழியரைக் கொண்டு, ஒரு சிறிய அறையில் தன் பணியைத் துவக்கியது.

கர்நாடக மாநிலத்திலுள்ள மணிப்பால் நகரைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட இவ்வங்கி, மகளிர்க்குப் பெருமளவில் வேலை வாய்ப்புத் தருவதில் முக்கிய இடம் வகிக்கின்றது. 1942ல் இந்த வங்கி பெண்களைப் பணியாளர்களாகக் கொண்டு இயங்கியது. 'முழுக்க மகளிரே பணிபுரியும் வங்கிக்கிளைத்திட்டத்தின் கீழ்' இதன் முதல் வங்கி 1962 பெங்களூரிலுள்ள சேஷாத்திரிபுரத்தில் துவக்கப்பட்டது. பெரும்பாலான கிளைகளில், பயிற்சி பெற்ற பெண்களே பணி புரிகிறார்கள். நாட்டில் உள்ள இந்த வங்கிக் கிளைகளில் 3000க்கும் மேற்பட்ட பெண்கள் பணியாற்றுகிறார்கள்.

— ஏ. ஓ. ஸ்ரீ

### வேளாண்மை வளர்ந்திட...

இந்த வங்கி, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கும் துணையாக இருந்து வருகிறது. விவசாயிகளுக்குக் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள் வழங்கி அவர்கள் விதைகள் வாங்க, பம்ப் செட் வைத்துக் கொள்ள, நிலங்களை மேம்படுத்திக் கொள்ள வழி கோலியிருக்கிறது. இது மட்டுமின்றி, விவசாய சம்பந்தமான ஆலோசனைகளை வழங்க, விவசாயத்தில் தேர்ச்சி பெற்ற பிரதிநிதிகளை நியமித்தது. சிண்டிகேட் விவசாய அமைப்பு (Syndicate Agriculture Foundation) ஒன்றை இந்த வங்கி நிறுவி, முதன் முதலில் பண்ணைச் சீர் மைப்பு, விவசாயத் தகவல் பரிமாற்றச் சங்கம் போன்றவற்றைத் துவக்கி, வேளாண்மை வளர வழி காட்டியது.



கடன்தொகையை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் வழங்குகிறார் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்களும் அருகில் உள்ளார்

இன்று, தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளில் அதிக அளவில் வேளாண்மை சம்பந்தப்பட்ட கணக்குகளை வைத்துள்ள வங்கி இது என்று கூறலாம். 1975ல், தேசிய அளவில் வேளாண்மைப் பணிகளுக்கான FICC விருது இவ் வங்கிக்குக் கிடைத்தது.

**கிராமப்புறங்களில்...**

ஆல்போல் தழைத்திருக்கும் இந்த வங்கிக்கு மொத்தம் 1,117 கிளைகள் உள்ளன. இந்தக்கிளைகளில், 755 கிளைகள் கிராமப் புறங்களிலும், நகரமாக விளங்கும் கிராமப்புறங்களிலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இது 1,543 கோடி ரூபாய் மொத்த டெபாசிட்டாக வைத்திருக்கிறது. இதில் 1000 கோடி ரூபாய் வெளியில் கடனாக வழங்கித் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது.


இந்த வங்கி ஏழை எளியவர்களுக்கு, குறைந்த வருமானம் உள்ள பிரிவினர்களுக்குக் கடன் தந்து, அவர்கள் வறுமை இல்லாமல் வாழ வழி காட்டி வருகின்றது.

**கடன் வழங்கும் விழா**

அண்மையில், அண்ணாசாலை சிண்டிகேட் வங்கிக் கிளையின் சார்பில் செருப்புத் தைக்கும் தொழிலாளிகள் 26 பேர்களுக்கு கடன் வழங்கும் விழா ஒன்று நடந்தது. இவர்களுக்கு ரூ.750 முதல் ரூ. 1000 வரை கடன்கள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் கடன் தொகையை வழங்கினார். அவர் பேசுகையில், ''ஏழைகளின் நாடித் துடிப்பை அறிந்து, அதற்கு ஏற்ப மருத்துவம் செய்வதுபோல், சிண்டிகேட் வங்கி கடனையும் தந்து, வசூல்செய்கிறபணியையும் ஏற்று இருக்கிறது. அதற்காக அவர்களுக்கு ஏழை எளிய மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

திரு பி. எம். அருணாசலம்



விழாவுக்குத் தலைமை வகித்து மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில், ''குழந்தைகள் சிறு சேமிப்புத் திட்டத்தை உருவாக்கி 18 கோடி ரூபாய் அளவுக்கு சிண்டிகேட் வங்கி வசூல் செய்து இருக்கிறது. இப்படி புதுமையான திட்டங்களைக் கொண்டு வருவதில் முன்னோடியாக இந்த வங்கி விளங்குகிறது" என்றார்

''தமிழ் நாட்டில் இவ்வங்கிக்கு 65 கிளைகள் உள்ளன. சென்னையில் 16 கிளைகள் உள்ளன'' என்று விவரத்தை உதவிப் பொது மேலாளர் திரு கே.டி. குடுவா அவர்கள் தெரிவித்தார்.

**பட்டினி இல்லாமல்...**

கடன் வாங்கியவர்கள் இருவரைச் சந்திக்கிறோம். அவர்களில் ஒருவர் தமிழ்நாடு அருந்ததி சேமநல சங்க இணைச் செயலாளர் திரு டி.எம். அருணாசலம் அவர்கள் கூறுகிறார்:

''நான் பத்து வருசமா புளியந்தோப்பிலே செருப்பு தைச்சி பொழைப்பை நடத்திகிட்டு வர்றேன். எனக்கு அஞ்சிகுழந்தைங்க. வருமானம் போதாம ரொம்பக் கஷ்டப்பட்டேன். இப்ப இந்தப் பாங்க் எனக்கு 750ரூபாய் கடன் கொடுத்தது. அதை வைச்சி சில பொருள்களை வாங்கினேன். இப்ப ஒரு நாளைக்கு பதினைஞ்சி ரூபா கிடைக்குது. இப்ப பட்டினி இல்லாம காலத்தைக் கடத்தமுடியுது. போகப் போக ஒரு கடை வைக்கலாமுன்னும் இருக்கேன்...



மேலாளர்
திரு எம். ரூஸ்வெல்ட்

**வியாபாரம் கொஞ்சம் பரவாயில்லே**

இதே பகுதியைச் சேர்ந்த திருமதி தனலட்சுமி என்னும் செருப்புத் தைக்கும் பெண்மணி என்ன கூறுகிறார்?

''எனக்கு ஏழு குழந்தைங்க. எங்க வீட்டுக்காரருக்குப் பார்வை இல்லை. அதனாலே குடும்பத்தைக் கவனிக்கிற பொறுப்பு என் தலையிலே விழுந்திடிச்சி பெரிய குடும்பத்தை வைச்சிக்கிட்டு ரொம்பக் கஷ்டப்பட்டேன். பழைய செருப்பை வாங்கிப் புதுசாக்கி விக்கறதுதான் என் தொழில். இந்தச் சமயத்திலே இந்த பாங்க் எனக்கு 700 கடன் வந்தது. இப்ப வியாபாரம் கொஞ்சம் பரவாயில்லே. வேளைக்குச் சாப்பிடறோம். கொஞ்சம் நிம்மதியாவும் இருக்கோம்.''

இதேபோல நாகப்பன், முருகன், கேசவன் ஆகியோரும் கடன் வாங்கியிருக்கிறார்கள். சென்னை மூர்மார்க்கெட்டில் நடைபாதைகளில் பழைய ஷூக்களை வாங்கிப் புதுப்பித்துத் தருகிறார்கள். கடன் வாங்கிய தொகையின் மூலம் தொழிலுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி, வியாபாரத்தை மந்தமில்லாமல் நடத்தி வருகிறார்கள்.

**குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு**

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குக் கடன்கள் வழங்கு கிளையின் மேலாளர் திரு எம். ரூஸ்வெல்ட் அவர்கள் கூறுகிறார்:

''சிண்டிகேட் வங்கி-பெட்டிக் கடை வைத்தல், காய்கறி வியாபாரம் செய்தல், தச்சுவேலை, பால் வியாபாரம் நகைவேலை, இரும்புவேலை செய்வோர் ஆகியோருக்கும் கடன்கள் தந்து உதவுகின்றன.

''ஊனமுற்றவர்களுக்கும் வங்கி கடன் தந்து, அவர்கள் சக்கர நாற்காலி, வண்டி முதலியன வற்றை வாங்கிக் கொள்ள உதவுகிறது.



திருமதி தனலட்சுமி

'20 அம்சத் திட்டத்தின் கீழ் விவசாயம், நீர்ப்பாசனம்போன்றவற்றுக்கும், பிற்பட்டோருக்குக் குடிநீர், வீடு கட்டிக் கொள்ளவும், சாணஎரிவாயு சாதனம் அமைத்துக் கொள்ளவும் வங்கிக் கடன் தந்து உதவுகின்றது."

திறமை இருந்தும் தொழிலைப் பெருக்கிக் கொள்ள முடியாதவர்கள், கைத்தொழில் தெரிந்திருந்தும் வேலை செய்ய இயலாதவர்கள், உழைக்க மனம் இருந்தும் உருப்படியாய் ஒன்றும் செய்ய முடியாதவர்கள், படித்துப்பட்டம் பெற்றிருந்தும் வேலை இல்லாமல் இருப்பவர்கள் -இப்படி எல்லாருக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ப, கடன் தந்து சமுதாயத்தில் அவர்களும் மனிதர்களாக வாழ வழி வகுக்கின்றன வங்கிகள் என்றால் அது மிகையல்ல. அந்த வகையில், சிண்டிகேட் வங்கியானது தன் பவள விழா ஆண்டினை நோக்கி வெற்றிநடை போடுகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிடவேண்டும்.

# சூரிய ஒளி குக்கர்!

கூடுதல் எரிசக்தி வளக்குழு வடிவமைத்து, தில்லி மாநில தொழில் வளர்ச்சிக் கழக ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்ட சூரிய ஒளி குக்கர் விற்பனைக்கு வந்துள்ளது.

வழக்கத்திலுள்ள இதர சமையல் கருவிகளைக் காட்டிலும், மிகவும் பயனுள்ளதாக இந்தக் குக்கர் திகழ்கின்றது. வாயு, மின்சாரம், நிலக்கரி மற்றும் இதர சமையல் எரிபொருட்கள் செலவினை இந்தக் குக்கரைப் பயன்படுத்துவதன் மூலம் குறைத்துவிடலாம். உணவு தயாரிப்புக்குச் சிறிது அதிக நேரம் ஆகும்.


சூரிய ஒளிச் சக்தியைப் பயன்படுத்துவதைத் துவக்கத்தில் அதிகரிக்கவும், இதர எரி பொருட்கள் நுகர்வைக் குறைப்பதற்கும் குறைந்தவிலையில் இந்தக் குக்கரை விற்க இந்தக் குழு முடிவு செய்துள்ளது. குக்கர் ஒன்றின் விலை ரூ. 150. சூப்பர் பஜார்களில் விற்பனை செய்யப்படும் இந்தக் குக்கர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய குக்கரில் சமைக்கப்பட்ட உணவுகள் சில மணி நேரங்களுக்குச் சூடாக இருக்கும். அரிசி, காய்கறிகள், பருப்பு, உருளைக்கிழங்கு போன்றவற்றை வேகவைக்க 60-லிருந்து 120 நிமிடங்கள் மட்டுமே பிடிக்கும்.

சப்பாத்தி செய்தல் மற்றும் வறுத்தல் போன்றவற்றிற்கு இந்தக் குக்கர் பயன்படாது. சூரியன் இல்லாவிட்டால் இந்தக் குக்கரைப் பயன்படுத்த இயலாது.

விழாவில் கடன் தொகை பெற்ற தொழிலாளர்கள்





WEIGHT-LIFTING



BASKETBALL



LAWN TENNIS



HANDBALL

# 9வது ஆசிய விளையாட்டுப் போட்டி



GOLF



CYCLING



FOOTBALL

9வது ஆசிய விளையாட்டுப் போட்டி, டெல்லி மாநகரில் வருகிற நவம்பர் மாதம் 19-ந் தேதியில் இருந்து டிசம்பர் மாதம் 4-ந் தேதி வரை நடக்கிறது.

ஆசிய விளையாட்டுப் போட்டியின் மூலம் நமது நாட்டின் தலைநகரான டெல்லிக்கு அடிப்படை வசதிகள் பல மேலும் பெருகிடும்

விளையாட்டு அரங்கங்களுக்காகச் செலவிடப்படும் முதலீடு, எந்த வகையிலும் வீணாகப் போவது இல்லை.

தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் எதிர்காலத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற இந்த அரங்கங்கள் தொடர்ந்து பயன்படும். இதன்மூலம், நமது இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வம் காட்டுவதற்கும் திறமை பெறுவதற்கும் நல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.

நமது விளையாட்டு அரங்க வசதிகளைப் பார்த்துவிட்டு பல் வேறு வெளிநாட்டு நிபுணர்கள் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி கூட இந்தியாவில் வெற்றிகரமாக நடத்த முடியும் என்று கருதுகிறார்கள்.

ஆசிய விளையாட்டுப் போட்டிக்காக அமைக்கப்படும் விளையாட்டு அரங்கங்கள் இந்திய கட்டிடக்கலைஞர்கள், பொறியாளர்கள், திட்டம் தீட்டுபவர்கள் ஆகியோரின் தொழில்நுட்பத் திறமைக்குப் புகழாரங்களாக அமையும்.

இரு மாடிகளுடன் கட்டப்பட்டுள்ள ''ஜவஹர்லால் நேரு ஸ்டேடியம்'' மிகமிக நவீன செயற்கை மேல்தளம் கொண்ட விளையாட்டு அரங்கமாகும்.


இந்த ஸ்டேடியத்தில் ஒரே சமயத்தில் 75 ஆயிரம் மக்கள் உட்கார்ந்து பார்க்க வசதிகள் உண்டு. அவ்வளவு பேர்களும் எட்டே நிமிடங்களில் அரங்கத்தை விட்டு வெளியேறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அங்குள்ள உள் விளையாட்டு அரங்கம் குளுமை வசதி (ஏர் கண்டிஷன்) செய்யப்பட்டது. 25 ஆயிரம் பேர் உட்கார்ந்து பார்க்கும் வசதி உடையது.

ஆசியாவிலேயே, இது பெரிய உள் விளையாட்டு அரங்கமாகும்.

உலகிலேயே மூன்றாவது பெரியதாகும்.

இந்த இரு விளையாட்டு அரங்கங்களும் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது உலக முழுவதிலும் உள்ள பொறியாளர்களுக்கு மிகப் பெரிய விந்தையாகக் கூடத் தென்படும்.



ROWING




EQUESTRIAN EVENTS



BOXING



HOCKEY



WRESTLING



பொதுவாக இதுபோன்ற கட்டடங்களைக் கட்டி முடிக்க 4 ஆண்டுகளில் இருந்து 6 ஆண்டுகள் வரை ஆகும்.

நமது பொறியாளர்களின் திறமையைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் பிரம்மாண்டமான இந்தக் கட்டடங்களைக் கட்ட முடிந்தது.

விளையாட்டு அரங்கத்தில் நவீன தகவல் தொடர்பு வசதியும், ''கம்ப்யூட்டர்'' மூலம் தகவல் தரும் வசதிகளும் இருக்கும்.

இரவில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளைக் கூட ''கலர் டெலிவிஷன்'' படம் எடுக்கக் கூடிய அளவில் ஒளி வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

நமது நாட்டிலேயே முதல் முதலாக செயற்கைத்தளம் கொண்ட ஓட்டப் பந்தய மைதானம் அமைக்கப்படுவதுடன், ஆக்கி விளையாட்டுக்காகப் புல் தரை கொண்ட விளையாட்டு மைதானமும் அமைக்கப்படுகிறது.

குளிர் காலத்தில் நீந்துவதற்கு வசதியாக, நீச்சல் குளத்தில் வெதுவெதுப்பான நீர் நிரப்பப்பட்டு இருக்கும்.

இதுபோன்ற வசதிகள் இது வரையில் இந்திய விளையாட்டு வீரர்களுக்கு இல்லாமல் இருந்தது.

இதனால் நமது வீரர்கள் வெளிநாட்டில் போட்டிகளில் பங்கு பெறும்போது தங்களது திறமையைக் காட்ட இயலாமல் இருந்தனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான சிறப்புக் குழு, தனக்கு கீழ் இயங்கும் 28 குழுக்கள் மூலமாக, இந்த விளையாட்டுபோட்டிகளுக்கான பணிகளில் இரவும் பகலுமாக ஈடுபட்டு வருகிறது.

ஆசிய விளையாட்டுப் போட்டிக்காக மத்திய அரசு ரூ. 60 கோடி ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகை இரண்டு கட்டமாக பணிகளுக்காகச் செலவிடப்படும்.

இதில் மூன்றில் இரண்டு பங்கு தொகை, கட்டடங்கள், ஸ்டேடியங்கள், நீச்சல் குளங்கள் போன்றவைகளைக் கட்டுவதற்கும், ஏற்கெனவே இருக்கும் விளையாட்டரங்கங்கள் மேம்பாடு செய்வதற்கும் பயன்படுத்தப்படும்.

விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும், விளையாட்டுக் கருவிகளை வாங்குவதற்கும் மூன்றில் ஒரு பகுதி செலவழிக்கப்படும்.

மொத்தம் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள், ஆசியவிளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது நாட்டில் இருந்து ஏறத்தாழ 550 வீரர்கள் கலந்து கொள்வார்கள்.

[ஆசிய விளையாட்டுப்போட்டி சிறப்புக் குழுத் தலைவரான திரு பூட்டாசிங் அவர்கள் சென்னையில் 23.4.'82 அன்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டி]

नवम एशियाई खेल·दिल्ली
IX ASIAN GAMES
DELHI 1982




TABLE TENNIS




BADMINTON



GYMNASTICS



ATHLETICS



ARCHERY

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

தொகுப்பு: இ.ஆனந்தன்

**26—3—82**

மாநிலத்திலுள்ள அனைத்து ஆலய அறங்காவலர் குழுக்களிலும் ஒரு பெண் அறங்காவலரை நியமனம் செய்யும் திட்டம் ஒன்றை அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர் எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

**27—3—82**

தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய மாநில கைத்தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்தி அதற்குப்போதுமான அதிகாரங்களை வழங்க அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்கள்.

**28—3—82**

கடலூரில் 24 இலட்சம் ரூபாய் செலவில் பனை பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

**29—3—82**

காவல்துறையினருக்குச் சில சலுகைகளையும் வசதிகளையும் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

**31—3—82**

ஒரு முனை விற்பனை வரியின் கீழ் மேலும் பல பொருள்களைக் கொண்டு வர முடியுமா என்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்கள்

**1—4—82**

தந்தை பெரியார் நினைவாக சென்னை நகரில் எல்லாவிதமான புதுமை வசதிகளுடன் கூடிய பெரியதொரு மாநாட்டு அரங்கம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது என்று மேலவையில் மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

**3—4—82**

மதுரை விமான நிலையத்தை விரிவுபடுத்தும் பணிக்கென மத்திய அரசு 98 இலட்சம் ரூபாய் அனுமதித்து உள்ளது.

**4—4—82**

திருச்சி மாவட்டம் புகளூரில் கரும்புச் சக்கை அடிப்படையில் அமைக்கப்படும் காகித ஆலை இன்னும் 2 ஆண்டுகளில் உற்பத்தியைத் தொடங்கும் என மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு என். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்..

**5—4—82**

வெளிநாட்டுக்குக் கைத்தறித் துணிகள் அனுப்புவதில் தனியார் தவறு செய்யாமல் இருக்க அரசு நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது என்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்கள்.

**7—4—82**

18 கோடி ரூபாய் முதலீட்டில் புதுக்கோட்டை அருகில் வார்ப்பு இரும்புத் தொழிற்சாலை ஒன்று துவக்கப்படவிருப்பதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு என். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்.

**8—4—82**

சென்னை மாநகராட்சி தனது ஊழியர்களுக்குப் பலமாடி கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கும் என்று மாநகராட்சி தனி அதிகாரி திரு முருகராஜ ஐ.ஏ.எஸ். தெரிவித்தார்.

**9—4—82**

தஞ்சை-திருச்சி-நெடுஞ்சாலைக்கு வ.வே. சுப்பிரமணியம் (அய்யர்) நெடுஞ்சாலை என்று பெயர் மாற்றம் செய்ய தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**10—4—82**

எந்த ஜாதியும், எந்தத் தொழிலும் செய்யலாம் என்ற நிலை தமிழகத்தில் உருவாகி வருகிறது என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்.

சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் தயாரிக்கப்படும் "தெர்மாஸ் பிளாஸ்க்கு" கள் சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார்.

பெண்களுக்குப் பனைமரம் ஏறத் தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் பனை பொருள்கள் கூட்டுறவுச் சங்கம் பயிற்சி அளித்து வருகிறது என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**11—4—82**

அனைத்திந்திய அளவில் தமிழகத்தில் தான் 194 கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

**12—4—82**

அடுத்த ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் 'அரசு பொருட்காட்சி' நடத்தப்படும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம்.வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

மதுரை, கோவை ஆகிய மாவட்டங்களில் மருந்து தொழில்பேட்டைகளை அமைப்பது குறித்து தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

வெளிநாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கைத்தறித் துணிகளில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிறது என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

கடந்த நாலரை ஆண்டுக்காலத்தில் மக்களுக்கு என்னென்ன செய்தோம் என்ற புள்ளி விவரங்களை வெளியிட இருக்கிறோம் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டில் 6 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகியிருப்பதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

### மீனவர்களுக்குக் குறைந்த விலையில் நைலான் நூல்

மீன் பிடித்தலை பரம்பரைத் தொழிலாய்க் கொண்டிருக்கும் மீனவர்களுக்கு நைலான் நூல் வழங்குவதற்காக 1982–83 ஆண்டுக்கென ரூ. 8 இலட்சத்தைத் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த உதவி 20 சதவீதம் கடனாகவும் 80 சதவீதம் மானியமாகவும் இருக்கும். 48 மாதங்களுக்குள் 40 தவணைகளில் இக்கக் கடன் திரும்பிப் பெறப்படும். குறுக்கல் முறையில் மீனவர்களுக்கு நைலான் நூல் வழங்கப்படும்.

**15—4—82**

காட்டு வளத்தைப் பெருக்கவும், நம்முடைய எரிபொருள்களின் தேவையைப் பூர்த்திசெய்யவும், காடுகளை வளர்த்துப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டுக்கு மாதம் ஒன்றுக்கு 60 ஆயிரம் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

தீயணைப்புப் படைக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் மேலும் 2 ராட்சத தீயணைப்பு இயந்திரங்கள் வாங்கப்படும் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

**16—4—82**

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிதாகச் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டமும், மேலும் 2 "மினி" சர்க்கரை ஆலைகள் அமைக்கும் திட்டமும் தமிழக அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் தன்னிறைவுத் திட்டம் மூன்றாவது கட்டமாக 159 வட்டங்களில் நிறைவேற்றப்படுகிறது. இதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**17—4—82**

ஆதிதிராவிட மக்களுக்குத் தனி காலனி இருப்பதைத் தவிர்க்க ஊர் மத்தியில் பக்கத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

விவசாயிகள் தங்கள் கடன் பாக்கிகளில் அசல் தொகையை ஆண்டுக்கு ஒரு தவணை வீதம் பத்து ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று விவசாயிகள் உயர்மட்டக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

**18—4—82**

தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் எலக்டிரானிக்ஸ் கருவிகள் தயாரிக்கத் தொழிற்சாலை தொடங்கப்பட்டால், அவர்களுக்கு அரசு பத்து சதவீத மான்ய உதவி அளிக்கும் என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

ரூ. 45 கோடி செலவில் 5 கோடி மரங்கள் புது வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் என்றும் 5,000 பேருக்கு இதன் மூலம் வேலை வாய்ப்பு தரப்படும்.

என்றும் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அறிவித்தார்.

**19—4—82**

ஒய்வு பெறும் பத்திரிகை நிருபர்களுக்கு ஊழியர்களுக்கு பென்ஷன் வழங்கப்படும் வகையில் சட்டம் இயற்றப்படவிருக்கிறது என மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

புத்தகங்களை வெளியிட[illegible] விலையில் காகிதங்களை வழங்கு[illegible]து குறித்து தமிழக அரசு பரிசீலிக்கும் [illegible]ன்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அ[illegible]த்தார்.

25337

**20—4—82**

கிராமப்புற இளைஞர்க[illegible]க்குச் சுய வேலைவாய்ப்புக்களை வ[illegible]ம் தி[illegible]த்தின் கீழ் பயிற்சி பெற்[illegible] [illegible]தயல் தொழிலாளர்கள் சொந்[illegible]க் தொழில் தொடங்க அரசு மான்யமும் கடனுதவியும் அளிக்கிறது என்று மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்.

சிறு தொழில்கள் ஆரம்பிக்க இருந்த நடைமுறைச் சிக்கல்களை எளிமைப்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மக்களுக்குள் வாழும் பகுதிகளில் கிணறுகள் தோண்ட மத்திய அரசு 10 கோடி ரூபாய் நிதி அளித்து இருக்கிறது என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கே. ராசாமுகமது அவர்கள் அறிவித்தார்.

**22—4—82**

பரம்பரைச் சொத்தில் பெண்களுக்குச் 'சமபங்கு' அளிக்க வகை செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவது குறித்து தமிழக அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

**24—4—82**

தேயிலைத் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க இருப்பதாக மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

**25—4—82**

சிறிய ஏழை-எளிய விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளதாக மாண்புமிகு சட்டம் -கூட்டுறவுத்துறை அமைச்சர் சி.பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

## பொள்ளாச்சிக் கோட்டத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள்

பொள்ளாச்சி கோட்டத்தில் 80–81-வது ஆண்டில் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திலும், 81-82 வது ஆண்டில் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்திலும் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 82-83-வது ஆண்டில் பொள்ளாச்சி வடக்கு, குடிமங்கலம், வால்பாறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படவுள்ளது.

பொள்ளாச்சிக் கோட்டத்தில் உள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களில் 16 இணைப்புச் சாலைகள் ரு 64,000 செலவிலும், 18 பள்ளிக் கட்டடங்கள் ரு 1,96,000 செலவிலும், 28 ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டபபணிகள் ரு 1,83,000 செலவிலும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 846 வேலைகள் ரு 45,65,000 செலவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. சிறு சேமிப்பு வசூல் திட்டத்தின் கீழ் ரு 90,00,000 வசூல் செய்யப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் 1982-83 ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 500 சிறியதொழில் கூடங்களைத் துவக்குவதற்காக ரூ. 10 கோடி செலவிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

**27—4—82**

தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு அரசு மானியம் தரும் விதிமுறைகளை மாற்றி அமைப்பது குறித்து தமிழக அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

**29—4—82**

தமிழகத்தில் அமையவிருக்கும் மகளிர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் முதற்கொண்டு அனைத்துப் பொறுப்புக்களிலும் பெண்களே இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம் என்று மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்.

**30—4—82**

உணவு இல்லாமல் யாரும் துன்பப்படும் நிலை கூடாது என்று பாரதியாரின் கருத்துப்படி, ஏழை எளிய குழந்தைகளுக்கான இலவச மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்.

இந்த ஆட்சியில் தொழிலாளர்களின் நலனைக் காக்க பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்.